
பாலகுமாரன்

# புருஷவதம்

பாலகுமாரன்

32187

1656550

**விசா பப்ளிகேஷன்ஸ்**

55, வெங்கட் நாராயணா சாலை,

தி.நகர், சென்னை - 600 017.

தொலைபேசி : 434 28 99 / 434 15 59

தொலைநகல் : 91 - 44 - 434 15 59

# புருஷவதம்

பாலகுமாரன்

30187
465590

## 1

உலகம் அவள் உள்ளங்காலுக்குக் கீழே பத்து கோல் தூரத்திலிருந்தது. அவள் மரத்தின் உச்சியில் உட்கார்ந்திருந்தாள். அவளுக்குச் சற்று தொலைவில் அவளையே பார்த்தபடி அவள் தம்பி அமர்ந்திருந்தான்.

அவள் தென்திசையை மிகக் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவள் வலப்பக்கம் ஒரு கோயில் இருந்தது. அது சிவன் கோயில். அந்த சிவன் கோயிலில் ஒரு மாபெரும் சக்தித் தன்மை அடக்கி அமர்ந்து கொண்டிருந்தது. அவ்வப்போது சதங்கை தெறித்தது போல கதிர் வீச்சாய் அங்கிருந்து சக்தி வெளிக்கிளம்பி பிரபஞ்சம் நிரப்பும்.

அருகே உள்ள ஆலங்காட்டிலிருந்து அந்த சக்தியின் வீச்சு பார்த்து பேய்கள் எழுந்து ஆரவாரிக்கும். அந்த ஆலங்காடு அடர்த்தியாய் பச்சை வாசனையாய், சூடு மிக்கதாய், பொர பொரப்பான மணல் உடையதாய், பாம்புகளும் பூச்சிகளும் அதிகம் உலாவும் இருட்டு இடமாய் இருந்தது.

மேலே ஆகாயத்தில் உள்ள திருவாதிரை நட்சத்திரம் இன்னும் சில நாழிகையில் அந்தக் கோயிலுக்கு நேர் மேலே வந்து நிற்கும். அப்போது அந்தக் கோயிலுக்குள் உள்ள சக்தி மிகக் கம்பீரமாய் எழுந்து நிற்கும். சக்கரம் போன்ற திரட்சியான அந்தச் சக்தி மனித உரு கொள்ளும். காற்றில் டமருக சப்தம் அதிகரிக்கும்.

அந்தப் பகுதியின் எல்லாவித சூட்சும உருவங்களும் மிகப்பரவசத்தோடு அந்தச் சக்தியின் அசைவைக் காண, ஆடலைக் காண விகசித்து நிற்கும்.

எல்லா சூட்சும சக்திகளும் அந்தத் திரள் சக்தியின் நடனம் காண ஆவலாய் இருக்கையில் அவள் அசையாது தென் திசையிலே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நகரேஷு காஞ்சி... நகரேஷு காஞ்சி...'' அவள் மனம் உரக்கக் கூவியது. அவள் கோபத்துடன் கிளையை உலுக்கினாள். வெறியோடு மறுபடியும் அந்த காஞ்சிபுரம் இருக்கும் திசையைப் பார்த்தாள்.

'அக்கா...' தம்பி மெல்ல விளித்தான்.

என்ன என்பது போல் திரும்பிப் பார்த்தாள்.

''அம்மை வந்திருக்கிறாள்'' அவள் சரட்டென்று மரக் கிளையை கைவிட்டு காற்றில் நழுவி அம்மையின் காலில் விழுந்தாள். நிமிர்ந்தாள்.

அம்மை அவளை அணைத்துக் கொண்டு கோயில் பக்கம் நகர்ந்தாள். நாய்கள் ஊளையிட்டன.

பூமியில் திருவாலங்காடு ஒரு சூட்சுமமான இடம். போரில் மடிந்த வீரர்களும், கொலை செய்யப்பட்டவர்களும், தடுக்கி கிணற்றில் விழுந்தோ, பாதாளத்தில் சரிந்தோ இறந்தவர்களும் அங்கே அலைவதுண்டு. மிருகங்களால் கொல்லப்பட்டவர்கள், விஷப்பூச்சிகளால் இறந்தவர்கள், எதிர்பாராத துக்கத்தில் அதிர்ச்சியடைந்து மரணமடைந்தவர்கள் என்று பல மனிதர்களின் சக்திகள் அங்கு நடமாடின.

மனிதனின் மனோசக்தி உடம்பை வளர்க்கிறது. செயல்களைச் செய்யத் தூண்டுகிறது. கோபமோ, ஆத்திரமோ, சந்தோஷமோ, பெருஞ்சிரிப்போ அந்த மனோசக்தியால்தான் நிகழ்கிறது. எல்லா உணர்வுகளும் அந்த மனோசக்தியின் வெளிப்பாடே.



மனம் வாழ்க்கையை நடத்துகிறது. அந்த மனதை நடத்துவது எது...? எந்த சக்தி? அந்த சக்தி உடலை விட்டுப் பிரியும்போது பழக்கத்தினால் மனதையும் இழுத்துப் போகிறது.

நடந்த நிகழ்ச்சிகளை மனம் ஆழ்ந்து பற்றிக் கொண்டிருக்க, அந்த உயிர் திரும்பத் திரும்ப நடந்தவைகளோடேயே இருக்கிறது.

ஒரு ஒற்றனை ஒரு மாற்றரசன் கையும் களவுமாகப் பிடித்து விட்டான்.

அவன் ஒற்றன்தானா என்று அறிவதற்காகச் சித்திரவதை செய்தான். ஒற்றன் என்று தெரிந்தவுடன் அவனுக்குத் தன் படைபலம் பற்றி என்ன தெரியும் என்றறிவதற்காகச் சித்திரவதை செய்தான்

எந்த தேசத்து ஒற்றனோ அந்த தேசத்தின் படைபலம் பற்றி அறிய விரும்பினான்.

முழுவதும் சொன்னால் விட்டு விடுவதாக அந்த மாற்றரசன் சத்தியம் செய்தான்.

வலி தாங்காத ஒற்றன் வாழ்தல் விரும்பி தன் தேசத்துப் படைபலம், உள் பிரிவு, பூசல்கள் அனைத்தும் கக்கினான்.

சகலமும் தெரிந்து கொண்டதை உறுதி செய்து கொண்ட பிறகு மாற்றரசன் ஒற்றனைத் தப்பித்துப் போ என்று கோட்டைக்கு வெளியே அனுப்பினான்.

கோட்டையைத் தாண்டியதும் மாற்றரசன் வீரர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். சொல்லிச் சொல்லி அடித்தார்கள். கயிறு கட்டி அகழியில் இறக்கி முதலை கடிக்கும்படிச் செய்தார்கள். முதலில் காலும் பிறகு கையும் துண்டாயின. ரத்த சேதத்தில் அவன் மயக்கமுற்றான்.

அவர்கள் அவனை அகழியில் இறக்கினார்கள். ஒரு முதலை அவன் தலையைக் கவ்வித் துண்டாகக் கடிக்கும் நேரத்தில் அவன் உயிர் பிரிந்தது.

அத்தனை அடி உதைகளுக்கும் நடுவே அவன் தன் மனைவியையும், குழந்தைகளையும், தளபதியையும், அவன் வீட்டு திண்ணையையும், அவன் ஏறிவந்த குதிரையையும், அவனுக்குப் பரிசாகக் கிடைத்த பசுக்களையும் நினைத்துக் கொண்டான்.

வீடு பார்த்து ஏழு மாதங்கள் ஆகியிருந்தது. தை மாத சங்கராந்திக்கு அவன் ஊர் திரும்பலாம் என்று செய்தி வந்திருந்தது. செய்தி வந்த மூன்றாம் நாள் அவன் சிறை பிடிக்கப்பட்டான்.

செய்தி கொண்டு வந்தவனைத் தொடர்ந்து வந்து இவனைப் பிடித்து விட்டார்கள்.

நாள், கிழமை மாதம் எல்லாம் மறந்து விட்டது. கோட்டைக்கு வெளியே வந்த போது வெல்லப்பாகு வாசனை மூக்கைத் துளைத்தது. கரும்புச் சுமைகளோடு மாட்டு வண்டிகள் உள்ளே போயின.

சங்கராந்தி வந்து விட்டதா... வரப்போகிறதா... அவன் குழம்பியவாறு நடந்தான்.

இந்தச் செய்திகள் அனைத்தும் மரணத்திற்கு பின்பும் அவனோடு ஒட்டிக் கொண்டிருக்கின்றன. அவன் இறந்து பல வருடங்கள் ஆயின. அவனால் பூமிக்கும் திரும்ப முடிய வில்லை. மேலேயும் போக முடியவில்லை. அவன் மனோ சக்தி அவனை அலைக்கழித்தது.

மார்கழி மாதத்திலிருந்து அவன் அலறத் துவங்கி விடுவான். மகர சங்கராந்தியின் போது உச்ச வெறியில் இருப்பான். கரும்புத் தோட்டங்களில் பாய்வான். மாடுகளைப் பற்றுவான். செந்நெல் கதிர்கள் மீது புரண்டழுவான். பானைகளைப் புரட்டுவான்.

அவன் மனோ சக்தி பொங்கல் கொண்டாட வேண்டுமென்ற ஏக்கத்தை விடவேயில்லை.



பல நூறு வருடங்கள் அவன் மகர சங்கராந்தி பைசாச மாகவே இருந்தான்.

அவன் ஊர் வெகு தொலைவில் இருந்தது. அவனைத் திருவாலங்காட்டு ராசனைப் பார்க்கச் சொல்லி அமைதியான சில உயிர்கள் அனுப்பி வைத்தன. அமைதியான சில பைஸாசங் களும் திருவாலங்காட்டில் இருந்தன.

ஆற்றில் முழுகி நமச்சிவாய மந்திரம் சொல்லியபடி மூச்சு பந்தனம் பண்ணிக் கொண்டிருந்தார். இதற்கு மேல் தாங்காது என்று திணறி எழுந்தபோது நீர் மட்டத்துக்கு மேல் எட்டியபோது சொத்தென்று பின்னே படகு முட்டியது.

படகு மிகப் பெரியது. பாய்மரம் கட்டியது. பத்துப்பேர் துடுப்பு போட ஆற்றின் வேகத்தோடு விரைவாய் போய்க் கொண்டிருந்தது. இடித்த வேகத்தில் பின் மண்டைப் பிளந்து பிளந்த மண்டை வழியே நீர் உள்ளே பாய்ந்து ஹிருதயம் அழுத்தப்பட்டு முப்பது வினாடிகளில் மரணம் நேர்ந்தது

செத்த பிறகுதான் எப்படிச் செத்தோம் என்று அந்த உயிருக்குப் புரிந்தது.

ரத்தம் ருசித்த பெரிய மீன்கள் உடம்பை ஆற்றின் மையத்தை நோக்கி இழுத்துப் போயின. அரைக்கால் நாழிகை யில் உடம்பைப் பிய்த்துத் தின்று விட்டன. எலும்புகளும் முழுங்கப்பட்டன. கபாலம் மண்ணில் போய் சொருகியது.

அந்தக் கபாலத்தில் நமசிவாய மந்திரமும் கரையிலிருக்கும் பித்தளை சொம்பு பற்றிய கவலையும் இருந்தது. அந்த உயிர்ச்சக்தி அங்கிருந்து கிளம்பி திருவாலங்காட்டுக்கு பல நூறு வருடங்களுக்கு முன்பு வந்து அடைந்தது.

எங்கேனும் சொம்பு விழும் சப்தம் கேட்டால் அந்த உயிர்ச்சக்தி சிறிது நேரம் பரபரக்கும். மற்றபடி நமசிவாய ஜெபம் நடத்திக் கொண்டிருக்கும்.

மிகுந்த துயரத்தில் அழுபவரை இறைவன் சன்னதிக்கு அழைத்துப் போய் நிற்க வைக்கும். அங்கு திரண்டு கிடந்த

சக்தியைச் சுட்டிக் காட்டி உற்றுப்பார் உற்றுப்பார், உன் வினை தீர உற்றுப்பார் என்று வழிகாட்டும்.

உணவு உட்கொண்டபோது வாய் நிறைய ருசியோடு செத்துப்போன உயிர் அங்கு உண்டு. மனைவி சோற்றில் விஷம் ஊற்ற இறந்து போனவர் உண்டு. சொத்துத் தகராறில் வெட்டுப்பட்டவர், பெண் தகராறில் குத்துப்பட்டவர், காட்டுப் புலியால் தாக்கப்பட்டவர், கோயிலில் தூங்கிக் கொண்டிருந்த போது யானையால் மிதிக்கப்பட்டு செத்தவர் என்று பல உயிர்ச்சக்திகள் அங்கு தவித்துக் கொண்டிருந்தன.

அந்த உயிர்ச் சக்திகள் எல்லாவற்றுக்கும் அவளைத் தெரியும். அவள் கோபத்தைத் தெரியும். பழிவாங்க அவள் காத்துக் கிடப்பது தெரியும்.

அவள் எங்கு போனாலும் என்ன செய்தாலும் எதிர்ப்பே காட்டாது பின் தொடரும் அவள் தம்பியின் உயிர்ச் சக்தியை அவர்கள் அறிவார்கள்.

செத்த விதம் பற்றி துக்கப்பட்டவர்களுக்கு மறுபிறப்பு எளிதில் கிடைப்பதில்லை. சாகும்போது இருந்த மனோசக்தியை அவர்களால் புறக்கணிக்க முடிவதில்லை. அந்த உடம்பை, அந்தப் பெயரை, நிகழ்ச்சிகளை மறக்க முடிவதில்லை. அந்த வாழ்க்கையைத் தொடர முயற்சிக்கிறார்கள். உடம்பாக மாற முடியாததால் உயிராகவே இருந்து தவிக்கிறார்கள். உயிரை உடம்பாக நினைத்துக் கொள்கிறார்கள். மரணத்தின் போது மரணத்தை வரவேற்று தன்னை முழுவதும் மரணத்திற்கு ஒப்புக் கொடுத்துவிட வேண்டும்.

நீ அனுப்பினாய்; வந்தேன். நீ அழைக்கிறாய்; வருகிறேன். என்று தன் மனோ சக்தியை உதறிவிட்டு எல்லா நினைப்புகளையும் அகற்றிவிட்டு அழைக்கிற சக்தியோடு கலந்துவிட வேண்டும். எதிர்ப்பே இல்லாமல் அங்கே நகர்ந்துவிட வேண்டும்.



நகரும் நேரம் உயிரின் வரலாறு முழுவதும் தெரியும். புல்லாய், பூண்டாய், புழுவாய் பரிணாம வளர்ச்சி பெற்ற பயணம் புரியும். இனி என்ன சொன்னாலும் சரி என்று ஏற்க, அந்த மகா சக்திக்கு உயிர்ச் சக்தியை என்ன செய்வதென்று தெரியும்.

உயிர்ச் சக்தி பெரும் சக்தியோடு இணைகிறபோது அதன் வெம்மையைத் தாண்ட வேண்டியிருக்கிறது. பெரும் சக்தியின் வெப்பத்தை ஏற்க வேண்டியிருக்கிறது. அதுவே வைதரிணி நதி. வென்னீர் ஆறு.

ஒப்புக் கொடுத்தால்தான். சரணடைந்தால்தான் எனக்கு எந்த அபிப்ராயமும் இல்லை என்று இழந்தால்தான் அந்த வெப்பம் தாண்டி குளுமைக்குப் போக முடிகிறது. இல்லையெனில் உடம்பாக நினைத்துக் கொள்கிறபோது வென்னீர் நதி பாதிக்குமோ என்கிற மயக்கம், மனப் பிரமை ஏற்பட்டு விடுகிறது. அந்த வெப்பம் ஒரு மாயத்தோற்றம். அது உயிர்ச் சக்தியை பாதிக்காது. உடம்பு உண்டு என்கிற எண்ணத்தை அகற்றாதபோது சுடும் என்கிற சிந்தனையும் உடன் எழுந்து விடுகிறது.

வைதரிணி நதியைத் தாண்ட முடியாதவர்கள் பைசாசமாக அலைகிறார்கள். அவரவர் வினைகளுக்கு ஏற்ப ஆட்டம் போடுகிறார்கள்.

அவள் ஆத்திரத்துடன் காத்திருந்தாள். அவளை எப்படி அடித்து அவன் கொன்றானோ அதேவிதமாக அவனை அடித்துக் கொல்ல அவள் காத்திருந்தாள். அதைத் தவிர வேறு சிந்தனையும் அற்று இருந்தாள். அவள் சிந்தனையே தன் சிந்தனையாக அவள் தம்பி தொடர்ந்தான்.

ஏனெனில் அவளைக் கொன்றதைக் கண்ணால் பார்த்துவிட்டு, தடுக்க முடியாமல் தவித்துவிட்டு அவனும் தற்கொலை செய்து கொண்டவன்தான். அக்காவுக்காக எது செய்யவும்

சித்தமாக இருந்தான். ஆவியான பிறகும் அக்காவுக்குத் துணையாக இருந்தான். அவளோடு திருவாலங்காட்டு ஈசர் கருவறை முன்பு அம்மை நின்றாள். திருவாதிரை நட்சத்திரம் கோவில் உச்சிக்கு வந்தது. உள்ளிருந்த சக்தி எழுந்து நின்று வானம் நிறைத்தது.

எல்லாவிதமான பேய்களும் அந்த ஆலங்காட்டுக் கோயிலைச் சுற்றிக் கொண்டன. மேகம் டமருகம் போல் இடித்தது. குளிர்காற்று சுழன்று வீசியது. ஒளியையும் ஒலியையும் உள் நிரப்பிய சக்தி தன் சுழலை விரித்து வேகமாகப் பரவி அசையத் துவங்கியது.

அந்த அசைவை விவரம் தெரிந்தவர்கள் நடனம் என்றார்கள். நாய்கள் அறிந்து கொண்டன. பசுக்கள் புரிந்து கொண்டன. அசையாது நின்றன. பறவைகள் மறைந்திருந்து கவனித்தன. தாவரங்கள் மிக மெலிதாய் தலையசைத்தன. பிசாசுகள் என்று அழைக்கப்படும் அந்த உயிர்ச் சக்திகள் அந்த அசைவுக்கு ஏற்ப கைக் கொட்டின.

எனக்கு ஏன் இந்த நிலை, இறையே என்று அவள் விம்மினாள். பெருங்குரலில் அழுதாள்.

ஆலங்காட்டு அம்மை அவளை அணைத்துக் கொண்டு விடியும் என்றாள்.

விடிந்தது.

## 2

**ச**க்திக்கு வடிவு உண்டா

உண்டு.

துகள் வடிவு.



அந்தத் துகள் மனிதனின் கண்களுக்குத் தென்படாதவை. மனித மனம் அலைந்து கொண்டேயிருப்பதால் கண்கள் கூர்மை பெறவில்லை. அதற்கு உண்டான பலத்தை அடையவில்லை. பலம் பெறாத கண்களால் சக்தியின் அசைவைப் பார்க்க முடியவில்லை.

மனம் இடைவிடாது உடம்பையே கவனித்துக் கொண்டிருக்கிறது. உடம்பையே தான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறது. வாழ்க்கையை உடம்பின் மூலமாகவே பார்க்கிறது. உணவு, உடை, உறைவிடம், உறவு, நட்பு, ஜாதி, மதம் எல்லாம் உடம்பை மையமாக்கிப் பிறந்தவை.

இறந்த பிறகு உடம்பு பற்றிய கவனம் மிகப் பெரிய அளவில் மங்கி விடுவதால் இந்த மனம் சக்தியோடு நெருங்கி விடுகிறது. மனோ சக்தி பிரபஞ்ச சக்தியைப் புரிந்து கொள்கிறது. அந்த பிரபஞ்ச சக்தி அசைவதையும், அலைவதையும் வியப்போடு பார்க்கிறது.

உடம்போடு இருக்கும்போதும் இந்த சக்தியின் அசைவைப் பார்க்கலாம். அதற்கு மனம் இறக்க வேண்டும். மனம் தான் உடம்பு என்று கொள்வதை உதற வேண்டும். அப்படி உதறியவருக்கு ஞானி என்று பெயர்.

அவள் பெண்ணாய் உடம்பு எடுத்து ஒரு காலத்தில் வாழ்ந்தவள். இறந்து பேயாய் அலைபவள். அந்த சக்தியின் அசைவைக் கவனித்தாள்.

பூமிக்கு விதிகள் உள்ளது போல பிரபஞ்சமும் விதிகளுக்குட்பட்டது. எழுவதற்கும் அமர்வதற்கும் நேரங்கள் உண்டு. பூமியில் சக்தியின் ஆட்டம் சந்தோஷக் கூத்து. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அதிகமாகிறது. அதை ஊன்றிக் கவனிக்கிறபோது மனோ சக்தி பிரபஞ்ச சக்தியோடு கரைகிறது. முன்பு செய்த செயல்களால் ஏற்பட்ட மனோ வேதனைகள் மெல்ல மெல்ல அகலுகின்றன.

விதம் விதமான வேதனை உடைய மனோ சக்திகள் பிரபஞ்சத்தில் அந்த ஆதி சக்தியின் ஆட்டத்தைக் கவனித்துத் தொழுதன. விடியல் நேரத்தில் திருவாலங்காட்டு மக்கள் கோவிலுக்கு வந்து அந்த சக்தியின் நடனத்தை பொம்மையாய் உருவகப்படுத்தி அந்த பொம்மையைத் தோளில் தூக்கி நடனமாடி சந்தோஷித்தார்கள். அதற்கு ஏதோ கதைகள் சொன்னார்கள். அங்கு யாரோ ஒருவர் மட்டுமே பிரபஞ்ச நடனம் பார்த்தவராய் இருந்தார்.

அம்மை அவர் நெஞ்சுக்குள் சில நொடிகள் அமர்ந்து விட்டு வந்தாள். அவர் திகைப்பும் சந்தோஷமும் பாட்டாய் வெளிப் பட்டுக் கொண்டிருந்தன.

அம்மை சிவன் நடனமாடிய இடத்தை மெல்லச் சுற்றி வந்தாள்.

சிவன் சுழன்று நடனமாட அதை அம்மை சுற்றி திருவாலங்காடு வெப்பமும், வீர்யமும் நிறைந்த இடமாக, பல சக்திகளை உள்ளிழுக்கும் இடமாக மாறிக் கொண்டிருந்தது.

அங்குள்ள எல்லா உயிர்களும் அந்த வீரியத்தை அனுபவித்தன.

அவன், அந்தப் பெண் பேய் அம்மையோடே மிதந்து வந்தாள். அவள் தம்பி அவர்களைத் தொடர்ந்தான்.

''இன்னும் கோபம் தானா? எல்லாம் உதறி அமைதியாக மாட்டாயா?''

அவள் தலையில் இடை விடாது நச் நச் சென்று இரும்புக் கம்பி இறங்கிக் கொண்டேயிருந்தது.

அம்மை அவள் நிலை கண்டு சிரித்தாள்.

''சரி. முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும். வைரத்தை வைரத்தால் தான் அறுக்க வேண்டும். வினையை வினையால் தான் தீர்க்க வேண்டும். போ போய் பழி தீர்த்துக்



கொள். தீர்த்த கணத்தில் தெளிவோடு மேலெழு. எல்லா இடங்களிலும் அலையாமல் ஏதேனும் ஒரு இடம் அமர்ந்து தவம் செய். என்ன இடையூறு வந்தாலும் தொடர்ந்து தவம் செய்.

அவள் அம்மையைச் சுற்றி வணங்கி விட்டு புயல் போலப் போனாள். திருவாலங்காடு முழுவதும் அலைந்து ஒரு புன்னை மரத்தில் அமர்ந்து கொண்டாள்.

மரம் முதலில் பயந்து அவள் அமைதி கண்டு நிம்மதியா யிற்று - அவள் தம்பியும் மரத்தில் தொங்கினான். அவர்கள் காத்திருந்தார்கள்.

அவள் புருஷன் மறுபடி பிறந்து விட்டானென்று அவளுக்கு தெரிந்து போயிற்று. அவள் கிளைகளை பலமாக உலுக்கினாள். திருவாலங்காடு முழுவதும் சந்தோஷமாய்ச் சுற்றி வந்தாள்.

மற்ற பேய்கள், சூட்சும சக்திகள் அவள் குதியலை வியப்போடு பார்த்தன.

அவள் மறுபடியும் புன்னை மரத்தில் போய் ஒட்டிக் கொண்டாள். அவளுக்குத் தன் கதை தெரிந்தது. தான் வாழ்ந்ததும், தான் வீழ்ந்ததும், தன் நிலைமையிலிருந்தும், பிறர் நிலைமையிலிருந்தும் உணர முடிந்தது.

உலகத்தின் பல குற்றங்களுக்கு பொய்மை தான் காரணம். பொய்மை என்பது சத்தியத்தை மறத்தல். சத்தியத்தை மறுத்தல். தகுதியற்ற உயர்வுக்கும், பாராட்டுக்கும் பேராசைப்படுதல்.

பொய்மை பேராசையின் விளைவு. பேராசைக்கு அகங்காரம் காரணம். அகங்காரம் அறியாமையின் குழந்தை.

வெகு நாளைக்கு முன்பு காஞ்சி மாநகரில் ஒரு அந்தணர் கூட்டத்து விளிம்பில் ஒரு இளைஞன் நின்று கொண்டிருந்தான். அவனும் அந்தணன்.

சபையிலிருந்து தொலை தூரம் நின்று பின்னர் கை கட்டி சபையின் முக்கியஸ்தர்களைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

அந்தக் கூட்டத்தில் நடுநாயகமாக ஒரு அந்தணர் பலவேறு தங்க ஆபரணங்களுடன் வெகு அலங்காரமாய் நின்று கொண்டிருந்தார்.

''நான் சொல்றதைக் கேளுங்கோ'' என்று அதட்டினார்.

கூட்டம் கட்டுப்பட்டது.

''மன்னர் வரும்போது அவருக்கு கங்கையால் அபிஷேகம் செய்ய வேண்டும். கங்கையால் அபிஷேகம் செய்வதற்காகவே ஆயிரம் பொற்காசுகள் வாங்க வேண்டும். ஆயிரம் பொற் காசுகளில் ஐநூறு பொற்காசுகள் எனக்கு. ஐநூறு சபைக்கு'' என்று உரத்துப் பேசினார்.

''நாங்கள் ஆயிரம் பேர் இருக்கிறோம். ஆளுக்கு அரைக்காசு கூட வராது. உங்களுக்கு ஐநூறு காசுகளா.''

யாரோ தூணைப் பிடித்துக்கொண்டு நின்று கோணலாய் கத்தினார்கள்.

''நீ சொல்லுவது சரி. நான் பங்கீட்டை மாற்றுகிறேன். ஆயிரம் காசையும் நானே எடுத்துக் கொள்கிறேன். உங்களுக்கு ஏதாவது தரச் சொல்லி அரசனிடம் வேண்டுகிறேன். ஆயிரம் பேருக்கு எத்தனை காசு தருவது என்று அரசனே தீர்மானிக்கட்டும்.

கூட்டம் திகைத்தது.

அவர் கைகளை ஆட்டிப் பேசுவதையே அந்த இளைஞன் ஆவலாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''அட... சும்மா இருங்களய்யா. வருகிற அரைக் காசும் இல்லாது போய்விடும். அண்ணா கொடுக்கிற அரைக்காசு அவர் கொடுத்ததாக இருக்கட்டும். அரசன் இணக்கமாகப் பேசினால் அவரிடம் நமக்கென்று ஏதாவது கேட்போம். அண்ணா கொடுப்பது காணிக்கை. அரசன் கொடுப்பது தானம்.''

''கங்கை ஜலம் அரசனுக்கு மட்டுமா. அல்லது வேறு யாரும் கேட்பார்களா.''



''ஆறு தாமிரக் குடங்கள் எடுத்து வாருங்கள். அதற்கு நூல் சுற்றுங்கள். மெல்ல எங்கள் வீட்டுக் கிணற்றில் இறக்கி லேசாய் வாசனை திரவியம் சேர்த்து சிறிது தேன் சேர்த்து மாவிலை தேங்காய் அடைத்து தாமிரப் பானையின் மீது ஈரத் துணியைப் போர்த்தி வையுங்கள். ஈரத்துணி காயாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஈரத்துணி மீது காற்றுப்பட உள்ளேயிருக்கும் ஜலம் நன்கு குளிர்ந்துவிடும்.

முடிந்தால் புன்னைக் கிளைகளை ஆறு தாமிரக் குடங்கள் மீதும் சார்த்தி வையுங்கள். புன்னை குளிர்ச்சி. நாளை காலை அரசன் தலையில் நீர் ஊற்றும் பொழுது குளிரில் அவனுக்குப் பல் கிட்ட வேண்டும்.

அரசிக்கு மஞ்சள் பொடி தேய்த்துக் கொள்ளக் கொடுங்கள். குளிர்ச்சி இன்னும் அதிகமாகும். அரசி மயக்கமே போட்டு விடலாம். அது கங்கையின் ஆசீர்வாதம் என்று சொல்லி விடுங்கள்.

அந்த இளைஞனுக்கு அருகே ஒரு மத்திம வயதுக்காரர் இடுப்பில் கை வைத்து மார்பைச் சொறிந்து கொண்டிருந்தார்.

''என் சிவனே... என்ன ஏமாற்று வேலையடா. காஞ்சி புரத்தில் கங்கை ஜலம் உற்பத்தி செய்கிறார்கள். இந்த அயோக்கியத் தனத்தைப் கேட்பாரில்லையா.''

''என்ன சொல்கிறீர்கள்?'' அந்த இளைஞன் வியப்பாக அந்த மத்திம வயதுக்காரரைக் கேட்டான்.

''அவர் கங்கை ஜலம் கொண்டு வரவில்லையா. காசிக்குப் போகவேயில்லையா.''

''காசிக்குப் போய் வந்திருக்கிறான். இல்லையென்று சொல்லவில்லை.''

''பிறகு.''

''ஒரே ஒரு சிறிய குடம் கங்கை ஜலம் கொண்டு வந்து அதில் பாதியைத் தன் வீட்டுக் கிணற்றில் ஊற்றி விட்டான். இப்போது அவன் வீட்டுக் கிணறு கங்கையாகிவிட்டது. குடம் குடமாய்

கங்கை ஜலம் பலநூறு பொற்காசுகளுக்கு விற்றும் கொண்டிருக்கிறான். ஆறு குடம் கங்கை ஜலம் அரசனுக்காகவே கொண்டு வந்ததாய் நடிப்பான். என்ன வியாபாரம் இது.''

''நீங்கள் அதை கங்கை ஜலம் இல்லையென்கிறீர்களா?''

''ஒரு சொம்பு பாலை அவன் வீட்டுக் கிணற்றில் ஊற்றி விட்டு அதிலிருந்து இரண்டு சொம்பு மொண்டு இது பால். பாயசம் வைத்துக் கொள் என்று சொல்லலாமா. வெறும் நீரில் பாயசம் வைக்க முடியுமா?''

''ஏமாற்று வேலை என்கிறீர்களா?''

''காலம் காலமாக அந்தணர்கள் செய்யும் ஏமாற்று வேலை. கங்கையில் நீராடினால் என்ன... காவிரியில் நீராடினால் என்ன... உள்ளே உன் மன அழுக்கு போகாத வரை, எத்தனை யாகங்கள் செய்தாலென்ன.''

''அவரைத் தவறு என்கிறீர்களா?''

''ஆயிரம் பொற்காசுகளில் ஐநூறு எனக்கு. மீதி உங்களனை வருக்கும் என்கிறவன் அந்தணனா. தர்மிஷ்டனா. நல்லவனா. இதற்குப் பெயரா பகிர்ந்துண்ணுதல். அவன் வெறும் முரட்டு முட்டாள்.''

ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்.''

''ருத்ரம், ஜமகம், ரிக் வேத ஸாகை, எதுவும் அவனால் கோஷ்டியாகத்தான் சொல்ல முடியும். அர்த்தம் புரிந்து, அனுபவித்து இவன் வேதம் சொன்னதேயில்லை. ஆனால் முரடன். நல்ல திடச்சித்தன். கோல் சுழற்றவும், வாள் வீசவும் கற்றுக் கொண்டவன். குதிரை ஓட்டத் தெரிந்தவன். பசி தாகம் பொறுத்து ஒரு க்ஷத்திரியனைப் போல வலி வேதனை தாங்கி காசிக்குப் போய் வந்து விட்டான்.''

''காசிக்கு அவர் போனது உண்மை தானா. அதில் ஏதும் ஏமாற்றுவேலை உண்டா.''



''போனது உண்மை. அது நிரூபணமாகியிருக்கிறது. காசிக்குப் போன வேறு சிலர் அவனைக் கேள்விகள் கேட்டு அவன் போய் வந்ததை அங்கீகரித்து விட்டார்கள்.''

''எப்படி அங்கீகரிப்பார்கள்? என்ன முறை அதற்கு?''

''காசியின் மயானத்தைப் பற்றி விவரம் கேட்பார்கள். அங்கே கற்றுக் கொண்டு அங்கேயே செய்ய வேண்டிய ரகஸ்ய மந்திரார்த்தங்கள் தெரிகிறதா என்று பார்ப்பார்கள். துணியைப் போர்த்திக் கொண்டு சொல்லச் சொல்லி ரகஸ்யமாய்க் கேட்பார்கள்.''

''இவர் சொல்லி விட்டாரா?''

''பலவித உபாசனைகள் இவர் கற்று வந்திருக்கிறார். அதில் ஒன்று சின்ன மஸ்தான்.''

''என்ன...''

''சின்ன மஸ்தான். காசியின் உக்கிர வடிவம். இதைக் கூடலின் போது சொல்ல யக்ஷிணி கனவு, பைசாஸங்களைப் பார்க்க முடியும். நம் ஏவலுக்கு அவை கட்டுப்படும். அவற்றை வைத்துக்கொண்டு வித்தை காட்டலாம்.''

''இவர் வித்தை காட்டியதாகத் தெரியவில்லையே'' அந்த இளைஞன் விழிகள் விரிய வினவினான்.

''உனக்கும் எனக்கும் காட்டுவாரா.''

''நாளை சோழ அரசர் வருகிறாரல்லவா. அதுவும் பட்ட மகிஷியும், மனைவியரும், அணுக்கிகளும் புடைசூழ வருகிறாரல்லவா. அரசுப் பெண்டிருக்கு முன்பு அந்தணன் தன் கம்பீரத்தைக் காட்டாமல் இருக்கலாமா. எப்போது என்ன செய்ய வேண்டுமென்று இவனுக்குத் தெரியும். நாளைக்கு வேடிக்கைப் பார்.''

அந்த இளைஞன் பேராவலோடு தொலைவே உள்ள அந்தக் காசி அந்தணரைப் பார்த்தான். அவனுக்குள்ளும் காசிக்குப் போகும் ஆசை அந்தக் கணம் விதைக்கப்பட்டது.

# 3

"என்ன" அவர் எழுந்து அவனைப் பார்த்தார்

அந்த வழவழப்பான திண்ணையில் அவர் கால்களில் தலை வைத்து அவன் நெடுஞ்சாண் கிடையாக நமஸ்காரம் செய்தான்.

தன் குலம் சொன்னான். தன் கோத்திரம் சொன்னான் எந்த ரிஷியின் வம்சம் என்று சொன்னான். எது தனது வேதம் என்று சொன்னான். பிறகு தன் பெயர் சொன்னான். தான் ஒரு மாணவன் என்று அறிவித்தான்

வெறுமே நமஸ்கரிப்பது அவர்கள் முறையல்ல. அவர்கள் குலப் பெருமை கொண்டவர்கள். பரம்பரை பரம்பரையாக ஒரு வேதத்தை மனனம் செய்து பொக்கிஷமாய் பாதுகாத்து வந்தார்கள். அப்படி பாதுகாத்து வருவதே தங்கள் பணி என்றார்கள். வேறு எந்தத் தொழிலும் செய்ய மாட்டோம் என்றார்கள். போரில் ஈடுபடுவதற்கில்லை. உழவோ, உப தொழில்களோ நேரடியாய் செய்வதற்கில்லை. எந்த தேசமாக இருந்தாலும், எந்த மொழியாக இருந்தாலும், எந்த அரசன் ஆண்டாலும் எங்களுக்குக் கவலையில்லை.

இந்த அரசன் ஆதரிக்கவில்லையெனில் நாங்கள் வேறு அரசனிடம் போவோம். வேறு நதிக்கரையில் மேடான இடம் பார்த்து குடியேறுவோம்.

மலைகள் இல்லாத சமவெளியில் தானியங்கள் இருக்கும் இடத்தில் எங்கள் குடியிருப்புகளை சமைப்போம். எங்களுடைய மதமென்று எதுவுமில்லை. எங்களுடைய மொழி சமஸ்கிருதம்.

நாங்கள் உட்கார்ந்து வெறுமனே வேதம் சொன்னால் போதும். அந்த ஊர் செழிக்கும்.



அந்த அரசன் உயர்வான். அந்த குடிமக்கள் வளர்வார்கள்.

எங்களை மதிக்கிறவர்கள் மீது நாங்கள் மிகுந்த பிரியத்துடன் இருப்போம். எங்கள் அறிவு கூர்மையானது. எங்கள் பார்வை விருப்பு வெறுப்பில்லாதது. எனவே எங்கள் முடிவுகள் தெளிவானதாக இருக்கும். எங்களால் எல்லோருடைய பிரச்சினையையும் புரிந்து கொள்ள முடியும். தீர்வு சொல்ல முடியும்.

எங்கள் குலம் மிகமிக ஒற்றுமையான குலம். எங்களுக்குள் எங்கள் செல்வங்களை நாங்கள் பிசிறின்றி பகிர்ந்து கொள்வோம்.

அரசன் பொற்காசுகள் கொடுத்தால் நாங்கள் அதை பத்திரப்படுத்துவதில்லை. பொற்காசுகள் திருடர்களை வரவழைக்கும். ஏனெனில் செல்வத்தை சம்பாதிப்பது மிகக்கடினம். அதை பாதுகாப்பது அதைவிடக் கடினம்

எனவே அந்த பொற்காசுகளுக்கு உடனடியாக நல்ல பசுக்கள் வாங்கி விடுவோம். சாவோ, மூவா பேராடுகள் வாங்கி விடுவோம். இந்தக்கறவைகளை இடையர்களுக்கு கயிறு மாற்றிக் கொடுத்து விடுவோம். ஆடுகள் மூலம் கோயிலுக்கு விளக்கெரிக்கும் நெய்யும், பசுக்கள் மூலம் எங்களுக்கு உண்டான பாலும் நெய்யும் கொடுக்கும்படி செய்வோம்.

நல்ல நிலங்களை விலைக்கு வாங்கி வேளாளர்களிடம் குத்தகைக்கு விட்டு எங்களுக்கு நெல் படியளக்கச் செய்வோம்.

தச்சர்களிடமும், கருமார்களிடமும், நெசவாளர்களிடமும் தங்கம் கொடுத்து வேலை வாங்குவோம்.

எல்லோரிடமும் இதமாகப் பேசுவோம். அனுசரித்து அரவணைத்து நடப்போம். சண்டைக்கு எவரேனும் வந்தால் விட்டுக் கொடுத்து விடுவோம். எவரேனும் கேலி செய்தால் பொறுத்துக் கொள்வோம். அந்த இடத்தை விட்டு விலக முயற்சிப்போம்.

எங்கள் பெண்டு பிள்ளைகளுக்கு தீங்கு வந்தாலும் பொறுத்துக் கொண்டு இன்னல் தீர்க்கும்படி இறைவனை வேண்டுவோம்.

ஏனெனில் இங்கு சொல்லப்பட்ட எல்ல சௌகர்யங்களையும்விட, எல்லாசெல்வத்தையும்விட, எங்கள் குலச் சொத்தான வேதம் முக்கியம். அதை மனனம் செய்து அர்த்தம் தெரிந்து அடுத்த தலைமுறைக்கு அதை மாற்றித் தர வேண்டும்.

இதற்காகவே பிறப்பு. இதற்காகவே உயிர் வாழ்தல், இதற்காகவே திருமணம். இதன் பொருட்டே பிள்ளை பேறு. உண்ணுதலும், உடுத்துதலும் உறங்குதலும் இதன் பொருட்டே, என்னைவிட என் வேதம் முக்கியம்.

அப்படிப்பட்ட குலத்தில் முதியவராய் இருந்த அவர் கால்களில் விழுந்து நமஸ்கரித்து கைகட்டி பணிவோடு நின்றான். எப்பேர்ப்பட்ட குலம் என் குலம். அவரைப் பார்த்து வியக்கும்போது தன் குலத்தையும் வியந்தான். நிதானமாய் எழுந்து உட்கார்ந்தார் அவனை உற்றுப் பார்த்தார். சேர தேசத்திலிருந்து வந்த கொட்டைப் பாக்கை சிறிய கத்தியால் சீவத் துவங்கினார்.

அவன் எதற்கு வந்திருப்பான் என்று யோசிக்கத் துவங்கினார்.

அவரும் அவர் ஜாதியும் எதன் பொருட்டும் உணர்ச்சி வசப்படுவதில்லை.

''எதிர் அகத்திற்குப் போய் நான் வேண்டினேன் என்று வெற்றிலை கேள்.''

அவன் அவரை நமஸ்கரித்துவிட்டு எதிர் வீட்டிற்கு ஓடினான். கை கால்களை ஆட்டி அவசரமாய் வெற்றிலை கேட்டான். எதிர் வீட்டுப் பெண்கள் உள்ளிருந்தபடியே எட்டி கிழவரைப் பார்த்துவிட்டு அடுக்கு வெற்றிலை கொடுத்து அனுப்பினார்கள். அவன் கை கொள்ளாமல் வாங்கி வந்தான்.



அவர் எதிரே வைத்துவிட்டு விழுந்து நமஸ்கரித்தான். அவர் சிரித்தார்.

இது தாசபாவம். தன்னை இவன் தலைவனாக, குருவாக ஏற்றுக் கொள்ள ஆசைப்படுகிறான். தன்னிடமிருந்து வித்தைகள் கற்றுக் கொள்ள விரும்புகிறான். காசிக்குப் போய் வந்த கதைகளைக் கேட்க ஆசைப்படுகிறான்.

''எப்படிப் போவது? என்னால் போக முடியுமா?'' கேள்விகளோடு அலைகிறான்.

இன்று அமிர்த யோகம். இப்போது குரு ஹோரை. இவன் நின்று கை கூப்புமிடம் வடகிழக்கு. ஈசான்ய மூலை.

இவன் என் வலது பக்கம் நிற்க, என் மூக்கின் வலது பக்கமிருந்து சுவாசம் உள் போய் வெளி வருகிறது.

நான் சொல்லும் முதல் வேலையாக இவன் வெற்றிலை வாங்கி வந்தான். வெற்றிலை மீது பாக்கு வைத்து நகர்த்தினான். எனவே இவன் எனக்கு முதலில் செய்த வேலை தாம்பூலம் தந்தது. இவனை சீடனாக ஏற்கலாம்.

இன்னும் ஒரு சகுனம் கேட்டுப் பார்ப்போம். இந்த வெற்றிலையும் பாக்கும் சமச்சீராக சேர்ந்து உள்ளே ஒரு ஆனந்தம் பரவுமெனில் இவனிடம் பேசுவோம். இல்லையெனில் திருப்பி அனுப்பி விடுவோம்.

சேர்ந்தது. அவர் அவனைப் பார்த்துச் சிரித்தார்.

''உட்கார்'' என்று கை காட்டினார். அவன் நமஸ்கரித்துவிட்டு உட்கார்ந்தான்.

''என்ன'' என்றார்.

''காசி தேசம் எங்கே இருக்கிறது?'' அவன் ஆவலுடன் கேட்டான்.

''பரத கண்டம் பூமா தேவியின் நாக்கு போல ஒரு அமைப்பில் இருக்கிறது. அந்த நாக்கின் இடதுபக்கம் நாமிருக்கிறோம். நாக்கின் மையத்தில் காசி தேசம் இருக்கிறது.''

''எத்தனை நாள் பயணம்?''

''நோயற்று நடந்தால் மூன்று மாதம்.''

''பயணப்படுவதற்கு எது நல்ல பருவம்?''

''மகர சங்கராந்தியை காஞ்சி மாநகரத்தில் கொண்டாடி விட்டு, உத்ராயனத்தில் வடக்கு நோக்கி இரவும் பகலுமாய் நடந்தால் மூன்று மாதத்தில் காசி தேசம் போய் விடலாம்.''

''வழியே வனாந்தரங்கள் அதிகமோ...?''

''ஆமாம்... வனமில்லாத இடம் எது?''

''மலைகள் உண்டோ...?'''

''சில இடங்களில் உண்டு.''

''கள்வர் பயம் உண்டோ...?''

''மடியிலே கனமிருப்பவருக்கு உண்டு.''

''மாற்று அரசர்கள் துன்புறுத்துவார்களா...?''

''அந்தணர்களை பரத கண்டத்தில் யாரும் துன்புறுத்துவதில்லை. ஆனால் மடக்கி விசாரிப்பார்கள்.''

''வழியில் உணவுக்கு என்ன செய்வது...''

''இலை, பூ, காய், கனி எங்கேனும் சில இடங்களில் தானிய உணவு கிடைக்கும்.''

''அரிசியா...''

''இல்லை. வடக்கே போகப் போக சோளமும், கோதுமையும் தான் மாவாக்கி சாப்பிடுகிறார்கள். கோதுமையில் அடை போல் அனலில் சுட்டு வெண்ணெய் வைத்துக் கொள்கிறார்கள். வடக்கே பல நதிகள் பாய்கின்றன. எனவே பசுக்கள் கம்பீரமாக இருக்கின்றன. பாலும் நெய்யும் பல கிராமங்களில் தானமாகக் கொடுக்கின்றனர்.''

''பதிலுக்கு என்ன எதிர்பார்க்கிறார்கள்.''



''எதுவுமில்லை. ஆனால் போகும் போதே விசேஷமான வேர்களை, மரப்பட்டைகளை, மூலிகை விதைகளை சேகரித்துக் கொண்டு போகலாம். பூச்சிக் கடிக்கு, வயிறு வலிக்கு, விஷ ஜுரத்திற்கு என்று நிவாரண மருந்துகளை வாரிக் கொடுத்தால் அவர்கள் சந்தோஷமாகி விடுகிறார்கள்.

''அப்படி எதுவும் கிடைக்கவில்லையெனில்'' அந்த இளைஞன் கவலையோடு கேட்டான்.

சிவனைக் குறித்தும், விஷ்ணுவைக் குறித்தும் சில சுலோகங்கள் உட்கார்ந்து சொன்னால் போதுமானது. ஆனால் மனிதர்களுக்கும், மாடுகளுக்கும் வைத்தியம் தெரிந்திருப்பது மிகப் பெரிய மரியாதையைக் கொடுக்கும்.''

''நீங்கள் கற்றுக் கொண்டு போனீர்களா...''

'இந்த பயணத்திற்கென்றே பலதும் கற்றுக் கொண்டேன்.''

''வேறு என்ன செய்வீர்கள்?''

''இரும்பைப் பொன்னாக்குவேன்.''

''என்ன'' அவன் திகைத்தான்.''

''உண்மையிலேயே உங்களால் இயலுமா...'' ஆவலோடு கேட்டான்.

''இயலும்...''

''அப்படியானால் ஏன் காசிக்குப் போனீர்கள்? இங்கேயே இருந்திருக்கலாமே...'' அவன் வினோதமாக அவரைப் பார்த்தான்.

அவர் பதிலுக்கு அவனை வினோதமாகப் பார்த்தார்.

''என்ன சொல்கிறாய் நீ.''

''காசிக்குப் போய் வந்ததால் தானே இத்தனை செல்வாக்கு செல்வம். இந்த செல்வத்தால் தானே உங்களுக்கு இத்தனை புகழ். பெரும் இரும்பு பட்டைகளை நீங்கள் தங்கமாக்கி காசிக்குப் போகாமலேயே சௌகர்யமாய் வாழ்ந்திருக்கலாமே.

வியப்போடு கேட்ட அந்த இளைஞனை அவர் உற்றுப் பார்த்தார்.

''முட்டாள். காசிக்குப் போய் வந்தது ஒரு அனுபவம். எத்தனை பொன் கொட்டிக் கொடுத்தாலும் அது கிடைக்காது.

அரசர்கள் கொடுக்கும் பணத்தைக் கருதியா நான் காசிக்குப் போனேன் என்று நினைக்கிறாய். மனம் விரிய வேண்டுமென்று போனேன்.''

''மனம் விரிதல் என்றால் என்ன'' அந்த இளைஞன் அப்பாவியாகக் கேட்டான்.

''நாம் மட்டுமே உயர்வு. நம் வாழ்க்கை மட்டுமே அற்புதம். நமக்குத் தெரிந்ததே ஞானம் என்கிற கர்வம் போகும். இந்த பூமி மிகப் பெரியது. எத்தனையோ நதிகள் எத்தனையோ கலாச் சாரங்கள் எத்தனையோ வித வழிபாடுகள். ஒவ்வொன்றும் பூரணமாகத் தான் இருக்கின்றது. எல்லாமும் குறையுடைய தாகவும் தெரிகின்றது.

பருவங்களை ஒட்டி தாவரங்கள். தாவரங்களை ஒட்டி கால்நடைகள். கால்நடைகளை ஒட்டி மனிதர்கள். இந்த மனிதர் களின் வாழ்வு இந்த தாவரங்களுக்கும், கால்நடைகளுக்கும் ஏற்றார் போல் அமைகிறது.

தனுர் மாதத்தில் நாம் குளத்திலோ, ஆற்றிலோ விடியற் காலை குளிக்கிறோமே காசியில் இதை நினைத்துப் பார்க்கக் கூட முடியாது. பல் தேய்த்து கொப்பளிப்பது கூட பயமுறுத்துகிற விஷயமாய் போய் விடுகிறது. அத்தனை குளிர். கைலாசப் பர்வதத்திலிருந்து பனிக்காற்று காலை மூன்று அல்லது நான்கு நாழிகை வரை ஊசியாய் குத்துகிறது. தோல் ஆடையோ கம்பளியோ இல்லாமல் வெளியே வரமுடியாது.

தட்சணை பீடபூமியில் வாழ்வது சுகம். வடக்கே போகப் போக குளிர் வாட்டியெடுக்கும். குளிர் மட்டுமல்ல வெயிலும் வெறி பிடித்தது போலக் காயும். வாழ்க்கையே வெறுத்துப் போகும்.''



அவன் அவரையே அசையாது பார்த்துக் கொண்டிருந் தான்.

''சரி, எதற்காக இத்தனை கேள்வி கேட்கிறாய்?''

''நான் காசிக்குப் போக வேண்டும்'' அந்த இளைஞன் ஆவலும் உறுதியுமாய்க் கூறினான்.

தென் திசையில் பல்லி சொடுக்கி குரல் கொடுத்தது. அவர் தனது நாடியை கவனித்தார். அவன் இருக்கும் பக்கமே அவர் சுவாசமும் ஓடியது.

சட்டென்று காலுக்கு கீழிருந்த எல்லா வெற்றிலைக் காம்புகளையும் அள்ளிக் கொண்டார். கையை மூடி அவனிடம் நீட்டினார்.

''ஒற்றையா... இரட்டையா...'' கேட்டார்.

''இரட்டை'' அவன் பதில் சொன்னான்.

## 4

அவர் கைகளைப் பிரித்தார். இரண்டு இரண்டாய் வெற்றிலைக் காம்புகளை அடுக்கி வைத்தார். நாலு ஜோடிகளாய் எட்டு வெற்றிலைக் காம்புகள் இருந்தன.

''நீ நிச்சயம் காசிக்குப் போவாய். வெற்றியுடன் பத்திரமாய் திரும்பி வருவாய்'' அவர் தொடையில் அறைந்து கொண்டு பேசினார்.

''ஆனால் அதற்கு முன்பு சில பயிற்சிகள் எடுத்துக் கொள்.''

''என்ன பயிற்சி?''

''தொலைதூரம் நடக்க பயிற்சி எடுத்துக் கொள். வெய்யிலும், குளிரும், மழையும், காற்றும் பழகிக் கொள்.

மலையேறவும் விஷ ஜந்துக்கள் உள்ள தோட்டத்தில் கவனமாய் நகருவது எப்படி என்றும் கற்றுக் கொள். வேடுவர்களோடு பழகு. தாவரங்களோடு பரிச்சயம் கொள். மிருகங்களின் வாசனையைப் புரிந்து கொள். பறவைகளின் பதட்டத்தைப் பாடம் படி.''

''தை மாதக் குளிரில் நான்கு மணிக்கு சுனையில் இறங்கு. குளித்துவிட்டு ஒற்றை ஆடையுடன் ஜெபம் செய். மலை உச்சியில் ஊதக் காற்றில் மூன்று நாள் இரு.''

''அங்கே இருந்து விட்டு உடனே காஞ்சி மாநகர் வா. இங்கே கும்பலாக நின்று ருத்ரம் சொல். மலை உச்சியில் மூன்று நாள் இருந்த பிறகு பேந்தப் பேந்த முழித்தாய் என்றால் நீ பயணத்திற்கு லாயக்கில்லாதவன். தனிமையில் சிக்கிக் கொண்டவன். தனிமையை வேண்டும்போது எடுத்துக் கொண்டு வேண்டாதபோது விலக்கி வைக்கவும் ஒரு அந்தணன் தெரிந்து கொள்ள வேண்டும்.''

''ஒரு அந்தணன் ஆரவாரமாகவும் இருக்க வேண்டும். அமைதியாகவும் இருக்க வேண்டும். அரசரோடும் பழக •வேண்டும். ஆண்டியோடும் சல்லாபிக்க வேண்டும். பெரிய தபஸ்விகளின் எதிரே நிற்க வேண்டும். தாஸிப் பெண்டிரோடும் புழங்க வேண்டும். இதுதான் கெட்டிக்காரத்தனம்.''

''எல்லோரோடும் பழகப் பழகத்தான் நமக்கு பலநூறு விஷயங்கள் தெரிய வரும். எல்லாம் தெரிந்து கொண்டு தெரிந்த விஷயங்களைத் தொகுத்துப் பார்த்து சமயோஜிதமாய் பேசுவதே கெட்டிக்காரர்களின் வேலை.''

''சோழ அரசன் இங்கு தங்கி விட்டு திருவொற்றியூர் போகிறான். நீயும் அவனோடு போ. படை வீரர்களோடு சிநேகம் செய்து குதிரையேற்றம் கற்றுக்கொள். தொலைதூரப் பயணத்திற்கு ஒரு சில இடங்களில் குதிரைகள் உதவும்.''

''நான் உன்னைக் கவனித்துக் கொண்டிருப்பேன். நீயும் என்னைக் கவனித்துக் கொண்டிரு.''



''அரசனோடு திருவொற்றியூர் வரை போய் விட்டு நீ திரும்பி வா. அரசனில்லாமல் வேறு பாதை தேர்ந்தெடுத்து தனியே நடந்து வா. வழியிலுள்ள குன்றிலோ, மலையிலோ மூன்று நாள் தங்கி இரு. பசி, தாகம் பழகு.''

''உனக்கு சொல்லிக் கொடுத்தாயிற்று. வழி காட்டியாயிற்று. ஆனால் திருவொற்றியூர் பயணமே கடினம்தான். இதற்கு இடையில் எதிர்ப்படும் காடுகளே பிரச்சினைகள் நிறைந்தது தான். படையோடு போகும் போது பிரச்சினைகள் தெரியாது. திரும்பி வரும்போது தெரியும். தனிமையாய் நடக்கும்போது பிரச்சினைகள் பூதாகரமாகும். அனுபவம் போல் மிகச் சிறந்த ஆசான் உலகில் வேறு எதுவுமில்லை.

அனுபவம் ஏற ஏற உன் முகத்திலுள்ள குழந்தைத்தனம் தானே அழியும். முகம் முற்றி முதிரும். அப்போது உன் பேச்சே வேறு விதம். உன் த்வனியே தனி. உன் தோரணையே வேறு.''

''ஆனால் ஒரு விஷயம். உன் வீடு இதற்கு அனுமதிக்குமா என்று பார். எந்த வீடும் அனுமதிக்காது. உன்னை பயமுறுத்துவார்கள். பெண்களைக் காட்டி உன்னைப் போக வொட்டாது செய்வார்கள்.

பயணப்படுபவன் தான் அறிவாளி. வீரன். மற்றெல்லோரும் கோழைகள். எல்லா சுகமும் விலக்கி உயிரைத் துச்சமாய் மதித்து, கிடைத்ததை சாப்பிட்டு எங்கேனும் நிழலில் ஒண்டி, தூங்கும் நேரத்திலும் துடிப்பாய் இருப்பது என்பது எல்லோராலும் முடியாது. பிரமாணன் என்பவன் தேசசஞ்சாரி. படிப்பறிவும் பட்டறிவும் உள்ளவன். காசிக்குப் போய் வருவது என்பது கடவுளைப் பார்த்துவிட்டு வருவது போல.

எனக்குக் கிடைத்த மரியாதையைப் பார்த்தாய் அல்லவா. காசியிலிருந்து தெற்கே வந்த பைராகியை விவரம் கேட்டு நான் தனியே பயணப்பட்டேன். இந்தப் பயணத்திற்கு யாரையும் சேர்க்காதே. தனியாகப் போ. அதுதான் நல்லது.''

''எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்?'' அவன் ஆவலோடு கேட்டான்.

''உனக்கு கால் வலிக்கும். உன் கூட வருபவன் வேகமாக நடப்பான். நீ வேகமாக நடக்கும்போது அவன், கால்வலி, இளைப்பாறலாம் என்பான். பயணத்தின் வேகம் இதனால் குறையும். இந்தக் குறை கோபம் கொடுக்கும். என்னோடு பயணப்பட்ட ஒரு பிராமணன் நான் தூங்கும்போது என்னுடைய கட்டுச் சோற்றைத் திருடித் தின்றான். மறுநாள் அவன் தூங்கும்போது அவன் உணவில் மயக்க மருந்து கலந்து விட்டு நான் மேற்குப் பக்கமாக நகர்ந்து விட்டேன்.''

''மேற்கே மலைகள் அதிகம் என்கிறார்களே?''

''ஆமாம். போகும்போது வேண்டுமென்றே கடினமான பாதையைத் தேர்ந்தெடுத்தேன். சேர தேசம், கொங்கு தேசமெல்லாம் பார்த்துக் கொண்டே போனேன்.''

''இன்னும் ஒரு கேள்வி.''

''கேள்.''

''வடக்கே இருப்பவர்கள் நம்மை விட கெட்டிக்காரர்களா?''

''ஒரு நாளுமில்லை. சோழதேசத்து அந்தணனுக்கு இணையாய் யாரும் வடக்கே இல்லை. வடக்கே உள்ளவர்கள் பலசாலிகள். ஆனால் அப்பாவிகள். இரக்கமுள்ளவர்கள்.

பிராமணர்களைப் போர்வீரர்களாகப் பார்க்க வேண்டுமா? கிழக்குக் கடற்கரையோரம் பூரி ஜெகன்னாதர் ஆலயம் இருக்கிறது. அதைப் போய் பார். அங்குள்ள பிராமணர்கள் இடுப்பில் நீண்ட வாளோடு அலைகிறார்கள். போர் வெறியோடு இருக்கிறார்கள். அன்னியர்கள் எல்லோரையும் வம்புக்கு இழுக்கிறார்கள். அங்கும் மந்திரவித்தைகள் காட்டித் தப்பித்துக் கொள்ளலாம்.

மழைக்காலம் முடியட்டும். பனி துவங்கட்டும். இளவேனிற் காலம் முடியும்போது நீ காசியை அடைந்து விடுவாய்.



கங்கையை ஒவ்வொருவரும் வாழ்நாளில் நிச்சயம் பார்க்க வேண்டும்.

''அது நதியே அல்ல. பூமி செய்த புண்ணியம். இறைவன் தந்த வரம். பிரபஞ்சத்தின் கருணைக் கண்ணீர். பரத கண்டத்தின் ரத்த நாளம். வாரணாசி ஹ்ருதயகோஸம். ஆயிரம் பேரில் ஒருவருக்குத்தான் இந்த ஆசை தோன்றும். லட்சம் பேரில் ஒருவருக்குத்தான் இதை செயல்படுத்த முடியும். நீ செய்வாய். நீ நிச்சயம் செய்வாய். நீ காசிக்கு போய் வந்தது சரித்திரமாகும். ஜெயவிஜயீபவ;

நாளை மன்னர் வரும்போது எனக்கருகே இரு. நான் அறிமுகம் செய்து வைக்கிறேன்.''

அவர் அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

அவன் மறுநாளுக்காகக் காத்திருந்தான். குடுமிக்கு எண்ணை தடவி பூசி, துணிகளை சுத்தமாய்த் துவைத்து உலர்த்தி உடம்பில் சந்தனம் தடவி தன்னை அலங்கரித்து கொண்டான்.

காலையில் ஜபதபங்களை முடித்து, பட்டையாய் திருநீறு பூசி நிழலாகக் காத்திருந்தான்.

மன்னர் பெரும்படையோடு வந்தார். அவன் காசிக்குப் போய் வந்த அந்தணர் அருகே போய் நின்று கொண்டான். அவரிடம் இருந்த வெள்ளிப் பூண் போட்ட கைத்தடியை வாங்கிக் கொண்டான்.

கணீரென்ற குரலில் மன்னனை மந்திரம் சொல்லி வரவேற்றான்.

மன்னன் குதிரைவிட்டு இறங்கினார். அரசிகள் பல்லக்கு விட்டு இறங்கினார்கள். அரசிளங் குமாரர்கள் யானையிலிருந்து இறங்கினார்கள்.

காஞ்சி மாநகரின் படை தளபதிகள் மண்டியிட்டு வரவேற்றார்கள். தண்டல்நாயக்கர்கள் நெடுஞ்சாண் கிடையாகக் கிடந்து விழுந்து நமஸ்காரித்தார்கள்.

காஞ்சி மாநகரக் கூட்டம் அந்த சோழ மன்னனை கோயில் மண்டபத்துக்கு அழைத்துப் போயிற்று. மேளதாளங்களோடு அரசரை ஊர்வலமாய் பெரிய தெருக்களில் அழைத்துச் சென்றது. தெரு முனைகளில் தாஸிகள் எதிர்கொண்டு நடமாடினார்கள். ஆறெழு பேர் குனிந்து நிமிர்ந்து கும்மியடித்தார்கள். மன்னனுக்கு மாலை போட்டார்கள். சந்தனம் தடவினார்கள். திலகமிட்டார்கள்.

அவர்கள் நடனத்தின் போது யந்திர கோஷங்கள் குறைந்து வாத்தியங்கள் ஒலி அதிகரித்தன. பிறகு வாத்தியங்கள் ஒலி நின்று பாடல்கள் பாடப்பட்டன.

கோவில் வாசல்களில் சில பிராமணர்கள் வில்வமாலையிட்டு விபூதி கொடுத்து பாலும் பழங்களும் உண்ணக் கொடுத்து அரசரை உபசரித்தார்கள்.

அரசர் கோவிலில் ஸ்வாமி தரிசனம் செய்தார். ஓதுவார்கள் மனம் உருகப் பாடினார்கள். அரசன் அங்கங்கே காசு கொடுத்தார். மண்டபத்தில் வந்து அமர, தமிழ்ப் புலவர்கள் அரசரைச் சூழ்ந்து கொண்டார்கள். அரசரைப் புகழ்ந்து எழுதப்பட்ட பாடல்களை அவர் முன்பு ஆரவாரமாகப் பாடினார்கள்.

அரசர் பிறகு பொது ஜனங்களைப் பார்த்துக் கைகூப்பினார். நிலக்கிழர்கள், வேளாளர்கள் அரசர்க்கு அருகே போனார்கள். வணங்கினார்கள். அரசர் பலருக்கு கைகூப்பினார். சிலர் கைகளை கெட்டியாகப் பற்றிக் கொண்டார்.

''சென்ற படையெடுப்பின் போது நீங்கள் அனுப்பிய தானியம் மிகவும் உதவியாக இருந்தது'' என்று பாராட்டினார்.

அன்னியரிடமிருந்து பறித்து வந்த நகைகளைப் பெருநிலக்கிழாருக்கு அணிவித்தார். தொழில் செய்வோருக்கு மரியாதை செய்தார். காஞ்சியிலிருந்து சோழதேசத்துக்கு போன கம்மாளர்களுக்கு காஞ்சி மாநகரில் மரியாதை செய்தார்.



அவர்களுக்கு மேல் துண்டும் பொற்காசுகளும் வழங்கினார். கூட்டம் இடைவிடாது மன்னரை வாழ்த்திக் கொண்டிருந்தது.

மன்னர் சற்று அசர, அக்ரஹாரத்து அந்தணர்கள் உரத்து வேதம் சொல்ல ஆரம்பித்தார்கள்.

ஊர் தண்டல்காரர் அந்த அந்தணரைச் சுட்டிக் காட்டினார்.

''இவரே கங்கை வரை போய் வந்த காஞ்சி அந்தணர். உங்களுக்காக உங்கள் குடும்பத்திற்காக கங்கை ஜலம் கொண்டு வந்திருக்கிறார்.''

அரசர் எழுந்தார். பட்டத்து ராணியும் எழுந்தாள். கைகூப்பினார்கள். அங்கு அமர்ந்திருந்த அத்தனை பேரும் எழுந்தார்கள்.

அரசர் காசிக்கு போன அந்தணருக்கு அருகே போனார். அவரை வியப்போடு பார்த்தார்.

வேட்டியும் சால்வையுமாய் இருந்த அந்த அந்தணர் வலது உள்ளங்கையை விரித்தார். அனைவரும் பார்க்கும் முன்பே சட்டென்று அங்கு ஒரு அக்னி தோன்றியது.

எல்லோரும் ஹா என்று வியந்தார்கள். அரசர் மிரண்டார். அரசி நடுங்கினாள்.

அவர் 'பயப்பட வேண்டாம்' என்று இடது கையால் சைகை செய்து வலது கையில் எரிகிற தீயால் ஆரத்தியெடுத்தார். உதறினார். தீ அணைந்து விட்டது.

அரசர் அவரை நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார். அரசியும் வணங்கினாள். மந்திரிப் பிரதானிகள், தளபதிகள் அத்தனை பேரும் வணங்கினார்கள்.

அந்த இளைஞன் வியப்போடு அவரைப் பார்த்தான். அந்த அந்தணர் எந்தச் சலனமுமில்லாமல் அமைதியாக இருந்தார்.

அரசர் எழுந்திருக்க அனைவரும் எழுந்தார்கள்.

அருகிலிருந்தவரிடம் கிண்டியை வாங்கி அதிலிருக்கும் நீரை அரசரின் உள்ளங்கையில் வார்த்தார்.

''இது கங்கை. சிவ பெருமான் தலையிலிருந்து பொங்கி வரும் நதி. இந்த புண்ணிய நதி, நீ தெரிந்தும் தெரியாமலும் செய்த பாவத்தை நீக்கட்டும். பாவங்கள் நீங்கியதால் நீ பலம் பெற்றவனாகிறாய். உன் ஆரோக்கியம் அர்ஜுனனைப் போல் அதிகரித்து விட்டது. வெற்றி நிச்சயமாகி விட்டது. உன் புகழ் பரத கண்டத்தில் எல்லா பக்கமும் பரவப் போகிறது. உன் குலக் கொடிகள் உன்னைப் போல் கம்பீரமாக வலம் வரப் போகிறார்கள்.

சந்திர சூரியர்கள் இருக்கும் வரை உன் பெயரும் புகழும், குலமும் இருக்கும்.

உனக்கு இன்னொரு பரிசளிக்க ஆசைப்படுகிறேன். நான் வெகு தூரத்திலிருந்து சிரமப்பட்டுக் கொண்டு வந்த கங்கை நீரால் உனக்கும் உன் மனைவிக்கும் அபிஷேகம் செய்ய விரும்புகிறேன்.

தெய்வத்திற்கு அடுத்தபடி மன்னன் என்று சொல்லியிருக்கிறது. மன்னன் விஷ்ணு அம்சம் என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

உனக்கு அபிஷேகம் செய்ய அது உலகத்துக்கே அபிஷேகம் செய்தது போல. ராஜனான நீ நன்றாக இருந்தால்தான் சோழ தேசம் நன்றாக இருக்க முடியும்.

நான் காசிக்கு போனது சோழ தேசத்திற்காகத்தான். திருவொற்றியூரிலிருந்து கன்னியாகுமரி வரை வங்கக் கடலிலிருந்து பொதியமலை வரை பரவியிருக்கும் இந்த சோழ தேசத்தை கங்கை ஆசீர்வதிக்க வேண்டும். உனக்கு அபிஷேகம் செய்ய அது சோழ தேசத்துக்கு அபிஷேகம் செய்தது போல. எனவே பீட அலங்காரங்களுடன் அடுத்த மண்டபத்துக்கு நீ எழ வேண்டும். சோழ தேசம் கங்கையில் நனையும் புண்ணியம் பெற வேண்டும்.

அடுத்த மண்டபத்தில் சற்று உயர்ந்த மணமேடையில் அழகான மர ஆசனங்கள் போடப்பட்டிருந்தன.



அந்தணர் மேடையில் ஏறிக் கொண்டு அரசரைக் கைபிடித்து மேடையிலேற்றினார். அரசர் அரசியை ஏற்றினார். இரண்டு இளவரசர்களும் ஒரு இளவரசியும் ஏறினார்கள். அரசரின் வயதான தாயும் ஏறினாள். மற்றவர்கள் தடுத்து நிறுத்தப் பட்டார்கள்.

அரசருக்கு வலப்புறம் உள்ள திரை விலக்க அங்கு ஆறு தாமிரக் குடங்கள் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தன. திரை விலகியவுடன் தீப தூபங்கள் காட்டப்பட்டன. ''கங்கை நீர் மிகவும் குளிரானது. அபிஷேகம் செய்யும்போது உடம்பு நடுங்கக் கூடும். லேசான மயக்கமும் வரலாம்.''

''எனவே இந்தப் பழச்சாற்றையும் வெல்லப் பொட்டையும் சிறிது சாப்பிடுங்கள்.''

அவர்கள் சாப்பிட்டார்கள். ஆசனங்களில் அமர்ந்தார்கள். மேடையில் மற்ற அந்தணர்கள் ஏறினார்கள். அரச குடும்பத்தைச் சூழ்ந்து கொண்டார்கள். பேரிகை முழுங்கியது. காண்டாமணி அசைந்து ஒலித்தது. சேகண்டி அடிக்கப்பட்டது. எக்காளம் முழங்கியது. சிறுபறைகள் பலமாய் வாசிக்கப்பட்டன. அபிஷேகத்திற்கான வேதமந்திரம் சொல்லப்பட்டது. அரசர் குளிர் நீர் பட்டவுடன் நடுங்கினார். அரசி மயங்கி விழுந்தாள்.

சகலத்தையும் அந்த அந்தண இளைஞன் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

## 5

**அ**ரசனே, சோழ தேசத்து அதிபதியே, அடிமுடி காணாத பெரியோனே, திரிபுரம் எரித்த நம் சிவன் இந்த கங்கை நீர் வழியே உன்னுள் முற்றிலுமாய் இறங்கியிருக்கிறான். அவன் கருணை குளிர் நடுக்கமாய் உன்னுள் பரவி விட்டது. இனி

உனக்கு தோல்வி என்பதே இல்லை. உன் குலம் பரதகண்டம் முழுவதும் ஆளப் போகிறது. சிவபெருமானின் சக்தி உன் மனைவியின் கருப்பையை அடைந்து விட்டது. அதைத் தாங்காமல் தான் அவள் மயங்கி விழுந்தாள். இப்பிள்ளை மூலம் உன் குலம் தழைக்க மகத்தான ஒரு இளவரசன் பிறக்கப் போகிறான். அவன் சோழகுலத்தை மேன்மையுறச் செய்வான்.

இந்த குளிர்ந்த கங்கை நீரில் குளித்த நீ மரணமில்லாப் பெரு வாழ்வை எய்துவாய். சந்திர சூர்யர் உள்ளவரை, உன் பெயரை இந்த சோழ நாடு சொல்லிக் கொண்டிருக்கும்.

கடவுளின் கருணைக்குப் பிரதி உபகாரம் பண்ண வேண்டாமா. ஆறு பாயும் வளமான பூமிகளில் நம் சிவனுக்கு கோயில் கட்டு. அந்தக் கோயிலை கற்றளியாய் எழுப்பு.

ஒரு கோயில் மட்டும் போதாது. சோழ நாடு முழுவதும் உன்னால் கைப்பற்றப்பட்ட பாண்டிய நாட்டிலும் கூட நம் சிவன் பெயர் பரவ வேண்டும்.

எனக்கென்று எதுவும் தர வேண்டாம். மன்னா, இவ்வூர் அந்தணர்கள் இடைவிடாது சிவன் புகழை ஓதுவதற்கு வசதி செய்து கொடு. அவர்கள் எந்தக் கவலையுமின்றி இறைவன் நாமமே சொல்லிக் கொண்டிருந்தால் சோழநாடு செழித்து வளரும்.

திரையை உயர்த்துங்கள். அரசன் தலை உலர்த்திக் கொள்ளட்டும். அரசியார் உடை மாற்றிக் கொள்ளட்டும்.''

கங்கைக்குச் சென்று வந்த அந்தணர் சட்டென்று விலகி எதிர் மண்டலத்திற்குப் போய் சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்டார். அவன் அவருக்கு அருகே போய் நின்று கொண்டான். அவனைப் போலவே வேறு சில அந்தண இளைஞர்களும் அவருடைய அடியாட்கள் போல கை கட்டி நின்று கொண்டார்கள்.



அவருக்கு அருகே வெகு நெருக்கமாய் நிற்பது யாரென்று அந்த அந்தண இளைஞர்களுக்கிடையே முட்டும் மோதலும் நடந்தன. அவன் சற்று விலகிக் கொண்டான். அரசர் என்ன செய்யப் போகிறார் என்று ஆவலாய் பார்த்தான். திரைக்கு மறைவே யாரோ உள்ளே போனார்கள்.

அந்தணர் அவனை உற்றுப் பார்த்தார். அவனும் பதிலுக்கு என்ன என்பதுபோல் பார்த்தான். அவர் கண்ணைத் திரைக்குப் பின்னே செலுத்தினார். அவன் புரிந்து கொண்டான். மற்ற அந்தண இளைஞர்கள் மக்கு போல் நிற்க அவன் திரைப் பக்கம் போனான். தரையில் வழிந்த கங்கை ஜலத்தை எடுத்து தலையில் தெளித்துக் கொண்டான். திரையை விலக்கி எட்டிப் பார்த்தான். உள்ளே அரசனை சுற்றி மந்திரிகள் இருந்தார்கள். அரசியைச் சேடிப் பெண்கள் கனத்த போர்வையால் போர்த்தி ஆசுவாசப் படுத்திக் கொண்டிருந்தார்கள்.

''என்ன...'' ஒரு மந்திரி அதட்டினார்.

''குடங்கள் எடுத்துப் போக வேண்டும்'' அவன் பதில் சொன்னான்.

ஒவ்வொரு குடமாய் எடுத்து வந்து வெளியே வைத்து அரசரும் அமைச்சர்களும் பேசுவதை கேட்டு மனதில் பதித்துக் கொண்டான். ஒரு குடத்தைத் தூக்கிக் கொண்டு அவரிடம் ஓடி வந்தான்.

கங்கைக்கு சென்று வந்த அந்தணருக்கு மட்டுமே கேட்கும் வண்ணம் காதோரம் அடிக் குரலில் பேசினான்.

''நீங்கள் நீர் வார்த்தது போல உங்கள் தலையில் பொற்காசுகள் சொரியப் போகிறார்கள். இதுவே பதில் மரியாதை என்று அரசர் நினைக்கிறார். அமைச்சர்கள் தட்டில் வைத்துக் கொடுத்தால் போதாதா என்று கேட்கிறார்கள்.''

அந்தணர் பூரிப்பானார். அவன் முதுகு தடவிக் கொடுத்தார்.

''சந்தோஷம். நீ திறமை சாலி'' என்று பாராட்டினார்.

''திரை கட்டுவதற்கான துணி அந்த மண்டபத்தின் ஓரத்தில் இருக்கிறது. அதைத் தரையில் விரித்து தர்பைப்புல்லைப் போடு'' என்றார்.

அவன் உடனே செய்தான்.

''செய்து முடித்து விட்டேன்.'' ''உடனே மூட்டையாகக் கட்டி அப்புறப்படுத்த வேண்டும். அவ்வளவுதானே.''

''ஆமாம்.'' ''எங்கே அப்புறப்படுத்துவது. உங்கள் அகம் தொலைவு. கோவிலுக்குள்ளேயே எங்கேயாவது வைத்து விடலாமா.''

''இல்லை. உன் அகத்துக்கு எடுத்துப் போய் விடு. உன்னுடைய க்ரஹம் அருகில் தானே இருக்கிறது.''

''என்னால் தூக்க முடியாதே.''

''இந்த தடியன்களை அழைத்துக் கொள். குறுக்கே கம்பு போட்டு பல்லக்கு சுமை போல தூக்கிப் போகச் சொல். அரசன் நிச்சயமாய் தங்கக் காசு தருகிறானா?''

''இன்னொரு முறை போய் பார்த்து விட்டு வருகிறேன்.''

''அலைவதாய் காட்டிக் கொள்ளாதே.''

''இல்லை. அரசரை வரவேற்க நீங்கள் எடுத்துப் போன சிறிய கலசம் அங்குதான் விட்டு வந்திருக்கிறேன்.''

''அற்புதம். போய் பார்த்து வா.''

அவன் உள்ளே போக ஒரு அமைச்சர் திரும்பிப் பார்த்தார்.

'ஏன் அடிக்கடி வருகிறாய்' என்று சினந்தார்.

''கலசம் எடுத்துப் போக வந்தேன்.''

''வெளியே நில். அரசர் போன பிறகு எடுத்துப் போ.'' இன்னொரு அமைச்சர் அதட்ட அவன் திரைக்கு அப்பால் நின்று கொண்டான்.



ஆயிரம் பொன் அவருக்கும் ஆயிரம் பொன் மற்ற அந்தணர்களுக்கும் என்று அமைச்சர்கள் சொல்ல அரசன் சற்று தடுமாறினான்.

''இது போதும் என்ற சொல்கிறீர்களா.''

''இதுவே மிக அதிகம் மன்னா'' ஒரு அமைச்சர் பதில் சொன்னார்.

தொலைவே உட்கார்ந்தபடி அதிகம் பதட்டம் காட்டாமல் அவர் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அரசி எழுந்து உட்காருவது சப்தங்களால் தெரிந்தது. அவன் கூர்மையானான்.

''அந்தணருக்கு தங்கக் காசால் அபிஷேகம் செய்வதே முறை. அதில் தயக்கம் காட்டாதீர்கள்'' அரசி உரத்துச் சொன்னாள்.

அங்கு மௌனம் நிலவியது.

''நானும் அதுவே சொல்கிறேன். இரண்டு தட்டு தங்கக் காசுகள் குவியலாய் எடுத்து வாருங்கள்.''

''இல்லை. மூன்று தட்டு தங்கக் காசுகள் அவருக்குக் கொடுங்கள். யாருக்குக் கிடைக்கும் இந்த கங்கை நீர் அபிஷேக பாக்கியம். உங்கள் பொருட்டாக ஒரு தட்டு. என் பொருட்டாக ஒரு தட்டு. இதனால் நம் குலம் விளங்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை'' அரசி உணர்ச்சி வசப்பட்டு சொன்னாள்.

பெண்கள் தந்திரம் மிக்கவர்கள். ஆண்களின் பலவீனமான நேரம் எது என்று கண்கொத்திப் பாம்பாய் கவனித்துக் கொண்டிருப்பவர்கள். கெட்டிக்காரப் பெண்கள் இதை உடனே பயன்படுத்திக் கொள்கிறார்கள். தன் புருஷனான அரசர் அள்ளிக் கொடுப்பதா, கிள்ளிக் கொடுப்பதா என்று யோசித்துக் கொண்டிருக்க அமைச்சர்கள் கிள்ளிக்கொடு என்று சொல்ல அதிகம் அள்ளிக்கொடு என்று அவள் உத்தரவிட்டாள். அமைச்சர்களுக்கெதிரே அரசரை நிர்பந்தப்படுத்தினாள்.

அமைச்சர்கள் முகம் களித்தார்கள்.

ஆமாம். மூன்று தட்டு பொற்காசுகள். தட்டுகள் ஒரு முழங்கை பரப்பிற்கு இருக்க வேண்டும். பொற்காசுகள் குவியலாக இருக்க வேண்டும்.

கங்கைக்கு நான் போக முடியாது. ஒரு அந்தணர் சகல துன்பங்களையும் பொறுத்துக் கொண்டு போய் வந்திருக்கிறார். இங்குள்ள வீரர்கள் எவரும் செய்யாததை அவர் செய்திருக்கிறார்.

யாத்திரை செய்ய மக்களை உற்சாகப்படுத்த வேண்டும். வெறும் கிணற்றுத் தவளைகளாய் இருந்து புண்ணியமில்லை. அந்தணர்கள் யாத்திரை செய்வது நமது படையெடுப்புகளுக்கு உதவும். அவர்களால் பல தகவல்களை ஒரு தேசத்தைப் பற்றி தர முடியும். படை பலம் பற்றி கண்டு கொள்ள முடியும்.

அந்தணர்களை உற்சாகப்படுத்துவது ஒரு அரசாங்கத்துக்கு நல்லது. இன்னும் ஒரு நாழிகையில் பரிசளிப்பு விழா தயாராக வேண்டும்.

அரசர் தலை துவட்டி திருநீறு பூசிக் கொண்டார். அரசியைப் பின்னால் வரச் சொல்லி விட்டு அந்த அந்தணனை நோக்கி நடந்து வந்தார். விழுந்து வணங்கினான்.

''காசியைப் பற்றிய உங்கள் அனுபவங்கள் சொல்லுங்கள். அது எங்கிருக்கிறது? அங்கு என்ன விசேஷம்? அங்குள்ள மக்கள் நம்மைப் போல் இருக்கிறார்களா? அவர்கள் உணவு வகை என்ன? அவர்கள் மொழி எப்படி இருக்கிறது? பேசிக் காட்ட முடியுமா? அங்குள்ள அரசர்கள் எப்படி உடுத்திக் கொண்டிருக்கிறார்கள்? சந்தன நிறத்தில் பெண்டுகள் இருப்பார்களாமே! உண்மையா?

'தென்திசையைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? நமது மொழி பற்றி அவர்களுக்குத் தெரியுமா? நமது நாகரீகம் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? - அங்கிருந்து இமயமலை வெகு அருகில் இருக்கிறதாமே!'



''நீங்கள் இமயமலைக்கு போனீர்களா?''

''கங்கை நீர் தவிர வேறு என்ன கொண்டு வந்தீர்கள்?''

அரசன் ஆவலாய்க் கேட்க அந்தணர் கைதட்டினார்.

பல்வேறுவிதமான கற்களை அரசருக்குக் காட்டினார். வெண்கல விக்ரஹங்களையும் தேவதாரு மரக்கட்டைகளையும் நெருப்பு பற்ற வைக்கும் அரணிக் குச்சிகளையும், ருத்ராட்சங்களையும் இயற்கையாய் கிடைத்த லிங்க வடிவங்களையும் உள்ளங்கை கனமுள்ள தீட்டப்படாத மாணிக்கக் கல்லையும் தங்க ரேகை ஓடின தட்டைப் பாறைகளையும் அவனுக்குக் காட்டினார்.

அரசர் உள்பட எல்லா அமைச்சர்களுக்கும் ருத்ராட்சம் பரிசளித்தார். அரசருக்கும் அரசிக்கும் சாளக்கிராமம் கொடுத்து வழிபடச் சொன்னார். காசியின் கதையை மாலை சொல்வதாகச் சொன்னார்.

மூன்று தட்டு பொற்காசுகள் வந்தன. தட்டைத் தூக்க முடியாமல் தூக்கி வந்தார்கள்.

அரசரும் அரசியும் அந்தணரின் தலைக்கு உயரே இரண்டு கைகளையும் நீட்டி இருக்க பொற்காசு அவர்கள் கைவழியே அந்தணர் தலையில் கொட்டப்பட்டது.

கூட்டத்தினர் 'ஆஹா' என்ற ஆச்சரியத்தால் அரசரின் வள்ளல் தன்மையைப் பாராட்டிக் கூச்சலிட்டார்கள்.

காசுகள் சிதறாது இருக்க அந்தண இளைஞர்கள் பரபரத்தார்கள். அந்தணர் உட்கார்ந்திருந்த திரைத் துணியைத் தூக்கிப் பிடித்தார்கள்.

மூன்று தட்டு பொற்காசுகள் அபிஷேகம் முடிந்ததும் அரசர் மாலை வருவதாய் விடை பெற்றுப் போனார்.

பளிச்சென்று அந்தண இளைஞர்கள் காசை மூட்டையாய் கட்டினார்கள். குறுக்கே பல்லக்குக் கழி கொடுத்து தூக்கினார்கள்.

கங்கைக்குச் சென்று வந்த அந்தணர் அவனைக் கை ஜாடையால் அருகே கூப்பிட்டு காதோரம் பேசினார்.

''ஜாக்கிரதை. மிகக் கவனமாகப் பாதுகாத்து வை. உனக்கும் ஒரு பங்கு தருகிறேன்'' என்றார்.

அவன் 'தா' என்று சொல்லாமல், மறுக்காமல் மூட்டையை நோக்கி ஓடினான். அந்த இளைஞர்களை விரட்டி தன் வீட்டுப் பக்கம் திரும்பினான். உள்ளே எடுத்துப் போனான். நடுக் கூடத்தில் வைக்கச் சொல்லிவிட்டு அந்த இளைஞர்களை வெளியே துரத்தினான். இடுப்பு வேட்டியை அவிழ்த்து ஐந்து கை பொற்காசுகள் அதில் போட்டு மூட்டையாக்கினான். கொல்லைப் புறம் ஓடிப்போய் கிணற்றில் கால் வைத்து மடமடவென்று இறங்கி சத்தம் வராமல் நீருக்குள் போட்டான்.

ஒரு மரப்பல்லியைப் போல் ஏறி கிணற்றிலிருந்து வெளியே வந்தான். முழங்கால் உயரமிருந்த அந்த பொன்மூட்டையை மாட்டுத் தொழுவத்திற்கு இழுத்துப் போய் ஒரு மரத் தொட்டியில் போட்டு மேலே வைக்கோல் போட்டு மூடினான்.

மறுபடி கோயில் நோக்கி ஓடினான்.

அவர் அரசருக்கு வாழ்த்துச் சொல்லி விடை கொடுத்துக் கொண்டிருந்தார்.

அவன் அருகே போய் நின்று கொண்டான்.

அரசர் அகன்றதும் அவனை வேகமாய் திரும்பிப் பார்த்தார். அதுவரை அவர் முகத்திலிருந்த அமைதி குறைந்து போய் படபடப்பும் பயமும் முகத்தில் ஒட்டிக் கொண்டன.

''என்ன ஆயிற்று?''

''நடுக்கூடத்திற்கு எடுத்துப்போய் அவர்களை விரட்டி விட்டு நானொருவனாக இழுத்துப் போய் மாட்டுக் கொட்டகையில் வைத்திருக்கிறேன். வைக்கோல் போட்டு மூடி வைத்திருக்கிறேன். வீட்டிலுள்ள எவருக்கும் நான் காசு வைத்துள்ள இடம் தெரியாது.''



''நல்லது. நாம் உன் வீட்டிற்குப் போவோம்.''

அவர் பின்னே அந்தணர்கள் நெருக்கியடித்து வர அவன் வீட்டிற்கு அவர் நடந்தார். உள்ளே போய் தண்ணீர் குடித்தார். கொல்லைப்புறம் போய் கால் அலம்பிக் கொண்டார். மறுபடி திண்ணைக்கு வந்தார்.

அந்தணர்கள் அவரைப் புகழத் தொடங்கினார்கள்.

''உங்களால் எங்களுக்கெல்லாம் பெருமை என்றார்கள். அவரை வேதவித்து என்று கூப்பிட்டார்கள். நாம் ஒற்றுமையாக இருந்தால் இது போல் பல சிறப்புகளைப் பெறலாம்.'' என்றார்கள்.

''நமது ஒற்றுமைதான் முக்கியம். அதைக் கட்டிக் காக்க வேண்டும்.'' என்று மறுபடி மறுபடி பேசினார்கள்.

''நாளை காலை ஒற்றுமை கட்டிக் காக்கப்படும்'' என்று அவர் சிரித்தபடி சொன்னார்.

''நாம் ஆயிரம் கேட்டோம். அரசர் மூவாயிரம் நாலாயிரம் கொடுத்திருப்பார் போலிருக்கிறது. ஆளுக்கு அரைக்காசு என்று பேசினோம். இப்போது மூன்று தங்கக் காசுகள் வரலாம்.''

''ஒன்றே ஒன்றுதான் தருவேன். அதற்கு மேல் கிடையாது'' அவர் கர்ஜித்தார்.

''அதெப்படி?'' ஒரு அந்தணர் எதிர்த்துப் பேசியபோது

''உனக்கு அதுவும் கிடையாது'' குற்றம் சொன்னவரை நோக்கி கங்கை அந்தணர் சினந்து சொன்னார்.

''அப்படியா... அப்படியா. நீர் கொண்டு வந்தது கிணற்று ஜலம் என்று அரசரிடம் சொல்வேன். அங்குள்ள ஒரு அமைச்சருக்கும் நீர் காசு வாங்கியது பிடிக்கவில்லை. அந்த அமைச்சர்கள் மூலமாய் உன்னை வம்புக்கு இழுக்கிறேன்.''

பங்கு கேட்ட அந்தணர் கோபமாய்க் கத்தினார்.

கங்கை அந்தணர் பயப்படவேயில்லை.

''அத்தனையும் திரும்பக் கொண்டு போய் அரசனிடம் சேர்த்து விடுவேன்.''

''சும்மாயிருங்களய்யா. பெரியவரை ஏன் பகைத்துக் கொள்கிறீர்கள். கங்கை அந்தணர் வாழ்க. நீங்கள் விரும்பியதை விரும்பிய நேரத்தில் கொடுங்கள். உண்மையில் கொடுக்க வேண்டிய அவசியம் உங்களுக்கு இல்லை. தானமாகப் பெற்றதைத் தானமாகத் தருவது நம் மரபு. நம் குல வழக்கம். அந்த ஆச்சாரத்தை நீங்கள் அனுஷ்டிப்பதே மிக உத்தமமான விஷயம். சண்டை போடுபவரை விலக்கி விடுங்கள். ஒன்றும் தரவேண்டாம்.''

கங்கை அந்தணர் கை உயர்த்தினார். எதிரே இருந்த அந்தணக் கூட்டம் கட்டுப்பட்டது.

''நான் இப்போது எண்ணிக்கை சொல்லவில்லை. மூன்று தட்டு தங்கம் தரப்பட்டது. ஒரு தட்டு எனக்கு. ஒரு தட்டு உங்களுக்கு. மற்றொரு தட்டு அந்தணரல்லாத மற்ற குடி மக்களுக்கு.''

''ஏன்... ஏன் அவர்களுக்குத் தர வேண்டும் அந்தணருக்குத் தந்ததை அந்தணர் அல்லாதவருக்குத் தருவது சரியல்ல.''

''அவர்களும் மனிதர்கள் தானே. தொலைவிலிருந்து என்னை ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்களே.''

''உங்களை காஞ்சிபுரத்தின் தானாதிகாரியாக உயர்த்திக் கொள்ளப் பார்க்கிறீர்கள். இந்த நகரத்தின் மிக உயர்ந்த பதவிக்குக் குறி வைத்து விட்டீர்கள்.''

''ஆமாம். அதனாலென்ன?'' கங்கை அந்தணர் விஷமமாய் சிரித்தார். ''எனக்கு தானமாகக் கிடைத்தது. என் விருப்பப்படி தானம் செய்வேன். உங்களுக்கு ஒரு காசும் தானமாய் கொடுக்காமலிருக்கவும் எனக்கு உரிமை இருக்கிறது.''



''எவ்வளவு வேண்டுமானாலும் கொடுங்கள். ஆனால் இப்போதே கொடுத்து விடுங்கள்.'' கூட்டத்தில் ஒரு பகுதி கெஞ்சியது.

கங்கை அந்தணர் யோசித்தார். மாலை அரசரிடம் காசி யாத்திரை பற்றிப் பேசும் போது இவர்கள் யாரும் குறுக்கே புகுந்து பேசி குழப்பாமல் இருக்க வேண்டும். இப்போதே கொடுத்து விடுவது நல்லது.

அவர் ஐநூறு அந்தணர்களையும் வரிசையாக நிற்கச் சொன்னார்.

தட்டில் அரிசி குவித்து அதன் மீது பொற்காசுகள் குவிக்கச் செய்து அரசன் கொடுத்தது போலவே எடுத்து வரச் செய்தார்.

அவன் சகலமும் விழி விரியப் பார்த்து, உள் வாங்கிக் கொண்டிருந்தான்.

## 6

அந்தணர்கள் முண்டியடித்து வரிசையானார்கள். தட்டு நிறைய காசு பார்த்ததும் பரபரப்பானார்கள்.

''இருக்கறதுலயே பெரிய தட்டா எடுத்துட்டு வந்துட்டான்யா. அவன் கொடுக்கறவன்தான். இங்க இருக்கறவங்க தான் அவனைப் பத்தி இல்லாததும் பொல்லாததும் சொல்லி அவனைக் கோபமூட்டறாங்க.''

''அமைதியா இருந்தா ரெண்டரை பவுன் கிடைக்கும். வீட்டுக்கு எடுத்துண்டு போனா ஒரு மாச அரிசி, பருப்பு, பால், தயிர், காய்கறி எல்லாத்துக்கும் ஆகும்.''

''கை வாங்கறதுக்கு முன்னாடி கலவரம் வந்துடும் போல இருக்கே. ஒருத்தனையொருத்தன் வெறி பிடிச்ச மாதிரி

தள்ளிக்கறாங்களே. மத்த ஜாதிக்காரன் எப்படி சிரிக்கறான் பார்.''

''எத்தனை படிச்சும் ஏன் நல்ல புத்தியே இல்லை.''

''இவங்க படிக்கவேயில்லைய்யா.''

''ஆமா, படிக்கறதுங்கறது உருப்போடறதா. புரிஞ்சுக்கறது. நல்ல விஷயங்களை உள்மனசுல தக்க வச்சுக்கறது. கும்பலா வந்து ஏமாத்தறானே தவிர தனித்தனியா புடிச்சா அத்தனையும் சொத்தை.''

''எல்லாரையும் சொல்லாதீர். ஒண்ணு ரெண்டு நல்லதும் இருக்கு.''

''என்ன ஒண்ணு ரெண்டு. காசிக்குப் போயிட்டு வந்தவன் இல்லையா? இத்தனை காசு வாரி வாரி கொடுக்கறானே.''

''அவன் ராஜாவை ஏமாத்தறான்யா.''

''கங்கைக்குப் போய் ஒரே ஒரு சொம்பு கொண்டு வந்துட்டு பாதியைக் கிணத்துல விட்டுட்டு எங்க கிணறே கங்கையாயிடுத்துங்கறான்.''

''இதை ராஜாக்கிட்ட சொல்ல வேண்டியதுதானே?''

''ரெண்டரை பவுன் கிடைக்காதே.''

''அப்ப இப்ப ஏன் சொல்றீர்?''

''ராஜாவுக்குத் தெரியாத உண்மை எனக்குத் தெரியும்னு உனக்குத் தெரிய வேண்டாமா?''

''இப்படி சத்தம் போட்டு பேசாதீங்கய்யா. எவன் காதுலயாவது விழுந்து ராஜா கூப்பிட்டு கேட்கப் போறாருய்யா.''

''அப்ப காசு கொடுக்கறவன் திருடன்னா வாங்கறவனும் திருடன்தானே.''

''ராஜாக்கிட்ட ஏமாத்தினானே. அந்தப் பாவம் எனக்கு தானம் கொடுக்கறதால போயிடறது.''



''பேசாதீங்கய்யா. காசு கொடுக்கறவன் கிட்டக்க வந்துட்டோம்.''

அந்த இரண்டு அந்தணர்களுக்கு முன்னால் ஒரு அந்தணன் உர்ரென்று நின்று கொண்டிருந்தான். கை நீட்டி காசு வாங்கினான்.

''அண்ணா... அண்ணா, இவா ரெண்டு பேரும் உங்களைக் கன்னா, பின்னான்னு பேசிண்டு வரா. நீங்க ராஜாவை ஏமாத்தி காசு வாங்கிண்டுட்டேளாம். அந்தப் பாபம் இவாளுக்குத் தானம் கொடுக்கறதால போயிடுமாம்.''

பின்னால் கேலி பேசிவந்த இரண்டு பேரும் திகைத்துப் போனார்கள்.

இப்படிக் காட்டிக் கொடுக்கப்படுவோம் என்று எதிர்பார்க்காததால் மிரண்டு போனார்கள்.

''ஐயோ... என்னது இது? ஏய் யார் நீ?'' கேலி பேசியவர்கள் மிரண்டார்கள்.

''அவா ரெண்டு பேரையும் வெளியே தள்ளு'' அருகே இருந்த தடியனிடம் உத்திரவிட்டப்பட்டது.

அவர்கள் நெட்டித் தள்ளப்பட்டார்கள்.

''அவா பங்கை எனக்குக் கொடுக்கப்படாதா?''

காட்டிக் கொடுத்தவன் மஞ்சள் பல் தெரியக் கெஞ்சினான்.

அவனை நோக்கி ஒன்னரை பொற்காசுகள் வீசப்பட்டன.

அவன் துண்டில் ஏந்திக் கொண்டு குதியலோடு ஓடினான்.

''என்னடா பண்றது இப்போ. பேசதேன்னா கேட்டியோ. கொஞ்சம் காசும் போயிடுத்தடா.''

''வா ராஜாக்கிட்டே போவோம்.''

''எதுக்குடா?''

''நமக்கு இல்லைன்னா எவனுக்கும் இருக்கக்கூடாது. வா, என் கூட.''

அவர்கள் இருவரும் அக்ரஹாரம் விட்டு அரசன் தங்கி யிருந்த இடம் நோக்கி நகர்ந்தார்கள்.

கங்கை அந்தணர் இளைஞனான அந்தணனிடம் கண் காட்டினார்.

''அவா என்னா பண்றான்னு பார்த்துச் சொல்லு.''

அவன் அவர்களைப் பின்தொடர்ந்தான்.

அவர்கள் தளபதியிடம் விஷயம் சொன்னார்கள்.

தளபதி மந்திரியிடம் விஷயம் சொன்னார்.

மந்திரி அரசரிடம் விஷயம் சொன்னார்.

அரசர் அவர்கள் இருவரையும் அழைத்து விசாரித்தார். அவர்கள் இருவருக்கும் ஆளுக்கொரு பொற்காசு கொடுத்தனுப் பினார்.

அந்தண இளைஞன் திரும்பி வந்து கங்கை அந்தணரிடம் விபரம் சொன்னான்.

மாலை கோயிலில் மறுபடி அரசவை கூடியது. தேவரடி யார்கள் நாட்டியமாடினர். அரசர் வந்து உட்கார்ந்து சிறிது நேரம் நாட்டியம் பார்த்தார். கை தட்டி அவர்களை விலகச் சொன்னார்.

''எத்தனை குடம் கங்கை நீர் கொண்டு வந்தீர், அந்தணரே'' சற்று கோபமான குரலில் கேட்டார்.

''இங்கு கொண்டு வந்தது, ஆறு குடம்'' அவர் சற்றும் கலவரமில்லாமல் பதில் சொன்னார்.

அந்தண இளைஞன் அவரையே கலவரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஒரே ஒரு சொம்பு கொண்டு வந்ததாக ஊர் சொல்கிறது. ஒரு சொம்பு எப்படி ஆறு குடமாயிற்று?''

அவர் மௌனமாக இருந்தார்.



''சொல்லுங்கள், ஒரு சொம்பு எப்படி ஆறு குடமாயிற்று?'' மன்னர் சீறினார்.

''மன்னர் குடும்பத்திற்கு பால் கொண்டு வந்து கொடுங்கள்.''

முழங்கை உயரப் பாத்திரம் நிறைய பசும்பால் வாசனை யோடு சபைக்கு ஒரு அந்தணச் சிறுமி கொண்டு வந்து வைத்தாள்.

அவள் கையில் சிறிய குவளைகளும் இருந்தன. குவளை யில் பாலை முகரப் போனாள்.

''சற்று இரு குழந்தாய்'' அந்தச் சிறுமியை நிறுத்திவிட்டு மடியிலிருந்து ஒரு சிமிழ் எடுத்து அரசனிடம் காட்டினார்.

''இதில் ஒரு நக நுனியளவு ஆலகால விஷம் திரட்டி வைக்கப்பட்டிருக்கிறது. மூன்று பனித்துளி எடை உள்ளது. இந்த விஷத்தைப் பாலில் போடுகிறேன். இப்போது அருந்துங்கள்.''

சிமிழியைப் பிரித்து விஷத்தைப் பாலுக்குள் உதறினார்.

கூட்டம் திகைத்தது.

''குழந்தாய், அரச குடும்பத்தினர் அனைவருக்கும் கொடு. தளபதி, அமைச்சர் யாவரும் சாப்பிடட்டும்.''

''அரசரைக் கொல்லவா முயற்சிக்கிறீர்?'' தளபதி சீறினார்.

''மூன்று பனித்துளி விஷம். இது நாற்பது உழக்கு பால். எப்படி பால் விஷமாகும்?''

''விஷம் சக்தி வாய்ந்ததல்லவா?''

''ஆம்.''

''பால் முழுவதும் பரவி இருக்குமல்லவா?''

''ஆம்.''

''பிறகு எப்படி குடிக்கச் செய்வீர்கள்?''

''கங்கை நீரும் சக்தி வாய்ந்த விஷயம். மூன்று பனித்துளி நீர் நாற்பது உழக்கு பாலை விஷமாக்கும் என்றால் ஒரு சொம்பு கங்கை நீர் ஒரு கிணற்று நீரைப் புனிதமாக்காதா?''

சபை அமைதியாக இருந்தது.

மன்னர் மெல்லச் சிரித்தார். சபையும் சிரித்தது.

''மன்னர், என் கங்கைப் பயணத்தை சந்தேகப்படுவது போல் தோன்றுகிறது.''

''இந்த நாற்பது உழக்குப் பாலை யாரும் குடிக்க வேண்டாம். பைசாஸங்களுக்கு கொடுத்துவிடுவோம். உடல் உள்ளவர்களைத்தான் விஷம் கொல்லும். உடலற்றவர்களுக்கு விஷம் அமிர்தம்.''

கங்கை அந்தணர் கை தட்டினார்.

''ஓம் ஹ்ரீம் க்லீம் தட் ஷட் வஷட்'' மந்திரம் உச்சரித்து பாலை சுட்டிக் காண்பித்தார்.

எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பாத்திரத்திலிருந்த பால் மடமடவென்று குறைந்தது. பாத்திரம் உருட்டிவிடப்பட்டது.

மன்னர் எழுந்து நின்று வியந்தார்.

மகாராணி மறுபடி மூர்ச்சயையானார்.

அவர் பலவித்தைகள் செய்து காண்பித்தார்.

ஒரு ஆட்டுக்குட்டியைக் கூடையால் மூடச் சொன்னார். அந்த ஆட்டுக் குட்டியைக் கத்தியால் குத்தச் சொன்னார். ஒரு வீரன் பலம் கொண்ட மட்டும் கத்தியை கூடைக்குள் சொருகினான். ஆடு அலறியது. கத்தியை உருவ, கத்தியில் ரத்தம் இருந்தது.

அவர் கூடையைத் தொட்டு மந்திரம் முணுமுணுத்தார். கூடையை எட்டி உதைத்தார். ஆட்டுக்குட்டி துள்ளி ஓடியது.

கூட்டம் பேச்சற்று நின்றது.



''யாரேனும் கையை வெட்டிக் கொள்கிறீர்களா? நான் ஒட்டித் தருகிறேன். தளபதி உங்கள் உடை வாளைக் கொடுங்கள்.''

அவர் தளபதியின் உடை வாளை உருவி சபை முழுதும் சுற்றிப் பார்த்தார்.

''மறவர்கள் யாரேனும் கையை வெட்டிக் கொள்கிறீர்களா? நான் ஒட்டித் தருகிறேன்.''

மறவர்கள் அசையவே இல்லை.

''அந்தணர்கள் யார் வருகிறீர்கள். நான் கையை வெட்டி பிறகு ஒட்டித் தருகிறேன். அரசரிடம் புறம் சொன்ன அந்த அந்தணர்கள் எங்கே.''

அவர் தேடினார்.

அந்த இரண்டு பேரும் வெளியே ஓடத் தலைப்பட்டார்கள்.

தளபதி விரல் காட்ட காவலர்கள் அவர்களைப் பிடித்து வந்து சபை எதிரே நிறுத்தினார்கள்.

கங்கை அந்தணர் அவர்களை உற்றுப் பார்த்தார்.

அவர்கள் கை கூப்பி அழுதார்கள். காலில் விழுந்து ''மன்னிப்பு, மன்னிப்பு'' என்றார்கள்.

அவர் அவர்களை இடது கையால் வெளியேறுமாறு சைகை செய்தார்.

அவர்கள் மேல் துண்டை சுருட்டி, அவர் காலடியில் வைத்துவிட்டு திரும்பிப் பார்க்காமல் ஓடினார்கள்.

''மறுபடி கேட்கிறேன். அந்தணர்கள் யாராவது வெட்டிக் கொள்கிறீர்களா? நான் ஒட்டித் தருகிறேன்.''

அந்த அந்தண இளைஞன் முன்வந்தான்.

அவரை விழுந்து நமஸ்கரித்தான்.

துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு வலக்கையை நீட்டினான்.

அந்த அந்தணர் ஒரு போர் வீரரைப் போல் வாள் சுழற்றினார். எல்லோரும் பார்க்க பளிச்சென்று அவன் கையை வெட்டினார்.

வெட்டுப்பட்ட கரம் தரையில் விழுந்தது.

கத்தியை தளபதியிடம் கொடுத்துவிட்டு, துண்டித்த கையோடு சபைக்கு நடுவே வளைய வந்தார். அவன் புஜம் தூக்கி மரம் போல நின்றிருந்தான். அவன் கண்கள் மூடியிருந்தன.

எடுத்து அவன் கையை மறுபடி பொருத்தித் தடவினார். அவன் கை பொருந்திக் கொண்டது. கையைப் பலக்கத் தட்டினார்.

''வெட்டுங்கள்'' என்று மறுபடி சொன்னான்.

''என்ன சொல்கிறாய்?''

''வெட்டுங்கள்.''

அவர் உரக்கச் சிரித்தார். சபையும் சிரித்தது.

''ஆக உனக்கு ஒன்றுமே தெரியவில்லையா? போய் உன் இடத்தில் உட்கார்.''

அவன் அவருக்குக் கட்டுப்பட்டவன் போல் தன் இடம் நோக்கி நடந்தான். அமர்ந்து கொண்டான்.

''மன்னா, கங்கைக் கரை மசானத்தில் மாந்திரீகம் எளிதில் கற்றுக் கொள்ளலாம். கண்கட்டுவித்தை அங்கே எளிதில் கைவரும். நல்ல ஆச்சார்யர்கள் அங்கே உண்டு.''

''இப்போது இங்கே செய்ததெல்லாம் கண்கட்டுவித்தை. இந்த இளைஞனின் கையை நான் வெட்டவேயில்லை. அப்படி வெட்டினால் ஒட்டவும் எனக்கு வராது. என் மந்திர பலத்தால் வெட்டியதுபோல் ஒரு தோற்றத்தை இந்தச் சபையில் உண்டாக்கினேன். அவ்வளவே.''

''மன்னா, இந்த வித்தையினால் யாதொரு பயனும் இல்லை. கடவுளை அறிவதற்கு இவை தடையாகவும் உள்ளன.''

''என்னை சந்தேகப்படுகிறீர்கள் என்பதாலேயே இந்த மந்திர வித்தைகளை இங்கு செய்தேனே தவிர வேறு எதற்காகவும் இல்லை.



உங்களுக்குக் காலையில் அபிஷேகம் செய்தது கங்கை நீர்தான். இதில் சந்தேகம் வேண்டாம்.''

சோழ மன்னர் எழுந்து நின்று கைகூப்பினார்.

''தொண்டை நாடு சான்றோருடைத்து என்பதை நிரூபித்து விட்டீர்கள். சான்றோர்களை ஏசித்திரிய சில சழக்கர்களும் இருப்பார்கள். தீர விசாரியாதது என் தவறு. பிழை பொறுத்தருளுங்கள்.''

அரசர் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து வணங்கினார்.

சபையும் வணங்கியது.

அந்தணர்கள் மேல்த் துண்டை உயரே வீசி 'ஹோ'வென்று கத்தினார்கள்.

''மன்னர் நடனத்தைத் தொடர்ந்து ரசிக்கலாம். நான் இடையூறு செய்ய விரும்பவில்லை.'' அவர் விலகி வெளியே வந்தார். அந்தணர்கள் அவர் பின்னாலேயே வந்தார்கள்.

கோயிலை விட்டு வந்தவுடன் அவரைத் தலைமேல் தூக்கிக் கொண்டார்கள். அக்ரஹாரத்தை நோக்கி ஊர்வலமாய் வந்தார்கள்.

அவன் அவரைப் பெருமையுடன் பார்த்தான். மெல்லிய தாய் பொறாமைப்பட்டான்.

## 7

**கா**சிக்குப் போய் திரும்பிய அந்த அந்தணரின் தான தர்மம் பற்றி காஞ்சி மாநகரம் முழுதும் பேசப்பட்டது. அவர் வீட்டை நோக்கித் திருவிழாக் கோலம் போல் மக்கள் வரத் துவங்கினர்.

அரசரைப் பார்க்க முடியாது. கெடுபிடிகள் அதிகம். எனவே அரசர் பாராட்டிய அந்தணரைப் பார்க்க விரும்பினார்கள். அவர் செய்த செப்பிடு வித்தைகள் அப்படி வந்தவர்களிடம் சொல்லப் பட்டன. அப்படிச் சொல்லும்போது மிகைப்படுத்தப்பட்டன. அவரால் மற்ற எல்லா அந்தணர்களுக்குமே மரியாதை கூடியது.

அவரைப் பற்றிப் பேசியபோது அந்த அந்தண இளை ஞனைப் பற்றியும் பேசினார்கள்.

'அவன் பெயர் புவனபதி. ஞானதீபன் என்கிற அந்தணரின் மகன். பிரம்மச்சாரி. காசி அந்தணரையே குருவாக வரித்து விட்டான். சிறிது கூட பயமில்லாமல் கையை வெட்டச் சொன்னான். பிராமணர்களின் குருபக்தி, வேறு எந்த குலத்திற்கு வரும் என்று பாராட்டிப் பேசினார்கள். அவனை மக்கள் புகழ்வது அவர்களுக்கும் எட்டியது.

ஒரு கை நிறைய பொற்காசுகள் அள்ளி அவனிடம் நீட்டினார். அவன் 'வேண்டாம்' என்று மறுத்தான்.

''ஏன் மறுக்கிறாய்?''

''எனக்கு வெறும் தனம் வேண்டாம்.''

''பிறகு வேறு என்ன வேண்டும்?''

''தனம் தரும் கல்வி வேண்டும்'' என்று கை கூப்பினான்.

''தெளிவாகக் கேள்''

''நான் காசிக்குப் போக வழி சொல்லித் தர வேண்டும். அதற்கு என்னைத் தயார்படுத்த வேண்டும்.''

அந்த இளைஞனின் ஆசை கண்டு கூட்டம் ஆஹா என்று வியந்தது.

''கங்கைக் கரையிலுள்ள காசிக்குப் போக உனக்கு வழியும், பலமும் தருவேன். இது சத்தியம்.''

அவர் தன் இடக்கை மீது வலக்கை வைத்துப் பிரமாணம் சொன்னார்.



30187
4653590

''ததாஸ்து... ததாஸ்து.''

''அப்படியே ஆகட்டும். அப்படியே ஆகட்டும்'' என்று அந்தணர்கள் ஆசீர்வதித்தார்கள். தெருமுனையில் ஒரு நாய் பல் தெரிய இளித்தபடி வானம் பார்த்து ஊளையிட்டது.

உயரே வட்டமடித்துக் கொண்டிருந்த பருந்து சடக்கென்று இறக்கை நொடித்துக் கொள்ள, தொடர்ந்து கீழ் நோக்கி வந்து பிறகு சுதாரித்து மேல் எழும்பியது.

மாடுகள் மிரண்டு போய் சுற்றிச் சுற்றி யாரையோ தேடின.

இந்த துர்சகுனங்களை யாரும் கவனிக்கவேயில்லை.

''உனக்குப் பொற்காசுகள் தேவையில்லாது இருக்கலாம். உன் பெற்றோருக்குத் தேவைப்படும் அல்லவா? உன் திருமணத்திற்கு காசு தேவைப்படும். பதினெட்டுப் பிராயம் முடிந்துவிட்டதல்லவா? இதற்கு மேலும் திருமணத்தைத் தள்ளி போட்டால் உனக்கு துறவு ஆசை வந்துவிடும். எனவே உன் தந்தையை இங்கு அழைத்து வா.'' அவர் அன்போடு கட்டளையிட்டார்.

இரண்டு பொற்காசுகள் வாங்கிய அவன் தந்தை உடனடி யாக அதை அரிசியும், பருப்புமாக மாற்றுவதற்காக திருக்கோயி லூர் பக்கம் போயிருந்தார். காசு நடமாட்டம் அதிகரிப்பது தெரிந்தால் வியாபாரிகள் விலையேற்றிவிடுவார்கள். உடனடி யாக வாங்கி அடுக்கினால் நல்ல விலைக்கு அரிசியோ, நெல்லோ அவரே விற்க முடியும். ஒரு பொற்காசுக்கு ஆறு கூடை நெல் கிடைக்கும். அது மூன்று கூடை அரிசியாகும். மீதிக்கு துவரைப் பருப்பும், உளுந்தும் வாங்கி காய்கறிகளை வண்டியில் ஏற்றிக் கொண்டு இரண்டு நாளில் காஞ்சிபுரம் திரும்பினார்.

அவர் நினைத்தது போலவே காஞ்சிபுரத்தில் அரிசி விலை ஏறிவிட்டது. ஒரு கூடை அரிசி ஒரு பொற்காசுக்கு விலை பேசப் பட்டது. துவரையும், உளுந்தும் கிடைக்கவேயில்லை. விடியற் காலையில் சாமான்களை வீட்டுக்குள் இறக்கிவிட்டு 'இதை ஒருவருக்கும் சொல்லாதே' என்று மனைவியை எச்சரித்தார்.

காசி அந்தணர் அவரைத் தேடியது அவருக்கு சொல்லப் பட்டது. குளித்து உலர்த்திய துணிகளை உடுத்திக் கொண்டு திருச்சின்னங்களோடு போனார்.

''நான் ஞானதீபன் வந்திருக்கிறேன். என் மகன் புவனபதியைப் பற்றி ஏதோ சொல்ல வேண்டுமென்று விரும்பினீர்களாம்.''

''வாரும்... வாரும்... வந்து அருகே அமரும். தாம்பூலம் எடுத்துக் கொள்ளும். யாரது உள்ளே? குடிக்க மோர் கொண்டு வா.''

உபச்சாரம் பலமாக இருந்தது.

''நடந்தது கேள்விபட்டீர்கள் அல்லவா?''

''சற்று தொலைவில் நின்று பார்த்தேன். எனக்குக் கண் பார்வை சற்று மங்கல். அது புவனபதி என்று புரிவதற்குள் கையை வெட்டி விட்டீர்கள். ரத்தம் வழியவில்லை. அப்போதே இது கண்கட்டுவித்தை என்று புரிந்துவிட்டது.''

ஞானதீபன் தொடர்ந்து பேசினார். ''நான் சிறு வயதில் இரண்டு போர்களைக் கோட்டை உச்சியில் அமர்ந்து பார்த்திருக்கிறேன். போரில் பலர் இறந்து போவார்கள். அப்படி இறந்தவர்களின் ஆவி என்ன செய்கிறது என்று பார்ப்பதற்காகவே யுத்தத்தை வேடிக்கை பார்த்தேன். எனக்கொன்றும் புரியவேயில்லை.

ஆனால் கை, கால்கள் வெட்டுப்பட்டால், சிரம் கொய்யப் பட்டால் ரத்தம் பல அடி உயரத்திற்குப் பீச்சியடிப்பதைப் பார்த்திருக்கிறேன்.

இரண்டு பக்க வீரர்களுக்கும் எந்த பிரதிபலனும் பாராமல் தகனத்திற்கான உதவிகளை செய்திருக்கிறேன். அதில் சிலரை மனதில் நினைத்துக் குளக்கரையில் பிண்டம் போட்டிருக்கிறேன்.

இங்கே ரத்தமில்லை என்று தெரிந்ததும் கண்கட்டுவித்தை என்று புரிந்துபோயிற்று.''



''உங்கள் மகனுக்குப் பாராட்டி காசு கொடுத்தேன். புவனபதி வேண்டாம் என்று மறுத்துவிட்டான்.''

''பெரியவர்கள் காசு கொடுத்தால் மறுக்கலாமா?'' ஞானதீபன் சற்று ஆவலோடு பேசினார்.

''அவன் அடம் பிடித்து வேறு ஒன்று வாங்கிக் கொண்டான்.''

''என்ன..?''

''காசிக்குப் போகும் எல்லா உத்திகளையும் கற்றுத்தர வேண்டுமென்று சத்தியம் செய்து தரச் சொன்னான்.''

''கடவுளே...''

''நான் சத்தியம் செய்துவிட்டேன்.''

''கடவுளே...''

காசி அந்தணர் புவனபதியின் தந்தையான ஞானதீபன் என்கிற அந்தணரை சற்று குழப்பத்தோடு பார்த்தார்.

'என் பிள்ளையைக் காசிக்கு அனுப்புவதற்கு நீ யாரடா? உன் பிள்ளையை அனுப்புவதுதானே. உன் வரவுகளைத் தூரத்துவதுதானே. ரெண்டுங்கெட்டனாய் ஆர்வக் கோளாறாய் ஒரு பையன் கிடைத்தால் அவனைக் காசிக்கு அனுப்புவீர்களா? பெற்றவர்களை ஒரு வார்த்தை கேட்க வேண்டாம்?' என்கிற கூச்சல் ஞானதீபனிடமிருந்து எப்போது வேண்டுமானாலும் எழும் என்றது.

''ஐயா... எனக்கு இவன் இரண்டாவது மகன். ஆயினும் இவன் காசிக்குப் போவதில் எனக்கு விருப்பமில்லை. ஒரே ஒரு பிள்ளை இருப்பது பிள்ளை இல்லாததற்குச் சமம். இரண்டு பிள்ளை இருப்பது ஒரே ஒரு பிள்ளை இருப்பதாய்தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

காசி என்பது தொலை தூரம். பரத கண்டத்தின் மறுமூலை. இமய மலையின் அடிவாரம். கொடிய பதினேழு கானகங்களைத்

தாண்டிப் போக வேண்டும். படகால் கடக்க முடியாத மூன்று ஆறுகளைக் கடக்க வேண்டும். விஷ ஜந்துக்கள் நிறைந்த பாலைவனங்கள் பல இருக்கின்றன. அவைகளையும் தாண்ட வேண்டும். காசிக்குப் போவது எளிதல்ல. அது மரணத்திற்கு சமானம். அவன் விளையாட்டுப் பிள்ளை. அவன் கேட்டதை மறந்துவிடுங்கள்.''

''நான் மறந்துவிடுவேன். அவன் மறக்கமாட்டான். நான் மறக்கக் கூடாது என்பதற்காகத்தான் என்னை சத்தியம் செய்ய வைத்தான். சபையில் என் கௌரவம் உயர்த்திய அந்தப் பார்வைக்கு நான் ஏதும் செய்ய வேண்டாமா. ஒரு கை நிறைய பொற்காசு நீட்டினேன். அவன் தொடவேயில்லை. தான் நினைப்பதை சாதிப்பதிலேயே அவன் முனைப்பாக இருந்தான்.''

''நான் மிகக் கவனமாக சத்தியம் செய்தேன். உங்களையெல்லாம் நினைத்துக் கொண்டு சத்தியம் செய்தேன். காசிக்குப் போவதற்கு உண்டான யுக்திகளைச் சொல்லித் தருகிறேன் என்று மட்டுமே சத்தியம் செய்தேன். காசிக்குக் கூட்டிப் போகிறேன் என்றோ, அனுப்பி வைக்கிறேன் என்றோ சொல்லவில்லை. அது அவரவர் இஷ்டம். அவரவர் தலைவிதி. வழியைச் சொல்லித் தர மாட்டேன் என்று சொல்வது தர்மம் ஆகாது.''

''யார் எது கேட்டாலும் கேட்கின்ற பணிவைப் பொறுத்து வித்தைகளை சொல்லித் தந்தே ஆக வேண்டும். மறுப்பதற்கு நரகம் உண்டு.''

''எனக்குப் புரிகிறது. ஆனால் காசிக்கு அனுப்புவது மரணத்திற்கு அனுப்பவது போல் அல்லவா?''

''கத்திச் சண்டை கற்றுக் கொண்டால் எல்லோருமே போரில் இறந்து விடுவார்களா? கத்திச் சண்டை கற்றுக் கொள்வது வேறு... போருக்குப் போவது வேறு அல்லவா? அதுவும் தவிர தந்தை, தாயின் விருப்பமின்றி ஒருவன் காசிக்குப் போகக் கூடாது என்று சாத்திரம் சொல்லுகிறது.''



''அதையும் தவிர அவனுக்கு திருமணம் செய்து வைத்து விடுங்கள். பெண் ருசி தெரிந்துவிட்ட எவனும் பெரும் பயணம் மேற்கொள்ள மாட்டான். நல்ல கெட்டிக்காரப் பெண்ணாக ஆணை வழிக்குக் கொண்டு வருகின்ற அழகியாக ஒரு மணமகளைத் தேர்ந்தெடுங்கள்.

சிரமம் பாராமல் தஞ்சைப் பக்கம் போனால் நல்ல குட்டிகள் கிடைப்பார்கள். பத்து, இருபது பொற்காசுகள் தருகிறேன் என்று சொன்னால் விமரிசையாய் திருமணம் செய்து வைத்து அனுப்புவார்கள்'' காசிக்குப் போன அந்தணர் கண்சிமிட்டிப் பேசினார்.

''நம் ஊர் பெண்களுக்கே முப்பது பொற்காசுகளைத் தர வேண்டியிருக்கிறது. தஞ்சையில் சுமாரான அந்தணப் பெண்களுக்கு நூறு பொற்காசுகள் வரை சீர் செய்ய வேண்டியிருக்கிறது.''

''சரி, உங்களுக்கு எத்தனை பொற்காசுகள் வேண்டும்?''

''நூற்றைம்பது, இருநூறு பொற்காசுகள் ஒரு திருமணத்திற்கு ஆகும். புவனபதியின் தமையனுக்கு இன்னும் திருமணமாகவில்லை. அவனுக்கும் சேர்த்துப் பார்க்க வேண்டும்.''

''சரி, இருநூறு பொற்காசுகள் தருகிறேன். அவன் எனக்கு செய்த உதவி மிகப் பெரிது. கையை வெட்டிக் கொள்ள யாரும் முன் வந்திருக்காவிட்டால் என் சிறப்பு அங்கே எடுபட்டிருக்காது.''

அவர் ஒரு சிறிய குடுவை நிறைய காசுகள் கொண்டு வந்து கொடுத்தார்.

ஞானதீபன் எண்ணி வாங்கிக் கொண்டார்.

புவனபதி அப்பா காசி அந்தணரைப் பார்க்கப் போனபோது சப்தமில்லாமல் கிணற்றுள் இறங்கினான். வெய்யில் உச்சியில் இருந்தது. கிணற்றின் அடி ஆழம் வரை தெளிவாய்த் தெரிந்தது.

துணி மூட்டையிலிருந்து ஒரு கை காசுகள் எடுத்து இடுப்பில் கட்டியிருந்த பித்தளை பாத்திரத்தினுள் போட்டுக் கொண்டான். மேலேறி வந்தான். ஒரு மூங்கிலில் ஓட்டை செய்து அதற்குள் பொற்காசுகளை ஒன்றன்பின் ஒன்றாகப் போட்டான். முருங்கைப் பிசினை சூடு செய்து உள்ளே ஊற்றினான்.

அறுபது பொற்காசுகள் அந்த மூங்கில் கழியில் இருந்தன.

அப்பா வீடு வந்தார். விவரம் சொன்னார். காசு காட்டினார். ''தஞ்சாவூருக்குப் பெண் பார்க்கப் போகலாமா? வருகிறாயா?'' வீடு அறுசுவை உண்டபடி கேட்டது.

காஞ்சியிலிருந்து தஞ்சாவூர் நோக்கி புவனபதியின் குடும்பம் வண்டிக் கட்டிக்கொண்டு போயிற்று.

''புவனபதி, நீ வண்டியில் போகாதே. எங்கு போனாலும் நடந்து போ. தாய், தந்தையரோடு போகாமல் தனித்துப் போ.''

''நீர் குடிக்காமல் ஒரு நாள் நட; நிற்காமல் ஓய்வெடுக்காமல் ஒரு நாள் நட. இரவும் பகலுமாய் சேர்ந்து ஒரு நாள் நட. நடக்கப் பழகிக் கொள். பிறகு ஓடவும் பழகிக் கொள். அயர்ச்சியே இல்லாமல் இருக்க பலா, அதிபலா மந்திரம் சொல்லித் தருகிறேன்.''

அவன் தாய், தந்தையருக்கு முன்னால் கிளம்பிப் போனான்.

கையில் மூங்கில் குழலோடு உற்சாகமாக நடந்தான். அப்பாவிடம் வழிச் செலவுக்காக ஐந்து பொற்காசுகள் பணிவோடு வாங்கிக் கொண்டான்.

அப்பா அவன் பணிவைச் சுட்டிக்காட்டி அவன் அண்ணன் மீது எரிந்து விழுந்தார். ''மொத்தமும் அவனுக்காகக் கிடைத்த காசு. அது பற்றி எந்த அக்கறையுமில்லாமல் இருக்கிறான் பார். அவன் சம்பாத்தியத்திலிருந்து ஐந்து பொற்காசுகளை எவ்வளவு பணிவோடு கேட்டு வாங்கிப் போகிறான் பார்.''

அவனுக்கு அன்போடும் பணிவோடும் நாடகமாடுவதில் தனி ருசி வந்துவிட்டது.



காஞ்சிபுரம் தாண்டி மற்ற நாடுகளிலும் அவன் புகழ் பரவி இருந்தது. சோழ வீரர்கள் சிலர் மன்னர் படையிலிருந்து திரும்பி தஞ்சையை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களோடு சேர்ந்துகொண்டான். அவர்கள் மது அருந்திவிட்டு உற்சாகமாகப் பாடினார்கள். பொதுமகளிர் பற்றிப் பேசினார்கள். கூடல் பற்றி விவாதித்தார்கள்.

புவனபதி என்கிற முறுக்கான அந்தண இளைஞனுக்குள் காமம் பற்றிய ரகசியக் கதவுகள் மெல்லத் திறந்தது.

அதற்குக் கையிலிருந்த மூங்கில் கழி உதவி செய்தது.

அருணை நகரில் பொதுமகளிர் அதிகம் என்று கேள்விபட்டு அந்தப் பக்கம் திரும்பினான். கோயில் மண்டபத்தில் உட்கார்ந்து ஆடல் மகளிரை உற்றுப் பார்த்தான்.

அவனைப் பார்த்தபடியே நடந்த ஒரு தாசி நங்கென்று இடக்கால் பெருவிரலைப் படியில் இடித்துக் கொண்டாள். வலியில் துடித்தாள். அவன் குதித்து ஓடிப் போய் அவள் கால்விரலை வேகமாக தேய்த்துவிட்டான்.

''ஒரு பொற்காசால் வருடினால்தான் வலி போகும்.'' அவள் முணுமுணுத்தாள்.

''பொற்காசு கைவசமில்லை. ஆனால் உடனே சம்பாதிக்க முடியும். எங்கு கொண்டு வந்து தருவது?''

அவள் விலாசம் சொன்னாள். கோயிலுக்குள் போனாள்.

புவனபதி சுடுநீரில் மூங்கில் குழலைப் போட்டு மெழுகை இளக்கினான். மூன்று காசு பிரித்தான். மறுபடி குளிர்நீரில் போட்டு முருங்கைப் பிசினோடு காசுகளை இறுக்கினான்.

அவள் வீட்டு வாசலுக்குப் போய் நின்றான். உள்ளே அவள் துள்ளி நடனமாடிக் கொண்டிருந்தாள்.

அப்படி வலியில் தவித்தவள் இப்படி நடனமாட முடியாது. வலித்தது போல அவள் நடித்திருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்து போயிற்று.

நடிப்பவர்களை நடிப்பவர்கள்தான் நேசிக்க முடியும்.

அவள் அவனைப் பார்த்துத் திகைத்தாள். பயந்தவள் போல் கதவோரம் ஒண்டிக் கொண்டாள். ''வாருங்கள்'' என்றாள்.

புவனபதி என்ற அந்த அந்தண இளைஞன் புத்தியைக் கூர்மையாக்கிக் கொண்டு அந்த பொதுமகளிர் வீட்டுக்குள் நுழைந்தான்.

## 8

''**ஏ**ன்ன...'' தடிமனாய் ஒரு பெண்மணி வெளியே வந்து அவனைப் பார்த்து மெல்லியதாய் அதட்டினாள்.

''பொற்காசுகள் கொண்டு வந்திருக்கிறேன்'' வேண்டுமென்றே அவன் பன்மையை அழுத்திச் சொன்னான்.

''எதற்கு..?'' அவள் வியப்போடு கேட்டாள்.

அவன் பதில் சொல்ல வாயெடுக்கும் முன் கோயிலில் சந்தித்த பெண் கதவிடுக்கிலிருந்து முன்வந்து அந்த மூத்தவள் காதில் ஏதோ சொன்னாள்.

மூத்தவள் முகம் மாறியது.

அவன் உள்ளே நுழைந்தான். இன்னும் இரண்டு மூன்று பெண்கள் உள்ளேயிருந்து கூடத்திற்கு வந்து புவனபதியை ஆவலோடு பார்த்தார்கள்.

''உங்களுக்கு எந்த ஊர்?''

''காஞ்சி மாநகரம்.''

''உங்கள் பெயரென்ன?''

''புவனபதி''

''காஞ்சியில் எங்கே?''



''ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக்கு அருகே''

''கோயில் பணியா... சிவாச்சார்யார்களா?''

''இல்லை. வேதம் ஓதுதல். ஆறு வேலி நிலம் மானியம் அளிக்கப்பட்டிருக்கிறது.''

''உங்களுக்கு மட்டுமா, மொத்த ஊருக்குமா?''

''என் தகப்பனாருக்கு மட்டும்''

''இங்கே திருவண்ணாமலையில் என்ன காரியம்?''

''ஸ்வாமி தரிசனம். கிரிவலம். திருத்தல யாத்திரை.''

''இது ஆடல் மகளிர் இல்லம்.''

''தெரியும்.''

''இங்கு எதற்கு வேதம் ஓதுபவர்...'' மூத்தவள் கேட்க மற்ற பெண்கள் மெல்லியதாய் சிரித்தார்கள்.

''அந்தப் பெண் கட்டை விரலில் இடித்துக் கொண்டார். அந்த வலி என் மனதைத் தாக்கிற்று. பொற்காசால் நீவினால் இடித்துக் கொண்ட வலி உடனே நீங்கி விடும் என்றார். என்னிடம் அப்போது பொற்காசுகள் இல்லை.''

''கடன் வாங்கி வந்தீரா?''

''இல்லை. எதிர்ப்பட்ட ஒரு வணிகரிடம் குறி சொல்லி சம்பாதித்தேன். அவர் திருவண்ணாமலைக்கு ஏன் வந்தார்? என்ன துக்கம்? எப்படி தீரும் என்று கேட்காமலேயே சொன்னேன். அவர் இரண்டு பொற்காசுகள் கொடுத்தார்.''

''என்னது?'' மூத்தவள் வியந்தாள். பெண்கள் அருகே வந்தார்கள்.

''உங்களுக்கு ஜோஸ்யம் தெரியுமா?''

''கைரேகை பார்ப்பீர்களா?''

''அங்க லட்சணம் பார்த்து நடப்பது சொல்வீரா?''

உலகில் எல்லா மனிதர்களும் எதிர்காலம் குறித்துப் பேராசை யோடு இருக்கிறார்கள். அந்தப் பேராசை கவலையைக் கொடுக்கிறது. அந்தக் கவலை ஜோஸ்யத்தை நாட வைக்கிறது.

ஜோஸ்யம் ஒரு நல்ல கலை. ஆனால் ஜோஸ்யம் நன்கு தெரிந்த ஜோஸ்யர் யாருமில்லை.

''எனக்கு ஜோஸ்யம் சொல்லுங்களேன்'' மூத்தவள் எதிரே உட்கார்ந்தாள்.

ஆண்கள் எதிரே உட்கார்ந்து, உட்கார்ந்து அவளுக்கு வெட்கம் விட்டுப் போயிருந்தது. உடைகள் நெகிழ்ந்து கிடந்ததை அவள் லட்சியமே செய்யவில்லை. உற்றுப் பார்த்தும் உடம்பை மறைத்துக் கொள்ளவில்லை. 'பாரேன்' என்பது போலவே இருந்தாள்.

''எத்தனை வந்தாலும் செலவாகும் வீடு இது. காலையில் ஆறு பொற்காசுகள் வருமானம் வந்தால் மாலைக்குள் ஏழு பொற்காசுகள் செலவு இருக்கும்.''

''உண்மை, மிகப் பெரிய உண்மை'' மூத்தவள் உரக்கக் கத்தினாள்.

''உங்களுக்கு இன்று பத்து பொற்காசுகள் வருமானம் வரும்.''

''அடேயப்பா, பத்து பொற்காசுகளா. இந்த மாதம் முழுவதும் ஆனந்தமாக இருக்கலாமே. பொற்காசுகள் எங்கிருந்து வரும்?''

''நான் கொடுக்கும் காசில் ஒரு பூசணிக் காய் வாங்குங்கள். அந்தப் பூசணிக் காயை வடகிழக்கு மூலையில் வைத்து வீட்டு வணங்குங்கள். அதற்குள் எட்டு காசுகள் இருக்கும். ஒரு காசை நீங்கள் வைத்துக் கொண்டு மீதி ஏழை பங்கீடு செய்துவிடுங்கள்.''

''பத்து காசுகள் என்று சொன்னீர்களே. எட்டு தானே இருக்கும்.''



''இரண்டு நான் தருவேனே.''

''எதற்கு நீங்கள் தரவேண்டும்?''

''இடித்துக் கொண்ட இடத்தை நீவ ஒரு காசும் அவர்கள் அன்புக்கு ஒரு காசும்.''

''அந்தப் பெண்ணின் அன்பு வேண்டுமா, அடியே. அவருக்கு இதமாக அன்பு செய்'' மூத்தவள் அந்தப் பெண்ணை நோக்கிக் கட்டளையிட்டாள்.

அந்தப் பெண் அவனுக்கு அருகே வந்து கை நீட்டியது.

கை பிடித்து எழுந்தான். மடியிலிருந்து இரண்டு காசுகள் எடுத்து மூத்தவளிடம் கொடுத்தான்.

''இந்தப் பொற்காசுக்கு அரிசி வாங்கி, அந்த அரிசிக்கு பூசணி வாங்குங்கள்.''

''எனக்கு ஜோஸ்யம் சொல்ல முடியுமா?'' அந்தப் பெண் மாடிப்படியில் ஏறிக் கொண்டே திரும்பிக் கேட்டாள். உள்ளங்கை விரித்தாள்.

''உன்னைப் போல் அழகான பெண்களுக்கு உள்ளங்கை ஜோஸ்யம் பார்ப்பதில்லை. உள்ளங்கால் ஜோஸ்யம் தான் சரியாக வரும்.''

''உள்ளங்கால் ஜோஸ்யமா?''

''கட்டிலில் படுத்துக் கொள். எனக்கு காலைக் காட்டு. உன்னைப் பற்றி சகலமும் சொல்வேன்.''

புவனபதி கால் தொட அவள் கூச்சத்தினால் நெளிந்தாள். கட்டிலில் படுத்துக் கொண்டிருக்கும் ஒரு பொது மகளைத் தனக்கு சுகமாக்கிக் கொள்வது புவனபதிக்கு எளிதாக இருந்தது.

ஜன்னல் வழியே வெளிச்சம் பரவி காற்றும் கலந்து புரண்டு ஓட அந்தப் பெண்ணோடு கலந்தான். அயர்ந்தான். பிரிந்தான்.

கீழே சந்தோஷப் பெருங்கூச்சல்கள் கேட்டன. மூத்தவள் திபுதிபுவென்று மாடிப்படி ஏறி வந்தாள்.

''அந்தணரே, நீங்கள் சொன்னது உண்மை. வாசலில் ஒருவன் பூசணி விற்றான். உழக்கு அரிசிக்கு ஒரு பூசணி வாங்கினோம். அரிந்து பிரித்தால் எட்டு பொற்காசுகள். ஐயன், நீங்கள் எங்களோடு தங்க வேண்டும்.''

மூத்தவள் தன் தடித்த தேகத்தை மடித்து அவன் முன்பு வணங்கினாள்.

புவனபதி அலட்சியமாகச் சிரித்தான். புணர்ந்த பெண்ணை இடக்கையால் அணைத்துக் கொண்டான். மற்ற பெண்கள் சூழ்ந்துகொண்டார்கள்.

''இதோ... அந்த எட்டு காசு ஐயன்.''

''அதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். எனக்கெதற்கு?''

''நீங்கள் சொல்லித்தானே கிடைத்தது.''

''ஆமாம். ஆனால் அது உங்களுக்குக் கிடைத்தது. நான் வாங்கியிருந்தால் கிடைத்திருக்காது. ஏனெனில் இந்தக் கை அதிர்ஷ்டக் கை.'' அவன் அந்தப் பெண்ணை அணைத்துக் கொண்டு மூத்தவளின் விரல்களைக் கோர்த்துக்கொண்டான். மற்ற பெண்கள் பல் தெரிய சிரித்தார்கள்.

''இரண்டு நாள் தங்கிப் போக வேண்டும்.'' மூத்தவள் முதுகு தடவிப் பேசினாள்.

''நிச்சயம். இந்தாருங்கள். இன்னொரு பொற்காசு. மூன்று நாள் உணவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்.''

''ஐயோ... வேண்டாம்'' மூத்தவள் மறுத்தாள்.

அவன் அவள் கையில் காசு திணித்தான்.

அவர்கள் கீழிறங்கிப் போனார்கள். மறுபடியும் புவனபதி அந்தப் பெண்ணைத் தழுவிக்கொண்டான்.

தரையில் முளைக்கும் பூசணிக்காயில் தங்கம் எங்கிருந்து வரும்.



காம்பை வெட்டி எடுத்துவிட்டு உள்ளே காசு போட்டு விட்டு முருங்கைப் பிசினை சுற்றிலும் தடவி அழுத்திவைத்து விட்டால் கால் நாழிகையில் கெட்டியாகிவிடும்.

புவனபதி தயார் செய்து வாசலில் உள்ள கிழவனுக்கு இவர்களிடம் மட்டும் விற்கச் சொல்லி ஏற்பாடு செய்திருந்தான்.

துணி போட்டு பூசணிக்காயை மறைத்துக் கொண்டிருந்த கிழவன் இந்தப் பெண்கள் வெளியே வந்தவுடன் உரக்கக் கூவி விற்றிருக்கிறான். அரிசிக்கு பூசணிக்காய் மாற்றாயிற்று. ஜோஸ்யம் செலவாயிற்று.

மூன்று நாட்கள் அந்தப் பெண்களோடு ஆனந்தக் கும்மி ஆடிவிட்டு கைக்கோலுடன் புவனபதி குடந்தை நோக்கி நகர்ந்தான்.

குடந்தைக்குப் போக ஏழெட்டு நாட்களாகும். அதுவரை இந்த அனுபவம் போதும்.

இன்று முழுவதும் பட்டினி கிடந்துவிட வேண்டும். தொடர்ந்து நடக்க வேண்டும். நாளை முழுவதும் இலைகளாகவே சாப்பிட வேண்டும். மறுநாள் கனி வர்க்கம். பிறகுதான் தானியம்.

இந்த மூன்று நாட்களில் இவர்கள் வீட்டில் சாப்பிட்ட உணவின் எல்லா தோஷமும் வெளியேறிவிடும்.

பொதுமகளைக் கூடி சந்தோஷப்பட்டதாலேயே மற்ற பெண்களைப் பார்த்து காமுறுவது கூடாது. வேறு எங்கு பெண்கள் கிடைப்பார்கள் என்று போகவும் கூடாது. பஞ்சமி, சஷ்டி, சப்தமி மூன்றும் கூடலுக்கு ஏற்றவை. அஷ்டமி, நவமி, தசமி எல்லாம் விரதம் இருக்கத் தகுந்தவை. அமாவாசை அன்று பேசவும் கூடாது. பௌர்ணமி அன்று தொடர்ந்து மந்திர உச்சாடனம் இருக்க வேண்டும்.

ஒரு வழிமுறைக்கு ஒரு நியதிக்கு உட்பட்ட எந்தக் கொண்டாட்டமும் சந்தோஷமாக இருக்கும்.

அந்தத் திருவண்ணாமலைப் பெண்களோடு கூடியது சந்தோஷமாக இருந்தது. ஆனால் அங்கேயே தங்கிவிடக் கூடாது. தங்கினால் அவமானம்தான்.

அங்கே தங்கியதும் சந்தோஷம். தங்கியதும் போதும் என்று விலகியதும் சந்தோஷம். காமமும் சந்தோஷம். காமத்தைப் பிடுங்கி எறிந்து விட்டு நடப்பதும் சந்தோஷம்.

எந்நேரமும் விரதம் இருப்பவனுக்கு சந்தோஷம் இல்லை. விரதமே இல்லாதவனுக்கும் சந்தோஷமில்லை. எதையும் விட்டுப் பிடிப்பது தான் கெட்டிக்காரத்தனம்.

எந்நேரமும் கொட்டடியில் கட்டி இருக்கும் பசு அதிகம் பால் சுரப்பதில்லை. மேய்ச்சலுக்கு அனுப்பி மறுபடியும் வீட்டுக்குள் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.

வீட்டில் வளர்க்கும் நாயைச் சிறிது நேரமாவது வெளியே அவிழ்த்துவிட வேண்டும். இல்லையெனில் கட்டிப்போட்ட நாய் யாரைக் கண்டாலும் சீறும். ரகளை செய்யும். எந்நேரமும் ஒரு எரிச்சலோடு இருக்கும். உணவும், உறக்கமும் கூட வெறுப்பாக இருக்கும்.

அதே நேரம் நாய் எந்நேரமும் வெளியே சுற்றிக் கொண்டிருந்தால் அதற்கு மரியாதை இல்லை. எஜமான் இல்லாத நாய்க்கு எந்த மதிப்பும் இல்லை.

நியதி முக்கியம். திட்டமிடல் மிக அவசியம். திட்டமிட இலக்கு மிக முக்கியம். என் இலக்கு காசி யாத்திரை. காசிக்குப் போய் இங்கு வந்து விட்டால் தட்டு தட்டாய் பொற்காசுகள். தினம் தினம் நமஸ்காரங்கள். கை கட்டிய பதில்கள்.

தந்திரம் மட்டுமில்லை. மந்திரமும் கற்கலாம்.

காசி அந்தணர் பலா, அதிபலா கற்றுக்கொடுத்தார். இடைவிடாது சொல்ல காற்று வயிறை நிரப்பிவிடுகிறது. ஒரு கைப்பிடி வேப்பங்கொழுந்து போறும். பசியே இல்லாமல் போகிறது.



நாளை இரண்டு கொய்யாப் பழங்கள் போதும். தொடர்ந்து நடக்க முடியும். காலையில் ஒரு மணி நேரம் பசிக்கும்.

பசிக்கிற நேரம் பலா, அதிபலா மந்திரம் சொல்ல வேண்டும். இரைப்பை முழுவதும் காற்று அழுத்தமாய் அடைத்துக் கொள்ளும்.

இப்படி மந்திரம் சொல்வது எளிதன்று.

ஒரு நாழிகை அசையாமல் மந்திரம் சொல்ல மிகுந்த பயிற்சி வேண்டும். மன அடக்கம் வேண்டும். மந்திரத்தை உள்வாங்கி புத்தி முழுவதும் சப்தம் அதிர வேண்டும்.

இங்கே இந்தத் திருவண்ணாமலை பெண்ணோடு கூடும் போதும் கூட ஒரு மந்திர ஜபம்தான் கூடலை வலுவாக்க உதவியது.

இவை எல்லாவற்றுக்கும் புத்தி முக்கியம். புத்தியோடு வைராக்கியமும் அவசியம்.

கையில் காசு இருக்கிறது. இடையே ஏதேனும் ஒரு ஊரில் பல்லக்கோ மாட்டு வண்டியோ குதிரைகள் பூட்டிய சிறு தேரோ விலைக்கு வாங்கி விடலாம். ஆனால் கால் எத்தனை வலித்தாலும் நடந்து தானே போக வேண்டும். காசி வரை போவதற்கு இந்த நடை உதவும். கடுங் குளிர், கொடிய வெய்யில் எல்லாவற்றையும் இந்தப் பயணத்தில் பார்த்துவிட வேண்டும் குடந்தையோடு நிற்காமல் தஞ்சைக்குப் போய் தஞ்சையிலிருந்து சிராப்பள்ளி தொட்டு அங்கிருந்து ராமநாதபுரம் நகர்ந்து ராமேஸ்வரத்துக்குப் போய்விட வேண்டும்.

ராமேஸ்வரத்தில் மண்ணெடுத்து கங்கையில் போய் கரைக்க வேண்டும். கங்கை ஜலத்தைக் கொண்டு வந்து ராமேஸ்வரத்தில் சிவனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும்.

இப்படி ஊர் ஊராய் நகர்ந்து கொண்டிருப்பது பிடிக்கிறது ஒரே இடத்தில் நிற்காமல், ஒரே விதமாய் வாழாமல் அலைந்துகொண்டே இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது

மடியில் கனமில்லை. அதனால் கள்வர் பயமில்லை. வண்டி, மாடு, பெண்டுகள் என்று அந்த சுமையுமில்லை. கூடவே நடந்துவர தோழர்கள் இல்லை. பாம்பு, பூச்சி என்கிற பயம் இல்லை. மதயானை, புலி இவை குறித்து கவலை இல்லை.

இருட்டிய பிறகு காட்டில் மாட்டிக் கொண்டாலும் கவலை இல்லை. ஒரு மரத்தின் நடுக்கிளையில் தூங்காமல் தூங்க முடியும். மரத்தோடு இறுக்க சீகந்திக் கொடியால் பிணைத்துக் கொண்டு குத்திட்டு அசையாமல் உட்கார்ந்திருக்க முடியும்.

கிராமங்களுக்கோ, நகரங்களுக்கோ போனால் யாத்ரீக பிராமணன் என்று எவரேனும் உபசரித்துச் சோறு போடுவார்கள். தட்சணை தருவார்கள். வழிநடைக்கு சோற்று மூட்டை கட்டிக் கொடுப்பார்கள்.

புவனபதி உற்சாகமாக நடந்தான். குடந்தைக்குப் போய் சேர்ந்தான்.

ஒரு சத்திரத்தில் அம்மாவும், அப்பாவும், அண்ணனும் முன்னமே வந்து தங்கியிருந்தார்கள். அலுப்பு தீர புவனபதி இரண்டு நாட்கள் தூங்கினான். ஒரு குடந்தை வைத்தியரை வரவழைத்து காசு கொடுத்து காலில் உள்ள முட்களைப் பிடுங்கச் சொன்னான். உடம்பு முழுவதும் உருவிவிடச் சொன்னான். எண்ணெ குடித்து குடலை சுத்தம் செய்து கொண்டான்.

அடுத்த மூன்று நாட்கள் பாலும், பழமும் சாப்பிட்டு தயிரும், விருந்து பண்டங்களும் சாப்பிட்டு உடம்பில் செழுமையை வரவழைத்துக் கொண்டான்.

தஞ்சாவூர் பிராமணர்களைக் கோயிலில் சந்தித்து திருமணத்திற்குப் பெண் வேண்டும் என்று சொல்லி அனுப்பினார்கள். தங்களுக்குப் பூர்வீகம் தஞ்சை என்பதால் தங்கள் வாழ்க்கை தஞ்சாவூர் சம்பிரதாயத்தை ஒட்டி இருப்பதால் தஞ்சைப் பெண்தான் வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். தங்கள் பிரபல்யத்தை சொல்ல தங்களோடு வந்த சோழ வீரர்களைப் பேசச் சொன்னார்கள்.



'பிராமணன் புகழை மறவர் சொல்லித்தானா தெரிந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு வாயில்லையா?'

'பையன்களை வேதம் சொல்லச் சொல்லுங்கள். ருத்ரம் சொல்லச் சொல்லுங்கள். ஜமகம் சொல்லச் சொல்லுங்கள். அதில் தெரிந்துவிடுகிறது.' அண்ணனும் தம்பியும் கணீரென்று ஆரம்பித்தார்கள்.

அவர்கள் பிறந்த தேதியும் நட்சத்திரமும் சொல்ல அங்கேயே புதிதாய் ஜாதகம் கணித்தார்கள். பல பெண் ஜாதகங்கள் வந்தன.

அப்பா இரண்டு பெண்களைத் தேர்ந்தெடுத்தார். திருமணத்திற்கு நாள் குறித்தார். நிறைய பொற்காசுகளை அள்ளி வீசி நகைகளும், துணிகளும் வாங்கினார். கும்பகோணத்தில் உள்ள எல்லா பண்டிதர்களையும் சந்தித்து நடத்தி வைக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

அவன் திருமணத்தை முடித்துவிட்டு தனியே ராமேஸ்வரம் போக எண்ணினான். அது பற்றி யாருக்கும் சொல்லாமல் மௌனமாக இருந்தான்.

## 9

**வி**த்தை என்பது ஒரு தொழிலை சரியாக செய்வது அல்ல. அந்தத் தொழிலைத் தன் வாழ்க்கைக்கு உதவியாக செய்வது தான் உயர்வதற்கு சரியான உபகரணமாய் மாற்றுவது.

வித்தை என்பது பயிற்சியின்பாலும், பயிற்சியால் ஏற்படும் அறிவின்பாலும் அந்த அறிவின் விளைவால் ஏற்படும் சந்தோஷத்தின் பாலும் சிறப்பது.

ஒரு தொழில் சந்தோஷம் தரவில்லையெனில் அதை செய்ய வேண்டிய அவசியமில்லை. மனித வாழ்க்கையில் உற்றுக்

கவனித்தால் எது மிகப் பெரிய சந்தோஷம் தெரியுமா? கர்வம்தான்.

கர்வம் தான் மனிதனின் உயிர் நாடி. கர்வம் தான் அவன் இருப்பு. வாழ்க்கையைப் புறக்கணித்து விட்டால் கர்வத்தையும் புறக்கணித்து விடலாம். மனித வாழ்க்கை தான் முக்கியமென்றால் கர்வம் தான் அதன் முதல் இடம். கர்வம் தான் இரண்டாம் இடம். கர்வம் தான் மூன்றாம் இடம். கர்வம் தான் வாழ்க்கை முழுவதும் நீக்கமற நிறைந்த விஷயம். கர்வத்தை உதறி விட்டால் வாழ்க்கையையே உதறியது போல. கர்வத்தை உதறுவது வேறு வாழ்க்கை. அதற்குத் துறவு என்று பெயர். துறவியான பிறகு வரும் கர்வத்தைவும் உதற வேண்டும். அது வேறு கதை.

அந்தணர்கள் துறவிகள் அல்ல. அவர்கள் அறிவு சார்ந்தவர்கள். அமைதி சார்ந்தவர்கள். அறிவுக்கும் அமைதிக்கும் கர்வம் உண்டு. அன்புக்கும்கூட கர்வம் உண்டு.

எனவே அந்தணர்கள் கர்வம் வினோதமானது. அது முழக்கமிடாது, திட்டமிடும். ஆரவாரிக்காது, முறுவலிடும். வெற்றியைக் கண் சிமிட்டி தந்திரமாய் அனுபவிக்கும். அடக்கமாய் நின்றபோதும் உள்ளுக்குள் சந்தோஷம் குதியலிடும்.

இந்த அடக்கம் தான் தொடர்ந்து வெற்றிக்கு அடி உரம். பணிவுபோலும் ஒரு கம்பீரம். விலகி நிற்பது போலும் ஒரு நடிப்பு. எங்கு போனாலும் எல்லாவற்றைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் பரபரப்பு அந்தணன் இயல்பாகிவிட்டது.

எல்லாவற்றையும் விட உயிர் வாழ்தல்மிக முக்கியம். அதுதான் வாழ்க்கையின் அடிப்படை. உயிர் வாழ்தலுக்கு ஆரோக்கியம் முக்கியம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். உணவே ஔஷதம். மெல்லியதாய் நோய்தலை காட்டும் என்று தெரிந்தால் அந்த உணவையும் உண்ணாது



இருந்துவிட வேண்டும். மூச்சுப் பயிற்சியால் நாடிகளை சுத்தம் செய்து கொள்ள வேண்டும். வயிற்று உபாதையா... அதற்கொரு பயிற்சி. தலைசுற்றலா... அதற்கொரு மூச்சுப் பயிற்சி நுரையீரலில் நீர் கோர்த்துச் கொள்வது போலிருக்கிறதா... அதற்கு தனியே ஒரு சுவாசம் என்று நோயை விரட்டி விடலாம்.

விஷத்திற்கு மூலிகை முறிவு உண்டு. மதம் பிடித்த யானையோ, காட்டு மிருகங்களோ மடக்கினால் மந்திரம் சொல்லி கட்டுப்படுத்தலாம். மேகம் பார்த்த உடனே இடிக்கும் என்று சொல்லி விடலாம். காற்று பார்த்த உடனே மழை தெரிந்து கொள்ளலாம். எந்த மலைக்குகை நல்லது எந்த மரத்தடி சரி என்கிற கணக்குகள் உண்டு.

ஆற்றைத் தாண்டும்போது அந்த ஆறிடம் கை கூப்பி கெஞ்ச வேண்டும். என் மீது கோபம் இருந்தாலும் உருட்டி ஓரம் தள்ளிவிடு. கொன்றுவிடாதே. காட்டில் நெருப்பு சுற்றிக் கொண்டால் மிருகங்கள் எந்தப் பக்கம் ஓடுகின்றனவோ அவைகளோடு அந்தப் பக்கம் ஓட வேண்டும். இல்லையெனில் நீர் நிலையில் உள்ளே முழுகி ஜல பந்தனம் செய்து கொள்ள வேண்டும்.

ஆனால் இரண்டு விஷயங்களிலிருந்து காப்பாற்ற அறிவால் முடியாது. கடவுள்தான் உதவிக்கு வர வேண்டும்.

ஒன்று ஓநாய் கூட்டம். இன்னொன்று மனிதர்கள். ஓநாய் கூட்டத்தை மந்திர ஜெபத்தாலோ வில், அம்பு, கத்தி போன்ற ஆயுதத்தாலோ நெருப்பு பந்தத்தினாலோ சமாளித்து விட முடியாது.

'ஓநாய்க் கூட்டம் இரண்டு மூன்று நாட்கள் பின் தொடரும்.' நீ தூங்கித் தானே ஆக வேண்டும். அப்போது தின்று விடுகிறோம் என்று துரத்தி வரும்.

காட்டெருமைக் கூட்டங்களை அல்லது யானை மந்தைகளைத் தாண்டி ஓநாயிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

அவைகளுக்கு ஓநாய்கள் பயப்படும். மனிதர்கள் இதைவிட கொடூரமானவர்கள்.

ஓநாய் என்ன செய்ய முடியும் என்று அனுமானிக்க முடியும். மனிதன் மனிதனைப் பற்றி எந்த அனுமானமும் செய்ய முடியாது.

யார் எப்போது எதற்குத் தாக்குவான் என்று சொல்ல முடியாது. ஓநாய்களின் காதுகள் விரைத்தால், கண்கள் சிவந்தால் ஓநாய்கள் குறுக்கும் நெடுக்கும் நடந்தால் என்றெல்லாம் சகுனங்கள் உண்டு. மனிதர்களை அப்படி இனம் கண்டு கொள்ளவே முடியாது.

ஒருவித மரங்கொத்தி ஓநாய்கள் வரவை கூவிக்கூவிச் சொல்லும். அக்கா குருவி கத்தும், குழி முயல்கள் இடம் மாறும். ஆனால் கெட்ட மனிதனின் வருகையைச் சொல்ல எந்த பறவைக்கும் தெரிவதில்லை. எந்த பிராணியும் அறிவதில்லை.

ஆனால் அந்தணர்கள் மனிதர் பற்றியும் நிறைய யோசித்து வைத்தார்கள்.

மனிதனின் போருக்குக் காரணம் பெண்ணாசை. இன்னொரு காரணம் மண்ணாசை. மண்ணோடு சம்பந்தப்பட்டது தான் பொன்னும், பெண்ணும். எனவே, அந்தணர்களுக்கு மண் முக்கியமே இல்லை. இது என்னுடைய தேசம். இது என்னுடைய நாடு என்கிற எண்ணம் அந்தணனுக்கு இல்லை.

கட்டின துணியும், ஓலைச் சுவடிகளுமே சொத்து. இரந்துண்பதே வாழ்க்கை. எதிர்ப்பு காட்டாததே நியதி.

'முடிந்தால் நீதி சொல்வது. இல்லையெனில் மௌனமாக இருப்பது' என்று அந்தணர்கள் எப்போதோ முடிவு செய்தார்கள். ஆளுகின்ற வர்க்கமாய் இல்லாமல் அடிமையான வர்க்கமாகவும் இல்லாமல் இரண்டாம் நிலையிலேயே வாழ்க்கையை வைத்துக் கொண்டார்கள். போர் செய்ய மாட்டேன் என்று விலகி விட்டார்கள். 'நாடு பிடிக்கத்தானே வந்திருக்கிறாய். பிடித்துக்



கொள். நாடு பிடிக்கத்தானே போகிறாய். தாராளமாகப் போய்வா. வெற்றி உனதே' என்று போரிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்கள். இதனால் அந்த ஜாதிக்கு வாழ்நாள் அதிகமாயிற்று. பழுத்த கிழங்கள் தங்கள் அனுபவத்தை அழகாகச் சொல்லி வைத்தன. உலக வாழ்க்கையின் ஒவ்வொரு விஷயம் பற்றியும் அவர்கள் அனுபவம் விஸ்தாரமாயிற்று. அதனால் பிறருக்கு சொல்ல முடிந்தது.

மற்ற ஜாதியினருக்கு வானமண்டலத்தைப் பார்க்கவே நேரமில்லாமல் போயிற்று. இவர்கள் பார்த்தார்கள். இன்னும் அதிகம் புரிந்து கொண்டார்கள்.

புவனபதி கோர்வையாக சிந்தித்தான்.

அடேயப்பா. காஞ்சி மாநகரிலிருந்து குடந்தைக்கு நடப்பதே எத்தனை சந்தோஷமாக இருந்தது. தினம் ஒரு மலை. தினம் ஒரு ஆறு. தினம் வெவ்வேறு மனிதர்கள்.

புத்தி விழுங்கிக் கொண்டேயிருப்பது எவ்வளவு சந்தோஷம். படித்தவைகள் எல்லாவற்றையும் பிரயோகம் பண்ண பயணம் தான் நல்லது.

இவ்வுலகில் புத்திமானே பலவான். புத்தி என்பது அனுபவச் சேர்க்கை. அந்த சேர்க்கையிலிருந்து மேலே கனிந்து வந்து பாற்கடல் கடைவது என்பது என்னவென்றே இந்த மக்களுக்கு தெரியவில்லை.

பாற்கடல் புத்தி. அனுபவத்தால் அலை வீசிக் கொண்டிருக்கிற புத்தி, மந்திர மலை என்பது ஒரு அனுபவத்தை அலசும் திறன். எல்லா அனுபவத்திலும் நல்லது கெட்டது என்ற விஷயங்கள் உண்டு.

நல்லது பக்கமும் நினைத்து, கெட்டது பக்கமும் நினைக்க வேண்டும். இரண்டு பக்கமும் மாறி மாறி நினைக்க அனுபவப் பாற்கடலில் இருந்து ஏகப்பட்ட விஷயங்கள் அமிர்தம் உள்பட கிடைக்கும்.

அமிர்தம் என்பது கடவுள் நிலை. இந்தக் கடவுள் நிலை அனுபவத்தைக் கடைந்து வருவது. கையில் காசு இருக்கிறது. உடம்பில் வலுவிருக்கிறது. தலையில் புத்தி இருக்கிறது. பிறகு எதற்கு காஞ்சியிலேயே உட்கார வேண்டும்?

காஞ்சியிலிருந்தால் தாஸி வீட்டிற்குப் போக முடியுமா? நதிகளையும் மலைகளையும் பார்க்க முடியுமா? மனித நாகரீகங்களை அறிய முடியுமா? காசோடு காஞ்சியில் இருந்தால் உடம்பு தடித்துப் போகும். தடித்த உடலை நோய் பற்றிக் கொள்ளும். என் குல இயல்பு பயணம் செய்தல். இடை விடாது இடம் பெயர்தல்.

இது தவிர கடவுள் அனுக்ரஹம் எனக்கு இருக்கிறது. இல்லையெனில் இத்தனை காசு எனக்குக் கிடைக்குமா?

சட்டென்று பொற்காசுகளை ஒதுக்கிக் கொள்ளத் தோன்றியதே! அது கெட்டிக்காரத்தனம். அதை மூட்டையாக்கி நீரில் போட்டது சாதுர்யம். வழி நடைக்கு மூங்கில் கழியில் காசு வைத்துக் கொண்டு வந்தது சாதுர்யம். பெண்ணை ருசி பார்த்துவிட்டு அங்கேயே சிக்காமல் உதறி எழுந்து வந்தது கம்பீரம்.

அதேபோல இந்தக் கல்யாணத்திலும் சிக்கக் கூடாது. கல்யாணம் இல்லாமல் போனால் திரும்பவும் காஞ்சிக்கு வர மனம் இருக்காது. எனவே இளம் பெண்ணாய் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டு சிறிதுநாள் அவளோடு சுகித்திருந்து விட்டு மறுபடி பயணம் தொடர வேண்டும்.

மனைவியை மீறி காசிக்கு போக முடியுமா? அவள் அழுது பயணத்தை நிறுத்தி விடுவாள் என்று சொல்வார்கள். யார் என்ன அழுதாலும் என் பயணம் நிற்காது.

அதிகம் பிடிவாதம் பிடிக்காத, அதட்டினால் மீறாத பெண்ணாகப் பார்த்து திருமணம் செய்து கொள்ள வேண்டும். அம்மாவுக்குப் பிடித்த பெண் என்பது முக்கியமில்லை. என்



திட்டங்களுக்கு சரியாய் வருகிற பெண்தான் முக்கியம். பெண்ணுக்கு சகோதரர்கள் இருப்பது முக்கியம். ஒரு வேளை காசியிலிருந்து திரும்ப நாளாயிற்று என்றால் ஏதேனும் ஒரு சகோதரன் ஆதரவில் வாழலாம். போகுமுன் காசு கொடுத்து சகோதரனிடம் பார்த்துக் கொள்ளச் சொல்லலாம். ஒரு தங்கையை சகோதரர்கள் காசு தராவிட்டாலும் பார்த்துக் கொள்வார்கள்.

குடந்தையில் எந்தப் பெண் என்னிடம் சிக்கப் போகி றாளோ தெரியவில்லை. அண்ணா இப்படியெல்லாம் யோசிக் கிறானா என்று தெரியவில்லை.

அண்ணா முதல் பையன், கோழை. அப்பாவின் காமத்தில் பிறந்தவன். அதற்குப் பிறகு ஒரு பெண். அவள் அம்மா வெட்கம் விட்டபிறகு பிறந்தவள். நான் மூன்றாவது. இரண்டு பேரின் உடல் சூடுமே அடங்கி இன்று கூடினால் நல்லது என்று நட்சத்திரம் பார்த்து திதி நன்றாக இருக்கிறது என்று கூட, நான் உண்டாகியிருக்கிறேன்.

என் தாய், தந்தை நிதானமாய்க் கூடியதால்தான் என் புத்தி சிதறாமல் கூர்மையாக இருக்கிறது.

அவன் விடிகாலையில் எழுந்து வெளிச்சம் வருவதற்கு முன்பு, ஜப தபங்கள் முடித்துவிட்டு தன்னைப்பற்றி ஒட்டு மொத்தமாய் ஒன்றன்பின் ஒன்றாய் யோசித்தான். பல பெண்களை மறுதலித்தான்.

அண்ணாவுக்கு மறுதலிக்கவும் தெரியவில்லை.

தேர்ந்தெடுக்கவும் தெரியவில்லை.

பதினோரு வயதுப் பெண்... பெரிய விழிகளும், குடம் போன்ற இடுப்பும், மெல்ல வீங்கத் துவங்கிய முலைகளும், ரஸம் ஊறிய உதடுகளுமாய் ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்தான்.

அவர்கள் முன்னூறு பொன் சீர்கேட்டார்கள். மூன்று முறை மாமன்கள் இருக்கிறார்கள். ஆனால் சம்பாதிக்கும் திறன் இல்லை.

எங்கள் குழந்தையைக் கொஞ்சம் திறமையான இளைஞனுக்கு கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம். அரசாங்க உத்தியோகம் என்றால் நல்லது என்று பேசினார்கள்.

அவன் வேதப் படிப்பை பரீக்ஷித்து பார்த்தார்கள். இடக்கு முடக்கான கேள்விகள் கேட்டார்கள்.

எல்லாம் சரிதான் என்று முன்னூறு பொன்னுக்குக் குறையாது என்று சீர் கேட்டார்கள்.

அவன் நானூறு செய்வேன் என்றான்.

நூறுக்கு ஓலை முறி எழுதிக் கொடுத்தான்.

பானையில் கொண்டு வந்த நானூறு பணத்தில் முன்னூறு தனக்காகவும் நூறு அண்ணனுக்காகவும் செலவு செய்யச் சொன்னான்.

மூங்கில் குழாயை முற்றிலும் உடைத்து அதிலிருந்த நாற்பது பொன்னுக்கு குடந்தையிலுள்ள எல்லோருக்கும் விருந்து வைத்தான்.

அவனைச் சோழ வீரர்ககள் இனங்கண்டு கொண்டு ''ஐயன், நீங்களா-உங்களுக்கா திருமணம்?'' என்று உடல் வணங்கிக் கும்பிட்டார்கள். அவர்களைப் பெண் வீட்டாரிடம் தூது அனுப்பினான்.

சோழவீரர்கள் அவனைப் பற்றியும் காசி அந்தணர் பற்றியும் வாய்ச் சாலமாகப் பேசினார்கள்.

அவன் திருமணம் குடந்தையில் நடந்தது.

ஒருமாதம் மாமனார் வீட்டிலிருந்து குடித்தனம் செய்தான்.

அந்தப் பெண் இன்னும் பெரிய மனுஷியாகவில்லை. எனவே சாந்தி முகூர்த்தம் இப்போதைக்கில்லை என்று முடிவாயிற்று.

அவன் அவள் நாடி பிடித்து இன்னும் மூன்று மாதத்தில் பெரிய மனுஷி ஆகிவிடுவாள் என்றும் அதற்குள் தான் ராமேஸ்வரம் போய்வரப் போவதாகச் சொன்னான்.



உறவுகள் தடுத்துப் பார்த்தார்கள். அவன் பிடிவாதமாக இருந்தான். வந்து மறுபடியும் குடந்தையில் சில நாட்கள் தங்கிவிட்டு காஞ்சி போவதாய் ஒப்புக் கொண்டான்.

''விட்டுப் பிடிப்போம்... ராமேஸ்வரம் கிட்ட தானே... பத்து நாள் நடை.''

அவனை தக்க துணையோடு மாமனார் வீடு ராமேஸ்வரம் அனுப்பியது.

கடல் பார்த்து அவன் அதிர்ந்து போனான்.

பிரும்மாண்டமான சமுத்திரம் பார்ப்பது போல் பிரும்மாண்டமான மலையையும் பார்த்து விட வேண்டும். காசி, ஹரித்துவாரம், ரிஷிக்கேசம் நிச்சயம் பார்க்க வேண்டும்.

அவனுள் உறுதி எழுந்தது.

## 10

''இவதாண்டா உன் பொண்டாட்டி... இப்ப பார்த்துக்கோ...'' அம்மா அவன் மனைவியை கொண்டு வந்து நிறுத்தினாள்.

அவன் நினைத்தது போலவே ருதுவான பிறகு அவள் அழகு சுடர்விட்டு பிரகாசித்தது. தோல் பளபளத்து நிறம்கூடி உடம்பு திரளத் துவங்கியிருந்தது. தொடத் தொட இன்னமும் திரளும். அவன் கூர்ந்து பார்த்தான்.

கீழ் உதடு வளைந்தும் மேல் உதடு மெல்லியதாகவும் இருந்தன. நிறைய வாயாடுவாள் என்று அங்க அவயங்கள் சொல்லின. மார்பு இப்போதைக்குப் பட்டையாக இருந்தாலும் பருவத்தில் தடித்துப் போவாள் என்று உதடு சொல்லிற்று. கண் வெள்ளையில் மச்சங்கள் இருந்தன. எதையும் இடக்குமடக்காய் பார்க்கும் பெண் என்று அந்தக் குறிப்பு சொல்லியது.

கீழ்த் தாடையில் பற்கள் ஒன்றன்மீது ஒன்று படர்ந்திருந்தன. இது உடனே சூலுறுவாள் என்பதற்கான குறிப்பு. அதே நேரம் குரல் கட்டையாக இருக்கும். பேச்சில் உஷ்ணம் தெறிக்கும். செல்வ சுகங்களுக்கும் போலி கௌரவங்களுக்கும் ஆசைப்படுபவளின் தாடை மொழுக்கென்று இருக்கும். இவளுக்கு இருந்தது.

விரல் நகங்கள் முட்டை வடிவம் கொண்டிருந்தன. கர்வி. தலையில் செம்பட்டை ஓடிற்று. செலவாளி. கண்கள் சொருகினதாய், மயக்கமுள்ளதாய் இருந்தன. லேசாய் வயிறு இருந்தது.

இது மோகத்தில் பிரியமுள்ளவள் என்பதைக் காட்டும். புருஷனோடு கூடிக் குலவுவதில் மிகுந்த ஆசை உள்ளவள் என்று சொல்லும். சரி இருந்துவிட்டு போகட்டும்.

இவளுக்கு ஆறு சகோதரர்கள். மூத்தவனுக்குக் திருமணமாகி இவள் வயதிலேயே ஒரு பெண் இருக்கிறாள். கடைசி இரண்டு சகோதரருக்கு திருமணமாக வேண்டும். பெரியப்பா, சித்தப்பா, அத்தை என்று அக்ரஹாரம் முழுவதும் உறவுகள். அந்த வீட்டில் நிறைய முரட்டு வாலிபர்கள்.

வீட்டின் ஓட்டுக் கூரையில் வேலும், வாளும் கூட சொருகி வைக்கப்பட்டிருக்கிறது. தோள் பட்டையில் கேயூரம் அணிந்து இரண்டு வாலிபர்கள் இருக்கிறார்கள். கேயூரம் அணிந்தவன் போர்ப்பயிற்சி பெற்றவன்.

தஞ்சாவூர் அந்தணர்கள் காஞ்சிபுரத்து அந்தணர்கள் போலல்லாது போரில் ஆர்வமுள்ளவர்கள். அடிதடி ரகளையில் விருப்பமுள்ளவர்கள்.

தஞ்சாவூர் பெண்கள் ஒருவித அலட்டல் என்றால் ஆண்கள் இன்னொருவித அலட்டல். ஆயிரம் பேருக்கு தளபதியாக நிறைய அந்தண இளைஞர்களுக்கு ஆசை இருந்தது. மந்திரிப் பதவி வகிக்க தளபதியாய் இருப்பது ஒரு குறுக்கு வழி.

போர்ப் பயிற்சி கடிகையில். ஐந்து வருடம் பாடம் படித்து மூன்று நான்கு போர்களில் கலந்து கொண்டால் குலப்



பெருமையும் அனுபவமும் சேர்ந்து அதிகாரம் கொண்டுவந்து கொடுத்துவிடும். ஒரு குடும்பத்தில் ஒரு அந்தணனுக்கு அதிகாரம் வந்தால்கூட போதும். மற்றவர்களை அவன் மேலேற்றி விடுவான்.

எனவே ஒரு குடும்பத்தில் கேயூரதாரிகள் இருப்பது மிகப்பெரிய நம்பிக்கை. இந்தப் பெண்ணின் மூன்றாவது அண்ணன் காந்தளூர் சாலை கடிகைக்குப் போய் நான்கு வருடம் ஆகி விட்டதாம். மற்றவர்களைப்போல அல்லாமல் ஏழு வருடப்படிப்பாய் எடுத்துக் கொண்டிருக்கிறானாம்.

வருடத்திற்கு ஒருமுறை வருவானாம். இந்த சாந்தி கல்யாணத்திற்கு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறானாம்.

புவனபதிக்கு இந்தப் பெண்ணின் வீடும் பிடித்திருந்தது. அந்த வீட்டு அந்தண இளைஞர்கள் முரடர்களாக இருந்தார்களே தவிர கெட்டிக்காரத்தனம் போறவில்லை. சூழ்ச்சி தெரியவில்லை. ஆயுதம் எடுத்து உடல் வலிமையை நம்பியவனுக்கு சூழ்ச்சி வராது.

ஆக கையை வெட்டக்கொடுத்து கண்கட்டு வித்தையால் வெட்டிக் காசு சம்பாதித்து விட்டீர்களா... அந்த வீட்டு இளைஞர்கள் வட்டமாக உட்கார்ந்து கொண்டு கேட்டார்கள்.

புவனபதி கேள்வியிலுள்ள கேலியைப் புரிந்து கொண்டான். 'ஆமாம்' என்றான்.

'ஒரு அந்தணன் இப்படி காசு சம்பாதிப்பது சரியா?'

'அறுபத்து நாலு கலைகளில் கண்கட்டு வித்தையும் ஒரு கலை. அறுபத்து நாலு கலைகளும் அந்தணனுக்கு தெரிந்திருக்க வேண்டும். யானையேற்றம், குதிரையேற்றம் போல அதிக காசு சம்பாதிப்பதுபோல் கண்கட்டு வித்தையிலும் சம்பாதிக்கலாம்.'

'ஏனெனில் கண்கட்டு வித்தையில் உண்மை கொலை நிகழ்வதில்லை. சித்திரவதை ஏற்படுவதில்லை. கொலை செய்யாதவரை அந்தணனுக்கு பாவம் இல்லை.'

'என்ன சொல்கிறீர்கள்...? அந்தணன் போரில் ஈடுபடக் கூடாதா?'

அவர்கள் மெல்லியதாய் விழுந்த அடிக்கு மிரண்டார்கள்.

'ஆபத்துக்கு பாவமில்லை என்று தர்மத்தில் ஒரு விதி இருக்கிறது. பெண்களை ரட்சிக்கவும், குழந்தைகளைக் காப்பாற்றவும், பசுக்கள் வதைப்படாமல் தடுக்கவும், நீர் நிலைகளைக் காப்பாற்றவும் தர்மத்தின் பொருட்டும் அந்தணரும் படைக்கலன் ஏறலாம் என்ற விதி இருக்கிறது.'

'ஓ...' அவர்கள் வியந்தார்கள்.

ஆனால் அரசாங்கப் பதவி பெற போர் பயிற்சி பெறலாமா என்று தெரியவில்லை.

''அது அனாசாரம் என்று தோன்றுகிறது'' புவனபதி கொஞ்சம் இடம் கொடுத்துக் குத்தினான்.

கேயூரம் தரித்தவனுக்கு கோபம் வந்துவிட்டது. அடக்கிக் கொண்டான்.

''பதவி பயிற்சியால் வருவது. நீங்கள் சொன்னவைகளைக் காப்பாற்ற எதிரியோடு போர் செய்ய நீண்ட காலப்பயிற்சி தேவை. காப்பாற்றுகிறேன் என்று போய் உதைப்பட்டு வரக்கூடாது.''

''அதர்மத்திற்காக எந்த ஜாதியும் போர் பயிற்சி பெற்று வரவில்லை. தர்மம்தான் அந்தணரின் குறிக்கோள். எனது போர் தர்மம் தொட்டுதான் இருக்கும் கண்கட்டு வித்தைக்கு என்ன தர்மம் இருக்கிறது என்றுதான் தெரியவில்லை.''

''வித்தைக்கு தர்மம் இல்லை. வித்தையை பிரயோகம் செய்வதில்தான் தர்மம் இருக்கிறது.'' புவனபதி கேயூரனின் கேலியை லேசாய் எடுத்துக் கொண்டு விருட்டென்று பதில் சொன்னான்.

'புரியவில்லையே' ஒரு பதிமூன்று வயதுப் பையன் கூர்மையாய் கவனித்துக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து கேள்வி கேட்டான்.



''உதாரணமாக நீங்கள் எல்லோரும் அந்தணர்கள். அறம் வளர்க்கிற அந்தணர்கள்'' புவனபதி கண்சிமிட்டினான். ''உங்களுக்கெல்லாம் நான் தானம் செய்ய விரும்புகிறேன். ஆளுக்கொரு செப்புக் காசு தர ஆசைப்படுகிறேன். ஒரு செப்புக் காசுக்கு பத்து வாழைப்பழங்கள் கிடைக்கும். ஐந்து கருப்பட்டி கிடைக்கும். இருபது முழம் மல்லிச்சரம் கிடைக்கும். நிச்சயம் உங்களுக்கு உபயோகமாகும்.

ஆனால் யாத்ரீகனான என்னிடம் அவ்வளவு செப்புக் காசுகள் இல்லை. எனவே வேதம் ஓதும் உங்கள் காதுகளிலிருந்தும், மூக்கிலிருந்தும், பின் குடுமியிலிருந்தும், உள்ளங்கையிலிருந்தும் செப்புக் காசுகள் வரவழைத்து உங்களுக்கு தானம் செய்வேன்.

காசு வரவழைத்து நான் கெட்ட காரியத்தில் ஈடுபடவில்லை. யார் மனதும் நோகடிக்கவில்லை. தர்மத்துக்கு எதிராக நடக்கவில்லை. அக்ரஹாரத்து அந்தணர்களுக்குத் தானம் அளிக்கிறேன். நான் கொடுத்த காசில் எல்லோரும் ஒரு துளசிமாலை வாங்கிக் கொள்ளுங்கள் என்று வேண்டிக் கொள்ளப்போகிறேன். எனவே இது தர்மம்.''

''இது சாத்தியமா...'' ஒருவன் இடைமறித்துக் கேட்டான்.

''எது... தர்மம் செய்வதா... சாத்தியம்தான்.'' புவனபதி வேண்டுமென்றே வெகுளியாய் பேசினான்.

''நான் கேட்பது அதுவல்ல. என் குடுமியிலிருந்து காசு வரவழைப்பதை.''

''வெகு எளிது. பிரித்யங்கரா என்று ஒரு தேவதை. உடம்பு பெண் உடம்பு, முகம் சிம்மம், சதுர்புஜம் நின்ற திருக்கோலம். அவள் மூல மந்திரம் ஜெபித்தவருக்கு செப்புக் காசு வரவழைப்பது மிக எளிது'' புவனபதி பதில் சொன்னான்.

''இப்போது முடியுமா...?''

''முடியும்''

''இங்கே சாத்தியமா...?''

''சாத்தியம்.''

''செய்து காட்டுங்கள் பார்ப்போம்.''

''ஒரு பாத்திரம் வேண்டும்.''

''அடியே... இங்கு வா.'' மூத்தவன் தன் மனைவியைக் கூப்பிட்டான். ''நம் வீட்டுப் பெண்டுகளைக் கூப்பிடு. புவனபதி கண்கட்டு வித்தை செய்யப் போகிறான். ஒரு பாத்திரம் கொண்டு வா'' என்று கட்டளையிட்டான்.

''முற்றத்திலமர்ந்து கைகால்கள் சுத்தம் செய்து வான் நோக்கி நான் பிரித்யங்கராவை ஜெபிக்க வேண்டும். இந்த வீட்டிற்கு அவளை வரும்படி வேண்ட வேண்டும்.'

பிரித்யங்கரா பெண் உருவம். சிங்க முகம். சதுர்புஜம் நின்ற திருக்கோலம். அவள் ஆங்காரி. அவமரியாதையாய் யாரும் பேசிவிட வேண்டாம். அவள் உஷ்ணம் மிக்கவள். அவள் இருப்பை ஒரு வெம்மையால் உணர்வீர்கள்.

எனக்கு ஒரு மனை கொடுங்கள்.''

அவனுக்கு மனை போடப்பட்டது. பாத்திரம் தரப்பட்டது. பாத்திரத்தில் நீர் மொண்டு மனையில் அமர்ந்து எதிரே வைத்துக் கொண்டான். இடுப்புத் துண்டை உதறிமேலே முழுவதுமாய் போர்த்திக் கொண்டான். அரைக்கண் மூடி ஜெபம் செய்வது போலநடித்தான். கண் இடுக்கு வழியே எல்லோரையும் பார்த்தான்.

போர்வை நகர்த்தாது இடுப்பிலிருந்து முடிச்சு அவிழ்த்து ஒரு கொத்து செப்புக் காசுகளை இடக்கையில் எடுத்துக் கொண்டான். வலக் கையால் பாத்திரத்தில் மந்திரம் எழுதிக் கொண்டேயிருந்தான்.

எல்லோரும் அவன் வலக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இடக்கையின் திருட்டுத்தனத்தை யாரும் கவனிக்கவில்லை. சின்ன செப்புக்காசுகளை உள்ளங்கையில் அடக்கமாக



எடுத்துக் கொண்டு இடுப்பு முடிச்சை சரிசெய்து கொண்டு சட்டென்று தண்ணீரை வான்நோக்கி வீசினான்.

வருக வருக என்று வலக்கையைத் தன் நெஞ்சில் வைத்துக் கொண்டான். வலக் கையால் பாத்திரம் எடுத்து இடக்கையில் இடுக்கிக் கொண்டான்.

இப்போது அவன் கையில் பாத்திரத்தின் விளிம்பும், செப்புக் காசுகளும் இருந்தன.

எழுந்து போய் அந்தச் சின்னப் பையன் மூக்கை பலமாகத் திருகினான்.

வலக்கையில் காசை உள்ளே போடுவது போல் நடித்தான். டொக்கென்று ஒரு செப்புக்காசை இடக்கையால் விட்டான்.

''பிரித்யங்கரா வந்து விட்டாள். அமைதியாக உட்காருங்கள். தேவையற்று தேவதையை உரசாதீர்கள்.

எல்லோரும் அப்படியே அமர்ந்தார்கள்.

''உள்ளங்கையை இதில் உதறுங்கள்'', பெரிய வாலிபனிடம் பாத்திரம் நீட்டினான்.

அந்த வாலிபன் கையை உதற லொட்டென்று செப்புக்காசு விழுந்தது.

''அம்மா இதில் ஒரு செப்புக்காசு போடுங்கள்''

ஒரு பெண்மணியிடம் பாத்திரம் நீட்ட அவள் மிரண்டாள்.

''உங்களிடம் ஒரு செப்புக்காசு கூட இல்லை என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் போடுவது போல நடியுங்கள்.''

அவள் போடுவதுபோல் பாவனை செய்தாள். லொட்டென்று செப்புக்காசு விழுந்தது.

கூட்டம் ஆச்சரியப்பட்டது.

''இன்னொரு முறை போடுங்கள்.''

மறுபடியும் போடுவதுபோல் பாவனை செய்தாள்.

இன்னொரு முறை காசு விழும் சத்தம் கேட்டது.

அவன் குலுக்கினான். பாத்திரத்தில் காசு இருக்கும் சத்தம் கேட்டது. சட்டென்று நகர்ந்து ஒருவன் குடுமியைப் பிடித்து உதறினான்.

நாலைந்து காசுகள் விழும் ஓசை கேட்டது. காதிலிருந்து, மூக்கிலிருந்து, தொப்புளிலிருந்து காசு எடுத்து எடுத்து போடுவதாய் பாவனை செய்து இடக்கையிலிருந்து ஒவ்வொரு காசாய் தளரவிட்டான். நீளப்பாத்திரத்தில் லொட்டு லொட் டென்று காசுகள் விழும் ஓசை கேட்டது. குலுக்க காசுகள் அசைவு தெரிந்தது.

அந்த வீடு வியப்பிலும் பயத்திலும் உறைந்து போயிற்று.

''பிரித்யங்கரா வெம்மை மிக்கவள். அவள் இருக்குமிடம் உஷ்ணமாகி விடும். இந்த இடம் உஷ்ணமாவது தெரிகிறதா...''

சிலர் ஆம் என்று தலையாட்டினார்கள்.

''பிரித்யங்கராவை மிகத் தெளிவாய் நான் உணருகிறேன்.'' ஒரு இளைஞன் நாக்கு குழறி பதில் சொன்னான்.

''பிராதா... வஸ்திரம் விரியுங்கள்.'' கேயூரம் அணிந்தவனை நோக்கி புவனபதி கட்டளையிட அவன் வஸ்திரத்தை தானம் வாங்குவது போல் விரித்துப் பிடித்தான்.

விரித்த வஸ்திரத்தில் நிறைய செப்புக் காசுகள் விழுந்தன.

''ஏ...யப்பா....'' அந்த அந்தணக் குடும்பம் வாய் பிளந்தது.

''எப்படி இது...'' என்று எல்லோரும் கேட்டார்கள்.

''இது கண்கட்டு வித்தை.''

''இது உண்மைக் காசு தானா. இல்லை சற்று நேரத்தில் மாயமாய் மறைந்து விடுமா...?''

''நீங்கள் செலவழிக்கும் வரை உங்களோடே இருக்கும். பிறகு மாயமாய் மறைந்து விடும்.''

''நான் செலவழிக்கவேயில்லை யென்றால்...''



''பிரித்யங்கரா என்கிற தேவதை ஞாபகமாக தாயத்தாக வைத்துக் கொள்ளலாம். தவறு ஒன்றுமில்லை.''

அவர்கள் எல்லோரும் அந்த செப்புக் காசை உரசிப் பார்த்தார்கள். கடித்துப் பார்த்தார்கள். சுண்டிப் பார்த்தார்கள்.

உள்ளங்கையில் ஏந்தி கேயூரவாலிபன் அவனிடம் நீட்டினான்.

''தானம் கொடுத்ததை புவனபதி திரும்ப வாங்க மாட்டான். இது நான் சக்தியால் சம்பாதித்தது. இப்படி சம்பாதிப்பது தவறல்ல. ஆனால் சம்பாதித்ததை எப்படி செலவு செய்கிறோம்... எதற்கு சம்பாதிக்கிறோம் என்பதே முக்கியம்.''

''புவனபதி எங்களை மன்னிக்க வேண்டும்'' கேயூர வாலிபன் கைகூப்பினான்.

தொண்டைநாட்டு அந்தணர்களின் திறமை எங்களுக்குத் தெரியும். அவர்கள் கூர்மையான அறிவுள்ளவர்கள். நல்ல நிர்வாகி என்று கேள்விப்பட்டிருக்கிறோம்.

''அடடா.. நாம் உறவாகப் போகிறவர்கள். நீங்கள் என் பிரித்துப் பேசுகிறீர்கள். நான் பிரித்யங்கரா ஜெபம் செய்வதற்காகவே ராமேஸ்வரம் போனேன்.

சப்பாத்திமுட்கள் நிறைந்த பாறை தான் பிரித்யங்கராவின் இடம். அங்கு ஜெபம் செய்ய அவள் நேரில் தோன்றுவாள்.''

''நேரில் தோன்றினாளா''. ஒரு படைக்கு தளபதியாகப் போகிற அந்த கேயூர வாலிபன் ஆவலோடு கேட்டான்.

''அதைத் தனியே சொல்கிறேன். என் ராமேஸ்வரம் பயணம் பற்றி உங்களிடம் சொல்ல எனக்கு விருப்பம் உண்டு. மேலும் நான் ராமேஸ்வரத்தோடு என் பயணத்தை நிறுத்தப் போவதில்லை. காசிக்குபோகப் போகிறேன்.''

''என்ன காசிக்கா...?'' அந்த வீடு அதிர்ந்தது.

''ஆமாம். காசிக்குத்தான்.''

''எப்போது...?''

''திருமணம் முடித்து ஒரு ஆண்டுக்குப் பிறகு.''

அங்குள்ள அந்தணர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். உள்ளே ஒல்லியான அந்தப் பெண் அவன் மனைவி அழத் துவங்கினாள்.

## 11

கேயூரம் அணிந்த உயரமும் அகலமுமான அந்த பிராமண இளைஞனுக்கு புவனபதியின் மீது மிகப்பெரிய மதிப்பு வந்துவிட்டது.

அரசர்களால் முதன்மையாக ஆதரிக்கப்பட்டு தாய் தந்தையர்களால் ஒழுக்கமாக வளர்க்கப்பட்டு உறவுமுறை ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்பட்ட அந்த அந்தண இளைஞர்கள் பிரகாசமாக இருந்தார்கள். ஆனாலும் புத்திமானே பலவான் என்பதை புவனபதி நிருபித்தான்.

அடடா... இப்படியே காசு சம்பாதிக்கலாமே. தொண்டை வறளவேதம் சொல்ல வேண்டாமே... தசைகள் வலிக்க உடற்பயிற்சி செய்ய வேண்டாமே... மாப்பிள்ளையிடமிருந்து வித்தைகள் கற்றுக் கொண்டால் மிக எளிதாக பணக்காரனாகலாமே.

''இல்லை, உபதளபதியே. இது மந்திரமில்லை. தந்திரம்தான்'' புவனவதி கண் சிமிட்டினான்.

''அப்படியா... அப்படியா...'' அவர்கள் பரபரத்தார்கள்.

''சொல்லிக் கொடுங்களேன்'' கை கூப்பி கெஞ்சினார்கள்.

''பதிலுக்கு எனக்கென்ன சொல்லித் தருவாய்.''

''உங்களுக்கு எது வேண்டும் சொல்லுங்கள்.''



''காட்டு விலங்குகளிடமிருந்து தப்பிக்க எனக்கு தற்காப்புப் பயிற்சி அளிக்க வேண்டும்.''

''உங்களுக்கு எதற்கு அது. நீங்கள் எங்களைப் போல் போருக்கு போகப் போகிறீர்களா?''

''இல்லை. நான் போர் செய்யும் அந்தணனல்ல. ஆயினும் இமயமலை வரை பயணம் செய்யப் போகிறேன்.''

''மாப்பிள்ளை, தயவு செய்து அந்த எண்ணத்தைக் கைவிடுங்கள்.''

''ஏன்?''

''எங்கள் வீட்டுப் பெண்ணை மணந்த பிறகு, நீங்கள் அவ்வளவு தொலைவு போவது எங்களுக்குப் பிடிக்கவில்லை. ஒன்றுகிடக்க ஒன்று ஆனால் எங்கள் தங்கையின் கதி...''

''திண்ணையில் உட்கார்ந்து தூங்குபவருக்கும் மரணம் வரும் என்று தெரியாதவரா நீங்கள்?''

''பாம்பு எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் கொத்தும். புற்றில் கை வைத்தால் நிச்சயம் கொத்தும்.''

''தவறு. புற்றில் கை வைத்தால் பாம்பு கொத்தாது.''

''என்ன சொல்கிறீர்கள்.''

''பாம்பு கொத்த தலையைப் பின்னுக்குத் தள்ள வேண்டும். புற்றில் அதற்கு இடமில்லை. எனவே புற்றில் உள்ள பாம்பு கொத்தாது. யார் வேண்டுமானாலும் புற்றில் கை விடலாம்.''

''பாம்பு வெளியே வந்துவிட்டால்.''

''வளைந்து ஓடு. கோலால் அதிர்ச்சி ஏற்படும் வண்ணம் அடி. காலால் தூசு கிளறி நகர்ந்து விடு.''

''அடேயப்பா. என்னன்னமோ விவரம் சொல்கிறீர்கள்.''

''எனக்கு குரங்குகளிடமிருந்தும் ஓநாய்களிடமிருந்தும் பாதுகாத்துக் கொள்ள தற்காப்புப் பயிற்சி தேவை.''

''எங்களுக்கு சொல்லித்தர இஷ்டமில்லை. சொல்லிக் கொடுத்தால் பயணப்பட்டு விடுவீர்கள்.''

''நான் பயணப்படுவது நிச்சயம். நீ சொல்லித் தராவிட்டால் ஒரு வேடனிடம் மண்டியிட்டு கற்றுக் கொள்வேன்.''

''உங்களுக்கு சொல்லித் தந்தால் எங்கள் வீட்டுப் பெரியவர்கள் வருத்தப்படுவார்கள். என் தங்கை என்னை அழுது சபிக்கக் கூடும்.''

''இதை ரகசியமாக வைத்துக் கொள்வோம்.''

''இன்னமும் எனக்கு சமாதானமாக வில்லை.''

''எனக்கு துலா லக்னம். ஆயுள்காரன் சனி. யோகக் காரணமும் அவனே. எனவே ஆயுசுக்குக் குறைவே இல்லை. நெற்றியைப் பார்... மூன்று கோடுகள். வலது உள்ளங்கையைப் பார். குரு மேடு உயர்ந்து சந்திரமேடு உயர்ந்து ஆயுசு தீர்க்கமாக இருக்கிறது. என் மண்டை உச்சியிலும் மச்சமிருக்கிறது. இவைகளனைத்தும் என் ஆயுசு பலத்தை சொல்கின்றன. நான் காசிக்குப் போய் வந்தால் உங்களுக்கெல்லாம் பெருமைதானே. தவிர நீங்கள் அந்தணர்களல்லவா. என்னை ஏன் அதைர்யப் படுத்துகிறீர்கள்?''

''தேவதை வசியம் செய்பவர்களுக்கு ஓநாய்களையும் குரங்குகளையும் கண்டு பயம் ஏன்.''

''செந்நிற ஓநாய்களைக் கண்டு எப்பொழுதும் பயந்துதான் ஆக வேண்டும். இறைவன் படைப்பில் மிக பயங்யரமாயிருப்பது ஓநாய்தான். குரங்குகள் மிரண்டால் அவைகள் மிகக் கடுமையாகத் தாக்கும். கிட்டத்தட்ட நூறு கல் தொலைவு பின் தொடர்ந்து வரும். அவை ஏன் கோபமடைகின்றன என்று புரியவேயில்லை. குரங்குகள் இல்லாத வனமேயில்லை. அதனால் தான் எல்லா படைவீர்களுக்கும் குரங்கைத் தாக்கும் வித்தை கட்டாயப் பாடமாக்கப்படுகிறது.''



''சரி. உங்கள் பேச்சிலுள்ள நியாயத்தைப் புரிந்து கொள்கிறேன். எங்கள் தங்கையின் நலனுக்காக உங்களுக்கு இந்த வித்தையைப் பதினைந்து நாட்களுக்குள் சொல்லித் தருகிறேன். வரும் அமாவாசையன்று பாடம் துவங்கலாம். நாங்கள் இருவருமே சொல்லித் தருகிறோம். எங்களுக்கு ஒரு சத்தியம் செய்துதர வேண்டும்.''

''என்ன சத்தியம். தந்திர வித்தை தானே.''

''இல்லை. எங்கள் தங்கையை ஏமாற்றாது கண்கலங்காது கடைசிவரை காப்பாற்றுவேன் என்று சத்தியம் செய்து தர வேண்டும்.''

''வேறு என்னென்ன சொல்லித் தருவீர்கள்?''

''உடம்பை வெண்கலமாக்கிக் கொள்ள ஒரு வேளை மிருகங்களால் கடிபட்டாலும் ரத்தசேதம் அதிகமாகாமல் மனதால் ரத்தம் வெளியேறுதலை நிறுத்த சில உத்திகள் சொல்லித் தருவோம். காதில் எறும்பு ஏறாமல் தூங்குவதற்கு, நீரில் மிதந்து தூங்குவதற்கு சொல்லித் தருவோம். மரத்தின் கிளைகளில் உட்கார்ந்து தூங்கவும் உங்களுக்குப் பழக்கிக் கொடுப்போம்.''

புவனவதி அவர்களைப் பார்த்து கை கூப்பினான். ஆற்றங்கரைக்கு வரச் சொன்னான்.

நதியின் கரையில் உட்கார்ந்து ஜபதங்கள் முடித்துவிட்டு மணலில் சிவலிங்கம் பிடித்து எதிரே கேயூரம் அணிந்த அந்த அந்தண வாலிபர்களை உட்காரவைத்து, ''உங்கள் தங்கையை ஒருபொழுதும் கண்கலங்காமல் காப்பாற்றுவேன். பிரியம் சொரிவேன். அவளை கௌரவமும், கர்வமும் உள்ள பெண்மணியாய் வலம் வரச் செய்வேன். செல்வச் செழிப்போடு நடமாட விடுவேன். இறையருளால் பல குழந்தைகளுக்கு தாயாக்குவேன் குழந்தைகள் மூலமும் அவளை பெருமிதமுடையவளாக்குவேன்.''

உன் தங்கை எனக்குத் தெரிந்த அங்கலட்சண ஜாதகப்படி எழுபத்தியேழு வருடம் வரை உயிரோடு இருப்பாள். அவள் நோயின்றி வாழ்வாள். தூக்கத்தில் மரணமடைவாள்.''

சகோதரர்கள் மனம் குளிர்ந்தார்கள்.

''அவள் எங்களுக்கு ஒன்றுவிட்ட தங்கை. ஆயினும் என்ன. அவள் எங்கள் குலக்கொடி. அவள் பிறந்த வேளையிலிருந்து எங்கள் வீடுகளில் செல்வம் கொழிக்கிறது. அவளுக்காக நாங்கள் எதையும் செய்வோம். இப்போது சாப்பிட வாருங்கள் போகலாம்.

உங்கள் ராமேஸ்வர பயணம் பற்றி ஒன்றுமே சொல்ல வில்லையே. அங்கு என்ன கற்றீர்கள். யாரைப் பார்த்தீர்கள். ராமர் கட்டிய சேது இருக்கிறதா.''

''அதற்கான அடையாளங்கள் இருக்கின்றன. ராமேஸ்வரம் கடற்கரை மணலில் லிங்கம் பிடித்து பூஜை செய்து அந்த மணலை அப்படியே ஒரு சம்புடத்தில் போட்டுக் கொண்டு வந்திருக்கிறேன். அதை காசிக்கு எடுத்துப் போய் கங்கையில் கரைப்பேன். கங்கையிலிருந்து நீர் எடுத்து வந்து ராமேஸ்வரம் ராமநாத ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்வேன். இது என் லட்சியம். எனக்கு நீங்கள் உதவ வேண்டும்.''

''உங்களை உறவென்று சொல்லும் போது எனக்கு மிகப் பெருமையாக இருக்கிறது மாப்பிள்ளை. தின்று தூங்குகிற ஆளாக இல்லாமல் எங்களுக்கெல்லாம் இருப்பதைவிட மிகப் பெரிய லட்சியமாக நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களோடும், தங்கையோடும் நாங்களும் காஞ்சிபுரம் வருவோம். அங்குள்ள கோயில்களில் ஸ்வாமி தரிசனம் செய்ய வேண்டும். இதையும் ஒரு வரமாக நீங்கள் தர வேண்டும்.''

''அடடா.... இதென்ன பேச்சு. உங்கள் வருகை எனக்குப் பெருமையல்லவா. காஞ்சியில் கேயூரம் அணிந்த அந்தணர்கள் மிகக் குறைவு. நீங்கள் கத்தியும் கேடயமும் ஈட்டியுமாக



இருப்பதைப் பார்த்தால் பல அந்தணர்கள் வெளியே வர மாட்டார்கள். ஆனால் பேச்சில் நிபுணர்கள்.'' அவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

குடந்தையைச் சுற்றியுள்ள ஊர்களுக்கு போய் வருவதாக அவர்கள் வீட்டு இளைஞர் படை கிளம்பியது.

அவன் சிறிது காசு எடுத்துக் கொண்டான். அவர்கள் ஒரு வேளை அன்னச் சத்திரங்களில் சாப்பிட்டார்கள். இன்னொரு வேளை நிறைய பழங்கள் வாங்கினார்கள். இன்னொரு வேளை பால் மட்டுமே பருகினார்கள்.

''புவனபதி, ஓநாய் பயப்படும் ஒரே விஷயம் நெருப்பு. நெருப்பை உண்டாக்க அரணிக் கட்டையோ, சிக்கிக் கல்லோ தேவை. பயணப்படுவோர் தடி வைத்துக் கொள்வது நல்லது. கைத்தடியின் உச்சியில் அரணிக் கட்டை சொருக ஒரு வளையம் இருப்பது நல்லது.

இடுப்பில் ஒரு கந்தையில் நான் சொல்கிற மூலிகைகளை சுருட்டி வைத்துக் கொள்ளுங்கள். அந்த மூலிகை எளிதில் பற்றிக் கொள்ளும் தன்மை உடையது. அந்தத் துணியை அரணிக் கட்டைக்கு அருகே வைத்து பத்து முறை தேய்க்க அரணி சூட்டில் பற்றிக் கொள்ளும். பிறகு சுளுந்து கொளுத்தி ஓநாய்களை விரட்டலாம். ஓநாய்களை விரட்ட குத்திட்டு உட்கார்ந்து கொள்வது நல்லது. குத்திட்டு நகரப் பழகுங்கள்.

இது எரியும் துணி. இவர்கள் எல்லோரும் ஓநாய்கள். இவர்கள் தாக்க எப்படி தடுக்கிறேன் பாருங்கள்.''

புவனபதியின் மைத்துனன் குத்திட்டு உட்கார்ந்தபடியே நகர்ந்தான். அவனை யாரும் தாக்க முடியவில்லை.

அங்கங்கே கொளுத்திக் கொண்டு போங்கள். மரங்களைக் கொளுத்தி புகை போடுங்கள். காட்டெருமைகளும் காண்டா மிருகங்களும் நெருப்புக்கு கலவரப்படும் மிருகங்கள். ஓரே ஒரு காண்டாமிருகம் ஓடி வந்தாலும் ஓநாய் கூட்டம் பயந்து

ஓடிவிடும். காண்டமிருகம் நீங்கள் தாக்கினால் ஒழிய பதிலுக்குத் தாக்காது. தீயைக் கண்டால் காண்டாமிருகம் அணைக்க ஓடிவரும். காட்டெருமை ஓடி வரும். மிக எளிதாக ஓநாயிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

இப்போது குரங்கு... குரங்கைத் தாக்க நல்ல ஆயுதம் எது தெரியுமா கவண்கல். கயிற்றில் தோல் பட்டை கோர்த்து அந்தத் தோல்பட்டையில் மூன்று நான்கு கற்கள் வீச பெரும்பாலான குரங்குகள் ஓடி விடும். கூட்டமாகத் தாக்குவது குறையும். மனிதன் உயரமுள்ள முரட்டுக் குரங்குகள் முன்னேறிவரும். நாம் குரங்கை விட வேகமாக ஓடிவிட வேண்டும். ஏய்... குரங்கு வா இங்கே. ஒருவன் மற்றவர்களைக் கூப்பிட்டான். குரங்குபோல் ஒருவன் முரட்டுத்தனமாக ஓடிவர அவன் காலைத் தட்டிவிட்டு மற்றவனைத் தாக்கினான். குரங்கு கோபமுள்ளது. கோபம் அதிகமாக அதிகமாக குரங்கு நிதானமிழக்கும். நிதானமிழந்த எதையும் இப்படி தாக்கலாம்.''

மைத்துனனைத் தாக்கவே முடியவில்லை. அவன் அமைதியாய் நகர்ந்து யார் தாக்கினாலும் பதிலடி கொடுத்தான்.

பதினைந்து நாட்களில் அவர்கள் புவனபதியைத் தயார் செய்தார்கள்.

திருவெண்காட்டிலிருந்து அவர்கள் குடந்தைக்கு ஓட்டமும் நடையுமாய் இரண்டு நாட்களில் திரும்பினார்கள்.

வீட்டிற்குள் படியேற அவன் மனைவி கூடலுக்கு தயார் அவனுக்கு சொல்லப்பட்டது. அவன் அயர்ந்து தூங்கினான். நன்றாக சாப்பிட்டான். மறுபடி தூங்கினான்.

அவள் பூப்படைந்த இரண்டாவது மாதம் புவனபதிக்கு சாந்திமுகூர்த்தம் நடந்தது. பெண்கள் சூழ்ந்து கொண்டு சூசகமாய் அவனுக்குப் பக்குவம் சொல்லிக் கொடுத்தார்கள்.

''என்னை விட்டு விட்டா நீங்கள் காசிதேசம் போகப் போகிறீர்கள்?''





''உன்னையும் அழைத்துக் கொண்டு போக முடியுமா? காசி தேசம் மிக தொலைவாக அல்லவா இருக்கிறது.''

''என் தமையன்கள் உங்களைப் போகவிட மாட்டார்கள்.''

''இல்லை. அனுமதிப்பார்கள். அவர்களுக்கு இதை சொல்லிவிட்டேன்.''

''எனக்கு பயமாக இருக்கிறது'' அவள் சிணுங்கினாள். அவனை நெருங்கி அணைத்துக் கொண்டாள்.

அவளுக்கும் தந்திரங்கள் சொல்லிக் கொடுத்திருப்பார்கள் போலிருக்கிறது. அவனை அங்கங்கே தொட்டு கிளர்ச்சியுறச் செய்து கொண்டிருந்தாள்.

''என்னுடைய கணக்குப் பிரகாரம் மூன்று வருடங்கள்தான். மிஞ்சினால் ஐந்து வருடம். வெகு நிச்சயமாய் நான் மறுபடியும் உன் மடியில் இருப்பேன்.''

''பயணம் போகாமல் இருந்தாலென்ன....?'' அவள் சிணுங்கினாள்.

''போனால் என்ன மதிப்பு தெரியுமா?''

''உங்கள் தாயார் என்னை எப்படி நடத்துவார்களோ?''

''உனது சிறிய தமையனைக் காவல் வைத்துவிட்டுச் செல்கிறேன்.''

''எங்களுக்கு வருமானத்துக்கு வழி இல்லையே. அதைக் குத்திக் காட்டினால் என்ன செய்வது?''

''நிலம் வாங்கி, தோப்புகள் வாங்கி உன் பெயரில் சாசனம் செய்துவிட்டு போவேன்.''

''அங்கு போய் எவளிடமாவது மயங்கிவிட்டால் என் கதி என்ன?''

அவள் சாதாரணமாகக் கேட்டாள். உத்திரத்தில் பல்லி உச்சுக் கொட்டியது.

அவன் பல்லி சப்தமிட்ட திசையைப் பார்த்தான். அப்படி நடக்கும் என்று அந்த திசை சொல்லியது.

## 12

''உண்மையைச் சொல்லுங்கள். நீங்கள் வடக்கே போவது எதற்காக?''

''காசு சம்பாதிக்க. புகழ் சம்பாதிக்க. அரசனுக்கு நிகரான உயர்வு சம்பாதிக்க நான் காசிக்குப் போக ஆசைப்படுகிறேன், பெண்ணே.''

அவன் கட்டிலில் உட்கார்ந்து கொண்டான். அவள் அழகை விளக்கைத் தூண்டிவிட்டு நிதானமாய் ரசித்தான்.

''எனக்கு வயது இருபது. உனக்கு வயது பதிமூன்று. கால்கட்டு போட்டு விட்டார்கள். நானும் நீயும் இப்போது முதல் விளையாட ஆரம்பித்தால் மத்திம வயதில் இருவருக்குமே எல்லா விளையாட்டும் அலுத்துப் போகும். அலுத்துப் போன வாழ்க்கையில் சண்டைகள் வர வாய்ப்பு உண்டு. பிறகு சண்டைகள்தான் வாழ்வின் பிரதான அங்கமாகிப் போய்விடும். அப்படி வாழ்வதற்கு வாழாமல் போவது நல்லது.''

''ஏன் இவ்வளவு கடுமை?''

''உனக்குப் புரியவில்லையா, ஸகி, நான்கு வருடங்கள் நான் உன்னைப் பிரிந்திருக்கும் போதுதான் என் அருமை உனக்கும், உன் அருமை எனக்கும் புரியும்.''

''பிரிவு பெரிய விஷயமில்லை. எல்லோர் அனுதாபமும் சம்பாதித்து, அழுது, அலட்டி சுகமாகக் கழித்து விடுவேன். என் பயம் வேறு.''

''என்ன பயம்?''

''என் பயத்தைச் சொல்லவும் பயமாய் இருக்கிறது.''

''நான் காசிக்கு போய் திரும்பி உயிரோடு வருவேனா என்று பயப்படுகிறாய் அல்லவா?''



''ஆமாம்.''

''இதற்கான சமதானத்தை நான் உன் தனையன்களிடம் எப்போதோ சொல்லி விட்டேன். உப தளபதிகளாய் பதவி ஏற்பதற்கு முன் நம்முடன் காஞ்சி மாநகரம் வந்து உன்னை அங்கு குடித்தனம் வைத்துவிட்டு நான்கிளம்பியதும் உன்னை அழைத்துக் கொண்டு குடந்தை வந்து விடுவார்கள்.''

''நான் மாட்டேன்.''

''புரியவில்லை ஸகி.''

''குடந்தையில் இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை.''

''ஏன்?''

''என் தமையன்களில் பலர் திருமணமானவர்கள். அவர்களின் மனைவிகள் பெரிய கைகாரிகள். இரவு புருஷன்கள் செய்த லீலைகளைப் பேசிப் பேசி என்னை வெறுப்பேற்று வார்கள். என்னவோ கெட்ட கனா உன்னைப் பற்றி என்று பயமுறுத்துவார்கள்.''

''காஞ்சியில் தங்கி விடுகிறாயா?''

''நானும் வருகிறேனே?''

''காசிக்கா?''

''வந்தால் என்ன...?''

''உன்னால் முடியாது. குடந்தையிலிருந்து பல ஊர்களுக்கு பாதை இருப்பதுபோல் காசிப் பாதை இருக்கிறது என்று நினைக்கிறாயா? இல்லை பல இடங்களில் பாதை இருக்காது. சரளைக் கற்கள், கூரிய முட்கள், விஷப் பூச்சிகள் நிறைந்த வெறும் திடல்தான் அதிகம். பாம்புகளும், ஓநாய்களும் மனிதர்களைக் கண்டு கோபமடையும், குரங்குகளும் எதிர்ப்படும். புலி, சிங்கத்திலிருந்து தப்பிப்பது பெரிய கலை.''

''பயமுறுத்துகிறீர்களே.''

''வேண்டாம். என் பயண வேகம் தடைப்படும். உன்னோடு நடந்தால் காசிக்கும் போக ஒரு வருடம் ஆனாலும் ஆகும்.''

''எனக்கு நல்ல ஏற்பாடு செய்துவிட்டு போகக் கூடாதா?''

''நீயே திட்டமிடு.''

''என் மீது உயிரை வைத்திருக்கிற தம்பிகள் இருவர் உண்டு.''

''ஆமாம். கவனித்திருக்கிறேன்.''

''ஒருவன் உடன் பிறந்தவன். மற்றவன் சிறிய தகப்பனார் மகன்.''

''சொல்.''

''அவர்களையும் காஞ்சிக்கு அழைத்துப் போய் அங்கு ஏதும் கடிகையில் சேர்ந்தால் நல்லதல்லவா.''

''அவர்களுக்கு எந்த வேதத்தில் விருப்பம்?''

''தனுர் வேதம்.''

''யுத்தப் பயிற்சியா?''

''காஞ்சியில் கடிகை உண்டாமே? அகமுடையார்கள் பெரும்பள்ளி நடத்துகிறார்களாமே?''

''ஆமாம்.''

''அவர்கள் படித்ததுபோல் ஆயிற்று. எனக்குத் துணையாகவும் இருப்பார்கள் அல்லவா?''

''செய்யலாம்.''

''சற்று செலவாகும்.''

''உன் தகப்பனார் தரமாட்டாரா?''

''அவர் என் திருமணம் நடத்த ஏகப்பட்ட கடன் வாங்கியிருக்கிறார். இது நிறைவேற்ற அவரால் முடியாது. உங்களால் இயலுமல்லவா?''



''இயலும். ஆனால் என் வீட்டில் என்ன சொல்வார்கள் என்று யோசிக்கிறேன்.''

புவனவதி யோசித்தான். மெல்ல சிரித்தான்.

''உன் தகப்பனாரை எனக்கு ஒரு சீட்டுமுறி எழுதித் தரச் சொல். வருடத்திற்கு நூறு பொன் தர கடன் முறி எழுதித்தரச் சொல்...''

''ஐயோ மாட்டார்.''

''முறியை நீ வைத்துக் கொள்.''

''நான் வைத்துக் கொண்டு என்ன செய்வது?''

''என்னிடம் கடன் வாங்கிப் படித்தது உன் தம்பிகளுக்கு நினைவு இருக்கும். காசியிலிருந்து வந்த பிறகு எனக்குப் பணம் தேவைப்படும். அவர்கள் இன்றைய அரசியல் சூழ்நிலையில் நிச்சயம் நல்ல அதிகாரிகளாய் உயர்ந்து நல்ல செல்வாக்குடன் வளர்வார்கள். அப்போது அவர்கள் உதவி தேவைப்படும்.''

''அடேயப்பா. என்ன புத்தி... எவ்வளவு முன் யோசனை. அதனால் தான் உங்கள் உடம்பு இப்படி அரணிக் கட்டைபோல் சுடுகிறது.'' அவள் தழுவிக் கொண்டாள்.

''என்ன அரணிக்கட்டையா?''

''ஆமாம். நெருப்பு உண்டாக்குவது.''

''நீ பார்த்திருக்கியா?''

''என் தந்தையிடம் நாலைந்து இருக்கின்றன.''

''அதில் சிறந்தது எனக்கு வேண்டுமே.''

''நிச்சயம் தரச் சொல்கிறேன். அரணிக்கட்டையில் நல்லது கிடைப்பது அரிது. சட்டென்று தர மாட்டார்கள். இருக்கிறது என்று கூட சொல்ல மாட்டார்கள். தேய்த்து சருகு பற்றவைத்து அருகிலிருந்து விளக்கு ஏற்றி தீபமாய் நெருப்பு தருவார்களே தவிர அரணிக்கட்டையைத் தர மாட்டார்கள். அகமுடை

யானைத் தந்தாலும் தருவார்கள். அரணிக்கட்டையைத் தர மாட்டார்கள். ஆனால், உங்களுக்கு நிச்சயம் தரப்படும்.''

''அருகே வா. உன்னை கிறங்கடிக்கட்டுமா...''

''ம்ம்... செய்யுங்கள்.''

புவனபதி அவளைத் தொட்டுத் தடவி கிறுகிறுக்க வைத்தான். அவள் பிதற்றியது வெளியே உள்ள பலருக்குக் கேட்டது.

வாழ்க்கை இனிமையாய் நகர்ந்தது. பெரிய லட்சியம் உள்ள எவருக்கும் மரியாதை வேகமாய் வந்து விடுகிறது. அவன் காசிக்குப் போவது பற்றி குடந்தையில், குடந்தையைச் சுற்றியுள்ள கிராமங்களில் செய்தி பரவியது.

ராமாயணத்திலிருந்து ராமர் வந்த வழியைத் தொகுத்து வைத்துப் படம் வரைந்து அவனுக்குப் படித்து ஒருவர் காட்டினார். அவன் அவருக்கு சன்மானம் அளித்தான்.

தாகம் தீர்க்க எந்தெந்த இலைகள் உதவும்? எப்படி எவ்வளவு உண்ண வேண்டும்? என்பது அவனுக்கு வேறொருவரால் சொல்லித்தரப்பட்டது.

தேங்கிய நீரை எப்படி பயன் படுத்தலாம் என்பதும் வேறு ஒருவரிடம் கற்றான்.

''பட்சிகளைக் கவனி புவனபதி. அவை ஜோஸ்யம் சொல்வது மட்டுமில்லை. எதிரே உள்ள வனம் எப்படியிருக்கிறது என்றும் காட்டும்.''

நொள்ளை மடையான் மெல்லப் பறந்தால் வனத்தில் பெரிய ஆபத்தில்லை. கிளிகள் வியூகம் மாற்றி மாற்றிப் பறந்தால் தூசு காற்று வரப் போகிறது என்று அர்த்தம். கழுகு தாழப் பறந்தால் எதிரே ஏதோ வேட்டை முடிந்து விட்டது என்று பொருள். வலியன்கள் எழுந்து எழுந்து அடங்கினால் யானைகள் காண்டா மிருகங்கள் உண்டு.

இப்போது ஆந்தைகளின் பல்வேறு குரல்கள் எழுப்புகிறேன் கவனி. எனக்கு தட்சணை எதுவும் வேண்டாம். நீ கற்றதில் பத்து



வித்தையை எனக்கோ, நான் இறந்துபோனால் என் மகனுக்கோ கற்பித்து விடு.

''புவனபதி, சரளைக் கற்கள் உள்ள பகுதிக்கு போ. அங்கு பலமுறை நடந்து பாதங்களை அழுத்தி நட. பாதம் மட்டுமில்லை. உடல் முழுவதும் வலிவாகும். ஆற்றுமணல் சூட்டில் புறங்கால் புதைய நட. கணுக்கால் வலிவாகும்.

இன்னொன்று புரிந்து கொள் புவனபதி. நீ எங்கேனும் காட்டில் மலம் கழித்து சிறுநீர் கழித்துவிட்டு போவாய். அந்த வாசனை பிடித்து துஷ்ட மிருகங்கள் குறிப்பாய் கரடிகள் உன்னைப் பின் தொடரும். நீ தொட்ட மரத்தை, மண்மேட்டை முகர்ந்தபடி உன்னைக் கண்டுபிடித்து விடும். எனவே, மலம் கழித்தபிறகு கையால் கழுவாதே. ஓடும் ஆற்றில் உட்கார்ந்து கொள். வயிறு சுருக்கி நீரை ஆசனவாய் வழியே உள்ளிழு. பிறகு பீய்ச்சி வெளியே விடு. மறுபடி இழு. பீய்ச்சு. இதனால் குடல் சுத்தமாகும். வாசனையும் தொடராது நீரில் அடித்துப் போய் விடும்.

வயிறு சுருக்கி உள்ளிழுக்கும்போது கோவணம் கட்டிக் கொள். நீரில் உள்ள தூசு தும்புகள் வயிற்றுக்குள் ஆசனவாய் வழியே போகாது தடுக்கப்படும்.

இதுதான் இழுக்கும் முறை.''

இன்னொருவர் சொல்லிக் கொடுத்தார்.

''எனக்கும் தட்சணை வேண்டாம் புவனபதி. காசியிலிருந்து ரேகையுள்ள லிங்கம் வேண்டும். நீ வந்தது தெரிய நான் காஞ்சிக்கு வந்து வாங்கிக் கொள்கிறேன்.''

''மழையில் நனைவது பற்றி தெரிந்து கொள்ள சிலரிடம் போ.'' அவனை வழிகாட்டி அனுப்பினார்கள்.

''காசிக்குப் போகப் போகிறாயா. ஆலங்கட்டி மழை அங்கு உண்டு. பெய்தால் ஓடி ஒளி. நிமிராதே.''

எல்லா நாளும், எல்லா நேரமும் அவன் காசிக்கு பயணப்படுவது பற்றியே யோசித்து கொண்டிருந்தான்.

அதற்காகவே உடல்வருந்த எல்லா வித்தைகளும் கற்றான். மனைவியோடும் மைத்துனனோடும் காஞ்சி மாநகரம் வந்து சேர்ந்தான்.

காஞ்சியிலுள்ள உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் பெரிய விருந்து கொடுத்தான்.

காசிக்குப் போன அந்தணர் வீட்டுக்குப் போய் அவருக்கு தஞ்சாவூர் வெல்லக்கட்டி கொடுத்து வணங்கினான்.

காசிக்கு போக மனைவியிடம் சம்மதம் வாங்கி விட்டதாக சொன்னான்.

''அவளுக்குக் குழந்தை பிறந்த பிறகு போ. அதுவரை கற்ற எல்லா வித்தைகளையும் திரும்பத் திரும்ப செய்து கொண்டிரு. வாரத்தில் இரண்டு நாள் வெய்யிலில் நடக்கப் பழகு. ஒருநாள் நீரில் கிட. உடம்பை வருத்தி எடு. பிராணாயமப் பயிற்சி மூன்று வேளை செய்.''

''திங்கட்கிழமை பட்டினி கிட. செவ்வாய்க்கிழமை மிதமாக சாப்பிடு. புதன் விருந்து உண். மற்ற நாட்களில் சாதாரணமாக இரு. மரத்தில் பாத்திரம் செய்து வைத்துக் கொள். முறுக்கின நீண்ட கயிறை இடுப்பில் சுற்றி தூங்கக் கற்றுக்கொள்.''

''மான்தோலை சட்டையாக அணிந்து கொள்ளப் பழகு.''

காஞ்சியிலும் அவனுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

அவன் மனைவி கர்ப்பமானாள். பிறந்தகம் போனாள்.

ஆண் குழந்தை பிறந்த செய்தி வந்தது. அவன் போய் பார்த்து வந்தான்.

''காசிக்குப் போய் ஐந்து வருடத்தில் வருகிறேன்.'' என்று விடை பெற்றான்.

அவனுக்கு பல பேர் தானம் கொடுத்தார்கள். அவன் தன் காசையும் மனைவியிடம் கொடுத்தான்.



மைத்துனர்களை மனைவி குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி அவர்களுக்குக் கை நிறைய பொற்காசுகள் தானம் வழங்கிவிட்டு காஞ்சிக்குத் திரும்பினான்.

போகும்முன் ஒரு வாரம் ஏகாம்பரேஸ்வரர் கோவிலில் மௌன விரதம் இருந்தான்.

பிரம்மதேய சபை அவனுக்காக மிருத்யுஞ்ஜய ஹோமமும், ஆயுஷ் ஹோமமும், ஆவகந்தி ஹோமமும், நட்சத்திர ஹோமமும், நவக்கிரஹ ஹோமமும் செய்தது.

காசிக்குப் போக நாள் குறிக்கப்பட்டது. நேரம் நிர்ணயிக்கப் பட்டது.

அவன் வீட்டுக் கூடத்து வழியாக பெரியவர்கள் தாங்கி வர வாசலுக்கு வந்தான். தாரை தப்பட்டைகள் முழங்கின.

''ஜெயம்... ஜெயம்'' என்று பிராமணர்கள் முழங்கினார்கள். அவன் தெருவில் இறங்க பெண்கள் குலவையிட்டார்கள். மாடும் கன்றும் பிடித்துக் கொண்டு வந்தார்கள். யானையை துதிக்கை உயர்த்தி பிளிற வைத்தார்கள்.

பெண்கள் நீர்க்குடத்தோடு வந்து அவன் வீட்டு வாசலைப் புழுதியடங்க நீர் தெளித்தார்கள்.

பிராமணர்களில் ஒரு குழுவினர் ருத்தரம் சொல்ல இன்னொரு பக்கம் சாமகானம் பாடப்பட்டது.

வேறொரு பக்கம் ஸ்ரீசுக்தம் சொல்லப்பட்டது.

கோயில் பாடகர்கள் இடைவிடாது சிவன் நாமம் சொன்னார்கள். அவன் எல்லோருக்கும் பொற்காசுகள் தானம் கொடுத்தான்.

மான் தோலுக்கு நடுவே கிழித்து தலைவழியே அணிந்து தோளையும், மார்பையும் அது மூட அதன் மீது ருத்ராட்சம் அணிந்து பஞ்சகச்சம் இறுக்கக் கட்டி இடுப்பில் முறுக்கின மெல்லிய கயிறை முப்பது முறை சுற்றி ஒரு விரல் பருமனுள்ள

நீண்ட கோலை கையிலேந்தி சோற்று மூட்டையும், மரக் கூஜாவையும் தோளில் சார்த்தி ஓலைச் சுவடி சுற்றிய துணி மூட்டை முதுகில் இறுக்க மரத்தாலான பாதரட்சை அணிந்து திருநீறு தணித்து சந்தனக் குங்குமப் பொட்டு வைத்து சவரம் செய்யப்படாத இருபது நாள் தாடி மீசையோடு அவன் வீட்டு வாசலைப் பார்த்து அவன் காசி யாத்திரையின் முதல் பிச்சையாய் அவன் வீடு நோக்கி ''பவதி பிக்ஷாந்தேஹி'' என்று கூவினான்.

''சிவோஹம்... சிவோஹம்'' என்று எல்லோரும் கூவினார்கள். அவன் அம்மா அழுது கொண்டே ஓடி வந்து அவன் கையில் பாலன்னம் இட்டாள்.

உதடு துடிக்க அழுதாள்

''அழக்கூடாது.'' காசிக்கு போய் வந்த அந்தணர் கோபமாய் கட்டளையிட்டார்.

அவன் உண்டதும் கையலம்ப நீர் வார்த்தார்

''பவதி பிக்ஷாந்தேஹி'' அவன் மறுபடி கைக்கூப்பினான்.

''கிம்?'' என்று காசிக்கு போய் வந்த அந்தணர் சடங்காகக் கேட்டார். 'என்ன' என்று அதற்கு அர்த்தம்.

''நான் காசிக்குப் போகிறேன். வழி நடைக்கு எனக்கு ஏதேனும் தானியம் தாருங்கள்'' அவனும் குரல் நடுங்க கேட்டான்.

அவன் அம்மா உள்ளே போய் தயாராய் வைத்திருந்த இரு நாழி அரிசியைக் கொண்டு வந்து அவனுடைய மரப் பாத்திரத்தில் கொட்டினாள். கொட்டிவிட்டு உள்ளே ஓடினாள்.

உள்ளேயிருந்த பெண்கள் அவளைப் பாய்ந்து அணைத்துக் கொண்டார்கள்.

அவன் மரப்பாத்திரத்திலிருந்து ஒரு பிடி அரிசி எடுத்து அந்த வீட்டுத் திண்ணையில் வைத்துவிட்டு ''இந்த அகத்தில் தான்யலட்சுமி தைரியலட்சுமியோடு கூடிய மகாலட்சுமி



30187

நிரந்தரமாய் இருக்கட்டும். இந்த வீடு கோபமில்லாமலும், குழப்பமில்லாமலும் வளரட்டும்.''

''இந்த தேசத்தில் அன்னியர் படையெடுப்பில்லாது இருக்கட்டும். அன்னியரின் குதிரைகள் நடமாடாது இருக்கட்டும். இந்த தேசத்தில் மாதம் மும்மாரி பெய்யட்டும். எங்கும் சுபிட்சம் ததும்பட்டும்'' என்று மங்கலமான வார்த்தைகள் சொல்லிவிட்டு தன் வீட்டை நோக்கி நெடுஞ்சாண்கிடையாக நமஸ்கரித்துவிட்டு உடம்பில் ஒட்டிய மண்ணோடு நடக்கத் துவங்கினான். எக்காளமும் பேரிகையும் முழங்கின.

''எம்புள்ளைக்கு வாக்கரிசி போட்டு அனுப்பறேனேடி. எம்புள்ளை உயிரோட இருக்கும்போதே வாக்கரிசி போட்டு அனுப்பறேனேடி.'' அவன் அம்மா வீட்டில் கதறிய சப்தத்தை அந்த வாத்தியங்கள் அடக்கிவிட்டன.

அவன் ஊர் எல்லையில் நின்று தந்தையை வலம் வந்து நமஸ்கரித்தான். அவன் தகப்பனார் மனம் உடைந்து அழுதார்.

அவன் மைத்துனர்கள் பின் தொடர வடக்கு நோக்கி நகர்ந்தான். தொண்டை நாடு முடியும் இடத்தில் அவன் மைத்துனர்கள் வணங்கி விடை பெற்றார்கள். 'ஜெய விஜயீபவ' என்று குரல் கொடுத்தார்கள்.

புவனபதி என்கிற அந்த அந்தணன் மிகுந்த சந்தோஷத்தோடு கோலூன்றி கை வீசியபடி வடக்கு நோக்கி நடந்தான்.

## 13

இன்னும் ஒருநாள் பயணத்திற்கு பேசுவதற்கு மனிதர்கள் எதிர்ப்படமாட்டார்கள். ஆரம்பத்தில் இந்த மௌனம்தான் மிகப் பெரிய சித்திரவதை. ஒவ்வொரு முறை மௌனம்

ஆரம்பிக்கும் போதும் மனசுக்குள் பேச்சு போட்டியிடும். யார் எதிர்பட்டாலும், மனம் பேசுவதற்கு தாவும். இல்லையெனில் தன்னைப் பிரித்துக் கொண்டு உரக்கக் கத்தும்.

''என்னடி... இப்படி பூத்திருக்கே?'' என்று உரக்க மரத்தைப் பார்த்து வியக்கும்.

ஆனால் மௌனம் மனசின் அமைதிக்கு வழிகாட்டி. மனம் அமைதியாவதற்கு முன்பு வாய் வேண்டும் மட்டும் பேசித் தீர்த்துவிடும். அதன் உளறலைக் கவனித்துச் சீ நாயே 'நில்' என்று அதட்ட வேண்டும்.

இல்லையெனில் உரக்கப் பேசுவது பழக்கமாகிவிடும். தனக்குத்தானே இடைவிடாது உரக்கப் பேசுபவர் எந்த காரியத்திலும் ஜெயிக்க முடியாது.

புவனபதி தன் மௌனத்தில் தன்னைக் கவனித்தபடியே காஞ்சி மாநகரத்தைத் தாண்டினான். வடக்கிலிருந்து ஏரிகள் தாண்டி கிழக்கு நோக்கி நகர்ந்தான். மூன்றுநாள் பயணத்தில் மயிலை, திருவல்லிக்கேணி கிராமம் அடைந்தான்.

கடற்கரையை ஒட்டி மிக பிரும்மாண்டமாக திருமயிலைக் கோயில் இருந்தது. கோயிலைச் சுற்றி பெரிய மதில் இருந்தது. மதில் மீது கடல் மோதா வண்ணம் பாறைகள் போடப்பட்டிருந் தன. பாறைகளில் அலை தெறித்து கடல் துமி கோபுரம் உச்சிவரை தெறித்தது.

அந்த இடமே பனி படர்ந்த இடமாய் காட்சியளித்தது.

எவ்வளவு கோடையாக இருந்தாலும் திருமயிலைக் கபாலீஸ்வரம் குளுகுளுவென்றிருக்குமாம்.

வணிகர் வாழும் இடமாதலாலும் கடற்காற்றால் குளிரூட்டப் பட்டதாலும் மரக்கலங்கள் வந்து நின்று பொருள் வாங்கி பொருள் விற்றுப் போவதாலும் கபாலீஸ்வரம் எந்நேரமும் கலகலப்பாக இருந்தது.



இந்தக் கோவில் காபாலிகள் வழிபட்ட கோவில், காபாலிகள் இயற்கையோடு இயைந்தவர்கள். தனிமையில் நெடுநேரம் இருப்பவர்கள். தனிமையில் இருப்பதற்காகவே எலும்புமாலை, புலித்தோல் என்று விகாரமாக அலங்காரம் செய்து கொண்டிருப் பவர்கள். காபாலிகள் பூஜை விநோதமானது. அவர்கள் வேதத்தை ஹோமத்தை மதிப்பதில்லை. ஆகம விதிகளை ஏற்பதில்லை.

அவர்கள் யந்திர, தந்திர உபாசகர்கள். அழகை, அலங் காரங்களை வெறுப்பவர்கள். தகட்டில் இயந்திர சக்கரங்கள் எழுதி குறிப்பாய் நமசிவாய மந்திரம் எழுதி சிவலிங்கத்தின் முன்னே வைத்து கோடிக் கணக்கில் இடைவிடாது மந்திர ஜெபம் செய்பவர்கள். தாடியும் சடையும் வளர்ந்து, கிடைத்தபோது வயிறு நிறைய உண்டு இல்லாத போது பட்டினி கிடந்து இடையில் கோவணம் மட்டும் தரித்து புலித்தோலில் படுத்து தூங்கி, பெண்ணின் தலைமுடியை பூணூலாக அணிந்து பெண் என்பவள் வெறும் முடிக்கற்றை என்று மனசுக்குள் நிறுத்தி பெண்போகம் முற்றிலும் விலக்கி, ஆண்குறி விறைக்காமல் இருக்க அதற்கு பூண் போட்டு அடக்கிவைத்து கடுங்குளிரில் கடலாடி, உடல் முழுவதும் சாம்பல் பூசி, கையில் சூலம் ஏந்தி வெட்ட வெளியைப் பார்த்து மந்திரம் சொல்வார்கள். கோயிலுக்குள் நுழைந்து மந்திரம் சொல்வார்கள்.

வெட்டவெளியில் நின்று மந்திரம் சொல்வார்கள். நின்று, உட்கார்ந்து, படுத்து மந்திரம் சொல்வார்கள். மனம் அலைந்தால் தங்களைத் தாங்களே சவுக்கால் அடித்துக் கொள்வார்கள்.

பசிக்கு, ருசிக்கு அலைந்தால் வேறு விதமாய் தண்டித்துக் கொள்வார்கள்.

''ருசியாய் சோறு வேண்டுமா. போ. எவனாவது எங்கேயாவது சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். போய் பிடுங்கித்தின்னு.''

செயல்படுத்துவார்கள். ஊர் மடக்கி அவமானப்படுத்தும். தாங்கிக் கொள்வார்கள். 'சோற்றுக்கு அலைந்தாயே... எப்படி அவமானப்படுத்தப்பட்டாய், பார்த்தாயா... வந்தால் உண் வராவிட்டால் மண்.'

உணவை வெறுப்பதற்காக, ருசியை அறுப்பதற்காகக் கிடைத்த உணவைப் பிணத்தின் மீது வைத்து உண்பார்கள்.

அடடா... எத்தனை சோறு உண்ட மனிதன் இவன். இப்போது பிணமாகக் கிடக்கிறான். நீயும் உணவு உண். பிணமாகு. சாப்பிட்டு சாப்பிட்டுச் சாவு. சாகத்தானே சாப்பாடு. பிணத்தின் மீது சோறு வைத்து வெறித்துப் பார்ப்பார்கள். 'உயிர்வாழ ஒரு பிடி அன்னம் போதும். நடமாட இரு பிடி அன்னம் போதும். உறவாட மூன்று பிடி சாப்பாடு போதும். நான்காவது பிடி சாப்பாடு நோய்' என்று உரக்கக் கூவுவார்கள்.

'நாய் உண்ணும், நரி உண்ணும், பேய் உண்ணும் பிணந் தின்னிக் கழுகு உண்ணும் உடம்பை நீ உண்டு வளர்' என்று உரக்கக் கத்துவார்கள். ஜனங்களிடமிருந்து விலகி இருப்பார் கள். ஜனங்கள் அவர்களிடமிருந்து விலகி இருப்பார்கள்.

கடவுளைத் தேடும் முயற்சியில் காபாலிகம் ஒரு முரட்டு வழி. தன் உடம்பின் மீது கோபம் கொண்டு கடவுளைக் காதலிக்கும் செயல்.

அடித்து வறுத்தினால் ஒழிய இந்த உடம்புக்கு திமிர் அடங்காது. கடுங்கட்டுப்பாடுகள் இல்லாமற் போனால் புத்தி பொறுமையாய் இராது என்கிற எண்ணம் கொண்டவர்கள்.

கடல் நோக்கி பூமி சென்ற இடத்தில் கோயில் கட்டி அவர்கள் வாழ்ந்தார்கள். 'இடைவிடாத மந்திர ஜபத்தால் உடம்பு சூடாகும். இந்தக் குளுமை உதவும்' என்றார்கள்.

அதையும் தவிர, நீலக்கடல், நெஞ்சு செலுத்தி நிற்க ஒரு ரம்மியமான வழி. வானமும் கடலும் இணையும் எல்லையைப் பார்த்திருந்தால் புத்தி பேசாதிருக்கும். ஆனால், காலப்



போக்கில் மயிலாபுரி காபாலிகர்கள் கயிலாய மலைக்கு நகர்ந்து விட்டார்கள். காபாலிகளுக்கு கயிலாயம் தான் முக்கியமான சிவக்ஷேத்திரம்.

காபாலிகர்கள் போன பின்பு திருமயிலை கபாலீஸ்வரம் வணிகர்கள் வசமாகியது. கோட்டையும் கோபுரங்களும கலங்கரை விளக்கமாகின. மரக்கலங்கள் நெருங்கி வந்தன திருமயிலை துறைமுகமாகியது. மரக்கலங்கள் தொலைவே நிற்க அடை அடையாய் சரக்குகள் உள்ளே வந்தன. செழுங்கழு நீர் ஓடையொன்று மயிலையை செழிப்பாக்கியது. நெல் வயல்களும் நீர் நிலைகளும் அதிகமிருந்த மயிலையை வணிக தனவந்தர்கள் மேலும் சிறப்பாக்கினார்கள்.

திருமயிலைக் கோயிலைச் சுற்றி அவர்கள்தான் கோட்டை கட்டினார்கள். பெரிய மண்டபங்கள் எழுப்பினார்கள். காபாலிக பூஜை தவிர்த்து, ஆகமவிதிக்கு மாற்றி கற்பகாம்பாளை உடன் உறையச் செய்தார்கள்.

ஊரிலிருந்து நீண்ட பாதை கோயிலுக்கு போயிற்று. ஊரில் பெரிய மாடவீதிகள் இருந்தன. மாடவீதியில் வணிகர்கள் இருந்தனர். கோயிலுக்கு போகும் பாதையில் தேவரடியார்கள் குடியிருந்தார்கள். அவர்கள் வாலிபர்களை அழைத்துப் போய் கடற்கரையில் உலாவினார்கள். சிறிய கூடாரம் அடித்து தங்கினார்கள்.

ஆடலும், பாடலும் தினந்தோறும் நடைபெற்றன. பங்குனிப் பெருவிழா மிக ஆரவாரமாக வருடா வருடம் நடைபெற்றது.

புவனபதி அந்தக் கடற்கரை கோயிலில் மூன்று நாட்கள் தங்கினான். தொடர்ந்து வடக்கு நோக்கி போனான். திருவொற்றியூர் தாண்டியதும் மிகப் பெரிய வனப்பிரதேசம் ஆரம்பித்தது.

இனிமேல் மாதக் கணக்கில் மனிதர்களைப் பார்க்க முடியாது. உண்மையான பயணம் இனிமேல்தான் ஆரம்பம்.

அவன் காடுகள் வழியே நடக்கும்போது ஒரு வேடர் குடியிருப்பைத் தாண்டினான். வேடர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவனைக் கூடவே வரச் சொன்னார்கள். ஓட முடியுமா என்று ஜாடையில் கேட்டார்கள். அவன் ஓடிவர சுற்றி வேடுவ இளைஞர்கள் அவனோடு ஓடி வந்தார்கள். வேண்டுமென்றே வேகத்தை அதிகப்படுத்தினார்கள்.

அவன் பிராமணன் என்பதை பொம்மன், பொம்மன் என்று சிரித்தபடி கேலியாய்ச் சொன்னார்கள். அவன் அவர்களைக் காட்டிலும் வேகமாய் ஓடினான்.

அவர்கள் கனத்த செருப்புகளோடு பாறைகளில் ஏற, புவனபதி வெறுங்காலோடு பாறையில் துள்ளித் துள்ளி ஏறினான். அவர்கள் வேட்டை நாய்களை உசுப்பிவிட புவனபதி அவைகள் முகத்துக்கு நேரே கையை வேகமாக ஆட்டி தரையில் அடித்தான். நாய் அங்கேயே உட்கார்ந்து கொண்டது. அவர்கள் திடுக்கிட்டார்கள்.

அந்த நாய்க்கு சொந்தக்கார இளைஞன் கோபப்பட்டான் ஓடி வந்து புவனபதியை மடக்குவது போல் நிறுத்திக் கொண்டான். சமாதானப்படுத்தியவர்களைச் சுள்ளென்று அடித்தான் அவனுக்கு எல்லோரும் அஞ்சினார்கள்.

புவனபதி மூட்டையை இறக்கி வைத்தான். மூங்கில் கழியை நீளமாய் தடவிக் கொடுத்து காற்றில் சப்தமெழ சுழற்றிக் காட்டினான். அந்த வேடுவ இளைஞன் கத்தியை உயர்த்தி புவனபதியைத் தாக்கவர சட்டென்று புரட்டி கையில் அடித்தான். முகம், முதுகு எல்லாவற்றிலும் அடித்தான்.

அந்த வேடுவ இளைஞன் வேகமாய் கத்த மூன்று நான்கு பேர்கள் வாள் உருவினார்கள். மற்றவர்கள் அவர்களை சமாதானப்படுத்தினார்கள்.

மலை உச்சியிலிருந்து ஒரு வேடுவக்கிழவன் ஓடிவந்தான். உரத்த குரலில் இளைஞர்களைக் கடிந்து கொண்டான். புவனபதியிடம் கைகூப்பி மன்னிக்கச் சொன்னான்.



மலை உச்சியில் ஒரு திறந்த வெளி இருந்தது. அங்கு கோயில் இருந்தது. கோயிலுக்குள் சிவலிங்கம் இருந்தது. சிவலிங்கத்துக்கருகே வில் அம்புறாத்துணி குத்தீட்டி, நீண்ட உடைவாள் எல்லாம் வைக்கப்பட்டிருந்தன.

சிவலிங்கம் பார்த்து புவனபதி வணங்கினான். அந்த இடத்தில் அவன் உடம்பு சில்லிட்டது. மனசு அதிர்ந்தது.

அந்த வேடத்தலைவன் புவனபதியை ஒரு குடிலுக்குக் கூட்டிக் கொண்டு போனான். அந்தக் குடிலில் ஒரு அந்தணர் படுத்துக் கொண்டிருந்தார். அவனைப் பார்த்து எழுந்து உட்கார்ந்து கைகூப்பினார். மிக மெலிந்த தேகத்தோடு இருந்தார். கண்களில் மட்டும் உயிர் ஒட்டிக் கொண்டிருந்தத.

உணவைக் குறைத்து குறைத்து பிராணத்தியாகம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது சொல்லாமலேயே புரிந்தது.

யோகம் பயின்றவர்களுக்கு மரணம் எளிதில் வராது. எத்தனை வயதானாலும் உடம்பு உறுதியோடு இருக்கும். ஆனால் அவர்கள் மரணமடைய விரும்புவார்கள். மரணமடைவதற்காகவே உபவாசம் கையாள்வார்கள். பிறகு மூச்சை நிறுத்தி வலுக்கட்டாயமாய் உயிரை வெளியேற்றுவார்கள்

அப்படி வெளியேறிய பிறகு உயிருக்கு உடலாசை வந்து விடக் கூடாது. அப்படி வந்தால் உயிர் மோட்சத்துக்கு பயணப்படாது. வைதரண்ய நதி என்கிற வெந்நீர் ஆற்றைத் தாண்டாது.

எனவே உயிர் பிரிந்ததும் பிரிந்ததை உறுதி செய்து கொண்டு, உடனே தகனம் செய்து விட வேண்டும். உயிர் இருக்கும்போதே தகனம் செய்தால் அது கொலைக் குற்றம்.

தகனத்தின்போதும் மிச்சம் மீதி இல்லாமல் சுத்தமாய் பொசுக்கிவிட வேண்டும். பொசுக்கியதை அடையாளமில்லாமல் ஆற்றில் கரைத்துவிட வேண்டும்.

தன்னுடைய எலும்பு, தன்னுடைய சதை என்று அது தேடிப்பார்த்து விட்டு அந்த உயிர் பயணப்பட்டு விடும். எல்லா

உடன்பழக்கங்களையும் அறுத்து, தன் சூட்சும சரீரத்தோடு வேறு திசை போகும்.

அந்த பிராமணர் மெல்லிய குரலில், ''இங்கு ஒரு அதிசயம் நடந்தது'' என்று ஆரம்பித்தார்.

திண்ணன் என்கிற ஒரு வேடன் கண்ணப்பனான கதை சொன்னார்.

தான் உலகில் மிக ஆசாரமான பிராமணன் நினைத்துக் கொண்டிருக்க, தனக்கெதிரே திண்ணன் வாயில் முகர்ந்து வந்த நீரால் அபிஷேகித்து, காட்டுப் பூக்களால் சிவலிங்கத்தை அலங்கரித்து, மாமிசத் துண்டுகளை சிவனுக்கு நைவேத்தியம் செய்து பூஜை செய்ததை விவரித்துச் சொன்னார்.

சிவனின் ஒரு கண்ணில் ரத்தம் வழிந்தது. திண்ணன் தன் கண்ணைப் பெயர்த்து அப்பினான். மறு கண்ணில் ரத்தம் வந்தது. அடையாளத்துக்கு செருப்புக்காலை சிவன் கண்ணில் வைத்து இன்னொரு கண்ணையும் திண்ணன் நோண்டினான்.

சிவலிங்கத்திலிருந்து கை நீண்டு திண்ணன் செயலை நிறுத்தியது.

''பொறு, கண்ணப்பா'' என்று சிவலிங்கம் பேசியது. எனக்கும், கண்ணப்பன் என்கிற திண்ணனுக்கும் சிவன் காட்சி தந்தார். வேடனுக்கு மோட்சம் தந்தார்.

ஆசார சீலனான எனக்கு மோட்சம் கிடைக்கவில்லை.

கண்ணப்பன் உதவியால் சிவதரிசனம் கிடைத்தது.

நான் இன்னொரு பிறவி எடுக்க வேண்டும். அதற்கு இந்த உடலைத் துறக்க வேண்டும். நாளை விடியலில் நான் மரணமடைந்து விடுவேன். உச்சிக்குள் என்னை தகனம் செய்துவிடு.

காசிக்கு பயணம் செய்கிற ஒருவன் இப்படி நடந்து போகிறான் என்று என் கனவில் சொல்லப்பட்டது. தயவு செய்து என் அஸ்தியை, கங்கைக்கு எடுத்துப் போய் கரைத்துவிடு.



அதற்குப் பிரதியாக என் ஒரு மாத சிவமந்திரத்தை உனக்கு தானமாகத் தருகிறேன். நீ விரும்பும் எல்லா போக பாக்கியமும் உனக்குக் கிடைக்கும். இந்த ஜென்மத்தில் உனக்கு எதிரி என்று எவருமில்லை.

தவறுகள் செய்யாத வாழ்க்கை வாழ்ந்தால் உனக்கு அடுத்து ஜென்மமுமில்லை. உனக்கு ஜென்மமில்லாமல் செய்ய என்னால் முடியாது.

அன்புதான் மிகப் பெரிய பூஜை. அன்பில்லாது செய்கிற எந்த விஷயமும் வீண். காசிக்குப் பயணப்படுவது அகங்காரத்தை அழிக்கத்தான். உலகத்தின் முன்பு நாம் ஒரு சிறு தூசு என்று தெரிந்து கொள்ளத்தான்.

நீ காஞ்சி மாநகரம் திரும்பியதும் கண்ணப்பன் சரிதத்தை எல்லோருக்கும் சொல்.

''நான் காசிக்கு போய் காஞ்சிக்கு திரும்புவேனா'' புவனபதி ஆவலாய் கேட்டான்.

அந்த பிராமணர் கண்கள் மூடி சிறிது நேரம் மௌனமாய் இருந்தார்.

''நிச்சயம் திரும்புவாய்'' பதில் சொன்னார்.

அவருக்கு மூச்சு இறைத்தது. புவனபதி சந்தோஷமாய் எழுந்தான். குடிலைவிட்டு எழுந்தான். அதன் பிறகு அவர் பேசியது அவன் காதுகளில் விழவில்லை.

## 14

அந்த அந்தணக் கிழவன் இறை தரிசனம் பெற்று உறைந்து போய்விட்டார்.

வேடனாகிய கண்ணப்பனுக்கு உடம்போடே மோட்சம் கிடைத்து விட்டது என்று பயந்து விட்டார். எல்லாம் தெரிந்த தனக்குக் கிடைக்க வில்லையே என்று நடுங்கி விட்டார்.

வேடனுக்கு காட்சி கொடுத்த கடவுளை இவர் பார்த்ததும் விட்டு விட்டார். மறுபடி மலை இறங்காமல் கடவுள் நின்ற இடத்திலேயே குடிசை போட்டு படுத்துவிட்டார். வேடர் கொடுத்த பழங்களிலும் காய்களிலும் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தார்.

நானாக இருந்திருந்தால் இதை வேறு விதமாக நடத்தியிருப்பேன். மலையிறங்கிப் போய் அருகே உள்ள குறுநில மன்னனை அழைத்திருப்பேன். அந்தணர்களைக் கூட்டியிருப்பேன். ஆயிரம் பேரோடு வந்து இந்த இடத்தை ஆக்கிரமித்திருப்பேன். வேடன் கண்ணப்பனுக்கு என்னால் இறை தரிசனம் கிடைத்தது என்று சொல்லியிருப்பேன்.

வாழ்க்கை என்பது இறைவனைத் தேடித்தான். ஆனால், இறைவன் தெரிந்த பிறகு வாழ்க்கையை முடித்துக் கொள்ள வேண்டும் என்று அவசியமில்லை. இன்னும் சந்தோஷமாக வாழ வேண்டும்.

இந்த அந்தணக் கிழவன் ஏன் நடுங்கிவிட்டான் என்று தெரியவில்லை.

வேடனுக்குக் கிடைத்தது எனக்கு ஏன் கிடைக்கவில்லை என்று பொறாமை வந்ததா. அந்தப் பொறாமையைப் போட்டியாக்கியிருக்க வேண்டும். வெற்றியை நோக்கி ஓடியிருக்க வேண்டும். அந்த ஓடலுக்கு பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

இந்தக் கிழம் திகைத்து விட்டது. இந்தத் திகைப்பு தவறு. அபத்தம். வலுவின்மை. இங்குதான் புவனபதி மாறுபாடு அடைகிறான்.

காசிக்கா... நடந்து போவதா... செத்துப் போவாய் என்றதும் சூடாகிறான். போய்த்தான் தீருவேன் என்று



கோபமாகிறான். கடும் பயிற்சி செய்கிறான். அதே சிந்தனையாக வாழ்கிறான். வெற்றிபெறாது உலக வாழ்க்கை வாழ்ந்து என்ன பயன்? வேகமில்லாத வாழ்க்கை வீண். சுறுசுறுப்பாய் செயல்பட்டதால்தான் காசு கிடைத்தது. காசு கிடைத்ததால்தான் பெரிய மனிதர்களின் தொடர்பு கிடைத்தது. பெரிய மனிதர்களின் தொடர்பு கிடைத்ததால்தான் அழகான மனைவி கிடைத்தாள். கம்பீரமான உறவுகள் கிடைத்தன. அத்தனை உறவுகளும் நான் காசிக்கு போவதைப் பற்றி பெருமிதமாய் நினைக்கின்றன.

'என் தங்கை அகத்துக்காரன் புவனபதி என்கிற காஞ்சிபுரத்து இளைஞன் காசிக்குப் போயிருக்கிறான். சாக்தம் படிக்க வேண்டுமென்று பிடிவாதமாய் இருக்கிறான். மந்திர தந்திர வித்தை பயிற்சி பெற ஹிமாலயம் நாடி போயிருக்கிறான்' என்று பெருமை பொங்கச் சொல்வார்கள்.

'இவள்தான் உன் தங்கையா...' கேட்பவர் வியப்பார்கள். 'உன் புருஷன்தான் காசிக்கு போயிருக்கிறானா. நீ தீர்க்க சுமங்கலியாய் இருக்க வேண்டும் தாயே...' கை எடுத்து கும்பிடுவார்கள். மனைவிக்கு மிகப் பெருமையாக இருக்கும்.

அவள் தஞ்சாவூர்க்காரி. நாடகம் போடத் தெரிந்தவள். நடிப்பாகவே பேசவும் பழகவும் முயற்சி செய்யக் கூடியவள்.

மனசு ஏனோ கிலேசமாகவே இருக்கிறது என்று மிரட்சி காட்டுவாள். அடாடா... சிறு குழந்தை புருஷனை விட்டுப் பிரிந்ததில் என்ன வேதனைப்படுகிறாள் பார் என்று ஊர் பரிதாபப்படும். உள்ளங்கையில் தாங்கும். ஆற்றிலிருந்து வீடு வரைக்கும் நீர் கொண்டு வர முடியவில்லை. அவரில்லாத மனவேதனையில் தலை சுழல்கிறது என்று அலட்ட ஊர் அவளுக்காக நீர் சுமந்து வரும். விசிறி விடும். கால் பிடிக்கும். உள்ளுக்குள் புவனபதியைப் பற்றி அவளுக்கு பிரேமை படரும். அவன் காசிக்குப் போய் ஊர் திரும்பியதும் கதை கதையாய் சொல்லப்படும்.

காசிக்கு போவதே இவ்வளவு பெருமையாக இருக்க, கடவுளைக் கண்டது எவ்வளவு அருமையான விஷயம். இந்த வேடுவன் கண்ணில் விரல் கொடுத்து ஆட்டியிருக்க வேண்டாமா.

இன்னொரு அந்தணனை விரட்டும் படி வைக்கலாமா. அந்தணர்களென்றால் அலறச் செய்ய வேண்டாமா. வேட இளைஞர்களின்இறுமாப்பைக் குலைத்துப் போட்டு அந்தணர்களைக் கண்டால் ஓடி ஒளியும்படி செய்திருக்க வேண்டாமா. என்ன தைரியமிருந்தால் இந்த வேடுவப் பையன் என்னை எதிர்க்கத் துணிவான்?

இந்தக் கிழவரை தகனம் செய்து விட்டுப் போவதற்கு முன் அந்தவேடுவ இளைஞனுக்கு சூடு கொடுத்துவிட்டு போக வேண்டும். அந்தணனைப் போரிலும் ஜெயிக்க முடியாது என்று பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும். புவனபதி வேகமாக யோசித்தான். சுற்றியுள்ள இடங்களை விரைவாகப் பார்த்தான்.

குடிசையைச் சுற்றி முள்வேலி போட்டிருநதது. அடர்த்தியாய் இரண்டு கட்டு முற்கள் குடிசையை சுற்றி அடுக்கப் பட்டிருந்தன. 'ஏன் இவ்வளவு பாதுகாப்பு' புவனபதி கேட்டான்.

'ஓநாய்கள்' என்று பதில் வந்தது.

அவர்கள் பாடம் செய்த ஓநாய்களின் தலைகளைக் கொண்டுவந்து காட்டினார்கள்.

'அடே... மிக அழகாக இருக்கிறதே' என்று புவனபதி பாராட்டினான்.

'நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்' என்று கொடுத்து விட்டார்கள்.

'நன்றி' என்று அருகே வைத்துக் கொண்டான். சுற்றி நடந்தான். தொலைவில் மான்கள் இருந்தன. அவை கடம்ப மான்கள்.

கடம்பமானின் மாமிசம் ருசியானவை என்று,வீரர்கள் சொல்வார்கள். அந்தமான் ஓடாது. முட்டும். கடிக்க வரும்



புவனபதி மாலை மயங்கட்டும் என்று காத்திருந்தான். அங்கங்கே மேய்ந்த கடம்ப மான்கள் மலையின் ஒரு சரிவில் ஒன்றாகி நின்றன.

இருட்டத் துவங்கியது. மலையில் உட்கார்ந்து பார்க்கும் போது கடைசி சூரிய வெளிச்சமும் மறைந்து இருள் சூழ்ந்து கொண்டதைக் கவனிக்க முடிந்தது. நட்சத்திரங்கள் மிகப் பிரகாசமாகத் தெரிந்தன. பிறைநிலவு மேற்கே தோன்றி மறைந்தது. ஓநாய்களின் ஊளைகள் கேட்க ஆரம்பித்தன. சிவலிங்கத்துக்கு அருகே நெருப்பு கொளுத்தப்பட்டது. ஒரு சிறிய மரத்தின் மீது ஏறி ஓநாய்கள் ஊளையிடும் திக்கை புவனபதி கவனமாய் பார்த்தான். ஓநாய்கள் கடம்பமான் கூட்டத்தைக் கலைக்க முயற்சித்தன. கடம்ப மான்கள் மண் கிளறி தூசு அடித்தும் பின்கால்களால் எட்டி உதைத்தும் ஓநாய்களை விரட்டிக் கொண்டிருந்தன. ஒரு வேடனின் ஈட்டியை எடுத்து ஒரு ஆண் கடம்பமானை புவனபதி குத்திக் கொன்றான். அதே ஈட்டியால் ஓநாய் தலையை எடுத்து துடித்துக் கொண்டிருந்த கடம்பமானின் ரத்தத்தில் நனைத்து கால் அகற்றி கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த வேடன் மகனின் கட்டிலுக்கருகே வைத்தான்.

ஓநாய்கள் துடிக்கின்ற கடம்பமானைக் குதறித் தின்றன. ரத்த சூடு வழிய இரண்டு ஓநாய்கள் திரும்பின. தொலைவிலிருந்து கட்டிலுக்குக் கீழே உள்ள ஓநாய் தலையைப் பார்த்து மிரண்டன. ஓடி வந்து முகர்ந்து விட்டு ஒதுங்கிக் கொண்டன. மற்ற ஓநாய்களிடம் போய் நின்றன.

உண்டு முடித்த ஓநாய் கூட்டம் வேடர்கள் துங்குமிடத்தை சுற்றிக் கொண்டன. புவனபதி குடிசை வாசலில் உட்கார்ந்து கொண்டான். முள்கட்டால் வரும்போதும் வழியே அடைத்தான். அவனை நோக்கி ஒரு ஓநாய்கூட வராது. ஓநாய்களால் முள் தாண்ட முடியாது. அந்தணர்கள் இருக்குமிடத்தை நோக்கி

வேடுவர்கள் வரமாட்டார்கள். என்ன ஆபத்து வந்தாலும் குடிசைக்குள் புக மாட்டார்கள்.

வந்து திரும்பின ஓநாய்கள், கூட்டத்தில் ஏதோ முனக கடம்ப மானை விட்டு அந்தக் கூட்டம் வேடர்களை நோக்கி திரும்பியது. பகலெல்லாம் ஓடுவதால் இரவில் வேடர்கள் உறங்கு முன் கள் குடிப்பார்கள். அப்படி கள் குடித்தவர்கள் உடனே எழுந்திருப்பது கடினம். எழுந்தாலும் திசையறியாது புத்தி தவிக்கும்.

புதரின் சலசலப்பு கேட்டு இரண்டு மூன்று பேர் எழுந்து குரல் கொடுத்தார்கள். மற்றவர்கள் தடுமாறி எழுந்தார்கள். நெருப்பு எடுத்துக் கொண்டு நாலாபக்கமும் வீசினார்கள். ஓநாய் ஓநாய் என்று கூவினார்கள்.

அந்த வேடர் இளைஞன் சட்டென்று சுதாரித்துக் கொண்டு அலைந்தான். புவனபதி அவனை ஆத்திரத்தோடு பார்த்தான். என்ன துணிச்சல் இருந்தால் என் முன்பு கத்தியைக் காட்டுவாய். உள்ளங்கை அகலமுள்ள உறுதியான கற்களால் குறிபார்த்து அவனை அடித்தான்.

வேடர் இளைஞன் கை, எரியும் விறகை நழுவவிட்டது. அவன் மீது ஓநாய்கள் பாய்ந்தன. அவன் உதவி கேட்டு கத்தியபோது பல வேடர்கள் அவனை நோக்கி ஓடி வந்தார்கள். புவனபதி மண் எடுத்து உதற அவர்கள் முகம் பொத்திக் கொண்டார்கள் அவர்கள் மீதும் ஓநாய் பாய்ந்தது. கடித்து குதறியது. நாலாபக்கமும் சூழ்ந்து மாற்றி மாற்றி தாக்கியது.

அந்த மலை உச்சிக்கு ஓநாய்கள் வந்து கொண்டேயிருந்தன, நூற்றுக் கணக்கில். அந்தக் கிழம் எழுந்து வந்தது.

''என்ன... என்ன'' என்று கேட்டது ''ஓநாய்களா... ஓநாய்களா '' என்று குழறியது.

மறுபடி உள்ளே போய் எரிந்து கொண்டிருக்கும் சிறிய அகல் விளக்கை உயரத் தூக்கி குடிசைக்கு தீ வைத்தது



குடிசையில் வேகமாய் தீ பிடிக்க ஓநாய்கள் மிரண்டு நகர்ந்தன. வேடர்கள் அவைகளை அடித்தார்கள். ஒரு காற்று குப்பென்று மோத குடிசை பெரிதாய் கொழுந்துவிட்டு எரிந்தது.

புவனபதி திகைத்தான். அந்தக் கிழவர் கோலூன்றி வந்து செடி கட்டைக் குத்தி அப்புறப்படுத்தினார். 'வெளியே போ...' என்று புவனபதியைப் பார்த்து கூச்சலிட்டார். எரியும் குடிசைக்குள் போய் கதவு சார்த்திக் கொண்டார்.

ஓநாய்கள் வேகமாக ஓடின. மலைச் சரிவில் இறங்கி மறைந்தன. வேடர்கள் குடிசையைப் பார்த்த பொம்மன் பொம்மன் என்று அலறினார்கள். மலைக்குக் கீழே உள்ள அவர்கள் கிராமத்திலிருந்து ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாய் மேலே ஓடிவந்தார்கள்.

அந்த வேடுவ இளைஞனை ஓநாய்கள் குதறியிருந்தன. அவன் இடது பக்க முகம் முழுவதும் கடித்து குதறப்பட்டிருந்தது. மதுகாடியை இலைகளில் நனைத்து காயத்தில் அப்ப அவன் வலியில் அலறினான்.

குடிசை அப்படியே எரிந்து உட்கார்ந்தது. மூங்கில்கள் வெடித்து சிதறின. புகை பரவிற்று. அந்த வேடர் குலம் புலம்பியபடியே விழித்திருந்தது.

புவனபதி திகைப்போட எரிந்து அடங்கிய குடிசையைப் பார்த்தான்.

'எங்களைக் காப்பாற்ற உங்களை பலியிணிட்டுக் கொண்டீர்களா பொம்மன்...' வேடர் தலைவன் கை விரித்து அழுதான்.

மெல்ல விடிந்தது. குடிசையின் ஒரு பக்க மண் சுவரில் அந்தக் கிழவர் எலும்புக் கூடாய் சரிந்து கிடந்தார். வேடர்கள் அதைப் பார்த்துவிட்டு அழுதார்கள். மற்றவர்களுக்கு செய்தி அனுப்ப வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள்.

புவனபதி தான் அவசரமாகப்போக வேண்டுமென்று விடை பெற்றான். அந்தக் கிழவர் வெளியே போ என்று சொன்னதே

அடிக்கடி காட்சியாய் மனதில் உறுத்திக் கொண்டிருந்தது. புவனபதி வடக்கு நோக்கி நகர்ந்தான்.

எந்த ஓசை கேட்டாலும் ஓநாய்களோ என்று பயந்தான். பல கல் தூரத்திற்கு வெறும் கட்டாந்தரையாக உள்ள இடங்களையும் அடர்ந்த கானகமாக உள்ள இடங்களையும் தாண்டினான்.

உடம்பு கறுத்து இளைத்தது. நீண்ட தாடி வளர்ந்தது. சிகை செதுக்கப்படாததால் அடர்த்தி கூடியது. எண்ணெய் காணாத உடம்பில் ஒரு வறட்சி இருந்தது. நடுவே சில நகரங்களிலும், கிராமங்களிலும் அவனை வரவேற்று உபசரித்தார்கள்.

காஞ்சிமாநகர் என்றதும் எழுந்து நின்று கைகூப்பினார்கள். அவனுக்கு புதிய உடைகளும் நல்ல உணவும் உடம்புக்கு எண்ணெயும் கொடுத்தார்கள். அவனுக்கு ஏற்பட்ட சிறு கால் காயங்களுக்கு மருந்து போட்டார்கள். நல்ல வைத்தியர்களை அனுப்பி உடம்பில் எண்ணெய் தேய்த்து இறக்கினார்கள்.

புவனபதி நான்கு மாத நடையில் கங்கைக் கரையை அடைந்தான். அதன் தெளிவும், வேகமும், அகலமும் பார்த்து விம்மியழுதான். கங்கைக்கரை ஓரமாகவே வாரணாசி எனப் படும் காசியை நோக்கி நகர்ந்தான்.

கங்கையின் எல்லாப் பக்கமும் நிலங்கள் செழுமையாக இருந்தன. அதன் கிளை நதிகள், கால்வாய்கள் எல்லா பக்கமும் பாய்ந்தன. பூமி விதம் விதமான தாவரங்களால் செழித்துக் குலுங்கியது. எருமைகளும், பசுக்களும் உயரமாகவும் அகலமாகவும் இருந்தன.

குடிக்க நீர் கொடுத்த பிறகு அருந்த சூடான பால் கொடுத்தார்கள். எங்கு போனாலும் ஒரு சொம்பு நிறைய பால் இலவசமாகக் கிடைத்தது.

கோதுமையைத் திரித்து வட்டமாய் தட்டி வைத்துக் கொண்டு அவ்வப்போது சூடுபண்ணி சாப்பிட்டார்கள். நடுவே காய்கறிகளை அவித்து கோதுமை வட்டத்தில் அதை வைத்து சுருட்டி சாப்பிட்டார்கள். கரும்பு சாறிலிருந்து பாகு காய்ச்சி



தினம் அதில் பண்டங்கள் செய்து இனிப்பு உண்டார்கள். சிறிய குடியானவர்கள் கூட செல்வச் செழிப்போடு இருந்தார்கள்.

உரத்த குரலில் பேசினார்கள். அட்டகாசமாய் சிரித்தார்கள். போட்டி பந்தயங்களில் ஆக்ரோஷமாய் அடித்துக் கொண்டார்கள். அவன் தோற்றம் வித்தியாசமாய் இருந்ததால் நிறுத்தி விசாரித்தார்கள். பதில் சொல்லாது போனால் மடக்கி அதட்டினார்கள்.

சிறு தேவதைகள் உபாசனை குறைவாக இருந்தது. ஹரிநாம உச்சரிப்பு அதிகமாக இருந்தது. அவ்வப்போது சிவன் கோவில்களும் தெரிந்தன. சில கிராமங்கள் முழுவதுமாய் சமணர்கள் வசம் இருந்தன. அந்த இடங்களில் லேசாய் ஏளனம் செய்தார்கள். ஆனால், தயக்கமின்றி உணவு கொடுத்து உபசரித்தார்கள்.

சமணர்களிடம் வைத்திய சாஸ்திரம் சிறந்தோங்கி இருப்பதை புவனபதி கவனித்தான். அந்த வைத்தியத்தை வைத்துக் கொண்டு அவர்கள் மதம் பரப்புவதை அறிந்து கொண்டான்.

கங்கைக் கரையில் ஒரு பெரிய நகரம் முழுவதும் சமணர் ஆட்சியாக இருந்தது. மன்னர்களும் அதிகாரிகளும் சமணர்களாகவே இருந்தார்கள். சிவக்ஷேத்திரங்களையும், ஹரிக்ஷேத்திரங்களையும் கதவுமூடி அவை திறக்க ஒட்டாது ஆப்பு அறைந்து விட்டார்கள்.

இறந்தவனைப் பிறப்பித்தால் இந்துக்கள் ஊரை விட்டு போய் விடுவதாக சொன்னார்களாம். சமணர்கள் மந்திர ஜபத்தால் அப்படி பிழைப்பித்தார்களாம். எனவே ஊர் சமணர்கள் ஊராயிற்றாம்.

மதம் மாற விருப்பமில்லாதவர்கள் வெளியேற, வெளியேற, விருப்பமில்லாதவர்கள் மதம் மாறினார்களாம்.

புவனபதி அந்த நகரத்தின் எல்லா பகுதிகளிலும் வைத்திய சாலைக்கான பள்ளிகள் இருப்பதையும் பெண்களும் சிறுவர்

களும்கூட அதில் சேர்ந்து படிப்பதையும் கண்டான். அவனை விட வயதில் சிறிய இளைஞனைப் பார்த்து கை கூப்பினான்.

'இறந்தவனை உயிர்ப்பிக்கும் அளவுக்கு வைத்திய சாஸ்திரங்கள் உயர்ந்ததா அல்லது இது இறையருளால் நடந்ததா.'

'வைத்திய சாஸ்திரத்தால் நடந்தது. இறை என்பது சூன்யம். அந்த சூன்யத்தில் செயல் ஏதுமில்லை. அன்போ, அறிவோ, அழகோ ஏதுமில்லை.

எங்கள் குருநாதர்கள் அந்த சூன்யத்தை தொட்டு மீள அந்த சூன்யத்தின் அமைதியை தங்கள் 'புத்தியில் செலுத்தி பல விஷயங்களைக் கண்டு பிடித்தார்கள். உதாரணத்திற்கு உங்கள் நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு நான் சூன்யத்தில் சிறிது நேரம் இருந்துவிட்டு அந்த அமைதியில் இருந்து உங்கள் நாடிக்கு என் மனதைத் திருப்புகிறேன். என் மனம் உங்கள் நாடியை முழுமையாய் பார்க்கிறது. விஷயங்களைத் துல்லிய மாய் கண்டுபிடிக்கிறது.

அவன் புவனபதியின் நாடியைப் பிடித்துப் பார்த்தான். சிரித்தான். அவன் அவனது வைத்தியசாலைக்குள் போய் ஒரு பளிங்கு குப்பியைக் கொண்டுவந்து புவனபதியிடம் கொடுத்து உங்கள் மூத்திரத்தை இதில் பிடித்து வாருங்கள் தைல சோதனை செய்து விடுவோம் என்று சொன்னான்.

புவனபதிக்கு வைத்தியம் கற்றுக் கொள்ள வேண்டும் என்கிற பேரவா வந்துவிட்டது. இதற்காக மதம் மாறவும் அவன் தயாராக இருந்தான்.

## 15

**கை**யகலக் குப்பியில் சிறுநீர் பெய்து கொடுத்ததும் அதன்மீது சூரிய ஒளி படும்படி அந்த இளைஞன் ஒரிடத்தில்



வைத்தான். வீட்டிற்குள்ளிருந்து நல்லெண்ணெய் எடுத்து வந்தான். ஒரு குச்சியில் எண்ணெயை எடுத்து மூத்திரத்தில் ஒரு சொட்டு விட்டான்.

எண்ணெய் சிறுநீரில் விழுந்து சூரியனைப்போல் பிரிந்ததும் புவனபதிக்குச் சுட்டிக்காட்டினான். ''சிறுநீர் அடர்த்தி அதிகம். அதனால் வேகமாய் எண்ணெய் பிரிய முடியாமல் போகிறது. அடர்த்திக்குக் காரணம் உப்பு அதிகம். கொய்யாப்பழம் அதிகம் சாப்பிட்டால் இரண்டு நாளைக்கு இப்படி அடர்த்தியாகி விடுகிறது. நிறைய்ய தண்ணீர் குடியுங்கள். எண்ணெய் இரண் டாகப் பிரிந்து வளையமானால் எண்ணெயில் பொன்னிறம் அதிகமானால், நடுவே விடப்பட்ட எண்ணெய் ஓரத்திற்குப் போனால், சிவப்பு நிறம் அதிகமிருந்தால், ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அர்த்தம்.''

அந்தப் பையன் விளக்க. புவனபதி திகைத்து போனான். கங்கைக்கரை ஓரம் உள்ளவர்கள் பேசுகிற சமஸ்கிருதம் வேறு தொனியில் இருந்தது. ஆனாலும், புரிந்துகொள்ள முடிந்தது. புவனபதி அந்த இளைஞன் மூலமாக ஒரு சமணகுருவைச் சந்தித்தான். வைத்தியம் கற்க வேண்டிய விஷயத்தைச் சொன்னான். இதற்காக தான் சமண மதத்திற்கு வரவும் தயாராக இருப்பதாய் விளக்கினான். அந்த சமணகுரு அவனை உற்றுப் பார்த்தார். மொழியின் இலக்கணங்களைப் பற்றி அவரிடம் கேள்வி கேட்டார். காவியப்பாடம் உண்டா என்று சோதனை நடத்தினார்.

அவனை மதம்மாற வேண்டாம் என்றும்; அவனுக்கு அடிப்படை வைத்திய முறைகள் சொல்லித் தரப்படும் என்றும் மந்திரங்கள் மூலம் நோய் தீர்ப்பதும், மயில் பீலியால் துடைத்து எடுப்பதும் சொல்லித் தரப்படும் என்றும் பதிலுக்கு அவன் நூறு மாணவர்களுக்குக் காவியப்பாடம் எடுக்க வேண்டும் என்றும் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

காலையில் காவியப் பாடம் நடக்கும். உச்சியில் வைத்திய விசாரம் நடக்கும். மறுபடி மாலை புவனபதி மொழி இலக்கணங்கள் சொல்லித்தர வேண்டும். இரவு உடற்கூறு பற்றி ரகசியமாய் பாடம் நடத்தப்படும்.

அந்த இடம் தான் புவனபதியால் தாங்க முடியவில்லை.

நன்கு இருட்டியதும் பத்துப் பதினைந்து மாணவர்களுடன் நகரத்தின் ஒரு கோடிக்கு ஆள் அரவமில்லாத ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

அங்கு மரண தண்டனை விதிக்கப்பட்டோ, அல்லது கொலை செய்யப்பட்டோ பிணங்கள் இருக்கும். உடம்பை நெடுக அறுத்து உள்ளே பிளந்து உள்ளிருக்கும் உறுப்புகளைக் கையிலெடுத்து ஆராய்வார்கள்.

ஹிருதயத்தை தனியே எடுத்து தர்பைக் குச்சியை பல துவாரங்களில் விட்டுப் பார்ப்பார்கள். ஹிருதயத்தை விளக்கடியில் வைத்து வெள்ளைத் துணியில் படம் வரைந்து கொள்வார்கள். இவ்விதமே வயிறு, நுரையீரல், குடல் எல்லா வற்றையுமே கவனிப்பார்கள்.

புவனபதி பயம் தாங்காமல் அலறினான். மாணவர்கள் அவனை அடித்து அமைதியாக்கினார்கள். கலவரமின்றி பார்க்கச் சொன்னார்கள். மூன்று நாளில் மனம் படிந்து விட்டது. ஹிருதயத்தை நெடுக அறுத்து அவனும் பாகங்கள் குறித்துக் கொண்டான்.

நிறைய களிமண் எடுத்துப் போய் ஒரு பிணத்தை வெட்டிப் பிரித்து உள்ளிருக்கும் உறுப்புகளை அப்படியே களிமண்ணால் பொம்மை செய்து கொண்டார்கள். மூச்சுக்குழல், நுரையீரல், உணவுக் குழல், இரைப்பை, கல்லீரல், கணையம், பெருங்குடல், சிறுகுடல் எல்லாம் பொம்மையாய் வடித்துக் கொண்டார்கள். அந்தப் பலகையை தலைக்கு மேல் தூக்கிக் கொண்டு வந்து மருத்துவ வகுப்பின் நடுவில் வைத்து வர்ணங்கள் கொடுத்தார்கள். பாகங்கள் எழுதினார்கள்.



அந்த மருத்துவக் கல்லூரியில் இருக்கும் வரை எந்த திருச்சின்னங்களும் புவனபதி இட்டுக் கொள்ளவில்லை. சந்தியா வந்தன ஜெபமோ, வேதம் ஓதுதலோ செய்யவில்லை. கை, கால்களை சுத்தம் செய்துகொண்டு ஒரு சிறிய இடத்தில் கண்மூடி மௌனமாய் உட்கார்ந்து தியானம் செய்ய புவனபதி கற்றான்.

மயில்பீலிக்கு சுத்தம் செய்கிற ஒரு சக்தி இருக்கிறது என்று அவனுக்குச் சொல்லப்பட்டது. அதன் நிறமும் மென்மையும் துகள் துகளான ரோமப் பிரிவுகளும் ஒவ்வொரு பீலியிலும் ஒற்றைக்கண் உள்ள அமைப்பும் மிக விசேஷமானவை என்று தெரிவிக்கப்பட்டது.

ஒருவருக்கு நரம்புத் தளர்ச்சியாலோ, தசை பிரண்டோ கையில் வலி என்றால் சிறிது நேரம் தனியே தியானம் செய்துவிட்டு நோயாளிக்கு அருகே வந்து குறிப்பிட்ட மந்திரத்தை ஜெபித்து நோயாளிக்கு வலி இருக்கும் பாகத்தை மேலிருந்து கீழாக வருட... அதிகபட்ச வலியும் நாற்பது தடவலில் போய்விடும்.

விஷமாக இருந்தால் அது மயிற்பீலியில் இறங்கிவிடும். உள்ளே இரத்தம் கட்டிக் கொண்டால் நிச்சயம் அது கரைந்துவிடும். தடவிய மயிற் பீலியை நெருப்பிலிட்டுப் பொசுக்கி விடவேண்டும். இது முக்கியமானது.

மனம் மயிற்பீலியால் தடவும்போது மனோசக்தி ஒருமுகப் பட்டு வலித்த இடத்தின் மீது பாய்கிறது. வலியை அடிக்கிறது.

எனவே, ஒரு வைத்தியன் தினந்தோறும் மனோசக்தி அதிகரிப்பதை செய்து கொண்டிருக்க வேண்டும். தன் மனதை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். சிறிய ஒடுங்கிலிருந்து தியானம் செய்ய வேண்டும். தியானம் தான் எல்லா சக்திக்கும் ஆதாரம். எல்லா இயக்கத்திற்கும் தியானம்தான் அடிப்படை. புவனபதி நாடி பார்க்கவும் தெரிந்து கொண்டான். ஹிருதயத்

துடிப்பை உணர்வு மூலம் கேட்டான். வலியில் துடிக்கும் நோயாளியை மருந்தில்லாது மயங்கச் செய்யும் வித்தையைக் கற்றுக் கொண்டான்.

புடம்போடவும், வஸ்திரகாயம் செய்யவும், லேகியம் செய்யவும் கற்றுக் கொண்டான். எண்ணெய் காய்ச்சி உருவிவிட படித்தான். இரண்டு உள்ளங்கால் விரல்களிலும் தூங்கும் முன்பு மூலிகை எண்ணெய் தேய்த்து படுக்க, உடம்புக்குள் உள்ள உள்ளுறுப்புகள் உற்சாகமடைந்தன. இடது கால் பெருவிரல் நெற்றிப் பொட்டிற்குப் போயிற்று. அடுத்த விரல் நுரையீரலுக்குப் போயிற்று. அதற்கடுத்த விரல் ஹிருதயத்தை அடைந்தது. அதற்கும் அடுத்த விரல் இரைப்பையுடன் தொடர்பு கொண்டது.

உடம்பில் எல்லா நரம்புகளும் உள்ளங்கால்களில் வந்து முடிந்தன. உள்ளங் கால்களைத் தினம் பிடித்துவிட உடம்பு உள்ளும் புறமும் மகத்தான சத்தியை அடைந்தது.

பாதம் என்பது சாதாரண விஷயமில்லை. ஒரு உடம்பின் சத்தி மொத்தமும் பாதத்தில் முடிகிறது. அதிகம் தியானம் செய்த மனிதர் தன் உள்ளுறுப்புகளை அமைதியாக வைத்திருப்பார். அமைதியான உள்ளுறுப்பின் விளைவால் நல்ல கதிர் வீச்சைக் கொண்டு இருக்கும். பாதங்களைத் தொடுவதும் அதற்கு அண்மையில் வேறு ஒருவன் தலை படுவதும் நல்லது. நல்ல பாதங்களை உடையவனை நமஸ்கரித்தால் அந்தப் பாதத்தில் உள்ள சக்தி நமஸ்கரித்தவர் தலைமீது படுகிறது.

அதேபோல வேறொரு விஷயமும் நடக்கும். நல்லவரின் பாதத்தை தீயவர் தொட்டால் தீய அதிர்வு தாங்காமல் நல்ல பாதம் வீங்கும். பாதங்கள் வைத்தியத்தில் முக்கியமானவை.

குடற்புண்ணை, மூளை நோயை, நுரையீரல் சளியை, ஹிருதய பலவீனத்தை உள்ளங்கால்களைத் தேய்ப்பதின் மூலமாக சரிசெய்து விடலாம்.

இளம் பிள்ளைகளுக்கு தாயார் தூங்கும்போது கால்பிடித்து விடலாம். கணவனுக்கு மனைவியும், மனைவிக்கு கணவனும்



செய்யலாம். குருவுக்கு சிஷ்யனும், சிஷ்யனுக்கு குருவும் செய்யலாம்.

புவனபதி பாதங்களைப் பிடித்து விடுகின்ற வித்தையை மிகக் கவனமாகக் கற்றான். நோயுள்ளவர்களைத் தேடிப்போய் அவர்கள் உள்ளங்கால்களைத் தேய்த்துவிட அவர்கள் உற்சாகமடைவதைப் பார்த்தான்.

அந்த சமணப் பள்ளியில் இருக்கும் வரை அவன் மனம் சிறிதளவுகூட காமத்தில் ஈடுபடவில்லை. தினம் கங்கை ஸ்நானம், எங்கேனும் ஒரு சிறு குகையில் ஆழ்நிலை தியானம், நல்ல உணவு, நிறைய நடை, எப்போதும் எதுபற்றியாவது தெரிந்து கொண்டேயிருக்கிற சிந்தனையாளர் கூட்டம். புவனபதிக்கு காஞ்சிபுரத்து நினைவே அற்றுப் போயிற்று. ஊர்பற்றி யாராவது விசாரிக்கும்போது சற்று மனைவி நினைவு வரும். தாய் தந்தையரைப் பற்றி மனம் யோசிக்கும்.

ஆனால், வேறு யாரும் நோயாளி வர, அல்லது புதிய பிணம் எங்கேயாவது கிடைக்க அங்கு போய் விடுவார்கள். ஒரு கர்ப்பிணிப் பெண்ணின் பிணம் புதைக்கப்பட இருக்கிறது என்பது தெரியவர, முப்பது கல் தொலைவு நோக்கி மருத்துவ பள்ளி ஓடியது. புதைத்த பிணத்தைத் தோண்டியெடுத்துக் கொண்டு, அடர்த்தியான காட்டுக்குள் மறைந்தது.

சுடுகாட்டுக்குள் அதிகம் போக வேண்டாம். பேய் நடமாட்டம் அதிகமிருக்கிறது என்று முதிர்ந்த மாணவர்களால் பொய் சொல்லப்பட்டது. ஊர் முழுவதும் அந்தப் பொய் பரப்பப்பட்டது. கர்ப்பிணியின் வயிற்றை அறுத்து குழந்தையை வெளியே எடுத்து அருவருப்பும் நாற்றமும் தாங்கி கருப்பை என்கிற விஷயத்தைப் பற்றி கற்றுக் கொண்டார்கள். கங்கைக் கரையில் பிணத்தைத் தகனம் செய்துவிட்டு முங்கிக் குளித்தார்கள்.

எல்லோருக்கும் பசித்தது. ஆனால், யாராலும் சாப்பிட முடியவில்லை.

சமணகுரு சிரித்தார்.

இப்போது பெரிய நகரத்துக்குள் போய் கணிகையரின் ஆட்டத்தை ஈடுபட்டு பாருங்கள். அவர்கள் ஆட்டத்தை ஈடுபட்டு பார்க்கிறபோது கர்ப்பிணிப் பெண்ணை நினைத்துக் கொள்ளுங்கள். பெண் மீது ஆசை வருகிறதா என்று சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். வரும் எனில் மறுபடி இன்னொரு கர்ப்பிணிப் பெண்ணின் பிணம் அறுக்க வேண்டும்.

மாணவர்கள் நடுங்கிப் போனார்கள்.

மறுபடி வட்டமாக உட்கார்ந்து அறுத்த கர்ப்பிணிப் பெண்ணின் உடம்பை நினைத்துக் கொண்டார்கள். அந்த சமணவழி, மாணவர்களின் எல்லா முகங்களும் ஒட்டியிருந்தன. கண்கள் பஞ்சடைந்திருந்தன. தோலில் ஒரு வறட்சி இருந்தது. வயிறு ஒட்டி உடம்பு மெல்லியதாக இருந்தது.

ஆனால், ஒட்டு மொத்தமாய் உடம்பில் அசாத்திய வலு இருந்தது. மனதில் உரம் இருந்தது.

பெரிய நகரத்துக்குள் போய் காசு கொடுத்து முன் வரிசையில் அமர்ந்து பெண்களின் ஆட்டம் பார்த்தார்கள். சிரித்தார்கள். சுற்றியுள்ள கூட்டம் அவர்கள் ரசித்து சிரிப்பதாய் நினைத்தது. அந்த மாணவர்கள் சிரிப்பு வேறானது என்று யாருக்கும் தெரியவில்லை.

மருத்துவப் பள்ளிக்குப் திரும்பிய போது வாசலில் சமண குரு நின்றிருந்தார். ஒவ்வொரு மாணவனாக கவனித்து உள்ளே அனுப்பினார்.

புவனபதி உள்ளே நுழைந்தபோது, மயிற்பீலியால் தடுத்தார்.

"கற்றது வரை போதும். உன் மருத்துவப் படிப்பு முடிந்தது. நீ திருமணமானவன். சோதனைகளில் நீ தேறினாலும் உன்னை இங்கே தொடர்ந்து வைத்துக் கொள்ள இயலாது. நீ இருக்க வேண்டிய அவசியமும் இல்லை.

இந்தப் பள்ளியில் படித்தற்கு நன்றியாய் சமண குருமார்களுக்கு உன்னால் ஆன உதவியை செய்துவா. நீ எங்கிருப்பினும் அவர்களுக்கு ஆதரவாகப் பேசு. அவர்களுக்கு ஆதரவாகச் செயல்படு."



அவன் அவரை மண்டியிட்டு நமஸ்கரித்தான். வெளியே வந்து மருத்துவக் கல்லூரியை நமஸ்கரித்தான். பிறகு கங்கைக் கரைக்குப் போய் முங்கிக் குளித்தான். கோயிலுக்கு போய் திருநீறு இட்டுக் கொண்டு கங்கைக் கரை ஓரமாக வடக்கு நோக்கி நகர்ந்தான். வாரனாசி கோபுரங்கள் அவனை வரவேற்றன.

அவன் மனம் குதூகலித்தது. நீண்ட கொடி பறக்கும் கோபுரங்களை கைதூக்கி ஆசீர்வதித்தான். கோலூன்றி கம்பீரமாய் நகருக்குள் நுழைந்தான்.

ஒரு வீட்டின் முன்பு நின்று நான் தெற்கே காஞ்சி மாநகரிலிருந்து வருகிறேன். பவதி பிக்ஷாந்தேஹி என்று அதிகாரக் குரலில் கூவினான்.

அந்த வீடு பரபரத்தது.

சிறிது நேரத்தில் அந்த வீட்டின் தலைவர் வெளியே வந்து அவனது கால்களில் நீர் வார்த்து உள்ளே அழைத்துக் கொண்டு போனார்.

தாகத்துக்கு நீரும், உண்ண பழங்களும் பாலும் கொடுத்தார். உண்ணும்போது அந்த வீடு மாற்றி மாற்றி விசிறியது.

வீடு பெரியதாக இருந்தது. நிறைய குழந்தைகள் இருந்தன.

புவனபதிக்கு கும்பகோணம் ஞாபகம் வந்தது. வலிமையான மைத்துனர்களை நினைத்துக் கொண்டான். சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு அந்தக் குடும்பத் தலைவரும், சில உறவினர்களும் அவனுக்கு வழிகாட்ட புவனபதி காசியை சுற்றிப் பார்க்க கிளம்பினான்.

வெகுநாட்களுக்குப் பிறகு சாப்பிட்ட நல்ல ஆகாரம் நன்கு ஜீரணமாகி அந்த சக்தி உடம்பு முழுவதும் பரவுவதை அவனால் உணர முடிந்தது.

ஒரு பைரவர் கோவில் வாசலில் காசியின் அந்தணர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். வேத பாடங்களில் இருந்து கேள்வி கேட்டார்கள். தர்க்கம் படித்ததிலிருந்து விளக்கச் சொன்னார்கள். இரண்டு நாழிகைக்குப் பிறகு அவனை பண்டிதன்தான் என்று ஒத்துக் கொண்டார்கள்.

இந்தந்த இடத்தில் இந்தந்த பூஜை இருக்கிறது என்று விளக்கினார்கள்.

கங்கைக் கரையில் ஒரு சிற்றரசர் பூஜை செய்கிறார். காசியின் எதிர்க்கரையில் பாஞ்சாலத்தில் இருந்து வந்த மன்னர் தகப்பனுக்கு திதி செய்கிறார். காலையும் மாலையும் பத்து நாட்களாய் தானம் செய்கிறார். ஒரு தன வணிகனின் மனைவி திரண்ட செல்வத்தோடு கணவன் மறைவிற்குப்பிறகு காசிக்கு வந்து தெருவில் போவோர் வருவோரை உற்றுப்பார்த்து விருப்பப்பட்டவருக்கு பொற்காசுகள் தருகிறாள்.

எல்லா கோவில்களிலும் பூஜைக்கு ஆள் தேவையாக இருக்கிறது. பிராமணப் பண்டிதர்களுக்கு காசியில் எந்த குறையும் இல்லை.

தெற்கு இருந்து வந்த பிராமணர்கள் பதினாறு பேர்களைக் கரையோரம் ஒரு அரசன் மாளிகையில் வசிக்கிறார்கள். அவர்களுக்காக நெல் வங்காளத்திலிருந்து வரவழைக்கப்படுகிறது. பாய்மரக் கப்பல்களில் கங்கை வழியே பலநூறு மூட்டைகள் வருகின்றன. இதெல்லாம் வேண்டாமென்றால் கங்கைக் கரையில் தாழங்குடை போட்டு, மரப்பலகை போட்டு அமர்ந்து விட்டால் போவோர் வருவோரிடம் வாங்குகிற காசு எதேஷ்டம்... மிகச் சௌகர்யமாக குடித்தனம் செய்ய முடியும்.

பரத கண்டத்தில் போர் அதிகமில்லை. வெகு குறிப்பாய் காசியில் எந்தச் சண்டையுமில்லை. காசியில் சண்டை இருக்கக் கூடாது என்பதற்காகவே ஞானவானான ஓர் அரசர் ஆட்சி செய்கிறார். அவரிடம் படைகள் இல்லை. காவலாளிகள் மட்டும் இருக்கிறார்கள்.



அந்த அரசர் தினமும் கங்கையில் நீராடி தினமும் காசி விஸ்வநாதரை தரிசித்து இனிப்பும், காசும், மாலையும் தானம் செய்கிறார்.

கோயிலுக்குள்ளே அந்தணர்களுக்கும் கோயில் படியில் யாத்ரீகர்களுக்கும் தேரிலிருந்தபடி தெருவில் வறியவர்களுக்கும் தானம் வழங்குகிறார். சாதுக்களுக்குத் தேடிப்போய் கொடுக்கிறார். எல்லோருடைய குறைகளையும் கேட்டறிகிறார்.

வெகு தொலைவிலிருந்து காசிக்கு வந்தவர்கள் யாராக இருந்தாலும் குனிந்து நமஸ்கரித்து பொற்காசுகளை எடுத்துக் கொள்ளும்படி விண்ணப்பிக்கிறார்.

இந்துஸ்தானத்தில் மற்ற ராஜாக்கள் வாரணாசி மீது படையெடுப்பதில்லை. காசி தேசத்தில் போர் செய்வதில்லை... என்று சங்கல்பம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காசியில் உயிர்க்கொலை தடுக்கப்பட்டிருக்கிறது. ஆடு, மாடுகள் வெட்டப்படுவதில்லை. வலைஞர்கள் மீன் பிடிப்பதில்லை. காசி ஒரு பிராமண தேசம். பித்ருக்கள் பூமி. அங்கே கோபப்பட்டால் பித்ருக்கள் மிரண்டு போவார்கள். பாபம் செய்தால் விக்கி விக்கி அழுவார்கள்.

அந்த நேரம் மனமுவந்து அன்போடு நீர் வார்த்தால் குளிரக் குளிர ஆசீர்வாதம் செய்வார்கள்.

கங்கைக் கரையில் புனிதமான சக்திகள் உலவுகின்றன. மந்திர தேவதைகள் வசிக்கிறார்கள். அங்கே உட்கார்ந்து மந்திரஜபம் செய்யும் போது மனம் விரைவில் ஒரு முகப்படுகிறது. ஆழ்ந்து ஒரு புள்ளியில் லயிக்கிறது. லட்சம் முறை சொன்னால் ஏற்படும் அனுபவம் அந்த கங்கைக் கரையில்... நூறு முறை சொன்னாலே ஏற்பட்டு விடுகிறது.

மேலும் இது பிராமணர்கள் காலம். பிராமணர்களை க்ஷத்ரியர்கள் வெகுவாக மதித்தார்கள். க்ஷத்ரியர்கள் மதித்ததாலாலே மற்ற ஜாதியாரும் கும்பிட்டார்கள்.

எல்லா இடத்திலும் மரியாதை. பிராமணர்களுக்கு... சந்தோஷம் அதிகரித்தது.

முகப்பொலிவையும் - வார்த்தை பலிதத்தையும் அதிகரிக்க ஒழுக்கவிதிகளை, கடுமையாகக் கடைப்பிடித்தார்கள். ஆகாரங்களில் நியமமாக இருந்தார்கள்.

தாங்கள் பெற்ற தானத்தை... தானம் கேட்காத சாதுக்களுக்குக் கொண்டு போய் கொடுத்தார்கள். ஊர் நடப்புகளை சொல்லித் தங்களால் தீர்க்க முடியாத பிரச்சினைகளைச் சொல்லித் தீர்வு கேட்டார்கள்.

பத்து நாட்கள் காசியின் மூலை முடுக்கெல்லாம் புவனபதி வலம் வந்தான். காசியில் சாதுக்களைப் போல எண்ணிக்கையில் அதிகமிருந்த இன்னொரு கூட்டம் தாசிகள். மன்னர்களும் பணக்காரர்களும் அவர்களோடு படை வீரர்களும் வந்து போக... அவர்களை மகிழ்விக்க தாசிகள் கூட்டம் வளர்ந்தது. பாஞ்சாலத்தில் இருந்தும் கைகேய தேசத்திலிருந்தும் ராஷ்ட்ரக் கூடத்தில் இருந்தும் நிறைய பெண்கள் வந்து குடியேறினார்கள். குறுகிய கண்களை உடைய நாகதேசப் பெண்களுக்கு வரவேற்பு அதிகமிருந்தது.

விதம் விதமான உணவுகள் சமைக்கப்படும் சத்திரங்களும் அதிகமிருந்தன. நிறைய பாடசாலைகள் இருந்தன. புவனபதி ஒவ்வொரு பாடசாலையாக ஏறி இறங்கி அவர்கள் என்ன படிக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டார்கள்.

''திராவிட தேசமா... சோழநாட்டு பிராமணனா...'' பார்த்த உடனே பல பேர் கேட்டார்கள். அவர்கள் ஒரு ரிக் வேத சாலையை சொல்லி அவனையும் சொல்லச் சொன்னார்கள். அட்க்ஷரமோ, ஒலியோ மாறவில்லை. சில அசைவுகள் வேறுவிதமாக இருந்தன. பல பாடசாலைகளில் அவனுக்கு நன்கு சம்பாவனை செய்வதாக சொல்லி அழைத்தார்கள். புவனபதி மறுத்து விட்டான். கோவிலுக்கு கூப்பிட்டார்கள். புவனபதி அதையும் விலக்கினான்.



கங்கையை எந்தப் பதட்டமும் இன்றி பல நாட்கள் தரிசனம் செய்ய விரும்பினான். எந்த வேலையும் செய்யாமல் எந்த ஒப்பந்த பரபரப்பும் இல்லாமல் ஒரு துறவியைப்போல்... ஒரு சாதுவைப்போல் நாள் முழுவதும் அமைதியாக இருக்கப் பிரியப்பட்டான்.

மூங்கில் கழி முழுவதும் பொற்காசுகள் இருந்தன. இன்னும் ஓர் ஆண்டுக்கு இந்தக் காசு வசதியாக வாழ வைக்கும். அவன் கங்கைக் கரை ஓரமாக நடந்தான். அவனை நோக்கி இரண்டு சடாமுடி சன்யாசிகள் வந்தார்கள். சட்டென்று எதிர்பாரத விதமாக அவனைத் தாக்கினார்கள். நெட்டித் தள்ளினார்கள். அவன் கையிலுள்ள கம்பை பிடுங்கிக் கொண்டு நகருக்குள் ஓடினார்கள்.

புவனபதி என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தான்.

## 16

புவனபதி இடதும் வலதும் பார்த்து எதிரே உள்ள மாளிகையைப் பார்த்து அடையாளம் வைத்துக் கொண்டான். கம்பு நட்டு... நாலு பலகையை மறித்தாற்போல... நாலு படிகளை மறித்தாற்போல மரமேடை கட்டி உட்கார்ந்திருந்த வடஇந்திய பிராமணனிடம் தன் மூட்டையைக் கொடுத்தான்.

''இருக்கட்டும்... வந்து வாங்கிக் கொள்கிறேன். மூட்டையைப் பிரிக்காதே... நாராயணா சத்தியம்...'' உரக்கக் கூவினான்.

தன் கம்பைப் பிடுங்கிக் கொண்டு ஓடிப்போன சடாமுடிகளின் பின்னால் ஓடினான். அவர்கள் ஒரு சந்தில் திரும்புவது தெரிந்தது. அவனும் திரும்பினான். காசியின்

குறுகலான தெருக்களில் அந்த சடாமுடிகள் இடித்துப் புடைத்துக் கொண்டு ஓடினார்கள். ஒரு மிட்டாய்க்காரனை இடித்துச் சாய்த்தார்கள். ஒரு பெண் மீது 'நச்'சென்று மோதினார்கள். உட்கார்ந்திருந்த குழந்தையைத் தாண்டினார்கள். பசுவை அறைந்து ஒதுக்கினார்கள்.

அந்த குறுகலான தெருவிலுள்ள மக்களுக்கு முதலில் கோபம் வந்தது.

தள்ளியது சடாமுடிகள் என்று தெரிந்ததும், ''மன்னித்துக் கொள்ளுங்கள் ஐயா...'' என்று கை கூப்பினார்கள்.

''பின் தொடர்ந்தால் உதைப்பேன்...'' என்று சடாமுடி தூரத்தில் இருந்து எச்சரித்தான். ஆனால் புவனபதி கோபத்தோடும், வெறியோடும் அவனை நோக்கி ஓடினான். அவர்கள் சந்து சந்தாய் புகுந்தார்கள். சட்டென்று நின்று அவன் மீது கல்லெறிந்தார்கள்.

முழு வேகத்தில் முரட்டுத்தனமாய் கொல்லுகின்ற எண்ணத்தோடு வீசினார்கள்.

புவனபதி ஒரு வீட்டுச்சந்தில் ஒதுங்கிக் கொண்டான். ''பாவிகள் ஆரம்பித்து விட்டார்களா...?'' அந்த வீட்டினுள் ஒரு கிழவர் குரல் கேட்டது.

''என்ன நடக்கிறது...?'' - இன்னொரு கிழவர் குரல் கேட்டது.

''நிரஞ்சர்கள்...'' யாரோ பதில் சொன்னார்கள்.

'டமடம'வென்று கற்கள் வந்து விழுந்தன. புவனபதி மனம் குவித்தான். காஞ்சி மாநகரத்துப் பிள்ளையாரை வணங்கினான். பிருத்யங்கரா தேவியை மனசுள் தேடி நிலை நிறுத்தினான். மந்திரஜபம் செய்தான். கோபம் அடங்கி... புத்தி கூர்மை ஆயிற்று. கல்லெறிதலும் நின்றது. எதிரே ரெண்டு ஆள் உயர சுவர் இருப்பதைப் பார்த்தான்.



தான் நின்ற இடம் கோட்டைக் கதவு போன்ற ஒரு வீட்டு வாசல் என்பதைப் புரிந்து கொண்டான். முதுகை அழுத்தினான். கதவு லேசாய் திறந்து கொண்டது. உள்ளே நுழைந்தான். பெரிய முற்றம் தெரிந்தது. காவித் துணிகள் உலர்த்தப்பட்டிருந்தன. சுவரில் சக்கரங்களும், பறவைகளும் காவியால் கோட்டுச் சித்திரங்களாக வரையப்பட்டிருந்தன.

கதவைச் சாத்தினான். அந்தச் சுவரும் இரண்டு ஆள் உயரமிருந்தது. சரசரவென்று சுவரில் கால் வைத்து ஏறினான். மின்னல் வேகத்தில் எதிர் சுவருக்குத் தாவினான். அந்த சுவர் நீண்டு சந்து வரை போயிற்று.

அந்தச் சடாமுடிகள் சிரித்துத் தொடைதட்டி சந்து முனையில் நின்று கொண்டிருந்தார்கள். அவன் மதில்சுவரில் படுத்துக் கொண்டான். அவனுக்காகக் காத்திருந்தார்கள். சந்தில் முன்னேறி அவன் ஒளிந்த இடம் நோக்கி கல் வீசினார்கள். மேலே படுத்துக் கொண்டிருந்த புவனபதியின் இடத்தைத் தாண்டி 'ஏய்' என்று கூவினார்கள்.

சந்தின் இரண்டு பக்கமும் காலியாக இருந்தது. புவனபதி தன் உடம்பை குதிப்பதற்குத் தயார் செய்து கொண்டான்.

அவர்கள் தாண்டி சில கெஜங்கள் போனதும் ஒரு பூனை போல குதித்தான். துள்ளி எழுந்தான். அவர்கள் திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

''ஹோ...'' என்று தாக்க வந்தார்கள். புவனபதி ஆள் உயரத்திற்கு எகிறி ஒருவன் முகத்தில் எட்டி உதைத்தான். எகிறி அடுத்தவன் தொண்டையில் குத்தினான். 'வெடுக்'கென்று கம்பைப் பிடுங்கினான். விழுந்து எழுந்தவன் மண்டையில் பட்டென்று அடித்தான்.

நிறைவன் நெஞ்சுக்குழியில் மூங்கில் கழிநுனியால் பலமாய்க் குத்தினான். இடது தோள் நரம்பு, வலது பக்கச் சிறுநீரகம், குனியும் போது கழுத்துப்பக்க மூன்றாம் எலும்பு...

இடது நெற்றிப் பொட்டு... இடது முழங்கால், வலக்கால் பெருவிரல் என்று குறிபார்த்துப் பலமாய்த் தாக்கினான். அந்த மனிதனின் எல்லா இடங்களும் ஸ்தம்பித்து நின்றன. அவன் கால் மடிந்து மல்லாக்க விழுந்தான். விழுந்தவன் கணுக்காலில் ஏறி நின்று உலக்கையால் குத்துவதுபோல... கழியின் நுனியால் முன்பற்கள் இரண்டையும் பலமாகக் குத்தினான். இரத்தம் பீறிட்டு முகத்தை நனைத்தது. விகாரமான அலறல் எழுந்தது.

ஒருவனை நிலைகுலைத்துவிட இன்னொருவனை சித்திர வதை செய்யும் எண்ணம் புவனபதிக்கு வந்தது.

அந்த வீட்டிற்குள் நடந்த பேச்சு இவர்களைப் பல பேருக்குப் பிடிக்கவில்லை என்று உறுதிப்படுத்தியது. அந்த வீட்டிலுள்ள காவித்துணிகள் ஞாபகம் வந்தன. சாதுக்களைப் பயமுறுத்துகிற சடாமுடிகளா... நான் எப்படி பயமுறுத்துகிறேன் பார்... சினம் புருவங்களை நெறித்து, கண்களைச் சிவப்பாக்கியது. கடவாய்ப் பற்களை அழுத்தி நெற்றி புடைத்தது.

தலையில் அடிபட்டவன் எழும் வரை காத்திருந்து அவனைக் கம்பால் புரட்டி பலம் கொண்ட மட்டும் முதுகில் அடித்தான். ஈவு இரக்கமின்றி யானையைப் படிய வைக்க வேடர்கள் அடிப்பதுபோல் கண்டமேனிக்கு மூங்கிலால் அடித்தான்.

சந்தில் துரத்திக் கொண்டு போனான். எந்தப் பக்கம் வந்தானோ அந்தப் பக்கமே அவனை அழைத்துப் போனான். அவனை அடித்து அடித்து நகரச் சொன்னான்.

''இவை உனக்குப் பதிலுக்குத் தரப்படும்...'' என்று அவன் மிரட்ட... புவனபதிக்கு வெறி அதிகமாகிவிட்டது.

''அப்படியா... நான் தயார்...'' என்று தோல் உரியும்படி ஒரே இடத்தில் பலமுறை அடித்தான். மூங்கிலைக் காலுக்கு இடையே கொடுத்து இடற வைத்தான். அவன் ஆண்குறியில் சுள்சுள்ளென்று அடித்தான். அவன் குறியைப் பிடித்துக்



குப்புறப்படுத்து வலியில் தவிக்க அவன் முதுகில் பட்டை பட்டையாய் அடிகள் இறக்கினான்.

அவன் முகத்தில் கால் வைத்து நசுக்கினான். அவனது வலக்கையைச் செயல் இழக்க வைப்பதற்காக... உள்ளங்கையில் தடியால் ஊன்றி அழுத்தி, தோள்பட்டையில் மூங்கில் நுனியால் தாக்கி மூட்டெலும்பை நெகிழச் செய்தான். அந்த சடா முனி வலியில் அலறிற்றே தவிர மன்னிப்பு கேட்கவில்லை.

''இன்னும் பல வருடங்கள் நான் காசியில்தான் இருப்பேன். உன்னால் ஆனதைப் பார்த்துக்கொள். நான் திராவிட தேசத்துப் பிராமணன். மரணம் பற்றி என் முனையும் பயம் இல்லாதவன். உன்னைப்போல் பெரும்தீனி நாயல்ல... போக்கிரி முனிவனல்ல. மரியாதை கொடுத்தால் மரியாதை... இல்லையெனில், ஆயிரம் விதமாய் அவமரியாதை செய்ய எனக்குத் தெரியும்.

இந்த காஞ்சி மாநகர அந்தணனுக்குக் காசியைச் சுருட்டி முழுங்க முடியும். நேர்மையாக நடக்காத நீ... வாழ்க்கையில் நேராக நடக்கக் கூடாது'' அவன் முழங்காலை நெம்பி மேலே தூக்கி முட்டியில் ஓங்கி அடிக்க... காலும் உடைந்து தொங்கியது.

''நான் சாதுவல்ல... பிராமணன்... வஞ்சம் தீர்ப்பவன்: பதிலுக்குப் பதில் செய்பவன். நூறு க்ஷத்திரியருக்குச் சமமானவன். மன்னிப்புக் கேட்டால் க்ஷத்திரியன் இளகுவான். என்னை அவமானப் படுத்தியவர்களைப் பழி வாங்காமல் நான் விடமாட்டேன். எனக்கு இடைஞ்சல் செய்தவர்களை நான் அப்புறப்படுத்தாமல் நகரமாட்டேன். பாஞ்சாலத்துப் பன்றியே... நான் பிராமணன்... திராவிடன்.'' சட்டென்று அவன் கடைசி விலா எலும்பை அடித்து உடைத்துவிட்டு புவனபதி நடந்தான். நிறைய பேர் அவனை வியப்போடு பார்த்தார்கள்.

அவன் சர்வ ஜாக்கிரதையாக கோபம் குறையாமல் கங்கைக் கரையை நோக்கி நகர்ந்தான். படித்துறையில் இறங்கி அவனது மூட்டையை வைத்துக் கொண்டிருந்த பிராமணரை வணங்கினான்.

''இந்த உதவிக்கு மிக்க நன்றி...'' சமஸ்கிருதத்தில் பேசினான்.

''நல்லது... நன்றி ஒரு பக்கம் இருக்கட்டும். இந்த மூங்கில் கழி அத்தனை பெரிய பொக்கிஷமா... கங்கைக் கரையில் கிடைக்காத மூங்கிலா... ஒரு நாளைக்கு நூறு பிணம் வேகிறது. ஏதேனும் ஒரு பாடையிலிருந்து மூங்கில் உருவிக்கொள்ளக் கூடாதா... அல்லது கட்டில் மூங்கில் சரிபடாதா... இதற்கு போய் அவர்களோடு இத்தனை பெரிய அடிதடி எதற்கு...''

''யார் அவர்கள்...?''

''நிரஞ்சனர்கள்...''

''அப்படியென்றால்...?''

''சாதுக்களில் ஒரு வகை...''

''சாதுக்கள் என்றால் என் கழியை ஏன் பிடுங்குகிறார்கள்?''

''அவர்கள் எது செய்தாலும் நல்லதுக்கு என்ற நம்பிக்கை ஜனங்களிடையே இருக்கிறது.''

''ஒரு பெண்ணை மானபங்கப்படுத்தினால் கூட நல்லது என்று ஏற்பீர்களா...?''

''அப்படியும் நடந்திருக்கிறது...''

''வீரம் பேசாதே... திராவிடத்து அந்தணனே...'' - வேறு ஒரு வயது முதிர்ந்த அந்தணர் அவனை நோக்கித் திரும்பினார்.

''நிரஞ்சனர்கள் அதிகம் பேர் பாஞ்சால தேசத்தவர்கள். அவர்கள் அடிப்படையில் க்ஷத்திரியர்கள். நூறு க்ஷத்திரியர்களில் பத்து பேர் காசிக்குச் சாதுக்களாய் மாற்றி அனுப்பப் படுகிறார்கள். ஒரு பத்து பேர் மருத்துவத்தில் பயிற்றுவிக்கப் படுகிறார்கள். இன்னொரு பத்து பேர் வான சாஸ்திரமும், ஜோஸியமும் பயில்கிறார்கள். இன்னுமொரு பத்துபேர் ஆடல், பாடல்களில் இறக்கப்படுகிறார்கள்.''

''ஏன்... நூறு பாஞ்சாலர்கள் ஒன்றாக இருந்தால் சகோதரச் சண்டை வந்து விடுமோ...?''



''சரியாகச் சொன்னாய்... அதுதான் உண்மை. ஒரு விதத்தில் இது நல்லது. பாஞ்சாலத்து உள்நாட்டு குழப்பம் குறைகிறது. இன்னொரு விதத்தில் தவறு... பரத கண்டத்தின் எல்லை பலவீனமாகிறது. உண்மையில் வெகு நாட்களாக பாஞ்சாலத்தில் நல்ல தலைவனில்லை. அவர்கள் எல்லோரையும் அடக்கிக் கொண்டு வர சரியான குரு தோன்றவில்லை.

புராண காலத்தில் பாஞ்சாலர்களிடம் இருந்த ஒற்றுமை உயர்ந்த நோக்கம், இப்போது குறைந்து வருகிறது.

இந்த க்ஷத்திரியர்களால் சாதுக்களாக வாழ முடியவில்லை. அவர்களைத் தவிர வேறு யாரும் கம்பீரமாக நடந்தால் அவர்களுக்குக் கோபம் வருகிறது. உடைவாளோ... கோலோ, ஈட்டியோ வைத்திருந்தால் பிடுங்கிக் கொள்கிறார்கள். மூன்று முழங்கை நீளமுள்ள கம்பு மட்டுமே வைத்துக் கொள்ள வேண்டும் என்று சத்தம் போடுகிறார்கள்.''

''நான் என்ன வைத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்க வேண்டியது நான்...''

''கர்ஜனை போதும்... இத்தோடு விஷயம் முடிந்து விட்டதென்று ஒருபோதும் நினைக்காதே... வெகு விரைவில் மிக மோசமான விளைவுகளை நீ சந்திக்க வேண்டியிருக்கும். உண்ணும் போதும், உறங்கும் போதும் கவனமாயிரு. எப்படியாவது உன்னை பழி தீர்க்க அவர்கள் முனைவார்கள். இன்னும் கால் நாழிகையில் பெரிய பாஞ்சாலப்படையே இங்கு வரலாம்.''

''நான் தயார். நான் காடுகளில் ஓநாய்களை வேட்டையாடியவன். ஒரு பகல் முழுவதும் போர் செய்ய கடுமையாய் பழகியவன். எது குறித்தும் பயப்படாதவன். நான் தியாகம் செய்யும் வகையல்ல. எங்களுடைய பாடம் வேறானது.''

''என்ன பாடம்...''

''நான் முக்கியம்... நானே முக்கியம். நான் மட்டுமே இந்த உலகம். நானில்லாமல் இந்த உலகம் இல்லை. நானே

இந்த உலகத்தின் மையம். என்னைச் சுற்றி எனக்காகவே இந்த உலகம்.''

''இது கர்வமல்லவா...?''

''இல்லை. தெளிவு. தெளிவான முடிவு நான் இறந்து போனால், இந்த உலகம் எப்படிப் போனால் எனக்கு என்ன...? நானிருக்கும் வரை இந்த உலகம் என் சொல்படிதான் இயங்க வேண்டும். அப்படி இயங்காது போனால் செத்துப்போக வேண்டும்.''

''இது அகந்தை...''

''இல்லை; அறிவு. ஆழ்ந்த யோசிப்பின் விளைவு. புத்திமானே பலவான் என்கிற முடிவு. வெளி தேசத்தில் இரண்டு பேரை அடித்து நொறுக்கினால் அதற்கு விளைவுகள் இருக்குமென்பது எனக்கு தெரியாதா... விளைவுகள் கடுமையாக இருக்க வேண்டுமென்றுதான் வேகமாக அடித்து நொறுக்கினேன். எதிர்ப்புக் கூட்டம் முழுதாக இருக்க வேண்டுமென்றுதான் இவர்களை நிரந்தரமாய் அங்கஹீனப்படுத்தினேன்.

இப்போது நான் தாக்கியது நூறில் ஒரு பங்கு. உடனடியான மரணத்திற்கோ... மெள்ள... மெள்ள...மரணத்திற்கோ இவர்களை நான் அனுப்பவில்லை. கூட்டமாகத் தாக்க வந்தால் பலபேரை கொன்றுவிட்டு தப்பித்து போவேன். என்னைக் கொல்ல இவர்களால் முடியாது.''

''எப்படித் தப்பிப்பாய்...''

''கங்கையில் குதித்து, ஆழ்ந்து மூழ்கி எங்கேனும் கரையேறுவேன்.''

''கங்கையில் முதலைகள் உண்டு நண்பனே.''

''முதலைகளை சிறுநீர் கழித்து திசை மாற்றுவேன். இடது பக்கம் சிறுநீர் கழித்துக் கொண்டே போய் அடியில் முங்கி நேர் எதிர்பக்கம் நீந்தினால் முதலைகள் சிறுநீரை முகர்ந்தபடி



வேறெங்கோ தேடிக் கொண்டிருக்கும். கைக்கோலால் மண் கிளறிவிட்டால் முதலைகளின் கண்கள் மறைக்கும்.''

''ஆஹா...'' ஒரு அந்தணர் கைதட்டினார்.

''கங்கை என்ன காவிரியா... இதன் சுழல்கள் பயங்கரமானவை.''

''உலகில் உள்ள எல்லா நதிகளுக்கும் ஒரே குணம்தான்.''

''என்னது...?''

''அஞ்சுபவனை நதி கொல்லும். அஞ்சாதவனை அணைத்துக் கொள்ளும்.''

''நல்லது. இந்த காசி தேசம் உன்னை வரவேற்கிறது. உனக்கு சர்வ மங்களம் உண்டாகட்டும். நீ வந்த காரியம் சித்தியாகட்டும். உனது பயமற்ற தன்மை மேலும் மலரட்டும். அன்னை விசாலாட்சி உன்னை ஆசீர்வதிக்கட்டும். கங்கை கரையில் உள்ள கால பைரவர் உனக்கு துணை புரியட்டும். என் வார்த்தைகள் பலிக்குமாறு கங்கையே - என் அன்னையே உன் குழந்தைகளை துள்ளச்செய்...'' அந்த கிழ அந்தணர் கங்கையை நோக்கி கை கூப்பினார்.

தடேர் தடேர் என்று கங்கையின் பிரவாகத்தில் ஒரு கை நீளமுள்ள மீன்கள் துள்ளி எழுந்து... புரண்டு நீந்தின.

''ஆஹா... ஆஹா...'' பிராமணர்கள் தலைக்கு மேல் கை கூப்பினார்கள்.

''திராவிடனே... போய் கங்கையை வணங்கி நீராடி விட்டு வா... நீரில் இருப்பவனை நிரஞ்சனர்கள் எதுவும் செய்ய மாட்டார்கள். ஒரு வேளை கரையில் அவர்கள் கூடி நின்றால் நீ சொல்வதைப்போல அப்படியே நீந்தி போய்விடு.''

''நான் வெறுமனே போவதாகச் சொல்லவே இல்லை. அப்படி போவதானால் பலபேரைக் கொன்றுவிட்டுத்தான் போவேன்.''

''கொலை செய்தல் பாவம். நீ பிராமணன். உனக்கு ஏன் இந்த வேலை?''

''நான் செய்வது கொலையல்ல. தர்மம். எனக்கு ஒரு அடி விழுந்த பிறகுதான் யுத்தமே ஆரம்பிக்கும். அந்த இரண்டு பேரையுமே நான் எளிதில் கொன்றிருக்க முடியும். நெற்றிப் பொட்டில் தட்டினால் மூன்று விநாடிகளில் மரணம். என் தர்மம் என் சூழ்நிலையை அனுசரித்து இருக்கிறது. நான் கல்வி, கேள்விகளில் சிறந்தவன். இந்த பூமியில் உயிர் வாழ எனக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. அது மறுக்கப்பட்டால் மறுத்தவரின் உயிரைப் பறித்தல் தவறன்று. அது தர்மம்''.

''கடவுளே... இப்படி ஒரு பிராமணனை நான் பார்த்ததே இல்லை. எனினும் துலாம் ராசியில் குரு நகர்ந்தது பாஞ்சாலர்களுக்குக் கேடு என்பது உறுதியாகிவிட்டது.''

''அவர்கள் எப்போதுமே இரண்டு இரண்டு பேர்களாக வருகிறார்கள். இரண்டு பேரும் அடிபட்டிருக்கிறார்கள். ஒருவன் மட்டும் அடிபட்டிருந்தால் பாஞ்சாலர்களுக்கு வெற்றி. இருவரும் முடமாக்கப்பட்டு இருக்கிறார்கள். இது அவர்களுக்கு தோல்வி சகுனம்.''

இளைஞனே... திராவிட பிராமணனான உனக்கு சங்கல்பம் செய்து வைக்கிறேன். இந்த கங்கையைப் பற்றிய புகழை உன் காதுபடச் சொல்கிறேன். நடந்த எல்லாவற்றையும் மறந்து அவளை வணங்கி உன் பித்ருக்களை நினைத்துக் கொள். மூதாதையரின் ஆசீர்வாதம் உள்ளவனுக்கு எந்த ஆபத்தும் நேராது. உன் வம்சத்தில் யாரேனும் இதற்கு முன் கங்கைக்கு வந்திருக்கிறார்களா...''

''இல்லை...'' புவனபதி பதில் சொன்னான்.

''அப்படியானால் உன் தாய் வழி மூதாதையருக்காக... நான் பிரார்த்தனை செய்கிறேன். நான் சொல்லும் மந்திரங்களை திருப்பிச் சொல். உன் தாய் வழிப் பெண்டுகளை நினைத்து... உன் தந்தை வழிப்பெண்டுகளை நினைத்து... அவர்களை அழைப்பதற்கான வேண்டுதல்களை நான் செய்கிறேன். தெய்வங்களை... ரிஷிகளை... ரிஷி பத்தினிகளை வணங்கித்



துதிக்க இன்னொருவரையும் அழைத்துக் கொள்... மூன்று பிராமணர்களுக்கு உன்னால் முடிந்ததைக் கொடு.'' அந்த பிராமணர்கள் அவனை சுற்றிக் கொண்டார்கள்.

''நல்லது. நான் ஒருமுறை மூழ்கி ஆத்ம சந்தோஷமடைந்து ஈரத்தோடு சுத்தமாய் உங்களை நெருங்குகிறேன்.'' அவன் கோலோடு நீரில் இறங்கினான். கோலை நீரில் அழுத்தி மூங்கில் நுனியை திருகிநான்கு காசுகள். எடுத்தான். வாயில் ஒதுக்கிக் கொண்டான். நிறையகளிமண் எடுத்து மூங்கில் ஓட்டையை அடைத்து திருகி மூடினான். கைகளை துடைத்து மேலே வந்தான். கை கூப்பினான். மறுபடி மூழ்கி வாயிலுள்ள காசை இடுப்பில் முடிந்து கொண்டான்.

அவர்கள் தனித்தனியே அவனுடைய மூதாதயர்களை வரவழைக்கும் மந்திரங்களைச் சொன்னார்கள்.

சிவனது தலைமுடியில் உருவானதும்... பகீரதனால் பூமிக்கு வேண்டப்பட்டு கொண்டு வரப்பட்டதும்... பல முனிவர்களின் தாகத்தைப் போக்கியதும்... பல உயிர்களின் சாபத்தை நீங்கியதும்... குளிக்க... குளிக்க மோட்சத்திற் குப்போகும் வழியை காட்டுவதும்... ஞானத்திற்கு ஆன வழி யில் ஏற்றுவதும்... சுகபோக வழிக்கு அழைத்துப் போவதும்... கோபத்தை குறைத்து குளிர்விப்பதும்... மறதியை நீக்கி ஞாபகத்தை அதிகரிக்கச் செய்வதும்... பூர்வவினைகளால் ஏற்பட்ட நோய்களை நீக்குவதும்... பார்த்த உடனே மிகுந்த சந்துஷ்டியைத் தருவதும்... வாசனையால்... மனக்கிளர்ச்சியை ஏற்படுத்துவதும்... பருகுவதால் மிகுந்த ஆனந்தத்தைத் தரவல்லதும்... நீராடுவதால் முன் வினையால் ஏற்பட்ட நோய்களைத் தீர்ப்பதும்... நினைப்பதால் சந்துஷ்டியான மறுபிறவியைத் தரவல்லதுமான மகாநதியே... கங்கையே... இமயவானின் புத்ரியே... இந்த பூமியின் தலையாய தேவதையே... எல்லா தேவர்களும் கண்டு இன்புறும் உன்னை நான் வணங்குகிறேன். என்னை ஆசீர்வதிப்பாயாக... என் பாவங்களைத் தீர்ப்

பாயாக...'' அவர்கள் சொல்படி அவன் மூன்று முறை நீரில் முங்கி முங்கி எழுந்தான்.

''கங்கையைப் பற்றி எனக்கு சொன்ன பிராமணோத் மர்களுக்கு நமஸ்காரம். என் யாத்திரை உங்களால் நற்பேறு பெற்றது. சிவனுக்கும், திருமாலுக்கும், பிரம்மாவிற்கும் நமஸ்காரம்.'' இடுப்பளவு நீரில் நின்றபடி...'' என் குல தெய்வத் தையும், கிராமத்துத் தேவதைகளையும் மனமார நமஸ்கரிக் கிறேன். அவர்கள் அனுமதியின்றி இந்த அற்புத கங்கை தரிசனம் ஏற்பட்டு இருக்காது. என் தாய் தந்தையரையும்... என் ஆச்சாரியனையும் ஒருசேர கண்ணீர் கசிய நினைத்துக் கொள்கிறேன். அவர்கள் ஆசீர்வாத பலத்தாலேயே இது நிகழ்ந்திருக்கிறது.

என் மனைவியையும் அவள் தாய் - தந்தையரையும் என் எல்லா உறவினர்களையும் குளிரக் குளிர... கங்கையில் நனைந் தபடி இந்த நேரம் நினைத்துக் கொள்கிறேன். அவர்களுக்கும் இந்த மகத்தான அனுபவம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த் தனைச் செய்கிறேன்.

பிராமணோத்மர்களே... என் பித்ருக்களின் மனம் குளிர... இந்த ஒரு பொற்காசை உங்களுக்கு வழங்குகின்றேன். மார்பு நோக எனக்கு அமுதம் கொடுத்த என் மாதாவையும், அவர் வழிப்பெண்டுகளையும் நினைத்துக்கொள்கிறேன். பல சோகங்களுக்கு இடையே கற்புக்கரசிகளாய் அவர்கள் வாழ்ந்த தால்தான் என் காசியாத்திரை நிறைவேறியது. இல்லையெனில் என் வாழ்வு மங்கலாகப் போயிருக்கும். அவர்கள் தியாகத் திற்காக கங்கையே... அவர்களை நினைத்து உன் முன்னே வணக்கம் செய்கிறேன். இருப்போர்களின் ஆன்மாவும், இறந்தோர்களின் ஆத்மாவும் என் வணக்கத்தால் குளிர்வடை யட்டும்.

யத் கிஞ்சிதம், நான் தருகின்ற இந்த ஒற்றைப் பொற்காசை ஆயிரம் கட்டி வராகனாக நினைத்து மனம் நிறைவாக என்னை



வாழ்த்த வேண்டும்'' அவர்கள் மூவருக்கும் மூன்று பொற் காசுகள் கொடுத்தான். அவர்கள் திகைத்தார்கள். மனமொரு மித்து கங்கையில் மூழ்கினான்.

கரையின் மேல்படியில் சுமார் இருநூறு சடாமுனி நிரஞ்சனர்கள் அடர்த்தியாய் நின்று அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதில் பலபேர் கையில் ஆயுதங்கள் இருந்தன.

## 17

அந்தக் குழுவின் தலைவருக்கு வயது முதிர்ந்து இருந்தது. ஆனால், முடி நரைக்கவில்லை. அந்த சடாமுனிகள் ஹடயோகிகள். மரணத்தைத் தள்ளிப்போடவும் முதுமை வராது இருக்கவும் கடும் பிரயத்தனங்கள் செய்பவர்கள்.

உடம்பு வலுமீது நம்பிக்கை இருப்பவர்களுக்கு அதீக கர்வமிருக்கும். அந்தக்கர்வம் அங்குள்ள ஒவ்வொருவர் மேலும் எகிறிக்கொண்டு இருந்தது.

'ஒரு மனிதன் இருநூறு பேரை சமாளிப்பது என்பது முடியாத காரியம். இவர்களில் ஏழெட்டுப் பேரைச் சமாளிக் கலாம். குத்திக் கொல்வதாக இருந்தால் பத்துப் பதினைந்து பேரோடு சண்டை செய்யலாம். யாரையோ குத்திக் கொல்லவா காசி வந்திருக்கிறோம்.'

புவனபதி தீவிரமாய் யோசித்தான்.

கங்கை நீரில் பின்னடைந்து தப்பிக்க வேண்டுமென்று திட்டமிட்டான்.

அந்தச் சடாமுனிகளின் தலைவர் இங்கு வா என்றொரு பிராமணரைக் கூப்பிட்டார். பிராமணர் வேகமாய் ஓடிப் போய் நின்றார்.

''அவன் கொடுத்த காசைக் காட்டு...'' என்று கட்டளையிட்டார். அவர் காசைக் காட்டியதும் அதைச் சோதித்து விட்டு திருப்பிக் கொடுத்தார்.

தன் கூட வந்தவர்களை அங்கேயே நிற்கச் சொல்லிவிட்டு படியிறங்கினார்.

அவனுக்கு எதிரே ஒரு கோல் தூரத்தில் நின்றார்.

''என்னை ஹரிகிருஷ்ணன் மகராஜ் என்று கூப்பிடுவார்கள். நான் சந்திர வம்சம். சீதையின் தகப்பனார் ஜனகரின் நேர் கிளை. என் தேசம் பாஞ்சாலம். நான் ரிக்வேதம் துறவி. திருமணமே செய்துகொள்ளாத நைஷ்டிக பிரம்மச்சாரி. நீ யார்?''

புவனபதி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''என்னைக் கொல்ல முயன்றார்கள். என் மூங்கிலைப் பிடுங்க முயன்றார்கள்.''

''எது முதலில் நடந்தது?'' அந்த சடாமுனி தலைவர் கேட்டார்.

''மூங்கிலைப் பிடுங்கியது முதலில் நடந்தது.''

''உன்னுடைய மூங்கில கோல் அத்தனை முக்கியமானதா?''

''என் பொருள்கள் எல்லாம் எனக்கு முக்கியமானது. அது பிடுங்கப்பட்ட விதம் எனக்கு அவமானம் ஏற்படுத்தியது. அதனைத் தட்டிக்கேட்ட போது அவர்கள் கல்வீசினார்கள். ஒரு கல் என்மீது பட்டிருந்தாலும் உயிர் போயிருக்கும்.''

''எதற்கு காசிக்கு வந்திருக்கிறாய்...?''

''மூத்தோர் கடன் தீர்க்க...''

''அது மட்டும்தானா...?''

''சாகதம் கற்றுக் கொள்ள... யந்திர, மந்திரங்கள் தெரிந்து கொள்ள...''

''நீ கோபமுள்ளவன். உன்னால் எதைத் தெரிந்து கொள்ள முடியும்?''



''எதை வைத்துச் சொல்கிறீர்கள்?''

''என் ஆட்களை நீ அடித்திருக்கும் விதம் குரூரமானது. என் மனதில் மிகப்பெரிய வேதனையை அது உண்டாக்கி விட்டது. எலும்புகள் நொறுங்கும்படி அடித்திருக்கிறாய். காசிக்கு வந்து சாதுக்களை இப்படி வதை செய்வது தர்மம் தானா?''

''இவர்களா சாதுக்கள்? இவர்கள் போக்கிரிகள். இவர்களுக்கு பரிந்து வருவது உங்கள் நன்னடத்தையை சந்தேகப்பட வைக்கிறது. காசியை நடுங்க வைக்கும் இவர்களை... இவர்களைச் சார்ந்தவர்களை பயமுறுத்துவதற்காகத் தான் அத்தனை மூர்க்கமாய் அடித்தேன். எனக்குக் கோபம் வந்திருப்பின் கொன்றிருப்பேன்.''

''நல்லது.'' அந்த சடாமுனி கிழவர் மஞ்சள் பல் தெரிய சிரித்தார்.

''உன்னை நிதானமாகப் பழி தீர்க்க எனக்குத் தெரியும். மூங்கில் நிறைய பொற்காசுகள் வைத்திருக்கிறாய். எனவே, அது பிடுங்கப்பட்டதால் கோபமடைந்து விட்டாய். காசிக்கு ஒற்றை பிராமணன் காசோடு வந்து இருக்கிறாய். என்ன கொண்டு போகப் போகிறாய் என்று எனக்குத் தெரிந்து விட்டது. உனக்குத் தெரியவில்லை.

எங்கள் நிரஞ்சனர்கள் உன்னை ஒன்றும் செய்ய மாட்டார்கள். ஆனால், இந்த காசியில் ஏதும் கற்றுக்கொள்ள வேண்டுமெனில் இந்த நிரஞ்சனர்களைத் தவிர வேறு யாரிடமும் எதுவும் கற்றுக்கொள்ள முடியாது. வன்முறைக்கு வன்முறை என்று ஒரு கணக்கு முடிந்து போயிற்று.

வேறு கணக்குகள் போட நீ எங்களிடம் வந்துதான் ஆக வேண்டும்.

உன் மூங்கில் காசு எங்களுக்குத் தேவையில்லை. மன்னர்களாலும் பிரபுக்களாலும் எங்கள் கஜானா இடைவிடாது நிரப்பப்படுகிறது. உன்னை என்னிடம் அழைத்து வருவதற்காக

அவர்கள் உன் மூங்கிலைப் பிடுங்க முயற்சி செய்து இருக்கிறார்கள். உன் விடாத முயற்சியை - தைரியத்தை சோதிக்க கல்லெறிந்திருக்கிறார்கள். அதை நீ புரிந்து கொள்ளவில்லை. ஏனெனில், நீ இழந்தது மூங்கிலை அல்ல. முந்நூறு தங்கக் காசுகளை.

கங்கை நீரில் குதித்து தப்பித்து விடலாம் என்று பார்க்கிறாயா... நீ நீரில் குதித்த கணமே நாற்பது பேர் பாய்வார்கள். கை கோர்த்து வளையமாக்கி மடக்கிக் கொள்வார்கள்.

நெடுந்தொலைவில் இருந்து அறிவு தேடி வந்தவனென்பதால் உன்னை மன்னித்து விடுகிறேன். என் ஆசி இல்லாமல் உன் காசியாத்திரை நிறைவடையாது. உன் படிப்பு பூரணமாகாது. இங்குள்ள ஒவ்வொரு நிரஞ்சனர்களின் கால்களிலும் விழுந்து நீ நமஸ்கரிக்கும் வரை உனக்கு மன்னிப்பு கிடைக்காது. மறுபடி சொல்கிறேன். இனி நிரஞ்சனர்கள் உன் வம்புக்கு வரமாட்டார்கள். உதவிக்கும் வரமாட்டார்கள்.''

திரும்பி கைவீசி அந்த இருநூறு சடாமுனிகளை நோக்கி ஏதோ பாஷையில் கனத்த குரலில் கத்தினார்.

விநாடி நேரத்தில் அவர்கள் கலைந்து போனார்கள். அவர்கள் கட்டுக்கோப்பு அற்புதமாக இருந்தது.

அந்தக் கட்டுக்கோப்பு கூட அவர்களின் முரட்டுத்தனத்திற்கு காரணமாக இருக்குமோ என்று தோன்றியது.

தட்சணை வாங்கிய பிராமணர் படிகளில் உச்சிக்குப் போய் நாலாபுறமும் பார்த்துவிட்டு அவர்கள் போய்விட்டதாக அவனுக்கு தெரிவித்தார்.

அவன் மூங்கிலை அருகே நட்டுவிட்டு பலமுறை கங்கையில் மூங்கினான். தன்னுடைய மூதாதையர்களையும்... தன்னுடைய குருநாதரின் மூதாதையர்களையும் நினைத்து நினைத்துத் தலை மூழ்கினான். தர்ப்பணங்கள் செய்தான்.



மூங்கிலை எடுத்துப் பாதத்திற்கு அடியில் வைத்துக் கொண்டு கிழக்கு நோக்கி ஆழ காயத்ரி ஜபம் செய்தான்.

எங்கு மந்திரம் மனதில் ஆரம்பிக்கிறதோ அங்கேயே அசையாது நின்றான். தன்னை மறந்தான்.

காற்று கூடுதலாக வீசியது போல் ஒரு தனி அசைவு அவன் முன்னே ஏற்பட்டு நகர்ந்தது.

அவன் கண் விழித்தபோது அவன் காலின் கீழிருந்த மூங்கிலைக் காணவில்லை. பதறி எழுந்துபோது சற்றுத் தொலைவில் ஒரு நிரஞ்சன முனி அவன் கோலை கையில் வைத்து சுற்றிக் கொண்டிருந்தான். அவன் அருகே போனதும் மூங்கிலை முழங்காலால் இரண்டாக உடைத்து அதில் போடப்பட்டிருந்த தங்கக் காசைத் தரையில் குவியலாகக் கொட்டினான். மூங்கிலை இரண்டு பக்கமும் வீசினான்.

''மூங்கில் வேண்டுமானால் மூங்கிலையெடுத்துக்கொள். காசு வேண்டுமானால் காசை எடுத்துக்கொள்'' என்று சொல்லி வாய்விட்டுச் சிரித்தான. விலகி ஓடி பல நூறு பேர்கள் பார்க்க புவனபதி காசுகளை அள்ளி தன் மேற்துண்டில் முடிந்து கொண்டான்.

வயது முதிர்ந்த பெண்களும் கிழவர்களும் நிழலாக உட்கார்ந்த சாதுக்களும் நடனப் பெண்களும் தாசிகளும் அவன் காசு அள்ளிய வேகத்தைப் பார்த்துச் சிரித்தார்கள்.

மான் தோலோடு கூடிய துணி மூட்டையை பிராமணரிடம் இருந்து புவனபதி வாங்கிக் கொண்டான்.

''காசிப் பட்டணத்திற்கு ஒன்றுமில்லாமல் வா... ஒன்றும் இல்லாமல் போ...'' என்று 'பத்மபுராணம்' சொல்கிறது.

ஆனால், தரையிலிருந்து இத்தனை வேகமாகக் காசு அள்ளுகிற பிராமணனை அந்தக் காசி தேசம் இப்போதுதான் பார்க்கிறது.

''இது கலிகாலம். காசுக்கு ஆசைப்படுகிற பிராமணனும் மோட்சத்திற்கு ஆசைப்படுகிற தாசியும் நிறைந்த கலிகாலம்.''

ஒருவர் வாய்விட்டுச் சிரித்தார்.

''திராவிட தேசத்திலிருந்து வந்து நிரஞ்சனர்கள் பார்வையில் பட்டுவிட்டாய். உனக்கு தகனம் காசியில் தான். அவர்கள் உன்னைத் தூங்க விடமாட்டார்கள். நிம்மதியாய்ச் சாப்பிட விடமாட்டார்கள். காசி எல்லையைத் தாண்டவும் விட மாட்டார்கள்.'' ஒரு கிழவி இடுப்பில் கை வைத்துக் கொண்டு சிரித்தபடி சொன்னாள்.

புவனபதிக்கு அவள் பேச்சு கோபம் கொடுத்தது. கோபத்தால் அவளை உற்றுப்பார்த்தான்.

''அடி கிழ தாசியே... ஆயிரமாயிரம் ஆண்களைப்பார்த்த அனுபவத்தில் என்னைப் பயமுறுத்துகிறாயா...

என் தகனம் காசியில் நடப்பது எனக்கு சந்தோஷமே. ஆனால், என் தகனம் நடப்பதற்கு முன் பல நூறு நிரஞ்சர்கள் பலியாவார்கள் என்பதை ஞாபகம் வைத்துக்கொள். காசி தீக்கிரையாகும் என்பதைப் புரிந்துகொள்.

தெற்கே இருந்து வந்ததனால் அஞ்சியவன் என்று நினைத்தாயா... நிரஞ்சனர்களைப் போல வெறும் சோற்றுத் தடியன் என்று என்னை நினைத்தாயா... காசியில் எச்சில் இலைகளை எல்லாம் ஓலைச் சுவடிகளாக வைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். இதுதான் தவறு.''

அந்த கிழவியை அவன் அப்படி அவமதித்தது எல்லோருக்கும் பயத்தைக் கொடுத்தது. பலர் முகம் திருப்பிக் கொண்டார்கள்.

புவனபதி படியேறி நகரத்தின பெருவீதியில் நிதானமாக நடந்தான்.

'உடனடியாய் இந்தக் காலை ஒரு பாதுகாப்பான இடம் பார்க்க வேண்டும். நிரஞ்சனர்களுக்கு எதிராக இந்தக்



காசியில் யாரும் இருக்கமாட்டார்களா? நாம் ஒண்டிய ஓரிடத்தில் அவர்களுக்கு எதிர்ப்பான ஒரு குரல் கேட்டதே... யாராவது அழைக்க மாட்டார்களா...''

புவனபதிக்கு அருகே கழுத்தில் தங்கச் சங்கிலியும் கையில் மோதிரமும் கொண்ட ஒரு பனிரெண்டு வயதுப்பையன்... 'என் பின்னால் வா... என் பின்னால் வா...' என்று சொல்லிக் கொண்டு வந்தான்.

அவன் பின்னால் இரண்டு மூன்று நாய்கள் ஓடி வந்தன.

''ஓ... பிராமணா... என் பின்னால் வா...'' என்று அடிக்குரலில் சொன்னான். இரண்டு மாளிகைக்கு நடுவே இருந்த சிறிய சந்தில் சடேரென்று திரும்பினான். நின்று திரும்பிப் பார்த்தான்.

அவனைப் புவனபதி பின் தொடர்ந்தான். ஒரு மாளிகையில் பின்பக்க கதவு வழியாக போனார்கள்.

''இது காசி தேசத்து அமைச்சரின் உல்லாச வீடு. அவருக்குப் பிடித்தமான பெண்கள் இங்கே வசிக்கிறார்கள். நீங்கள் சண்டையிட்டு இரண்டு நிரஞ்சனர்களை வீழ்த்தியது மூத்த அமைச்சருக்குத் தெரிந்துவிட்டது.

ஆனாலும் உங்களை அரச சபையிலும்... அவரது இல்லத்திலேயும் சந்திக்க அவர் விரும்பவில்லை. நிரஞ்சனர்களின் பகையை சம்பாதிக்க விரும்பவில்லை. ஆயினும்... உங்களைப் பாராட்டி கௌரவித்து உங்களுக்கு ரகசியமாய் சில உதவிகளை அவர் செய்ய விரும்புகிறார்.

வெகு நிச்சயமாய் இந்த உதவிகள் உங்களுக்கு தேவைப் படும். இந்த இடத்தில் நீங்கள் சிறிது கூட பயமின்றி ஓய்வெடுக்கலாம். இது பெண்கள் உள்ள இடம் என்பதால் நிரஞ்சனர்கள் இங்கு வரமாட்டார்கள்.

இன்று மாலை முதலமைச்சர் உங்களைச் சந்திப்பார். அல்லது சந்திக்க அழைத்துப் போவார்கள். நீங்கள் உள்ளே போகலாம்.''

அவன் பெரிய மரக்கதவைத் திறந்து விட்டான்.

உள்ளே ரேழி இருட்டாக இருந்தது. பிறகு பெரிய கூடம் இருந்தது. கூடம் தாண்டி ஒரு அறையும்... அந்த அறையில் வெளிச்சமும் தெரிந்தன.

காலைத் தரையில் தேய்த்து புவனபதி அந்த வெளிச்சமான அறையை நோக்கி நகர்ந்தான். அந்த அறையில் எட்டிப் பார்த்தான்.

ஒரு பெண்ணின் குரலில் பாட்டு கேட்டது. இன்னொரு பெண் குரல் அடிக்கடி சேர்ந்து கொண்டது.

புவனபதி தயங்கி நின்றான். எட்டிப் பார்த்தான். இருபது வயது மிக்க இரண்டு இளம் பெண்கள் ஒருவரையொருவர் பின்னி அணைத்துக் கொண்டு ஒருவரையொருவர் தடவிக் கொண்டு தன்னை மறந்து பாடிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் முகத்தில் மதுவின் மயக்கம் இருந்தது. அவர்கள் தடவலில் ஓரினச் சேர்க்கை ஆபாசம் இருந்தது.

இதுவா ஆபத்தில்லாத இடம்? புவனபதி வெட்கப் பட்டான்.

## 18

அந்தப் பெண்கள் பரஸ்பரம் செய்து கொண்ட ஆலிங்கனத்தின் வேகத்தைக் காணப் பொறுக்காத புவனபதி முகம் திருப்பிக் கொண்டான்.

தொண்டையைக் கனைத்தும், கதவை அசைத்தும் தன் இருப்பை வெளிப்படுத்தினான்.

''யாரது... என்ன வேண்டும்..?'' அந்தப் பெண்கள் இருவரும் பின்னிக் கொண்டு இருப்பதில் இருந்து விடுபடாமல்



குரல் எழுப்பினார்கள். அலுப்போடு எழுந்து கதவருகே வந்தார்கள். வரும்போது மெல்லப் பிரிந்தார்கள்.

''அக்கா... யாரோ ஒரு ஆண்...'' முதலில் வந்தவள் சற்று அச்சத்தோடு பின்னடைந்தாள்.

''என்ன வேண்டும்?'' அடுத்து வந்தவள் உரத்துக் கேட்டாள்.

''என் பெயர் புவனபதி. நான் திராவிட தேசத்தில் இருந்து. அங்கேயுள்ள காஞ்சி மாநகரிலிருந்து காசிக்கு யாத்திரையாக வந்திருக்கிறேன். ஒரு பையன் என்னை அமைச்சர் இங்கே தங்கும்படி சொன்னதாகத் திடீரென்று வழிகாட்டினான்.''

''எந்தப் பையன்?''

''கழுத்தில் தங்கச் சங்கிலி அணிந்திருந்தான். அவன் பின்னால் நாய்கள் இருந்தன.''

''நீ அந்தணனா..?''

''ஆமாம்''

''உள்ளே வா''

புவனபதி உள்ளே நுழைந்தான்.

''உணவு முடிந்ததா..?''

''இல்லை''

அவர்கள் மாளிகையின் மேலுள்ள பக்கத்திற்கு அழைத்துப் போனார்கள். அங்கிருந்த வயது முதிர்ந்த பெண்களிடம் ஏதோ உத்தரவிட்டார்கள்.

மனை போட்டு தட்டும், குவளையில் நீரும் வைத்தார்கள். அவன் உண்ணும் வரை மவுனமாக இருந்தார்கள். ஒரு சிறிய பெண்ணை விசிறச் சொன்னார்கள். உண்டு முடித்ததும் கை கழுவ நீர் கொடுத்தார்கள். அந்த உணவு வாய்க்கு சற்று விநோதமாக இருந்தது. அந்தக் காய்கறி பக்குவமும்... பருப்பு

நிறைய கலந்த விதமும், எருமை நெய்யும் வயிற்றில் ஒரு கனத்தை உண்டாக்கின.

அவனை மறுபடியும் பாட்டு பாடிய இடத்திற்கு கூட்டி வந்தார்கள்.

அவர்கள் நகர்ந்ததும் புவனபதி அந்த இடத்தை சுற்றிப் பார்த்தான். சாளரங்கள் வழியே தெருவை எட்டிப் பார்த்தான்.

மாளிகையின் உச்சியில் இருந்து பார்த்தால் கங்கை தெரியும் என்று தோன்றியது. அவன் படிகள் தேடினான். சற்று இருட்டான இடத்தில் படிகள் இருந்தன. ஒரு சாளரத்தை திறக்க, படிகள் தெளிவாகத் தெரிந்தன.

மடமடவென்று மேலேறி முதல் தளம் போனான். அங்கும் இளம் பெண்கள் இருந்தார்கள். தையல் வேலை செய்து கொண்டிருந்தார்கள். தலை வாரிக் கொண்டிருந்தார்கள்.

அடுத்த தளத்திற்கு ஏற... அங்கே பெரிய கூடமும், நிறைய பெட்டிகளும் இருந்தன.

இரண்டு பேர் அமரக்கூடிய சிம்மாசனமும்... நிறைய மனைப் பலகைகளும்... ஓலைச் சுவடிகளைப் வைத்துப் படிக்கும் சிறிய மேசைகளும்... தோல் புத்தகங்களும் இருந்தன.

நிறைய அகல் விளக்கு தாங்கிகள் இருந்தன.

அவன் ஆவலோடு போய்... பெட்டி மீது வைத்திருந்த ஓலைச் சுவடிகளைப் பார்த்தான். ஒன்று மருத்துவ நூல், மற்றொன்று வான சாஸ்திரம்... இன்னொன்று ஜாதக அலங்காரம். இன்னொன்று தர்க்கம்... இன்னொன்று 'சர்ப்ப ரஜ்ஜு' விளக்கம்.

கயிறும் பாம்பும் பற்றி அவன் விவாதித்து கேட்டு இருக்கிறான். காஞ்சிபுரத்தில் நாட்கணக்கில் இது பற்றிய பாடம் நடக்கும். உலகம் ஒரு தோற்றம். சந்தோஷம் என்பது நாம் நினைத்துக் கொள்ளும் விஷயம். துக்கம் என்பது மனதின்



30187
465690

கற்பனை. உண்மையில் எதுவுமே இல்லாததை இருப்பதுபோல கண்டு பயப்படுகிறோம்.

இருளில் ஒரு கயிறு தெரிகிறது. அது வளைந்து கிடப்பதைப் பார்த்தால் ஒரு பாம்பு படுத்திருப்பது போலத் தோன்றுகிறது. குச்சியால் நிமிண்ட கயிறு குச்சியின் நுனியில் சுற்றிக்கொண்டு எழும்பி விழுகிறது. அது பாம்பு தலை தூக்கிப் பார்ப்பதைப் போலத் தோன்றுகிறது. மனதை பயம் கவ்வுகிறது. அடிக்க... கயிறு நகர்கிறது. அது பாம்பு துடிப்பது போல இருக்கிறது.

மனம் கண்கள் பார்த்ததை வைத்து பயந்து கூவுகிறது. உதவிக்கு ஆட்களை உரக்க அழைக்கிறது

'பாம்பு... பாம்பு' என்ற கூச்சலைக் கேட்டு ஆட்கள் பாம்பு கற்பனையோடு ஓடி வருகிறார்கள். பாய்ந்து அடிக்கிறார்கள். ஒவ்வொரு அடிக்கும் கயிறு பாம்பாக நகர்கிறது.

யாரோ - ஒருவர் சந்தேகப்பட்டு பந்தம் கொண்டு வர... அத்தனை பேரும் விளக்கு வெளிச்சத்தில் எட்டிப் பார்க்க, பார்த்த நேரத்தில் அது கயிறு என்று தெரிந்து அதுவரை நினைத்துக் கொண்டிருந்த பாம்பு என்ற தோற்றம் மறைந்துவிட்டது.

'இல்லை இது பாம்புதான்...' என்று சொன்னால் சிரிப்பாக போய்விடும். எனவே, உலகத்தை நாம் என்னென்ன விதமாகவோ கற்பனை செய்து வைத்திருக்கிறோம். ஞான வெளிச்சம் பட உலகத்தின் உண்மை தோற்றம் தெரிகிறது.

புவனபதி ஒவ்வொரு ஓலையாய் நகர்த்தி அந்த விளக்கத்தை சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டு போனான். மிக எளிமையாக ஒரு கதை சொல்வது போல... நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை பல்வேறு கோணங்களில் ஆராய்ச்சி செய்யப்பட்டிருந்தது.

நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? நாம் என்பது என்ன..? யார் என்று தொடர்ந்து ஆராய்ச்சி போயிற்று. தன்னைச் சுற்றி லேசாய் ஆட்கள் நகர்வதை உணர்ந்து அவன் தலை தூக்கினான்.

ஆறேழு பெண்கள் தொலைவில் நின்றிருந்தார்கள்.

''என்ன வேண்டும்..?'' மெல்ல வினவினான்.

''நாங்களெல்லாம் காசியிலேயே பிறந்து காசியிலேயே வளர்ந்தவர்கள்.''

''அப்படியா?''

''அருகே உள்ள கிராமங்களுக்கு கூடப் போய் பார்த்து அறியாதவர்கள்.''

''ஓஹோ.''

''எங்களுக்கு சோழ தேசத்தைப் பற்றிச் சொல்லுங்களேன். அங்கு வாழ்க்கை முறை எப்படி? என்ன உணவு... அங்கு உள்ள பெண்கள் மிக அழகிகளா..? உலோக பொம்மை செய்வதில் சோழ தேசத்தவர்கள் மிக கெட்டிக்காரர்களாமே... யானைகளை அதிகம் பழக்கி வைத்திருப்பீர்களாமே..? வழியில் எந்த நதியெல்லாம் பார்த்தீர்கள்? எங்கெல்லாம் தங்கினீர்கள்? நீங்கள் ஓய்வெடுக்கும் வரை எங்களோடு பேசக் கூடாதா?''

''நீங்கள் பேச வந்ததில் சந்தோஷம்.'' புவனபதி அந்தப் பெண்களைப் பார்த்து கைகூப்பினான். அவர்கள் வெட்கப் பட்டார்கள்.

''நீங்கள் எல்லோரும் சௌக்யமாக என்றும்... உங்கள் கணவர்கள் தீர்க்காயுசோடு வாழ வேண்டும் என்றும் நான் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.''

''இது என்ன இடம்? யார் வீடு? நீங்கள் யார்? எதற்காக முதலமைச்சர் என்னை இங்கே வரவழைத்து இருக்கிறார் தெரியுமா?''

''இது முதலமைச்சர் இல்லம். நாங்கள் எல்லோருமே அவரின் காமக்கிழத்திகள். அவர் மனைவியோடு இருக்குமிடம் இன்னும் உள்ளடங்கி இருக்கிறது. காலையில் அங்கிருந்து விட்டு... மாலையில் முதலமைச்சர் இங்கு வந்து விடுவார். முதலமைச்சரை அந்தரங்கமாகப் பார்க்க விரும்புபவர்கள் இங்குதான் வருவார்கள்.



முதலமைச்சர் இங்கு பண்டிதரைக் கூப்பிட்டு பெரிய விவாதங்கள் நடத்துவார். அப்படி சபை நடக்கும்போது நாங்கள் எல்லோரும் அவர்களுக்கு உணவு பரிமாறி, விசிறி உபசாரம் செய்வோம்.

சில சமயம் இங்கு பாடகர்களும் வருவதுண்டு. இரவு முழுவதும் ராக ஆலாபனை நடைபெறும். கவிதைகள் எழுதப் படும். அந்தக் கவிதைகள் பாட்டாய் உருப்பெறும்.

முதலமைச்சர் கங்கை என்று தலைப்பு கொடுத்தால் ஏதேனும் ஒரு கவிஞர் அதைப் பற்றி பாட்டெழுதுவார். பாடகர்கள் மெட்டமைத்துப் பாடுவார்கள். சில சமயம் எங்களை முதலமைச்சர் ஆடச் சொல்வதும் உண்டு.

இது ஒரு சந்தோஷமான இடம். அதே சமயம் அரசாங் கத்தின் முக்கியமான இடம். காசியில் எது நடந்தாலும் இங்கு காவலர்களுடன் விவாதிக்கப்படும்.

புவனபதி எல்லாம் மனதில் வாங்கிக் கொண்டான். சோழ தேசம் பற்றியும், காவிரி பற்றியும், பெண்கள் பற்றியும், உணவுகள் பற்றியும், பானங்கள் பற்றியும்... கோயில்கள் பற்றியும், விழாக்கள் பற்றியும் விவரித்தான்.

கடல் பற்றி சொன்னான். முத்து குளிப்பது பற்றி சொன்னான்.

அந்தப் பெண்கள் விதவிதமான வடிவத்தில் உட்கார்ந்து அவன் பேசுவதை ஆவலோடு கேட்டார்கள். அநேகமாய் எல்லாப் பெண்களும் அதிகம் போர்த்தாமல் லஜ்ஜையின்றி உட்கார்ந்திருந்தார்கள்.

அதிலொரு பெண் சட்டென்று துள்ளி நிமிர்ந்தாள்.

''குதிரைகள் வருகின்றன...'' என்று உரக்கச் சொன்னாள். மற்ற பெண்களும் கூர்மையானார்கள். சரசரவென்று அந்த இடத்தைக் காலி செய்தார்கள்.

கீழே உரத்த குரலொன்று கேட்டது. நிறைய கட்டளைகள் கேட்டன. சாளரத்தின் வழியே எட்டிப் பார்த்தான். வாசலில் ஒரு சிறு கூட்டமும் நிறைய குதிரைகளும் நின்றிருந்தன.

ஒரு ஆண் சேவகன் மேலே வந்தான். புவனபதியை உற்றுப் பார்த்தான்.

''கீழே வா...'' என்றான்.

முதலமைச்சர் நல்ல உயரம். கூர்மையான மூக்கு. உருண்டையான கண்கள். கன்னங்களில் செழுமை. முகவாயில் குழி. தலையில் நரை. நெற்றியில் மூன்று சுருக்கங்கள். நீண்ட கைகள். தேர்ந்த உணவும், போகமும் அனுபவித்து அனுப வித்துப் பூரித்துப் போன உடல்.

வாய் தாம்பூலத்தை அரைத்துக் கொண்டிருந்தது. கைகள் உடைகளைக் களைந்து கொண்டிருந்தன. பாதங்கள் அழுக்குப் படாமல் வெளேர் என்றிருந்தன.

மேலாடையைக் கழட்டுகிறபோது இடுப்பில் குறுவாள் தரித்திருப்பது தெரிந்தது. குறுவாளை எடுத்துக் கொடுத்துவிட்டு பின்பக்கமாகச் சொருகி இருந்த வேட்டியை அவிழ்த்துக் கொடுத்தார். ஒரு சால்வையை இடுப்பில் சுற்றிக் கொண்டார்.

அப்போது அவர் தொடைப் பகுதியிலும் ஒரு சிறிய கத்தி கட்டப்பட்டிருப்பது தெரிந்தது.

வெளிப்பார்வைக்கு ஆயுதமில்லாதவராகத் தெரிந்தாலும் உள்ளே மிகக் கவனமாய் அவர் ஆயுதம் தரித்திருப்பது ஆச்சரியமாக இருந்தது. அவர் ஆபரணங்களையும் கழட்டச் சொன்னார். முத்து மாலைகள், புஜத்தில் கட்டப்பட்ட பொற் பூக்கள், கங்கணங்கள், வீரக் கழல் எல்லாம் மடமடவென்று கழட்டப்பட்டன. பெட்டிகளில் பாதுகாக்கப்பட்டன.

அனுபவப்பட்டவர்கள் போலுள்ள நாலைந்து ஆண்கள் அவர் சொன்னதை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். அவர் குளிக்கப் போகலாம் என்று சொல்ல... ஆண்கள் பின்னடைய...



அதுவரை சுற்றி அவரைப் பார்த்திருந்த காமக்கிழத்திகள் ஓடிப்போய் அவரைச் சுற்றிக் கொண்டார்கள்.

வந்தவர்களில் இரண்டு பேரை அள்ளி அணைத்துக் கொண்டார்.

''அந்தணனே, என் பின்னால் வா'' என்றார்.

மாளிகையின் பின் கட்டில் வெந்நீர்க் குளியல் ஆரம்பமா யிற்று. அந்தப் பெண்கள் தங்கள் உடைகளை இறுக்கிக் கொண்டு அவரைக் குளிப்பாட்ட ஆரம்பித்தார்கள்.

அவர் அந்தப் பெண்களிடம் காம சேஷ்டைகள் செய்ய, சிணுங்கி சிரித்தார்கள். ஒரு அந்நியன் இருப்பதை முதலமைச் சரோ, பெண்களோ உணரவே இல்லை.

''அந்தணனே, உன் பெயரென்ன?''

''புவனபதி''

''புவனபதிக்கு ஒரு ஆசனம் போடு.''

ஒரு பெண் ஓடிப்போய் முழங்கை உயர ஆசனம் எடுத்து வந்தாள். முதலமைச்சர் அதில் அவனை உட்காரச் சொன்னார்.

''அந்த இரண்டு நிரஞ்சனர்களை ஏன் உயிரோடு விட்டாய்..? அடித்துக் கொன்றிருக்கக் கூடாதா..? உன் சண்டை பற்றி நான் கேள்விப்பட்டேன். மிகுந்த சந்தோஷமடைந்தேன். மன்னர் உனக்கு தன் ஆசீர்வாதங்களைச் சொல்ல சொன்னார். ஆயினும் ஒரு கேள்வி. முன்னூற்றி அறுபத்தி ஆறு பொற்காசு கள் உனக்கு யார் கொடுத்தார்கள்? எங்கிருந்து கிடைத்தது?

இத்தனை காசோடு காசிக்கு வந்திருக்கிறாயே... நீ வந்ததன் நோக்கம் படிப்பா... இல்லை வேறு ஏதேனுமா?''

புவனபதி திகைத்தான்.

முதலமைச்சர் தன்னோடு குளிக்கும்படி ஒரு இளம் பெண்ணைக் கட்டளையிட்டார். அந்தப் பெண் இடுப்புத் துணி தவிற மற்றெல்லா உடைகளையும் அவிழ்க்க... புவனபதி தவித்துப் போனான்.

## 19

இது என்ன தேசம்? இது என்ன விதமான கலாச்சாரம்? எப்படிப்பட்டவர்கள் ஆட்சி இது? பரதகண்டம் முழுவதும் ஒரே விதமான வாழ்க்கை என்று நினைத்தோமே... அப்படி இல்லையா? காளஹஸ்த்தி மலை வேடர்கள் கூட இப்படி குளிப்பார்களா என்று தெரியவில்லை. ஏழெட்டு பெண்கள் சூழ ஒரு அமைச்சர் இப்படி குளிக்க என்ன காரணம்?

மின்னல் வேகத்தில் கையகல இடுப்புத் துணிதவிர எல்லாம் இந்தப் பெண் குறைத்தாளே.. என்ன குலம் இவள்? தாசி என்பதால் செய்தாளா... தேவதாசி என்பவளை இந்த விதமாய் காசிதேசம் வைத்திருக்கிறதா?

கடவுளே... என்ன அழகு... கோதுமை உடைத்த நிறம், ஆலிலையாய் வயிறு, சிறிய மார்புகள். வளைவான பிருஷ்டம். முகம் பளிங்கு போல் மாசு மருவின்றி அழகாக இருக்கிறது.

முதலமைச்சர் அவளைத் தழுவிக் கொள்ள. இருவர் மீதும் மற்ற பெண்கள் வெதுவெதுப்பான நீரை ஊற்றினார்கள். இப்படி எல்லாம் ஆட வேண்டுமென்று சோழ தேசத்தில் யாருக்கேனும் தெரியுமா? ஒரு அன்னியனை வைத்துக் கொண்டு எப்படி இவர்களால் குதூகலிக்க முடிகிறது?

இந்த முதலமைச்சர் என்னை வெறுப்பேற்றுகிறாரா...?

'ஆறு மாதங்கள் காட்டிலும், மேட்டிலும் நடந்து வந்த அந்தணன் காமத்திற்குக் கவிழ்ந்து விடுகிறானா?' என்று பார்க்கிறாரா...

இல்லை; இது பரிசோதனை எனில் என்னால் வெகு எளிதாக இதில் ஜெயிக்க முடியும். இங்குள்ள ஏழு பெண்களும்



நிர்வாணமானாலும் வெறுமே பார்த்துக் கொண்டு இருக்க முடியும். மனம் தடுமாறாமல் பதில் சொல்ல முடியும்.

ஆனால், இது உள்ளே ஆழப்பதிந்து, விஷ வித்தாய் இறங்கி, மெல்ல மெல்ல கற்பனையைக் கிளறி விட்டு, அவ்வப்போது துளிர் விடுமோ என்று பயமாக இருக்கிறது.

இப்போது நினைவில் பதிந்ததையும் நிச்சயமாய் அகற்ற முடியாது. இந்தப்பெண்ணின் உடம்பு மனக்கண்ணில் மின்னிக் கொண்டே இருக்க எப்படி இதை சமாளிக்கப் போகிறோம் என்று தெரியவில்லை.

ஆனால் இந்த நேரம் கண்மூடினாலோ... முகம் திருப்பினாலோ அது என் பலவீனமாகக் கருதப்படும். பரிகசிக்கப்படும்.

''புவனபதி எந்த வேதம்...?''

''யஜுர் வேதம்...''

''அதிலிருந்து ஒரு கதை சொல்லு...''

புவனபதி சொன்னான்.

''புவனபதிக்கு ஹடயோகப் பயிற்சி உண்டா... ஒற்றைக் காலால் நிற்க முடியுமா...?''

''மூன்று நாட்கள் நின்றிருக்கிறேன்.''

''ஒற்றைக்காலால் நிற்பதை நிரஞ்சனர்கள் பெரிதாக செய்கிறார்கள். அதிகம் அதில் ஈடுபடுகிறார்கள். முதலில் சுவர் சாய்ந்து நிற்கிறார்கள். பிறகு சாயாமல் நிற்கிறார்கள். அப்படி நிற்பதால் ஏதும் மகத்தான பலன்கள் உண்டா...?''

''உண்டு. உடம்பின் ஒரு பக்க நாடி.. அதாவது எதிர்பக்க நாடி வலுவாகும். பிராணன் அந்த எதிர்பக்க நாடியில் விரைவாகச் செயலாற்றத் துவங்கும். பிறகு கால் மாற்றி நின்றால் மற்றொரு பக்கம் செயலாற்றும். இப்படி விரைவாகச் செயலாற்ற... இடை, பின்கலை என்ற நாடிகளைத் தூண்டி விட்டோம் என்றால், சுழுமுனையிலிருந்து சக்தி கிளம்பி

சிகரத்தை விரைவில் அடையும். சகஸ்ரம் அடைய மூன்று காலமும் அறியலாம்.''

''ஆனால் இவர்கள் அறிந்தவர்களாக இல்லையே... வெறும் முரட்டு எருமைகளாக அல்லவா இருக்கிறார்கள். தினம் இவர்களைப் பற்றிய வழக்கல்லவா அரசரைக் கவலைக்கு உள்ளாக்கி இருக்கிறது.''

''ஒரு ஹடயோகி வெறுமே ஒற்றைக் கால் தவம் செய்தால்போதாது. உணவு மிகக் குறைவாக எடுத்துக் கொள்ள வேண்டும். நமது உடம்பின் அரிய சக்தி உணவை ஜீரணம் செய்வதில் முக்கால்வாசி செலவழிந்து போய் விடுகிறது. அப்படி செய்வதில் முக்கால்வாசி சக்தி எரித்த உணவால் கிடைக்கும் கொழுப்பு உயிர் சக்தியின் தகிப்பைக் குறைத்து விடுகிறது. ஈர விறகு போல் புகைகிறது.

ஒரு உடம்பு சக்தி குறையத் துவங்கியதெனில் அதாவது நெருப்பு குன்றி புகையத் துவங்கியது எனில் அது நுரையீரலைத் தான் தாக்கும் நுரையீரல் தாக்கப்பட்டால் நிற்பது, நடப்பது, செரிமானம், யோசிப்பு, மல விசர்ஜனம், ஆழ்ந்த நித்திரை எல்லாமும் தாக்கப்படும்.

ஹடயோகி என்று சொல்லிக் கொள்கிற அந்த நிரஞ்சனர்களின் தலைவர் படி இறங்கியதும்... ஏறியதும்... பேசியதும் பலவீனமாக இருந்தது.

நான் அடித்துப் போட்ட பாஞ்சாலர்கள் பார்க்க பலமாக இருந்தார்களே தவிர அசைவுகளில் எருமைகளாக இருந்தார்கள். பார்வையில் சுறுசுறுப்பு இல்லை. ஐந்து விநாடி நேரத்தில் அவர்களை எப்படித்தாக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டேன். ஆனால் அவர்கள் ஆத்திரமாக கல் வீசிக் கொண்டிருந்தார்கள். எதிரி பின் பக்கமாக வரக்கூடும் என்று அவர்கள் நினைக்கவே இல்லை. அந்த உயரம், அகலம் வெள்ளை வெளேர் என்ற நிறம்... தீர்க்கமான நாசி, வெள்ளைப் பற்கள் எல்லாமே... அழகாக இருந்தனவே தவிர அவர்களுக்கு உபயோகமாக இல்லை.



நான் கம்பு வீசினால் நகர்ந்துக் கொள்ளத் தெரியவில்லை. என்னிடம் எருமை போல் அடிவாங்கினார்கள்.''

''புவனபதி, நீ வர்மக்கலை கற்றாயா?''

''ஆமாம்.''

''சேர தேசத்திலா...''

''இல்லை... சேர தேசத்தில் பயிற்சி பெற்ற தளபதிகளான என் மைத்துனர்களிடம் கற்றேன். நான் நல்லபடியாகத் திரும்பி வரவேண்டுமென்று என் மைத்துனர்கள் குறுகிய காலத்தில் இதை எனக்கு கற்றுக் கொடுத்தார்கள். ஒருவரை அடித்து வீழ்த்த பலம் தேவை இல்லை. கூர்மையான புத்தியும்.. எடை குறைவான உடம்பும்... கோபமில்லாத அமைதியும்... கடும் பயிற்சியும் தேவை.''

''புவனபதி, காசியில் கொலைத் தொழில் கூடாது. காசி மீது படையெடுப்பு நடத்தக் கூடாது...'' என்று இந்துஸ்தானத்து மன்னர்கள் தெளிவாக இருக்கிறார்கள். காசியில் சிறிய காவல் படை மட்டுமே உண்டு. காசி மன்னர் மற்ற மன்னர்களை வரவேற்பதற்காகவே வாழ்கிறவர். காசிக்கு வராதே என்று சொல்ல அவருக்கு உரிமை இல்லை. அதைப் பயன்படுத்திக் கொண்டு இந்த நிரஞ்சனர்கள் அட்டகாசம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

சாதுக்கள் என்ற போர்வையில் வல்லடிகளில் ஈடுபடுகிறார்கள். எவ்வளவு எடுத்துச் சொல்லியும் புரியவில்லை. காசி அரசருக்கு தண்டிக்கவும் பயம். நேற்று நீ அவர்களைத் தண்டித்தது உடனே எங்களுக்குத் தெரிய வந்தது.

நிரஞ்சனர்கள் புகார் செய்வார்கள் என்று நாங்கள் நினைத்தோம். அவர்கள் அமைதியாகி விட்டார்கள். இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா?''

''என்னைப் பழி வாங்கப் போகிறார்களா...''

''ஆமாம். நீ தூங்கும் போது தாக்குவார்கள். அல்லது உன் உணவில் மயக்கம் கலப்பார்கள். எனவே உன்னைப் பாது காக்கும்படி காசி அரசர் கட்டளையிட்டார். நான் இங்கு அழைத்து வந்தேன்.

இது என் அந்தப்புரம். அந்தப்புரங்களில் நிரஞ்சனர்கள் நுழைய மாட்டார்கள். பெண்களால் இழிவு வருவதை பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். பெண்ணைத் தொந்தரவு செய்து பெண்ணால் குற்றம் சாட்டப்பட்ட நிரஞ்சனனை உடனே துரத்தி விடுவார்கள். இங்கே சிறிது காலம் இரு. உனக்கு மிக நல்ல இடமொன்றை காசியில் தேர்ந்தெடுத்துச் சொல்கிறேன்.

நீ இங்கு தங்கும் வரை காசி அரசர் உனக்கு மானியம் தருவார். தினசரி சம்பாவணை செய்வார். என் தனிப்பட்ட வீரர்கள் பதினைந்து பேருக்கு உன்னால் தற்காப்பு பயிற்சி தரமுடியுமா...? நிரஞ்சனர்களை தாக்கித் துரத்தும் அளவுக்கு பலவான்கள் ஆக்க முடியுமா? இதற்கு தனி சன்மானம் தரச் சொல்கிறேன்.''

''முடியும். ஒரு நூறு வீரர்களை பத்து பத்தாக என்னிடம் அனுப்புங்கள். அதில் கெட்டிக்காரனை நான் தேர்ந்தெடுத்துக் கொள்கிறேன்.''

''வேறென்ன வேண்டும் புவனபதி?''

''பசும் பாலும்... அரிசி உணவும் தர ஏற்பாடு செய்ய வேண்டும். கங்கை கரைக்கு அருகே உள்ள இடத்தில் என்னை தங்க வைக்க வேண்டும். ஒரு வேளை நிரஞ்சனர்கள் என்னை தாக்கினால் நான் கங்கையில் குதித்துத் தப்பித்துக் கொள்வேன்.''

''இப்போது குதித்துத் தப்பலாம் புவனபதி. தனுர் மாதத்தில் வெளியே தலை கூட காட்ட முடியாது. குளிர் மிகக் கொடுமையாக இருக்கும். கங்கையில் குதித்தால் உடம்பு விரைத்து நிச்சயம் மரணம் ஏற்படும்.''

''கேள்விப்பட்டு இருக்கிறேன். உங்கள் எச்சரிக்கைக்கு நன்றி. ஆயினும் கங்கைக் கரை வீடுதான் எனக்கு தேவை.''



''ஏற்பாடு செய்யலாம்'' - அமைச்சர் நீரூற்றியது போதுமென்று எழுந்தார். தன்னோடு குளித்த பெண்ணை தள்ளிப்போகச் சொன்னார். அவர்கள் துடைக்க ஆரம்பித்தனர்.

''புவனபதி வேறெதேனும் வேண்டுமா...?''

''நன்றி. எதுவும் தேவையில்லை.''

''பெண்கள் தேவையில்லையா.''

''பெண்களா.. எதற்கு...''

தனுர் மாதம் கனத்த கம்பளி, சூடான பாலும், உண்ண இனிப்பும் அணைத்துக் கொள்ள ஒரு பெண்ணும் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவை...''

''எனக்குத் தேவையில்லை.''

''திராவிடர்கள் ஏன் பெண்களை வெறுக்கிறீர்கள்?''

''மோட்ச சாதனத்திற்கு அவர்கள் இடைஞ்சல் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.''

''எப்படி...?''

''பெண் போகம் பலஹீனம்..''

''எது பலஹீனமோ அதை பலமாக மாற்றிக் கொண்டால்? எதைக் கண்டு பயப்படுகிறோமோ அதை சினேகிதம் செய்து கொண்டால்...?''

''இல்லை இது தவறான வாதம். வம்ச விருத்திக்கு மட்டுமே சம்போகம். மற்றபடிக்கு... பெண்களோடு கூடுவது மலம் போய்க் கொண்டே உணவு சாப்பிடுவது போன்றது.''

''கடவுளே.. என்ன உவமானம் இது..''

முதலமைச்சர் சீறினார்.

''அருவருப்பாக இருக்கிறதல்லவா.. அப்படித்தான் பெண் போகம் தேவையில்லாது ஈடுபட்டால் அருவறுப்புத் தான்.''

''பேசியது போதும்.'' முதலமைச்சர் கை கூப்பினார்.

''இன்று இங்கு தங்கி ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நாளையே வேறு நல்ல இடம் நான் ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் சொன்னது போல கங்கைக் கரை மாளிகையில் தங்க வைக்கிறேன்.''

முதலமைச்சர் உயர்ந்த உடைகளை உடுத்திக் கொண்டார். அந்தி சாயும் நேரத்தில் உண்ணத் துவங்கினார். பல்வேறு விதமான இனிப்புகள், கோதுமைப் பண்டங்கள் அவருக்கு இடைவிடாது பரிமாறப்பட்டன.

'ஒருவர் இத்தனை அதிகம் சாப்பிடக் கூடாது. இது போகத்திற்கு தான் கொண்டு போகும்..' புவனபதி நினைத்துக் கொண்டான். புவனபதிக்கும் உணவு கொடுத்தார்கள். ஒரே ஒரு இனிப்பு எடுத்துக் கொண்டு ஒரு சொம்பு பசும்பால் குடித்தான்.

விளக்குகள் ஏற்றப்பட்டன. பாடகர்கள் வந்தார்கள். நாட்டியக்காரிகள் வந்தார்கள். பொம்மலாட்டக்காரர்கள் வந்தார்கள். இரவு முழுவதும் பாட்டும் கூத்தும் நடந்து கொண்டிருந்தன.

நடுநிசி தாண்டியதும் முதலமைச்சர் மதுவருந்தத் துவங்கினார். தன் காமக் கிழத்திகளில் ஒருத்தியை அணைத்து தழுவியபடி நாட்டியம் பார்த்தார்.

புவனபதி இறங்கி பின்பக்க முற்றம் போனான். சிறிய கதவு வழியாக சந்திற்கு வந்தான். சந்தில் நடந்து தெருவில் கலந்தான். புஜத்தோடு மூங்கிலைச் சேர்த்தபடி கங்கைக் கரை நோக்கி நடந்தான்.

முதலமைச்சரோடு குளித்த அந்தப் பெண்ணின் நிர்வாணம் மனதில் அலைந்து கொண்டேயிருந்தது. அது போக வேண்டும் என்றால் கங்கையில் குளிக்க வேண்டும் என்று தோன்றியது.

பாட்டிற்கு நடுவே அவன் வெளியே போனது முதலமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது. பின் தொடர்ந்து போகுமாறு ஒரு சிறுவனுக்கும் ஒரு முரட்டுத்தனமான வீரனுக்கும் கட்டளை இடப்பட்டது.



அந்த முரட்டு வீரன் குடிக்கத் துவங்கியிருந்தான். அது தடுக்கப்பட்டதில் கோபமானான். அந்தச் சிறுவனுக்கு நல்ல தூக்கம். மனசு முழுக்க பெண்கள் நடமாடிக் கொண்டிருக்க அது கலைக்கப்பட்டதில் எரிச்சலானான்.

புவனபதி கங்கையில் கழியை வைத்து விட்டு வேட்டியையும், மேலாடையையும் களைந்து விட்டு கோவணத்துடன் குளிக்கத் துவங்கினான். குடைந்து குடைந்து நீந்தினான். ஆற்றோடு புரண்டான். எதிர்த்து நீந்தினான். இடுப்பளவு நீரில் உட்கார்ந்தபடி கங்கை மண்ணால் உடம்பெல்லாம் தேய்த்துக் கொண்டான். இடுக்குகளெல்லாம் சுத்தம் செய்தான்.

தொலை தூரத்தில் அடிபட்டு கண் மூடி படுத்துக் கிடக்கும் அந்த சடாமுடி இளைஞனுக்கு சட்டென விழிப்பு வந்தது.

''என் எதிரி காவலை விட்டு வெளியே வந்துவிட்டான். கங்கைக் கரையில் குளித்துக் கொண்டு இருக்கிறான். அவனைக் கொல்லுங்கள். அவனைக் கொல்லுங்கள்'' உரக்கக் குரல் கொடுத்தான்.

அந்த நிரஞ்சனர்களின் தலைவர் ஒரு மத்திம வயது பெண்மணியையும், பதினாலு வயது பையனையும் கங்கைக் கரைக்கு அனுப்பினார். புவனபதியின் அங்க அடையாளங்களைக் கூறி அவனை நைச்சியமாக அழைத்து வருமாறு கூறினார்.

''குளித்தது போதும். எழுந்திரு.'' அந்த குடிகாரக் காவலன் குரல் கொடுக்க புவனபதி திடுக்கிட்டான்...

## 20

அவர் பெயர் சத்தியஞானி. அவர் திராவிட தேசத்து அந்தணர். ஆனால், தந்தையோடு வெகு சிறுவயதிலேயே

காசிக்கு நடந்து வந்துவிட்டார். இந்த கங்கைக் கரையிலேயே வளர்ந்தார். அவருக்கு தமிழ்மொழி பேச மட்டுமே தெரியும்.

சோழ தேசத்தின் சில ஊர்களை மட்டுமே அவர் நினைவில் வைத்திருந்தார். சில உணவுப் பண்டங்களை நினைத்து கொள்வார். முழங் காலளவு காவேரி அவ்வப்போது ஞாபகத்திற்கு வரும்.

விழாக் காலங்களில், பண்டிகை நேரங்களில்... சோழ தேசத்து உறவுகளை நினைத்துக் கொள்வார்.

இந்த கங்கைக் கரையில் வளர்ந்து வாலிபனான பிறகு குடகு தேசத்து அந்தணப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

குடகை சுற்றியுள்ள ராஜ்ஜியத்திற்கு 'குந்தலம்' என்று பெயர். அந்த குந்தல தேசத்தில் பாஸ்கரராய க்ஷேத்திரம் என்ற ஊரிலிருந்து வந்த அந்தணரின் மகளைத் திருமணம் செய்து கொண்டார்.

குந்தல தேசத்து மக்கள் மிருதுவானவர்கள். தீவிர சைவர்கள். விருப்பு, வெறுப்பு இல்லாத அத்வைத நிலைக்கு முயற்சிப்பவர்கள்.

பாஸ்கரராய க்ஷேத்திரம் ஒரு நாகரிகமான நகரம். அங்குள்ள பெண்களும் வேதம் படித்தவர்கள். அடுப்பில் நெருப்பு வைக்கிற போதும், உணவு சமைக்கிற போதும், துணி துவைக்கிற போதும் சிவனின் புகழைப் பாடுவார்கள்.

ஒருபோதும் ஓசையெழப் பேச மாட்டார்கள். அநாகரிகமாக நடந்து கொள்ள மாட்டார்கள். ஆண்களால் மிக மரியாதையாக நடத்தப்பட்ட பெண்கள் என்பதால் ஆண்களைக் கண்டு அச்சமில்லாமலும், அதே சமயம் மிக மரியாதையாகவும் நடந்து கொண்டார்கள்.

சத்தியஞானியின் மனைவி மிக அழகி. இதமான பேச்சும் சூட்டிகையான புத்தியும் கொண்டவள். ஆத்ம விசாரம் செய்பவள்.



நவகியானி என்ற பெண்ணையும், சிவகியானி என்ற பையனையும் பெற்றுக் கொடுத்துவிட்டு அவர்கள் வாலிபப் பருவம் வந்த பிறகு... இந்த வாழ்க்கையில் எந்த விசேஷமும் இல்லை என்று சொல்லியபடி கங்கையில் விழுந்து உயிர் துறந்தாள்.

அப்படி இறக்குமுன்பு தன் குழந்தைகளிடம், தான் அவ்வாறு மூழ்கப் போகிறேன்... என்பதைச் சொன்னாள். பதினைந்து வயது பெண் நவகியானியும், பதிமூன்று வயது பையன் சிவகியானியும் விம்மி விம்மி அழுதார்கள்.

''குழந்தைகளே... இந்த வாழ்க்கையின் அபத்தம் உங்களுக்கும் தெரியவரும். இது எனக்குக் கடைசி பிறவி. என் சிறை தண்டனை முடியப் போகிறது. நான் விடுதலை பெற்று, பரிபூரணமாகப் போகிறேன். உங்களிடமும் இந்த பரிபூரணம் ஏற்படும். உடம்பாய் இருக்கும்போது விசாரம் செய்ய முடியாத நீங்கள், சூட்சும நிலையில் பிறப்பு, இறப்பு பற்றி விசாரப்படுவீர்கள்.

உலகில் பலருக்கு மரணம் மறுபிறப்பைத் தரும் துக்ககரமான விஷயம். நமக்கோ அது விடுதலை நேரம். உங்கள் வாழ்க்கையில் எந்த சோதனை குறித்தும் பயமே கொள்ளாதீர்கள். எந்த சந்தோஷம் குறித்தும் கர்வப்படாதீர்கள். எல்லா சந்தோஷங்களையும், எல்லா துக்கங்களையும் வேடிக்கை பாருங்கள். வாழ்க்கையை வேடிக்கை பார்ப்பதுதான் விசாரம்.

மரணமடைவதற்கு முன் பல நாட்கள்... பல நூறு கதைகளை உவமானமாக சொல்லித் தன் குழந்தைகளைப் பிரிவுக்குத் தயார்படுத்தினாள். புருஷனிடம் மரணமடைய அனுமதி வாங்கினாள்.

சத்தியஞானி சிறிதும் பதறாமல் அவள் நீரில் மூழ்கி இறக்க நேரம் குறித்துக் கொடுத்தார்.

சத்தியஞானியின் மனைவி மூன்று நாள் உபவாசம் இருந்தாள். மூன்று நாள் விதவிதமாக சமைத்து சாப்பிட்டாள். இன்னொரு மூன்று நாள் நிறைய பேருக்குத் தானம் செய்தாள். இன்னும் மூன்று நாள் புருஷன் மடியில் படுத்தும், அவனோடு இரவு நேரங்களில் படகு சவாரி செய்தும், கோயிலுச் குப் போய் மனமுருகப் பாடியும் சந்தோஷமாய் இருந்தாள்.

இன்னுமொரு மூன்று நாள் தனிமையில் சுடுகாட்டில் பைரவி உபவாசம் செய்து, கள் குடித்து, மாமிசம் சாப்பிட்டு, அரை நிர்வாணமாக சுடுகாட்டில் திரிந்து, பித்துப்பிடித்தவள் போல் கத்திக்கொண்டு இருந்தாள்.

பிறகு தலைமுடியைக் களைந்து, துறவாடை போர்த்தி கங்கை கரையில் ஒன்பது நாட்கள் தவமிருந்தாள். பத்தாம் நாள் காலை மேல் படியில் நின்று கை தூக்கி, காசி மாநகரை ஆசீர்வதித்தாள். கணவனையும், குழந்தைகளையும் உறுத்து நோக்கினாள்.

சத்தியஞானி தன் மனைவியின் காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார். அவள் எதிரே கை கூப்பி நின்றார்.

''இந்தப்பிறவியில் உடம்பாலோ, மனதாலோ உனக்கு ஏதும் தீங்குகள் செய்திருப்பேன். தாயே, ஜெகன்மாதா என்னை மன்னிப்பாயாக.

என் அந்திம காலத்தின் போதும் ஒளி ரூபத்தில் தோன்றி என் பயங்களை விலக்கி என்னை மேலுலகத்திற்கு அழைத்துப் போவாயக... என்று வேண்டினார்.

சத்தியஞானி மனைவி நீரில் மூழ்கி தத்தளித்து, பிறகு காணாமல் போனாள்.

காசி மாநகரத்து மக்கள் அவள் போன நீர்ப்பாதையில் பூ போட்டுக் கும்பிட்டார்கள்.

அந்தக் குடும்பம் பெரிய அழுகை இல்லாமல் அந்தப் பெண்மணியின் மரணத்தை ஏற்றுக் கொண்டது.



அந்தக் குடும்பத்தைப் பற்றி காசி தேசத்து மக்கள் உயர்வாகப் பேசினார்கள்.

ஆனால் சத்திய ஞானிக்கு கிடைத்த புகழைப் பார்த்து நிரஞ்சகர்கள் கோபம் கொண்டார்கள்.

''இது தற்கொலையல்ல. கொலை. மனைவி ஆற்றில் விழும்போது, தாவி காப்பாற்றாமல் கரையில் நிற்பவன் பிணம். கங்கையில் விழுந்த பெண்ணுக்கு மோட்சம் கிடைக்காது. அவன் நரகத்துக்குப் போவான். ஒரு பெண்ணிற்கு வாழ்க்கையில் பிடிப்பில்லாமல் போவதற்குக் காரணம் கணவனே.

நல்ல கணவனாக இருக்க முடியாதவர் நல்ல மனிதனாக இருக்க முடியாது. நல்ல மனிதனாக இருக்க முடியாதவர் நல்ல ஞானியாக இருக்க முடியாது. இவர் சத்திய ஞானியல்ல. கேவல ஞானி.

இவரைக்கொன்று கழுகுகளுக்குப் போட்டுவிட்டு இவரது மகளை அடிமையாய் யாருக்கேனும் விற்று விட்டு, இவர் மகனை நிரஞ்சனர் கூட்டத்தில் ஏவலாளாக சேர்த்து விட்டு. இவ்விதம் யாரும் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது என்று தடைவிதிக்கவும் செய்ய வேண்டும். சத்திய ஞானி புகழப்பட வேண்டியவரல்ல...'' என்று குதித்தார்கள்.

அரசனிடம் விண்ணப்பம் கொடுத்தார்கள்.

அரசன் அந்த விண்ணப்பத்தை முதலமைச்சருக்கு அனுப்பினான். முதலமைச்சர் சத்திய ஞானியை வரவழைத்து ''இதைக் குற்றமென்று நிரஞ்சனர்கள் சொல்கிறார்களே...'' என்று கேட்டார். இதற்கு மறுமொழி சொல்லுமாறு வேண்டினார்.

''முதலமைச்சரே... துக்கத்தினாலோ, நிர்பந்தத்தினாலோ, துர்தேவதைகளின் தூண்டுதலினாலோ என் மனைவி ஆற்றில் மூழ்கவில்லை. இந்த உடம்பு அநித்யம் என்பது கருதி... கடும் தவம் செய்து தன் முற்பிறவி பற்றித் தெரிந்து கொண்டு... அந்தப் பிறவியின் விளைவாக ஏற்பட்ட இந்தப் பிறவி இத்தனை காலம்

வாழ்ந்தால் போதும் என்று தெரிந்து... என்னிடம் அனுமதி பெற்று... என் குழந்தைகளைத் தெளிய வைத்து... குளிக்க உடையை உதறுவது போல தன் உடலை கங்கையில் உதறி விட்டுப் போனாள்.

வடக்கிருத்தல்... அதாவது வடக்கு திசை நோக்கி எதுவும் உண்ணாமல் அமர்ந்திருந்து உயிர் துறத்தல் என்பது இந்து மதத்தில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. சதி அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. சதியை யாரும் தற்கொலையென்று சொல்வதில்லை.

மேலும், அவள் இறக்கும் தருவாயில் என் மனைவியாக இறக்கவில்லை. ஒன்பது நாள் துறவியாக வாழ்ந்து இறந்தாள். அதற்கு முன்பு தான் எப்படியெல்லாம் விரும்பினாளோ அவ்விதமெல்லாம் மூன்று மூன்று நாட்கள் வாழ்ந்து அனுபவம் பெற்றாள்.

அவள் எனக்குச் செய்ய வேண்டிய எல்லா சேவைகளையும் செய்து முடித்துவிட்டாள். தனது இரண்டு குழந்தைகளையும் சுயமான நிலைக்கு ஆளாக்கிவிட்டே நகர்ந்தாள். அவள் யாருக்கும் எந்த குறையும் வைக்கவில்லை. அவளுக்கும் எந்த குறையுமில்லை. இறந்தவர் துறவி. என் மனைவியல்ல.

ஒரு துறவி அலறிக் கூப்பிடாதவரை அவரைக் காப்பாற்ற நமக்கு உரிமையில்லை.''

''இல்லை. உங்கள் சமாதானத்தை ஏற்க முடியாது. அது தற்கொலை அல்ல. ஒரு கணவர் மறைமுகமாகச் செய்த கொலை தான்.'' நிரஞ்சனர்கள் வாதாடினார்கள்.

ஊர் இந்த வழக்கை வேடிக்கை பார்த்தது. முதலமைச்சர் குழம்பி நின்றார்.

''யார் சொன்னல் கேட்பீர்கள்...'' என்று நிரஞ்சனர்களைக் கேட்டார்.



''இறந்தவள் வந்து சொல்ல வேண்டும்'' நிரஞ்சனர்கள் வம்பு செய்தார்கள்.

சத்தியஞானி மூன்று நிரஞ்சனர்களையும், முதலமைச்சரையும் தன் மகள், மகனையும் ஒரு இருட்டறையில் நிற்க வைத்து தீபமேற்றினார்.

''தாயே... வருக...'' என்று மனமுருக, தனக்கு மனைவியாய் இருந்தவளை வேண்டினார்.

சபையும், மற்ற நிரஞ்சனர்களும்... முதலமைச்சரின் நாட்டிய சாலையில் உட்கார்ந்து இந்த வழக்கு பற்றி பேசிக் கொண்டு இருந்தார்கள்.

தங்களுக்குள் விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

சட்டென்று தீபத்திற்கு எதிரே அந்த பெண்மணி தோன்றினாள். எல்லோரையும் வணங்கினாள்.

''என் மரணம் தற்கொலை அல்ல. தற்கொலை அடைந்தவர், இவ்விதம் ஒளி ரூபமான உடலை எடுக்க வியலாது. நீங்கள் கூப்பிட்ட போது அவர்களால் இவ்விதம் வந்து நிற்க முடியாது. இது தவத்தின் ஒரு வகையான முடிவு. கபால மோட்சம் போல ஜலபந்தனம்.

பெண்களுக்கு கபாலம் திறக்காது. மனதை உயிரிலிருந்து பிரித்தெடுக்கிற காரியத்தை கங்கா மாதா செய்வாள். 'என்னைக் கரையேற்று. என்னைக் கரையேற்று' என்று பல நாள் அவளை வேண்டி, தவமிருந்து எனக்கு கிடைத்த பரிசு இது.

கங்கை என்பது ஆறு அல்ல. அது மாதா.

மரணம் பற்றி பயமுள்ளவர்களுக்கு நான் சொல்வது புரியாது. இப்படியொரு வழக்கு வருமென்று தெரிந்தே நான் கங்கையின் மேல் ரூபத்தில் ஒளி ரூபமாய் அலைந்து கொண்டு இருந்தேன்.

மறுபடி சொல்கிறேன். நான் ஆற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளவில்லை. ஏனெனில் கங்கை ஆறில்லை. அது

மாதா. நான் சொல்வது ஒரு சூட்சுமமான வார்த்தை. தெளிந்தவர்க்கே புரியும்.'' அந்த பெண்மணி மறுபடியும் வணங்கினாள். மெல்ல மறைந்தாள்.

அறைக்குள் அவள் மறையும் நேரம் முதலமைச்சரின் நாட்டிய சாலைக்கு நடுவே எல்லோரும் பார்க்க ஒளிரூபமாய் நடந்து போனாள். அவளைப் பார்த்தவர்கள், 'ஓ' வென்று கூச்சல் இட்டார்கள். சில பேர் மயங்கி விழுந்தார்கள். சில பேர் விழுந்து நமஸ்கரித்தார்கள்.

''கங்கை நதியல்ல. கங்கை... மாதா.'' என்ற வாக்கியம் எல்லோர் மனதிற்குள்ளும் கேட்டது.

அறைக்குள்ளிருந்த மூன்று நிரஞ்சனர்களும் சத்திய ஞானியை வணங்கிவிட்டு, முதலமைச்சரிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு வெளியேறினார்கள். படகு ஏறி கங்கையின் மறுகரைக்குப் போய் காணாமல் போனார்கள்.

மற்ற நிரஞ்சனர்கள் இதை மாயத்தோற்றம் என்று கூச்சலிட... முதலமைச்சர் வாளுருவி அதட்டினார். மற்ற பண்டிதர்களும் கூச்சலை அடக்க... நிரஞ்சனர்கள் பின் வாங்கினார்கள்.

சத்திய ஞானியின் மதிப்பு வெகுவாய் உயர்ந்தது. காசி நகரத்து மக்கள் அவர் வந்தால் எழுந்து நின்றார்கள். அவர் குழந்தைகளான நவகியானிக்கும், சிவகியானிக்கும் காசி நகரம் மிகப் பெரிய மரியாதை தந்தது.

ஆனால், நிரஞ்சனர்கள் சத்திய ஞானியின் மீது கடும் கோபத்தில் இருந்தார்கள். அவரை ஒருமுறை கங்கையில் தள்ளி... அப்படி உருளும்போது காலில் கல்லைக் கட்டி விட்டார்கள். 'சத்திய ஞானியை அவரது மனைவி அழைத்து போகிறாள்' என்று கூச்சலிட்டார்கள்.

மீன்கள் பாய்ந்து, சத்திய ஞானியை கட்டியிருந்த கயிற்றை கடித்துவிட சத்திய ஞானி கங்கையோடு நீந்தி கரையேறி அன்று மாலை வீட்டிற்கு வந்தார்.



நிரஞ்சனர்கள் திகைத்தார்கள். பயந்தார்கள். ஆனால், சத்திய ஞானி யாரைப் பற்றியும் புகார் சொல்லவில்லை. தன் வீட்டு கதவுகளை பலப்படுத்தி, சுவர்களை உயரே எழுப்பி, சாளரங்களுக்கு கம்பிக் கதவுகள் போட்டு வீட்டை கோட்டை போல் உறுதியாக்கிக் கொண்டார். நல்ல காவலுடன் கங்கை கரைக்குப் போனார்.

நிரஞ்சனர்கள் கூட்டம் போட்டு அவர் வம்புக்கு போக வேண்டாம் என்று முடிவெடுத்தார்கள். அந்த முடிவை அவருக்குத் தெரிவித்து, அவர் வீட்டிற்கு ஒரு தவலை பால் கொடுத்து, சமாதானம் செய்து கொண்டார்கள். அவர் வீட்டிலிருந்து ஒரு கூடை உணவு வாங்கிப் போனார்கள்.

உணவுண்ட இடத்தில் நிரஞ்சனர்கள் எதிர்ப்பு காட்டுவதில்லை. அவர்களை இம்சிப்பதில்லை.

''எப்படியப்பா மீன்கள் உங்கள் கால்கயிற்றைக் கடித்து அவிழ்த்தன...? இது ஒரு அதிசயம் தான். கடவுள் செயல் தானே...'' நவகியானி கேட்டாள்.

''இல்லையம்மா... நிரஞ்சனர்கள் மூடர்கள். இறுக்கமான, நெக்கு விடாத, முரட்டுக் கயிறு செய்ய... அந்த கயிறு மீது ஆட்டின் கொழுப்பை தடவி உலர்த்தியிருந்தார்கள். மீன்கள் கொழுப்பைத் தின்ன... கயிற்றைக் கடித்தன. கயிறு அறும் வரை காத்திருந்து பிறகு உதறி நீந்தி ஆற்றோடு போய் ஆபத்தில்லாத இடத்தில் கரையேறினேன். இதுதான் நடந்தது. சரி... பிரச்சினை இத்தோடு முடிந்ததே... அதற்காக கடவுளுக்கு நாம் நன்றி சொல்லத்தான் வேண்டும்.''

''அவர் பிரச்சினைகளற்று சௌகரியமாக வாழ்ந்த காலத்தில் மகளுக்குத் திருமண முயற்சிக்காக அலைந்தார்.

வட இந்திய பிராமணர்கள் அவர் மகளைப் பெண் கேட்டு வந்தார்கள். அவருக்கு திராவிட தேசத்து இளைஞன் வேண்டும் என்று ஆசையிருந்தது. காசியில்... படித்த, திராவிட தேசத்து

இளைஞன் கிடைப்பது அரிதான விஷயம். அவர் கவலைப்பட்ட நேரத்தில் இரண்டு நிரஞ்சனர்களை ஒரு திராவிட அந்தணன் அடித்து நொறுக்கிய சம்பவம் கேள்விப்பட்டார். அவனைப் பார்க்க வேண்டுமே என்று ஆவலுற்றார். அவனை நிரஞ்சனர்கள் கூட்டமாய் நின்று எச்சரித்ததாக கேள்விப் பட்டார்.

அவன் மூங்கில் கம்புக்குள் நிறைய பொற்காசுகள் வைத்து இருந்ததாகவும், அது உடைத்து போடப்பட்டதாகவும் கேள்விப் பட்டார். அவனை முதலமைச்சர் அழைத்துப் போயிருப்ப தாகவும் அறிந்தார்.

அப்படியானால் சரி... அவனுக்கு இனியெந்த ஆபத்தும் இல்லை என்று நிம்மதியானார். இரவு ஜபம் செய்ய கங்கை கரைக்கு போகும் போது தனியே குளித்துக் கொண்டு இருந்த ஒரு இளைஞனை நிரஞ்சனர்களின் ஆட்கள் அதட்டுவது தெரிந்தது.

அந்த இளைஞன் கரையேறினான்.

அவன் மலர்ச்சியான முகமும் உறுதியான உடலும், திராவிட முகமும் அவருக்கு சந்தோஷத்தை கொடுத்தன.

''இவன் என்னுடைய ஆள்...'' அவர் உரக்கக் குரல் கொடுத்தார். அவனும் திகைத்தான்.

# 21

புவனபதிக்கும் அந்த அந்தணரின் வருகை வியப்பாக இருந்தது. திராவிட முகத்திற்கும், வடபுலத்தார் முகத்திற்கும், நிச்சயம் சில வேறுபாடுகள் உண்டு. இந்த அந்தணர் திராவிட ராக இருந்தது. ஒரு ஆச்சர்யத்தையும், கூடவே ஒரு சந்தோஷத் தையும் கொடுத்தது.



'இவன் என்னுடைய ஆள்' என்று அவர் சொன்னதும் புவனபதி மேலும் திகைத்தான்.

அன்னிய தேசத்தில் ஆபத்து வர வாய்ப்பிருக்கிறது ஆபத்து வரவும் செய்தது. ஆனால், உதவிக்கும் ஆள் வருகிறதே இவர் பேசும் சமஸ்கிருதத்தில் திராவிடத்தின் சாயல் தெரிகிறதே!

அவர் மூக்கு, உதடு, தோள் நிற்கும் தன்மை, தோலின் நிறம், இவற்றில் தெற்கத்திய சாயல் அதிகமிருக்கிறதே என்று புவனபதி ஆச்சர்யப்பட்டான்.

இடுப்பில் மேல் துண்டைக் கட்டிக் கொண்டு, கோவணத்தை அவிழ்த்து, பிழிந்து உதறினான். மேல்வேட்டியை அவிழ்க்காமல் உள் கோவணம் பளிச்சென்று தரித்து... பிறகு உள் வேட்டி கட்டித் தலையை துவட்டி முடிந்து கொண்டு திருநீறு பூசினான்.

அவனை அழைத்தவர்கள் வேடிக்கைப் பார்த்து நின்றிருந் தார்கள்.

கரையில் நின்றிருந்த சத்தியஞானி கைதட்டி அவர்களை விலகிப் போகச் சொன்னார். அவர்கள் பேச எத்தனித்த போது...

''நீங்கள் யாரென்று எனக்குத் தெரியும்... எதற்கு அனுப்பப் பட்டுள்ளீர்கள் என்றும் தெரியும். இவரை விட்டுவிட்டுப் போங்கள். நிரஞ்சனர்களின் தலைவர்களிடம் சத்தியஞானி துரத்தி விட்டான் என்று சொல்லுங்கள். மறுபடியும் அவமானப் பட வேண்டாமென்று சொல்லுங்கள்.''

வந்தவர்கள் விரைவாகத் திரும்பினார்கள்.

புவனபதி சத்தியஞானியின் அருகே வந்தான். கரையிலுள்ள தீப்பந்த வெளிச்சத்தில், அவரைப் பார்த்துத் தன்னைவிட வயதானவர் என்று தெரிந்து கொண்டான். கிழக்கு திக்காய் அவர் நகர்ந்து கொள்ள, விழுந்து நமஸ்கரித்தான். தன் குலம், கோத்திரம், படிப்பு, தான் எந்த ரிஷியின் வம்சம், என்பதை விவரித்துச் சொன்னான். மறுபடி நமஸ்கரித்தான்.

அவர் அவனுடைய நீண்ட ஆயுளுக்கும், மேதாவிலாசத்திற்கும் வாழ்த்தினார். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

''என் பெயர் சத்தியஞானி. திருக்குடந்தைக்கு அருகே இருக்கிற அமன்குடி எனக்குச் சொந்த ஊர். வெகு சிறுவயதிலேயே என் தந்தையோடு நான் இங்கு வந்துவிட்டேன். தமிழ் மொழிகூட அதிகம் பேச முடியவில்லை. வீட்டில் மட்டுமே பேசுகிறோம். நான் இங்கேயே வளர்ந்து, இங்கேயே திருமணம் செய்து, இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனானேன். எனக்கு பருவம் வந்த ஒரு மகளும், ஒரு மகனும் இருக்கிறார்கள்.

உன்னைச் சந்தித்ததில் சந்தோஷம். நிரஞ்சனர்களுக்குச் சரியான பாடம் நீ சொல்லிக் கொடுத்திருக்கிறாய். அந்த நிரஞ்சனர்கள் உன்னைப் பற்றி கலவரத்தோடு சிந்திக்கிறார்கள்.

அதீத கோபமும், பழிவாங்கும் இயல்புமுடைய அந்த சன்னியாசிகள்... காசியின் சாபக்கேடு. பரத கண்டத்தின் வலப்புறம் இவர்களால் பலவீனமாகப் போகிறது.

க்ஷத்திரியர்கள் சன்னியாசிகளாக முடியாது. சகோதரப் போர்கள் நடக்காமலிருக்கக் கருதி பாஞ்சாலத்தில் இப்படிச் சிலரை சன்னியாசிகளாகப் போகச் சொல்லும் பழக்கம் இருக்கிறது. அரசபோகம் அனுபவிக்க முடியாத ஆத்திரத்தை அந்த அரச குடும்பத்து சன்னியாசிகள் வெவ்வேறு விதமாகக் காட்டுகிறார்கள்.

இது சன்னியாசமே இல்லை.

மதுவும், மங்கையும், கோபமும், கர்வமுமாய் அலைகிறார்கள். சூதாடுகிறார்கள். யாகத்தில் சேர்த்தது என்று சொல்லி, புலால் உண்கிறார்கள். புஜ பலம் பெருக்குகிறார்கள். உடை மட்டும்தான் காவி. புத்தி, மனம் எல்லாம் கருப்பு.

பரத கண்டத்தில் எங்கு தேடினாலும் இவ்வளவு மோசமான ஆட்கள் கிடைக்க மாட்டார்கள்.



இரண்டு தலைமுறையாய், காசியில் இவர்கள் வளர ஆரம்பித்து விட்டார்கள். மதுரா, அயோத்தி போன்ற பெரிய நகரங்களுக்குப் பரவ ஆரம்பித்து விட்டார்கள். எந்த தியான பயிற்சியும் இல்லாமல், உபாசனை இல்லாமல், ஒழுக்கமில்லாமல் காட்டெருமைகள் போல் திரிகின்றார்கள்.

ஆனால், இதில் வேறு சிலர் குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பது போன்று குறுக்கு வழியில் அமானுஷ்ய சக்தி தேட ஆரம்பித்திருக்கிறார்கள். பேய், பில்லிசூன்யம், ஏவல் என்று ஆரம்பித்து இருக்கிறார்கள். சமணர்களிடம் ரகசியமாய்ப் பயிற்சி பெறுகிறார்கள்.

இந்து மதம் இவர்களால் கலவரப்படப் போகிறது. அன்னியர்கள் உள்ளே வர இவர்கள் காரணமாகப் போகிறார்கள்.

இமயமலை பரத கண்டத்தைக் காத்துக் கொண்டிருக்கிறது.

மலையின் மறுபக்கத்தில் உள்ளவர்கள், பரத கண்டத்தின் செழுமையை, பறவைகள் மூலமாகவும், மீன்கள் மூலமாகவும் அறிந்து கொண்டு மலையை வழிவிடுமாறு பரம்பரை, பரம்பரையாய்ப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இமயமலை வழி விட்டுவிட்டது என்று சொல்கிறார்கள். ஆனால், மலையின் அடுத்த பக்கம் வறட்சியான நிலத்தில் வாழ்கிறவர்களுக்கு அது இன்னும் தெரியவில்லை.

இந்தப் புண்ணிய பூமியில் பாவம் அதிகமாக, அதிகமாக, மலை வழி விட்டது அன்னியனுக்குத் தெரிய வரும். அந்த கணவாயின் அடைப்புகளை நீக்கிவிட்டு அவர்கள் உள்ளே வருவார்கள்.

பசுக்களோடு, பரத கண்டத்தின் புல்வெளி தேடி பெருங்கூட்டமாய் ஆரியர்களான நாம் வந்ததும் நம்மை யாரும் பின்தொடரக் கூடாதென்று நம் முன்னோர்கள் மந்திரம் சொல்லி, மலை அதிர வைத்து, கற்கள் புரளுமாறு செய்து, அந்தக் குறுகிய வழியை அடைத்து விட்டார்கள்.

மழை வெள்ளத்தால், இடி மின்னலால் அந்த அடைப்பு வழிவிட்டுக் கொண்டிருகிறது. இங்கே பாவம் அதிகரிக்க... அதிகரிக்க... பெண்களை, குழந்தைகளை, முதியவர்களை, சாதுக்களை நாம் ஹிம்சை செய்யச்... செய்ய நம் மதத்திற்கும், தேசத்திற்கும் ஆபத்து அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது.

மலையின் அடுத்த பக்கமுள்ள பாலைவனப் பகுதிக் காரர்கள் பரத கண்டத்திற்குள் நுழைந்து விட்டால், நிச்சயம் அனர்த்தம்தான். பிறகு பல ஆயிரக்கணக்கான வருடங்கள் இந்த பரத கண்டம் வேதனை அனுபவிக்க வேண்டியது தான்.

காசியைக் கெடுத்துக் கொண்டு இருக்கும் நிரஞ்சனர்களை நீ அடித்து நொறுக்கியது பற்றி பல பேருக்கு மகிழ்ச்சி.

காசிக்கு உன் வரவு நல்வரவாகுக. நீ உன் மூட்டை முடிச்சுகளோடு என் அகத்திற்கு வந்துவிடு. ஒரு கோட்டையின் பின்பக்கம் தனியே மதில் சுவர் எழுப்பி... தனித்தனியே வீடுகள் கட்டிக் கொண்டு மூன்று திராவிட குடும்பத்தினர் வசிக்கிறோம். எதிரே சிறு சிறு அறைகளில் சாதுக்களும் வசிக்கிறார்கள்.

நிறைய மரங்களும், குளிருக்கான குமுட்டிகளும், அழகிய நந்தவனமும், பசு மடமும் அந்த கோட்டைக்குள் இருக்கின்றன.

நீ முதல் மந்திரியிடம் சொல்லி விட்டு என்னோடு தங்கிவிடு'' அவர் அழைத்தார்.

அவன் சம்மதம் தெரிவித்தான்.

முதலமைச்சரின் வீட்டுக்குப் போய், அவன் துணி மூட்டையை எடுத்துக் கொண்டு, பொற்காசு மூட்டையை அதனுள் பொதித்து அவரோடு அவர் இல்லத்திற்கு போனான்.

இரண்டு மாளிகைக்கு நடுவிலான குறுகிய சந்தில், அவர்கள் நுழைந்தார்கள். கோட்டை போன்ற கதவைத் திறந்தார்கள்.

'அட... இந்த இடத்திற்கு நான் வந்திருக்கிறேனே...' அவன் திகைத்தான்.



அந்த நிரஞ்சனர்களைத் தாக்க, தான் ஏறிய கதவு என்று புரிந்து கொண்டான். அந்த கோட்டை கதவை அடைத்ததும் அது மிக பத்திரமான இடம் என்பது தெரிந்து போயிற்று. சத்தியஞானி உட்பட மூன்று குடும்பங்களும், ஆறு சாதுக்களும் அங்கு வசித்து வந்தார்கள்.

சாளுக்கியம், காந்தாரம் போன்ற தேசத்தில் இருந்து வந்த சாதுக்கள் சத்தியஞானிக்குக் காசு கொடுத்து விட்டு அங்கே தங்கினார்கள். தாங்களே சமைத்துக் கொண்டு சாப்பிட்டார்கள். அப்படி முடியாத போது அந்த மூன்று குடும்பங்களும் அவர்களுக்கு உதவி செய்தன.

ஒரு கை விளக்கு எடுத்து வந்து, சத்தியஞானி அவர் வீட்டு எதிரேயிருந்த ஒரு அறையைத் திறந்து விட்டார். கயிறால் பின்னப்பட்ட கட்டிலைக் காட்டினார். ஒட்டக கம்பளி கொடுத்தார். சின்ன அடுப்பு மூட்டி புகை போக்கிக்கு அருகே வைத்தார். ஒரு சிறிய சாளரத்தை திறந்து வைத்தார்.

அவர் வீட்டில் இனிமையாக ஒரு பெண் குரல் கேட்டது. சிறிது நேரம் பொறுத்து, ஒரு பையன் பால் சொம்பைத் துணியில் பிடித்தபடி வந்தான். அந்த பையனுக்கு பதினாலு வயதிருக்கும். பால் சொம்பை புவனபதிக்கு முன்னே தரையில் வைத்தான்.

''என் பெயர் சிவகியானி. சத்தியஞானியின் இரண்டாவது குழந்தை. அவருடைய ஒரே மகன். உங்களை நமஸ்கரிக்கிறேன். இரவு நேரம் என்பதால் பால் மட்டுமே கொணர்ந்தேன். உங்களுக்குப் பசித்தால், கோதுமை பண்டங்களும் கொண்டுவர தயாராக இருக்கிறேன்.

விடியலில் இங்கேயே கை, கால் கழுவி, ஜபம் செய்யுங்கள். வெளிச்சம் வந்த பிறகு நான் அழைத்துப் போகிறேன். கங்கை கரைக்கும், காசி விசுவநாதர் ஆலயத்திற்கும் என்னோடு வாருங்கள். வேறு ஏதும் வேண்டுமா?''

''இனிப்புகள் வேண்டும். உடம்பில் அயர்ச்சி அதிகமாக இருக்கிறது. நிறைய இனிப்புகள் சாப்பிட்டால் தான் நன்கு தூங்க

முடியும். நன்கு தூங்கினால்தான் நாளை பகல் முழுவதும் உற்சாகமாக இருக்க முடியும்.''

புவனபதி கேட்க, சிவகியானி இனிப்புகள் கொண்டு வந்து கொடுத்தான். இனிப்பும், பாலும் சாப்பிட்டுவிட்டு புவனபதி போர்த்திக் கொண்டு படுத்தான். மிக பத்திரமான இடத்தில் இருப்பதாய் அவன் மனம் சொல்லிற்று. வெகு நாட்களுக்குப் பிறகு எந்தக் கவலையுமில்லாமல் புவனபதி ஆழ்ந்து தூங்கினான். நான்கு நாழிகை தூக்கத்தில் உடம்பு, மனம் எல்லாம் உற்சாகமாகியது. வியாழன் உறங்கி, வெள்ளி எழுந்தது.

வெள்ளிக்குப் பின்னே மெல்லிய வெளிச்சக் கீற்றுகள் தோன்றின. புவனபதி எழுந்து உட்கார்ந்தான். கட்டிலில் உட்கார்ந்தபடியே ஒருக்களித்து கதவின் வழியே எதிர் வீட்டை நோட்டமிட்டான்.

அப்போதும் இனிமையான பெண் குரல் கேட்டது. சத்திய ஞானி அமைதியாய் உட்கார்ந்து ஜபம் செய்து கொண்டிருந்தார். இன்னொரு வீட்டு வாசலிலும் ஒரு வயசாளி ரிக் வேதம் சொல்லிக் கொண்டிருந்தார்.

சிவகியானி வெளியே ஒரு பசுமாட்டை இழுத்துக் கொண்டு போனான். கன்று பின் தொடர்ந்தது. பசு பெரிய மடியுடன், முற்றிய காம்புடன் அசைந்து அசைந்து நகர்ந்தது. பசுக்களுக்காகப் புல் அறுத்து ஒரு மூலையில் போட்டிருந்தார்கள். அடுக்கிய புல்கட்டுகள் ஆள் உயரம் இருந்தன.

ஜபம் முடித்து சத்தியஞானி எழுந்திருந்தார்.

''நவக்கியானி'' என்று குரல் கொடுத்தார்.

பதிலுக்கு ''அப்பா'' என்று குரல் கேட்டது.

''புதிய விருந்தினருக்குக் கை, கால் கழுவ வெந்நீர் எடுத்துப் போ. மாடு, கன்று வேலைகளை நான் பார்த்துக் கொள்கிறேன். தோள் மீது போட்டிருந்த துண்டை உதறி, தலைப்பாகையாய்க் கட்டிக் கொண்டார். கொல்லைப்புறம் நகர்ந்தார்.



சிறிது நேரம் அமைதியாக இருந்தது. சட்டென்று ஒரு காலடி சப்தம் கேட்டது. காலடி சப்தங்கள், நிதானமாக இருந்தன. ஏதோ கனம் தூக்குவதைப் போல அசைவோடு இருந்தன. நிழல் வாசற்கதவு மீது படர்ந்தது.

கட்டிலில் உட்கார்ந்திருந்த புவனபதி சட்டென்று படுத்துக் கொண்டான். போர்வையை முகம் மீது போர்த்திக் கொண்டான்.

கதவு மெல்லத் திறந்தது. ஒரு பெண் உள்ளே நுழைந்தாள்.

மெல்லிய தேகம், ஆனால், உறுதியான உடம்பு. முதலமைச்சர் அந்தபுரத்தில் பார்த்த பெண்களைப் போல இவள் தடிமனாக இல்லை. அதிகம் வளைவுகளோ, குழைவுகளோ உடம்பில் இல்லை. ஆனால் பதினாறு பதினேழு வயது இளமை, உடம்பில் விரவிக் கிடந்தது.

அவள் உட்கார்ந்து எழுந்த போது அங்கங்களின் பூரிப்பைப் பார்க்க முடிந்தது.

அவள் அறையோரம் இருந்த ஒரு அடுப்பைக் கிளறி கரித்துண்டுகள் போட்டு, அதன்மீது நீருள்ள பித்தளைக் குடத்தை வைத்து விட்டுப் போனாள். அவள் நகர்ந்து போனதும் புவனபதி எழுந்தான்.

பித்தளைத் தவளையிலிருந்து வெந்நீர் எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தான்.

'அதிதிக்கு நமஸ்காரம். உங்கள் வரவு நல்வரவாக வேண்டும்.''

நடந்து போய்க் கொண்டிருந்த அந்தப் பெண் சட்டென்று திரும்பி முதுகு வளைத்து கைகூப்பினாள்.

''அ... என்ன...'' புவனபதி தடுமாறினான்.

''இரவு நன்கு தூங்கினீர்களா? குளிர் தாங்க முடிந்ததா? தூக்கம் போதவில்லையென்றால் இன்னும் சற்று நேரம் தூங்குகிறீர்களா?'' தெளிவான சமஸ்கிருதத்தில் பேசினாள்.

புவனபதி, ''நன்கு தூங்கினேன். நன்றி'' என்று பதில் சொன்னான்.

''நீங்கள் காஞ்சியிலிருந்து தானே வருகிறீர்கள்? உங்களுக்குத் தமிழ் தெரியும் தானே?...'' தமிழில் கேட்டாள்.

வெகுநாள் கழித்து, கிட்டத்தட்ட நாலரை மாதங்கள் கழித்து காதுக்குள் புகுந்த தமிழ், சின்ன அதிர்ச்சியை அளித்தது. அவன் சிரித்தான்.

''தமிழ் பேசுவீர்கள் அல்லவா?'' அவள் சற்று வியப்போடு கேட்டாள்.

''பேசுவேன். தமிழை இத்தனை ஆவலாகக் கேட்பது இதுதான் முதல் முறை. தமிழ் கேட்டு வெகுநாளாயிற்று. நீங்கள் பேசவும் மனசு கிறுகிறுத்துப் போயிற்று. உங்கள் பெயரென்ன?...''

''என் பெயர் நவக்கியானி, நவம் என்று அழைப்பார்கள்.'' அவள் வடமொழியில் பதில் சொன்னாள்.

## 22

**நா**ன்கு மாத நடைக்குப் பிறகு ஊர் விட்டு ஊர் வந்து, வழி முழுவதும் வெவ்வேறு மொழிகளையும் வெவ்வேறு கலாச்சாரங்களையும் சந்தித்துவிட்டு திடீரென்று தஞ்சைத் தமிழ், காதில் மோதும் போது கிளுகிளுப்பாகத்தான் இருந்தது.

அப்படிப் பேசுபவர்கள் மீது உடனே பிரியம் வந்து ஒட்டிக் கொள்கிறது. யார்?... என்னது? என்று சொல்லவும், கேட்கவும் ஆசை வந்துவிடுகிறது.

''காவிரியில் குளித்திருக்கிறீர்களா?... கமலாலயம் பார்த்து இருக்கிறீர்களா?... திருவாரூர் தெரியுமா?...'' என்று கேள்வி கேட்கத் தோன்றுகிறது.



கங்கை, அழகுதான். ஆனால், காவிரிக் கரையின் பசுமை எங்கும் காணக் கிடைக்காதது. கரையெல்லாம் கோயில்கள் உள்ள தேசமது. கோயில்களெல்லாம் அன்னதானம் செய்யும் நாட்கள் உண்டு.

பஞ்ச நாட்களிலும், கிழங்குகள் கிடைக்கும். மலர்கள் இருக்கும். ஒரு மழை தப்பினாலும், மறு மழையில் பூமி குளிர்ந்து விடும்.

ஏதோதோ பேசி... தமிழை, தமிழ் நாட்டைக் கொண்டாடத் தோன்றும்.

அவன் பல் தேய்த்து, குளித்து, ஜபம் செய்து வந்து உட்கார்ந்ததும் - எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொண்டு விசாரிக்க அவன் நிறைய விபரங்கள் சொன்னான்.

''வருடா வருடம் வெள்ளம் வருகிறதா?... இங்கு எருமைகள் அதிகம். பசுக்கள் குறைவு. பசுக்கள் பால் நிறையக் கரந்தாலும், தென்னாட்டுப் பசுவின் பால் போல் ருசியில்லை. காவிரிக்கரை அரிசியில் பொங்கலிட்டு, கீரை கலந்து உண்டால், ஆஹா... ஒரு படி அரிசி சாப்பிடலாம். அந்த ஊர் மாம்பழ ருசியே தனி. பலாப்பழம் தேனொழுகும்.''

கார்த்திகை மாதம் மெல்லிய குளிரில் தேனும், தினை மாவும் சாப்பிட்டபடி பாகவத மேளாவுக்கு போவோம். சங்கு சக்கரம் ஏந்திய விஷ்ணுவின் பதுமையை நடுவில் வைத்து... அதைச் சுற்றி அக்ரஹாரத்து ஆண்கள் கும்மியடிப்பார்களே... கண்கொள்ளாக் காட்சி அது.

விஷ்ணுவைப் புருஷனாகவும்... அக்ரஹாரத்து ஆண்கள் பெண்களைக் கோபியர்களாகவும் பாவித்து, விடியவிடிய நடனம் நிகழ்த்துவார்கள். ஆஹா... என்ன அற்புதக் காட்சி.

''நவநீத சோர... நவநீத சோர... நவநீத சோர கோபால...'' அவர்கள் பாடிக் காட்டினார்கள். அவன் பின்பற்றிப் பாடினான்.

அங்கிருந்த ஒரு கிழவர் எழுந்து ஆடிக் காட்டினார். அவனும் எழுந்து அவரோடு ஆடினான். எல்லோரும் கைதட்டிப் பாட... மூன்று நான்கு பேர் துள்ளி ஆட... சட்டென்று தென்னாட்டு கிராமம் போல, அந்த இடம், எல்லோர் மனதிலும் மாறியது.

''அய்யா - நீர் வந்தது, சோழ தேசமே இங்கு வந்ததுபோல இருக்கிறது. நாங்கள் சோழ தேசத்தை உணர்ந்து விட்டதுபோல் தோன்றுகிறது. எனக்கு எண்பது வயது. ஐம்பதாவது வயதில் இங்கு வந்தேன். இனி ஒருக்காலும் என்னால் மறுபடியும் நடந்து சோழ தேசம் போக முடியாது. என் மரணம் இங்கேதான். இந்த கங்கைக் கரையில்தான். ஆனாலும், உங்களால், உங்கள் பேச்சால், நான் சோழ தேசத்தை மறுபடி தரிசித்து விட்டேன். இனி என் ஆன்மா கேவலின்றி, அழுகையின்றி அமைதியாகும்.''

''அய்யா புவனபதி-கங்கைக்கரை கடும் குளிர் பிரதேசம். குளிர் காலத்திற்கான அறிகுறிகள் ஆரம்பித்து விட்டன.

உயரமான நீர்ப்பறவைகள் தென்திசை நோக்கி நகரத் துவங்கிவிட்டன. பகல் குறுகியும், இரவு அதிகரித்தும்... பகலில் வெப்பம் குளிர்ந்தும்... இரவில் குளிர் அதிகரித்தும் வருகிறது.

காலையில் கங்கையைத் தொடும் போது சில்லென்றிருக்கிறது. தனுமை பலமாய் இருக்கிறது. இந்த முறை குளிர் கடுமையாய்த் தாக்கக்கூடும். உங்களுக்கு என் அன்பாய் இந்தக் கம்பளிப் போர்வையைக் கொடுக்கிறேன். பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று ஒரு குடும்பி கொடுத்தார்.

''சாதுக்களுக்கு பாதக்கொரடு கொடுப்பது என் வழக்கம். மான் தோலின் மேற்பக்கம் வைத்துத் தைத்து, புறங்காலில் சுற்றிக் கொள்ளும்படி, முறுக்கிப் பின்னிய பாதரட்சைகள் என்னிடம் இருக்கின்றன. அவைகளை அணிந்து கொள்ளுங்கள். இது குளிர்தேசம். எங்கு வேண்டுமானாலும் பாதரட்சை



கள் போட்டுக் கொண்டு போகலாம். கோவில் வாசல்களில் சாதுக்களின் பாதுகைகளை வாங்கித் துடைத்து வைப்பார்கள். நீங்கள் வரும்வரை மடியில் வைத்து சுமந்திருப்பார்கள். உங்களுக்கு இது தேவைப்படும்.'' ஒருவர் தன் வீட்டிற்கு ஓடிப்போய் பாதுகை எடுத்து வந்து கொடுத்தார்.

சத்தியஞானி மூக்கும், பிடியும் வைத்த பெரிய சொம்பு கொடுத்தார். இன்னொரு தமிழ் சாது உத்திராட்ச மாலை அணிவித்தார். வேறொருவர் சேர தேசத்தைச் சேர்ந்தவர், அவனது இரண்டு கைகளிலும், புஜத்திலும் துளசி வளையங்கள் அணிவித்தார்.

புவனபதி நெகிழ்ந்து போனான். தன்னறைக்குப் போய், மூட்டையிலிருந்து பொற்காசுகள் எடுத்து ஆளுக்கொரு பொற்காசு கொடுத்து நமஸ்கரித்தான்.

சத்தியஞானியின் கைகளில் ஐந்து பொற்காசுகள் கொடுத்தான்.

''இந்தக் காசுக்கு எத்தனை நாள் உணவு கொடுக்க முடியுமோ அத்தனை நாள் உணவு தர வேண்டும் எப்போது குறைந்தாலும்... என்னிடம் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டும்'' பணிவோடு கூறினான்.

''புவனபதி, செல்வத்திற்கு எனக்கு குறைவேயில்லை. வட தேசத்து வணிகர்களும், யமுனைக் கரை வீரர்களும் இங்கு வந்து பித்ரு தர்ப்பணம் செய்வார்கள். ஜபத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது நான் அழைக்காமலே வந்து, என்னிடம் தர்ப்பணம் செய்யச் சொல்லிக் கேட்பார்கள்.

மிக கவனத்துடன் அவர்கள் தாய், தந்தையர் பெயர்களைக் கவனித்துக் கொண்டு, அவர்களை, முன்னோர்களின் பெயர்களை மனனம் செய்து, விரிவாகத் தர்ப்பணம் செய்து, கங்கையின் மகிமை சொல்லி, அரிச்சந்திர புராணம் சொல்லி, உங்கள் பித்ருக்கள் மிகவும் திருப்தியானார்கள் என்று

தொடையில் அடித்து, சந்தோஷமாய், உறுதியாய்ச் சொன்னால், மனசு நெகிழ்ந்து காசுகளை அள்ளிக் கொடுத்துவிட்டுப் போவார்கள்.

என் தொழுவத்தில் இருக்கிற பசுக்களெல்லாம், நான் தானமாகப் பெற்றவையே. நான் யானைகூட தானம் வாங்கியிருக்கிறேன் என் கவலையெல்லாம் நிரஞ்சனர்களைப் பற்றியதுதான்'' சத்தியஞானி கூறினார்.

''நிரஞ்சனர்களை ஏன் அரசர் அடக்கவில்லை?...'' புவனபதி கேட்டான்.

''காசி ஒரு புண்ணிய தேசம் இங்கு சண்டைகள் நடப்பதை யாரும் விரும்பவில்லை. யாரும் இங்கு படையெடுப்பும் நடத்துவதில்லை. சாதுக்களை யாரும் துன்புறுத்தக்கூடாது என்பது, எழுதாத கட்டளை. ஆனால், மிக சமீபமாகத்தான் இந்தத் தொந்தரவு வந்து கொண்டு இருக்கிறது.

பதினைந்து வருடங்கள் முன்பு, இங்கு வந்த ஒரு இருபது பாஞ்சால இளைஞர்கள், அதிகம் வன்முறை செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அதில் குறிப்பாய் மூன்று இளைஞர்கள் மிகவும் உக்கிரத்தோடு இருந்தார்கள்.

அவர்கள் அறிவும், திறமையும் கொண்டவர்கள்தான். ஆனால், அரச பதவி கிடைக்கவில்லை. அமைச்சராகக்கூட முடியவில்லை. ஏனெனில், அவர்கள் ஏழாவது, எட்டாவது மனைவிக்குப் பிறந்தவர்கள். அதனால் ஆற்றலிருந்தும், வாய்ப்பற்று இருக்கிறார்கள். ஆகவே, கோபமாய் இருக்கிறார்கள். அந்த கோபத்தைக் காசியில், சாதுக்கள் மீது காட்டுகிறார்கள்.

இறைவன் எங்களை வஞ்சித்து விட்டான். நாங்கள் இறைவனைத் தண்டிக்கிறோம் என்கிறார்கள். அப்பாவி சாதுக்களைத் தண்டிப்பது தான்... இறைவனைத் தண்டிப்பதாம்.''



''அவர்கள் எப்படி இருப்பார்கள்?'' புவனபதி கேட்டான்.

சிறுத்தைப் புலியை, நாய் போல் கட்டி இழுத்து வருவார்கள். மூன்று பேரும் பிரியவே மாட்டார்கள். காசி வீட்டுக்குப் போனாலும், ஒரே அறைக்குள் இருப்பார்கள். அவர்கள் பிரிந்தால் காசிக்கு நல்லது. அவர்கள் அழிந்தால் நிரஞ்சனர் கூட்டமே மாறிவிடும்.''

''ஒரு வயதானவரைப் பார்த்தேனே... அவரல்லவோ தலைவர் போல் விளங்கினார்.'' புவனபதி ஆவலாய்க் கேட்டான்.

''அவன் கோமாளி.. உதவாக்கரை. ஒரு பிரணாயாமம் கூட ஒழுங்காய் செய்யத் தெரியாதவன். வாய்ஜாலகன். நாடக நடிகன். அவனை முன்னே நிறுத்தி.. அந்த மூன்று இளைஞர்களும் ஆட்டம் போடுகிறார்கள். வெளியே வரும் போது அவனை 'குரு' என்று கூப்பிடுவார்கள். ஆனால், அவர்கள் மாளிகைக்கு உள்ளே, அந்த குருதான், இவர்களுக்கு கால் பிடித்துவிட்டுக் கொண்டிருப்பான். முதுகுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டிக் கொண்டிருப்பான்.''

''குளிப்பது என்று சொன்னதும் எனக்கொரு கேள்வி வருகிறது.'' புவனபதி சத்தியஞானியிடம் மடக்கிப் பேச.. அவர் கை உயர்த்தினார்.

''ஆமாம், முதலமைச்சர் மூன்று முறை குளிக்கும் பழக்கமுடையவர்'' என்று அவசரமாய்ப் பதில் சொன்னார்.

''இதற்குமேல் இங்கு அதுபற்றி பேசாதே.'' என்று அந்த அவசரம் அவனுக்கு உணர்த்தியது போல் இருந்தது.

''உங்களுக்கு அந்த பாஞ்சால இளைஞர்களிடம் இருந்து ஏதேனும் தொந்தரவு உண்டா?..''

''இது வரை இல்லை. இனிமேல் நிகழலாம்.''

''ஏன்..?''

''உனக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறேனே...''

''அப்படியானால் நான் வெளியேறி விடட்டுமா...''

''இந்த இடம் தவிர, வேறு எந்த இடத்தில் நீ தங்கினாலும் உனக்கு மரணம் நிச்சயம் புவனபதி. அந்த மரணமும் மிக மோசமானதாக இருக்கும். நான் ஒரு சோழ தேசத்தவன் இங்கிருக்கையில், இன்னொரு சோழ தேசத்தவன் அநியாய மாய் மாள்வதை நான் அனுமதிக்க மாட்டேன். அப்படி நடந்தால், நான் பிறந்த சோழ தேசம் என்னை மன்னிக்காது. இங்கு நீ தமிழ் பேசும் போது எல்லோரும் எத்தனை சந்தோஷப் பட்டோம். நமது பாட்டுக்களையும், நாட்டியங்களையும், நீ பாடிய போதும், ஆடியபோதும் எத்தனை குதூகலம் அடைந் தோம். உன்னை இழக்க நாங்கள் விரும்பவில்லை புவனபதி. அப்படிச் செய்தால், அந்தக் குற்றவுணர்வு எங்களைக் கொன்று போடும். நீ யார் பெற்ற பிள்ளையோ?... ஆயினும், தமிழ் பேசுகிறாய். உன்னை ஆதரிக்க வேண்டியது என் கடமை.

இதிலிருந்து நான் பின்வாங்க மாட்டேன். இந்த பாஞ்சாலர் களின் கொட்டத்தை உன்னை வைத்தே அடக்குவேன். அதர்மம் அரசாண்டால், தர்மம் பொங்கியெழும், மடக்கிக் கேட்கும். சாதுக்களை யார் மிரட்டினாலும், எதற்கு மிரட்டினாலும் அவன் தண்டிக்கப்பட வேண்டும். சாதுக்களுக்கு மதம் இல்லை; மொழி இல்லை; தேசம் இல்லை; கலாச்சாரம் இல்லை; அவர்கள் இறைவனின் குழந்தைகள்; மனிதனின் நண்பர்கள்; அவர் களால்தான் கிரகங்கள் நகர்கின்றன; மழை பொழிகிறது; புல் வளர்கிறது. அவர்கள் வேலையற்று, கிடைத்ததை உண்டு, தூங்குகிறவர்கள் போல் தோற்றமளிப்பார்கள். பிச்சை உணவில் வாழ்வதுபோல காட்சியளிப்பார்கள்.

ஆனால், அவர்கள் வேலை கடினமானது. அவர்கள் வேலையை வேறு யாரும் செய்ய இயலாது. அவர்களால் எந்த வேலையையும் செய்ய முடியும்.



சாதுக்கள் நினைத்தால், போர் செய்ய முடியும், தேசத்தை ஆட்சி செய்ய முடியும், ஆய கலைகள் அறுபத்தி நான்கையும் செய்து காட்ட முடியும்.

ஆனால், அவர்கள் அமைதியானவர்கள். இவைகளுக்கு ஆசைப்படாதவர்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டியது நமது கடமை.

சாதுக்களை அவமதிப்பதும்,பெண்களைத் துன்புறுத்துவ தும், குழந்தைகளை பட்டினி போடுவதும், போர் வீரர்களை ஏமாற்றுவதும் ஒரு தேசத்தின் சுபிட்சத்தை அழித்துவிடும்.

இந்த வீடு... இந்தக் கோட்டைச் சுவருக்கு நடுவேயுள்ள இந்த குடித்தனங்கள், சாதுக்களை ரட்சிக்க இங்கு வா... என்று இறைவனை வேண்டின. இறைவன் உன்னை அனுப்பி இருக்கிறான். நீ அவர்களை அடித்ததை, உன் சண்டையை நான் நேரில் பார்த்தேன்.

இதுவரை இப்படிப்பட்ட தாக்குதலை நான் பார்த்ததே இல்லை. தொடை தட்டாமல், வீர முழக்கம் செய்யாமல், ஒரு வார்த்தை கூட பேசாமல் அந்த இரண்டு பேர்களையும் நீ தாக்கியது வினோதமாகவே இருந்தது.

இங்கே போர் என்றால் முதலில் பேசுவார்கள். வீரம் பேசிவிட்டு மாலை போட்டுக் கொள்வார்கள். இரண்டு நாட்கள் கழித்து வந்து உன்னை அடித்து நொறுக்குவேன் என்று காணாமல் போவார்கள். மறுபடி வந்து அதேபோல் வீரம் பேசுவார்கள். ஜனங்களும் பொறுமையாய்க் காத்திருப்பார்கள்.

அவர்களிடம் நீ பேசாது, எலும்புகளை ஒடித்த விதம் எனக்குக் குதூகலத்தைக் கொடுத்தது. சாதுக்கள் ரட்சிக்கப் பட்டவர்கள் என்று கூவினேன். முதல் அமைச்சருக்கு இது பற்றி நான்தான் தகவல் கூறினேன்.

ஆனால், முதல் அமைச்சர் வீட்டிலிருந்து நீ வெளியே வந்தவுடன் அங்கு தங்க உனக்குப் பிரியமில்லை என்று

உணர்ந்து கொண்டேன். அது வேறிடம். அவர்கள் வாழ்க்கை வேறு விதம். போகக்கூடம் அது. நீ வெளியே வந்ததும் எனக்கு தகவல் வந்தது.

உன்னை இங்கேயே தங்க வைக்க தீர்மானித்து விட்டேன். என்ன பிரச்சினை வந்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.''

அவர் சொல்லி முடித்ததும் வாசலில் பிரச்சினை வந்தது. ஒரு சிறுத்தைப் புலி ஒருக்களித்த கதவின் உள்ளே குபீரென வந்தது.

முதல் வீட்டு வாசலில் கட்டியிருந்த கன்றுக்குட்டியை எகிறி அடித்தது. கன்றுக்குட்டி கதறி விழ... அதன் கழுத்தில் காலை வைத்துக் கொண்டு மற்றவர்களைத் திரும்பிபார்த்தது. அங்கே உள்ளவர்கள் வீட்டிற்குள் ஓடி கதவைச் சாத்தினார்கள்.

எந்த ஆயுதமின்றி புவனபதி மட்டும் சிறுத்தைப் புலியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்குக் கோபம் வந்தது.

## 23

புவனபதி திருக்குடந்தையில் உள்ள அவன் மைத்துனர் மார்களை நினைத்துக் கொண்டான். எந்த ஆயுதமுமில்லாமல் ஒரு சிறுத்தைப் புலியை தாக்க அவர்கள் சொல்லித் தரவில்லை.

''ஆனால் எந்த மிருகத்திற்கும் பயப்படாதே. எல்லா மிருகங்களும் முதலில் எதிரியின் பயத்தைத்தான் எடை போடுகின்றன. பார்வையால், உருமலால், சீறலால், அசைவால் அவைகள் பயம் காட்டுகின்றன.

பயப்படாமல் இருக்க என்ன தெரிந்து கொள்ள வேண்டும் தெரியுமா? அந்த மிருகத்திடமிருந்து தப்பிக்கத் தெரிந்து கொள்.



அந்த மிருகத்தை உற்றுப்பார்த்துக் கொண்டே தப்பிக்கின்ற வழியையும், தாக்குகின்ற வழியையும் ஒரே நேரத்தில் யோசி.

தப்பிக்க வழியிருக்கிறது என்றாலே தைரியம் வந்து விடும். இதை ஒரு மிருகத்தோடு சண்டை போடும்போது நிச்சயம் உணர்வாய்,'' என்று திருக்குடந்தையில் மைத்துனர்கள் சொல்லிக் கொடுத்தார்கள்.

புவனபதி அதை உணர்ந்தான். மாட்டுக் கொட்டிலை எகிறிப் பிடித்துக் கரணம் அடித்தால் கூரைக்குப் போகலாம். கூரையிலிருந்து மேல் தளத்திற்கு போகலாம். மேல் தளத்தில் இருந்து மதில் சுவருக்குப் போகலாம். மதில் சுவரில் இருந்து எதிர் சுவருக்கு போகலாம்.

அப்படிப் போகிற வழியில் கருங்கற்களோ, சுட்ட செங்கல்லோ, மூங்கில் கழியோ கிடைக்கலாம்.

அவனுக்கு தப்பிக்க வழி தெரிந்து விட்டது. தைரியமானான். சிறுத்தையிடம் ஒரு மென்மை இருக்கிறது. வெறுமனே பூனை போல் பார்க்கிறது. பார்வையில் சீற்றமில்லை.

சிறுவயதில் பாலாற்றில் முதலையால் கடிக்கப்பட்டு, ஆற்றில் அடித்துவரப்பட்ட சிறுத்தையைப் பார்த்திருக்கிறான். கடிபட்ட சிறுத்தையை சுழன்று, சுழன்று தாக்கியது.

இந்த சிறுத்தை கன்றுக் குட்டியை மிதித்துக் கொண்டிருக்கிறதே தவிர கடித்துக் குதறவில்லை. இது சிறுத்தையாக இல்லை.

சிறுத்தை ஒரு அடி நகர, புவனபதி அதை நோக்கி ஓடினான். அதன் கன்னத்தில் பலம் கொண்ட மட்டும் தன் புறங்காலால் அடித்தான். அது தடுமாற, நெஞ்சில் உதைத்தான். அது சுருண்டு எகிற, சட்டென்று நன்கு குனிந்து கொண்டு அதன் அடிவயிற்றைக் குத்தினான்.

சிறுத்தை கோரமாகக் கத்தியது. கூரை நுனியைப் பிடித்து, கரணம் அடித்து, அதன் மீது ஏறினான்.

நுனி விரலில் ஓடி, தளத்தில் கால் வைத்தான். தளத்தில் அவன் நினைத்தது போலவே கற்கள் இருந்தன.

சிறுத்தைப் புலியும் சட்டென்று கூரைக்கு ஏறியது. அது கூரைக்கு ஏறியதும், நவக்கியானி வெளியே ஓடி வந்தாள். அவள் கையில் ஒரு குத்தீட்டி இருந்தது. கூரிய முனையுடன் இரண்டு கை நீளம் இருந்தது.

''வீரரே - இந்தாருங்கள்'' அவள் குத்தீட்டியை மேல் வாட்டமாய் அவனை நோக்கி வீசினாள். குறிபார்த்து எறியாது, பிடி கைக்கு கிடைக்கும்படி தூக்கிப் போட்டாள்.

கூரையில் ஏறிய சிறுத்தை சட்டென்று அவளைப் பார்த்தது. வாலை முறுக்கிக் கொண்டு திசை திரும்பியது. கூரையிலிருந்து நேரே அவள் மீது தாவியது.

சிறுத்தை காத்திருக்கும் போதே அவள் விரைவாக இடம் மாறினாள். பசுக்கொட்டிலின் கதவுக்குப் பின்னால் போனாள்.

சிறுத்தை திசை மாறியது தெரிந்ததும், புவனபதி தளத்திலிருந்து உடம்பைச் சுருக்கி, ஒரு தவளை போல் தரையில் குதித்தான். ஓடிப்போய் சிறுத்தையின் முதுகில் அடித்தான்.

சிறுத்தை வலிதாங்காமல், பல்காட்டி சீறியது. ஈட்டியின் கூர்முனையால் அதன் முகத்தில் அடித்தான். சுருண்டு விழுந்து, திசை தெரியாமல், மூளை கலங்கிப் போய் அலைந்தது. இரண்டு முன் கால்களிலும் உச்சந்தலையிலும் பட்டென்று பலமாகத் தட்டினான். துள்ளி விழுந்து ஒருக்களித்துப் படுத்துக் கொண்டது.

ஈட்டியின் முனையை வேகமாகத் தரையில் தேய்த்து, சிறுத்தையை குத்திக் கொல்ல, தோளுக்கு மேல் ஈட்டியைத் தூக்கினான்.

''வேண்டாம், வேண்டாம் அதைக் கொல்ல வேண்டாம்'' நவக்கியானி அலறினாள்.



இந்த வீட்டில் உயிர் கொலை வேண்டாம்.

மாடு கட்டும் கயிறால் கால்களைச் சுருக்கிட்டு விடுங்கள் 'அவள் சட்டென்று ஒரு கயிறை எடுத்து சுருக்குப் போட்டு, அவனிடம் வீசினாள்.

அவன் அடிபட்ட உள்ளங்காலில் சுருக்கை நுழைத்து இழுக்க, சிறுத்தை மறுபடி எழுந்தது. அவன் பளீரென்று உள்ளங்கையால் அறைந்தான்.

வீட்டு முற்றத்திற்கு நடுவே இருந்த விளக்குக் கம்பத்தின் உச்சியில் கயிறு போட்டு, சிறுத்தை கால்களை தூக்கியிருக்கும்படி கட்டினான்.

வீட்டுக்குள் இருந்தவர்கள் வெளியில் வந்தார்கள் சத்திய ஞானி வெளியே வந்தார். வாசலுக்குப் போய் ஒருக்களித்திருந்த கதவை விரியத் திறந்தார்.

''நிரஞ்சன நாய்களே. உங்களுக்கு இன்னும் புத்தி வர வில்லையா? பிணம் தின்னும் பேய்களே. நீங்கள் என்ன மானம் கெட்ட குலத்திலா பிறந்திருக்கிறீர்கள்? பெண் கற்பே இல்லாத தேசமா உங்களுடையது? பிடிப்பு இல்லாத பச்சை மாமிசங்களே, மிருக நரகலா உணவு உங்களுக்கு?'' என்று இரைந்தார்.

அந்த சந்தில் யாரும் இல்லை. ஆனால் சந்து முனையில் நாலைந்து பேர் இருப்பார்கள் என்று தோன்றியது.

புவனபதி மதில் சுவர் ஏறலாம் என்று நினைத்தான். மனம் மாறினான். வீட்டின் பின்பக்கம் போய், கோட்டைக்குள் குதித்தான். அரண்மனைக்கும், மதில் சுவருக்கும் நடுவே ஓடினான்.

உட்கார்ந்திருந்த வேலைக்காரப் பெண்கள் திடுக்கிட்டு எழுந்தார்கள்.

காவலாளியைத் தாண்டி, வாயிற் கதவைத்தானே திறந்தான். திசை பார்த்து சுற்றிக் கொண்டு ஓடிவான்.

ஒரு வீட்டுத் தோட்டத்தில் உலர்த்தியிருந்த பெண்ணின் மேல் புடவையை, ஈட்டியால் குத்தி இழுத்துக் கொண்டான்.

அந்த வர்ண சேலையை தலையில் போட்டு, தோளைச் சுற்றி போர்த்தி, தொங்கவிட்டு சந்துகளில் நடந்தான். ஈட்டியை முதுகுக்கு பின்னே வைத்துக் கொண்டான்.

இந்த முறை பனிரெண்டு பேர் இருந்தார்கள். பனிரெண்டு பேரும் நல்ல தடியர்கள். எதிர்ப் பக்கம் சத்திய ஞானி கூச்சலோடு வருவது கேட்டது.

''இரண்டு சிறுத்தைகள் அனுப்பியிருக்க வேண்டுமடா. நான் அப்போதே சொல்லவில்லை. ஒரு சிறுத்தை போதாது என்று. அறைக்குள் போட்டு பூட்டியிருக்கிறார்கள். ஓடி வா... ஓடி வா.''

அவர்கள் பின்வாங்கினார்கள். உடம்பு குலுங்க ஓடினார்கள்.

புவனபதி அவர்கள் தாண்டும் வரை தலைகுனிந்து, சுவரோரம் பெண் பிள்ளை போல ஒளிந்து கொண்டான்.

ஒருவன் மட்டும் அங்கிருந்தபடியே சந்தை எட்டிப் பார்த்துக் கொண்டு இருந்தான். அவனிடம் சிறுத்தை கட்டிய சங்கிலி இருந்தது.

''டே சிறுத்தை வராது. ஓடி வந்துவிடு'' பதினோரு பேரும் கூவ பனிரெண்டாவது ஆள் கீழிருந்த கல்லை எடுத்துக் கொண்டான்.

புவனபதி புடவையை விசிறிப் போட்டுவிட்டு, பதினொன்றுக்கும், பனிரெண்டுக்கும் நடுவே நின்று, பதினோறாவது ஆளை ஈட்டிக் கம்பால் பளிச் பளிச் சென்று அடித்தான். நெஞ்சில் கம்பால் குத்தினான்.

பத்தாவது ஆளின், தோள் பட்டையைத் தாக்கினான். பனிரெண்டாவது ஆள் திகைத்து நிற்க, கல்பிடித்திருந்த



அவனின் முஷ்டியில் அடித்தான். கல் கீழே விழுந்தது. அவனுக்கு ஈட்டிக் கம்பால் சரமாரியாக அடிகள் விழுந்தன.

புவனபதி அவனை நெட்டித் தள்ளிக் கொண்டு போய் சத்தியஞானியின் வீட்டுக்குள் தள்ளினான். கதவை சாத்திக் கொண்டான்.

''ஒரு பெண் பிள்ளை இருக்குமிடத்தில், பத்து வயோதிகள் இருக்குமிடத்தில், சிறுத்தைப் புலி அனுப்பும் நீங்கள் வீரர்களா? நீங்கள் சன்னியாசிகளா? சாதுக்களா?''

அவனை மல்லாக்கத் தள்ளி, கணுக்காலில் ஏறி நின்று கொண்டான். ஈட்டியின் அடிக்கம்பால் அவன் வலக்கை கட்டைவிரலைத் தரையோடு வைத்து அழுத்தினான்.

அவன் அலறல் சுற்றியுள்ள எல்லாக் கட்டிடங்களிலும் எதிரொலித்தது.

சிவக்கியானியை, கயிறு கொண்டு வரச்சொன்னான்.

அவனைத் தலைகீழாகக் கட்டி, கதவுக்கு முன்பக்கம் தொங்க விட்டான்.

''புவனபதி இது வேண்டாமே.'' அந்த வீட்டிலுள்ள கிழவர்கள் கெஞ்சினார்கள்.

''எனக்கும் விருப்பமில்லைதான். ஆனால், நவக்கியானி சிறுத்தையால் தாக்கப்பட்டு இறந்திருப்பாள். எந்தக் கவலையுமில்லாமல் ஒரு சிறுத்தையை வீட்டுக்குள் அனுப்புகின்ற இவனை நல்ல விதமாக நடத்த என்னால் இயலாது.

ஐயா சத்தியஞானியாரே, அவிழ்த்து விடவா சொல்கிறீர்?'' புவனபதி அவரை நோக்கிக் கேட்டான்.

''என்மீது ஏன் இவ்வளவு காழ்ப்பு? என்று புரியவில்லை'' சத்தியஞானி கவலைப்பட்டார்.

''காழ்ப்பு உங்கள் மீதல்ல. என் மீது. எனக்கு இங்கே இடம் கொடுத்ததால்தானே சிறுத்தை இங்கே நுழைந்திருக்கிறது

சிறிதுகூட கூச்சமில்லாமல் ஒரு கொடூர செயலை இந்தக் கூட்டம் செய்கிறது.

காசி புனிதமான இடம் என்பதால், நான் மௌனமாக, அடக்கமாக செயல்படுகிறேன். இல்லையெனில் பலரை அங்கஹீனர்களாக்கி இருப்பேன். இந்தக் கூட்டத்தை அடித்து கலைத்திருப்பேன். ஒற்றை ஆளாய், இவர்களின் மாட, மாளிகைகளைத் தரைமட்டமாக்கி இருப்பேன்.

இந்த காவியுடை முரடர்கள் இந்து மதத்தை அசிங்கம் செய்கிறார்கள். துறவுத் தன்மையைக் கேவலமாக்குகிறார்கள். என்னுடைய ஆச்சரியம் எது தெரியுமா? காசி தேசத்து அரசன் யார்? அவனுக்கு இது தெரியுமா? இந்த அரசன் சுரணை உள்ளவன்தானா? தர்ம, நியாயம் அறிந்தவனா? இப்படி ஒரு வன்முறைக் கூட்டத்தை அடங்க வைக்க முடியவில்லையெனில், இவர் வாழ்ந்தென்ன பயன்? அரசருக்கு இந்த விஷயம் தெரியும்வரை இவனை நான் இறக்கிவிடப் போவதில்லை. என் முடிவு சரியா சத்தியஞானியாரே?''

சத்தியஞானி யோசித்தார். 'சரி'யென்றார்.

''ஆனால், யுத்தம் துவக்கி விட்டோம்.'' கிழவர் ஒருவர் முணுமுணுத்தார்.

''வேறு வழியில்லை பெரியவரே'' புவனபதி சற்று உரத்துப் பேசினான்.

வாசலில் நிறைய குதிரைகளின் குளம்படி சத்தங்கள் கேட்டன. கதவு திறக்கும்படி கட்டளை வந்தது.

அந்த முற்றத்துக்குள் குதிரை வீரர்கள், குதிரையோடு நுழைந்தார்கள். புவனபதியின் கையைப் பின்பக்கம் கட்டி, கழுத்திலும், இடுப்பிலும் சங்கிலி போட்டுக் கட்டி, இழுத்துக் கொண்டு போனார்கள்.

சத்தியஞானியால் எதையும் தடுக்க முடியவில்லை.



## 24

''நெற்றியை வைத்துச் சொல்கிறேன், இவன் ராசி விருச்சிகம். உடம்பை வைத்துச் சொல்கிறேன், இவன் லக்னம் துலாம். கர்ம ஸ்தானத்தில் சனியும் சுக்கிரனும் இருக்கிறார்கள்.

லக்னத்தைக் கண்டுபிடித்துவிட்டால் குருவையும், சந்திரனையும் சரியான இடத்தில் நிறுத்திப் பார்த்து விடலாம். குருவையும் சந்திரனையும் நிறுத்திவிட்டால், மற்ற கிரகங்களை இனம் கண்டுபிடித்துவிடல் எளிது.

இவன் ஜாதகம் என் கையில் இருக்கிறது. இவன் போகும் இடமெல்லாம் சச்சரவு உண்டு பண்ணும் இயல்புடையவன்; பொறுமை இல்லாதவன்; தனியானவன்; இவன் காசிக்கு வந்திருக்க வேண்டாம்; இவன் பிறந்த திசைக்கு வடதிசை இவனுக்கு நல்லதல்ல; அது இவனுக்கு மரணத்தை அல்லது மரணம் போன்ற குழப்பத்தைக் கொடுக்கும்.

ஆனால், இதை இவனிடம் சொல்லிப் பயனில்லை. இவன் எதையும் காது கொடுத்துக் கேட்கும் பழக்கம் உடையவனல்ல. இவனுக்கு ஜோஸ்யம் சொல்லாமலிருப்பதே உத்தமம்.''

சத்தியஞானியிடம் அவர் வீட்டில் குடியிருக்கும் ஒரு சாது உரக்கப் பேசிக் கொண்டு வந்தார்.

''நான் சொல்வதைத் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். இவன் காசியிலிருப்பதே நல்லதல்ல. அதிலும், நம் வீட்டில் இருப்பது நல்லதல்ல. நம் வீடு நீர் ராசி; இவன் நெருப்பு; அவனுக்கும் ஆகாது; நமக்கும் தொந்தரவு; அரசாங்கத்திடம் மன்னிப்புக் கேட்டு இவனை அனுப்பிவிடுங்கள். இவனுக்கு தங்க இடம் கொடுத்ததற்காகவும் நாம் தண்டிக்கப்படலாம்.''

சாது பேசிக் கொண்டே வர சத்தியஞானி பதில் பேசாது அமைதியாக இருந்தார்.

''ஒருவேளை உங்களுக்கு சிரமமாக இருந்தால், அவனை வெளியேறச் சொல்லி நான் சொல்லிவிடட்டுமா. என்னப்பா செய்வது... அரசாங்கம் வற்புறுத்துகிறதே, என்று சொல்லி விடட்டுமா.''

''இல்லை, பெரியவரே, காசி இந்துக்கள் க்ஷேத்தரம், பரத கண்டத்தில் பல்வேறு திக்கிலிருந்தும் பல்வேறு மனிதர்கள் காசிக்கு வருவார்கள். நெடுந்தூரம் நடைப்பயணம் மேற் கொண்டு ஒரு கலவரத்தோடு காசியில் வந்து நிற்பார்கள்.

புரியாத மொழி; புதிதான கலாச்சாரம்; வழி தெரியாத ஊர், என்று அலைவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது காசியில் உள்ளவர்கள் கடமை. ஒரு விருந் தாளியை, 'போ' என்று எப்படிச் சொல்வது? இவனா பிரச்சனையை உண்டு பண்ணினான்? இவன் இல்லாவிட்டால் சிறுத்தை இரண்டு மூன்று பேரை அடித்துப் போட்டிருக்கும்'' சத்தியஞானி சாதுக்கு பதில் சொன்னார்.

''உங்களுக்குப் புரியவில்லை சத்தியஞானியரே, சிறுத்தை வந்ததே இவனால்தான். நிரஞ்ஜனங்கள் இவனைத் தாக்கத்தான் சிறுத்தையை அனுப்பினார்கள். இல்லையெனில் நம் வீட்டுக்கு ஏன் சிறுத்தை வரப்போகிறது.''

''அதுசரி. அதற்காக... ஒரு விருந்தாளியை வெளியே போகச் சொல்ல முடியுமா? இவன் கொள்ளையடித்தானா? கொலை செய்தானா? வம்பு செய்த நிரஞ்ஜனர்களைத் தாக்கினான். காசி அமைதியாக இருக்க வேண்டுமென்றுதானே விரும்பினான். இதற்காக இவனைப் புறந்தள்ளுவது தவறு.''

''இவன் ஜாதகம் சரியாக இல்லை, சத்தியஞானியாரே.''

''சாதுவே, நீங்கள் அரண்மனைக்கு வர வேண்டாம். உங்களால் விரைவாக நடக்க இயலவில்லை. நீங்கள் போய் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.''



''சரி.'' அந்த சாது பனிச்சென்று நின்றார். அவருக்குப் புரிந்தது.

சத்தியஞானி அரண்மனை நோக்கி விரைவாக நடக்க, அவர் முதுகுக்குப் பின்னே அந்த சாது மெல்ல சிரித்தார். ''என்ன செய்ய...விதி வலிது. சத்தியஞானியின் முதுகு கறுக்கத் துவங்கி விட்டது. நடு முதுகில் கருப்பு படர, மரணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம். சத்தியஞானியாரே, நீ செய்த புண்ணியங்கள் உம்மையும் உம் குடும்பத்தையும் காக்கட்டும்.''

''சில சமயம் புண்ணியங்கள் நல்லவர்களைக் காக்காமலும் போய் விடுகின்றன. செய்த பாவங்களால் மனிதன் அடிபட இருப்பதை, சில சமயம் புண்ணியங்கள் வேடிக்கை பார்க்கின்றன.''

''சத்தியஞானியே, உன் புண்ணியங்கள் உன்னை என்ன செய்யும் என்று எனக்குத் தெரியவில்லை.''

''ஒரு ஆளை இழுத்துக் கொண்டு போகிறார்கள் என்றால் அக்கம் பக்கத்து ஜனங்களுக்கு கொண்டாட்டமாகப் போய்விடுகிறது.''

''என்ன கொலையா...எத்தனை பேர். அல்லது கொள்ளை யடித்து விட்டார்களா. பார்த்தால் கொள்ளைக்காரன் போலத் தான் தெரிகிறான். அட... பூணூல் இருக்கிறதே... பிராமணனா. அந்த பிரம்பை எடு, ஓடிப்போய் முதுகில் சாத்திவிட்டு வருகிறேன். கலியில் பிராமணன் கொள்ளையடிப்பான் என்று எழுதப்பட்டிருக்கிறது.''

தெருவோர ஜனங்கள் வாய்க்கு வந்தபடி பேசினார்கள். குழந்தைகளுக்கு புவனபதியைத் தூக்கிக் காட்டினார்கள். ஜனங்களுக்கு நடுவே ஓடி, நாய்கள் விடாது குறைத்தன.

நன்கு பால் குடித்து வளர்ந்த காசிதேசத்துப் பையன்கள், பிசாசு போல் கத்திக் கொண்டு வந்தார்கள். அதில் ஒருவன் புவனபதியை அடிக்க முயல, சங்கிலியைச் சொடுக்கி புவனபதி அவன் முகத்தில் அடித்தான். அந்தப் பையன் எகிறி விழுந்தான். வாயெல்லாம் ரத்தமாயிற்று.

''என்ன திமிர் அந்த திராவிடனுக்கு.'' ஜனங்கள் கத்தினார்கள். சத்தியஞானி சிந்தனையின்றி செயல்படுகிறான் என்று வேதனைப்பட்டார்.

புவனபதி எதுபற்றியும் கவலைப்படாமல் நாலாபக்கமும் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தான். அவனால், வெகு எளிதாக தப்பிக்க முடியும் என்பது அவன் நடையில் தெரிந்தது. அரண்மனை வாசலை அடைந்ததும் வீரர்கள் கதவைத் திறக்கச் சொன்னார்கள்.

கொம்புகள் ஊதப்பட்டு பெருங்கதவுகள் திறக்கப்பட்டன. புவனபதியோடு சத்தியஞானியும், மற்ற ஜனங்களும் உள்ளே நுழைந்தார்கள்.

கோட்டை வாசல் தாண்டியதும் இன்னொரு வாசல் வந்தது. அந்த வாசல் திறக்கப்பட்டு, பொதுஜனங்கள் சோதிக்கப்பட்டு, உள்ளே அனுப்பப்பட்டார்கள். கழிகளையும், சிறு கத்திகளையும் காவலாளியிடம் ஒப்படைத்துவிட்டுப் போகச் சொன்னார்கள்.

இரண்டாவது வாசலைத் தாண்டியதும், பெரிய முற்றம் இருந்தது. தரை முழுவதும் கருங்கல் பரவியிருந்தது. அந்தக் கருங்கல் சூடாக இருந்தது. அந்த வெட்ட வெளிக்கு நடுவே அரண்மனை இருந்தது.

அந்த அரண்மனையில் நாலைந்து உப்பரிகைகள் இருந்தன. அதில் நடுநாயகமான உப்பரிகை அருகே புவனபதியைக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். முற்றத்து நடுவிலுள்ள கருங்கல் தூணில் கட்டினார்கள்.

எல்லோரும் உப்பரிகையை அண்ணாந்து பார்க்கக் காத்திருந்தார்கள். தலைப்பாகை அணிந்த ஒரு மனிதன் உப்பரிகையிலிருந்தபடி 'என்ன?' என்று கேட்டான்.

''கலவரம் செய்தவனைக் கைது செய்து வந்திருக்கிறோம். அரசருக்குத் தெரிவியுங்கள்'' ஒரு வீரன் கூச்சலுடன் பேசினான்.



கூட்டத்துக்குப் பின்னே சப்தம் கேட்டது. யாரோ அதட்டி வழி கேட்டார்கள். தடிகளோடும் குத்தீட்டிகளோடும் நிரஞ்சனர்கள் நாற்பது பேர் உள்ளே நுழைந்தார்கள். அவர்களுடைய தலைவன் அந்த வயசாளி, புவனபதிக்கு அருகே போய் நின்று சிரித்தான்.

வந்த நிரஞ்ஜனர்கள் ஒரு மர ஆசனத்தை எடுத்து வந்திருந்தார்கள். அதை உப்பரிகைக்குக் கீழே போட்டு அதன் மீது வெண்பட்டு விரித்தார்கள். வெற்றிலை துப்பும் கிண்ணம் வைத்தார்கள். அவர்களின் காவிக் கொடியைப் பிடித்து ஒருவன் அருகே நின்றான்.

அந்த வயசாளி, நிரஞ்ஜனர் மர ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். எழுந்து புவனபதிக்கு அருகே வந்தார்.

''எங்களோடு சேர்ந்து விடுகிறாயா...'' என்று கேட்டார்.

புவனபதி சட்டென்று உரத்த குரலில் ஒரு சிறுத்தைப் புலியைப் போல சீறி அவரை பயமுறுத்தினான்.

அவர் அதிர்ந்து விலகி சரிந்தார். அவர் ஆட்கள் அவரைத் தாங்கிக் கொண்டார்கள். பயந்து விலகிய ஜனங்கள் மறுபடி ஒன்றானார்கள்.

சத்தியஞானிக்கும் அவன் கூச்சல் ஒரு அதிர்ச்சியைக் கொடுத்தது. 'இவனிடம் ஒரு மிருகம் இருக்கிறது' என்று நினைத்துக் கொண்டார்.

''என்ன சத்தம் அங்கே...?''

தலைப்பாகை இல்லாமல், பெரிய சட்டையோடு, களத்த உருவமாய் முத்துஹாரங்கள் தொங்க, கையில் மோதிரங்கள் பல மின்ன, அரசர் தூணைப்பிடித்து நின்றார்.

ஜனங்கள் எல்லோரும் ஆனந்தமாகி அரசரின் பெயர் சொல்லி 'ஜெயவிஜயீபவ' என்று கூவினார்கள்.

அரசர் அதை அலட்சியமாய் ஏற்றுக் கொண்டார். கேட்டுக் கேட்டு புளித்துப்போய் விட்டது என்பது போல் நின்றார்.

வாழ்த்திக் கூவாமல் இருந்தால், 'என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று சீறினாலும் சீறுவார்.

'யார் இவன்?' என்று அரசர் புவனபதியை உற்றுப் பார்த்தார். தலை திருப்பி விழி ஓரமாய் அவனை எடை போடுவது போல கூர்ந்து கவனித்தார்.

அது வெறும் பாவனை. ஒரு எடையும் போடவில்லை என்பது அவரோடு பழகியவர்களுக்குப் புரியும். அரசரின் கண்களில் ஒரு மக்குத்தனம் இருந்தது. அசைவுகளில் சோம்பல் இருந்தது. அவர் நிரஞ்ஜனர்கள் தலைவரையும் மதிக்கவில்லை.

''மன்னர் வாழ்க. மன்னரின் குலம் வாழ்க. அரசனே, உனக்கு நிரஞ்ஜனர்களின் வணக்கம். மனப்பூர்வமான ஆசி. சிவனை வீழ்த்திய மகாகாளி உனக்கு ஜெயம் தரட்டும்.'' நிரஞ்ஜனர்கள் தலைவர் எழுந்து வெண்கலக் குரலில் பேசினார்.

''இந்த திராவிட தேசத்து இளைஞன், இரண்டு நிரஞ்ஜனர்களைக் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் கடுமையாகத் தாக்கியிருக்கிறான். கையில் ஆயுதம் ஏந்தா நிரஞ்ஜனர்கள் இவனால் தாக்கப்பட்டு உயிர் ஊசலாடும் நிலையில் இருக்கிறார்கள்.

அது தவிர, இப்படிச் செய்தது தகாது என்று புத்திசொல்லப் போன இன்னொரு நிரஞ்ஜனரையும் தாக்கிவிட்டான். பகவின் பால் குடுத்து நாங்கள் வளர்த்து வரும் ஒரு சிறுத்தையைத் தோலுக்காகக் கவர்ந்து கொண்டு போய் விட்டான். அதை சித்திரவதை செய்து தலைகீழாய்க் கட்டியிருக்கிறான்.''

நிரஞ்ஜனர்கள் தலைவர் பேசிக் கொண்டேயிருக்கும் போது, பின்னே அமைச்சர் வந்து நின்றார்.

புவனபதி அவரை உற்றுப் பார்த்தான்.

அவனை அழைத்து வரச் சொன்ன அமைச்சர் சரியான அரசாங்க அலங்காரங்களோடு நின்றார். அவர் அவனைக் கண்டு கொள்ளவில்லை.



30187
4.6.6.90

புவனபதியும் அவரைத் தெரிந்ததாய்க் காட்டிக் கொள்ளவில்லை.

முணுமுணுப்பாய் அரசரிடம் அவர் ஏதோ சொல்ல, அரசர் தலை திருப்பாது காது கொடுத்து அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

சத்தியஞானியை அமைச்சர் சுட்டிக் காட்ட அரசர், அவரை உற்றுப் பார்த்தார்.

''இந்த இளைஞனை விடுதலை செய்யுங்கள். காசி சாதுக்கள் இருக்குமிடம், காட்டு மிருகங்களை இங்கு யாரும் வளர்க்கக் கூடாது. வளர்த்தால் கடுமையாகத் தண்டிக்கப் படுவீர்கள். மூன்று நாட்கள் முன்பு வந்தவன் உங்களோடு எதற்காக சண்டைக்கு வரவேண்டும். எல்லோரையும் வம்புக்கு இழுப்பதே உங்களுக்குத் தொழிலாகப் போய்விட்டது. இன்னும் நான் உங்களை சாதுக்களாகத் தான் பார்க்கிறேன். என்னைக் கோபமில்லாதவன் என்று பார்க்கிறீர்களா? என் கோபம் மிகக் கடுமையாக இருக்கும். நிரஞ்ஜனர்களுக்கு இது கடைசி எச்சரிக்கை.

யாரங்கே... அந்த மர ஆசனத்தை உடைத்துப் போடு. அரசர் எதிரில் அரசர் ஆசனம் கொடுத்தால்தான் உட்கார முடியும். நீங்களாய் ஆசனம் எடுத்து வந்து அலங்காரங்கள் செய்து கொண்டிருக்க முடியாது. அந்தக் கொடியைச் சுருட்டு. வெற்றிலைக் கிண்ணத்தைத் தூக்கி சாக்கடையில் எறி. எல்லோரையும் வெளியே துரத்து.

சம்பந்தப்பட்டவர்கள் வந்தால் போதாதா. எதற்கு இத்தனை கூட்டம். அந்த திராவிட இளைஞனை அரண்மனைக்குள் அனுப்பு. அந்தக் கிழவருக்கும் வழிகாட்டு.'' அரசர் சத்தியஞானியை நோக்கி கைகாட்டினார்.

முதல் அமைச்சரின் வலுவை புவனபதி புரிந்து கொண்டார்.

உப்பரிகையில் சிரிப்புக் குரல் கேட்டது.

## 25

அரசன் தழல் நிறைந்த நெருப்பை போன்றவன். அவனுக்கு அருகே நெருங்கவும் கூடாது. அவனை விட்டு விலகி இருத்தலும் கூடாது. அரசனைக் கோபத்தை வைத்து மட்டும் தழல் என்று சொல்லவில்லை. அரசன் வறுமை இருள் நீக்குபவன். குளிர் என்கிற பகைவரைத் துரத்துபவன். உஷ்ணப் பாதுகாப்பு தருபவன்.

அதே நேரம் அவன் மனது சதா அலைபாய்ந்து கொண்டே இருக்கும். பல ஆயிரக்கணக்கான சிந்தனைத் தகிப்பில் அரசன் இருப்பான். உப்புக் கட்டை வெடித்துச் சிதறுவது போல அரசன் கோபப்படுவான். எனவே அரசன் கோபத்திற்கு ஆளாகாமல் விலகி இருக்க வேண்டும்.

சத்தியஞானி அரச சபையின் விளிம்பில் கவலையோடு நின்று கொண்டிருந்தார். அரச சபை காலியாக இருந்தது. சில சாளரங்கள் மட்டுமே திறக்கப்பட்டிருந்தன. அரசன் முதல் மந்திரியின் நாற்காலியில் கனத்த உருவத்தோடு உட்காந்திருக்க, அடுத்த நாற்காலி நுனியில் அமர்ந்தபடி முதல் மந்திரி அரசரோடு பேசிக் கொண்டிருந்தார். பின்னால் ஒரு தாதி மயிற்தோகை வைத்து விசிறிக் கொண்டிருந்தாள். தொலைவே சில சேவகர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

புவனபதி அரசருக்கு பதினைந்து முழ தூரத்தில் தரையில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அவனுக்குக் குடிப்பதற்கு பாலும், சோளப்பணியாரமும் தரப்பட்டன.

சத்திய ஞானியைப் பால் வேண்டுமா என்று கேட்டபோது மறுத்து விட்டார்.



''இங்கு வாரும்'' முதலமைச்சர் அவரைக் கைதட்டி அழைக்க, சத்தியஞானி அவர் அருகே போய், கை கூப்பினார்.

''இந்த இளைஞனுக்கு காசியைப் பற்றி விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறீர்களா?''

''இல்லை. இவனோடு பேசும் சந்தர்ப்பமே வரவில்லை.''

''அப்படியா. இவனிடம் ஒரு வேண்டுகோள் வைக்கப் பட்டது. இவனுடைய யுத்தமுறைகள், தாக்குதல் வேகங்கள் அபாரமாய் இருக்கின்றன. தெற்கே உள்ள நம்பூதிரிமார்கள், சேர தேசத்து அந்தணர்கள் இந்த முறைகளைக் கண்டு பிடித் திருப்பதாக அறிகிறோம். நமது காவல் படையினருக்குக் குறுகிய காலத்தில் சில தற்காப்பு முறைகளை இவர் கற்றுத்தர வேண்டும்.

நிரஞ்ஜனர்களைத் தாக்கினால் அது பெரிய அரசியல் குழப்பத்தில் வந்து சேரும். எனவே தாக்காது தற்காப்புக்குப் பழக நமது படைகள் முயற்சிக்க வேண்டும். நிரஞ்ஜனர்கள் அரசரின் அந்தப்புரத்தில் கூட வம்பு செய்யத் துவங்கி விட்டார்கள். இந்த இளைஞரிடம் பக்குவமாகப் பேசி காசியின் நிலைமைகளை விவரித்து குறைந்தபட்சம் நாற்பது பேருக்கு நிரஞ்ஜனர்களின் தாக்குதலைத் தடுத்து நிறுத்தும் மனோ பலத்தை அவர்களுக்கு ஊட்ட வேண்டும். என்ன சன்மானம் கேட்கிறான்? எத்தனை நாள் பயிற்சிக்கு அவகாசம் தேவை? என்று கேளுங்கள். இதைச் செய்ய விருப்பமில்லை என்றால் காசியில் அவனுக்கு இடமில்லை என்று சொல்லுங்கள். அவன் இதை ஏற்குமாறு பரிந்துரை செய்யுங்கள்.

நீங்களும் அந்த இளைஞனும் போகலாம். உங்கள் வீட்டுக்குக் காவலாய் மூன்று பேர் கொண்ட குதிரைப்படை ஒன்று நிற்கும்.

இந்தப் பயிற்சி ரகசியமாய் நடைபெற வேண்டும். காசிக்கு வெளியே அரசருக்கு இருக்கும் பல வன மாளிகைகளில் ஒரு வனமாளிகை இந்த திராவிடனுக்கு ஒதுக்கப்படும். அவசிய

மாயின் வீரர்களை இவனே பொறுக்கிக் கொள்ளலாம். இவனைக் கலந்து விட்டு நாளைக் காலை என்னிடம் பேசுங்கள்.''

''அடேய் இங்கு வா.'' ஒரு கணக்கனைக் கூப்பிட்டார். ''சத்திய ஞானிக்கு ஐம்பது காசுகள் கொடு'' முதலமைச்சர் கட்டளையிட்டார்.

காசு வந்ததும் அந்தத் தட்டு அரசரிடம் நீட்டப்பட்டது. அரசர் காசைத் தொட்டுத்தர ஐம்பது காசுகள் சத்தியஞானியின் துண்டில் கொட்டப்பட்டன. சத்தயஞானி 'வா' என்று புவனபதியைக் கூப்பிட, புவனபதி எழுந்து அரசரை நோக்கிக் கை கூப்பிவிட்டு சத்திய ஞானியோடு நடந்தான்.

வாசலில் உள்ள ஜனங்கள் வினோதமாய்ப் பார்த்தார்கள்.

''அப்பனே, நிரஞ்ஜனர்களிடம் வம்பு வைத்துக் கொள்ளாதே. உன்னை உண்டு இல்லை என்று ஆக்கிவிடுவார்கள்.'' ஒரு கிழவன் பய முறுத்தினான்.

''ஐயா, சத்தியஞானியாரே நிரஞ்ஜனர்களுக்கு சற்றும் பயப்படாதீர்கள். அவர்கள் அசைவு பற்றி எல்லா விவரமும் கொடுக்கிறேன். அவர்கள் கொட்டத்தை எப்படியாவது அடக்குங்கள்.'' ஒரு இளைஞன் ஆவேசமாய்ப் பேசினான்.

அவன் மனைவி போல் அவனுக்குப் பின்னிருந்த பெண் மணி அவனைப் பேசுமாறு தூண்டினாள்.

புவனபதியும், சத்திய ஞானியும் எதுவும் பேசாமல் நகரத்துக்குள் புகுந்தார்கள். வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

''கடவுளே, வந்து விட்டீர்களா.'' நவக்கியானி வாய் விட்டு கூவினாள்.

ஓடிப்போய் கால் கழுவ நீர் கொண்டுவந்தாள்.

சிவகியானி, விலங்கு போட்டு தோல் உரிந்த இடத்திற்கு மருந்து போட்டான். மருந்து போடும் சிவகியானியை புவனபதி கட்டிக் கொண்டான்.



''மிக்க நன்றி'' என்று நவக்கியானியை நோக்கிச் சொன்னான்.

தனக்காக வேதனைப்படும் அந்தக் குடும்பத்தை அவன் நேசிக்கத் துவங்கியிருந்தான்.

நவக்கியானியும், சிவகியானியும் புவனபதி போட்ட சண்டையைப் பற்றியே வியப்பாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

'ஒரு கேள்வி... தவறாக நினைக்கக் கூடாது' சிவகியானி கேட்க புவனபதி 'கேளுங்கள்' என்று திரும்பினான்.

''சிறுத்தைக்குப் பயந்து கூரை ஏறினீர்களா? அல்லது சிறுத்தை பின் தொடரட்டும் என்று கூரை ஏறினீர்களா?''

''இது யார் கேள்வி...?'' புவனபதி சிரித்தபடி கேட்டான்.

''எங்கள் இருவரின் கேள்விதான்'' நவக்கியானி வெட்கத்துடன் சிரித்தாள்

''நான் நின்ற இடத்திலிருந்து எனக்கு ஆயுதங்கள் எதுவும் கிடைக்கவில்லை. நான் ஆயுதம் தேட கூரை ஏறினேன். பழைய கொம்புகள் இரும்புச் சாமான்கள் மேல் தளத்தில் கிடக்கும் என்று நம்பினேன். நான் வீட்டுக்குள் போயிருக்கலாம். சிறுத்தை என்னைப் பார்த்தபடி இருந்தது. நான் எங்கு நுழைந்தாலும் சிறுத்தை என்னைப் பின்தொடரும்.

எனவே வீட்டுக்குள் புகுவதை விலக்கினேன். எனவே கூரையில் தாவி ஏறினேன். நவக்கியானி வந்து ஈட்டியை என்னிடம் தூக்கிப் போடுவாள் என்று நான் நினைக்கவேயில்லை. நவக்கியானி அப்படிச் செய்திருக்க வேண்டாம்.

நல்லவேளை அது காட்டுச் சிறுத்தை அல்ல. காட்டுச் சிறுத்தையெனில் மனிதர் தலைமீது வந்து விழும் போதே மனிதர் கழுத்தை அடித்து உடைத்து விடும். கழுத்து உடைந்து போனால் சிந்திக்கக் கூட முடியாது. மூன்று நிமிடத்தில் உயிர் பிரிந்து விடும்.''

''இன்னொரு கேள்வி.'' சிவகியானி கேட்டான்.

''கேள்''. புவனபதி அவன் பக்கம் திரும்பினான். ஆனால் அவன் மனம் நவக்கியானியையே பார்த்துக் கொண்டிருந்தது.

''உங்களுக்கு பயமே இல்லையா?''

''கடவுள் அருளால் இல்லை''.

''ஆஹா அற்புதமான பதில்'' நவக்கியானி கை கொட்டினாள்.

''என்ன அற்புதம் அக்கா.'' சிவகியானி வியப்போடு கேட்டான்.

''கடவுள் அருளால் பயமில்லை என்று சொல்வது எனக்குப் பிடித்திருக்கிறது.''

''கடவுள் அருளால் தொலைதூர காசிக்கு வந்ததும் மிக அற்புதமான மனிதர்களோடு எனக்கு ஸ்நேகம் கிடைத்து விட்டது. மிக அமைதியான குடும்பத்தின் ஆதரவு கிடைத்து விட்டது.''

புவனபதி நவக்கியானியை உற்றுப் பார்த்தான்.

நவக்கியானி வெட்கப்பட்டாள்.

''புவனபதி, அரசரின் படைகளுக்கு பயிற்சியளிப்பது பற்றி என்னப்பா நினைக்கிறாய்?'' சத்தியஞானி கேட்டார்.

''சொல்லித் தரத்தான் கற்று வைத்திருக்கிறோம். சொல்லித் தராத வித்தை கேவலப்படும். ஆனால் அரசர் படைகளுக்கு சொல்லித்தரலாமா, வேண்டாமா என்பதை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.''

''சொல்லித்தர வேண்டும் புவனபதி. இங்கு அரசர் பொம்மை முதல்மந்திரியே ஆட்சி. முதல்மந்திரிக்கு நிரஞ்ஜனர்களைக் கட்டோடு பிடிக்காது. அவர்களை அடியோடு அழிக்க எல்லா உபாயங்களும் செய்கிறார். அவரால் படைகள் திரட்ட ஊர் விட்டுப் போக முடியவில்லை. போனால் கட்டுக்காவலை



மீறி அவரது அந்தபுரத்திற்குள் நிரஞ்ஜனர்கள் நுழைந்து விடுவார்கள் என்று பயப்படுகிறார்.

எனவே உன்னிடம் பயிற்சி பெற்ற பதினைந்து இளைஞர்களைத் தனக்குக் காவலாக வைத்துக் கொண்டு மீதி உள்ளவர்களை அரசரிடம் அனுப்பிவிடுவார். தன் அந்தப்புரக் காவல் பலப்பட்டால் அருகிலுள்ள தேசங்களுக்கு சுற்றுப் பயணம் செய்து நிரஞ்ஜனர்களை அடித்து ஒடுக்க உடனடியாக சில ஏற்பாடுகள் செய்வார். பிறகு காசி நிம்மதியாக இருக்கும்.''

''இதனால் நமக்கு என்ன பலன்?''

''நமக்குத் தனித்த பலன் எதற்கு புவனபதி? காசியை வன்முறையாளர்களிடமிருந்து காப்பாற்றுகிறோம். அது தான் பலன்.''

''இல்லை, சத்திய ஞானியாரே - இதற்கு ஏதாவது பலன் இருக்க வேண்டும்.''

''சம்பளம் கேட்கிறாயா. ''எவ்வளவு?''

''லட்சம் பொற்காசுகள்.''

''கடவுளே எதற்கு இத்தனை காசு.''

''அரசரிடம் காசு இருக்கிறது. என்னிடம் தொழில் இருக்கிறது. நீங்கள் கேட்கிறீர்கள் என்றுதான் யுத்தப் பயிற்சிக்கு ஒத்துக் கொள்கிறேன். மற்றபடிக்கு நான் வழிப்போக்கன். காசியைப் பற்றி எனக்கு எந்த அக்கறையுமில்லை.''

''அப்படிச் சொல்லக் கூடாது தம்பி. பரத கண்டத்திற்கு காசி சிரசு போன்றது. அதைக் காப்பாற்ற வேண்டியது ஒவ்வொரு இந்துவின் கடமை.'' சத்திய ஞானி புவனபதி தோளில் ஆதரவாகக் கை வைத்தார்.

ஒவ்வொரு மனிதனின் மூளைக்குள்ளும் நடுமையமாய் ஒரு சிறிய பை இருக்கும். யோகத்தின் மூலம் அந்தப் பையை விரிவடையச் செய்தால் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று மூன்று காலத்தையும் அறியும் ஞானம் ஏற்படும். காசி

அப்பேற்பட்ட விஷயம். மூளைக்கு நடுவே இருக்கின்ற சிறிய பை போன்ற ரூபம் - அது கெட்டுப் போனால் பரதகண்டம் முழுவதும் கெட்டுப் போனது போல. எனவே காசியைக் காப்பாற்ற உன்னாலான உதவி செய்.''

''சரி; இது உங்கள் கட்டளை என்பதால் ஏற்கிறேன் ஆயினும் லட்சம் பொற்காசுகள் வேண்டும்.''

''எதற்கப்பா காசு. ஏன் பிடிவாதம் பிடிக்கிறாய்?''

''நல்லதற்குகாக வேண்டும். அதனால் பிடிவாதம்.''

''என்ன செய்யப் போகிறாய் புவனபதி?''

''கங்கையில் கருங்கல் படித்துறை கட்டப் போகிறேன். அதற்கு சத்திய ஞானி காட் என்று பெயர் வைக்கப் போகிறேன்.''

''புவனபதி என்ன விளையாட்டு?''

''விளையாட்டில்லை அந்தணரே. எங்கோ தமிழ்பேசும் தேசத்திலிருந்து வருவோருக்கு வழி காட்டிக் கொண்டிருக்கிறீர்களே. உமது பெயரில் உறுதியாக ஒரு படித்துறையும் மண்டபமும் கட்டினால் என்ன? அரசர்கள் மட்டும் தான் படித்துறை கட்டவேண்டுமா? அந்தணர்கள் கட்டினால் ஆகாதா?'' புவனபதி கூர்மையாக அவரைப் பார்த்தான்.

சத்திய ஞானிக்கு அந்த எண்ணம் பிடித்திருந்தது. ஆனால் கூச்சப்பட்டார். அவர் மகனும் மகளும் சில கணங்கள் திகைத்து நின்றார்கள். பிறகு கை தட்டி ஆரவாரித்தார்கள்.

புவனபதி மிக எளிதாய் அந்தக் குடும்பத்திற்குள் நுழைந்தான்.

## 26

புகழ்ச்சி போலும் ஒரு போதையான விஷயம் இவ்வுலகில் வேறு ஏதுமில்லை. எந்த குணமுமில்லாத நிச்சலமான



கடவுளைக் கூட புகழ்ச்சியால் கட்டிப் போடலாம். ஆமெனில் ஞானியர்கள் சறுக்குவது எவ்வளவு சுலபம்... அரசர்கள் புகழ்ச்சியால் கட்டுண்டு கிடப்பது எத்தனை நிச்சயம். பணம் படைத்தவர்கள் புகழ்ச்சிக்கு மயங்குவதில் எவ்வளவு உண்மை. மொழி என்கிற சிறிய அங்குசத்தை வைத்துக்கொண்டு இந்தப் புலவர்கள் யானைப் பாகர்களைப் போல மதம் கொண்ட பெரிய மனிதர்களை எப்படி மடக்கி விடுகிறார்கள் என்று ஒரு வட மொழிக்கவி தம்பூர் ஸ்ருதியோடு கங்கைக் கரையோரம் பாடிக் கொண்டிருந்தார்.

''இங்குதான் உங்கள் பெயரில் படித்துறை வரும். இது முப்பது படிகள் கொண்டதாகவும் ஐம்பது பேர் கைவிரித்து நிற்கிற அகலமாகவும், படிகளை கங்கை நீர் புரட்டிக் கொண்டு போகாமல் இருக்க குறுக்கே கருங்கல் கட்டிடம் கட்டப்பட்டு அதன்மீது கருங்கல் மண்டபமும் எழுப்பப்பட்டிருக்கும்.''

''எதற்கப்பா என் பெயரில் கட்டிடம்... நான் சாதாரண மனிதன்'' சத்யஞானி கூச்சத்தோடு சொன்னார். ''இந்தக் காசியில் அற்புதமான மகான்களெல்லாம் பெயர் தெரியாமல் இருக்க, எனக்கெதற்கு இவ்வளவு பெரிய மரியாதை'' என்று அடக்கமாகப் பேசினார்.

அவையடக்கம் மிகப் பெரிய அகம்பாவம். மற்றவர் புகழப் புகழத்தான் இதற்கு அருகதையில்லாதவன் என்று நெளிய நேருகிறது. இந்த நெளிதலால் புகழ்ச்சி இன்னும் அதிகம் வந்தடைகிறது.

சாப்பிடுபவருக்கு சந்தோஷம் என்றால் போடுபவருக்கும் ஆனந்தம் ஏற்பட்டு விடுகிறது. உண்பவர் தடுக்கத் தடுக்க போடுபவர் அள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிறார்.

அவர்கள் படகில் ஏறினார்கள். படகு நதியின் வேகத்தோடு போயிற்று. எதிர்க்கரையில் உள்ள சிறிய கிராமத்திற்கு அவர்கள் போக வேண்டும். அந்த கிராமம் தாண்டிய பிறகு அடர்ந்த காடு

இருக்கிறது. அந்தக் காட்டின் நடுவே பெரிய திடல் இருக்கிறது. அந்தத் திடலில் பரண்கள் கட்டி, பரண்கள் மீது குடிசைகள் கட்டி வைத்திருக்கிறார்கள். அங்கு குரங்குகள் அதிகம்.

ராமாயண காலத்தில் ராமர் பட்டாபிஷேகம் பார்க்க அயோத்திக்கு வந்த ஒரு வானரப்படை கங்கையின் அழகில் மயங்கி அங்கே தங்கிவிட்டது. அவை வாலில்லா குரங்குகள். கரிய உடம்பும் உயரமும் உள்ள புத்திசாலியான பிராணிகள். அவைகள் இருக்கும் காட்டிற்கு யாரும் போவதில்லை. அவைகளும் மக்கள் இருக்கும் பக்கம் வருவதில்லை. மனிதர்கள் அதிகம் புழங்காத இடம் எது என்று புவனபதி கேட்டபோது, முதன்மந்திரி ஆட்கள் இந்த இடத்தைச் சொன்னார்கள்.

''அங்கு நான் போயிருக்கிறேன்'' சத்யஞானியின் வீட்டில் குடியிருக்கும் ஒரு சாது சொன்னார். ''நான் ஹனுமந்த உபாசகம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். ராமாயணத்தில் வரும் ஹனுமன் கடல் தாண்டும் படலத்தை நான் தினசரி படிப்பேன். வித்தியாசமான குரங்குகள் இருக்கின்றனவே என்று கேள்விப்பட்டு அந்த வனத்திற்கு பயந்து பயந்து போனேன். ஒரு கூடை நிறைய மாம்பழங்கள் கொண்டு போய் வனத்திற்கு நடுவே புல்வெளியில் வைத்தேன்.

வானரங்கள் என்னைப் பார்த்துவிட்டு முதலில் கத்தின. பிறகு, அமைதியாகிவிட்டன. பெண் குரங்குகள்தான் கூச்சல் அதிகம் போடுகின்றன. சில பெண் குரங்குகள் தரையில் இறங்குவதேயில்லை. மிக பலமான ஆண் குரங்குகள் அங்கே தரையில் உட்கார்ந்து கொண்டிருக்கின்றன. மின்னல் வேகத்தில் நகருகின்றன. மாம்பழங்கள் சாப்பிடும் வரை என்னை அங்கே இருக்க அனுமதித்தன. பிறகு போ, போ என்று துரத்திவிட்டன. அவைகள் எனக்குக் கெடுதல் செய்யவில்லை. ஆனால் அன்பாகவும் இல்லை. அந்தக் குரங்குகளின் மின்னல் வேக அசைவுகள்தான் என் மனதில் இன்னமும் இருக்கின்றன.''



''மிக்க நல்லது. நாம் அங்கே போவோம்.'' அந்த அந்தணர் சொல்வதைக் கேட்டுக்கொண்டு புவனபதி முடிவெடுத்தான்.

சத்யஞானி பயந்தார். நவக்கியானி, சிவக்கியானியும் கவலைப்பட்டார்கள்.

''குரங்குகள் ஒன்றும் செய்யாது. அவைகளை சிநேகமாக்கிக் கொள்ள எனக்குத் தெரியும். காசி தேசத்து வீரர்கள் தூங்கு மூஞ்சிகளாக இருக்கிறார்கள். குரங்குகளை உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தால் ஒரு உற்சாகம் ஏற்படும். அதன் சுறுசுறுப்பு நமக்கும் தொற்றிக் கொள்ளும்.

சற்று அசந்தாலும் குரங்குகள் நம்மைக் காயப்படுத்திவிட்டோ அல்லது பொருட்களை அபகரித்துக் கொண்டோ ஓடிவிடும். தொடர்ந்து விழிப்பு என்பது வீரனுக்கு அவசியம். அதை, குரங்குகளிடம் இருந்து நாம் கற்றுக் கொள்ளலாம்.

நவக்கியானி பெண்ணல்லவா. அவளால் குரங்குகளுக்கு ஈடு கொடுக்க முடியுமா?

நவக்கியானியின் மீது ஒரு துரும்பு கூட விழாமல் பாதுகாக்க என்னால் முடியும். நவக்கியானியை ஒரு குரங்கு பயமுறுத்திவிட்டது என்று வைத்துக்கொள். அங்குள்ள மொத்த வானரங்களும் ஒரு வாரம் ஒரு பழத்துண்டு கூட சாப்பிட முடியாதபடி பயமுறுத்தி வைப்பேன். நவக்கியானியின் பக்கம் திரும்பவே முடியாதபடி அவைகளை எச்சரித்து வைப்பேன்.''

சிவக்கியானி வாய் பிளந்து புவனபதி சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

நவக்கியாணி வெட்கமானாள். அவள் வெட்கத்தை சத்யஞானி கூர்ந்து கவனித்தார். புவனபதியை ஆசையோடு பார்த்தார்.

''நாம் அங்கு போனால் பேசுவதற்கு நிறைய நேரம் கிடைக்குமல்லவா?'' திடுமென்று வினவினார்.

''யாரோடு பேசுவதற்கு...'' புவனபதி ஆச்சரியத்தோடு கேட்டான்.

''உன்னோடுதான் புவனபதி. உன்னைப் பற்றி நாங்கள் ஏதும் தெரியாமல்தானே இருக்கிறோம்.''

''அப்படியா. என்ன தெரிய வேண்டும். என்னைப் பற்றி?'' நகர்ந்து கொண்டிருந்த படகில் அவரை நோக்கிஉட்கார்ந்தான்.

''இந்த இளம் வயதில் காசிக்கு வரும் அளவுக்கு என்ன வேதனை?''

''நான் வேதனைப்பட்டா காசிக்கு வந்தேன்'' சத்யஞானி யின் கேள்விக்கு புவனபதி வாய்விட்டுச் சிரித்தான்.

''இருபத்தைந்து வயதில் மனைவி மக்களோடு சந்தோஷ மாக இருக்க வேண்டிய நீ... விவசாயம் செய்து கொண்டும் ராஜபோஜனம் எடுத்துக் கொண்டும் வாழ வேண்டிய நீ, ஏன் வடக்கு நோக்கி வந்தாய். உன் தாய் தந்தை யார்? அவர்கள் எப்படி உன்னை அனுமதித்தார்கள்?''

நவக்கியானி புவனபதியின் பதிலுக்கு ஆவலாய்க் காத்திருந்தாள். முன்னோக்கி குனிந்து அவன் முகத்தையே பார்த்திருந்தாள்.

நவக்கியானி கவர்ச்சியான பெண்ணல்ல. ஆனால், அழகாக இருந்தாள் அவளிடமிருந்த சந்தோஷம் அவழகை அதிகப்படுத்திக் காட்டியது.

''ஐயா, நீங்கள் சொல்வது சரி. என் தாயும் தகப்பனும் என்னை காசிக்குப் போக அனுமதிக்கவேயில்லை. ஊர்ப் பெரியவர்கள் பலர் சமாதானம் செய்து என்னை அனுப்பி வைத்தார்கள்.''

''உன்னுடைய முப்புரிநூல் மூன்று பாகமாக இருக்கிறது. உனக்குத் திருமணம் ஆகியிருக்க வேண்டுமே. உன்னுடைய மனைவி உன்னைத் தடுக்கவிலையா?''



''ஐயா, எனக்குத் திருமணமாகி விட்டது. என் மனைவி என்னைத் தடுக்கவில்லை.''

''ஏன்?''

''அவள் இறந்து போய்விட்டாள்.'' புவனபதி சட்டென்று ஒரு பொய் சொன்னான்.

'ஏன் சொல்கிறோம்' என்று தெரியாமலேயே பொய் சொன்னான்.

அந்தக் குடும்பத்தோடு ஒட்டிக் கொள்ள அந்தப் பொய் உதவி செய்யும் என்று எண்ணிக் கொண்டான்.

''எப்படி இறந்து போனாள்...?'' சத்யஞானி திகைத்துப் போய்க் கேட்டார்.

''பிள்ளைப் பேறுக்கு திருக்குடந்தை போனாள். அங்கே பிரசவம் சிக்கலாகி இறந்து போனாள் என்று செய்தி வந்தது. குழந்தையோடு திரும்பி வருவாள் என்று நினைத்தேன். உன்னோடு குடித்தனம் செய்தது போதும் என்று போய் விட்டாள்.''

''பாவம்... மிகச் சிறிய வயதா?''

''பதினாறு பிராயம்.''

''கடவுளே. நவத்துக்கும் பதினைந்து வயதுதான் ஆகிறது.'' சத்யஞானி தன்னை மீறி அவனுடைய இறந்த மனைவியை, தன்னுடைய பெண்ணோடு ஒப்பிட்டுச் சொன்னார்.

''அதுதான் காசிக்கு வரக் காரணமோ?'' சத்யஞானி மறுபடி வினவினார்.

''ஆமாம் ஐயா. அவளோடு வாழ்ந்ததாகவே எனக்குத் தெரியவில்லை. அவள் ஆசை, அபிலாஷை எது என்றுகூட நான் அறிந்து கொள்ளவில்லை. கனவு மாதிரி வந்தாள். கனவு போலவே போய் விட்டாள். வாழ்க்கை பற்றி எனக்கு பயம் வந்து விட்டது'' புவனபதி சொல்லிவிட்டு கண்களை மூடிக் கொண்டான்.

''எந்த அர்த்தமும் இல்லாத வாழ்க்கை. கற்கும் பாடத்திற்கும் செய்யும் முயற்சிகளுக்கும் எந்தப் பலனும் இல்லை. இங்கு எது செய்தாலும் முடிவான பலன் மரணம்தான். நான் வேதம் கற்றதும், போர் முறைகள் கற்றதும் செத்துப் போவதற்குத்தான். மரணமில்லாப் பெருவாழ்வு என்பது ஒரு பொய். மனிதனின் கற்பனை.

மரணம் உடலுக்குத்தான். ஆத்மாவுக்கு இல்லை என்பது ஒரு சாக்கு. ஏமாற்று வேலை. வெற்றுச் சமாதானம்.

மரணம்தான் இந்த வாழ்க்கையின் லட்சியமெனில் பிறப்பு அவசியமில்லை. ஆனால், ஏன் பிறக்கிறோம் என்று தெரியவில்லை. எவரால் இயக்கப்படுகிறோம் என்று புரியவில்லை.

இந்தக் கேள்விகளெல்லாம் என்னைத் தாக்க காசிக்கு வந்தேன். இவைகளுக்கு பதில் தேடி வரவில்லை. மனசுக்குள் ஏற்படுகின்ற பயணம் தான் மிக நீண்ட பயணம். மனம் ஆத்மாவில் கரைந்து போவதற்கு வெகுதூரம் போக வேண்டியிருக்கிறது. அந்தப் பயணத்தைப் பற்றித்தான் நான் கவலைப்படுகிறேனே தவிர காசிக்கு வந்தது பற்றி எனக்குப் பெருமையுமில்லை. கவலையுமில்லை.''

புவனபதி கண்கள் திறந்தான்.

''ஸதாயுஷ்மான் பவ'' சத்யஞானி ஆசீர்வதித்தார்.

''மனைவிக்கு உண்டான தர்ப்பணம் செய்து விட்டாயா?'' அக்கறையோடு வினவினார்.

''இல்லை. செய்யவில்லை.''

''இங்கே இந்த நடு கங்கையில் படகிலேயே செய்யலாம். நங்கூரம் இடப்பா.'' படகோட்டிக்குக் கட்டளையிட்டார்.

படகு கோல் ஊன்றி நிறுத்தப்பட்டது.

''பித்ருக்களே, என் மனைவியை மிக பத்திரமாக அழைத்துச் செல்லுங்கள். அவளுக்கு ஆறுதலான வார்த்தை



சொல்லுங்கள். நசிகேதனால் நமக்குச் சொல்லப்பட்ட பிறப்பு, இறப்பு ரகசியங்களை அவளுக்கு விளங்க வையுங்கள்.

பித்ருக்களே, இறந்துபோன என் மனைவி இனி உங்கள் பொறுப்பு.''

சத்யஞானி சொல்ல புவனபதி தர்ப்பணம் செய்தான். மனைவிக்கு தர்ப்பணம் செய்ய மறுத்தால் கேள்வி வரும். எனவே, பதில் சொல்லாது, எந்த எதிர்ப்பும் காட்டாது, உயிரோடு இருக்கும் மனைவிக்கு தர்ப்பணம் செய்தான்.

புவனபதியின் பித்ருக்கள் கோபமானார்கள்.

## 27

கங்கைக் கரை மிக நுண்ணிய அதிரலைகள் கொண்டது. சூட்சும ரூபத்தில் அங்கே வசிப்பவர்கள் அதிகம். அந்த நதியின் மீது ப்ரேமை வந்தது. அதை விட்டு ஒருநாள் கூட பிரியாமல், எத்தனை காசு கொடுத்தாலும் கங்கை இல்லாத இடத்துக்குக் போகாமல் கங்கையின் குளுமையில் நடந்து கொண்டே தன் உடம்பையும் மனதையும் ஆற்றிக் கொண்டவர்கள், இறந்து போன பிறகும் அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

இந்த உலகம் உடல் ரூபம் கொண்டவர்களது மட்டுமல்ல. உடலில்லாது சூட்சும சரீரம் உடையவர்களும் இங்கே உண்டு. அவர்கள் பிரபஞ்சத்தின் வேறு பகுதிக்குப் போகாமல், வாழ்ந்தபோது உண்டான வாசனை விடமுடியாது, எண்ணங்களை அகற்ற முடியாது, மனம் என்பதை விடமுடியாது, ஆசைகளோடு வாழ்ந்திருப்பார்கள். ஆசைகளை அனுபவிக்க உடல் வேண்டும். அவர்களிடம் உடல் இல்லை. அவர்களுக்கு கங்கையில் குளிக்க ஆசை. ஆனால் குளிக்க முடியாது. கங்கை

நீரைக் குடிக்க ஆசை. ஆனால் குடிக்க முடியாது. ஒரு நாளைக்கு மூன்று நான்கு முறை குளித்தும் குடித்தும் பழக்கப்பட்டவர்கள், கங்கா மாதா கீ ஜெய்... என்று கூவி, நூறு வயது வாழ்ந்தவர்கள். மேலேயும் போகமுடியாமல், கீழேயும் வரமுடியாமல் தத்தளிப்பார்கள்.

கங்கைக்குப் புதிதாகக் குளிக்க வருபவர்களை அவர்கள் ஆவலோடு பார்த்து ஆசீர்வதிப்பார்கள். தர்ப்பணம் செய் என்று மனதுக்குள் தூண்டுவார்கள். தர்ப்பணம் செய்பவர்களுக்கு அருகே உட்கார்ந்து கொள்வார்கள். யாருக்குத் தர்ப்பணம் என்பதை நொடியில் கண்டுபிடித்து விடுவார்கள்.

''விஷ்ணுவே. இவன் பெற்றோரின் பொருட்டு இவன் செய்யும் தர்ப்பணத்தை துளஸிதளத்தோடு ஏற்றுக் கொண்டு இவன் பெற்றோருக்கு விடுதலை கொடு.''

அவர்களும் பிராத்திப்பார்கள். ரிஷிக்களுக்கும், முனிகளுக்கும், சாதுக்களுக்கும் முழங்கை வழியே தர்ப்பணம் செய்யப்படும் போது அந்தத் தர்ப்பண ஜலத்தை ஆவலாக ஏந்தி அந்த நீரில் ததும்பி இருக்கும் அன்புச் சக்தியைப் பருகுவார்கள்.

மன ஒருமையோடு செய்யப்படும் தர்ப்பணத்தில் அன்புச் சக்தி பொங்கி ததும்பியிருக்கும். அந்த அன்புச் சக்தி அந்த சூட்சும சத்திகளின் மனதை ஒருமைப்படுத்தும். அந்த மன ஒருமை அவர்களை அமைதிப்படுத்தும். அல்லது விடுதலை வாங்கித்தரும்.

உடல் காணாது போவது அதாவது ஒரு விடுதலை என்பது போல மனம் காணாமல் போவதும் ஒரு விடுதலை. அதுவும் ஒருவகை மரணம்.

உடல் இல்லை. ஆனால் உடலால் வாழ்ந்த மனம் இன்னும் இயங்குகிறது. உடம்பு இருப்பது போலவே நினைத்துக் கொண்டு மயங்குகிறது என்பது ஒரு வேதனையான விஷயம். ஒரு தத்தளிப்பு.



சூட்சம வாழ்க்கை, அதாவது பித்ருலோகம் ஒன்றும் நிறைவானது அல்ல. பிரபஞ்சம் பற்றிய அறிவு பித்ருலோகத்தாருக்கு அதிகம் தெரியும். உலகமெங்கும் வேகமாய் அலைய முடியும். இன்னொரு சூட்சும சக்தியோடு தொடர்பு இன்னும் வேகமாய் ஏற்படுத்திக் கொள்ள முடியும். சும்மாவும் இருக்க முடியும்.

ஆனால் நிறைய சூட்சம சக்திகள் சும்மா இருப்பதில்லை. பிரபஞ்ச அறிவு ஏற்பட்டு விட்டதால் மனிதர்களை நோக்கிக் கதறுகிறார்கள். 'செய்... இதைச் செய்... இதைச் செய்ய வேண்டாம்' என்று ஆவேசத்தோடு கதறுகிறார்கள்.

சில மனிதர்களுக்கு உள்ளுணர்வாய் இது புரிகிறது. சிலருக்கு இது புரிவதில்லை.

'தான்' என்கிற கர்வம் மனிதனுக்குச் சொல்லப்படும் காரணங்களின் முதன்மையானது. சூட்சும ரூபங்களைப் புரிந்து கொள்ளுதல் நல்லது என்பதற்காகத்தான். கர்வம் உள்ளவருக்கு சூட்சமமும் தெரியாது; ஸ்தூலமும் தெரியாது; அவர்களுக்கு எதிரே உள்ள மனிதர்கள் பேசுவதும் தெரியாது. தலைக்கு மேலே உள்ள பித்ருக்கள் பேசுவதும் கேட்காது.

புவனபதி கர்வம் உள்ளவன். மனைவி இருக்கும்போதே இல்லையென்று அவன் சத்ய ஞானியிடம் பொய் சொல்ல, சத்ய ஞானி அப்பாவியாய் 'கங்கையில் தர்ப்பணம் செய்துவிடு' என்று தூண்ட, உயிருள்ள மனைவிக்கு புவனபதி படகில் நின்றபடி ''விஷ்ணுவே'' என்று அழைத்து தர்ப்பணம் செய்தான். பித்ருக்கள் கோபமானார்கள்.

உயிருள்ளவருக்கு இவன் தர்ப்பணம் செய்கிறான், செய்யச் சொல்கிறான் என்று ஆத்திரமானார்கள். 'ச்சே' என்று அந்த இடம் உதைத்துப் போனார்கள்.

படகு திடுமென்று ஆடியது. நவக்கியானி உருண்டு புவனபதியின் மீது நச்சென்று முட்டிக் கொண்டாள். குத்திட்டு,

படகின் குறுக்கு மரப்பலகையில் உட்கார்ந்திருந்த புவனபதி நிலைதடுமாறி கங்கையில் விழுந்தான்.

தர்ப்பணம் செய்வது துண்டிக்கப்பட்டது. புவனபதி படகு பிடித்து ஏறி கோபத்தோடு நவக்கியானியைப் பார்த்தான்.

நவக்கியானி அவனைக் கவனிக்காமல் உருண்டு கலைந்த மூட்டைகளைச் சீராக்குவதில் இருந்தாள்.

''படகை எடுப்பா. கரையில் போய் செய்து கொள்ளலாம்.''

சத்யஞானி கட்டளையிட்டார்.

படகு குரங்கு வனம் நோக்கி வேகமாக நகர்ந்தது.

இறங்கிய கரையில் சேறு அதிகமிருந்தது. காலையில் தண்ணீர் பெருகுவதும், மாலையில் குறைவதுமாய் அந்தப் பகுதி இருக்க, மரப் பலகை போட்டு அவர்கள் கரையேறினார்கள். மூட்டைகளை இறக்கினார்கள்.

படகு பார்த்து விட்டு வனத்துக்குள் இருந்து பத்து வீரர்கள் ஓடி வந்தார்கள். அவர்கள் களைத்துக் காணப்பட்டார்கள். ''சத்ய ஞானியாருக்கு நமஸ்காரம். இந்த இடம் சரியே இல்லை'' ஒட்டு மொத்தமாய்க் கூவினார்கள்.

''என்ன பிரச்சினை...''

''குரங்குகள் பரணில் அமைந்திருந்த ஓலைக் குடிசைகளைப் பிய்த்துப் போட்டுவிட்டன. உணவு வகைகளைப் பறிக்க முயல்கின்றன. தானியங்களைக் காப்பாற்றுவதே மிகப் பெரிய வேலையாக இருக்கிறது.''

உரத்த குரலில் முறையிட்டார்கள்.

புவனபதி சிறு மூட்டையை இடுப்பில் கட்டிக் கொண்டான். மூங்கில் கொம்பை எடுத்துக் கொண்டான். வேஷ்டி இறுக்கத் தைச் சரி செய்து கொண்டு குடுமியை அவிழ்த்து நன்கு முடிந்து கொண்டான்.

''என் பின்னே இடைவெளி விட்டு வாருங்கள். பெரிய வரையும் பெண்ணையும் சூழ்ந்து கொண்டு அழைத்து வாருங்கள்.''



கட்டளையிட்டு முன்னே நடந்தான்.

இடுப்பு மூட்டையிலிருந்து சிறிய உடுக்கையை எடுத்தான்.

'டமடம' என்று கூர்மையான சப்தத்துடன் அதை ஒலிக்கத் துவங்கினான். உடுக்கையை இறுக்கக் கட்டியிருப்பதால் சப்தம் வெண்கலமாயும் வெகுதூரம் கேட்பதாயும் இருந்தது. வனத்திலுள்ள குரங்குகளை அந்தச் சப்தம் அலைக்கழிய வைத்தது.

குரங்குகள் இயல்பிலேயே நிதானமில்லாதவை. இந்தச் சப்தம் கேட்டதும் பெண் குரங்குகள் கிறீச்சிட்டுக் கத்தின. பெண் குரங்குகள் கிறீச்சிட, குட்டிக் குரங்குகள் நாலா பக்கமும் அலைக்கழிந்தன. ஒன்று பிடி நழுவி தரையில் விழுந்தது. விழுந்த அதிர்ச்சியில் அப்படியே நின்றது.

இந்தக் கூச்சலைக் கேட்டு ஆண் குரங்குகள் கோபமடைந்தன. யார் எதிரி என்று பார்க்க தரையில் வேகமாய் ஓடி வந்தன.

புவனபதி தொடர்ந்து உடுக்கையை ஒலித்துக் கொண்டிருக்க, அவனைப் பார்த்துச் சீறின. கால்களால் தரையில் அடித்தன. முஷ்டியை மடக்கி கைகளை உயர்த்தி உரத்த குரலில் கத்தின. அவனை நெருங்குவதற்காக அரை வட்டமடித்தன. அவை எல்லாமுமே வாலில்லா குரங்குகள். மிக மிக புத்திசாலிப் பிராணிகள், குரங்குகள் ஒன்றையொன்று பார்த்து கண் சிமிட்டிக் கொண்டன. சைகையில் பேசிக் கொண்டன.

ஒரு குரங்கு அரை வட்டத்திலிருந்து சட்டென்று குறுக்கே பாய்ந்தது. அவன் கவனம் திரும்புவதை வைத்து இன்னொரு குரங்கு அவனைத் தாக்குவதற்கு வந்தது.

புவனபதி சட்டென்று பின் வாங்கினான். கண்களில் நடிப்பாய் பயத்தைக் கொண்டு வந்தான்.

குரங்குகள் வெற்றி பெற்றதைப் போல் ஊளையிட்டன. தூசு பறக்க காலை உதைத்தன. ஒரே நேரத்தில் புவனபதியைத் தாக்க உத்தேசித்தன. சைகையில் எண்ணம் பரிமாறிக் கொண்டன.

புவனபதி பின்வாங்க, வேகமாய் உரக்கக் கத்திக் கொண்டு அவன் மீது பாய்ந்தன. புவனபதி சட்டென்று நின்றான். கால் அகட்டினான். துள்ளிக் குதித்து கொம்பு சுழற்றி குரங்குகளைத் தாக்கினான். தலையிலும் முதுகிலும் காலிலும் கையிலும் படபடவென்று அடிகள் விழுந்தன. கொம்பு பிடித்து இழுக்கும் ஒரு குரங்கைக் கொம்பால் தூக்கிப் போட்டு தரையில் மோதினான். குரங்குகளைவிட வேகமாய் செயல்பட்டான். தாக்கிய குரங்கையே பலமாகத் தாக்கினான். கொம்பால் தரை ஊன்றி மண் தூவினான்.

உரத்த குரலில் கூவி அவைகளை அதிர்ச்சியடைச் செய்தான்.

பெண் குரங்குகளின் கூவல்தான் ஆண் குரங்குகளின் கோபம். பெண் குரங்குகளின் கூவல்தான் ஆண் குரங்குகளின் கலவரம்.

''யாரோ வரான்... யாரோ வரான்'' என்று கூவின பெண் குரங்குகள். ''சண்டை வேணாம்... சண்டை வேணாம்'' என்று கூவ, ஆண் குரங்குகள் தடுமாறின.

தாக்கிய தலைவன் ''திரும்பப் போ'' என்று குரல் கொடுக்க , மின்னல் வேகத்தில் எல்லா குரங்குகளும் மரமேறின. தலைவன் குரங்கு மட்டும் மூச்சிரைக்க தனியே தரையில் உட்கார்ந்து புவனபதியை முறைத்தது.

புவனபதி அருகே போனான். சிறிய மூட்டையிலிருந்து வெல்லக் கட்டிகளை எடுத்து அந்தத் தலைவன் குரங்கு முன் போட்டான். தலைவன் குரங்கு வெல்லக் கட்டியை முகர்ந்து பார்த்து வியந்தது. அந்த இனிப்பை ருசித்து சப்புக் கொட்டியது. மற்ற எல்லா குரங்குகளும் ஆவலாய்ப் பார்த்தன.

''ஹோய்'' என்று விரட்ட தலைவன் குரங்கு மரத்தில் ஏறிக் கொண்டது. வெல்லக் கட்டிகள் தரையிலேயே இருந்தன.



புவனபதி அந்த ஆற்றங்கரைத் திட்டைத் தாண்டி வனத்துக்குள் புகுந்தான். நூறு தப்படி நடந்து அந்தப் புல்வெளியில் நுழைந்தான். பரண் மீது பர்ணசாலை போலும் குடிசைகள் அமைக்கப்பட்டிருந்தன. ஒரு பக்கக் கூரை முழுவதும் பிய்த்துப் போடப்பட்டிருந்தது.

அவனைத் தொடர்ந்து வந்த வீரர்கள் பரண் மீது ஏறினார்கள். மூட்டை முடிச்சுகளை வைத்தார்கள். இரண்டு நாழிகையில் கூரைகள் சரி செய்யப்பட்டன. அகலமான பச்சை இலைகள் சரி செய்யப்பட்டு அதைக் குப்புறப்போட்டு நாரக் குச்சியால் தைத்து கனத்த போர்வைகளாக்கி அதை கூரைகள் மீது பரப்பினார்கள்.

கையில் கொண்டு வந்திருந்த கட்டுச்சோற்றைப் பிரித்து உண்ணத் துவங்கினார்கள்.

சத்யஞானியும், நவக்கியானியும் சிவக்கியானியும் மனைப் பலகையில் தலைவைத்து குடிசைக்குள் நன்கு உறங்கினார்கள். அவர்கள் தூங்கட்டும் என்று புவனபதி கீழே வந்தான். வீரர்களோடு வனம் சுற்றிப்பார்த்து வீட்டுக் குடிசைக்கு வந்த புவனபதி நவக்கியானி தூங்குவதைக் கண்கொட்டாமல் பார்த்தான்.

அவன் மனதில் பெண்டாளும் ஆசை பிறந்தது.

## 28

நல்ல உணர்வு, கடினமான உடல் உழைப்பு; எல்லா இடத்திலும் வெற்றி பெற்றுக்கொண்டிருக்கிறோம் என்கிற மமதை; நூறு பேருக்குத் தலைவனாக இருக்கிறோம் என்கிற அகங்காரம்; கங்கைக் கரையின் மெல்லிய குளிர்; அவன் பித்ருக்களின் சாபம் ஆகியவை புவனபதிக்கு காமம் கிளறிவிட்டது.

வெகுதூரம் பயணப்படுபவர்களுக்கு, வெல்லமும், பாலும் அடுப்பில் வைத்து கிளறி, கிளறி இருகிய பதமாய்த் தருவார்கள்.

சீக்கிரம் கெட்டுப்போகாத அந்த உணவு, ஒரு பானை நிறைய புவனபதிக்குத் தரப்பட்டது. அந்தப் பால் உணவு அதீத புரத சத்துக் கொண்டது. புவனபதியின் நரம்புகளை அது முறுக்கேற்றியது. போர் வீரர்களுக்கு முன்னால், அவன் வெகுநேரம் சில உடற்பயிற்சிகளைச் செய்து காட்டினான். ரத்த ஓட்டம் அதிகரித்தது. அதனால், ஜீவ சத்து அதிகம் சேர்ந்தது. கழிவுகள் வேர்வையாக வெளியேறி, உடம்பு தாமிரத்தகடு போல் இருந்தது.

கங்கைக்கரையின் சில்லிப்பு, யாரையாவது அணைத்துக் கொள்ள வேண்டுமென்ற பேராவலை ஏற்படுத்தியது. முதன் மந்திரியின் வீட்டில் பார்த்து, கட்டுக்குலையாத பெண்களின் உடல்கள் அடிக்கடி மனசுக்குள் வந்து போயின.

காமம், கோபம், திருட்டு போன்ற எண்ணங்களைத் தூண்டி விட்டு, மனிதனைச் சுற்றியிருக்கின்ற சூட்சமமானவர்கள், மனிதர்களை அவஸ்தைப்பட வைக்கிறார்கள். மனிதனுடைய கனவுகளில், வெறியை ஏற்றுகிறார்கள். பயத்தைக் கொடுக்கிறார்கள். மனம் திகிலடையக் கூடிய துர்சொப்பனங்களைத் தருகிறார்கள்.

மறுபடி பெண் வேண்டுமென்றால், காசி தேசம் போக வேண்டும். அரை நாள் படகுப் பிரயாணமாகும். நவக்கியானியையும், சிவக்கியானியையும் இதன் பொருட்டு, இங்கே தனியாக விட்டுவிட்டுப் போக முடியாது. இந்தப் போர்வீரர்கள் தயாராகும் வரை, காசி தேசம் போவது சரியில்லை.

பெண் தேடி வந்தாய்ச் சொல்ல முடியாது. அதே நேரம், இங்கு காமம் அதிகரிக்கிறது.

புவனபதி என்ன உபாயம் என்று யோசித்தான். ஏதுமில்லை என்று தெரிந்துகொண்டான். பயிற்சி செய்யும் போது, அடிக்கடி நவக்கியானியை நினைக்க ஆரம்பித்தான்.



இப்படிப் பயணப்பட்டதே, நவக்கியானியை மிகவும் சந்தோஷப்படுத்தியது. இத்தனை தொலைவிற்கு கங்கையில், அவள் பயணப்பட்டதேயில்லை. அந்த குரங்குகள் அவளுக்குக் கலவரத்தைக் கொடுத்தன. புவனபதி அவைகளை அடித்த விதம் சந்தோஷத்தை கொடுத்தது.

அந்தக் காடு; அந்த பிருமாண்டம்; அந்த நறுமணம் அவளைக் கிறங்க அடித்தது. அருகே அப்பா; உரையாட தம்பி; எல்லா உதவிக்கும் புவனபதி; அதையும் தவிர, நூறு போர் வீரர்கள். எல்லாம் ஆச்சர்யமாக இருந்தன.

புவனபதிக்கென்று ஒரு பானை பால்களி தரப்பட்டது போல், அவர்களுக்கும் தரப்பட்டது. அவ்வப்போது நல்ல தானியங்கள், காய் பழ வகைகள், படகில் கொண்டு வந்து தரப்படும் என்று உறுதி சொல்லப்பட்டது.

அவர்கள் வந்திறங்கிய மூன்றாம் நாள், முதல் படகு வந்தது. இரண்டு சமையலாட்கள், உதவி ஆட்களுடன் வந்திறங்கினார்கள். கூரை போட்டு; அடுப்பு கட்டி, சமையல் ஆரம்பித்தார்கள்.

நவக்கியானிக்கு வெறும் மேற்பார்வை மட்டுமே இருந்தது. தூங்கும் நேரம் அதிகமாயிற்று. உடம்பில் சிகப்பு படர்ந்து, வழவழப்பும், வாசனையும் ஏறி அழகிட்டுக் கொண்டது.

கங்கைக்கரையின் களிமண்ணை எடுத்து, உடம்பெல்லாம் அப்பி, அது காயும்வரை உட்கார்ந்திருந்தாள். காய்ந்த பிறகு அலசி, குளித்தாள் செம்பருத்திப் பூவால். தலைக்கு எண்ணெயும், ரோஜாப் பூக்களால் வாசனைத் திரவியமும் தயார்செய்து கொண்டாள். குளித்து விட்டுப் பூசிக்கொண்டாள். நிறைய மலர்கள் சூடிக்கொண்டாள்.

அவளை ஞாபகம் வைத்து, ஆடைகள் அனுப்பியிருந்தார்கள்.

அவள் புதுப்பொலிவோடு சிவக்கியானியை அழைத்துக் கொண்டு, வனம் சுற்றிப் பார்த்து வந்தாள்.

நல்ல மூலிகைகளை அடையாளம் தெரிந்து, பறித்து வந்தாள். பத்துப் பதினைந்து நாட்களிலேயே மிகவும் வனப்புள்ள பெண்ணாக மாறினாள்.

புவனபதி முதலமைச்சரின் வீரர்களை, கடுமையாக வேலை வாங்கினான். சுருண்டு விழும்வரை உடற்பயிற்சி செய்யச சொன்னான். அரைக்கால் நாழிகை ஓய்வுக்குப் பிறகு, மீண்டும் பிரம்பால் அடித்து எழுப்பினான். திரும்பவும் உடற்பயிற்சி செய்யச் சொன்னான்.

முதலில் தவித்த வீரர்கள், தங்கள் உடம்பு உறுதியாவதைக் கண்டு வியந்தார்கள். அவன் போர் தந்திரங்கள் பற்றி, விளக்கிச் சொல்ல, அவன் அறிவு கண்டு அதிசயப்பட்டார்கள்.

ஒரு முறை வனத்திற்குள், மிருகங்களின் பலத்த கூக்குரல் கேட்டது. நூறு வீரர்களையும் பின்னால் ஓடிவரச் சொன்னான். நான்கு பெண் சிங்கங்கள், ஒரு ஆண் சிங்கம் கொண்ட ஒரு கூட்டத்தை, குரங்குகள் எதிர்த்து சமாளித்துக் கொண்டிருந்தன.

வீரர்களை மரங்களில் ஏறச்சொல்லி, குரங்குகளின் தாக்குதலை வேடிக்கை பார்க்கச் சொன்னான். குரங்குகள் மின்னல் வேகத்தில் செயல்பட்டன. இரண்டு குரங்குகள், சிங்கத்தின் கவனத்தை ஈர்க்க, மற்ற குரங்குகள் வேகமாய்ப் பின்னால் தாக்கின. சிங்கங்களை போக்குக்காட்டி, வலுவிழக்கச் செய்தன.

இரண்டு நாழிகையில், சிங்கங்கள் புறமுதுகு காட்டின. மிக கேவலமாய் குரங்குகளிருந்த பகுதியை விட்டு ஓடின. அந்த வாலில்லாத குரங்குகள், வெற்றியை மார்பில் அறைந்து கொண்டு கொண்டாடின. எகிறி, குதித்துக் கூச்சிலிட்டன.

நூறு பேரை இரண்டு ஐம்பதாக புவனபதி பிரித்தான். அந்த ஐம்பதில் ஆறு ஆறு பேரை சிங்கமாக்கினான். மற்றவர்கள்



குரங்குகள் என்றான். குரங்கின் தந்திரங்களைக் கற்றுக் கொடுத்தான்.

வீரர்கள் வெறிபிடித்ததுபோல் இந்த விளையாட்டை விளையாடினார்கள். அதன் ஊடே, பல தந்திரங்களைக் கற்றுக் கொண்டார்கள். நின்றபடி இளைப்பாறவும், தலைக்கு ஒரு கல்லும், காலுக்கு ஒரு கல்லும் வைத்துக் கொண்டு பாலம் போல் தூங்கவும் கற்றார்கள்.

ஓடியபடியே, குறி பார்த்து எறியவும், கவன்கல் பயன் படுத்தவும், கத்தியை உறுவும்போதே தாக்கவும், உறுவி தலைக்கு மேல் வீசப்படும் கத்தியை, சிறிய துண்டால் தடுக்க வும், துணி சுற்றிய சங்கலியை மார்பின் குறுக்கே போட்டுக் கொள்ளவும், அந்த சங்கிலியால், எதிரில் வரும் ஆயுதத்தைத் தடுக்கவும் கற்றார்கள்.

தனி குடிசையிருந்தும், தங்களோடு தங்கும் புவனபதி என்கிற ஆச்சார்யன் மீது, அவர்கள் மிகுந்த மரியாதை வைத்திருந்தார்கள். காஞ்சீபுரம் பற்றி, அவன் சொன்னதை வாய்பிளந்து கேட்டார்கள்.

ஒரு நாள் அவர்கள் பயிற்சியில், முழு வெறியில் இருக்கிற போது, மன்னரும், முதலமைச்சரும் ரகசியமாய் படகில் வந்து இறங்கினார்கள்.

'இது தன்னுடைய படையா.' என்று மன்னர் அதிசயித்தார் புவனபதியின் கைகளை, கண்களில் ஒற்றிக் கொண்டார்.

அவனுக்கு உண்ணும் உணவும், உடைகளும், ஆயுதங்களும் அனுப்பினார். புவனபதி பொற்காசுகளை நினைவுபடுத்தினான். மன்னர், ''நிச்சயம் தருகிறேன்'' என்று வாக்குக் கொடுத்தார்.

மன்னர் வந்துபோன இரவு, எல்லோருக்கும் பால்கனி வழங்கப்பட்டது. நிலவு பளிரென்று உச்சிக்கு வந்தது.

உடம்பின் நிறத்தையேற்ற, மூலிகைப் பூச்சு பூசிக்கொண்டு நவக்கியானி நீராடினாள். இரவு நேரம் என்பதால், தம்பியை காவலுக்கு இருக்கச் சொன்னாள். அவள் நீந்திக்குளிப்பதைப் பார்த்து, முதலைகள் மெல்ல அவளுக்கு அருகே வந்தன. நதியில் நீர்க் குமுழிகள் மேலே வருவதைப் பார்த்த சிவத்கியானி, அவளுக்கு எச்சரிக்கை செய்தான்.

ஒரு பெரிய முதலை அவளை நோக்கிவர, முழங்கால் ஜலத்தில் நின்று ஈட்டியால் குத்தினான். நவக்கியானி மிரண்டு போய், கற்கள் மீது கால் வைத்து ஏறாமல், சேறு இருக்கும் பகுதியில் ஓடினாள்.

கங்கைக் கரையில் பல கஜ சதுரத்திற்கு மெல்லிய சேறு பரவியிருக்கும். நீர் உயரவும், வடியவும் உண்டான போது, உண்டான சேறு அவை.

நவக்கியானி, இடுப்பளவு சேற்றில் ஓடிப்போய் சிக்கிக் கொண்டாள். நகர இன்னும் அமிழ்ந்தாள். சேறு அவளை மெல்ல விழுங்கத் துவங்கியது. அவள் அலறினாள்.

அவள் அலறல் புவனபதிக்குக் கேட்டது. மதுவின் போதையில் வீரர்கள் தூங்கிக் கொண்டிருக்க, புவனபதி மட்டும் குதிகால் பிடறிபட ஓடி வந்தான்.

நிலவொளியில், நவக்கியானி சிக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். சிறிய மரக்கன்றுகளை, பலம் கொண்ட மட்டும் இழுத்து, வளைத்து உடைத்தான். கிளைகளோடு அவைகளை கங்கை நதியில் தள்ளி, அவைகளை சேற்றுக்கு அருகே கொண்டு போய், ஒரு மரத்தை நீரில் மிதக்க விட்டு, மறு மரத்தை சேற்றுக்குத் தள்ளினான். சேற்றில் படந்திருந்த மரத்தில் ஏறி, இடுப்பு வேட்டியை உருவி, அவளிடம் வீசினான்.

சேற்றில் மிதந்த மரம், அமிழத் துவங்கியது. அவள் இடுப்பு ஆடை சேற்றில் மாட்டிக்கொள்ள, மார்பு ஆடையை இடுப்பில் சுற்றிக் கொண்டாள். சேற்றில் இருந்து, சேற்றில் அமிழும் கிளைக்கு வந்தாள்.



புவனபதி அவளின் இரண்டு கைகளையும் பற்றி, நீரில் மிதக்கும் கிளைக்கு மாற்றினான். நீரில் மிதக்கும் மரம் கனம் தாங்காமல் ஆடியது. ஈட்டியால் தரைகுத்தி, அந்தச் சிறிய மரத்தை நதியின் வேகத்துக்குத் தள்ள, கோபமடைந்த முதலைகள், சடார் சடேரென்று நீரில் வாலை அடித்தன. வாய் பிளந்து பார்த்தன.

அந்தச் சிறிய மரம் நதியின் வேகத்தோடு இழுத்துக் போகப்பட்டது.

வெறும் கோவணதாரியாக புவனபதியும், இடுப்புத்துணி மட்டும் உள்ளவளாக நவக்கியானியும், அந்த மரத்தின் அடப்பாகத்தில் நின்று கொண்டு, அந்த மரத்தின் கிளைகளை பிடித்துக் கொண்டு ஆற்றோடு போனார்கள்.

அவர்களைச் சுற்றி முதலைகள் வந்தன. இரண்டு பேரில் யாராவது ஒருவராவது நீரில் விழுவார்கள் என்று எதிர்பார்த்து, கூடவே பயணப்பட்டன. வாலால் அடித்து, மரத்தைப் புரட்ட முயன்றன.

அருகே வந்த முதலையை, புவனபதி 'பளீரென்று' ஈட்டியால் அடித்தான். மரத்தை உந்தி, நீரில் வேகமாகத் தள்ளினான்.

முதலைகள் குடும்பமாக வசிப்பவை. அவைகள் பழக்கப் பட்ட இடத்தை விட்டு, அதிக தூரம் பயணப்படாது என்பது அவனுக்குத் தெரியும்.

அவன் நினைத்தது போலவே முதலைகள், மூன்று கல் தொலைவில் அவர்களை விட்டு விலகின. புவனபதி, நவக்கியானியை தனக்குப் பின்னே வரச் சொன்னான். தன்னை பின்பக்கமிருந்து கட்டிக் கொள்ளச் சொன்னான். மரத்தைப் புரட்டி, புரட்டி கரை சேர்த்தான். தரையிலிறங்கினான்.

அவர்கள் தரையிறங்கிய இடத்தில் நூற்றுக்கும் அதிகமான யானைகள் இருந்தன. நவக்கியானி அவனை ஒட்டிக் கொண்டாள். புவனபதிக்கு அவள் அண்மை கிறக்கத்தைக் கொடுத்தது.

## 29

**பெ**ண்களைப் பொறுத்தவரையில் பயமும், காமமும் அருகருகே இருக்கும் விஷயங்கள். காமத்தில் எப்படி ஒட்டிக்கொள்ள வேண்டுமென்று தோன்றுகிறதோ, அதே போல், பயத்திலும் ஒட்டிக் கொள்ள வேண்டுமென்று தோன்றும். காமத்தில் எப்படி வயிறு குழையுமோ, அதேபோல் பயத்திலும் வயிறு குழையும். காமத்தில் எப்படித் தெளிவான நினைவுகள் இல்லாது போகுமோ, அதேபோல் பயத்திலும் தெளிவு இல்லாது போகும். எச்சில் ஒழுகும்.

கூப்பிடு தூரத்தில் நூற்றுக் கணக்கான யானைகள் மெல்ல ஆடிக் கொண்டிருப்பது பார்த்து நவக்கியானி பயத்தில் தவித்துப் போனாள். 'ஐயோ' என்று கூவினாள்.

பல யானைகள் திரும்பிப் பார்த்தன. யானைகளுக்கு மனிதர்களைப் பிடிக்காது. மனிதர்களின் குரல்கள் அவைகளுக்குப் பதட்டத்தை உண்டு பண்ணுகின்றன. யானையின் நுகர்ச்சிப் பலனும், செவிப்புலனும் மிகக் கூர்மையானவை.

அவைகளை மனித வாசனையும், குரல்களும் மழுங்கடிக்கின்றன. எனவே, யானைகள் மனிதர்களை அருகே சேர்ப்பதில்லை.

புவனபதி, நவக்கியானியின் வாயைப் பொத்தினான். ஒரு மரத்தின் பின்னால் நின்று, என்ன செய்வது என்று யோசித்தான்.

'மறுபடி நதியோடு போவதா? போனால், எங்கு கரையேறுவது? எதிர்த்து நீந்துவதா, முதலைகளோடு எப்படிப் போராடுவது? முழங்கால் நீரில் கரையோடு நடப்பதா, புதை சேறுகளை எப்படித் தாண்டுவது? யானைகள் நகர்ந்த பிறகு காட்டைக் கடப்பதா? இவ்வளவு பெரிய மந்தை எளிதில் இடம் பெயராதே.



அப்போது, என்ன வழி? யானை மந்தையின் ஊடே நகர வேண்டியதுதான். நெருக்கமான வனத்தில் கிடைத்த இடத்தில், யானைகள் நின்று கொண்டிருக்கின்றன. நடு நடுவே மரங்களும், புதர்களும் இருக்கின்றன. அவைகளின் வழியே போக வேண்டியதுதான்.'

நின்றிருந்த மரத்தின் கிளைகளைப் பற்றி, ஏறி, யானை மந்தையை நன்றாகப் பார்த்தான். மந்தையைத் தாண்டுகின்ற வழியொன்று தெரிந்தது. யானை, குட்டிகளைத் தொந்தரவு செய்தால்தான் சீற்றமடையும். மற்றபடி புலியோ, சிங்கமோ அருகே நடந்து போனால், வெறுமனே கவனித்துக் கொண்டிருக்கும். அதே சமயம், யானைகள் மனித வாசனை அறியாமல் இருப்பது நலம். அவன் கிளையிலிருந்து கீழே குதித்தான்.

இரண்டடி நடந்தான். காலில் ஏதோ மெத்தென்று தட்டுப்பட்டது. யானைச் சாணம் என்று தெரிந்தது. முகம் மலர்ந்தான்.

யானைச் சாணத்தை எடுத்து, தன்மீது பூசிக்கொண்டான். நவக்கியானியையும் பூசிக்கொள்ளச் சொன்னான். நவக்கியானி உடம்பில் பூசிக் கொள்ளத் தயங்கினாள்.

புவனபதி குனிந்து, இரண்டு கைகளாலும் சாணமெடுத்து, அவள் வெற்று முதுகிலும், மார்பிலும் தேய்த்தான். நவக்கியானி வெட்கப்பட்டாள். தலையிலும், முகத்திலும் அப்பினான். தனக்கும் பூசிக் கொண்டான்.

''யானை எவ்வளவு அருகே வந்தாலும், குரல் கொடுக்க வேண்டாம். முனகவேண்டாம். கல்லோ, முள்ளோ குத்தினால், கத்த வேண்டாம்'' என்று அவளுக்குக் கட்டளையிட்டான்.

அவனுக்குப் பின்னே, அவனைத் தொட்டவாறே, வரும்படி சொன்னான். அவர்கள் நிலவொளியில், யானை மந்தையை நோக்கி நடந்தார்கள். மரத்திற்கு மரம் தடதடவென்று ஓடினார்கள்.

யானைகள், துதிக்கையை நீட்டி, காற்றை இழுத்து சுவாசித்தன. காதுகளை ஆட்டுவதை நிறுத்தின. ஒரு பெரிய

யானை, அவர்கள் பக்கமாய்த் திரும்பியது. மரங்களுக்கு நடுவேயிருந்த ஒரு திடலில், மூன்று யானைகளைக் கடந்தே ஆகவேண்டிய ஒரு நிலை வந்தது.

புவனபதி அக்கம்பக்கம் தரையைக் கவனித்து, சாணம் தேடினான். அள்ளி, தன் மீது தேய்த்துக் கொண்டான். அவளையும் தேய்த்துக் கொள்ள சொன்னான். இம்முறை அவள் வெட்கமில்லாமல், தேய்த்துக் கொண்டாள்.

அவளுக்கருகே அமர்ந்து, காதோடு மெல்ல பேசினான்.

''மூன்று யானைகள், மூன்று திக்கு பார்த்திருக்கின்றன. மரக்கிளைகளை உடைத்து, சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றன. நேர் எதிரே, யானைகள் நடந்து வந்த பாதை இருக்கிறது. நாம் இருவரும் கை கோர்த்து, சாதாரணமாக நடந்து போவோம். யானைகள் அசைந்தால், அல்லது நம்மை நோக்கித் திரும்பினால் ஓட்டமெடுப்போம்.

நாம் போக வேண்டிய பாதைக்கு அருகே ஒரு குட்டி யானை இருக்கிறது. நான் அது பற்றித்தான் கவலைப்படுகிறேன்.

யானைக்குட்டி மிக வேகமானது. அது ஆணாக இருந்தால், முரட்டுத்தனமும் அதிகம். மற்ற யானைகள் வெகுதூரம் ஓடாது. யானைக்குட்டிகள் ஓடும். யானைக்குட்டி ஒன்றுதான் என் கவலை. ஈட்டியால் அடித்து, அல்லது தொண்டையில் குத்தி அதைத் திசை திருப்ப வேண்டும்.

இதனால், யானை மந்தை சீற்றமடையும். பழி வாங்க நம்மைத் தேடிக் கொண்டு, நம் பின்னே வரும்.

மரணம் நமக்கு மிக அருகில் இருக்கிறது நவக்கியானி. நாம் நசுங்கிச் செத்துப் போவதற்கான வாய்ப்பு மிக அதிகம். எனினும் நாம் நடப்போம்.''

''விஸ்வநாதா, விஸ்வநாதா... விஸ்வநாதா'' நவக்கியானி மூன்று முறை கூவினாள்.



அவர்கள் மூன்று யானைகளையும் நோக்கி நடந்தார்கள். ஒரு யானை, கிளை ஒடிப்பதைவிட்டு திரும்பி பார்த்தது. மறுபடி நேராகி, ஒடித்த கிளையை வாயில் திணித்துக் கொண்டது.

நேர் எதிரே இருந்த மூன்றாவது யானை வட்டமடித்து எதிரே நின்று கொண்டது. புவனபதி, தன் ஈட்டியை, காற்றில் வீச, அந்த யானை மிரண்டு நகர்ந்து கொண்டது.

அவர்கள் அந்த யானைக்கு மிக அருகே நடந்து அந்த யானையைத் தாண்டினார்கள். யானை அவர்களைப் பார்த்தபடியே திரும்பியது. அவர்களும் யானைக்கு முகம் காட்டியபடி, பின்பக்கமாய் நடந்தார்கள். பின் பக்கமாகவே நடந்து யானைகள் போட்டிருந்த பாதையில் ஏறினார்கள். அந்தப் பாதை மேடு ஆயிற்று. மேட்டின் உச்சியில் குட்டியானை நின்று கொண்டிருந்தது. இவர்கள் வர, 'கிறீச்' சென்று பிளிறியது.

புவனபதியின் இடுப்புயரமே அந்த யானைக் குட்டி இருந்தது. புவனபதியை நோக்கி, துதிக்கை நீட்டி, மார்பு வயிறெல்லாம் முகர்ந்து பார்த்தது. புவனபதி அதைத் தள்ளிவிட்டான்.

அந்த யானைக்குட்டி நவக்கியானியின் அடி வயிற்றைத் தடவியது. துதிக்கையை மேலேழுப்பி, மார்புகளைத் தொட்டுப் பார்த்தது. நவக்கியானி லேசாய் கிளர்ச்சியடைந்தாள். யானைக்குட்டியின் துதிக்கையை தடவிக் கொடுத்தாள். யானைக்குட்டி மறுபடி 'கிறீச்' சென்று பிளிறியது.

புவனபதி ஓடினான். யானைக்குட்டி அவர்களைத் துரத்தியது. வெகு எளிதாய் அவர்களைத் தொட்டது. சாலை மேடாகிக் கொண்டிருந்தது.

புவனபதி சட்டென்று திரும்பி, ஈட்டிக்கம்பால் யானைக் குட்டியின் முகத்தில் அடித்தான். யானைக்குட்டி வலியில் பிளிறியது. யானை மந்தையிலுள்ள அத்தனை யானைகளும் உரக்கப் பிளிறின. காடு கதிகலங்கியது.

யானைக்குட்டி ஓடிப்போய், நவக்கியானியின் இடுப்புத் துணியை இழுத்தது. உருவி, வாயில் திணித்துக் கொண்டது. நவக்கியானி பொத்திக்கொண்டு ''ஐயோ'' என்று கத்தினாள். இருட்டில் சிலைபோல நின்றாள்.

மூன்று யானைகளுள் ஒரு யானை, பயங்கரமாய்ப் பிளிறிக் கொண்டு மேடேறி வந்தது. அதன் நடையில் கோபம் தெரிந்தது.

புவனபதி ஒரு கணம் யோசித்தான். ஈட்டிக் கம்பால் யானைக்குட்டியை 'பளீர் பளீர்' என்று அடித்தான். யானை வாயிலிருந்து துணியைப் பிடுங்கிக் கொண்டான். 'ஓடு, ஓடு' என்று நவக்கியானியைத் துரத்தினான்.

நவக்கியானி நிர்வாணமாய் முன்னே ஓட, அவள் துணியைச் சுருட்டியபடி கோவணத்தோடு, புவனபதி பின்னே ஓடினான்.

யானைக்குட்டி வலி தாங்காமல், கூட்டம் நோக்கி ஓடியது. மூன்று யானைகளுள் ஒரு யானை அவர்களை விடாது துரத்தியது. மேட்டில் ஏற சிரமப்பட்டது.

மேடிருந்தால், பள்ளமும் இருக்க வேண்டும். புவனபதி இரண்டு பக்கமும் தேடிக்கொண்டு ஓடினான். இடப்பக்கம் சரிவு தெரிந்தது. முன்னே ஓடின நவக்கியானி தடேலென்று திரும்பி வந்தாள். புவனபதி அவளைத் தடுத்து நிறுத்தினான்.

மூச்சிறைக்க அவள் மேட்டுப்பக்கம் சுற்றிக் காட்டினாள். அங்கு ஒற்றை யானை நின்று கொண்டிருந்தது. நிலவொளியில், அது புழுதித்தலையும், உடைந்த தந்தமுமாய் இருப்பது தெரிந்தது.

ஒற்றை யானைகள் கூட்டத்திலிருந்து விலக்கப்பட்டவை. தலைமைப் போட்டியில் ஈடுபட்டு, தண்டிக்கப்பட்டவை. மிகவும் கோபமுள்ளவை. பின்னால் ஒரு யானை துரத்தி வர, முன்னால் ஒரு ஒற்றைக் கொம்பன் நிற்க, புவனபதி முதன் முறையாய் பயத்தில் உறைந்து போனான்.



இடப்பக்கம் சரிவு. இருட்டாக இருந்தது. புதர்கள் அடர்ந்திருந்தது. அந்தப் பள்ளத்தில் பாம்புகள் இருக்கலாம். தேனீ கூட்டம் இருக்கலாம். எதுவும் தெரியாமல் எப்படிக் கால் வைப்பது? புவனபதி மிரண்டான்.

ஒரு யானை மேடேறி வருவதைப் பார்த்தவிட்டு ஒற்றைக் கொம்பன் கர்ண கொடூரமாய்ப் பிளிறியது. மேட்டிலிருந்து பார்க்கும்போது, நிறைய யானைகள் மேடு நோக்கி வருவது தெரிந்தது.

புவனபதி, நவக்கியானியை இழுத்துக்கொண்டு சரிவில் இறங்கினான். அடர்த்தியான ஒரு புதர் தாண்டி, நவக்கியானியைப் படுக்க வைத்தான். அவளை மொத்தமாய் அணைத்தபடி அவனும் படுத்துக் கொண்டான். அந்தச் சரிவில் யானை இறங்காது. இறங்கினால், உருண்டு செத்துப்போகும். எனவே, இந்த இடம்தான் இப்போதைக்கு சரி.

நவக்கியானி, புல்லில் முகம் புதைத்துக்கொண்டாள். தன் முதுகு முழுவதும் புவனபதி படர்ந்து படுத்திருப்பது உணர்ந்து, வெட்கப்பட்டு நகர முயற்சி செய்தாள். புவனபதி அவளை நகரவொட்டாமல் இறுக்கிக் கொண்டான்.

மேட்டில், ஒற்றைக்கொம்பனும், துரத்தி வந்த யானையும் மடேர், மடேரென்று முட்டிக் கொண்டன. துதிக்கையைப் பின்னியிழுத்து சண்டை இட்டன. கூட்டத்திலிருந்து ஒரு பெரிய ஆண் யானை, முதலில் சண்டையிட்ட பெண் யானையை பின்னுக்குத் தள்ளிவிட்டு, தான் போய் நின்று கொண்டது. கொம்பன் பிளிற, தானும் பிளிறியது. மற்ற யானைகளும் பிளிறி அடங்கின. அமைதி கலைந்து, பறவைக் கூட்டங்கள் இடைவிடாது கூச்சலிட்டன.

ஐம்பது தப்படி தூரத்தில், ஒரு மேட்டில், இரண்டு யானைகள் தூசு பறக்க முட்டி மோதிக் கொள்வதை புவனபதியும், நவக்கியானியும் வியப்போடு பார்த்தார்கள்.

மூன்று நாழிகை நீடித்த அந்த சண்டையில் ஒற்றைக் கொம்பன் பலமாகத் தாக்கப்பட்டு, கீழே விழுந்தது. தலைவன், போன்ற யானை, அதை நசுக்கி துவம்சம் செய்தது. வெற்றிப் பிளிறலோடு புறப்பட்டு, கூட்டத்தோடு போய்ச் சேர்ந்து கொண்டது.

கிழக்கே, வெளுக்கத் துவங்கிய நேரத்தில், அவர்கள் இரண்டு பேரும் எழுந்தார்கள். செத்துப்போன யானையைத் தாண்டினார்கள். யானை போட்ட பாதையில் வேகமாய் நடந்தார்கள். வெளிச்சம், வந்தபோது ஒருவரையொருவர் பார்த்து வெட்கப்பட்டார்கள். வெட்கம்தான் பரஸ்பர ஆண் பெண் ஈர்ப்பின் முதல் அடையாளம்.

## 30

ஒரு பெண்ணின் வெட்கத்தை அனுமதிக்க ஆண் கற்றுக் கொள்ள வேண்டும். அனுமதிப்பதோடு மட்டுமல்லாது அவள் வெட்கத்தை விலகி நின்று ரசிக்க கற்றுக் கொள்ள வேண்டும். பிறகு மெல்ல அதிலிருந்து அவளை மீட்க முயற்சிக்க வேண்டும்.

புவனபதி மிக்க கச்சிதமாய் அதைச் செய்தான். பெண் வெட்கப்படுவதைப் பார்த்து வாய்விட்டுச் சிரிப்பவன் கொடூரன். பெண் வெட்கப்படுவதைப் பார்த்து கர்வம் கொள்பவன் மூடன். பெண் வெட்கப்படுவதைப் பார்த்து கடிந்து கொள்பவன் அறிவிலி.

நவக்கியானி வெட்கப்பட்டு தலை கவிழ்ந்து குத்துக் காலிட்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்து விலகிப் போனான். அவளுக்கு முதுகு காட்டி நின்றான். குனிந்து தரை நோக்குவது போல அவள் அமர்ந்திருப்பதைப் பார்த்தான். ரசித்தான். சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு அவளை நோக்கி நடந்தான்.



''எழுந்திரு'' என்று மிருதுவாகக் கட்டளையிட்டான்.

அவள் இடுப்புத் துணி மட்டும் அணிந்தவாறு நெஞ்சைக் கைகளால் மறைத்தவாறு எழுந்து நின்றாள்.

''நவக்கியானி நடந்தது நடந்து விட்டது. இந்த அடர்ந்த கானகத்தில் நீ வெட்கப்பட்டு பயனில்லை. இன்னும் பல காத தூரம் நாம் நடக்க வேண்டியிருக்கிறது. வெய்யில் ஏறினால் நடமாட முடியாது. யானைகளைத் தாண்டி விடலாம். புலியோ, கருஞ்சிறுத்தையோ எதிர்ப்பட்டால் நாம் பலியாவதைத் தவிர வேறு வழியில்லை. ஆயினும் கவலைப் படாதே. கடவுள் நம் பக்கம் இருக்கிறார். வானம் மேகமூட்டமாய் இருக்கிறது. எனவே வெய்யில் அதிகமிருக்காது.

நாம் பரஸ்பரம் வெட்கப்பட்டுக் கொண்டிருந்தோமானால் விலங்குகளோடு போராடுவதில் சுணக்கம் ஏற்பட்டுவிடும்.

''எனவே, தயவு செய்து வெட்கத்தை விட்டு ஒழி. இல்லையெனில் உயிர் வாழ்வது கடினம். நாம் இருவருமே உயிர் துறக்க நேரிடும். ஊர் போய்ச் சேரும் வரை நாம் ஆதிவாசிகளாகத்தான் இருக்க வேண்டும்.''

''இந்த நிலையில் நம் கூட்டத்திற்குப் போனால் என் கதி என்ன ஆவது?''

''கவலைப்படாதே. வழியில் சிற்றூர் கிராமம் ஏதாவது இருக்கும். அது தவிர நாம் கங்கைக்கரை ஓரமாகத்தான் போகப் போகிறோம். படகுகள் நிச்சயம் நம்மைத் தாண்டும். அப்படிப் போகின்ற படகை நிறுத்தி அதிலிருப்பவர் துணிகளை வாங்கித் தருகிறேன். குறைந்தபட்சம் தோலாடையாவது வாங்கித் தருகிறேன்.

கங்கைக் கரை வனாந்தரத்தில் சாதுக்கள் இருப்பார்கள். அவர்களிடமும் ஆடைகள் இருக்கக் கூடும். அதுவரை சாதாரணமாக எது பற்றிய கவலையுமில்லாமல் என்னோடு நடந்து வா. நாம் விலகி நடப்பதற்கில்லை. சிறு ஓசைகளையும் கவனித்தபடி

நாம் நடந்தாக வேண்டும். இது காடு. இது தாண்டும் வரை நமக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. என்னோடு கை கோர்த்துக் கொள் நவக்கியானி. நட...'' புவனபதி வலக்கை நீட்டினான்.

நீட்டிய அவன் கையை நவக்கியானி பற்றிக் கொண்டாள்.

தெற்கே இடி இடித்தது. ஒரு புதரிலிருந்த நாகம் தலை தூக்கிப் பார்த்தது. மறைந்தது.

நவக்கியானி முதலில் வெட்கப்பட்டு நடந்தாள். பிறகு நாலாபக்கமும் பார்த்தபடி நடந்தாள். பிறகு அவனோடு பேசிக்கொண்டு சந்தோஷமாய் நடந்தாள்.

கொஞ்சம் மணலான பகுதியில் கிருணிப் பழங்கள் இருந்தன. சோற்றுக் கற்றாழையின் சதைப்பகுதி வயிற்றில் சில்லென்று இறங்கியது. சர்க்கரை வள்ளிக்கிழங்குகள் பசி குறைத்தன. கொடியை வலைபோல் பிண்ணி உள்ளே மந்தாரை இலைகள் வைத்து அதற்குள் கிழங்குகளும் கிருணிப் பழங்களும் போட்டு அவன் முதுகில் கட்டிக் கொண்டான்.

கங்கை நதி ஓட்டத்தில் கால் நாழிகையில் பல காதங்கள் கடந்ததுபோல இப்போது நடந்து கடக்க முடியவில்லை. முட்செடிகளை பல இடங்களில் கவனமாகத் தாண்ட வேண்டியிருந்தது. விஷ ஜந்துக்கள் குறுக்கிட்டால் கைதட்டி அவை நகர்ந்தபின் கடக்க வேண்டியிருந்தது.

இன்னும் அரைநாள் பயணத்தில் அடைந்து விடலாம் என்கிறபோது கங்கை கரை ஓரம் ஒரு சிதிலமான மண்டபம் தென்பட்டது. சிறிது நேரம் உட்கார வேண்டும் என்று தோன்றியது.

உட்கார்ந்து கிருணிப்பழம் சாப்பிட்டதும் தூக்கம் வந்தது. அவர்கள் வெறுமே சரிந்து அந்த மண்டபத்தில் கல் தரையில் படுத்துக் கொண்டார்கள். சில நிமிடங்களில் தூங்கிப் போனார்கள்.



தென்மேற்கு பருவக்காற்று சில்லென்று வீசியது. மேகங்கள் மேலே திரண்டன. அவன் மெல்ல எழுந்தான். நவக்கியானி படுத்திருப்பதை ஆவலோடு பார்த்தான். விலகிப்போய் புதர் அருகே உட்கார்ந்தான்.

தொலைவே துடுப்பு சப்தம் கேட்டது. உற்றுக் கவனித்தான். ஒரு மேட்டுக்கு அந்தப்புறம் பாய்மரம் தெரிந்தது. பத்து பேர் அமரக்கூடிய ஒரு சிறிய படகு கங்கையில் மிதந்து வந்தது. அவனிடம் பயிற்சி பெற்ற வீரர்கள் அவனைத் தேடிக் கொண்டு துடுப்பு போட்டு வந்தார்கள்.

புவனபதி திரும்பி நவக்கியானியைப் பார்த்தான். பிறகு படகைப் பார்த்தான். படகு கடக்கட்டும் என்று அமைதியாக உட்கார்ந்தான்.

படகில் உள்ளவர்கள் வனாந்திரத்தைப் பார்த்து ஓஹோ... என்று கூச்சலிட்டார்கள். பதில் கூச்சல் வரகிறதா என்று பார்த்தார்கள்.

புவனபதி மனம் அடக்கி உட்கார்ந்திருந்தான்.

இரண்டு காரணங்களுக்காய் அந்தப் படகை நிறுத்துவது நல்லதல்ல என்று அவனுக்குத் தோன்றியது.

நவக்கியானி மேலாடையின்றி இருப்பது வீரர்களுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை. நவக்கியானி ஆடையின்றி இருக்கும் அழகைப் பார்க்கும் சந்தோஷத்தைக் கெடுத்துக் கொள்ள அவனுக்கு விருப்பமில்லை.

படகு நகர புவனபதி அமைதியாக உட்கார்ந்திருந்தான். படகு நகர்ந்ததும் மெல்ல குரல் கொடுத்து நவக்கியானியை எழுப்பினான். இன்னொரு கிருணியை உடைத்தான்.

நவக்கியானி எழுந்து பழம் சாப்பிட்டாள். வானம் பார்த்தாள்.

மழை வரும் போலிருக்கிறதே என்று கவலைப்பட்டாள். ''ஊருக்கு விரைவே நடக்கலாம் வாருங்கள்'' என்றாள்.

புவனபதி மூட்டையைத் தூக்கி தலையில் வைத்துக் கொள்ளும்போது பெரிய மழைத்தூறல் விழுந்தது. நடந்தவள் திரும்பினாள்.

மழை தடதடவென்று இறங்கியது. அவர்கள் சரிந்த மண்டபத்தில் ஒண்டிக் கொண்டார்கள். சாரல் மண்டபத்துக்குப் பின்பக்கமாக இருந்தது. மேகம் எங்கேயோ விலகி வெய்யிலோடு கூடிய மழை பெய்தது. வெள்ளிப் பரல்கள் போல மழை தெறிப்பதை இரண்டு பேரும் வேடிக்கை பார்த்தார்கள். மண்டபத்தின் உள்ளிருந்து உளுந்து வாசனை அடித்தது.

''கடவுளே. இப்போது எங்கே போவது...'' புவனபதி உரக்கக் கூவினான்.

''எங்கே போக வேண்டும்?''

''சில சமயம் மறைவிடத்தை விட மழை நல்லது.''

''அப்படியா... அதோ பாருங்கள்'' நவக்கியானி சுட்டிக் காண்பித்தாள்.

''என்ன... பாம்பா...'' புவனபதி பதட்டத்துடன் கேட்டான்.

''பாம்பு இல்லை. எலி.''

புவனபதி மூட்டையிலிருந்து ஒரு பெரிய கிழங்கை எடுத்துக் கொண்டான். தலை நீட்டி வெளியே எட்டிப் பார்க்கும் எலியைக் கவனித்தான். முழுக்கவனத்துடன் அதன் மீது கிழங்கை எறிந்தான்.

கெட்டியான கிழங்குபட்டு உள்ளங்கை அகலத்துக்கு இருந்த எலி இறந்து விழுந்தது.

''கடவுளே, ஏன் அதைக் கொன்றீர்கள்?'' நவக்கியானி அவனை மெல்ல கடிந்து கொண்டாள்.

''நாம் சாகாமல் இருக்க!'' புவனபதி பட்டென்று பதில் சொன்னான்.



மண்டபத்தின் மறு கோடியில் ஒரு சர்ப்பம் சரிந்து தூணைச் சுற்றிக் கொண்டு தலை தூக்கிப் பார்த்தது. செத்த எலியைத் தூக்கி பாம்புக்கு முன்பு புவனபதி போட்டான்.

பாம்பு அசையாமல் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தது. நவக்கியானி மெல்ல நகர்ந்து புவனபதியின் பின்னால் போய் நின்று கொண்டாள்.

பாம்பு எலியை முகர்ந்தது. பெரிதாய் வாய் திறந்தது. எலியை விழுங்கத் துவங்கியது. மெல்ல மெல்ல தசைகளை அசைத்து மிகுந்த பொறுமையாய் இரை விழுங்கியது.

வயிற்றுக்குள் போன எலியை உடம்பை முறுக்கி நசுக்கி சமனப்படுத்தியது. மழையில் மெல்ல இறங்கி சரிவில் புகுந்து கங்கை நீருக்குள் இறங்கியது. நீரோடு நீந்திப் போனது.

முதுகோடு ஒட்டியிருந்த நவக்கியானியைச் சட்டென்று திரும்பி புவனபதி இறுக்க அணைத்துக் கொண்டான். அவள் கழுத்தைக் கடித்தான். அவள் காதுகளைக் கவ்வினான். அவளால் திமிர முடியாதபடி இறுக்கிக் கொண்டான்.

நவக்கியானி அதிர்ச்சியில் உறைந்து போனாள். என்ன செய்வதென்று தெரியாமல் வாய் பிளந்து அவனைப் பார்த்தாள். எப்பேர்பட்ட பெண்களையும் கலைத்துப் போடும் ஒரு அஸ்திரத்தை புவனபதி நவக்கியானியிடம் செலுத்தினான்.

''என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா?'' என்று நவக்கியானியிடம் கேட்டான்.

'மாட்டேன்' என்று சொல்வதும் 'சரி' என்று சொல்வதும் அங்கு முக்கியமில்லை. முதல் அதிர்ச்சிக்குப் பிறகு ஏற்படும் இரண்டாவது அதிர்ச்சிதான் முக்கியம்.

இந்த ஆண் வெறுமே தொடவில்லை; விளையாட்டாய்ப் பழகவில்லை; வேதனையில் தள்ளிவிட முயற்சிக்கவில்லை. அவன் மரணபந்தமும் தன்னோடு இருக்கவே பிரியப்படுகிறான். அதற்காகவே தன்னைத் தொடுகிறான்.' என்று

பெண்கள் முட்டாள்தனமாய் நினைத்துக் கொள்கிறார்கள். அங்கே பலஹீனமடைகிறார்கள்.

'மரணபரியந்தமும் என்னோடு இருப்பாயெனில் என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்' என்று அனுமதி கொடுத்து விடுகிறார்கள்.

அதையும் தவிர ஆணின் தொடல் பெண்ணுக்குப் பிடித்து விட்டால் அந்த ஆசையை அடக்குவது அவளுக்கு மிக மிகக் கடினம்.

கடல் சீறாது; சீறினால் சேதமின்றி ஓயாது; கடல் சீறி தன்னைக் காக்கும் கரையையே சேதப்படுத்திக் கொள்ளும் தன்மை உடையது.

## 31

"என்னை உங்கள் வீட்டில் ஏற்றுக் கொள்வார்களா?" அவன் கைகளில் சிக்கிக் கொண்டிருந்த நவக்கியாணி ஆவ லோடு கேட்டாள்.

"நீ என்ன கேட்கிறாய்? புரியவில்லையே"

"காஞ்சீபுரத்தில் உள்ளவர்கள் காசியிலிருந்து வரும் பெண்ணை ஏற்றுக்கொள்வார்களா?"

"மறுக்க என்ன இருக்கிறது" அவன் தடக்கென்று ஒரு பதில் சொல்லி விட்டு, அவள் சொன்ன விஷயத்தை யோசிக்கத் துவங்கினான்.

காஞ்சீபுரத்தில் உள்ளவர்கள் எப்படி ஏற்றுக்கொள் வார்கள்?

"காசிக்குப் போய் கருமத்தைத் தொலைப்பான்னு பேரு இவன் கருமத்தைக் கூட்டிண்டு வந்திருக்கானே. கிழங்கு மாதிரி



பொண்டாட்டி இருக்கச்சே மரப்பாச்சி பொம்மை எதுக்குடா? ஆனாலும் நான் பாத்தாச்சு. கிளியா பொண்டாட்டி இருந்தாலும், குரங்காட்டம் ஒரு கூத்தியா வேணும். எல்லா கெட்டிக்கார ஆம்பளைங்களுக்கும் தலையெழுத்து இது. சரி; என்னவோ கொண்டு வந்துட்டே. ஆனா காஞ்சீபுரத்தில் வெச்சுக்காத... வேற எங்கியாவது கூட்டிண்டு போய் வெச்சுரு. மாசத்துக்கு ஒரு நாள் போய்ப் பாத்துட்டு வா. உன் பின்னாடியே வந்து யாரு வேவு பாக்கறா. கண்டும் காணாம நடக்கட்டும். அம்மா கூவக்கூடும்.

மைத்துனர்கள் கோபமடையக் கூடும்... மனைவி பெரிய சண்டை பிடிக்கக் கூடும்... மற்ற உறவினர்கள் தலையிலடித்துக் கொள்ளக் கூடும்.

"குரு கங்கை ஜலத்தை கிணறுல கொட்டினார். சிஷ்யன் கங்கைலருந்து கிணறையே கொண்டாந்துட்டான். அப்பப்ப முங்கி முங்கி குளிச்சுக்கலாம். பௌர்ணமியில ஆனந்தமா நீராடலாம். இப்ப சின்ன கிணறா இருக்கு. குளிக்க குளிக்க பெரிசாகும்." அந்தணர்கள் வெட்கங்கெட்டதனமாய்க் கெக்கலிப்பார்கள். பூடகமாய்ப் பேசி, முகம் கறுக்க வைப்பார்கள்.

வெகு நிச்சயமாய் இவளை காஞ்சீபுரத்திற்கு கூட்டிக் கொண்டு போக முடியாது. காஞ்சீபுரத்திற்குத் திரும்புவது மிகப்பெரிய கனவாக இருக்கிறது. காசிக்குப் போய் திரும்பிய பிராமணனாய், கம்பீரமாய் காஞ்சீயில் உலவ வேண்டிய கற்பனையைக் கலைத்து விடக்கூடாது. சோழ மன்னன் கைகட்டி நிற்க வேண்டும். மந்திரிமார்கள், மயிற்பீலியால் விசிற வேண்டும். மன்னனுக்கு சமமான சரியாசனம் தரவேண்டும். வயோதிகர்கள் காலில் விழுந்து வணங்க வேண்டும். சற்குரு என்று கைகூப்ப வேண்டும்.

காசியிலிருந்து மானஸரோவர் போக வேண்டும். ஹரித்வாரம், ரிஷிகேஷம், ருத்ரபிரயாகை எல்லாம் சுற்ற

வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணர் வாழ்ந்த இடங்ளைப் போய்ப் பார்க்க வேண்டும். இதிகாச காலத்தின் எல்லா இடங்களையும் பார்த்து விட்டுத்தான் காஞ்சி திரும்ப வேண்டும். நிறைய கதைகள் இங்கு கேட்க வேண்டும். நிறைய கதைகளை காஞ்சியில் சொல்ல வேண்டும். எல்லாம் தெரிந்த மகா பண்டிதன் என்று அந்தணர் கூட்டம் வணங்க வேண்டும்.

மன்னர்களிடமும், நிலக்கிழார்களிடமும் பேசிப்பழகி, பொருள் கறக்க வேண்டும். மிகப் பெரிய யாகம் செய்வதாய் பொற்குவியல் வாங்க வேண்டும். பாதி செலவழித்து, பாதியை மிச்சப்படுத்த வேண்டும். யாகத்திற்கு வேண்டிய எல்லாப் பொருட்களையும் இலவசமாய்ப் பெற வேண்டும். காசு கொடுத்து வாங்கியதாய்க் கணக்கு காட்ட வேண்டும். மரண பிரியந்தமும் செல்வந்தனாய் இருக்க வேண்டும்.

ஒரு செல்வந்தன் என்ன செய்தாலும் சரி; என்ன சொன்னாலும் சரி; இந்த உன்னத நிலையை காஞ்சியில் அனுபவிப்பதற்காக, குடந்தை அந்தணர்களை கைகட்டி நிற்க வைப்பதற்காக, இந்த பயணம் மேற்கொண்டிருக்கிறோம். அதைக் கெடுத்துவிடக் கூடாது.

இவளை வெகு நிச்சயமாய் காஞ்சிக்கு அழைத்துப் போக முடியாது. அப்படிச் செய்தால் அதற்கு மதிப்பு கிடையாது. மரியாதை குறைவு. தீராத அவமானம் காரணமின்றி அந்தணன் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது.

மனைவி என்பவள் புல் பிடிக்கும் உரிமை உள்ளவள். புருஷன் யாக சங்கல்பம் செய்து கொள்ளும் போது, தோள் மீது தர்பைப் புல்லை வைத்துக் கொண்டு நிற்கும் தகுதி பெற்றவள். யாகத்திலிருந்து வரும் அவிஸ்க்கு பாதி உரிமை உடையவள்.

ஒரு யாகத்தில் இரண்டு பெண்கள் புல் பிடித்து நிற்க முடியாது. எனவே, நவக்கியானி மனைவியாக முடியாது. ஆனால் இந்தக் காட்டின் குளுமையில், மழை பெய்து, பூமி



குளிர்ந்திருந்த வேளையில், இவள் கோதுமை நிறத்து உடம்பைத் தழுவிக் கொண்டிருப்பது ஆனந்தமாக இருக்கிறது.

ஒரு பெண்ணைத் தொட்டு எத்தனை நாட்களாயிற்று. இவள் மேனிபட்டதும் உடம்பு எரிமலையாய்க் குமுறுகிறது.

வெறுமே அணைத்து இறுக்கிக் கொண்டிராமல், இவளைக் கிளர்ச்சியுற வைத்துப் பார்க்க வேண்டும்.

காது மடல்கள், கழுத்தின் பின் பகுதி, இடுப்பின் வளைவு, முதுகின் மேல் பகுதி, பிருஷ்டம், மார்க்காம்புகள் எல்லாவற்றையும் ஒரு கணக்கு வைத்துத் தொட வேண்டும். பேசிக் கொண்டே செயல்படுத்தி, இவளைத் திணறடிக்க வேண்டும்.

காட்டிற்கு வந்த இந்த முப்பது நாளில் இவள் தடித்து விட்டாள். முறுக்கேறிக் கிடக்கிறாள். பெண்ணை வீழ்த்த உடம்பு வித்தை மட்டும் போதாது. பெண் மனதால் வாழ்பவள். மிகப்பெரிய நம்பிக்கையை அவளுக்குத் தந்துவிட வேண்டும்.'

''காஞ்சீபுரத்தில் உன்னை ஏற்றுக் கொள்வார்களா என்று எனக்குத் தெரியாது. அதில் பல சங்கடங்கள் இருக்கின்றன.''

அவள் திகைத்தாள். பயந்து விலகினாள். அவன் மறுபடி இழுத்து அணைத்துக் கொண்டான்.

''ஆனால் நவக்கியானி, நான் காஞ்சிக்குப் போவேனா என்பதும் எனக்குத் தெரியாது.''

''ஏன்?''

''நான் காசியிலேயே தங்கிட வேண்டும் என்று எண்ணுகிறேன்.''

''எதனால்?''

''மூன்று காரணங்கள்...''

''என்னென்ன?''

''முதல் விஷயம் கங்கை - இரண்டாம் விஷயம் படிப்பு - மூன்றாம் விஷயம்...'' முடிக்காமல் நிறுத்தினான்.

''சொல்லுங்கள். மூன்றாம் விஷயம்'' அவள் அவசரப் படுத்தினாள்.

''நீ'' அவளைச் சுட்டிக்காட்டினான்.

''போதுமே, நான் என்ன அழகா இல்லை அறிவா?'' நவக்கியானி நாணினாள்.

''இரண்டும் குறைவுதான்'' புவனபதி கண்கள் சுருக்கிக் கொண்டு பதில் சொன்னான்.

''என்ன இது. நீங்களே கேலி செய்கிறீர்களே?'' அவள் சிணுங்கினாள்.

''நீ, அமைதி. உன்னில் என்னைக் கவர்ந்தது உன் அமைதிதான்.''

''என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?'' எல்லாப் பெண்களும் கேட்பது போல, ஒரு முட்டாள் தனமான கேள்வியை நவக்கியானியும் கேட்டாள்.

''மிகவும் பிடித்திருக்கிறது'' புவனபதி பதில் சொன்னான்.

''என்னைத் திருமணம் செய்து கொள்வீர்களா?'' மறுபடியும் அபத்தமான கேள்வியைக் கேட்டாள்.

''அந்த ஆசையில்லையெனில் உன்னை விரலாலும் தீண்டுவேனா நவக்கியானி?''

''கடவுளே. என் அப்பாவின் பாரம் மிகவும் குறைந்து விட்டது. அவர் பெரிதும் சந்தோஷப்படுவார்.''

''அவர் என்னை ஏற்றுக் கொள்வாரா நவக்கியானி?'' புவனபதி நடித்தான்.

''நிச்சயம் ஏற்றுக் கொள்வார்'' நவக்கியானி பரவசமானாள்.

அவன், அவள் உடம்பின் சகல இடங்களையும் தொட்டான். அவள் மார்புகளை நுகர்ந்தான். கழுத்தைக் கடித்தான். முதுகைத் தடவினான். அவள் விலகி தள்ளாடி ஓடினாள்.



புல்மேட்டில் போய்ப் படுத்துக் கொண்டாள். 'வா' என்றவனைக் கூப்பிட்டாள். அவன் போனான். வென்றான்.

கிளிகளும், அணில்களும் உட்கார்ந்து வேடிக்கை பார்த்தன. குறு முயல்கள், குழிகளிலிருந்து எழுந்து கூப்பிய கைகளோடு கவலைப்பட்டன. நாரைகள் பறந்து கொண்டே அடிக்குரலில், 'அங்க பார்' என்பதாய்ப் பேசிக் கொண்டன.

அவன் முகாமிற்குப் போவதற்கு முன், மூன்று முறை அவளை வெற்றி கொண்டான். அவளுக்கு உடம்பெல்லாம் வலித்தது. ஆனாலும் சந்தோஷமாக இருந்தது. அப்பாவைப் பற்றி யோசிக்கையில் பயம் வந்தது. நம்பிக்கையும் இருந்தது. தம்பி கோபித்துக் கொள்வானோ என்று அச்சமாக இருந்தது.

ஆனால் புவனபதியை சிவக்கியானிக்கும் பிடிக்கும் என்பது ஆறுதலாக இருந்தது. தொலைவிலேயே முகாம் தெரிந்தபோது அவள் சொரேலென்று ஒரு திகிலை உணர்ந்தாள். 'இதை எப்படிச் சொல்லுவது' என்று திகைத்தாள்.

''நீ இங்கேயே இரு'' அவளை ஒரு தாழ்ந்த மரத்தின் மீது ஏற்றிவிட்டான். ''உள்ளே மரப்பானையில்தானே உன்னுடைய துணிகளை வைத்திருந்தாய்?''

''ஆமாம்''

''நான் ஏதேனும் ஒரு துணி எடுத்து வந்து விடுகிறேன் இரு.''

அவன் சரசரவென்று ஒரு குரங்கின் வேகத்தில் போய், அவனுடைய வேட்டியை எடுத்து வந்தான். அவளிடம் கொடுத்தான்.

''எனது சாயப்புடவையை எடுத்து வந்திருக்கலாமே?''

''இல்லை; அது சரியாக வராது. நீ கட்டிக்கொண்டு வந்த புடவை யாருக்காவது ஞாபகம் வந்தால் பிரச்சினை வரும். எல்லா வேட்டியும் ஒரே நிறம். வெள்ளை நிறம். இந்த வேட்டியையும் புழுதியில் புரட்டிவிட்டு உடுத்திக் கொள்.''

அவள் அவ்விதமே செய்தாள் அவர்கள் முகாமிற்குள் நுழைந்தார்கள். போர் வீரர்கள் அவர்களைப் பார்த்தவுடன் திகைத்து கூச்சலிட்டு ஓடிவந்தார்கள். கங்கைக் கரையோர மிருந்த சத்தியஞானி கூச்சல் கேட்டுவிட்டு, தலைதெறிக்க ஓடிவந்தார். சட்டென்று நின்று மகளை உற்றுப் பார்த்தார். நவக்கியானியால் தந்தையின் கண்களைச் சந்திக்க முடிய வில்லை.

பெண் குழந்தை வெட்கப்பட்டதும் தந்தைக்குக் கருணை பொங்கிற்று.

''உயிரோடு இருக்கிறாய் மகளே. எனக்கு அது போதும்.'' அடிக்குரலில் மிருதுவாகச் சொன்னார். அந்த வாக்கியத்தில் பல அர்த்தங்கள் பொதிந்து கிடந்தன. வேறு எது பற்றியும் கவலைப்படாதே என்று வாக்கியம் சொல்லிற்று.

''புவனபதி, மிக்க நன்றி'' சத்தியஞானி திரும்பி கை கூப்பினார்.

''எல்லாம் உங்கள் ஆசீர்வாதம்'' புவனபதி பாதம் பணிந்தான்.

அவர்கள் இருவரும் தனித்தனியே வெந்நீரில் குளித்து, உண்டு, உறங்கப் போனார்கள். சத்தியஞானி மகள் கழற்றிப் போட்ட ஆடையை முகர்ந்து பார்த்தார். அவருக்கு விஷயம் புரிந்தது. கவலை ஆனார்...

## 32

மகள் என்பது ஒரு தந்தைக்கு கடன், இனிமையான கடன். எந்தவயதானாலும், மகள் என்பது ஒரு தந்தைக்கு கவலையான விஷயம்தான்.



நவக்கியானி பிறந்த அன்று நன்கு மழை பொழிந்தது. எந்தப் பொருளும் வாங்க முடியவில்லை. ஆனால் வாசலில் உட்கார்ந்திருந்த ஒரு சாது மழையைப் பற்றிக் கவலைப்படாமல், மான் தோலை மூடிக்கொண்டு ஓடி, வேண்டுகிற பொருள்கள் வாங்கி வந்தார். சில பத்தியங்கள் சொன்னார். சில மருந்துகள் அரைத்துக் கொடுத்தார்.

அன்று முழுவதும் உபவாசம் இருந்து, இரவு பால் மட்டும் குடித்தார். ஒரு வெள்ளிக்காசு பரிசளித்துவிட்டுப் போனார்.

ஐந்து வயதில் காசி நகரத்துப் பக்கமெல்லாம் நவக்கியானி யின் பேச்சு பிரபல்யம் ஆயிற்று. மன்னருக்கு எதிரே கைகட்டி ஸ்ரீ ஸூக்தம் சொல்லி, முத்து மாலை பரிசு வாங்கினாள். எட்டு வயதில் தீபாவளி அன்று கங்கையைக் கடக்கின்ற போட்டியில் பங்கு கொண்டாள். போட்டியில் கங்கையை நெடுக நீந்திப் போய், மறுகரை தொட்டுவிட்டு, அங்கே நிற்பவர்களிடமிருந்து துளசிமாலை வாங்கி கழுத்தில் போட்டுக்கொண்டு, மறுபடி நீந்தி கரைக்கு வந்தாள்.

போட்டியில் நான்காவதாக வந்தாலும், போட்டியில் கலந்து கொண்ட ஒரேயொரு பெண் என்பதால் பலர் அவளைப் பாராட்டி கௌரவித்தார்கள். கங்கா புத்ரி என்றும், மீன்குஞ்சு என்றும் பாராட்டப்பட்டாள்.

பனிரெண்டு வயதில் அவள் தாயாருக்கு உடல் நலக்குறைவு வந்துவிட, கும்பமேளா தினத்தன்று நூற்றுக்கணக்கான சாதுக்களுக்கு உணவளித்தாள்.

அவள் பூப்படைந்த நேரம் அவள் தாயாருக்கு உடல்நலிவு மிக அதிகமாயிற்று. அக்கம் பக்கத்தில் உள்ள பெண்கள் அவளுக்குத் துணையிருந்து குளிப்பாட்டி வீட்டில் சேர்த்தார் கள். மற்ற கங்கைக்கரைப் பெண்கள் போல அவள் உயரமும் அகலமுமான பெண் இல்லை. திரட்சியும் குறைவு

ஆனாலும் ஒழிச்சல் ஒய்வின்றி குழந்தை நலிவுற்ற தாயையும், வீட்டையும் ஒரு சேர கவனித்தாள். எத்தனை வேலையிருந்தாலும், துளிகூட முகம் சுளிக்கமாட்டாள்.

காசி பல சாதுக்கள் வாழும் நகரம். இங்கு சாதுக்களை வணங்கி உபசரிதல், மிக முக்கியம்' என்பது அவளுக்கு நன்கு புரிந்திருந்தது. வீட்டில் எப்போதுமே இரண்டு விருந்தாளிகளுக்கு உணவு இருக்கும்.

ஆறேழு பசுக்களை விருந்து உபசரிப்புக்காகவே அவர்கள் வளர்த்து வந்தார்கள். சிவக்கியானி தந்தையிடமே பாடம் படித்து வந்தான். பாடம் படிக்கின்ற நேரம் தவிர, நவக்கியானிக்கு அவன் உதவி செய்தான். சிவக்கியானி என்ன பாடம் படிக்கிறான் என்பதை நவக்கியானி கவனித்துக் கொண்டே இருப்பாள். அவளும் பல கேள்விகளுக்கு சரியாக பதில் சொல்வாள்.

அவளுக்கு பூகோளம் மிகப்பிடித்த பாடம். தமிழ் சற்று பேசுவதற்கு அவளுக்குத் தெரியுமே தவிர, எழுதவோ படிக்கவோ தெரியாது. அப்பா, அழகிய தமிழ்க் கவிதைகளைச் சொல்லிக் கொடுக்க, தம்பி மனனம் செய்வான். தம்பியிடம் இருந்து கற்று இவளும் மனனம் செய்வாள்.

பதினாறு வயதில் தாய். இறந்த போது, முதன்முதலாய் அந்த வீட்டை துக்கம் கவ்விக் கொண்டது.

சத்தியஞானி மனைவி இறந்ததற்காக அழவேயில்லை. மகளைக் கவனிக்க ஆளில்லாமல் போயிற்றே என்று வருந்தினார். நவக்கியானி அவரை மிக அற்புதமாகத் தேற்றினாள்.

''நீரே எங்களுக்குத் தாயும், தந்தையும். நமக்கு எல்லோருக்கும் தாய் கங்கை அருகே இருக்கிறாள். நதி தீரத்தில் உள்ளவர்களுக்கு தாய் இல்லையென்ற குறை வருமா? குதித்து, குழைத்து நீந்தினால், எல்லா துக்கமும் போய்விடுமே.



என் தாய் என்னை நன்கு வளர்த்து விட்டுப் போயிருக்கிறாள். நல்ல உபதேசங்கள் செய்திருக்கிறாள். இல்வாழ்க்கை பற்றி எல்லா விஷயமும் சொல்லியிருக்கிறாள். எனவே, நெல்முனையளவும் வருத்தப்பட வேண்டாம்.

கொஞ்ச பொருள் சம்பாதித்து, நாம் இப்போதிருக்கும் இந்த வீட்டை நன்கு உயர்த்திக் கட்டுவோம். பலமான வாசல் அமைப்போம். உறுதியான கதவுகள் செய்வோம்.

நிரஞ்சனர்கள் உங்கள் மீதுள்ள பயத்தால், என்னிடம் வாலாட்டுவதில்லை. ஆனால், வக்கிரமாகப் பேசுகிறார்கள்.

தெருவில் பலரைத் துன்புறுத்துகிறார்கள். காசிதேசம் பயங்கரவாதிகளின் புகழிடமாக மாறிவருகிறது. இந்த நிரஞ்சனர்களுக்கு பக்தியுமில்லை, பண்பாடும் இல்லை. வெறும் புலால் உண்ணும் கூட்டமாக மாறியிருக்கிறார்கள்.

'பவதி பிக்ஷாந்தேஹி' என்று கூவி விட்டு, மாமிசம் சமைத்துப் போடச் சொல்கிறார்கள்

நம் வீட்டுச் சுவர்கள் கோட்டைபோல் இருந்தாலும் கதவுகள் பலஹீனமாக இருக்கின்றன. அதனால்தான் இவ்விதம் கேட்டுக் கொண்டேன்'' என்று முன் யோசனையுடன் பேசினாள்.

கங்கையில் அடித்துவந்த மரத்தைத் தடுத்து நிறுத்தி, கரைக்குக் கொண்டு பத்து, பத்துபேர் வைத்து மேடேற்றி, சத்தியஞானி, தச்சர்களைக் கொண்டு வந்து அறுத்து, கனமான கதவு செய்தார். புதிதாய் நாதாங்கி செய்தார். வீட்டைப் பழுதுபார்த்து, விருந்தினர்கள் தங்குவதற்கு தனித்தனியாக அறைகள் கட்டினார்.

வெகு தூரத்திலிருந்து வரும் சாதுக்களை, குலம், கோத்திரம் விசாரித்து வீட்டில் தங்க வைத்தார். அவர்களிடம் வாடகை வாங்கினார். அவர்களை கங்கைக்கரைக்கு அழைத்துப்போய், சிரார்த்த கர்மாக்கள் செய்யவைத்து, தட்சணைகள் வாங்கினார். தானம் வாங்கினார். பெண்ணுக்கு நல்ல நகைகள் செய்து போட்டார். அழகான துணிகள் வாங்கினார்.

கவர்ச்சியாக இல்லாது போனாலும், நல்ல உடைகளிலும், நல்ல நகைகளிலும் நவக்கியானி அழகாக விளங்கினாள்.

பெண்ணோடு வளர்ந்ததால், சிவக்கியானி அதிக முரட்டுத் தனமில்லாது இருந்தான். பெண்மைக்குரிய மென்மைகள் அவனிடம் அதிகமிருந்தன. ஒரு முறை நிரஞ்சனர்கள் அவனை அழைத்து நடனமாடச் சொன்னபோது, சத்தியஞானி அவனை மீட்டுவர வேண்டியதாயிற்று.

இந்த வருடம் திருமணம் செய்து விடலாம் என்று யோசித்து, பலரிடம் இதுபற்றி பிரேரேபித்திருந்தார். திராவிட தேசத்து அந்தணர்கள் யாராக இருந்தாலும் சரி, வைணவர்களாக இருந்தாலும் பெண் கொடுக்கத்தயாராயிருந்தார். சீர் அதிகம் கேட்கவில்லை. தனக்குப் பிறகு பொறுப்பேற்றுக் கொள்ளும் மிக நல்ல பையனாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்.

நவக்கியானியின் மென்மையைப் புரிந்துகொண்டு அவளைக் கொண்டாடும் வாலிபன் வேண்டுமென்று விரும்பினார்.

''நீர் பெண்ணுக்கு புருஷன் தேடவே வேண்டாம். அவளுக்குத் தேடிக் கொண்டு புருஷன் வருவான். எதற்கு கவலை?'' யாரோ சொன்ன அன்று புவனபதி வந்து சேர்ந்தான். புவனபதியைப் பார்க்கும் போதே, இவன் நமக்கு மருமகனோ என்று தோன்றியது.

இப்போதோ நிலைமை கையைத் தாண்டி நிற்கிறது. கேள்விகளை மீறிப் போய்விட்டது.

'கடவுளே, இனி என்னை என்ன செய்யச் சொல்கிறாய். இனி எப்படி திருமணப் பேச்சை ஆரம்பிக்க வேண்டுமென்று கருதுகிறாய்.'

அவர் அந்த துணியைத் தூக்கிப் போட்டுவிட்டு, கங்கையில் மூங்கி குளித்தார். தியானத்தில் அமர்ந்தார். பிரச்சினைகள் வரும்போது, தியானத்தில் அமர்வது அவர் பழக்கம். ஆழ்ந்து மௌனமாய் அவர் புவனபதியைப் பற்றி யோசிக்கத் துவங்கினார்.





30187
465659

புவனபதி முரடன். ஆனால் மகா புத்திசாலி. நரியைப் போன்ற தந்திரம் உடையவன். ஆனால் கெடுதல் நினைக்கும் எண்ணமில்லாதவன். வேத விஷயங்களைத் தெரிந்துகொண்டு அகந்தையை ஒழிக்கப் பாடுபடாமல், அகந்தையை வளர்ப்பதற்காகவே வேதவிஷயங்கள் படிப்பவன்.

புவனபதி ஆசையுள்ள அந்தணன். எதிர்த்தால் ஆத்திரப்படுகின்ற இளைஞன். தண்டித்தால் காத்திருந்து பழி வாங்குகின்ற மனிதன்.

அவன் உடம்பு செந்நிற ஓநாய் போல் இருக்கிறது. கூர்மையான மூக்கு. பழுப்பு நிற விழிகள். குழிந்த வயிறு. அகலமான முதுகு. உறுதியான தொடைகள்.

ஒரு அந்தணன் இப்படி இருப்பது அதிசயம். பிருந்தியங்கரா போன்ற தேவதை உபாசனம் செய்தவருக்குத் தான் இம்மாதிரி குழந்தை பிறக்கும். இவன் நவக்கியானிக்கு ஏற்றவன் அல்ல.

நவக்கியானிக்கு தொந்தியும், தொப்பையுமான கணவன் தான் சரியாக இருக்க முடியும். அவன் வாய்விட்டு சிரிப்பவனாக இருந்தால்தான் நவக்கியானிக்கு அவனைப் புரியும். விரும்பி விதவிதமாக சாப்பிடுபவனாக இருந்தால் தான், நவக்கியானிக்கு சந்தோஷமாக இருக்கும்.

நவக்கியானி பாடுகிறவனிடம் மயங்குவாள். சலசலத்துப் பேசுவனை விரும்புவாள். புவனபதியிடம், பேசுவதற்குக் கூட காசு கொடுக்க வேண்டும்.

ஆனால், எல்லாம் முடிந்துவிட்டதே. என் குழந்தை வேண்டுமென்று தப்பு செய்திருக்க மாட்டாளே. குறைந்த ஆடைகளுடன், குளிக்கும் ஒரு பெண்ணைக் காப்பாற்றப் போக, மனைவியை இழந்த புவனபதி மனம் தடுமாறி இருப்பான். நமது பெண்ணும் தொட்டதும் துவண்டு போயிருப்பாள். நீ விசாரணை செய்து என்ன பயன்? எடை போட்டுக் கொண்டிருப்பதால் என்ன லாபம்?

நல்ல வேளை, நிரஞ்சனர்களால் என் மகள் தீய்க்கப்படவில்லை. நெறி கெட்ட விதத்தில் கற்பு இழக்கவில்லை. இது காந்தர்வம். மரபு அங்கீகரிக்கப்பட்ட விஷயம். ஆனால் மூடி மறைக்காது இந்த பெண்ணோடு நான் உறவு வைத்தேன் என்று ஒரு ஆண் துணிந்து தைரியமாகச் சொல்லலாம். புவனபதி ஏன் சொல்லவில்லை என்று தெரியவில்லை.

சரி, கேட்டாலும் கேட்காவிட்டாலும் புவனபதிதான் மருமகன். புவனபதியிடம் போய், 'அப்பனே ஏதேனும் தவறு நடந்ததா? உனக்குத் தெரியுமா? யார் காரணம்' என்று கேட்க வேண்டும். கடவுள் அருளால் புவனபதி 'நான்தான்' என்று ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அவர் கண் திறந்தார். கங்கையை வணங்கினார். மூன்று அர்கியம் விட்டு மூத்தோர்களை விளித்தார். 'எனக்குத் துணையாக இருங்கள்' என்று இறைஞ்சினார். திரும்பினார்.

புவனபதி அங்கே தரை மேட்டில் கை கட்டி நின்றிருந்தான். அவரைப் பார்த்ததும் இறங்கி, ஓடி வந்து நமஸ்கரித்தான்.

''என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் அனுமதி இல்லாமல், உங்கள் பெண்ணை நான் தேவர்கள் அறிய விவாகம் செய்து கொண்டேன்.'' என்றான்.

மிகமிக கெட்டிக்காரத்தனமான வார்த்தை அது. எந்த குற்றமும் கண்டுபிடிக்க முடியாது.

## 33

விதி சத்திய ஞானியை யோசிக்க விடவே இல்லை. அவர் மகளுக்கு நல்ல கணவன் தேடும் வாய்ப்பை சத்தியஞானிக்குத் தரவே இல்லை. அந்தப் பிள்ளை அவர் மகளைக்



காப்பாற்றினான். முதலையால் விழுங்கப்பட இருந்தவளை ஆற்றோடு அழைத்துப் போய் வீட்டுக்குக் கூட்டி வந்தான்.

'ஒரு சிறு காயம் கூட படாமல், யானை போன்ற வன விலங்குகளிடம் இருந்தும் காப்பாற்றி இருக்கிறான். வழியில் ஏதும் நடக்காமல் போயிருந்தாலும் இந்தப் பெண் புவனபதிக்குத்தான் உரியவள்.

ஓரிரவு ஊருக்குத் தெரிய வெளியே தங்கிவிட்டு வந்த பெண்ணை வேறொருவனுக்கு எப்படி முடிப்பது? தவறு நடந்துவிட்டது என்று காலில் விழும் புவனபதியை எப்படி மறுப்பது? அவனாகவே வந்து பெண் கேட்கிறபோது எப்படித் தவிர்ப்பது?

நவக்கியானி மகா வெகுளி. எந்த சூட்சுமமும் தெரியாமல் வளர்ந்த பெண். எல்லோரிடமும் பிரியமாகவும் மரியாதையாகவும் இருக்க வேண்டுமென்ற தந்தை சொல்லை வேத வாக்காக எடுத்துக் கொண்டிருக்கிற பெண். மனிதர்கள் ஏமாற்றுவார்கள் என்று அறியாத பெண். எதற்கு ஒருவரையொருவர் ஏமாற்ற வேண்டும் என்று கேட்கிற பெண்.

நவக்கியானியின் தம்பி சிவக்கியானி அதற்கு மேல். மூத்தவள் தமக்கையாக இருந்து பிறந்த பல குழந்தைகள் மோழையாகத்தான் இருக்கின்றன.

சோழ தேசத்தில் மோழை என்றொரு மாடு இருக்கும். சிறிய உருவம். கொம்புகள் அதிகம் வளராது. பார வண்டி இழுக்கும். சில சமயம் ஏரிலும் பூட்டலாம். ஆனால் என்ன அடித்தாலும் முட்டாது: முட்டத் தெரியாது. சிறு குழந்தைகள் கூட அதை அடக்கி, மடக்கிப் போடுவார்கள்.

சிவக்கியானி எது கேட்டாலும், தமக்கை நவக்கியானி முகம் பார்ப்பான்.,

போர்வீரர்கள் எல்லோரும் பார்த்து விட்டார்கள். இது அமைச்சரிடமும், அரசரிடமும் போகும். அவர்கள் விசாரிக்கும்

முன்பு, என் மகளுக்குத் திருமணம் என்று சொல்லிவிட வேண்டும்.

புவனபதியின் தந்திரத்தை நினைத்தால் பயமாக இருக்கிறது. மகள் அவனிடம் சந்தோஷமாக இருப்பாளா என்று கவலையாக இருக்கிறது. ஆனாலும் வேறு வழி இல்லை.

விதி ஒரு மூலையில் இந்தக் குடும்பத்தை முடக்கிவிட்டது. 'ஏன் உன்னை இழந்தாய்' என்று குழந்தையைக் கோபித்துக் கொள்வதில் அர்த்தமே இல்லை. தன் உணர்விலிருந்து தன்னைப் பாதுகாக்க அந்தக் குழந்தைக்கு யாரும் சொல்லித் தரவில்லை.

இது திருமணத்திற்கான மாதம். சூரியன் இடம் மாறுகிற மாதம். இன்றிலிருந்து பத்தாம் நாள் திருமணம் வைத்துக் கொள்ளலாம்.

மகனையும், மகளையும் கூட்டிக் கொண்டு காசி மாநகருக்கு முதலில் போய்விடலாம். வேலை முடித்து புவனபதி வந்ததும் காசியிலேயே திருமணம் வைத்துக் கொள்ளலாம். விசுவநாத கோயில் மண்டபத்தில் ஹோமம் வளர்க்கலாம். அங்கேயே சப்தமி வைத்துக் கொள்ளலாம். இரவு கங்கைக் கரைக்கு வந்து அருந்ததி பார்க்கலாம்.'

சத்தியஞானி அதிகம் யோசித்தார். மகளை அருகே கூப்பிட்டு அமர்த்திக் கொண்டார். நவக்கியானிக்கு உடம்பு மெல்ல நடுங்கிக் கொண்டிருந்தது. கண்களிலிருந்து நீர் வழிந்தது.

''நவம், எதற்கு நடுங்குகின்றாய்? இதுவரை நான் உன்னைக் கோபித்ததில்லை. இனியும் கோபிக்கப் போவதில்லை. நீ தவறு செய்ததாகவே நான் கருதவில்லை. நீ உயிரோடு இருக்கிறாய் என்பதே எனக்கு சந்தோஷமாக இருக்கிறது.

நீ முதலை வாயில் சிக்கி இறந்து போயிருந்தால் அது எவ்வளவு பெரிய துக்கம்?



இது உனக்கு மறுபிறப்பு. தன் உயிரைத் துச்சமாக மதித்த புவனபதி உன்னைக் காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கிறான். 'தவறு நடந்துவிட்டது திருமணம் செய்யுங்கள்' என்று கேட்கிறான். நான் அவனுக்கு உன்னைத் திருமணம் செய்து கொடுக்க நிச்சயித்திருக்கிறேன். கன்னிகாதானம் செய்து கொடுக்க உத்தேசித்திருக்கிறேன். உனக்கு சம்மதம்தானே அம்மா?''

அவள் மௌனமாக இருந்தாள். வற்புறுத்திய போது சரியென்று தலையசைத்தாள்.

''என்ன சிவக்கியானி, உன் தமக்கையை புவனபதிக்குத் திருமணம் செய்து கொடுக்கலாமா?''

''நமக்கு வேறு வழியில்லை அப்பா. இது முடிந்து போன விஷயம்.''

'அட, சிவக்கியானி இவ்வளவு பேசுகிறானே.' சத்தியஞானி ஆவலோடு பார்த்தார்.

''தெளிவாகப் பேசப்பா'' அவனைத் தூண்டினார்.

''தந்தையே, நீங்கள் சொன்னது போல என் தமக்கையின் வாழ்க்கை விதிவசம். நம் ஆலோசனைகளை எல்லாம் விதி தகர்த்து எறிந்துவிட்டது. இனி, இவளே புவனபதிக்கு மனைவி. புவனபதி நல்லவரா கெட்டவரா என்று ஆராயக்கூட நமக்கு உரிமை வழங்கப்படவில்லை.

புவனபதியோடு இவளுக்குத் திருமணம் இல்லையெனில், வேறு எவரோடும் திருமணம் இல்லை. நமக்கு நடுவே கன்னிப்பெண்ணாக அவள் வாழ்ந்து கொண்டிருக்கலாம். நாமும் வேண்டாமென்றால் சூல இலச்சினை இட்டுக் கொண்டு கோவில் தாசியாகப் போகலாம்.

ஆனால், நவக்கியானி திருமணம் செய்து கொள்ளவே விரும்புவாள் என நினைக்கிறேன். பிரச்சனை இப்போது அங்கில்லை. புவனபதி பயணப்படுவதில் ஆவலுள்ளவர்.

நவக்கியானியோடு சிறிது காலம் வாழ்ந்துவிட்டு அவர் தொடர்ந்து வடக்கே பயணப்படக்கூடும். இமயமலைச் சரிவுகளுக்குப் போகக்கூடும். அவரால் பொருந்தி வாழ முடியாது. பொருந்தி வாழ வற்புறுத்தினால், அவருக்கு வரும் கோபத்தை நவக்கியானியால் தாங்க முடியாது. எனவே புவனபதியிடம் காசியிலேயே தங்கி விட வேண்டும் என்று சத்தியம் வாங்கிக் கொள்ள வேண்டும்.

'தங்குகிறேன்' என்று சத்தியம் செய்துவிட்டு, அவர் தங்காமல், தமக்கையை விட்டுவிட்டுப் போய் விடக் கூடும். ஏதேனும் வகையாய் யோசித்து அவரை வேறேதேனும் ஒரு பிடிக்குள் சிக்க வைக்க வேண்டும்.''

''வடக்கே போக வேண்டுமென்ற ஆவலை அவர் சொன்னாரா?''

''இல்லை; சொல்லவில்லை. ஆனால் எங்கும் தங்குவதற்கு அவருக்கு விருப்பமில்லை.''

''ஆனால் அவனாகத்தானே திருமணம் செய்ய வேண்டுமென்று கேட்டான்?''

''பயம். பயம் காரணம். தான் செய்த தவறை நியாயப் படுத்துகிற முயற்சி. செய்தவரையில் சரிதான். தொடர்ந்து உண்மையாக இருக்க வேண்டும். அரசரையோ அமைச்சரையோ வைத்துக் கொண்டு பேச வேண்டும். அரசாங்க வேலை போட்டுக் கொடுத்து மக்கள் மத்தியில் இருக்கும்படி செய்ய வேண்டும்.''

''அவ்வளவு சந்தேகமா உனக்கு?''

''கெட்டிக்காரர்களை நம்பக் கூடாது என்று சாஸ்திரம் சொல்கிறது. புவனபதி கெட்டிக்காரர்களுக்கெல்லாம் கெட்டிக் காரர்.''

''நீ சொல்வது புரிகிறது சிவக்கியானி. ஆனால் நாம் நம்பித்தான் ஆக வேண்டும். இல்லையென்று மறுத்தால்,



திருமணம் செய்துகொள்ள முடியாது என்று விலகினால் நம்மால் என்ன செய்திருக்க முடியும். இப்போதிருக்கும் நிலையில், அமைச்சர் புவனபதியை பகைத்துக் கொள்ள யோசிப்பார். கட்டளையிடத் தயங்குவார். புவனபதியாகவே வந்தது கடவுள் அருள்.''

அந்தக் குடும்பம் அமைதியாக இருந்தது. அந்த யோசிப் பிலேயே உண்டு உறங்கி, அலைந்து கொண்டிருந்தது.

பயிற்சி முடிய இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. புவனபதி தன் நிலையை அழகாக விளக்கி அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினான். திருமணத்திற்கு வேண்டிய உதவி செய்ய வேண்டுமென்று கேட்டிருந்தான்.

சத்தியஞானியையும், நவக்கியானியையும், சிவக்கியானி யையும் படகில் அனுப்பி வைத்தான்.

''வீரர்களே, நாம் நகருக்குள் நுழையும் முன்பு, அரசரைப் பார்ப்பதற்கு முன்பு, நிரஞ்சனர்கள் மீது ஒரு தாக்குதல் தொடுக்க வேண்டும். நிரஞ்சனர்கள் தலைவரை பின் கைகட்டி, அரசரிடம் தள்ளிக் கொண்டு போக வேண்டும்.

விடியற்காலையில் படித்துறையில் கால் வைத்து, எதிர் பாராத தாக்குதலை நிரஞ்சனர்கள் மீது தொடுக்க வேண்டும். எதிர்ப்பவர்களை பலமாகத் தாக்க வேண்டும். பயந்தவர்களைக் கடுமையாக மிரட்ட வேண்டும். அவர்களின் ஆயுதங்களை பயங்கரமாக சேதப்படுத்த வேண்டும்.

நிரஞ்சனர்களை அடக்கிய பின்பு, பொது மக்கள் முன்பு நமது பலத்தைக் காட்ட வேண்டும். இதுவரை நிரஞ்சனர்களை ஆதரித்தவர்களையும் மிரட்ட வேண்டும்.

நிரஞ்சனர்கள் தங்கள் கோயிலில் அணையாத நெருப்பு வைத்திருக்கிறார்களாம். அதை அணைக்க வேண்டும். பல நூறு வருஷங்களாக எரியும் அந்த நெருப்பு அணைவதுதான் அவர்களுக்குக் கிடைக்கும் மிகப்பெரிய தண்டனை. நாளை

இரவு நாம் புறப்படுகிறோம். எல்லோரும் இன்று நன்கு சாப்பிடுங்கள். நாளை குறைவாய் சாப்பிடுங்கள். ஒரு போருக்குத் தயாராக வேண்டும்.''

புவனபதியிடம் கடும் பயிற்சி பெற்ற அந்தக் கூட்டம் ஆறேழு படகுகளில் காசிக்குத் திரும்பியது. விடியலுக்காக் காத்திருந்தது. ஒவ்வொருவராக உள்ளே ஊடுருவினார்கள்.

விடிவெள்ளி கிழக்கே உதிக்க, நிரஞ்சனர்களின் கோவில் மணி ஒலித்தது. அவர்கள் கோட்டைக்கதவு திறந்தது.

தபதபவென்று பத்து வீரர்கள் உள்ளே நுழைந்தார்கள். நிமிட நேரத்தில் அடுத்த கதவைத் திறந்து விட்டார்கள். இன்னும் பத்து பேர் உள்ளே நுழைந்தார்கள். நிரஞ்சனர்களின் மாளிகை முழுவதும் பரவினார்கள். காட்டுக்கொடிகளால் பின்கை பிணைத்து நிரஞ்சனர்களை உருட்டித் தள்ளினார்கள். பைகளில் வைத்திருந்த மணல் துகளை நிரஞ்சனர்கள் கண்களில் கொட்டினார்கள். எழுப்பி உட்காரவைத்து, நரம்புகளை சேதப்படுத்தினார்கள்.

கால் நாழிகையில், நிரஞ்சனர்கள் பரம்பரை பரம்பரையாக வழிபடும் நெருப்பு குண்டத்தின் அருகே நின்றார்கள்.

புவனபதி மிகவும் பலம் வாய்ந்த ஒரு நிரஞ்சனனை இழுத்து வந்து கூச்சமின்றி நெருப்பு குண்டத்தில் தள்ளினான்.

''அடேய், இவன் நெருப்பில் விழுந்து விட்டானே. இவனைக் காப்பாற்றுங்கள்'' என்று கத்தினான்.

சுற்றியிருந்த வீரர்கள் நீரால் அந்த அக்னி குண்டத்தை அணைத்தார்கள். அதற்குள் அந்த நிரஞ்சனனுக்கு உடம்பு முக்கால் பகுதி எரிந்து போயிருந்தது. அவனை கொக்கியால் இழுத்து வெளியே போட்டார்கள். துடித்துக் கொண்டிருந்தவனை உயிர் நிலையில் மிதித்துக் கொலை செய்தார்கள்.

நிரஞ்சனர் தலைவரை பின் கட்டாகக் கட்டி தெருவில் இழுத்து வந்தார்கள். கிட்டத்தட்ட நிரஞ்சனர்களின் தொண்ணூறு சதவிகித பலத்தையும் பாழடித்தார்கள்.



அரசன் சபை திகைத்தது. புவனபதியிடம் பயிற்சி பெற்ற அத்தனை வீரர்களும் வாள் உருவி, வரிசையாய் நின்றார்கள். வாள் சுழற்றிக் காண்பித்து உறையில் போட்டுக் கொண்டார்கள். மண்டி போட்டு அமைதியாய் அரசனை வணங்கினார்கள்.

'ஆனால் காசி புண்ணிய க்ஷேத்திரம். இதற்கு இவ்வளவு முரட்டுத்தனமாய் ஒரு படை தேவை இல்லையே.'' அமைச்சர் யோசித்தார்.

'இவர்களும் நிரஞ்சனர்களாக மாறலாமே... இவர்களும் அட்டகாசம் செய்ய ஆரம்பிக்கலாமே. அப்போது என்ன செய்வது?'

அமைச்சர் கவலையானார்.

## 34

ஆனால், 'படைகள் புரட்சி செய்யுமோ' என்று பயந்தால், எந்த அரசாங்கமும் செயல்பட முடியாது. அரசன், படைகளை நம்பித்தான் ஆக வேண்டும். படைகள், அரசனை நம்பித்தான் இருக்கிறது. இந்த நூறு பேரிலிருந்து இரண்டு பேர் எடுத்து அந்த இரண்டு பேரிலிருந்து நூறு பேருக்குப் பயிற்சி கொடுத்து தொடர்ந்து செயலாற்ற வேண்டும்.

காசி தேசத்து நிரஞ்சனர்களின் கையை உடைத்தாயிற்று. இப்போதைக்கு ஆபத்து ஏதுமில்லை. இனி வடக்கேயிருந்து புதிதாக படைகள் வரும்வரை ஆபத்து ஏதுமில்லை.

ஆனால் நிரஞ்சனர்களின் அட்டகாசம், பாஞ்சாலத்தையும் முகம் சுளிக்க வைத்திருக்கிறது. காசியை நிரஞ்சனர்கள் கெடுக்கிறார்கள் என்ற அவப்பெயர் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது.

இந்த அந்தண இளைஞன் புவனபதி, தன் வேலையைக் கச்சிதமாக செய்திருக்கிறான். ஆனால் இவன் காசு ஆசை பிடித்தவனாக இருக்கிறான். ஒரு அந்தணனுக்கு இவ்வளவு செல்வத்தின் மீதான ஆசை வரக்கூடாது. கெட்டிக்காரனாக இருப்பவனிடம் காசு தங்கிவிடும். சுழலாது.

இவன் படித்துறை கட்ட காசு கேட்கிறான். அதிகம் பாராட்டினால் அதிகம் காசு கேட்பான். எனவே மிதமாகப் பாராட்டி, அரசரையும் மிதமாக வாழ்த்தச் சொல்ல வேண்டும்.

ஆனால் அரசர் இந்தப் போர் வீரர்களைப் பார்த்த பரவசத்தில் இருக்கிறார். நாம் பேசுவது காதில் விழாமல் சொல்லச் சொல்ல அதிகம் பாராட்டுவார்.'

அமைச்சர் எழுந்து நின்று வீரர்களைப் பாராட்டி, புவனபதிக்கு மாலை அணிவித்தார். சால்வை போர்த்தினார். அரசனின் அந்தரங்க ஊழியன் என்கிற கெவுரத்தை அவன் தோள்களில் மாட்டினார்.

''மிக்க மகிழ்ச்சி. சன்மானத்தையும் தருவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்'' புவனபதி மந்திரியிடம் அடிக்குரலில் பேசினான்.

''பெரிய சன்மானம்... சபையில் தர வேண்டாமேயெனப் பார்க்கிறேன்'' மந்திரியும் அடிக்குரலில் பேசினார்.

''சரி; எப்போது தருவதாக உத்தேசம்?''

''இன்னும் இரண்டு நாழிகையில், ஒரு லட்சசம் பொற் காசுகள் உன் வீட்டிற்கு வரும்.''

''எனக்குத் திருமணம்...''

''அப்படியா. நீ பிரும்மச்சாரி இல்லையே?''

''என் மனைவி இறந்து விட்டாள். சத்தியஞானி மகள் நவக்கியானியை இரண்டாவதாக திருமணம் செய்திறேன்.''

''அப்படியா, நான் நினைத்தேன். இப்படி ஏதாவது நடக்குமென்று!''



''அதற்கும் சன்மானம் வழங்க வேண்டும்.''

''மன்னனிடம் சொல்லி நிச்சயம் வழங்கச் செய்கிறேன். மன்னரை வணங்கி விட்டு நீ போகலாம்.''

புவனபதி காசி தேசத்து மன்னருக்கு அருகே போய் குனிந்து வணங்கி கைகூப்பினான்.

''மன்னர் வாழ்க. மன்னருக்காக எதையும் செய்ய சித்தமாக இருக்கிறேன்'' என்று ரகசியமாகக் கூறினான்.

''நல்லது அந்தணனே.... எமது மிகப்பெரிய பிரச்சினையைத் தீர்த்து வைத்தாய். நாம் சந்தோஷமானோம்.'' சுருக்கமாக முடித்துக் கொண்டார்.

அந்தப் படை வெளியே நகர்ந்தது. ஒவ்வொரு வீரனையும் ஆரக்கட்டித் தழுவிவிட்டு மனப்பூர்வமாய் ஆசீர்வதித்து, புவனபதி குதிரையேறி வீடு திரும்பினான். சத்தியஞானியின் அருகே போய் அமர்ந்து கொண்டான்.

''மாட்டுத் தொழுவத்தில் ஒரு குழி தோண்ட அனுமதி அளிக்க வேண்டும்.''

''எதற்கு?''

''மன்னர் ஒரு லட்சம் காசுகள் தருவதாக சொல்லி இருக்கிறார். அவைகளை அங்கே இறக்கி வைத்து, கட்டிடம் எழுப்பி, துளசி நட்டுவிட வேண்டும்.''

''சரி செய்து கொள்ளுங்கள்.'' சத்தியஞானி மரியாதையோடு பேசினார்.''

நவக்கியானியும், சிவக்கியானியும் கடைக்குப் போயிருக்க, மாட்டுத் தொழுவத்தில் ஒரு குழி தோண்டினான். களிமண்ணால் சுற்றுச் சுவர் பூசினான். நான்கு கல்லெடுத்து அதற்கு நடுவே ஒரு தொட்டி இறக்கி, தொட்டிக்குள் துளசிச் செடியை நட்டான். சற்றும் அசராமல் நேரே கோட்டைச் சுவருக்குப் போய் அங்கிருந்த கல் சுவரில் உள்ளங்கை அகல ஓட்டை போட ஆரம்பித்தான்.

இரண்டடி அகலத்திற்கு ஓட்டை போட்டு விட்டு, அந்த ஓட்டையை ஈர வரட்டியால் மூடினான். உதிர்ந்த கற்களை சுத்தமாக அப்புறப்படுத்தினான். மாட்டுச் சாணத்தைக் கரைத்து ஊற்றி அந்த இடத்தை பழைமையாக்கினான்.

கிணற்றுத் தண்ணீர் விட்டு குளித்தான். அதற்குள் சிவக்கியானியும், நவக்கியானியும் வந்துவிட, அவர்கள் வாங்கிவந்த பலகாரங்களை மடி நிறைய வைத்துக் கொண்டு உண்டான். ஒரு சொம்பு பால் குடித்தான். அயர்ந்து படுத்து தூங்கிப் போனான்

அவன் விழித்தபோது, இருட்ட இன்னும் சற்று நேரமே இருந்தது. மன்னரிடம் இருந்து எந்த செய்தியும் வரவில்லை என்பது கோபத்தைக் கொடுத்தது. சத்தியஞானி அவனை அமைதிப்படுத்தினார்.

''பணம் அதிகம் என்பதால் இருட்டிய பிறகு அனுப்பு வார்கள்'' என்று சொன்னார்.

இருட்டிய பிறகு பணம் வந்தது. இரண்டு பெரிய பெட்டிகளில் கொண்டு வந்து தரப்பட்டது. அவை உயரமான பெட்டிகள். கழுதையின் முதுகில் கட்டிப் போவதற்காக இம்மாதிரி பெட்டிகள் செய்யப்படும். திறப்பதற்கும் சூட்சுமம் வேண்டும்.

அவர்கள் பெட்டியைத் திறந்து காட்டினார்கள். கை விட்டு காசை அள்ளிக் காட்டினார்கள். அவனிடம், பெற்றுக் கொண்ட தற்கான ஓலையை வாங்கிக் கொண்டு திரும்பினார்கள்.

அந்த வீடு இத்தனை காசைப் பார்த்ததே இல்லை திகைத்தது. 'இத்தனை காசை என்ன செய்யப்போகிறாய்? என்று அவனை விழிகளால் வினவியது.

காசிக்கு வரும் யாத்ரீகர்கள் அதிகமாகிக் கொண்டிருக கிறார்கள். இந்தியாவின் எல்லா பக்கங்களிலிருந்தும் காசியை நோக்கி சாலைகள் போடப்பட்டு விட்டன.



ஆனால் காசியில் நல்ல படித்துறைகள் இல்லை. உங்கள் பெயரால் படித்துறை நிச்சயம் கட்டுவேன். உடனே வேலை ஆரம்பிப்பேன். அதற்கு முன்பு திருமணத்திற்காக சிறிது காசை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்'' புவனபதி அமைதியாய்ப் பேசினான்.

''ஆமாம்... நானே கேட்க வேண்டுமென்று நினைத்தேன்.'' சத்தியஞானி வெட்கப்பட்டார்.

''ஏன் கேட்க வேண்டும்? இவைகளை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். எத்தனை வேண்டும்?''

''ஐம்பது பொற்காசுகள் போதும்.''

''ஐம்பது பொற்காசுகளா? துண்டை விரித்துப் பிடியுங்கள்''

சத்தியஞானி துண்டை விரித்துப் பிடிக்க, இரண்டு உள்ளங்கைகளாலும் காசு அள்ளி, அவர் துண்டில் மூன்று முறை போட்டான். கனம் தாங்காமல், சத்தியஞானி முதுகு வளைந்தது

''எதற்கு இவ்வளவு, எதற்கு இவ்வளவு?!'' என்று அவர் பதறினார்.

''காசியிலிருந்து எல்லா சாதுக்களுக்கும் உணவிடுங்கள் உங்கள் மனைவியின் பெயரால் எல்லா சாதுக்களுக்கும் போர்வை கொடுங்கள். பொது மக்களுக்கு இனிப்பு வழங்குங்கள் பத்து வண்டி புல் வாங்கி வரச் சொல்லி, காசியில் அலையும் எல்லா பசுக்களுக்கும் வயிறார புல் போடச் சொல்லுங்கள்.

பித்ருக்களின் பெயராலும், ரிஷிகளின் பெயராலும், திருமணத்திற்கு முன்பு நடக்கும் சமாராதனையாக இந்த உணவு இருக்கட்டும். அவர்கள் மனங்குளிர்ந்து எங்கள் திருமணத்தை வாழ்த்தட்டும்''

''புவனபதி, செல்வம் சம்பாதிக்க எல்லோராலும் முடியும். செலவழிக்க, சரியாய் செலவழிக்க வெகு சிலரால் மட்டுமே முடியும். அத்தனை பசுக்களுக்கும் புல் லென்று சொன்னாயே... இந்த எண்ணமே உனக்கு நிறைய செல்வத்தைக் கொண்டு வந்து

தரும். இன்னும் ஒரு ஜென்மம் உனக்கிருந்தாலும் அந்த ஜென்மத்திலும் மிகப் பெரும் செல்வம் உன்னைத் தொடரும்.''

அவன் மாட்டுத் தொழுவத்திலும், சுவர்ப் பொந்திலும் நாணயங்களைப் பதுக்கி வைத்தான். தோட்டத்திலிருந்து சரளைக் கற்கள் கொண்டு வந்து, பெட்டிகளில் போட்டு பூட்டி வைத்தான்.

தனக்குக் கொடுக்கப்பட்ட காசில், ஒரு கை அள்ளிக் கொண்டு போய், சத்தியஞானி கடைத்தெருவில் உட்கார்ந்து கொண்டார். வியாபாரிகளிடம் திருமணம் நடக்கும் விஷயம் சொல்லி, தேதி தெரிவித்து தானியங்ககளுக்கும் அலங்காரங் களுக்கும், வாத்தியங்களுக்கும் காசு கொடுத்தார். வேத விற்பன்னர்களுக்கு நாள் சொல்லி, தவறாமல் வருமாறு முன் பணம் கொடுத்து வேண்டிக் கொண்டார்.

இடையர்களை அழைத்து, அன்று துவங்கி திருமண மறுநாள் வரை காசியில் அலையும் பசுக்களுக்கு இரண்டு வேளை புல் போட வேண்டிக் கொண்டார்.

நெய்க்கும், பாலேடுகளுக்கும் தானமாய்த் தரவேண்டிய பசுக்களுக்கும் காசு கொடுத்தார். எல்லா கோயில்களிலும் தீபமேற்றச் சொன்னார்.

திருமணத்தன்று இரவில் கங்கையில் ஆயிரம் நெய் தீபம் போடுவதற்காகவும், பொற்காசுகள் வழங்கினார்.

அவர் காசு கொடுத்து, பணிவோடு கேட்டுக் கொண்டது எல்லோரையும் சந்தோஷப்படுத்தியது.

ஆனால் நிரஞ்சனர்கள் கோபப்பட்டார்கள். சத்தியஞானி யைக் குத்திக் கொல்ல வேண்டுமென்று, சில நிரஞ்சனர்கள் ஆத்திரப்பட்டார்கள். தற்காலிகமாய் தலைமைப் பொறுப்பு ஏற்றவன் அமைதிப்படுத்தினான்.

சத்தியஞானியின் வீட்டிற்கு எதிர்ப்பக்கம் உள்ள கோட்டைச் சுவரில் ஏறி நின்று தெருவையே உற்றுப் பார்த்தான்.



கோட்டையின் மீதுள்ள ஒரு கல்லை அசைத்துப் பார்த்தான். கல் அசைந்தது. தள்ளினான். கீழே விழுந்தது. அடுத்த கல்லை அசைத்தான். அதுவும் அசைந்தது. முக மலர்ச்சியுடன் சுவர் விட்டு கீழே இறங்கினான்.

நிரஞ்சனர்களின் தற்காலிக தலைவன் ரகசியக் கூட்டம் போட்டான்.

''நமக்கு எதிரி சத்தியஞானி அல்ல, புவனபதி. அவனைப் போராடிக் கொல்ல முடியாது. வஞ்சகமாகத்தான் கொல்ல முடியும். அவனுக்கு இடம் கொடுத்த சத்தியஞானியையும் நாம் பழி தீர்க்க வேண்டும். புவனபதியின் மீது தாக்குதலை அவன் திருமணத்திற்கு மறுநாள் வைத்துக் கொள்வோம். புவனபதியை யும் கொன்று, சத்தியஞானி மகளை விதவையாக்குவதே என் குறிக்கோள். அப்போதுதான் நாம் பட்ட காயம் சிறிதாவது ஆறும்.

அன்றிரவே புவனபதியின் படையையும் தாக்கி விட வேண்டும். ஏனெனில், திருமணத்தில் வயிறு முட்ட குடிப்பது நமது வீரர்கள் பழக்கம். அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது நடக்கும் வரை வலது கையில் சாப்பிடுவது இல்லை என்று பிரதிக்ஞை செய்து கொள்வோம்.''

அவர்கள் சத்தியம் செய்து கொண்டார்கள்.

## 35

காசி மாநகரம் இவ்வளவு அற்புதமான திருமணத்தைப் பார்த்ததில்லை. அந்தணர் வீட்டுத் திருமணத்திற்கு அரசருடைய ஆதரவு இருப்பதால், அரசருக்கு உதவி செய்த அந்தணனுடைய திருமணமாக இருப்பதால், ஆரவாரம் அதிகமாக இருந்தது.

''உண்மையிலேயே நிரஞ்சனர்களை அடக்கி விட்டானா? அப்படியானால் அவனுக்கு நாம் ஏதாவது செய்ய வேண்டியது அவசியம்தான்.''

காசி தேசத்து வணிகர்கள், ஆளுக்கு சிறிது காசு போட்டார்கள். கட்டில், மெத்தை, பித்தளைப் பாத்திரங்கள், விதவிதமான உடைகள், தங்க ஆபரணங்கள் வாங்கி திருமணத்திற்கு மூன்று நாட்கள் முன்பு கொடுத்துவிட்டு வந்தார்கள்.

அரசர் அவனுக்கு மூன்று குதிரைகள் அனுப்பினர். நல்ல பசுக்களை அனுப்பினர். அரசு மான்யத்தில் அவர்கள் வீட்டுக்கு வேலையாட்களையும், கோபாலர்களையும் அனுப்பினார். நடன மாதர்களை அனுப்பி, அவர்கள் வீட்டு முற்றத்தில், ஏழு நாட்கள் நடனமாடச் சொன்னார்.

திருமணம் நன்றாக நடக்க வேண்டுமென்று கங்கா நதிக்கு பூஜை செய்தார்கள். காசி விஸ்வநாதர் ஆலயத்தில், அன்ன தானம் செய்தார்கள். கால பைரவர் கோயிலில் சாதுக்களுக்கு காசு தானம் செய்தார்கள். வீட்டு வாசலில் யார் வந்து கேட்டாலும் சாப்பிட இனிப்பு கொடுத்தார்கள்.

அந்த வீட்டு வாசலில் எப்போதும் கூட்டமாக இருந்தது. முதல் நாள் காலை ஹோமங்கள் துவங்கின. நூறு அந்தணர்கள் உட்கார்ந்து, ஒரு கோடி ஜபம் செய்தார்கள். பொற்காசுகள் வாங்கிக்கொண்டு போனார்கள்.

மறுநாள் கொடியோடும், பதாகையோடும் அமைச்சர் திருமண மண்டபத்திற்கு வந்திருந்தார். தனி ஆசனம் போட்டு அமர்ந்து, திருமணத்தைக் கவனித்தார்

சூரியன் உதித்து, ஒரு நாழிகைக்குப் பிறகு, நல்ல முகூர்த்தத்தில் சப்தபதி மந்திரத்தை, புவனபதி உரக்கச் சொன்னான். கருங்கல் மீது அவள் காலைத் தூக்கி வைத்து, மெட்டி அணிவித்தான். அவள் ஹிருதயத்தில் விரல் வைத்து,



'எனக்கு இங்கே இடம் கொடுப்பாயாக' என்று வேண்டினான். அக்னிக்கு தன் மனைவியை அறிமுகப்படுத்தினான்.

இந்த பூமியின் அற்புதமான உணவான நெல்பொரியை அக்னியில் போட்டு வணங்கினான். அக்னி சுழன்று எரிந்தது. படபடவென்று பேசியது.

பிற்பகல் அளவில், அக்னி விஷயங்கள் முடிந்தபிறகு அவர்கள் எழுந்து மந்திரியை வணங்கினார்கள். மந்திரியோடு தேரில் ஏறி, அரசரைப் போய் பார்த்துவிட்டு வந்தார்கள். அவரிடமிருந்து பொன்ஹாரமும், ஒட்டியாணமும், சந்திர பிரபை, சூரியப் பிரபையும் அவள் பரிசாகப் பெற்றாள்.

புவனபதிக்கு நூறு பொற்காசுகள் பரிசாக வழங்கப்பட்டன.

அவர்கள் வீடு திரும்பினார்கள். பாலும், பழமும் சாப்பிட்டார்கள். ஓய்வெடுத்துக் கொண்டார்கள்.

மாலையில் தர்பைக்கட்டையை அவள் புருஷனின் தோள்பட பிடித்துக்கொண்டு நிற்க, அவன் அக்னி ஹோத்ரம் செய்தான். நக்ஷத்திர ஹோமம் செய்தான். விஷ்ணுவை நினைத்து சாந்தி ஹோமம் செய்தான்.

''அடேயப்பா. என்ன ஞாபக சக்தி. எவ்வளவு தெளிவான உச்சரிப்பு. அடுத்து அடுத்து என்று சிறிது கூட பதறாமல், எவ்வளவு வேகமாக ஹோமங்கள் செய்கிறான். எங்கேனும் ஒரு இடம் தடுமாறுமோ என்று நான் ஆவலாய்க் காத்திருந்தேன். என்னை ஏமாற்றிவிட்டான்.

சத்தியஞானியாரே, உமது மகள் நவக்கியானி அதிர்ஷ்டம் செய்தவள். இரண்டாம் தாரமாக இருந்தாலும் வயது வித்தியாசம் அதிகமில்லை. கட்டுமஸ்தான வாலிபன். நல்ல படிப்பு, பாடாந்திரம்...'' பலபேர் பாராட்டினாரர்கள்.

அன்றிரவு சாந்தி முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. காட்டில் அவள் சந்தோஷமாக இருந்த விஷயம் யாருக்கும் தெரியவில்லை. பெண்கள் அவள் பயத்தைப் போக்குவதற்காக

நிறைய காமக் கதைகள் சொன்னார்கள். தங்கள் அனுபவத்தைப் பேசினார்கள். அவள் கேட்டுக் கொண்டாள்.

அவன் முதன் முதலில் வந்து தங்கின அறை அலங்கரிக்கப் பட்டிருந்தது. அரசர் கொடுத்த உறுதியான கட்டில் போடப் பட்டிருந்தது.

அவனை அந்தணர்கள் அங்கு அழைத்துப் போனார்கள். துர் தேவதைகளை விரட்டும் மந்திரங்களை அவன் அவர் களோடு ஜபித்தான்.

''நீர் திருமணம் ஆனவர். இது பற்றி உமக்குத் தெரியும். எனவே விடை பெறுகிறோம்'' என்று கைகூப்பினார்கள்.

அவன் அவர்களுக்கு பொற்காசுகள் கொடுத்து நமஸ் கரித்தான். ஒரு கூடை நிறைய இனிப்பை அவர்களுக்கு தானம் தந்தான்.

அவர்கள் இனிப்பை வாரி மேற்துண்டில் போட்டுக் கொண்டார்கள். அவன் எதிரிலேயே இனிப்பைவாயில் போட்டுக் கொண்டு ''ஆஹா, ஆஹா'' என்று கூவினார்கள். இனிப்பு நிறைந்த வாயோடு அவனை வாழ்த்தினார்கள்.

நவக்கியானி பெண்களால், தகப்பன் முன்னே அழைத்து வரப்பட்டாள்.

''உங்கள் கன்னி மகளைப் பார்த்துக் கொள்ளுங்கள்... இனிமேல் அவள் கன்னியாக இருக்கப் போவதில்லை'' என்று பாட்டுப் பாடினார்கள்.

நவக்கியானி தகப்பனின் காலில் விழுந்து வணங்கினாள்.

''நான் ஏதேனும் தவறு செய்திருந்தால் மன்னித்து விடுங் கள் அப்பா...'' அவருக்கு மட்டும் கேட்கும்படி மெல்ல விசும்பினாள்.

''இல்லை தாயே; இன்னும் சற்று முன்னரே நான் உனக்கு வரன் தேடியிருக்க வேண்டும். அப்படிச் செய்யாதது என் தவறு.



சிவனருளால் எல்லாம் நல்ல படி முடிந்தது குறித்து பெரிய சந்தோஷம். உனக்கு நான் எதுவும் சொல்லித் தரவில்லை தாயே. எல்லாம் உன் முயற்சியால் அறிந்து கொண்டாய். அதேபோல, குடும்பம் செய்வதையும் நீயாகத் தெரிந்து கொள்.

அவன்திராவிட தேசத்து. அந்தணன். உன்னைப்போல் இங்கு பிறந்தவனல்ல. அவனுக்கு இங்கு தரிக்காது. விரைவில் அவன் காஞ்சி மாநகர் பயணப்படவே விரும்புவான். 'அவ்வளவு தொலைவு உன்னையும் அழைத்துப் போவதா' என்று யோசிப்பான். நீயும் அவனோடு போய்த்தான் ஆக வேண்டும்.

ஏனெனில், தென்திசைப் பயணம் எளிதல்ல. மிகப் பெரிய வனங்களைத் தாண்ட வேண்டும். கொள்ளையர்கள் எதிர்ப் படாமல் இருக்க வேண்டும். அவனிடம் காசு அதிகம் சேர்ந்து விட்டது. அதை காஞ்சி மாநகரத்துக்குக் கொண்டு போய்க் காட்டவே விரும்புவான்.

அப்படி ஏதேனும் சொன்னால், வெகு நிச்சயமாய் நீயும், அவனோடு புறப்பட்டு விடு. அவன் என்ன சமாதானம் சொன்னாலும் ஏற்காதே. 'உங்களைவிட்டுப் பிரியவே மாட்டேன்' என்பதை இன்றிரவே சூசுகமாய்ச் சொல்லிவிடு.

நல்ல பையன். கெட்டிக்காரன். என்மனம் ஒரு பக்கம் சந்தோஷமாக இருந்தாலும், இன்னொரு பக்கம் ஏனோ கலவரப்படுகிறது. உன்தாய் பற்றிய கனவுகள் அடிக்கடி வருகின்றன.

உன் தம்பி சிவக்கியானி உன்னோடு இருக்கட்டும். இன்னும் பத்து வருடங்கள் கழித்து, அவன் திருமணம் செய்து கொண்டால் போதும். புவனபதியிடம் பாதி விஷயங்ள் கற்றுக்கொண்டால் கூட, இவனுக்கு வசதியான வாழ்க்கை கிடைத்து விடும்.

நல்லபடி போய் வா. புருஷன் மனங்கோணாமல் நடந்து கொள். அன்னை துர்காதேவி உனக்குத் துணை இருப்பாள்.

நான் நினைவு தெரிந்த நாளிலிருந்து இதுவரை சொன்ன அத்தனை எண்ணிக்கை துர்கா தேவி மந்திரத்தை, உனக்கு தத்தம் செய்கிறேன். இந்த மந்திரம் உன்னைக் காக்கும். உனக்குத் துணை நிற்கும். அம்மா என்று எப்போது கூப்பிட்டாலும், உனக்கு அருகே வரும். சௌக்யமாக இரு... சந்தோஷமாக இரு!''

தகப்பன் வாழ்த்த, மகள் மறுபடி நமஸ்கரித்தாள். பெண்கள் சூழ, புவனபதி நோக்கிப் போனாள்.

புவனபதி ஆவலாக அவளை அழைத்துக் கொண்டான். பெண்கள் கதவு சாத்திக் கொண்டார்கள். வெளியே தாழிட்டார்கள். பந்தலில் உட்கார்ந்து நிறைய பாட்டுப் பாடினார்கள்.

உள்ளே அவன் தொட தொட, அவள் உஷ்ணமானாள். அவன் என்ன சொன்னாலும் கீழ்ப்படிந்தாள். எப்படி நிற்கச் சொன்னாலும், நின்றாள். எப்படி அசையச் சொன்னாலும், அசைந்தாள்.

பாட்டுச் சத்தம் நின்றது. குளிர்காற்று காசி முழுவதையும் சுற்றிக் கொண்டது.

புவனபதியும் நவக்கியானியும் புதிய போர்வைக்குள் கட்டிப்பிடித்துக் கொண்டு உறங்கினார்கள். சந்தோஷக் களைப்பு அவர்களை ஆழ்ந்த உறக்கத்திற்குத் தள்ளியது.

விடிவெள்ளி எழுவதற்கு ஒரு நாழிகை இருக்கும் போது, ஆறு நிரஞ்சனர்கள் கால்நடையில் கிளம்பினார்கள். அவர்களின் வழக்கமான காவி உடையில் இல்லாமல், வெள்ளை உடையில் இருந்தார்கள்.

கங்கைக் கரையோரம் பெரிய படகு இருப்பதைப் பார்த்துவிட்டு, நகருக்குள் புகுந்தார்கள்.

அந்தப் படகு தவிர, மற்ற படகுகளெல்லாம் நீருக்கடியில் கல்கட்டி தொங்கவிடப்பட்டிருந்தன. அதாவது நங்கூரம் இடப்பட்டவை போல நின்றன.



அவர்கள் எல்லோர் முதுகிலும், நீண்ட பட்டாக்கத்தி இருந்தது. அவர்கள் தானம் வாங்க வந்த அந்தணர்கள் போல, சத்தியஞானியின் வாசலுக்கு வந்தார்கள்.

சத்தியஞானி தூக்கம் கலைத்து எழுந்தார். ஒதுக்குப்புறம் போய் வந்தார். கை கால்கள் கழுவி, மாடுகளுக்கு தீவனம் எடுத்துப் போட்டார். பசித்தது. பானையைத் திறந்து இனிப்புகள் எடுத்து சாப்பிட்டார்.

வாசல் நாதாங்கி தட்டும் சத்தம் கேட்டது. புரண்டு எழுந்த வேலைக்காரனைத் தடுத்து நிறுத்திவிட்டு அவர் நடந்து போனார். கதவு திறந்தார்.

''யார் நீங்கள். உள்ளே வாருங்கள்''

அவர்கள் வரவில்லை. அங்கேயே நின்று சிரித்தார்கள்.

''யார் நீங்கள்?'' மறுபடி கேட்டார்.

அவர்கள் சால்வையை விலக்கிவிட்டு, முதுகுக்குப் பின்னாலிருந்த கத்தியை உருவினார்கள். வாளைச் சுழற்றினார்கள்.

அவர் திரும்பி உள்ளே ஓடத் தலைப்பட்டார். ஒரு வாள் முழு பலத்துடன் அவர் தலையில் இறங்கியது. கபாலத்தை உடைத்து, மூளையைத் தாக்கியது.

கன நேர வலி. அவர் உயிர் பிரிந்தது.

## 36

வன்முறை ஒரு தீர்வேயில்லை. யுத்தம் ஒரு முடிவு அல்ல. வாள் உருவிய கையை, இன்னொரு வாள் உருவப்பட்டு வெட்டும். அந்தக் கையை இன்னொரு வாள் வெட்டும். எனவே இது தொடர்கதை.

ஆனால் உலகில் வன்முறையை நிறுத்தவே இயலாது. மனிதனிடம் விலங்கின் குணங்கள் அதிகம் இருக்கின்றன. அதில் ஒன்று தலைவனாகும் குணம் - உடல் பலமே இல்லாதவனுக்குக் கூட அரசனாகும் ஆவல் உண்டு. மனிதன் கற்பனை உள்ள மிருகம் என்பதால் அவனுக்கு வன்முறை அதிகம்.

தன்னால் அரசனாக முடியா விட்டாலும் அரசனாக இருப்பவரை வெறுக்க, வலுவில்லாதவனால் முடியும். அந்த வெறுப்பு, நேரம் பார்த்து அரசனைக் கவிழ்க்கும்.

ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளும் குணம் மிருகங்களுக்கு இல்லை. மனிதனுக்கு உண்டு. இந்த குணம் தான் பிரச்சனையை உண்டு பண்ணுகிறது.

பொறாமையைத் தூண்டுகிறது. போட்டியை அதிகரிக்கிறது. போட்டியினால் ஏற்படும் வலியையும் வேதனையையும் தோல்வியையும், துவளலையும் வஞ்சம் தீர்க்கும் எண்ணத்தைத் தருகிறது. போரிடும் சுபாவத்தை அதிகரிக்கிறது.

இந்தப் போர் பார்வையில்லாதது. மூளையில்லாதது. அது இடைப்பட்ட நல்லவர்களையும் கொன்று போட்டு விடுகிறது.

அப்படித்தான் சத்தியஞானி துண்டாடப்பட்டார். அவர் வெட்டுப்பட்ட அடுத்த கணம் புரண்டு படுத்திருந்த வேலைக்காரன் விழித்து எழுந்து கத்தினான். ஒரு காலியான கயிற்றுக் கட்டிலை, தாக்கியவர்கள் மீது போட்டான். அவர்கள் சற்று தடுமாற; உள்ளே ஓடிப்போய் புவனபதியின் அறைக்கு முதுகு காட்டி வாசற் பக்கம் பார்த்து ''கொலை கொலை'' என்று கூவினான்.

உள்ளே நுழைந்தவர்களுடைய கவனம் சத்தியஞானியின் வீட்டிலிருந்ததே தவிர எதிர் பக்க அறையில் இல்லை. கதவிடுக்கு வழியே புவனபதி வெளியே பார்த்தான். ஆட்கள் நடமாடுவது தெரிந்தது. அவர்கள் கைகளில் ஆயுதங்கள் மின்னின. அரைகுறை ஆடைகளுடன் இருந்த நவக்கியானி சுவரோரம் ஒதுங்கினாள். உடுக்கத் துவங்கினாள்.



புவனபதி கட்டிலை நிமிர்த்திப் போட்டான். மேல் ஓடுகளை சரசரவென்று பிரித்தான். உத்திரக்கட்டையைப் பிடித்துக் கொண்டு மேலேறினான். மறு பக்கம் குதித்தான்.

சுவரோரம் பதுங்கிப்பதுங்கி வந்து இரண்டு பசுக்களுக்கு நடுவே அமர்ந்து கொண்டான். பசு கட்டியிருந்த முளையைப் பிடுங்கி கையில் ஆயுதமாக வைத்துக் கொண்டான். ஒரு பசுவை அடித்து விரட்டினான். இன்னொரு பசுவுக்கு அருகே உட்கார்ந்து கொண்டான். தொழுவத்திற்கு வாளோடும் தீப்பந்தத்தோடும் ஒருவன் வருகையில் அடுத்த பசுவை அவிழ்த்து அவனை நோக்கி நகர்த்தினான்.

பசுவோடு ஒட்டிக்கொண்டு போனான். கையிலிருந்த முளைக்கம்பால் எதிரியின் வயிற்றில் பலமாகத் தாக்கினான். கோதுமை மூட்டைக்குள் கத்தி இறங்குவதுபோல் அவன் வயிற்றுக்குள் கத்தி இறங்கியது. அவன் அலறி சாய, தீப்பந்தத்தையும், வாளையம் எடுத்துக்கொண்டான்.

வேறொரு தீப்பந்தம் அவனை நோக்கி ஓடிவர தன் கையிலிருந்த தீப்பந்தத்தை முழு பலத்தோடு அந்த தீப்பந்தத்தின் மீது வீசினான்.

அடுத்த தீப்பந்தம் நிலைகுலைய புவனபதி கிணற்றடியை சுற்றிக் கொண்டு போய் அவனை வெட்டினான். சத்தியஞானி படுத்திருந்த மரக்கட்டிலுக்குக் கீழ் பதுங்கிக் கொண்டான்.

வீட்டில் தீபங்கள் ஏற்றப்பட்டன. வேலைக்காரர்கள் அழுகுரல் கேட்டது.

''புவனபதி எங்கே? யாரிடமோ ஒரு வேலைக்காரன் அடி வாங்கினான்.''

அந்த வேலைக்காரன் புவனபதி இருந்த அறையைச் சுட்டிக்காட்டினான்.

இரண்டு ஆட்கள் அந்த அறையை நோக்கிப் பாய்ந்தார்கள். வாசற்கதவை எட்டி உதைக்க முயற்சி செய்தார்கள்.

அவன் எழுந்து கை தட்டினான். அவர்களை அருகே அழைத்தான். கையில் ஆயுதமே இல்லாததுபோல கையை தொடைக்கு நடுவே வைத்துக் கொண்டான்.

''என்ன வேண்டும் உங்களுக்கு நீங்கள் யார்? நான் புவனபதி... எதற்காக என்னைத் தேடுகிறீர்கள்?'' உரத்துக் கேட்டான்.

அவன் நின்ற விதமும் கையசைத்த விதமும் செயற்கையாக இருந்தன. புத்தியுள்ளவர்கள் அந்த செயற்கைத் தனத்தைக் கண்டு மிரண்டிருப்பார்கள்.

ஆனால் அந்த.... முட்டாள்கள், ஆயுதமில்லாமல் இருக்கிறான் என்று அவனுக்கு அருகே வேகமாக வந்தார்கள்.

சட்டென்று கத்தியை எடுத்து மற்றவன் கத்தியைத் தாக்கி அவன் கழுத்தில் அடித்தான். அவன் தலை கோணலாகி தரையில் விழுந்தான்.

அடுத்தவனுக்கு மரண பயமும், கோபமும் வந்துவிட்டது போலும். மிக வேகமாகத் தாக்கினான். பல்வேறு கோணத்தில் கத்தியைச் சுழற்றினான். கடும் ஆத்திரத்தோடு பலமாக அடித்தான்.

ஆத்திரப்படுபவர்களைத் தடுத்துத் தடுத்து அயர்ச்சியுற வைக்க வேண்டும்.

புவனபதி யுத்த முறையை மாற்றினான். அந்த நிரஞ்சனனை அலைய வைத்தான். அவன் கத்தி வீச்சைத் தடுத்தபடியே கிணற்று விளிம்பில் ஏறிக் கொண்டான்.

வலக்கையால் தடுத்தபடி இடக்கையால் கிணற்றில் தொங்கியிருந்த கயிறை இழுத்தான். கயிறு குடத்தோடு வந்தது. கயிற்றைச் சுழற்றி குடத்தை எதிரியின் மீது வீசினான்.

எதிரியின் கையில் தாம்புக் கயிறு சிக்கியது. அவன் நிலைகுலைய புவனபதி தன் கத்தியால் அவனது இரண்டு



காதுகளையும் சீவித் தள்ளினான். ரத்தச்சேதம் அவனைத் தள்ளாட வைத்தது.

தன் கத்தியால் அந்த நிரஞ்சனனின் முதுகு கிழித்தான். அவன் வலியில் நிமிர புவனபதி பலங் கொண்ட மட்டும் வயிற்றில் குத்தினான். அந்த நிரஞ்சனன் துடித்து தரையில் புரள, தாம்புக் கயிற்றால் அவன் கால்களைக் கட்டினான். வலது மணிக்கட்டைக் காலால் மிதித்து நசுக்கினான். கீழே கிடந்த தீப்பந்தத்தால் இடது உள்ளங்கையைப் பொசுக்கினான்.

ஓடிப்போய் வாசற்கதவை மூடினான். தாழிட்டான். திரும்புகிறபோது சத்தியஞானி இறந்து கிடப்பதைப் பார்த்தான். திடுக்கிட்டான். எல்லோரையும் அருகில் வரும்படி உரக்க அழைத்தான். தீப்பந்தங்கள் பலது ஏற்றப்பட்டன.

சிவக்கியானி அப்பாவைப் பார்த்து விட்டு அக்காளிடம் ஓடினான். விஷயம் சொன்னான். நவக்கியானி ஓடி வந்து மார்பில் அடித்துக் கொண்டு அழுதாள்.

புவனபதி கண்கள் கூர்மையாயின. கோபத்தில் பல கடித்தான். காசியில் இனி ஒரு நிரஞ்சன் கூட இருக்கக் கூடாதென்று முடிவு செய்தான்.

விடிந்தது. அமைச்சருக்கும் அரசருக்கும் தகவல் போயிற்று. சத்தியஞானியின் மரணத்தைத் தாங்க முடியாமல் பொது மக்கள் கதறினார்கள்.

''இந்த நிரஞ்சனர்களின் அட்டகாசத்திற்கு அளவேயில்லையே. இவர்களை தண்டிக்க ஆட்களே இல்லையா?''

''இவ்வளவு பெரிய கொலை நடந்திருக்கிறதே. காசி இன்னமும் சமாதான தேசமா. இங்குள்ள அரசர்களும் அமைச்சர்களும் பொம்மைகள் தானா! இந்த பொம்மைகளுக்கு பதில் போக்கிரி நிரஞ்சனர்களே அரசாளட்டுமே.''

பெரியவர்கள் புலம்பினார்கள். இளைஞர்கள் கோபப்பட்டார்கள்.

பிற்பகல் சத்தியஞானியின் உடம்பு தகனத்திற்கு தயாரானது. அமைச்சர்கள் தேர்களிலிருந்து இறங்கினார்கள் நவக்கியானிக்கு ஆறுதல் சொன்னார்கள்.

புவனபதி தன்னிடம் பயின்ற போர் வீரர்களை ரகசியமாய் அழைத்து பொதுமக்களைத் தூண்டிவிடச் சொன்னான். இப்படி தூண்டி விட அவன் பயிற்சிகள் அளித்திருந்தான்.

அவர்கள் அதைத் திறம்பட செய்தார்கள். அமைச்சர்களை மக்கள் கேவலமாகத் தூற்றினார்கள்.

அமைச்சர்களின் உதவியாட்கள் மக்களை அடித்தார்கள். மக்கள் பதிலுக்கு ஆத்திரமுற்றார்கள். கைகலப்புகள் நிகழ்ந்தன. மக்கள் அரசரை நிந்தித்தார்கள்.

''வேசிகளைக் காப்பாற்றும் அரசன்'' என்று இகழ்ந்து பேசினார்கள்.

அமைச்சர்கள் வேகமாக வெளியேற மக்கள் கோபமுற்றார்கள்.

''இவர்கள் ஆட்சி செய்ய லாயக்கில்லாதவர்கள். நிரஞ்சனர்களை அடக்க திறனில்லாதவர்கள்.''

''நிரஞ்சனர்களை நாமே அடக்குவோம்.''

மக்கள் ஆத்திரபப்பட்டார்கள்.

நிரஞ்சனர்களின் மாளிகை நோக்கி நடந்தார்கள். புவனபதி பயிற்றுவித்த போர் வீரர்கள் அவர்களோடு கலந்து கொண்டார்கள்.

''நிரஞ்சனர்கள் மாளிகையில் ஒரு தூண் கூட நிற்கக் கூடாது. ஒரு நிரஞ்சனன் கூட உயிரோடு இருக்கக் கூடாது. அந்த நிரஞ்சனன் எட்டு வயதானாலும் சரி; எண்பது வயதானாலும் சரி; வெட்டிக்கொல்-இது குரு காணிக்கை''.

புவனபதி ஒவ்வொருவருக்கும் சொல்லி அனுப்பினான்.



சிவக்கியானி நெருப்பெடுத்துச் செல்ல புவனபதி ஈட்டியோடு அவனுக்கு பாதுகாவலாகச் சென்றான்.

சத்தியஞானியின் தகனமும், நிரஞ்சனர்கள் மாளிகை தகனமும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன.

காசியில் நிரஞ்சனர் ஆதிக்கம் முற்றிலும் அழிந்தது. மக்கள் மிகக் கொடூரமான முறையில் நிரஞ்சனர்களை அடித்துக் கொன்றார்கள். கை வேறு கால் வேறாகப் பிய்த்துக் கொன்றார்கள்.

நிரஞ்சனர்களது மரணத்தை பாஞ்சாலத்திற்குப் போய் சொல்லக் கூட ஆள் இல்லாது போயிற்று.

புவனபதி என்கிற ஒற்றை திராவிட பிராமணன் அறுநூறு வருஷ காசி தேசத்தை மாற்றி எழுதினான்.

நவக்கியானியைத் தேற்றினான். சிவக்கியானிக்கு ஆறுதல் சொன்னான். மக்களிடமும், வியாபாரிகளிடமும் பேசி நன்கொடை வசூலித்தான்.

'சத்தியஞானி படித்துறை' என்று பெரும் பொருட் செலவில் தொலைவிலிருந்து கருங்கற்கள் கொண்டு வந்து காலத்தால் அழியாது உறுதியாய், ஒரு படித்துறை செய்தான்.

காசியில் அவனுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. அவன் மனைவியோடு நடந்து போக எல்லோரும் எழுந்து கைகூப்பினார்கள். தனியாக நடந்து போனால் தாஸிகள் கண்ணடித்துக் கூப்பிட்டார்கள். வியாபாரிகள் மதுபானம் செய்ய அழைத்தார்கள்.

புவனபதிக்கு அமைச்சர்கள் ஆடல் பாடல்களில் முதலிடம் கொடுத்தார்கள். பரத கண்டத்தின் மிகச் சிறந்த தாஸிகளை அவனுக்கு அறிமுகப்படுத்தினார்கள்.

மிக அழகிய தாஸிகளோடு நல்ல பக்குவப்பட்ட உணவு வகைகளோடும் அமைச்சர்களுக்கு நடுவே இருந்தபடி புவனபதி இராஜபோகம் அனுபவித்தான்.

அங்கே அரசர் உத்தரவிட காசி தேசத்திற்கு ஜோஸ்யம் கணித்தான். இன்னின்ன வருடத்தில் மாறுதல் ஏற்படும் என்று எழுதி வைத்தான்.

அப்போது காசி அன்னியரால் சூழப்படும் என்று எழுதி வைத்தான்.

ஒரு நாள் இரவு அரசவையிலிருந்து அவன் பல்லக்கில் திரும்பும்போது அவன் பல்லக்குக்கு அருகே ஒரு மத்திய வயது வியாபாரி ஓடிவந்து வணங்கினான்.

''நான் தமிழ். தொண்டை நாடு'' என்றான்.

பல்லக்கு நிறுத்தப்பட்டது.

''தொண்டை நாடா, எங்கே?''

''காஞ்சி மாநகரம்''

புவனபதி ஆவலோடு தரையிறங்கினான். அந்த வியாபாரிக்கு கையை நரி கடித்து விஷமாகி கடும் ஜுரம் கண்டிருந்தது.

## 37

புவனபதிக்கு உடம்பு ஒருமுறை பொங்கி அடங்கிற்று. அந்தத் தமிழ் முகமும் தமிழ் பேச்சும் உணர்ந்ததும் அளப்பரிய சந்தோஷம் உண்டாயிற்று. வந்தவர் மீது பாசம் ஏற்பட்டது.

''இதென்ன... விஷம் தோள் வரை ஏறியிருக்கும் போலிருக்கிறது. இவ்வளவு தூரம் பயணப்படுகிறபோது காட்டு மிருகங்களை எதிர்க்கக் கற்றுக் கொண்டு வரவேண்டாமா. தூங்கிய நேரத்தில்தானே நரி கடிக்கும்.''



''ஆமாம். நடுக்காட்டில் அயர்ந்து தூங்கிவிட்டேன். கொய்யாப்பழங்கள் என்று நினைத்து போதையான பழங்கள் சாப்பிட்டு விட்டேன். நரி காத்திருந்து கடித்துவிட்டது.''

அந்தப் பழங்களுக்கு அடியில் நரி காத்திருக்கும். போதையில் எந்தப் பிராணி விழுந்தாலும் உணவாக்கிக் கொள்ளும்.

''நல்லது. என்னோடு வாரும். உங்களை காசி தேசத்து உயர்ந்த ஆதுரச் சாலையில் சிகிச்சை அளிக்கிறேன்.''

''நீங்கள் இங்கு யார்?'' அந்த வணிகன் வியப்போடு கேட்டார்.

''எனக்கு எந்தப் பதவியுமில்லை. ஆனால் அரசர் என் மீது பிரியம் வைத்திருக்கிறார். அவருக்கு என்னால் முடிந்த உதவிகளை செய்து வருகிறேன். காஞ்சிபுரத்தில் என் குடும்பம் பற்றி ஏதேனும் அறிவீரா? அவாளுக்கு நீர் இங்கு வருவது தெரியுமா?''

''தெரியாது. நான் கலிங்கம் வரைதான் பயணப்படுவதாக இருந்தேன். கலிங்கத்திலிருந்து ஒரு குழு காசிக்கு பயணப்படவே அவர்களோடு சேர்ந்து கொண்டேன். உங்கள் தந்தைக்கு காஞ்சியில் மிகப் பெரிய மதிப்பு. அதுவும் உங்களால் ஏற்பட்ட மதிப்பு. உங்கள் தந்தை எல்லோரிடமும் உங்கள் புகழைப் பரப்பிக் கொண்டிருக்கிறார். உங்கள் வீட்டுக்கே காசி பிராமணர் வீடு என்று பெயர் வந்துவிட்டது.''

புவனபதியின் முகம் பெருமிதத்தால் பூரித்தது.

''வேறு என்ன செய்தி, காஞ்சிபுரம் பற்றி?''

''சோழர்கள் ஆட்சி அமைதியாக நடக்கிறது. திருவொற்றியூர் வரை எல்லைகள் மிக பலமாக இருக்கின்றன. கன்னியாகுமரி வரை அவர்கள் ஆட்சி பரவியிருக்கிறது. பாண்டியர்கள் பேசுவதேயில்லை. சேரர்கள் அமைதி காக்கிறார்கள்.

பல தேசங்களிலிருந்து சிற்பிகளும், கலைஞர்களும், அந்தணர்களும், சோழ தேசத்தின் மையப் பகுதிக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

கும்பல் கும்பலாக அந்தணர்கள் சோழதேசம் நோக்கிப் போவதை நான் பார்த்தேன். அவர்களுக்கு ஆற்றங்கரையில் தங்குமிடம், வயல்வெளி போன்றவை தரப்படுகின்றன.''

''அப்படியா... இப்போது நான் போனால் எனக்கு அங்கு மரியாதை இருக்குமா?''

''அரசருக்கு இணையான மரியாதை இருக்கும். உங்களுக்கு முன் காசிதேசம் சென்றவர் வயதானவர். இத்தனை இளம் வயதில் நீங்கள் காசிதேசம் சென்றது மிகமிக உயர்ந்த விஷயமாகப் பேசப்படுகிறது.''

''வணிகனே... என் மனம் சந்தோஷத்தில் தவிக்கிறது. உனக்கு இங்கே எந்தக் குறையும் வராது. இந்த விஷமுறிவுக்கு மருந்துகள் கொடுக்கச் சொல்கிறேன். பத்து நாட்கள் கடும் பத்தியம் இருக்க வேண்டும். அதற்குப் பிறகு இங்கு எல்லா இடங்களுக்கும் நான் அழைத்துப் போகிறேன். உன் வீட்டில் நீ இருப்பதுபோல எது பற்றிய கவலையும் இல்லாது தூங்கு.''

''ஆமாம் ஐயன். நீங்கள் சொல்லும்போதே தூக்கம் வருகிறது... பயமின்றி நான் தூங்கி பல மாதங்களாகின்றன. உங்களைப் பார்த்ததில் என்நோய் பாதி குணமாகிவிட்டது. ஐயன், உடம்பு குணமான பிறகு நான் இமயமலைச் சாரல் போகவேண்டும். கைலாய தரிசனம் செய்ய வேண்டும். மூன்று மாதங்கள் நடந்து காசி வரை வந்து விட்டோம். இன்னும் ஒரு மாதம் பயணப்பட்டால் கைலாயம் பார்த்துவிடலாம் அல்லவா?''

''வணிகனே, நிச்சயம் பார்க்கலாம். உன் ஆவல் என்னையும் தொற்றிக் கொள்கிறது. முதலில் உடம்பு குணமாகட்டும். பிறகு பேசிக்கொள்வோம்.''

அன்று புவனபதியால் தூங்க முடியவில்லை. மனைவியோடு சந்தோஷமாக இருக்க முடியவில்லை. மனம் முழுவதும் காஞ்சி மாநகரில் போய் ஒட்டிக் கொண்டது.



அங்கேயிருக்கும் மனைவியின் ஞாபகமும், மைத்துனர்களின் ஞாபகமும் வந்தது. அம்மாவின் ஞாபகமும், அப்பாவின் ஞாபகமும் வந்தது. கிணற்றில் போட்டு வைத்த பொற்காசுகள் ஞாபகத்துக்கு வந்தன. கம்பீரமாய் காஞ்சி மாநகருக்குள் நுழைந்து மிகப் பெரிய வரவேற்பில் திளைப்பது நெஞ்சில் தோன்றியது.

அவன் காசியை விட்டு சோழ தேசம் நோக்கி பயணப்படும் ஆவலில் சிக்கிக் கொண்டான்.

'சரி; காஞ்சிமாநகரம் எப்படிப் போவது? நவக்கியானியுடனா... நவக்கியானி இல்லாமலா... நவக்கியானியை ஒரு நாளும் காஞ்சி மாநகரில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

காஞ்சிபுரத்தில் நவக்கியானியை அழைத்துப்போய் நின்றால் கேலியாகிப் போகும். 'காசியிலிருந்து கங்கை கொண்டு வந்திருக்கிறாயாமே. எங்கே காட்டு' என்று கேலி செய்வார்கள். 'ஒரு கை நான் குடிக்கட்டுமா?' என்று நவக்கியானியைக் காட்டி கண் சிமிட்டுவார்கள்.

இங்கு கற்றதும், இங்கிருந்து கொண்டு போகும் மற்றவையும் முக்கியமானது. நவக்கியானியின் திருமணமே கேலி செய்யப்படும்.

மூத்த மனைவி உயிரோடு இருக்கிறாள் என்று தெரிந்தால் நவக்கியானி அலறுவாள்.

'அடப்பாவி. உயிரோடு இருக்கும் மனைவிக்கா தர்ப்பணம் செய்தாய்' என்று கூச்சலிடுவாள். மைத்துனர்கள், சிறுவர்கள், குடந்தையிலிருந்து ஆட்கள் வந்து பெரிதாய் சண்டை போடுவார்கள். வேண்டுமென்றே உரக்கப் பேசி நாறடிப்பார்கள்.

'காசிக்குப்போய் சேறு பூசிக் கொண்டு வந்த கதை' என்று நாடகம் போடுவார்கள். நம் படிப்போ காசி தேசத்தில் கிடைத்த மதிப்போ, மரியாதையோ யார் காதிலும் ஏறாது.

எல்லா பொறாமை பிடித்த மனங்களும் இந்த இரண்டாவது திருமணத்தைக் குத்திக் காட்டும். எத்தனை காக கொடுத்தாலும் வாங்கிக் கொண்டு இதைப்பற்றியே இழிவாகப்பேசும்.

எனவே நவக்கியானியை காஞ்சிபுரம் அழைத்துப் போகாமலிருப்பது நல்லது. ஆனால் நவக்கியானி பிடிவாதக்காரி. அவள் காசியில் தனியே இருக்க சம்மதிக்கமாட்டாள்.

அதனால் இதற்கு வேறு ஏதேனும் செய்துதான் ஆக வேண்டும். இந்த வணிகனோடு வடக்கே போய் கைலாசமலை பார்த்துவிட்டு அப்படியே வேறு வழியாக தென்திசை நடந்து விட வேண்டும்.

மறுபடி மத்திம வயதில் காசிநோக்கி வரலாம். இவனோடு சேர்ந்து கொள்ளலாம். காஞ்சிபுரத்தில் வணிகர்கள் நகரத்தில் ஒரு மனைவியும், துறைமுகத்தில் ஒரு மனைவியுமாய இருப்பார்கள். அதுபோல் நம் வாழ்க்கையும் ஆகிவிட்டது என்ன சற்று இடைவெளி அதிகம்! ஒரு மனைவிக்கும், இன்னொரு மனைவிக்கும் இடையே ஆறுமாதப் பிரயாணம்.

இந்த முறை காஞ்சி மாநகர் திரும்புப்போது நல்ல ஜாதிக் குதிரையில் பயணப்பட வேண்டும். அப்பொழுது இரண்டு மாதத்தில் போய்விடலாம். கலிங்க தேசத்தில் குதிரை மாற்றிக கொள்ளலாம்.

எப்போது கிளம்புவது? என்ன சொல்லிவிட்டுக் கிளம்புவது? காசியில் பிரபல்யமாகி விட்டதால் சட்டென்று கிளம்ப முடியாது. வேறு ஏதேனும் சரியான சாக்கு போக்கு சொல்லி விட்டுத்தான் போக முடியும்'.

புவனபதி தீவிரமாக யோசித்தான். பல்வேறு கோணங்களில் சிந்தித்தான். மறுபடி போய் வணிகரைப் பார்த்தான்.

''வணிகரே, உடல்நலம் எப்படி இருக்கிறது?''

''ஒரே நாளில் குணம் தெரிகிறது ஐயன். கணுக்கையில் மட்டும்தான் வலி இருக்கிறது.''



புவனபதி அவர் நாடி பிடித்துப் பார்த்தான்.

''நாளை முற்றிலும் வலி நீங்கி விடும். இன்னும் ஐந்து நாள் உண்டு, உறங்கி, கூத்துபார்த்து கங்கையில் குளித்து கோயிலுக்குப் போய் சந்தோஷமாக காலம் கழியும். எனக்கு கடமைப்பட்ட வீரன் ஒருவனை துணைக்கு அனுப்புகிறேன்.''

''மிக்க நன்றி ஐயன்.''

''பிறகு நாம் இருவரும் கைலாசமலைக்குப் போகலாம்.''

''அப்படியா. நீங்களும் கைலாயமலைக்ககு வருகிறீர்களா?'' வணிகன் வியந்தான்.

''ஆமாம்; நீ சொன்னதும் எனக்கும் அந்த ஆசை ஒட்டிக்கொண்டுவிட்டது. வழி முழுவதும் தமிழில் பேசிக் கொண்டு போகலாம்.''

''இறைவா எவ்வளவு பெரிய பேறு...'' வணிகன் புவனபதியை நோக்கி கைகூப்பினான்

''பதிலுக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்.''

''நிச்சயம் செய்கிறேன்.''

''மூன்று வண்டிச் சுமைகளை கைலாயத்திலிருந்து காஞ்சி மாநகரம் வரை ஓட்டிச் செல்ல வேண்டும். அதில் அரைவண்டி நீங்கள் ஏற்றிக் கொள்ளலாம். மற்றவை நம் அகம் போக வேண்டும். இடையே மாடுகள் மாற்றிக் கொள்ளலாம். வேறு வண்டி தேவைப்பட்டாலும் வாங்கிக் கொள்ளலாம்.

இதற்கான செலவும், நடுவே பயணச் செலவும் காஞ்சிபுரம் கொண்டு போய்ச் சேர்த்த பிறகு அங்கே பெருத்த சன்மானமும் கிடைக்கும்.''

வணிகன் விழிகள் வியப்பால் விரிந்தன.

''இது மட்டுமில்லை வணிகரே... நான் காஞ்சிபுரத்துக்குத் திரும்பி வரும் போது உம்மைப் பற்றி ஊர் முழுவதும் புகழ்ந்து சொல்வேன். உமது குலத்திற்கு உம்மைத் தலைவனாக்குவேன்.

அதோடுமட்டுமல்ல. கைலாயத்தில் உமக்கு மந்திரஜபம் சொல்லிக் கொடுத்து இறைதரிசனம் செய்து வைப்பேன். ஒரு வணிகர் எப்படி நடக்க வேண்டும்? எப்படி நிற்க வேண்டும்? எப்படி பேசவேண்டும்? என்று பலதும் சொல்லித் தருவேன். மூலிகைகள் இனம் காட்டுவேன். ரஸமணிகள் செய்து தருவேன்.

இவை பற்றி காஞ்சிபுரத்தில் பேசினாலே போதும். நான்கு தலைமுறைக்கு உன் குடும்பம் காசி வணிகர் குடும்பம் என்றே அழைக்கப்படும்.''

வணிகன் எழுந்து புவனபதியின் காலில் விழுந்தான்.

''ஐயன், இது பூர்வ ஜன்ம புண்ணியம்.''

''நானும் அப்படித்தான் கருதுகிறேன். போன ஜென்மத்தில் நாம் சகோதர்களாக வாழ்ந்திருக்க வேண்டும். இல்லை யெனில் நடுவழியில் வழிமறித்தவரோடு நான் பேசி யிருக்கவே மாட்டேன்.''

''நன்றி ஐயன். காசியிலிருந்து ஊருக்கு என்ன வாங்கிப் போகலாம்... அதை எப்படி எடுத்துப் போகலாம்? அதையும் சிந்திக்க வேண்டும்.''

''காசியிலிருந்து பட்டு வாங்கிப் போகலாம். பித்தளைச் சாமான்கள், பொம்மை வாங்கிப் போகலாம். தேவதாரு மரத்தில் செய்த பொம்மைகளும், கரண்டிகளும், பலகைகளும் வாங்கிப் போகலாம். கங்கையின் களிமண் மூன்று பானைகளில் அடைத்துப் போகலாம்.''

''களிமண் எதற்கு?''

''சோழ தேசத்து ராணிகளுக்கு விற்கலாம். இந்தக் களி மண்ணை முகத்தில் பூசி உலரவிட்டு கழுவினால் முகம் பொலிவாகும்.''

''இங்கிருந்தே கைலாயத்திற்குப் போகும்போது எடுத்துச் செல்வதா?''



''இல்லை. காசியில் எதிர்க்கரையில் இவைகளை வாங்கிப் போகலாம்.''

''நல்லது ஐயனே. ஆனால் என் கையில் ஒரு பொற்காசு கூட இல்லை. என்னோடு வந்தவர்கள் எல்லாம் எடுத்துப் போய்விட்டார்கள்.''

''காசுபற்றி கவலையே வேண்டாம். இதில் நூறு பொற் காசுகள் இருக்கின்றன. யாவும் உமக்கே. சந்தோஷமாக செலவு செய்யுங்கள். உமது வைத்தியச் செலவையும் நானே ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் பத்தியமிருப்பதால் மதுவோ, மாமிசமோ வேண்டாம். பொது மகளிரையும் தவிர்த்து விடுங்கள். கைலாயம் போவதால் காப்பு கட்டி விரதமிருங்கள்''

''என் தந்தைகூட என்மீது இத்தனை அக்கறை செலுத்திய தில்லை ஐயன்...''

''வணிகரே, நாம் நண்பர்கள். நம் நட்பு மிக ஆழமானது.''

புவனபதி வெளியே வந்தான்.

''சோழதேசம் போகப் போகிறோம்'' என்கிற சந்தோஷம் அவனைத் தொற்றிக் கொண்டது.

'இனி நவக்கியானியை எப்படி ஏமாற்றலாம்? என்று சிந்திக்கத் துவங்கினான்.

## 38

''மன்னர் என்னை கைலாயம் சென்று வருமாறு பணித்திருக்கிறார். சில மூலிகைகள் கொண்டு வர வேண்டும். சந்திரகாந்தக் கல் கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டும்.. பலகை பலகையாய் நவபாஷாணக்கல் கிடைக்கிறதாம் அதையும் எடுத்து வரவேண்டும்.

இதைத் தவிர, இமயமலையில் பவளம் கிடைக்கிறதாம்'' புவனபதி பேசினான்.

''பவளமா?'' நவக்கியானி வியந்தாள். ''பவளம் கடலில் அல்லவா கிடைக்கும்.''

''எப்போதோ பிரளயம் ஏற்பட்டு உலகம் முழுவதும் கடல் நீரால் மூழ்கடிக்கப்பட்டு கைலாயத்தின் விளிம்புவரை கடல் வந்தது. அங்கே முளைத்த பவளங்கள் நீர் குறைந்தபின் மண்ணுக்குள் புதைந்து விட்டன. அவைகளை இப்போது தேடி எடுக்க வேண்டும். கைலாயத்திற்குப் போகும் வழியில் உள்ள காட்டு ஜனங்கள் பாறையிலிருந்து ஒழுகும் ஒருவித பிசினை சேகரிக்கிறார்கள். அது ஆண்மைக்கு அற்புதமான மருந்து.''

''இருக்கட்டும். அது உங்களுக்கு ஏன்?'' நவக்கியானி காதலோடு சிரித்தாள்.

''எனக்கு வேண்டாம்'' புவனபதி அவள் பரிமாறிய உணவை ரசித்து சாப்பிட்டான்.

''ஆனால் மன்னருக்கும் மந்திரிகளுக்கும் தேவைப்படுகிறது. அளவுக்கு அதிகமான போகத்துக்கு ஒத்துழைக்காத போது இதுபோன்ற மருந்துகளின் உதவிகளை நாடுகிறார்கள்.''

''இது தவறு.''

''ஆனால் நாம் சொன்னால் புரியாது.''

''எப்போது பயணப்படப் போகிறீர்கள்?''

''இரண்டொரு நாட்களில்.''

''எத்தனை பேர்?''

''நானும் ஒரு வணிகனும் முன்னே செல்ல ஒரு இருபது பேர் உள்ள கூட்டம் பாரவண்டிகளோடு பின்தொடரும். மூலிகைகள் கட்டுக் கட்டாய் ஏற்று வேண்டுமல்லவா?''

''யார் அந்த வணிகர்?'' நவக்கியானி சட்டென்று கேட்டாள்



புவனபதி நிதானித்தான். 'சொல்லியிருக்கக் கூடாதோ. ஒருவேளை அந்த வணிகனை சந்திக்க நேர்ந்தால், அந்த வணிகன் ஏதாவது உளறி... பிரச்சினையல்லவா.' தீவிரமாய் யோசித்தான்

சட்டென்று பொய் சொன்னான்.

''ஒருமுறை சந்தித்ததோடு சரி; அதிகம் பரிச்சயமில்லை. மன்னரால் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டான். ஏன் கேட்கிறாய்?''

''தொலைதூரம் போகிறீர்கள். உங்களோடு யாரெல்லாம் வருகிறார்கள் என்று தெரியவேண்டாமா? உங்களைக் கவனித்துக் கொள்ளச் சொல்ல வேண்டாமா?''

''அவன் அவனை கவனித்துக் கொண்டால் போதும். நான் தனியே போக வேண்டும் என்று ஆசைப்பட்டேன். இப்போது தேவையில்லாமல் சுமை.'' அவன் பொதுவாய் அலுத்துக் கொண்டான்.

''எனக்கும் கைலாயம் எல்லாம் பார்க்க வேண்டும் என்று ஆசை.'' நவக்கியானி மெல்லிய குரலில் பேசினாள்.

''நீ பெண் என்பதை மறந்து விட்டுப் பேசுகிறாய்... வழியில் மாதவிலக்கானால் அந்தப் புண்ணியத் தலங்கள் மாசுபடும் அல்லவா?''

''இது என்ன முட்டாள்தனம். அதுவும் நிலத்தில் ஒரு பகுதிதானே. அங்கும் பெண்கள் வாழ்கிறார்கள் அல்லவா?''

''அது நிலத்தின் உன்னதமான பகுதி. அங்கு பெண்களே இல்லை என்பது செய்தி.''

''கைலாயத்தில் பரமேஸ்வரன் பத்தினி பார்வதி இருக்கிறாரே. அப்படியானால் பெண்களை இறைவன் ஒருபடி கீழாக வைத்திருக்கிறாரா?''

''ஆமாம்; சந்தேகமில்லாமல் ஆமாம்.''

''நவக்கியானி, இந்த உலகம் ஆண்களுக்காகப் படைக்கப் பட்டிருக்கிறது. இந்த உலகத்திலுள்ள அத்தனை விஷயங்களும் ஆணின் சுகத்திற்காகத்தான் படைக்கப்பட்டிருக்கின்றன. அவன் சுகத்திற்காகப் படைக்கப்பட்ட முதல் விஷயம் பெண்.''

''ஆனால் ஆண்கள் படைக்கப்பட்டது பெண்ணிடமிருந்து தானே.''

''படைக்கப்பட்டது என்று சொல்லாதே. உருவாக்கப் பட்டது என்று சொல். ஒரு ஜீவன் மிகவும் சுகமாக இருப்பது அதன் தாயின் வயிற்றில் இருக்கும்போதுதான். அதனால்தான் ஆணால் பெண்ணைத் துறக்கவே முடிவதில்லை. பெண்ணை உதறிவிட்டு அவன் வாழவே முடியவில்லை. பெண்ணிட மிருந்து பிறந்ததால்தான் ஆண் பலஹீனமாகவே இருக்கிறான்.''

நவக்கியானி தம்பி சிவக்கியானி சிரித்தான்.

''என்ன சிரிக்கிறாய், உன் கருத்தைச் சொல்.''

''உலகத்தில் பிறந்த அத்தனை பிறவிகளும் பலஹீனம்தான். இங்கே எல்லா உயிர்களும் பெண்கள்தான். கடவுள்தான் புருஷன். அவனுக்கு விஷ்ணு என்று பெயர். விஷ்ணு மட்டும் மரணமில்லாதவர். மற்ற எல்லோருமே மரணமடைகிறவர்கள் தான். மரணமடைகிற ஒரு உடம்பு அல்லது ஒரு நபர், பலம் - பலஹீனம் பற்றி என்ன பேசமுடியும். உன்னை விட நான் பலசாலி என்று நான் யாரிடம் சொல்லமுடியும்.

ஐப்பசிமாசம் இறக்கிறவனைவிட கார்த்திகை மாசம் இறக்கிறவன் பலசாலியா.... கார்த்திகை மாசம் இறக்கிறவனை விட அதற்கு அடுத்த மாசம் இறக்கிறவன் பலசாலியா.. ஆமென்றே வைத்துக் கொள்வோம். யார் எந்த மாதம் இறக்கப்போகிறோம் என்று யாருக்குத் தெரியும்.

ஐந்து வயது சிசுவும் இருபது வயது வாலிபனும் நாற்பது வயது குடும்பியும் அறுபது வயதுக் கிழவனும் ஒரே நாளில் மரணமடைகிற வியப்பான உலகம் இது. இதுதான் இந்த



உலகத்தின் வினோத குணம். எனவே இங்கு எல்லோரும் பெண்கள். வலிவு மிக்க உங்களைப் போன்ற ஆண்களும் பெண்கள்தான். ஏனெனில் நீங்கள் மரணமடையப் போகிறீர்கள்... இதில் பெண்களில் பிரஷ்டை என்ற பெயரில் மாதவிலக்கு என்கிற சாக்கில இழிவு படுத்துவதின் தாத்பர்யம் என்ன? எனக்குப் புரியவே இல்லை.''

''ஆஹா... ஆஹா...'' நவக்கியானி கை தட்டினாள்.

''இப்போது என் தம்பியின் கேள்விக்கு பதில் சொல்லுங்கள்.''

''நிச்சயம் சொல்கிறேன். ஆணுலகம் பெண்ணுலகத்தின்மீது பிரியமும் பரிதாபமும் உடையது. ஆனால் இந்தப் பிரியத்தையும் பரிதாபத்தையும் யாரும் புரிந்து கொள்வதில்லை. சந்தேகம் வருகிறது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் நலனைக் கருத்தில் கொண்டு கொஞ்சம் ஆளுமையோடு சில கட்டளைகளை ஆணுலகம் இடுகிறது. மாதவிலக்கு நேரத்தில் ரத்த சேதத்தினால் பெண்ணுக்கு பயணப்படுவது மிகக் கடினம். எனவே நெடுந் தூரப் பயணத்தை முடிந்த வரை தவிர்ப்பதே பெண்களுக்கு நல்லது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உண்மையில் உலகம் நம்மில் தான் இருக்கிறது. நாம் இருக்கும் இடம்தான் உலகம். கைலாயத்திற்குப் பயணப்படுவது வெறும் கர்வம். கைலாயத்தில் எதுவுமில்லை. இந்த கங்கைக் கரையில் பிறந்து இந்த கங்கைக் கரையில் மடிந்து போவதை விட கைலாயத்திற்குப் போவதில் எந்த விதத்திலும் உயர்த்தி இல்லை. இது வெறும் கர்வம். கைலாயத்தை வென்று விட்டதாக ஒரு பிரமை... கைப்பற்றி விட்டதாக ஒரு நினைப்பு

உண்மையில் பூமியின் ஒரு அங்குல மண்ணைக் கூட நாம் ஜெயிப்பதில்லை. ஜெயிக்கவும் முடியாது.

இது வெறும் அலையல். நாய் அலையல். இதில் எந்த லாபமும் இல்லை. ஆனாலும் உயிர் வாழும் வரை ஏதேனும்

செய்ய வேண்டுமல்லவா...? அதனால் ஏதோதோ செய்யப் படுகிறது. ஏதேதோ கற்பனைகளால் வாழ்க்கை நகருகிறது'' புவனபதி பேச, ''ஆம்'' என்று சிவக்கியானி தலையசைத்தான்.

''அப்பா. என்ன வாய்ச்சாலம்'' நவக்கியானி புருஷனைப் பார்த்து வியந்தாள்.

''வாய்ச் சாலமில்லை; புவனபதியார் சத்தியம் பேசினார் மறுக்க ஏதுமில்லை'' சிவக்கியான் பாராட்டினான்.

''இது மட்டுமல்ல... உறவுகளைப் பற்றி நமது அலட்டல்களும் பொய்யானவை. நான் இல்லை என்றால் நீ இல்லை. நீ இல்லை என்றால் நானில்லை என்பது ஒரு பழக்கம் - மனமயக்கம். மரணம் பற்றிய பிரக்ஞை உள்ளவர்களுக்கு உறவுகளும் இல்லை... மரபுகளும் இல்லை. வாழ்வோம் என்று வெற்று நம்பிக்கை உள்ளவர்க்குத்தான் மரபுகள் மிக முக்கியம் உறவுகள் பெரிய விஷயம். இதைத் தாண்டுதலும் நல்லது.''

''கடவுளே, கைலாயம் போவதற்கு முன்பே இப்படிப் பேசுகிறீர்களே... போய் வந்தால் என்ன பேசுவீர்களோ...'' நவக்கியானி அலுத்துக் கொண்டாள்.

''போய் வந்தால்தானே...'' புவனபதி நிதானமாய் பேசினான்.

''என்ன?'' நவக்கியானியும் சிவக்கியானியும் திடுக்கிட்டார்கள்.

''வழியில் இறந்து போகலாமல்லவா?''

''போதும் பேச்சு.'' நவக்கியானி முகம் திருப்பிக் கொண்டாள்.

''சிவக்கியானி, உன் அக்காவை சமாதனப்படுத்துவதே உனது வாழ்க்கையின் மிகப் பெரிய வேலையாக இருக்கப் போகிறது. எவ்வளவு தத்துவார்த்தம் பேசினாலும் பெண்கள் அதை ஏற்பதில்லை. அதனால் பெண்களிடம் தத்துவம்



பேசுவதேயில்லை, நான் இன்னும் இரண்டு நாட்களில் கைலாயம் கிளம்புகிறேன்.''

''போய் வருகிறேன் என்று சொல்லுங்கள்.''

''போய் வருகிறேன்.''

அவன் சாதாரணமாக சொன்னான். அந்த உணர்ச்சியற்ற தன்மை கண்டு நவக்கியானி கலவரப்பட்டாள். சிவக்கியானி அவளை சமாதனப்படுத்தினான்.

புவனபதி இரண்டு நாட்கள் காசியைச் சுற்றிச் சுற்றி வந்து ஆட்களைத் தேர்ந்தெடுப்பதிலும், தோலாடைகள் வாங்குவதிலும் வழிப் பயணத்திற்கு மாவுவகைகள் தயாரிப்பதிலும் அதிக நேரம் செலவிட்டான். அந்த வணிகனை ஊர் எல்லைக்கு அனுப்பி விட்டு சிவக்கியானியிடம் விடைபெற வீட்டுக்கு வந்தான்.

இனிமேல் அவன் அந்த வீட்டிற்கு வரப் போவதேயில்லை.

## 39

நவக்கியானி கோதுமை மாவினால் ஒரு ஆண் பிரதிமை செய்தாள். அதற்கு கண், மூக்கு, காது எழுதினாள். தேனில் வேறு சில விஷயங்கள் கலந்து அதன் மீது மெல்ல தடவி பொம்மையை பலப்படுத்தினாள். ஒரு தட்டில் சிறய பாறைத் துண்டு வைத்து அதன்மீது அந்தப் பிரதிமையைச் சார்த்தி வைத்தாள்.

தன் புருஷன் புவனபதியின் மேல் துண்டிலிருந்து சிறிதளவு துணி கிழித்து அந்த பொம்மை மீது சார்த்தினாள்.

சிவக்கியானி ஆச்சரியத்துடன் அவள் செய்வதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''அக்கா என்ன செய்கிறாய்?'' என்று ஆவலோடு கேட்டான்.

''என் புருஷன் என்னை விட்டுப் பிரியாதிருக்க பூஜை செய்கிறேன். அவர் சுகத்தையும் துக்கத்தையும் இந்த பொம்மை எனக்குக் காட்டிக் கொடுத்து விடும். இவர் மனோ நிலையை எனக்குச் சொல்லி விடும்.''

''இது எப்படி சாத்தியம் அக்கா?''

''உண்மை அன்பு இருந்தால் எதுவும் சாத்தியம் தம்பி. இது அம்மா எனக்குச் சொல்லிக் கொடுத்த வித்தை. புருஷன் தேசாந்திரம் போகிறபோது அவனுக்காக மனைவி பிரார்த்தனை செய்ய இது ஒரு வழி. பொம்மையின் நிறமாற்றங்கள், சில அசைவுகள் வைத்து புருஷன் எப்படி இருக்கிறான் என்று தெரிந்து கொண்டு விடலாம். அவர் வருவாரா வரமாட்டாரா என்று கூட அறிந்து கொள்ளலாம்.''

''வராது போவார் என்றால் எப்படி அறிவாய்?''

''பொம்மை முகம் திருப்பிக் கொள்ளும்.''

''அப்படியா.''

''அதுமட்டுமல்ல. புருஷன் இறந்து விட்டான் என்பதையும் இந்த பொம்மை தெளிவாய்ச் சொல்லிவிடும்.''

''எப்படி?''

''இற்று விழுந்து விடும். எவ்விதம் இறந்தார் என்று கூட தெரிந்து கொள்ளலாம்.''

''எப்போது இந்த பொம்மை செயல்படத் துவங்கும்?''

''அவர் எல்லை தாண்டியதும் இந்த பொம்மையில் அவரின் மனம் ஒரு துளி இருக்கும்.''

''இது பற்றி புவனபதிக்குத் தெரியுமா?''

''சொல்லவில்லை. சொல்ல மாட்டேன். நான் கொடுத்த மேல்துண்டு ஊர் எல்லை வரை அவர் போட்டுக் கொண்டு



போனால் போதும். பொம்மைக்கும் அவருக்கும் தொடர்பு ஏற்பட்டுவிடும்.''

''ஏன் சொல்ல வேண்டாம் என்கிறாய்?''

''சில ஆண்களுக்குப் பிடிக்காது போகலாம்.''

''ஏன்?''

''வேறு பெண்களோடு சல்லாபிக்கும்போது இந்த பொம்மை நினைப்பு இடைஞ்சலாக இருக்கலாம்.'' ''வேறு பெண்களோடு இருப்பதை நாமாய் தடுக்க முடியாது. அதற்கு வேறு மந்திரம் இருக்கிறது.''

''என்ன மந்திரம்.''

''நம்மைச் சுற்றி அலையும் நம் பித்ருக்களை அழைத்து மன்றாடலாம். குறிப்பாய் நமது அம்மா, பாட்டி, அத்தை போன்ற பெண்களை வேண்டி அழைக்கலாம். உனக்கும் எனக்கும் ஒரு அக்காள் இருந்திருக்கிறாள். ஏழு வயதில் திருமணமாகி புருஷன் கிள்ளினான் என்று கங்கையில் விழுந்து செத்துப்போய்விட்டாள். அவள்தான் எனக்கு காப்பு என்று அம்மா அடிக்கடி சொல்வாள். அவளையும் கூப்பிட்டு கெஞ்சலாம்.''

''கெஞ்சினால் என்ன ஆகும்?''

''கூசாது அடி விழும்.''

''யாருக்கு?''

''யார் மீது ஏவி விடுகிறோமோ அவருக்கு. அதுமட்டு மில்லை. புருஷன் பயந்து அலறினால், காட்டு மிருகங்களிடம் மாட்டிக்கொண்டால், துஷ்டர்களிடம் சிக்கிக்கொண்டால் அங்கு கூட நம் தமக்கையை அனுப்பலாம். உதவி செய்யுமாறு நாம் உத்தரவிடலாம்.''

புவனபதி வாசலில் யாரோடோ பேசுகிற சப்தம் கேட்டது. பாதரட்சைகளைக் களைந்துவிட்டு புவனபதி வீட்டிற்குள் நுழைந்தான்.

கூடத்துக்கு நடுவே மனை போட்டிருந்தது. அதில் அமர்ந்து கொண்டு ''வா' என்று சிவக்கியானியை அழைத்தான். சிவக்கியானி அருகில் உட்கார்ந்தும் தடவிக்கொடுத்தான்.

''உன் அக்காள் பதட்டமாக இருக்கிறாள் என்று நினைக்கிறேன். இருக்க வேண்டாமென்று சொல். யாத்திரை செய்ய செய்யத்தான் அந்தணர்களுக்கு மதிப்பு. வணிகரும் க்ஷத்திரியரும் பொருள் தேடிப் போக ஞானம் தேடிப் போகும் பயணம் மிக உத்தமம்.

இருபது பேர் கொண்ட படையோடு இமயமலைச் சாரலுக்குப் போகிறேன். வாழ்க்கையில் வேதம் கற்ற ஒவ்வொரு அந்தணனும் கைலாய மலையை தரிசித்தே ஆக வேண்டும்.

அங்கிருக்கும் பனிமூடிய குகைகள்தான் பரத கண்டத்தை ஆட்சி செய்கின்றன. எல்லா இடங்களுக்கும் எல்லோரும் வந்து விடமுடியாது. நான் பல ஜென்மங்கள் செய்த தவப்பயன்.

உலகின் மிக நாகரீகமான இடங்களுக்கு பயணப்படுகிறேன். பாடலிபுத்திரம், வைசாலி, மிதிலா குஸாவதி, கபிலவஸ்து, கோவிஸானா வழியாக ஹரித்வாரம் போகிறேன்.

திரும்பும்போது இந்திரபிஸ்தம், மதுரா காம்பில்யா, கௌசாம்பி வழியாக காசிக்கு வருவேன்.

குறைந்தபட்சம் ஆறுமாதங்களாகும். நெல் முனையளவும் என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். எனக்கு எந்தக் கெடுதலும் நேராது.''

அடுத்த அறைக்குள் நவக்கியானி அழும் சத்தம் கேட்டது.

''சற்று வெளியே இரு'' - புவனபதி சிவக்கியானிக்குக் கட்டளையிட்டான்.

சிவக்கியானி வெளியேறியதும் அந்த அறைக்குள் நுழைந்தான். அழுதுகொண்டிருந்த நவக்கியானியை இறுக்க அணைத்துக்கொண்டான்.



அவள் ஆடைகளை வேகமாகக் கலைத்து அவளை பல இடங்களில் தொட்டு சந்தோஷப்படுத்தினான். வலிக்கக் கடித்தான்.

''என்னைப் புரிந்து கொள். என்னால் ஒரு இடத்தில் தங்க முடியாது. வெறுமே கிடக்க முடியாது. நான் நகர்ந்து கொண்டே இருக்கப் பிரியப்படுகிறவன். ஜலத்தின் அம்சம் கொண்டவன். நண்டின் குணத்தை உடையவன்.

இந்தக் காசியிலேயே இருந்தால் சீக்கிரம் முதுமை அடைந்து இறந்து போய்விடுவேன். இருக்கும் வரை அதிகம் கோபமுள்ளவனாய் வாழ்வேன். என் கோபத்தை உன்னால் தாங்கவே முடியாது. இதுவரை நான் உன்னிடம் காட்டியதே இல்லை. என் படைவீரர்கள் அனுபவித்திருக்கிறார்கள். அதீதமாய்ப் பொங்கும் சக்தியை செலவழிக்கவே நான் பயணப்படுகிறேன். என்னைத் தடுக்க வேண்டாம். அழுது என் பயணத்தின் ருசியை கலைக்க வேண்டாம்.

நவக்கியானி, இந்த யாத்திரை காசி தேசத்திற்கு என்னை மகாமந்திரியாக்கும். மிகப் பிரகாசமான எதிர்காலம் எனக்கு இருக்கிறது. என் பயணத்தின் வேகத்தைக் குறைத்து விடாதே. அழுவதை நிறுத்து நவக்கியானி.''

நவக்கியானி அழுவதை நிறுத்தினாள்.

கொடியிலிருந்த மேல்துண்டை உருவி அவன்மீது போட்டாள். கட்டித் தழுவி அவன் உதடுகளில் முத்தமிட்டாள்.

''ஒருவன் ஊருக்குக் கிளம்பும் போது அவனை நமஸ்கரிக்கக் கூடாது. அப்படி நமஸ்கரித்தால் அவன் ஊர் திரும்ப மாட்டான் என்பது ஐதீகம். நாம் இருவரும் சேர்ந்து தெய்வத்தை நமஸ்கரிப்போம்.''

அவர்கள் இருவரும் சாலிக்கிராம ரூபமாக உள்ள விஷ்ணுவையும் மரகதத்தால் செய்யப்பட்ட சிவலிங்கத்தையும் விழுந்து வணங்கினார்கள்.

அந்த கோதுமைமாவு பொம்மை அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

மறுபடியும் அவன் நவக்கியானியை அணைத்துக் கொண்டான். வெளியே வந்தான்.

'மிதிலைக்குப்போய் அங்கு திரட்சியான தாசிப் பெண்களை வாடகைக்கு வாங்கி ஐந்தாறு நாட்கள் அனுபவிக்க வேண்டும். அப்போது தான் நவக்கியானியைத் தொட்ட சூடு குறையும்.

'அடயேப்பா... இதற்குள் நுழைந்து இரண்டு வருடங்களாகி விட்டன. இனி பார் புகழும் கைலாயம். கைலாயத்திலிருந்து திராவிடம், வெறும் காசிக்கு மட்டும் போய் வரவில்லை. சிவன் வீற்றிருக்கும் பனிமலை தரிசனமே பார்த்து வந்திருக்கிறேன். இது கைலாயமலையின் கல்.' காஞ்சிபுரத்தில் சொல்லிச் சொல்லி ஜனங்களுக்குக் காட்டலாம்.

'புவனபதீஸ்வரர் என்கிற பெயர் வைக்கலாம். மிகப் பெரிய கோவில் கட்டலாம். நமது பயணத்தை நூலாக்கலாம்.'

அவன் எல்லோரிடமும் விடை பெற்றான். சிவக்கியானியின் தோளில் கைபோட்டு தனியே அழைத்துப் போனான்.

''உங்களுக்காக சுவரில் பல இடங்களில் காசு வைத்திருக்கிறேன். அந்தக் காசுகள் இருக்குமிடம் உனக்கும் உன் தமக்கைக்கும் தெரியும். மெல்ல மெல்ல காசு எடுத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் வேகமாய் செலவு செய்தாலும் முப்பது வருடங்களுக்கு காசு இருக்கும். நான் விரைவில் வருவேன். வருடமானாலும் கவலைப்பட வேண்டாம்''

''ஆறுமாதம் என்றீர்களே.''

''கைலாயத்தின் அழகில் மனம் சொக்கி அங்கேயே சிலகாலம் தங்கிவிடலாம்.''

''நீங்கள் பேசுவது கலவரமாக இருக்கிறதே''



''நீ பெண் பிள்ளையோடு பெண் பிள்ளையாய் வளர்ந்து விட்டாய். அதனால்தான் கலவரமாக இருக்கிறது. பயணம் முடிவில்லாதது... அது பற்றி உனக்குத் தெரியவில்லை.''

சற்றுக் கடுமையாக சிவக்கியானியிடம் சொல்லிவிட்டு புவனபதி பிரிந்தான்.

சிவக்கியானியின் மனம் வேதனைப்பட்டது.

அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் புவனபதியைப் பின் தொடர்ந்தான்.

புவனபதியை தொடர்ந்த கூட்டம், ''ஜெய விஜயீ பவ'' என்று கூச்சல் இட்டது.

அவன் கூச்சலிட்டவர்களுக்கெல்லாம் காசு கொடுத்தான். கும்பிட்டவர்களுக்கெல்லாம் காசு கொடுத்தான்.

காசி தாண்டியதும் 'அப்பாடா' என்று ஒரு நிம்மதி அவனுள் படர்ந்தது.

நவக்கியானி வீட்டில், கோதுமை பொம்மை முகம் திருப்பிக்கொண்டது.

## 40

''அக்கா'' சிவக்கியானி அலறினான். பொம்மையைச் சுட்டிக் காட்டினான்.

நவக்கியானி பார்த்துவிட்டு திகைத்தாள்.

''நீ பொம்மையை ஏதாவது தொட்டாயா..'' என்று கூச்சலிட்டாள்.

''இல்லையக்கா'' சிவக்கியானி கத்தினான்.

நவக்கியானி உட்கார்ந்து கோதுமை பொம்மையின் முகத்தை நேராக்கினாள்.

எழுந்து நின்றாள்.

கோதுமை பொம்மை மெல்ல மறுபடி முகம் திருப்பிக் கொண்டது.

''என்னக்கா இது, ''சிவக்கியானி, அக்காவின் புருஷனைப் பற்றி கவலைப்பட்டான். அவன் உயிருக்கு ஏதேனும் கேடோ என்று கவலைப்பட்டான்.

''இது ஒழுக்கக்கேடு தம்பி. முகம் தெற்கு பார்த்து இருக்கிறது. எனவே வேறு எங்கோ புத்தி திசை திரும்பியிருக்கிறது. 'வடக்கே போகிறேன்' என்று என்னிடம் சொல்லிவிட்டு தெற்கு பக்கம் திரும்பியிருக்கிறார்.''

''இல்லையக்கா. வடக்கேதான் பயணப்படுகிறார். கூடப் போகின்ற கூலியாட்கள் எல்லாம் மிதிலை தேசத்து சப்பை மூக்கு ஆட்கள். அவர்கள் பேசிக் கொண்டதையும் நான் அருகே இருந்து கேட்டேன். ஹரித்துவாரம் போவதைப் பற்றித் தான் அவர்கள் கதைகதையாய் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவரோடு ஒரு தமிழ் வணிகரும் போகிறார் என்று அவர்கள் சொல்லித்தான் தெரிந்துகொண்டேன்.''

''அப்படியா. தமிழ் வணிகரா. தமிழ் வணிகர் பற்றி நமக்குச் சொல்லவேயில்லையே.''

''பதினைந்து நாட்கள் அவருக்கு சிகிச்சை அளித்ததே புவனபதி தானாம். கையில் நரிக் கடியாம்.''

''ஏன் இந்த விஷயத்தை நம்மிடம் மறைக்க வேண்டும்.''

''எனக்கும் ஆச்சரியமாக இருந்தது அக்கா.''

நவக்கியானியின் வியப்புக்கு சிவக்கியானி எதிரொலித்தான்.

நவக்கியானி கண் மூடி சிறிது நேரம் யோசித்தாள்.

''சிவா, வா நாம் அந்த வணிகர் தங்கியிருந்த இடத்தைப் பார்க்கலாம்.''



அவர்கள் இரண்டு பேரும் ஓட்டமும் நடையுமாய் வணிகர் தங்கியிருந்த மருத்துவ விடுதிக்குப் போனார்கள்.

''அவர்கள் வெகு நிச்சயமாய் வடக்கேதான் போகிறார்கள். அதில் எந்த சந்தேகமும் இல்லை. கூலிகள் அனைவரும் காசி தேசத்தவர்கள். காசிக்குத்தான் வந்தாகவேண்டும். அந்தத் தமிழ் வணிகன் திராவிட தேசம் போவார் என்று நினைக்கிறேன். அப்படிப் போகிற அவருக்கு வண்டிகளும் மாடுகளும் குதிரைகளும் கொடுத்து உன் கணவர் உதவியிருக்கிறார்.

எதற்கம்மா உன் கணவர் மீது சந்தேகம். இந்தக் காசி தேசத்தில் கிடைக்காத மதிப்பு உன் கணவருக்கு வேறு எந்த தேசத்தில் கிடைத்து விடும். நீ கவலைப்படாமல் வீடு போய்ச் சேர்...

நவக்கியானி, அந்த வணிகர் ஒரு ஓலைச் சுவடிக்கட்டை விட்டுப் போயிருக்கிறார். அது தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. அந்த வணிகர் மறுபடி காசிக்கு வந்தவுடன் கொடுத்துவிடு.''

மருத்துவ விடுதியின் தாதி, ஒரு ஓலைச் சுவடிக்கட்டை நீட்டினாள்.

இரண்டு மெல்லிய பலகைக்கு நடுவே ஐம்பது அறுபது ஓலைகள் கொண்டே ஒரு சுவடி கைமாறியது.

நவக்கியானி வாங்கி வைத்துக் கொண்டாள். அவளுக்கு தமிழ் படிக்கத் தெரியாது. பேசத்தான் தெரியும்.

மனம் லேசாய் சமாதானமாகி வீடு வந்தார்கள்.

பொம்மை தெற்கு பார்த்து முகம் திரும்பியிருந்தது.

இரண்டு நாள் அமைதியின்றி அலைந்தாள். வீட்டுக்கு வந்த ஒரு யாத்ரீகரிடம் தமிழ் படிக்கத் தெரியுமா என்று கேட்டு அவரிடம் ஓலையைக் கொடுத்தாள்.

அந்த யாத்ரீகருக்கு கண் பார்வை கொஞ்சம் மங்கல். தட்டுத் தடுமாறி அவர் படிக்கத் துவங்கினார்.

அது ஒரு நாட் குறிப்பு.

தன் வடதேசத்து யாத்திரை பற்றி அந்த வணிகன் குறிப்புகள் எழுதி வைத்திருக்கிறான். வங்கம் கலிங்கம் பற்றியெல்லாம் விரிவாக எழுதியிருந்தான்.

சட்டென்று ஒரு ஓலையை இழுத்து ''இதைப் படியுங்கள்'' என்று பொறுமையில்லாமல் நவக்கியானி காட்டினாள்.

'புவனபதி தன் இல்லத்துக்கு ஏன் என்னை அழைத்துப் போகவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. புவனபதிக்கு திருமணமாகி அழகிய இளம்பெண் மனைவியாக இருக்கிறாளாம்.

ஆனால் புவனபதி ஏன் திராவிட தேசத்துக்கு சரக்குகள் போவது பற்றியே பேசுகிறான் என்பது புரியவில்லை.

புவனபதி வீட்டைவிட்டுப் போகிறாரா. அல்லது வீட்டை அழைத்துக்கொண்டு திராவிட தேசம் போகிறாரா என்பது புரியவில்லை.

எதுவாயினும் காசியெல்லாம் தாண்டி கைலாயம் வரை நான் போகப் போகிறேன் என்பது மிகப் பெரிய பாக்கியம்.

புவனபதியிடம் நான் நன்றியோடு இருக்க வேண்டும்.

அக்காவும் தம்பியும் குழம்பினார்கள்.

''இவன் உளறலை முக்கியமாக எடுத்துக் கொள்ளாதே அக்கா. புவனபதி யாரையும் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வரமாட்டார் என்று உனக்குத் தெரியாதா. இந்த வணிகன் வீட்டுக்கு வர ஆசைப்பட்டிருக்கிறான். புவனபதி மறுத்திருப்பார். மேலும் நரியின் கடி, மிகுந்த விஷமுடையது. வெறி நாய்க் கடி போன்ற தன்மை கொண்டது. அவனை வீட்டுக்குள் எப்படி அழைத்து வரமுடியும்? மருத்துவ விடுதியிலேயே அவனைத் தனியாக அல்லவா கிடத்தியிருந்தார்கள். நீ வீணாகக் கவலைப் படாதே.''



30187
466590

''புவனபதி என்பது யார்?'' அந்த யாத்திரிகன் கேட்டார்.

''என்னுடைய புருஷன்.''

''எந்த ஊர் அவருக்கு.''

''காசிதான்.''

''திராவிட தேசம் என்று ஓலையில் எழுதியிருக்கிறதே.''

''ஆமாம். அவர் அங்கிருந்துதான் வந்தார்.''

''திராவிட தேசத்தில் எங்கே?''

''காஞ்சி மாநகரம்''. ''அதுசரி; ஏன் உங்களுக்கு யாரேனும் தெரியுமா?''

''குடந்தையில் ஒரு அந்தணச் சிறுவன் இருந்தான். புவனபதி என்று பெயர். செல்வம் கொழிக்கும் இடத்தில் பெண் எடுத்தான். கெட்டிக்கார மைத்துனர்கள் அவனுக்கு நிறைய சொல்லிக் கொடுத்தார்கள்.''

''என்ன சொல்லிக் கொடுத்தார்கள்?''

''போர்ப் பயிற்சி சொல்லிக் கொடுத்தார்கள். குடந்தை நகரமே அவர்கள் பயிற்சியை வேடிக்கை பார்க்கும்.''

''என்னவித பயிற்சிகள்?''

''ஓநாய்களையும், குரங்குகளையும் காடுகளில் எப்படி எதிர்கொள்வது என்ற பயிற்சிகள்.

ஆனால் புவனபதி என்று இப்போது எல்லோரும் பெயர் வைத்துக் கொள்கிறார்கள். க்ஷத்திரியர்கள், வணிகர்கள், அந்தணர்கள் என்று எல்லோரும் பெயர் வைத்துக் கொள்கிறார்கள். நான் சொல்லுகிற புவனபதிக்குக் குடந்தையில் திருமணமாயிற்று. நான் பிறகு மேற்கே சேர தேசம் போய்விட்டேன். அந்த புவனபதி என்ன ஆனார் என்று தெரியவில்லை.''

''அந்த புவனபதி பார்ப்பதற்கு எப்படியிருப்பார்?''

''ஒல்லியாய், உயரமாய் கட்டுமஸ்தாய்..''

அந்த யாத்ரீகர் விளக்கினார்.

''அக்கா நீ அனாவசியமாய் சந்தேகப் படுகிறாய். ஒரு கோதுமை பொம்மையை வைத்துக் கொண்டு தேவையில்லாமல் உன் அமைதியைக் கெடுத்துக்கொள்கிறாய்.

அக்கா, இந்தக் கூலிகளில் மூன்றுபேர் கிழவர்கள். அவர்கள் ஹரித்துவாரம் தாண்டி ரிஷிகேஷம் மலையேற மாட்டார்கள். அதுவரை சேகரித்த பொருட்களை அரசரிடம் சேர்ப்பதற்காக முன்கூட்டியே வந்து விடுவார்கள்.

அவர்கள் வந்தவுடன் புவனபதியைப் பற்றி விசாரிப்போம். அதுவரை அமைதியாய் இரு.''

புவனபதி ரிஷிகேஷம் தாண்டினான்.

மூன்று குதிரைகளுடன் மலையேறினான். பனிபடர்ந்த கைலாயத்தைப் பார்த்து கைகூப்பி அழுதான். ரிக்வேதம் சொன்னான். அமர்ந்து சாமகானம் பாடினான்.

நல்ல நிலவொளியிலும் வெய்யிலிலும் அவன் மட்டும் மூன்று குதிரைகளோடு தனியே இருந்து கண் குளிர கைலாயம் பார்த்துவிட்டு திரும்ப மனமின்றித் திரும்பினான்

'போதும். வாழ்க்கையில் என்ன அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டேனோ அது அடைந்தாகிவிட்டது. எதற்காக புவனபதி என்பவன் பிறந்தானோ அது நிறைவேறிவிட்டது.

இனி காசியில் எந்த வேலையுமில்லை. காசிக்குள் நுழையாமல் காசியை சுற்றிக் கொண்டு மிதிலை வழியாக வங்கம் அடைந்து வங்கத்தின் வழியாக கலிங்கம் போய் தெற்கே நகர வேண்டியதுதான்.

வணிகரை முன்னே அனுப்பிவிட்டு கலிங்கம் தாண்டியவுடன் அவனோடு சேர்ந்து கொள்ள வேண்டும்.



இனி காஞ்சி மாநகரத்துக்குள் போனால்தான் மனம் ஆறும். நான் காசி போய் வந்தவனல்ல.

கண் குளிர கைலாயம் தரிசித்தவன். அரசனுக்கு மேலானவன். எல்லா அந்தணர்களுக்கும் தலைவன். சந்நியாசிகளும் மடாதிபதிகளும் என்னை எழுந்து நின்று நமஸ்கரிக்க வேண்டும். கைலாயத்தை விழுந்து நமஸ்கரித்தவன் இனி யாரையும் விழுந்து நமஸ்கரிக்க வேண்டிய அவசியமில்லை. யாருக்கும் தலை வணங்க வேண்டிய அவசியமில்லை.

இது மிகப் பெரிய பேறு இதற்குக் காரணம் மைத்துனர்கள், மனைவி மாமனார் வகையறா. காஞ்சியிலிருந்து குடந்தைக்குப் போய் அவர்களை கௌரவப்படுத்த வேண்டும். அவர்களைப் பரிசளித்து சந்தோஷப்படுத்த வேண்டும்.

காஞ்சி மாநகரில் இறங்கியதும் ஊர் பெருமகிழ்ச்சியில் திண்டாடும். திராவிட தேசமெங்கும் என்னுடைய புகழ் பரவும். நகருக்கு வருபவர்கள் என்னை தரிசிக்காமல் போகமாட்டார்கள்.

ஊருக்குப் போனதும் கைலாய யாத்திரை பற்றி ஆயிரம் ஸ்லோகம் கொண்ட பயணக்குறிப்பு எழுத வேண்டும். பத்து ஸ்லோகத்துக்கு ஒருமுறை இது புவனபதியின் குறிப்பு என்று எழுதவேண்டும்.

காசியை எப்படித் தாண்டுவது? இரவிலா? பகலிலா'?

புவனபதி யோசித்தான்.

## 41

''இரவும் வேண்டாம், பகலும் வேண்டாம், விடியல் நேரம் காசி மாநகரத்தை ஆறு குதிரைகளோடு தாண்டிவிட

வேண்டும். அதற்கு வெகு நேரம் முன்பே பார வண்டிகள் காசியைத் தொடாது போய்விட வேண்டும்.

அந்த பார வண்டிகளில் மூன்று பானை குங்குமப்பூ, பத்து கூடை உத்திராட்சம், அதில் ஒரு கூடை ஒற்றைமுகம், பல்வேறு விதமான புாணலிங்கங்கள், குடுவை குடுவையாய் ரஸமணி, ஸ்படிகமணி, பித்தளைச் சாமான்கள், போர்க்கருவிகள் எருமைத் தோலில் செய்த சவுக்குகள் என்று பலதும் போகும்.

ஒரு காசுக்கு வாங்கிய பொருளை திராவிட தேசத்தில் நூறு காசுக்கு விற்கலாம். இது வணிகத்திற்கு வணிகம் தான் காசிக்கும், கயிலைக்கும் போய் வந்ததற்கான உத்தரவாதம்.

இது தவிர மான்தோல், புலித்தோல், எருமைத்தோல், அம்புறாத்துணி, இரும்பு வில், மலை ஜாதி மக்களின் விஷ அம்பு, தேவதாரு மரக்கன்றுகள், பாரிஜாதச் செடிகள், பல தாமிரக் குடங்களில் ஈயம் அடைத்த கங்கை நீர் என்று ஏழு பார வண்டிகள், நூறு ஆட்கள் பாதுகாக்க நான்கு நாட்கள் முன்பு நகர்ந்து போகும்.

கடவுளே... அந்த பார வண்டிகள் போய் காஞ்சியின் எல்லையில் நிற்க, நாலு நாள் தொலைவை அரைநாள் தொலைவாக அங்கு போவதற்குள் சுருக்கிக் கொள்ள காஞ்சி மாநகரம் குடுமி அவிழ, புடவை நெகிழ வரவேற்க ஓடிவரும்.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தாள் பணிவார்கள். தொண்டை மண்டலாதிபதிகள் குடைபிடிப்பார்கள். விசிறுவார்கள். காஞ்சிபுரத்து அந்தணர் கூட்டம், மேல் துண்டைத் தரையில் விரித்து அதில் கால் வைத்துப் போகும்படி கெஞ்சும்.

புவனபதி கால் வைத்த துணியை முகத்தில் துடைத்துக் கொள்ளும். அதற்குப் பிறகு மரண பரியந்தமும் வாழ்க்கை சந்தோஷம்தான். காசி பயணம் பற்றி பேசிப் பேசி புகழின் உச்சிக்கே போய்விடலாம். எல்லா மரபு சந்தேகங்களுக்கும், சாஸ்திர விளக்கங்களுக்கும் புவனபதியின் முடிவே பிரதானம்.



எல்லாவற்றையும்விட வழியனுப்பி, இத்தனை நாள் காத்திருந்த மனைவி, காசிக்குப் போக தயார் செய்த மைத்துனர்கள், தன் எதிரே கைகட்டி நிற்கும் தந்தை, கதவிடுக்கு வழியே பார்க்கும் தாய். ஆஹா, என் மனோசக்தி என்னை எவ்வளவு உயரம் அழைத்துப் போயிருக்கிறது. இதற்கு எத்தனை வுலிபட்டாயிற்று. எத்தனை இரவுகள் தூக்கமில்லாமல் கழிந்தன...

என்னைப்போல மனோபலமும், உடல் பலமும் கொண்ட அந்தணர் எவரேனும் உண்டா? கடவுள் இருக்கலாம். இருக்கக் கூடும். அதுபற்றி தெரியவில்லை. ஆனால் பிராணாயாமும், மந்திரஜபமும் ஆழ்நிலைத் தியானமும் என் இக வாழ்க்கையை உறுதியாக வைக்கின்றன. உன்னதமான இடத்திற்கு அழைத்துச் செல்கின்றன. மந்திரஜபம் கடவுளைக் காட்டிக் கொடுக்குமா என்று தெரியவில்லை. வாழ்க்கையை வளப்படுத்தும் என்பது நிச்சயம்.

இதைத்தான் திராவிடதேசத்து அந்தண இளைஞர்களுக்கு என் செய்தியாய்ச் சொல்ல வேண்டும். கடவுளைத் தேடும் முன் காசுதேடு; பெண் போகத்தை அனுபவித்து புரிந்து கொள்; நல்ல உணவை விரும்பி உண்.

அதே சமயம், சரக்கென்று ஒரே வீச்சில் எல்லாவற்றையும் அறுத்து விட்டு தனித்துப் பட்டினி இருக்கப்பழகு. கடவுளே, அன்று அனுபவித்தோமே, இன்று இல்லையே என்று ஏங்காதே. ஏங்குபவன் அந்தணன் இல்லை. பொன்னும், பெண்ணும், மண்ணும் சம்பாதிக்க முடியாதவன் அல்லவா ஏங்க வேண்டும். நம்மால் அவைகளை எப்போது வேண்டுமானாலும் கொள்ள முடியும். வேண்டுமென்றே தள்ளி வைத்திருக்கிறோம். இந்த குணம்தான் வீரம். இந்த வீரம்தான் அந்தணம். இதைப் பாடமாகவே எழுத வேண்டும். இதைக் கதையாக, காவியமாக, சாணக்கியன் எழுதியது போல் ஒரு நீதி நூலாக செய்து விட

வேண்டும். நாம் வாழும் காலத்திலேயே பலநூறு படிகள் எடுத்துவிட வேண்டும்.

அவன் காசி நோக்கி வந்தபோது, கடைசிபார வண்டி காசியைத் தாண்டியது. கங்கையில் அந்த பார வண்டி படகேறி, மண் கரை மீது படேரென்று அச்சு முறிந்து குடைசாய்ந்தது. தோலில் மூடப்பட்டிருந்த வாளும், வில்லும் அம்பும் தரை பரவின.

அவ்வழியே சென்ற மக்கள் திகைத்தார்கள். வீரர்களுக்கு செய்தி சொன்னார்கள். அதிகாரிகள் வந்து பார்த்தார்கள். வண்டிக்காரனை மடக்கினார்கள். வண்டிக்காரன் வியாபாரியைக் கை காட்டினான். அதிகாரிகள் குதிரையிலேறி முன்னே போன எல்லா பார வண்டிகளையும் மடக்கி வியாபாரியை விசாரித்தார்கள்.

மறுபடி நிரஞ்சனர்கள் தலை தூக்குகிறார்களா. ஏதும் படையெடுப்பு உண்டா. காசிக்கோ, அல்லது அண்டை தேசத்திற்கோ பாதிப்பு ஏற்படுமா என்று துருவினார்கள்.

வியாபாரி, புவனபதியின் பெயர் சொன்னான்.

உடனே செய்தி அரசருக்குத் தெரிவிக்கப்பட்டது.

முதல் மந்திரி பின்னால் வரும் புவனபதியை மடக்கி நிறுத்த சிறு படையோடு கங்கையின் எதிர்க்கரைக்குப் போனார். இந்தத் தகவல் ஊர் முழுவதும் பரவியது. நவக்கியானிக்கும், சிவக்கியானிக்கும் அரசாங்க ஓலை மூலம் செய்தி போயிற்று. புவனபதியின் வரவைத் தெரிவிக்க வேண்டும் என்று எழுதியிருந்தது.

நவக்கியானியும், சிவக்கியானியும் படகு ஏறி கங்கையின் எதிர்க் கரைக்குப் போனார்கள். அங்கு படை நடமாட்டம் பார்த்துவிட்டு இன்னும் வடக்கு நோக்கி நகர்ந்தார்கள்.

'ஊருக்கு வர வேண்டிய புவனபதி பாராவண்டிகளை தெற்கு நோக்கி அனுப்புவானேன்? தர்ப்பைப் புற்களுக்கு நடுவே ஆயுதங்கள் எதற்கு.



அந்த பார வண்டிகள் எதற்காக திராவிட தேசம் நோக்கிப் போக வேண்டும்? காசிக்கு உள்ளே வராமல் சுற்றிப் போகும் காரணமென்ன? புவனபதியின் உள்நோக்கம் என்ன...?

கோதுமை பொம்மை தெற்கு நோக்கி முகம் திருப்பிக் கொண்டதற்கு இதுதான் அர்த்தமா? மனம் திரும்பி விட்டது என்று பொருளா? ஏதேனும் சதித்திட்டமா? மாற்று அரசர்களுடன் கூடி காசியைத் தாக்கும் திட்டமா?'

அக்காவும் தம்பியும் புலம்பியபடியே போனார்கள்.

காசிக்கு ஒருநாள் தொலைவு முன்பு புவனபதியைக் கண்டார்கள்.

புவனபதி திகைத்தான். அவன் பார்வையில் கோபம் இருந்தது. மறைத்துக் கொண்டான்.

''என்ன ஆயிற்று உனக்கு நவக்கியானி? ஏன் இங்கே நிற்கிறாய்...?'' வியந்தவன் போல் நடித்தான்.

சிவக்கியானியும், நவக்கியானியும் விஷயம் சொன்னார்கள். புவனபதியை மடக்க சிறுபடை காத்திருப்பதைச் சொன்னார்கள்.

''என் கடிதம் உனக்குக் கிடைக்கவில்லையா நவக்கியானி?''

''என்ன கடிதம்?''

''ஒரு ஆள்மூலம் நான் ரகசிய ஓலை அனுப்பினேனே. பார வண்டிகள் வருவதற்கு மூன்று நாள் முன்பு உன்னை ஊர்விட்டு நகர்ந்து தென் கரையில் காத்திருக்கச் சொன்னேனே?''

''அனுப்பியிருந்தால் வந்திருக்கும்...'' நவக்கியானி அலுத்துக் கொண்டாள்.

''நவக்கியானி, அவ்விதம் பேசாதே. ஏதோ தவறு நடந்திருக்கிறது. ஆனாலும் நல்ல காலம், நீங்கள் இருவரும் என்னை முதல் மந்திரிக்கு முன்பே பார்த்து விட்டீர்கள்.

நான் காசிக்குப் போகப் போவதில்லை. உங்களையும் அழைத்துக் கொண்டு திராவிடதேசம் போகப் போகிறேன். காசிக்குப் போனால் என்னை திராவிட தேசம் அனுப்ப மன்னர் அனுமதிக்க மாட்டார் என்கிற பயம் எனக்கு இருந்தது. எனவேதான் ஒரு ஓலை உங்களுக்கு முன்னதாக அனுப்பி 'எந்தப் பொருளும் எடுத்துக் கொள்ளாமல் நீண்ட பயணத்துக்குத் தயாராக இருங்கள்' என்று கடிதம் எழுதினேன். ஏன் உங்களிடம் சேரவில்லை என்று புரியவில்லை.

நீ என் மனைவி. உன்னை விட்டு எப்படி திராவிடதேசம் போக முடியும்? எனக்குத் திருமணமாகிவிட்டது என்று ஏற்கனவே என் தந்தைக்கு ஓலை அனுப்பிவிட்டேனே. நான் மட்டும் தனியே போனால் உள்ளே விடுவார்களா?

ஆயினும் என்ன... வண்டி அச்சு முறிந்ததால் இப்போது காரியம் கெட்டு விட்டது.

வாருங்கள்... காசிக்குப் போவோம். முதலமைச்சரையும், மன்னரையும் சந்திப்போம். திராவிட தேசம் போக அனுமதி கேட்போம்''

அவன் நிதானமாகக் கிளம்பினான். வெகு தீவிரமாக யோசித்தான்.

''நாற்பது விற்களும், நானூறு அம்புகளும் ஒரு படையாகுமா? காசியை அழிக்க நூறு வாட்கள் போதுமா?

ஆமாம். இவையெல்லாம் திராவிட தேசத்திற்குத்தான். அங்கே உள்ள மன்னர்களுக்குப் பரிசளிக்கத்தான். ஆனால் காசிக்கு வராமல் உங்களைப் பார்க்காமல் போவதாக இல்லை. என் வருகையை அமைச்சருக்குத் தெரிவி என்று செய்தி அனுப்பினேன். ஏன் போய்ச்சேரவில்லை என்பது தெரியவில்லை.

உங்களிடம் எனக்கு என்ன பயம்? அந்த வியாபாரி தமிழன். அவனுக்கு பாதை தெரியவில்லை. கங்கையைக் கடக்க



படாதபாடு பட்டிருக்கிறான். உள்ளூர் ஆட்களும் உதவி செய்யவில்லை. படகோட்டிகள் அவனிடம் பெரும்பணம் பறித்திருக்கிறார்கள். சில நாட்கள் இங்கு தங்கி உங்களிடம் சன்மானம் பெற்று திராவிடதேசம் போவதே என் எண்ணம்.

அப்படி காசியைத் தாக்க வேண்டிய எண்ணம் இருந்தால், நான் எதற்கு வடக்கே போக வேண்டும். எதற்கு கைலாய யாத்திரை.

என்னிடம் இருப்பது ஆறு போர் வீரர்கள். நூறு பணியாட்கள். இவர்களை வைத்துக்கொண்டு ஒரு கிராமத்தைக்கூட பிடிக்கமுடியாது.

காசியின் மோசமான நிலைமைக்குக் காரணமே எருமைத் தலை அதிகாரிகள். எல்லாவற்றுக்கும் மிரளுகின்ற ஒரு முதல் மந்திரி.''

நடு சபையில் புவனபதி அலுத்துக் கொண்டான்.

மன்னருக்கு முழங்கை உயர ஸ்படிக லிங்கம் கொடுத்தான். கவரிமான் சாமரம் அளித்தான். குங்குமப்பூ பானை வழங்கினான்.

மன்னர் மகிழ்ந்தார். திராவிட தேசம் போக அனுமதி கொடுத்தார். சிறிது தேரும் பொற்காசுகளும், வைர மோதிரங்களும், மகரக் கண்டிகையும் அவனுக்கு வழங்கி வாழ்த்தினார்.

அவன் காசியிலிருந்து பலகாதம் போகும்வரை ஒரு சிறுபடையை அனுப்பி வைத்தார்.

புவனபதி வேறு வழியின்றி, ஒரு நல்ல நாளில் குதிரையேறி சிவக்கியானியும், நவக்கியானியும் தேரில் பின் தொடர கிழக்குக் கடற்கரை வழியே கலிங்க தேசத்தைத் தாண்டினான்.

கடல் பார்த்து நவக்கியானியும், சிவக்கியானியும் அதிர்ந்து போனார்கள். ''ஓ'' என்று ஆனந்தக் கூச்சலிட்டார்கள்.

'இவர்ளை எப்படி ஒழிப்பது?' என்று புவனபதி யோசிக்கத் துவங்கினான்.

## 42

இன்னும் நாற்பது நாள் பயணத்தில் திருவொற்றியூரைத் தொட்டுவிட முடியும். திருவொற்றியூரிலிருந்து இரண்டு நாள் பயணத்தில் காஞ்சிபுரம் போய்விடலாம். கடும் கோடைக்கு முன்பு கலிங்க தேசத்தைத் தாண்டி விடலாம். ஆனால் எந்த வழியில் போனால் இவர்கள் இருவரையும் ஒழிப்பது சுலபம் என்று புரியவில்லை. இந்த வழியில் பயணம் செய்பவர்கள் அதிகமாகி விட்டார்கள். ஒரு நாழிகைக்கு இரண்டு பேராவது எதிர்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 'காசியிலிருந்தா வருகிறீர்கள்' என்று கும்பிடுகிறார்கள். 'இரண்டு நாள் தங்கிவிட்டுப் போங்கள்' என்று உபசரிக்கிறார்கள்.

'இத்தனை இளம் வயதில் இத்தனை இளம் மனைவியுடன் காசிக்குப் போய் வந்தாயே' என்று கிழவர்களெல்லாம் காலில் விழுகிறார்கள். இருவரையும் அருகருகே உட்கார வைத்து மாலை மாற்றிக் கொள்ளச் சொல்லி சந்தனம் குங்குமம் அப்பி 'சீதாராமா' என்று கைகூப்புகிறார்கள்... 'தேவுடா தேவுடா' என்று விம்முகிறார்கள்.

ஒரிஸா தேசத்து ஒட்டர்கள் அதிகம் பேசமாட்டார்கள். ஆனால் கலிங்கர்கள் அப்படியல்ல. தானே வந்து சிநேகமாவார்கள்.

புவனேஸ்வரம் தாண்டியாயிற்று. இதற்குப் பிறகு அச்சுதபுரம். பிறகு சிம்மாச்சலம். அதற்குப் பிறகு பித்தாபுரி. எல்லாமும் கடற்கரை பட்டிணம். பிறகு தக்கோலத்தின் வழியாக காஞ்சிபுரம்.

இவர்கள் இருப்பதால் வேகமாகப் போக முடியவில்லை. இல்லையெனில் குதிரைகள் மாற்றி மாற்றி பத்து நாள்



பயணத்தைச் சுருக்கி விடலாம். இன்னும் தெற்கத்திக் காற்றுதான் வீசுகிறது. காற்று வடக்கேயிருந்து வீசினால் படகேறி விடலாம். காற்று திசைமாற இன்னும் பதினைந்து நாளாகும். கடற் பயணம் இன்னும் விரைவாகவும், சிரமமில்லாதும் இருக்கும்.

முதல் இரண்டு நாள் தலைச்சுற்றலைப் பொறுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். கடற்பயணத்தின் போது இவர்கள் யாரையேனும் ஒருவரை உருட்டிக் கொன்று விடலாம். அல்லது பாய்மரம் இறக்கும்போது தவறான இடத்தில் நிற்கச் சொல்லி, பாய் மரக்கட்டையைத் தலையில் போடலாம்.

மரக்கல மீகாமனுக்கு காசு கொடுத்து மறைத்து விடலாம். ஆனால் யுத்த களத்தில் வீரர்களைக் கொல்வதிலுள்ள வேகம் இவர்களைக் கொல்வதில் தனக்கு வரவில்லை. ஏதோ ஒரு பரிதவிப்பு, பச்சாதாபம் உள்ளே நிற்கிறது.

இப்படியெல்லாம் செய்யாமல் நேரடியாய் விஷயத்தைத் தொட முயற்சி செய்யலாம். சிவக்கியானியை அழைத்து 'என் மனைவி உயிரோடுதான் இருக்கிறாள். வெறுமே பொய் சொன்னேன். நீங்கள் காஞ்சிபுரம் வர வேண்டாம். திருவான்மியூரில் இருங்கள். அடிக்கடி வந்து போகிறேன்' என்று விளக்கலாம். 'இப்படி இருப்பதுதான் உனக்கும் நல்லது. நவக்கியானிக்கும் நல்லது' என்று எடுத்துச் சொல்லலாம். ஆனால் இவர்கள் கேட்பார்களா. கேட்க மாட்டார்கள். குதிப்பார்கள். குறை சொல்வார்கள்.

கலிங்க தேசம் செழிப்பாக இருந்தது. நாகவல்லி, வேகவதி, ஸ்வர்ணமுகி என்கிற சிற்றாறுகள் தாண்டி ஆறு நாட்கள் குதிரையில் பயணம் செய்து இதற்கு அடுத்த நதி கிருஷ்ணா. கிருஷ்ணா நதி தாண்டினால் பெண்ணாறு. பெண்ணாறு தாண்டினால் பாலாறு.

மறுபடி மனம் துள்ளிக் குதித்தது. கோதாவரி தீரம் அடைந்தபோது காற்று திசை மாறியது.

மகேந்திர மலையின் முடிவிலிருந்த அந்த நதி பொங்கி பிரவாகமாகிப் போயிற்று. ஒரு சிறிய படகில் ஏறி மறுகரைக்குப் போக படகிலுள்ள அத்தனை பேரும் உழைக்க வேண்டி யிருந்தது.

சிவக்கியானி கங்கையின் புத்திரன்.

நவக்கியானி கவனமாய் சுக்கான் பிடிக்க, வெறிபிடித்தது போல் எதிர் துடுப்பு போட்டு கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தான்.

புவனபதி பாராட்டியபோது வெட்கத்தோடு மறுத்தான். தான் செய்யவில்லை என்றும், தன் தந்தை சத்தியஞானியை மனமார வேண்டிக் கொண்டதாகவும் அவர்தான் சூட்சும ரூபத்தில் வந்து கரை சேர்த்ததாகவும் கூறினான்.

வயல்களுக்கும் கரும்புத் தோட்டங்களுக்கும் நடுவே பயணம் செய்து கிருஷ்ணா தீரத்தை அடைந்தார்கள். அங்கு இரண்டு நாட்கள் தோல் கூடாரம் அடித்து தங்கினார்கள்.

''சிவக்கியானி, உன்னிடம் ஒன்று பேச வேண்டும்.'' புவனபதி தன்னுடைய நிலைமையை விளக்கலாம் என்று முயற்சி செய்தான்.

''எனக்குப் புரிகிறது. நீங்கள் நவக்கியானியுடன் தனியே இருக்க விரும்புகிறீர்கள். நான் நீந்தி மறுகரைக்குப் போய் விடுகிறேன். நீங்கள் படகில் வாருங்கள்.''

பதிலுக்குக் காத்திராமல் நீரில் குதித்தான்.

அன்று இரவு நவக்கியானி அருகே படுத்துக் கொண்டாள். புவனபதியின் பக்கம் மெல்ல திரும்பி உணர்வேற்றினாள்.

இரண்டு நாட்கள் கழித்து, சிவக்கியானி மறுபடி நீந்தி எதிர்கரைக்கு வந்தான்.

''இந்த இரண்டு நாட்களில் தண்ணீர் வரத்து அதிகமாகி விட்டது. படகுக்காரனை நம்பி நீங்கள் வரவேண்டுமே என்று



கவலையாகி விட்டது. அதனால் படகு ஓட்ட இந்தக்கரை வந்து விட்டேன். போகலாமா?''

கிருஷ்ணா நதிக்கரையில் அவன் இம்முறையும் அற்புதமாகப் படகோட்டினான். எல்லா சாமான்களையும் கரையேற்றினான்.

கிருஷ்ணாவின் முகத்துவாரத்தில் பல மரக்கலங்கள் நின்றிருந்தன. ஒரு பெரிய மரக்கலத்தை புவனபதி வாடகைக்குப் பிடித்தான். கட்டு தறித்து அலைகள் தாண்டி, மரக்கலம் நடுக்கடலுக்குப் போய் பாய்களை விரித்தது. வடக்குப் பக்கத்துக் காற்றால் உந்தப்பட்டு தெற்கு நோக்கி திமிங்கிலம் போல் போனது.

அக்காவும் தம்பியும் கடற் பயணத்தை ஆனந்தமாக அனுபவித்தார்கள். அவர்கள் ஆனந்தம் பார்த்து மீகாமன் அவர்களுக்கு நண்பனாகி விட்டான். சங்கு ஊதக் கற்றுக் கொடுத்தான். பலமுறை பலமாக ஊதச் செய்தான்.

''கடற்பயணம் வயிறு புரட்டும் என்பார்களே?'' புவனபதி கேட்ட போது மீகாமன் வாய் விட்டு சிரித்தான்.

''அதற்காகத்தான் சங்கு ஊதக் கற்றுக் கொடுத்தேன். இரைப்பையை அசைத்து அசைத்து சங்கு ஊதினால் வயிறு புரட்டாது. வாந்தியும் ஏற்படாது. என் கப்பலில் இவ்வளவு தூய்மையானவர்களை நான் ஏற்றியதேயில்லை. இத்தனை விரைவாய் இத்தனை அமைதியாய் என் கப்பல் போனது மில்லை. இவ்வளவு விலை கொடுத்து வாடகைக்கு அமர்த்தி யிருக்கிற உங்கள் குடும்பம் கஷ்டப்படுவதை நான் பார்ப் பேனா?''

திருவொற்றியூர் கடற்கரைக் கோயிலுக்கு அருகே கலம் நின்றது. பாரா வண்டிகளோடு சேர்ந்துகொள்ள வேண்டுமென்ப தால் புவனபதி அங்கேயே இறங்கினான்.

இறங்கிய மறுநாள் புவனபதிக்கு ஜுரம் வந்துவிட்டது.

நவக்கியானியும், சிவக்கியானியும் அயர்ந்து தூங்கினார்களே தவிர நோய்ப்படவில்லை. சிவக்கியானி ஊருக்குள் ஓடிப்போய் வைத்தியரை அழைத்து வந்தான்.

''ஜுரத்திற்குக் காரணம் பித்தக் கிறுகிறுப்பு. அதையும் தவிர நீங்கள் எதையோ மனதில் போட்டு உழப்பிக் கொண்டிருக்கிறீர்கள். அதனால் நாடித் துடிப்பு அதிகமாக இருக்கிறது.''

''பார வண்டிகள் ஒழுங்காக வரவேண்டுமென்று கவலைப்படுகிறேன்.'' புவனபதி பொய்சொன்னான்.

அடுத்த மூன்று நாட்கள் கடும் ஜுரத்தில் அனர்த்திக் கொண்டிருந்தான்.

பார வண்டிகள் அவன் நினைத்ததை விட ஒருநாள் முன்னதாகவே திருவொற்றியூர் வந்து சேர்ந்தன.

திருவொற்றியூரிலிருந்து காஞ்சியை நோக்கித் திரும்பினான்.

குதிரையில் பயணம் செய்யாமல் பார வண்டியில் படுத்து வந்தான்.

'இதற்கு மேல் பயணம் செய்ய முடியாது. இதுவரை வந்ததே ஆபத்தான விஷயம். ஏதேனும் ஒரு இடத்தில் இவர்கள் இருவரையும் தீர்த்துக் கட்ட வேண்டும். ஆனால் எழுந்திருக்க முடியவில்லை. விஷ ஜுரம் கண்டதுபோல் உடம்பு கணுக்கணுவாக வலிக்கிறது.

பதட்டமா பயமா அல்லது வேறு ஏதுமா தெரியவில்லை. எதையும் தீர்மானிக்க முடியாமல் புத்தி வலுவிழந்து கிடக்கிறது.

ஏதேனும் செய்ய வேண்டும். எப்படியாவது செய்ய வேண்டும். எப்படி இவர்கள் இருவரையும் கொலை செய்வது என்று தெரியவில்லை. எந்த வழியில் இவர்களைத் தீர்த்துக் கட்டுவது என்று தெரியவேயில்லை.'

அவன் வண்டியில் படுத்தபடியே யோசனை செய்தான். அப்படியே தூங்கிப் போனான்.



எத்தனை தூரம் பயணம் செய்தோம். எத்தனை நாள் பயணம் செய்தோம் என்று அவனுக்குத் தெரியவேயில்லை.

வண்டியை சரிய நிறுத்தியபோது திடுக்கிட்டு எழுந்து நின்றான்.

''இது என்ன இடம்?''

''திருவாலங்காடு ஸ்வாமி.''

''அவர்கள் எங்கே?''

''குளித்து விட்டு கோயிலுக்கு ஸ்வாமி தரிசனத்துக்குப் போயிருக்கிறார்கள்.''

அவன் கீழிறங்கி நின்றான். உடம்பு தள்ளாடியது. சுற்றும் முற்றும் பார்த்ததில் அது ஒரு சத்திரத்துக் கொல்லைப்புறம் என்று தெரிந்தது.

ஏற்கனவே வந்த பாரவண்டிகள் அவிழ்த்து சரிக்கப்பட்டு ஒரு சிலரைத் தவிர மற்ற வீரர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அவன் முகம் கழுவிக் கொண்டு திருநீறு இட்டு சத்திரத்து வாசலுக்கு வந்தான்.

அது மாலை வேளை. இன்னும் ஒரு மணி நேரத்தில் வெளிச்சம் குறைந்து விடும்.

அவன் வாசலிலிருந்து திண்ணைக்கு நகர்ந்தான். திண்ணைக்குக் கீழே சில வேளாளர்கள் நின்றிருந்தார்கள்.

## 43

''அவர்தான் அவர்தான்'' என்றார்கள்.

''ஐயா, நீங்கள் காஞ்சிபுரத்தார் தானே?''

''ஆமாம்.''

''உங்கள் பெயர் புவனபதிதானே?''

''ஆமாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''உங்களை எப்படி ஐயா மறக்க முடியும். தொண்டை நாட்டிலிருந்து காசிக்குப் போன ஒரே ஒரு அந்தணர் நீங்கள்தானே. நீங்கள் காசியில் கொடிகட்டிப் பறப்பதாய் பல சாதுக்கள் இங்கு வந்து சொன்னார்களே.''

''அப்படியா. சந்தோஷம்.''

''ஐயா. காஞ்சிபுரத்துக்கு செய்தி போய் விட்டதா?''

''இல்லை. இனிமேல்தான் சொல்லி அனுப்ப வேண்டும்.''

''அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்.''

''காஞ்சிபுரத்துக்கும், குடந்தையிலுள்ள சோழ அரசருக்கும் உங்கள் வருகையைத் தெரிவிக்கிறோம். நீங்கள் மூன்று நாட்கள் இங்கு தங்கி எங்களை ஆசீர்வதிக்க வேண்டும்.''

புவனபதி திகைத்தான். விளிம்புக்கு வந்து விட்டதை உணர்ந்தான்.

''என் மனைவி எப்படி இருக்கிறாள்?'' அந்த ஆட்களை ஆவலோடு புவனபதி கேட்டான்.

''நலமாக இருக்கிறாள். ஏகாம்பரேஸ்வரர் கோவிலில் உங்கள் வருகைக்காக பல வெள்ளிக்கிழமைகளில் உண்ணா நோன்பு இருந்தார்கள். உங்கள் மகன் வளர்ந்து நன்றாக ஓடி விளையாடுகிறான்.''

''நீங்கள் திரும்பி வரும்வரை திருமணம் செய்து கொள்வதில்லை என்று மூன்று மைத்துனர்கள் உறுதியெடுத்துக் கொண்டு உங்கள் குந்தையையும், மனைவியையும் மிக பத்திரமாய் பாதுகாத்து சீராட்டி வருகிறார்கள்.''

''ஒவ்வொரு மாதமும் உங்கள் நட்சத்திரத்தன்று காஞ்சி புரத்தில் அன்னதானம் செய்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் உங்கள் பிறந்த நாளன்று மிகப்பெரிய ஹோமம் செய்கிறார்கள்.



உங்கள் குடும்பமும், உங்கள் மனைவியின் குடும்பம் உங்கள் வருகைக்காக இடைவிடாது ஜபம் செய்கிறார்கள். அவர்கள் பிரார்த்தனையால் ஐயா நீங்கள் திரும்பி வந்திருக்கிறீர்கள்.''

''வெறுமே திரும்பி வரவில்லை. வேறு ஒரு மனைவியோடு திரும்பி வந்திருக்கிறேன் என்றால் அவர்கள் சும்மா விடுவார்களா... விடமாட்டார்கள். ஊரே ஏசும்படி சண்டை போடுவார்கள். மனைவியை உசுப்பி விட்டு ஆத்திரத்தோடு ஏசும்படி செய்வார்கள். ''காசிக்குப் போய் சேற்றைப் பூசிக் கொண்டு வந்தாயே'' என்று கடிந்து கொள்வார்கள்.

என்ன பொருள் கொடுத்தாலும் எத்தனை விதமான உபகரணங்கள் கொடுத்தாலும் சமாதானமாக மாட்டார்கள். காசிக்குப் போய் வந்ததை ஒரு விஷயமாகவே கருதமாட்டார்கள். மைத்துனர்கள் கடும் சண்டையில் இறங்கலாம். மனைவி மனமுடைந்து தற்கொலை செய்து கொள்ளலாம். அப்பாவும் அம்மாவும் இனி பேசமாட்டேன் என்று சொல்லிவிடலாம். மாமனாரும் மாமியாரும் கோபமடைந்து பில்லி சூனியங்களில் இறங்கலாம்.

தெருவில் நடந்து போனால் காறி உமிழும்படி ஊர் மக்களைத் தூண்டி விடலாம். பிறகு எல்லா முயற்சியும் வீண். கௌரவம் போவது மட்டுமல்லாமல் வாழ்க்கையில் இதுவரை அடையாத இழிநிலையை அடைய வேண்டியிருக்கும்.

இனி என்ன செய்வது? எப்படி இந்த இக்கட்டிலிருந்து தப்பிப்பது? நவக்கியானியும், சிவக்கியானியும் காசியிலேயே இருந்திருக்கலாம். இங்கு எல்லா கொண்டாட்டங்களையும் முடித்துவிட்டு இரண்டு வருடம் கழித்து பக்குவமாய் விவரம் சொல்லி மறுபடி போய் அவர்களை அழைத்து வந்திருக்கலாம். நூறு வருட ஆயுசில் இரண்டு வருடப்பிரிவு ஒரு விஷயமே இல்லை. ஆனால் மறுபடியும் காசிக்குப் போகின்ற முனைப்பு எனக்கு வருமா என்பது சந்தேகம்தான்.

நவக்கியானியையும், சிவக்கியானியையும் இங்குள்ள கொண்டாட்டங்களில் நான் மறந்து போகக்கூடிய வாய்ப்பு உண்டு. மனைவியின் சம்மதத்தோடு சோழ தேசத்து தாசிகள் யாரேனும் தொடர்பு ஏற்பட்டிருந்தால் அந்த சுகத்தில் காசிக்குப் போகும் நினைப்பு அறவே மறந்து போயிருக்கும்.

ஒரு அந்தணன் மனைவிக்கு தாசி தொடர்பு பற்றி கவலையில்லை. புருஷனை இடித்துரைக்க வசதி. அவள் உறவுப் பெண்டிரின் பரிதாபத்தைப் பெற ஒரு வாய்ப்பு.

மேலும் ஒரு தாசி, தன்னை நேசிக்கிறவன் மனைவிக்கு பயப்படுவாள். அவனுக்காக அவளிடம் பரிந்து பேசுவாள். தன் புருஷனிடம் தனக்காகப் பரிந்து பேசிய தாசிக்கு, ஒரு மனைவி நிறைய சன்மானமும் அனுப்புவாள்.

''பாவம்... அவ பொண்ணா பொறந்த வேளை என் புருஷனுக்கு முன்னாடி ஆட வேண்டியிருக்கு. அவன் என்னத்தைக் கொடுத்துடப் போறான். தின்ன சோத்துக்கு பொன்னைக் கொடுத்தா சந்தோஷமாயிடுமா? என் புருஷனைப் பார்த்துக்கோடின்னு நான் கொடுக்கற காசு தான் நிறையும். என்னைக் கோவில்ல பார்த்தா சுவரோட ஒட்டிண்டுவா. என்னைப் பார்க்கறதுக்குள்ளே கோவிலுக்கு வந்து காத்திண்டிருக்கா'' என்று சுலபமாகி விடுவார்கள்.

ஆனால் இதே மனைவி இன்னொருத்தி மனைவி என்று கொடி உயர்த்தும்போது அதை ஏற்பதேயில்லை. மிக மூர்க்கமாக அங்கு தாக்கத் தொடங்கிவிடுவாள். அப்போது தான் மனைவி இல்லை என்று விலகத் துவங்கி விடுகிறாள்.

எனவே நவக்கியானியை காஞ்சிபுரத்திற்கு அழைத்துப் போவது என்பது தற்கொலைக்கு ஒப்பான விஷயம். இன்னும் பிடிவாதமாக நவக்கியானியை மறுத்திருக்க வேண்டும். கூடவே தம்பி இருந்ததால் முரட்டுத்தனம் காட்டமுடியாமல் போய் விட்டது. ஆனால் இப்போது இன்னும் ஒரு நாழிகைக்குள்



ஏதேனும் செய்தாக வேண்டும். இவர்கள் யாருக்கும் நவக்கியானியின் சிவக்கியானியின் வருகை தெரியவில்லை.

நவக்கியானியிடம் ஒரு மூட்டை பொன் கொடுத்து, 'சிறிது நாள் திருவான்மியூரில் இரு. ஒரு வருடம் பொறுத்து நான் மறுபடி வந்து சந்திக்கிறேன்' என்று சொல்லிப் பார்க்கலாம். உடனடியாக ஊரை விட்டுக் கிளம்பும்படி பேசிப் பார்க்கலாம். ஆனால் அதற்கு என்ன காரணம் சொல்வது?

'எனக்குத் திருமணமாகி விட்டது. ஒரு மனைவி இருக்கிறாள். ஒரு மகன் இருக்கிறான்' என்று சொல்லவா? இதனால் தான் விலக்கி வைக்கிறேன் என்று விளக்கவா?

இதுவும் விபரீதமாகப் போகும். நவக்கியானி கூவத் துவங்கி விடுவாள். இறந்து விட்டாள் என்று சொன்னாயே, நடு கங்கையில் தர்ப்பணம் செய்தாயே' என்று இவள் வெளியே சொல்ல எல்லோரும் சீறும்படியாகும். 'நீ அந்தணனே இல்லை' என்று இழிவுபடுத்தும்படியாகும்.

புவனபதி முடிவு செய். சீக்கிரம் முடிவு செய். ஏதேனும் ஒரு வழி கண்டுபிடி.

எத்தனை வேதனைகள். எவ்வளவு அடிதடிகள். எத்தனை கடும் உழைப்பு. எத்தனை தியாகங்கள். எவ்வளவு நீண்ட பயணம். மகுடம் சூட்டப்பட வேண்டிய நேரத்தில் புவனபதி மண்ணில் விழுந்து புரளாதே. எப்படியாவது நவக்கியானியை அப்புறப்படுத்து. ஏதேனும் செய்.

புவனபதி யோசித்தான்.

'நவக்கியானி பெண். அவளுக்குப் புரியாது. அவள் தம்பிக்குத் தெரியாதா. அவனை தனியே அழைத்துப் பேசினால் உதவி செய்யமாட்டானா. இப்போது வேண்டாம். நடுநிசியில் பார்த்துக் கொள்வோம்.

சத்திரத்தின் சுவருக்கு வெளியே கூட்டம் கூடியதும் ஜனங்கள் அவனைப் பார்க்க அலை மோதினார்கள்.

'மிக அசதியாக இருக்கிறது' என்று அவர்களைக் கேட்டுக் கொண்டான். அவர்கள் புரிந்து கொண்டார்கள். காலையில் சந்திக்கலாம் என்று அவர்களே நகர்ந்து கொண்டார்கள். ஊர் ஜனங்களை இப்போது தொந்தரவு செய்ய வேண்டாம் என்று அவர்களே துரத்தினார்கள். புவனபதிக்கு ஓய்வு கொடுத்தார்கள்.

சத்திரத்துக்குள் காவலாட்களும், வண்டியோட்டிகளும் அடித்துப் போட்டதுபோல் தூங்கினார்கள்.

சத்திரம் பலமாக இருக்கிறது. வெளியே ஊர்க்காவல் இருக்கிறது. கவலையே இல்லாமல் தூங்கலாம் என்று ஓய்வு எடுத்துக் கொண்டார்கள்.

கோவிலுக்குப் போயிருந்த நவக்கியானியும், சிவக்கியானியும் ஆலங்காட்டுப் பெருமானை வியப்போடு பார்த்துவிட்டு 'என்ன அழகு... என்ன அழகு' என்று பேசிக்கொண்டு திரும்பினார்கள்.

கோவிலில் யாரென்று விசாரித்தார்கள். யாத்ரீகர்கள் என்று சொல்லி விட்டார்களாம். சாதமும், கூட்டும் சுடச்சுட நவக்கியானி பரிமாறினாள். சிவக்கியானி புவனபதிக் விசினான்.

''சீக்கிரம் சாப்பிடுங்கள், உங்களோடு சற்று பேச வேண்டியிருக்கிறது?'' புவனபதி துரிதப்படுத்தினான்.

உணவு முடித்து கொட்டைப்பாக்கை சிறு துண்டுகளாக்கி வாயில் அடக்கிக் கொண்டான். அவர்கள் சாப்பிட்டு வந்தவுடன் மெல்ல விஷயம் சொன்னான். அவர்கள் அதிர்ச்சி அடையவில்லை.

''இப்படி ஒரு சந்தேகம் எங்களுக்கு இருந்தது'' என்று சொன்னார்கள்.

''இதற்காக மறுபடியும் காசிக்குப் போக முடியாது'' என்று மறுத்தார்கள்.



''அந்தணர்கள் இருதாரம் செய்வது தவறில்லையே. காசிதேசத்து மஹாமந்திரி அந்தணன்தான். அவருக்கு ஆறேழு மனைவிகள். பல கூத்திகள், அவர் மரியாதைக்கு எந்த பங்கமும் ஏற்பட்டுவிடவில்லையே. நாங்கள் உங்களை விட்டு எங்கும் போக மாட்டோம். உங்களுக்கு இன்னொரு மனைவி இருப்பது பற்றி எங்களுக்கு ஆடசேபணையில்லை. அவர்களுக்கு இதுபற்றி எந்த ஆட்சேபனையும் இருக்குமென்றால் அதுபற்றி எனக்கு அக்கறையில்லை.

ஆனால் மனைவி உயிரோடு இருக்கும் போதே தர்ப்பணம் செய்த ஒரே அந்தணன் நீங்களாகத்தான் இருக்க முடியும். சாஸ்திர சம்பிரதாயங்களில் உங்களுக்கே நம்பிக்கையில்லாத போது, யாருக்கு என்ன போதிக்கப் போகிறீர்கள்? என்ன வழிகாட்டியாக இருக்கப் போகிறீர்கள்?

கலிமுற்ற அந்தணன் களவும் செய்வான் என்பது எவ்வளவு உண்மை.

உங்கள் முதல் மனைவி என்னோடு சண்டைக்கு வந்தால் 'உனக்கு எள்ளும் தண்ணீரும் என்னெதிரேதான் இறைத்தார்', என்று உரக்கச்சொல்வேன். 'நீ இருந்தும் இல்லாதவள்' என்று விளக்கிச் சொல்வோம்.''

புவனபதி கோபத்தில் தடுமாறினான்.

''சிவக்கியானி, உன் தமக்கையிடம் தனியாகப் பேச வேண்டும். நீ வெளியே போ'' என்று கட்டளையிட்டான்.

அவன் வெளியே போனவுடன் நவக்கியானியை அணைத்துக் கொண்டான்.

''இந்தக் கணம் கூட உன்னை என்னால் விடமுடிவில்லை. வாழ்நாள் முழுவதும் நீ என்னோடு இருக்க வேண்டுமென்று பிரியப்படுகிறேன். ஒரு இரண்டு வருட தனிமையைப் பொறுத்துக் கொள். எல்லோரும் ஒன்றாகி விடலாம்.''

''ஒரு வருட இடைவெளி இப்போது இரண்டு வருடமாகி விட்டதா? பிறகு இரண்டு வருடம் என்பது நான்கு வருடமாகி விடும். நான்கு வருடத்திற்குப் பிறகு நவக்கியானி யார் என்பதே மறந்து விடும். உங்கள் கொஞ்சலைக் கேட்க நான் தயாராக இல்லை.'' அவன் அணைப்பை விலக்கித் தள்ளினாள்.

புவனபதி கோபமானான். பளிச்சென்று அவள் கழுத்தைப் பிடித்தான்.

''உனக்கு உயிர்ப்பிச்சை அளிக்கிறேன். மரியதையாக விடிவதற்குள் இந்த இடத்தை விட்டுப் போய்விடு.''

''சரி; நான் போகிறேன்.'' நவக்கியானி திக்கித் திணறிப் பேசினாள்.

புவனபதி பிடி தளரவிட்டான்.

''நேரே காஞ்சிபுரம் போகிறேன். அங்கு போய் உங்கள் வீட்டாரிடம் நியாயம் கேட்கிறேன். உன்னை வரவேற்கப் போகும் சோழ மன்னனிடம் நீதி கேட்கிறேன்.''

உரக்கக் கூவினாள்.

காவலாட்கள் புரண்டு படுத்தார்கள்.

புவனபதி கோபமாய்த் திரும்பினான். அங்கு பாக்கு இடிக்கும் சிறிய இரும்பு உலக்கை இருந்தது. சட்டென்று அதை எடுத்தான். குனிந்து கழுத்து தடவிக் கொண்டிருந்த நவக்கியானியின் உச்சி மண்டையில் பலமாக இறக்கினான்.

நவக்கியானி ''ஹா'' என்று துடித்தாள். அவள் உள்ளங்கால் வரை வலி பரவியது. வலி உச்சத்திற்குப் போய் திகைப்பு ஏற்படுத்தியது. உயிர் சுருண்டு உடைந்து போன கபாலத்தின் வழியாக வெளியே வந்து நின்றது.

அவள் ஆத்திரத்தோடு புவனபதியைப் பார்த்தாள்.

''உன்னை விடமாட்டேன், உன்னை விடமாட்டேன்'' என்று உரக்க அலறினாள்.



ஆனால் அந்தச் சப்தம் யாருக்கும் கேட்கவில்லை. அவள் உயிர் பறந்தது. தம்பியைத் தேடியது.

## 44

சிவக்கியானி சத்திரத்து வாசலில் தெற்கு பார்த்து உட்கார்ந்திருந்தான். அவன் வயிற்றில் ஒரு சங்கடம் இடைவிடாது பரவிற்று. சட்டென்று நெஞ்சு அடைத்தது. உடம்பு ரோமமெல்லாம் ஒரு பொடிப்பு ஏற்பட்டது. யாரோ அவன் முதுகு வழியே நெஞ்சுக்குள் கைவிட்டு வா வா என்று அழைத்தார்கள். உயிர்க்குலையைப் பிடித்து இழுத்தார்கள்.

உட்காரவும் முடியாமல், நிற்கவும் முடியாமல் ஒரு கடும் வேதனையை சிவக்கியானி உணர்ந்தான். எங்கோ எதுவோ மிகத் தவறாகப் போய்விட்டது என்கிற பதைப்பு ஏற்பட்டது. சத்திரத்துக்கு உள்ளே போய் நவக்கியானியைப் பார்க்க வேண்டும் என்கிற துடிப்பு ஏற்பட்டது.

சடக்கென்று எழுந்தான். எழுந்த வேகத்தில் பொத்தென்று உட்கார்ந்தான். உள்ளே அக்கா அவள் புருஷனோடு என்ன கோலத்தில் இருப்பாள் என்று தெரியவில்லை. 'இப்போது போகலாமா' என்று கவலைப்பட்டான்.

'இந்த புவனபதி ஏதோ தவறு செய்கிறான். தொடர்ந்து பல தவறுகள் செய்யப் போகிறான் என்று அவனுக்குத் தோன்றியது.'

புவனபதிக்கு அக்காவை உதறி விட்டுப் போகும் எண்ணம் ஏன் வந்தது? என்று தெரியவில்லை. எதனால் அக்காவை இவ்வளவு வெறுக்க ஆரம்பித்தான்? என்று தெரியவில்லை.

புவனபதிக்கு அக்காவின் பிடிவாதம் புரியவில்லை. அவள் பார்ப்பதற்குத்தான் சாது. அவள் கோபமானால் காடு மட்டுமல்ல. பூமியே கொள்ளாது

கொல்லையில் ஒரு பசு இன்னொரு பசுவின் கன்றைத் துரத்தி முட்டிக் கொன்றுவிட்டது. அக்கா அதிர்ந்து போனாள். அந்தப் பசுவைப் படகில் ஏற்றி நடுகங்கையில் படகைக் கவிழ்த்து விட்டுவிட்டாள். பிறகு மறுபடி நிமிர்த்தி கரைக்கு வந்துவிட்டாள். பசு கங்கையோடு அடித்துக் கொண்டு போய் விட்டது. அப்பா கடிந்து கொண்டபோது பசுவை மன்னிக்கத் தயாராக இல்லையென்று சொன்னாள்.

அக்காவிடம் யார் முரட்டுத்தனம் காட்டினாலும் அவள் முரட்டுத்தனம் அதிகமாகி விடும். அவள் முரடு என்பது இன்னும் புவனபதிக்குத் தெரியவில்லை. அக்காவும் வெளிக் காட்டவில்லை.

அக்கா எந்த அவஸ்தையும்படாமல் நல்லபடி குடித்தனம் செய்ய வேண்டும் என்கிற கவலை பெரிதாக இருக்கிறது.

திருவாலங்காடு சிவன் கோவிலில் கால் தடுக்கியது. தீபம் அணைந்தது. வௌவால் தலையில் அடித்தது. இவை எல்லாம் துர்சகுனங்கள்.

திருநீறு வாங்கி நெற்றி நிறைய பூசி, ''என் தமக்கையை நல்லபடி வாழ வை என் சிவனே. அவளுக்குப் பாதுகாப்பாக தொண்டனாக வாழும் வாழ்க்கையை எனக்குக் கொடு. எனக்கு திருமணமோ, தனிவீடோ, சொத்து சுகமோ எதுவும் வேண்டாம். என் தமக்கை சந்தோஷமாக இருந்தால் போதும். அவள் உயிருக்கு எந்த ஆபத்தும் வராது இருந்தால் போதும். அப்படி வருமாயின் என் சிவனே, என்னையும் அழைத்துப்போ.

எனக்கு என் அம்மாவைத் தெரியாது. என்னை வளர்த்த தெல்லாம் என் அக்காதான். என் வலிவு, படிப்பு, அன்பு, அமைதி எல்லாம் அக்காவிடமிருந்து வந்தவைதான். அக்கா தான் எனக்கு தெய்வம். அக்காதான் எனக்கு குரு. அக்காதான் எனக்கு சகலமும். நவக்கியானியே நமஹ.'' நினைக்கும் போதே அவன் கண்ணில் நீர் பெருகியது.



சட்டென்று அவன் திரும்பி மூடிய கதவைப் பார்த்தான். அந்த சத்திரத்துக் கதவுக்கருகே நவக்கியானி புகைபோல தோன்றினாள். அழுகையும் சிரிப்புமாய் அலறினாள்.

''வா, போகலாம்'' என்று காற்று மாதிரி நழுவினாள். அவனைத் தாண்டி சொடுக்கு நேரத்தில் சத்திரத்து தோட்டத்தில் நின்றாள். குதிரைகள் மிரண்டன. படுத்திருந்த மாடுகள் சடக்கென்று எழுந்து நின்றன. ஒரு விபரீதம் உணர்ந்தான்.

சத்திரத்தைச் சுற்றிக் கொண்டு பின்கதவுப்பக்கம் போனான். கதவு தள்ளினான்.

கதவு திறந்து கொண்டது. பின்பகுதி மிகவும் இருட்டாக இருந்தது. விளக்கு வைத்திருக்கும் முற்றம் போக மூன்று கட்டுகள் தாண்ட வேண்டியிருந்தது. தட்டுத்தடுமாறி அவன் உள்ளே போகையில் புவனபதி வாசற் கதவைத் திறந்து வெளியே போவது தெரிந்தது.

வெளியே போய் சத்திரத்துக் கதவை வெளிப்பக்கம் தாழ்போடுவதை உணர முடிந்தது. சிவக்கியானி முற்றத்தில் இறங்கினான்.

''நவக்கியானி... நவக்கியானி... நவம்...'' மிருதுவாக விளித்தான்.

யாரோ அவனைத் தொடுவது போல் உணர்ந்தான். உடம்பு சில்லிட்டது. யாரோ அவனை மெல்ல ஒரு அறை நோக்கி தள்ளுவதை உணர்ந்தான். அந்த அறையின் கதவைத் திறந்து பார்த்தான்.

அங்கே அவன் அக்கா நவக்கியானி பல் கடித்து கண் திறந்து மண்டை பிளந்து, ரத்தமும், மூளையும் வெளியே வழிய இறந்து கிடந்தாள்.

''அக்கா.. அக்கா...'' கத்தினான்.

''வந்துரு சிவம்... உனக்கு இங்கே என்ன வேலை. நீயும் வந்துரு. உன்னைப் பார்த்தா இவன் கொன்னுருவான். இவன் கையால சாகறதை விட நீயே செத்துப்போ.''

எப்படி அடிச்சு கொன்னுருக்கான் பார்த்தியா. உச்சி மண்டைல எப்படி அடிச்சிருக்கான் பார்த்தியா. காரணமே சொல்லாம கொன்னுட்டான்டா. காஞ்சிபுரத்துக்கு வராதே... போ போன்னு தொரத்தறான்டா. நம்ம எல்லோரையும் ஏமாத்திட்டான்டா.

இவன் அயோக்கியன், திருடன், பொய்யன். இவன் என்னைக் கொன்னுட்டான்டா. இவனை விடக்கூடாது. இவனைப் பழிக்குப் பழி வாங்காம நாம எங்கேயும் போகக் கூடாது. எனக்குத் துணையா இருடா. என்னை விட்டுப் போகாதேடா. நீ இல்லாம அக்கா எப்படி இருப்பேன்? நீ என் கூட வந்துடுடா. அக்கா இல்லாத உன்னால வாழமுடியுமா?''

அவன் குரல் தெளிவாகக் கேட்டது. அவன் வாழ முடியாது என்று தலையசைத்தான்.

''அதோ பார் பார வண்டி கயிறு இருக்கு.'' அக்காவின் குரல் சுட்டிக் காட்டியது.

சிவக்கியானி கயிறு எடுத்தான். உத்திரத்தில் வீசி சுருக்கிட்டான். அக்காவின் காலில் விழுந்து நமஸ்கரித்தான்.

''நவக்கியானி நமஹ'' கால் உதறி தூக்கில் தொங்கினான். நாற்பது நொடிகளில் மூச்சுத்திணறி இறந்தான். அவன் உயிர்ச் சக்தி உடம்பை விட்டு நகர்ந்து ஒரு இருட்டுக்குள் பிரவேசித்தது.

காது கிழிபடும் ஒரு ஊளை கேட்டது. அந்த இருட்டு வேகமாய் அவனைத் தன்னுள் இழுத்துக் கொண்டது. அவன் கலவரமானான்.

''நவக்கியானி, நவக்கியானி'' என்று கத்தினான். ஒரு குகையின் வாசல்போல் அந்த இருட்டு முடிந்தது. அவன் வெளிச்சத்துக்கு வந்தான்.



நவக்கியானி அங்கு காத்திருந்தாள். அவளுக்கு சற்று தொலைவே பலபேர் நின்றிருந்தார்கள். அவர்கள் இருவரையும் வியப்போடு பார்த்தார்கள். சிநேகத்தோடு சிரித்தார்கள்.

அவன் தன் அக்காவின் கைகளைப் பற்றிக் கொண்டான். அவன் அக்காவும் அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

அவர்கள் இருவருக்கும் உடம்பு இல்லை. உடம்பு இருப்பதான பாவனை இருந்தது. சுற்றி உள்ளவர்களை அவர்கள் இருவரும் வியப்போடு பார்க்க, அவர்கள் அருகில் வந்தார்கள்.

அவர்களுக்கும் உடம்பு இல்லை. உடம்பு இருப்பதான பாவம் இருந்தது. முன்னே நின்றிருந்த வயதானவர் அருகில் வந்தார்.

''திருவாலங்காட்டு ஈசன், மயான சிவன், அவன் வாழ்க!''

அந்த பெரியவர் கை கூப்பினார்.

''சிவன் வாழ்க.'' அக்காவும் தம்பியும் கை கூப்பினார்கள்.

''திருவாலங்காடும் அதைச் சுற்றியுள்ள இடமும் ருத்ர பூமி. இங்கு கொலை செய்யப்பட்டவர்களும், தற்கொலை செய்து கொண்டவர்களும் விருப்பமில்லாமல் விபத்தில் இறந்தவர்களும் நலமாக வசிக்க முடியும். நமக்கு விதிக்கப்பட்ட வரை இங்கே இருந்து விட்டு மறுபிறப்போ மேல் உலகமோ அடைய முடியும்.

உங்களைத் தேடி சிவனின் பூதகணங்கள் வரும். அவர்கள் உங்களுக்கு இருக்க இடம் தருவார்கள். சிவன் நாமத்தை இடைவிடாது சொல்லி கடைத்தேறப் பாருங்கள். நீங்கள் பேய்களாக இருப்பினும் உங்களுக்கும் பசிக்கும். பூர்வ ஜென்ம வாசனை முழுமையாய் இருக்கும். பசி தீர்க்கும் வகையையும் பழி தீர்க்கும் வகையையும் பூதகணங்கள் உங்களுக்குச் சொல்லித் தருவார்கள். திருவாலங்காட்டு ஈசன் மயான சிவன் அவன் வாழ்க'' அப்பெரியவர் மெல்லிய குரலில் பேசி கை கூப்பினார்.

அவர்கள் எல்லோரும் பூமியிலிருந்து ஒரு தென்னை உயரத்துக்கு மேல் மிதந்து கொண்டிருந்தார்கள்.

கீழே சத்திரத்தில் சலசலப்பு கேட்டது. புவனபதி அவர்கள் பயணம் செய்த ரெட்டைப் பூட்டு குதிரை வண்டியைக் கொல்லைப்புறம் இழுத்து வந்தான். வண்டியில் தொங்கும் விளக்கு எடுத்துக்கொண்டு சத்திரத்துக்குள் நுழைந்தான்.

குனிந்து நவக்கியானியையே பார்த்துக் கொண்டு வந்தவன், சிவக்கியானியின் கால் நெற்றியிலிடிக்க திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

புவனபதியின் மேல்நெற்றி சிவக்கியானியின் கால்பட்டதும் பளிச்சென்று கருப்பாகியது.

'இவனும் செத்தானா. மிக்க நல்லது.'

வாள் உருவி கயிறு அறுத்தான். இரண்டு தானியக் கூடைகளை சத்திரத்தில் கவிழ்த்தான். கூடைகளில் பிணங்களைப் போட்டு அழுத்தினான். மேலே தடுக்கு போட்டு மூடினான். குதிரை வண்டியில் ஏற்றினான். ஏர்க்காலில் உட்கார்ந்து வண்டியை விரட்டினான். காவல் காப்போர் விழித்துக் கொண்டார்கள்.

''அருகே பழையனூர் என்று ஒரு ஊர் இருக்கிறது. அங்கு என் உறவினர்கள் இருக்கிறார்கள். சில பரிசுப்பொருட்களை அங்கு கொடுத்து விட்டு வருகிறேன்.'' கதவு தாண்டி சத்திரத்துக்கு வெளியே ஓட்டினான்.

திருவாலங்காட்டிலிருந்து பழையனூர் சாலையில் குதிரை வண்டி பறந்தது.

மழைநீர் தேங்கும் ஒரு ஏரிக்கரை ஓரம் நிறுத்தினான். கூடைகளில் பாறாங்கற்கள் நிரப்பினான். ஒவ்வொன்றாய் தோளில் சுமந்தபடி நெஞ்சாழ நீரில் இறங்கினான்.

குனிந்து ஏரிச் சேற்றில் அமிழ்த்தினான். இரண்டையும் ஏரியில் புதைத்த பிறகு பலமுறை நீரில் முங்கிக் குளித்தான். சில



கணங்கள் அவர்களை நினைத்துக் கொண்டான். உள்ளங்கை ஜலமெடுத்து தெற்கு நோக்கி அர்க்கியம் விட்டான்.

சிவக்கியானிக்கு மரணதாகம் எடுத்தது. புவனபதி விட்ட அர்க்கியத்தைக் குடிக்கப் போனான். நவக்கியானி அவனைத் தடுத்தாள். வேண்டாம் என்றாள்.

அந்த நீரை மற்ற பேய்கள் வாங்கிக் கொண்டன.

பேயாக இருந்த நவக்கியானியையும், சிவக்கியானியையும் சுற்றி பூதகணங்கள் இறங்கின. பூதகணங்கள் இவர்களைவிட உயரத்தில் இருந்தார்கள். உருவத்தில் அகோரமாக இருந்தாலும் அவர்கள் பார்வையில் அன்பு இருந்தது.

பழையனூரிலிருந்து குதிரை வண்டியில் புவனபதி திருவாலங்காடு திரும்புவதை எல்லோரும் கவனித்தார்கள்.

நவக்கியானி அவனைப் பார்த்து ஆத்திரத்தோடு அழத் துவங்கினாள்.

''இனி எதற்கு அழுகை? நிறுத்தடி நீலி.'' ஒரு பூத கணம் அதட்டியது.

அவளுக்கு அவர்கள் 'பழையனூர் நீலி' என்று பெயரிட்டார்கள். சிவக்கியானியை நீலியின் தம்பி என்றார்கள். ஒரு மரம் காட்டினார்கள். அங்கே சில நாட்கள் தொங்கியபடியே தூங்கு என்றார்கள். மறைந்தார்கள்.

## 45

**கா**ஞ்சி மாநகரம் வாத்திய கோஷங்களால் அதிர்ந்தது. இரண்டு பக்க ஏரிகளுக்கு நடுவே உள்ள பாதையில் வழி நெடுக தோரணம் அமைத்திருந்தார்கள். இரண்டு புறமும் மக்கள் நின்று கை கூப்பினார்கள். ஊர் பெரியவர்ககள் தங்கள் மேல் துணியை புவனபதி வரும் சிறு தேரின் முன்பு விரித்தார்கள்.

''உன்னால் அந்தணக் குலம் கம்பீரமாயிற்று. காஞ்சிபுரத்திற்கு பெரிய கௌரவம் கிடைத்துவிட்டது. சோழ தேசத்து அந்தணர்களை மட்டுமே மதித்து வந்த அரசர்கள் இனி நாம் வந்தால் எழுந்து நிற்பார்கள். சோழ தேசத்து அந்தணர்கள் நமக்கு முகமன் சொல்வார்கள். தொண்டை நாடு சான்றோர் உடைத்து என்பது மறுபடி உறுதியாயிற்று.

மற்றபடிக்கு உன் வீட்டில் அனைவரும் நலம். உன் தாய் வழி பாட்டனார் ஒருவர் மரணமடைந்தது தவிர துக்கச் செய்தி ஏதுமில்லை. வழக்கம்போல சைவ வைணவ சண்டை அவ்வப்போது நடைபெறத்தான் செய்கிறது. இந்த முறை நல்ல விளைச்சல். துவரையும் காராமணியும் கூடுதலாக பயிரிட்டு சோழ தேசத்துக்குக் கூடைக் கூடையாய் அனுப்பப்பட்டன. அங்கிருந்து உயர்ரக அரிசி, கணுக்கள் அதிகமில்லாத கரும்பு நமக்கு வந்தது.

வரதராஜ பெருமாள் கோவிலுக்கு சோழ மன்னன் பதினாறு இளம் தேவதாஸிகளை சிதம்பரத்திலிருந்து அனுப்பியிருக்கிறார்.

இவ்வளவுதான் இங்கு நடந்தது.

நீ சொல். வாரணாசி என்கிற காசியைப் பற்றி எங்களுக்கு விவரமாகச் சொல்.''

புவனபதி தனக்குப் பின் வந்த பாரவண்டிகளை கச்சாலீஸ்வரர் கோவிலுக்கு அனுப்பினான். வீட்டிற்குப் போய் தாயையும் தந்தையையும் நமஸ்கரித்தான். மனைவியை அணைத்து நெற்றியில் முத்தமிட்டான். குழந்தையை இறுக்கிக் கட்டி கொண்டு கூத்தாடினான். காலில் விழுந்த மைத்துனர்களை அணைத்துக் கொண்டான். 'நன்றி நன்றி' என்று எல்லோரிடமும் கை கூப்பினான்.

உள்ளே கொலை செய்த கவலை பெரிதாய் இருந்தது. அதனால் அதிகம் மனம் ஆனந்தப்படவில்லை.



''காசி உன்னை மாற்றி விட்டதடா மகனே. குரல் உயர்த்தாது பரபரப்பு காட்டாது இத்தனை அமைதியாய் இருக்க ஞானிகளால்தான் முடியும். உன்னை வணங்குகிறேனடா புவனபதி. என்னை இறைவனிடம் அனுப்பி வைக்க மறந்து விடாதே.'' என்று அவன் அப்பா கைகளைப் பிடித்துக் கொண்டார்.

சுற்றியுள்ள கூட்டம் 'அடடா' என்று வியந்தது.

புவனபதி இடப்பக்கம் அப்பாவும், வலப்பக்கம் மனைவியுமாய் கச்சாலீஸ்வரர் கோவிலுக்குள் நுழைந்து, பார வண்டிச் சாமான்களை இறக்க வீரர்களுக்குக் கட்டளையிட்டான்.

மான் தோல்களும், புலித்தோல்களும், காட்டெருமைப் போர்வைகளும், ஒட்டகக் கம்பளிகளும், பித்தளைப் பாத்திரங்களும், வெள்ளி விளக்குகளும், தங்க நகைகளும் வாட்களும், ஈட்டிகளும், அம்புகளும் குங்குமப் பூ பெட்டிகளும், தேன் குடங்களும், மருந்துப் பட்டைகளும், மூலிகைச் சாறுகளும், கற்பூரக் கட்டிகளும், துணி வகைகளும், பல வடமொழி நூல்களும், விக்ரஹங்களும், சலவைக்கல் லிங்கங்களும், ஸ்படிக மாலைகளும், இமயமலையில் கிடைக்கும் அபூர்வக் கற்களும், மானஸ்ரோவரில் கிடைக்கும் சாளக்கிராமங்களும், சந்திரகாந்தக் கல்லும், நவபாஷாணப் பாறையும், உருக்கின தாமிரமும், அபரஞ்சி தங்கமும், காரீயமும், பட்டை தீட்டிய தீட்டாத விலை உயர்ந்த கற்களும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

நூதனமான காண்டாமணி, கச்சாலீஸ்வரதர் கோவிலுக்கு தானம் தரப்பட்டது.

எல்லாவற்றையும் விட ஒரு பார வண்டி நிறைய பதினோரு தவலைகள் கங்கை நீர் மூடி போட்டு ஈயம் அடைத்த வாயுடன் இறக்கப்பட்டன.

''அம்மா தாயே, கங்கா தேவி.'' என்று அந்தணர்கள் எல்லோரும் அந்தத் தவலை முன் விழுந்து வணங்கினார்கள்.

''ஜெயதூ ஜெயதூ'' என்று வலம் வந்தார்கள்.

''இவன் பகீரதன் அல்லவா.'' என்று புவனபதியைத் தழுவிக் கொண்டார்கள்.

''அந்தணர்களே, வரும் வழியில் புலி, சிங்கம், பாம்பு, ஓநாய், கருடன் போன்றவைகளை நான் கொல்ல நேர்ந்தது.

சந்தியா வந்தனம் செய்யாமலும், ஜபம் செய்யமறந்து போயும், அமாவாசைக் காலங்களில் பித்ரு வணக்கம் செய்யாமலும், ஆச்சாரமில்லாத உணவுகளை உண்டும் பயணப்பட நேர்ந்தது.

இவைகளுக்காக நான் உங்கள் மன்னிப்பைக் கோருகிறேன். இதற்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டும் என்று கலந்தாலோசித்துச் செய்யுங்கள். அவைகளைச் செய்ய சித்தமாயிருக்கிறேன்.

செய்த கொலைக்குப் பரிகாரம் பற்றி யோசித்து வாருங்கள்'' என்று வேண்டினான்.

''புவனபதி, உனக்குத் தெரியாத பரிகாரமா. காசி தேசத்து அந்தணர்கள் என்ன செய்வார்கள் என்று நீ கருதுகிறாயோ அதையே நீ செய்து விடு.''

காஞ்சிபுரத்து அந்தணர்கள் அவசரப்படாமல் நிதானமாய் ஆழம் பார்த்தார்கள்.

''கொலை செய்த விஷயங்களின் உருவம் போல தங்கத்தில் பதுமை செய்து அதை தானம் தருவார்கள். பதுமை குறைந்த பட்சம் உள்ளங்கை உயரம் இருக்க வேண்டும் என்று கணக்குச் சொல்வார்கள்.''

''செய்து விடேன்.'' காஞ்சி மாநகர அந்தணர்கள் குதூகலித்தார்கள்.

யானை பொம்மைக்குள் நவக்கியானி என்கிற பெண் உருவமும், ஒரு முதலை பொம்மைக்குள் சிவக்கியானி என்கிற



ஆண் உருவமும் பொதித்து கஜேந்திர மோட்சமாய் அந்த பொம்மையைச் செய்யச் சொல்லி பாதி முழுங்கை உயரமிருந்த அந்த பொம்மையை பதினாறு அந்தணர்கள் ஒட்டு மொத்தமாய் வாங்கிக் கொள்ள,

''நாங்கள் உருக்கி பங்கு போட்டுக் கொள்கிறோம்.'' என்று வாக்கு கொடுக்க, பதினாறு அந்தணர்கள் கையிலும் கங்கை நீர் ஊற்றி அந்தப் பொற் பதுமையை புவனபதி அந்தணர்களுக்குத் தத்தம் செய்தான்.

''இதோ, எங்கள் கையில் தானமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்தப் பொற்பதுமையை வாங்கிக் கொள்வதால் இவைகளைக் கொன்ற பாபம் புவனபதி என்கிற அந்தணனிடமிருந்து அறவே போயிற்று. இது சத்யம்'' என்று அந்தப் பதினாறு அந்தணர்களும் உரக்கக் கூவினார்கள்.

அந்தப் பொன் பதுமையை சட்டியில் வைத்து உருக்கி தகடாக்கி எடை போட்டு பிரித்துக் கொண்டார்கள்.

புவனபதி போட்ட உணவை உண்டு விட்டு 'திருப்தி, திருப்தி' என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

புவனபதியை நவக்கியானி என்கிற பேய் அண்ட முடியவில்லை. அவன் வீட்டு வாசலில் பலமுறை அலைந்தும் உள்ளே போக முடியவில்லை. அவனுக்கு அருகே போய் நின்றும் தாக்க முடியவில்லை. அவனைக் கலவரப்படுத்த முடியவில்லை.

நவக்கியானி சோர்வுடன் தம்பியோடு பழையனூர் திரும்பினாள்.

திருவாலங்காடு ஈசன் முன்பு நின்று அழுதாள்.

''நான் என்ன பாவம் செய்தேன்?'' என்று பேயாய் அமர்ந்து அரற்றினாள். சிவகணங்கள் அவளை சமாதானம் செய்தன.

''பழி தீர்க்க உன் புருஷனை வதம் செய்ய உனக்கு நிச்சயம் வாய்ப்பு வழங்கப்படும். அழாதே. தவம் செய். உனக்கு ஒதுக்கப்பட்ட மரத்தில் உட்கார்ந்து இடையறாது சிவன் நாமம் சொல்.''

அவள் உட்கார்ந்த மரம் பெரிதுமில்லாமல் சிறிதுமில்லாமல் ஆனால் உறுதியாய் தழைத்த இலைகளோடு இருந்தது.

ஒரு வேளாளன் அந்த மரத்தைச் சுற்றி வந்து பார்த்து, 'இது ஏர்க்கலப்பைக்கு ஆகும்' என்று எண்ணினான்.

அதை வெட்ட மற்ற வேளாளரிடம் ஆலோசனை கேட்டான்.

''மரம் முற்றட்டுமே. இரண்டு மூன்று கலப்பைகள் கிடைக்குமே.'' சில வேளாளர்கள் சொன்னார்கள்.

தனக்கு உடனே கலப்பை வேண்டுமென்று அந்த வேளாளன் விரும்பினான். ஊர் சபையிடம் போய் பொது மரத்தை வெட்டி எடுத்துக் கொள்கிறேன் என்று தகவல் தெரிவித்தான்.

வெட்ட கோடாலியுடன் மரத்துக்கு அருகே வந்தான்.

நவக்கியானி பதறினாள். மிகுந்த முயற்சியோடு புகை வடிவமாய் உருவெடுத்துக் கொண்டாள். அவள் தம்பியும் அவ்விதமே ஆனான்.

வேளாளன் வேட்டியை அவிழ்த்து, வெட்ட கோவணத்துடன் அணுகிய போது அவன் முன்பு தோன்றி கை கூப்பினாள்.

''ஐயா, இது நாங்கள் வசிக்கும் மரம். இன்னும் நெடுங்காலம் நாங்கள் இங்கே வசிக்க வேண்டியிருக்கிறது. அதனால் தான் பிஞ்சு மரத்தைத் தேர்ந்தெடுத்தோம். தயவு செய்து மரத்தை வெட்ட வேண்டாம்.'' என்று கெஞ்சினாள்.

வேளாளன் விலகி ஓடினான்.

''நீ யார்?'' என்று வாய் குழறக் கேட்டான்.



''நான் என் கணவனால் கொலை செய்யப்பட்ட மனைவி. இது என் தம்பி. நான் நவக்கியானி. இவன் சிவக்கியானி. தயவு செய்து இம்மரம் வெட்ட வேண்டாம்.'' என்று வேண்டினாள்.

வேளாளன் ''பேய் பேய்'' என்று ஊர் நோக்கி ஓடினான்.

''மரத்திலிருந்து பேய் இறங்கி வந்து பேசுதுங்க.'' சபை நடுவே அலறினான்.

''பேய் இருக்கற மரம் ஊருக்கு ஆவாது. வெட்டிடுங்க.'' ஊர் சபை கட்டளையிட்டது.

ஊர்க்காவல் தேவதைகளிடமிருந்து சூலமும் கட்டாரியும் வாங்கி மரத்தில் ஓங்கி குத்தியது.

நவக்கியானியும், சிவக்கியானியும் பயந்து போய் ஓடினார்கள்.

அந்த சிறிய மரத்தை பல பேர் சேர்ந்து மடேர் மடேர் என்று வெட்டினார்கள். அது மறுபடி துளிர்க்காவண்ணம் வேரோடு பறித்து எறிந்தார்கள். சூலத்தை அங்கேயே நட்டு விட்டுப் போனார்கள்.

''இறந்த பிறகும் இவளுக்கு நிம்மதியில்லையே.'' சிவ கணங்கள் துக்கப்பட்டன. சிவனிடம் முறையிட்டன.

''தவம் செய்வதைவிட பழி வாங்கவே அவள் அதிகம் துடிக்கிறாள். எனவே பழிக்குப் பழி என்று சொல்பவள் பழையனூர் முழுவதும் அலைந்து கொண்டேயிருக்கட்டும். அவளுக்கு தங்கும் இடம் வேண்டாம்.'' இறை பதில் சொல்லியது.

பழையனூர் நீலி தம்பியோடு இரவெல்லாம் அலைவாள். பகலில் எங்கேனும் சுருண்டு கிடப்பாள்.

நாய்களும், பசுக்களும், பன்றிகளும், பறவைகளும் ஆந்தையும், கோட்டானும், சாக்குருவியும் அவளை அடையாளம் கண்டு கொண்டன.

காஞ்சி மாநகரில் புவனபதிக்கு 'மஹாபண்டிதன்' என்கிற பட்டாபிஷேகம் நடந்தது.

## 46

சிவகணங்கள் தங்க இடம் காண்பித்தும், தங்குமிடம் சிதைந்து பழையனூர் முழுவதும் அலையும்படி நீலிக்கு நேரிட்டது. அந்த இடத்தில் ஒரே ஒரு வேர் விட்டுப்போய் மறுபடியும் தாவரம் துளிர்த்து, செடியாகி சிறு மரக்கன்றாகியது. இதற்கிடையே பல வருடங்கள் மறைந்து போயின.

அந்த மரத்தடியிலிருந்த சூலம் துருப்பிடித்து இற்று விழுந்தது. நீலி ஓடிப்போய் மரத்தில் குடியேறினாள். தம்பியும் தாவி உட்கார்ந்து கொண்டான். பெரிய வயல் வெளியும் நடுவில் ஒரு மரமும் அது வேகமாய் வளர்வதைக் கண்டு மக்கள் வியந்தார்கள்.

நீலி, மண்ணை ஈரம் செய்து அங்கு இறந்து போன மிருகங்களைக் கொண்டு வந்து புதைத்தாள். நாய்கள், பூனைகள், சிறிய கன்றுகள், பசுவின் கருப்பைக் கழிவுகள் அங்கு பூமிக்கடியில் உரமாகப் போடப்பட்டன. மரம் பெருத்துக் கிளர்ந்தது. ஒரு மாதத்தில் ஒன்றரை அடி இரண்டடி பெரிதாயிற்று.

வயலுக்கு நடுவே மரம் இருப்பது இளைப்பாற சௌகர்யமாக இருந்தாலும், மனிதர்கள் அங்கு இளைப்பாறும் போது விசித்திர உணர்வுகளை அடைந்தார்கள். கண் மூடினால் உடனே தூக்கம் வந்துவிடுகிறது. தூக்கம் வந்தால் விதம் விதமான சொப்பனங்கள் வந்து பயமுறுத்தின.

தரைமுழுவதும் சிவப்பு எறும்புகள் அதிகம் அலைந்தன. நோண்டிப் பார்த்தால் வெகு ஆழத்திற்கு எறும்புகள் போவது



தெரிந்தது. இந்த எறும்புகள் தலை சாய்ந்த நெல் மீது ஏறினால் நெல்லில் ஓட்டை போட்டு அரிசியைத் தின்று விடும்.

எனவே மரத்தை அப்புறப்படுத்த மறுபடியும் திட்டமிட்டார்கள். ஏலமிட்டார்கள். முன்பு வெட்டியவனே மறுபடி ஏலம் எடுத்தான். இரண்டு மூன்று கலப்பைகள் செய்யலாம் என்று கணக்கு போட்டான்.

அவன் கோடாரியோடும் ஆட்களோடும் வந்தபோது, மறுபடியும் அவன் முன்பு நவக்கியானி புகை வடிவமாய்த் தோன்றினாள்.

''ஐயா, அமர்ந்து என் கதையைக் கேளுங்கள். நான் புருஷனால் அநியாயமாய்க் கொலை செய்யப்பட்டவள்.'' என்று உச்சி வெய்யிலில் கைகூப்பினாள்.

அவன் பயந்து உளறி ஊர் கடையிடம் சொல்ல ஊர் அல்லோலகலப்பட்டது.

காஞ்சிமாநகருக்குப் போய் அந்தணர்களைக் கலந்தாலோசித்து, பேய் விரட்டும் பூசாரிகளை அழைத்து வருவது என்று ஒரு சிறு கும்பல் கிளம்பியது.

காஞ்சிபுரத்துக்கருகில் உள்ள ஏனாத்தூர் மாரியம்மன் கோவில் பூசாரி, மக்களின் விண்ணப்பம் கேட்டு புவனபதியிடம் வந்து கை கட்டி நின்றான்.

''கங்கையை வெற்றி கொண்டவரே, காசியை ஜெயித்து வந்தவரே, மஹாபண்டிதரே.'' என்று விழுந்து வணங்கினான் - விஷயம் சொன்னான்.

ஊர் மக்களும் வணங்கினார்கள்.

''பழையனூரில், புருஷன் கொன்று விட்டான் என்று ஒரு பேய் பேசுகிறதாம். அது தங்கியிருக்கும் மரத்தை வேகமாய் வளரச் செய்கிறதாம். பகலில் புகை உருவமாய் வந்து பேசுகிறதாம். இவர்கள் பயந்து போய் என்னிடம் வந்திருக்கிறார்கள்.

பகலில் எந்த துர்சக்தியையும் நான் கண்டதில்லை. நான் என்ன செய்ய வேண்டுமென்று தயவு செய்து வழிகாட்டுங்கள். சிறிது கங்கை நீர் கொடுத்து உதவுங்கள். மந்திரித்த கோடாரி, வீச்சரிவாள் ஏதும் கொடுத்து உதவுங்கள். மறுபடியும் வராதிருக்க தகடு எழுதித் தாருங்கள். உண்டான சன்மானம் வாங்கிக் கொடுத்து விடுகிறேன்.''

புவனபதிக்கு வயதாகி இருந்தது. குடுமியும் தாடியும் வெண்மையாய் நரைத்திருந்தன. ஆனால் இடைவிடாத மூச்சுப் பயிற்சியாலும், ஆசனப்பயிற்சியாலும், செல்வத்தாலும், சந்தோஷத்தாலும், பயமற்ற பெண் போகத்தாலும் உடம்பு உறுதியாகவும் முகம் களையாகவும் இருந்தது.

''பழையனூரில் எந்த இடம்?'' புவனபதி கேட்டான்.

திண்ணையில் சீடர்கள் சூழ, பீடம் போட்டு அமர்ந்து கொண்டு எதிரே உள்ள ஊர் மக்களைக் கவனித்தான்.

எதேச்சையாய் தெருக்கோடியைப் பார்த்தபோது, அங்கு நவக்கியானியும், சிவக்கியானியும் இருப்பதைக் கவனித்தான். கோபமானான்.

''அத்தனை திமிராடி உனக்கு.'' கைக்கோலுடன் ஆவேசமாய் எழுந்தான்.

வேளாளர்கள் பயந்து சிதறினார்கள். பூசாரி வாய்குழறி மண்டியிட்டான்.

''எனக்குப் புரிந்து விட்டது. புருஷனால் கொல்லப்பட்ட பேய்தான் அது. நான் மந்திரித்து ஒரு ஆயுதம் தருகிறேன். முழுங்கை அகலக் கோடாரி அது. அதனால் மரத்தை வெட்டுங்கள். மஞ்சள் கலந்த கங்கை ஜலம் ஒரு குடம் தருகிறேன். அந்த இடம் முழுவதும் தெளியுங்கள். சூலம் செதுக்கிய மூலக்கல் தருகிறேன். அதில் காவல் தேவதையை உருவேற்றித் தருகிறேன். நடுப்பகலில் தினமும் நைவேத்தியம் செய்யுங்கள். அங்கு பேய் வராது.'' என்று கோபமாய்ச் சொன்னான்.



ஒவ்வொரு தனூர் மாசமும் ஒரு வண்டி நெல் பழையனூர் தனக்கு அனுப்ப வேண்டுமென்று கட்டளையிட்டான்.

புதிய கோடாரி செய்து, மந்திரம் உருவேற்றி ஒரு வாரம் கழித்து அவர்களுக்கு அனுப்பினான். சூலம் செதுக்கிய கல்லை உருவேற்றி, பாலில் அமிழ்த்தி வைக்கச் சொன்னான். நல்ல நாள் குறித்துக் கொடுத்து நடச் சொன்னான்.

நவக்கியானி அந்தப் பக்கம் வந்த எல்லோரையும் கெஞ்சினாள். யாரும் பயந்து வராது போகவே, வீட்டுக் கொல்லையில் பெண்கள் முன் தோன்றி கைகூப்பினாள்.

விடியல் நேரத்தில் திண்ணையில் தூங்கும் ஆண்களுக்கு அருகே அமர்ந்து, எழுப்பி கதை சொல்ல முற்பட்டாள். வேளாளர்கள் கேட்க மறுத்தார்கள்.

'ஐயோ, அம்மா பேய்' என்று கத்தினார்கள்.

கோடாரி வந்த அன்று, வேளாளர் வீட்டு ஓடுகளை நவக்கியானி எட்டி உதைத்து தரையில் அறைந்தாள்.

ஒரே நேரத்தில் பல பேர் வீட்டில் வளைந்த ஓடுகள், தடதடவென்று சரிந்து விழுந்தன.

வேளாளர்கள் கோபமானார்கள். ஊரில் உள்ள அத்தனை பேரும் கூடிநின்று, புவனபதி சொல்லிக் கொடுத்த மந்திரம் சொன்னார்கள். கையில் கயிறு கட்டி இடைவிடாது மணி அடித்து, சப்தம் எழுப்பி சடேர் சடேரென்று மரத்தை மந்திரித்த கோடாரியால் வெட்டிப் போட்டார்கள்.

அந்த மந்திரித்த கோடாரியைப் பூசாரி வாங்கிக் கொண்டான்.

மரம் வெட்டப்பட்டதும் ஊவென்ற சத்தத்தோடு நீலி புகையாய், புழுதியாய், பெருங்காற்றாய் பழையனூர் முழுவதும் அலைந்தாள்.

''மனிதர்களே, மனிதர்களே, நான் என்ன பாவம் செய்தேன்? என்னை ஏன் இப்படி விரட்டுகிறீர்கள்? என்று

கதறினாள். '' எங்களை தவம் செய்ய ஒட்டாது மரம் வெட்டிய வேளாளர்கள் அனைவரையும் நான் அவர்களது மறுபிறவியில் வஞ்சனையால் கொல்லுவேன்'' என்று தரையிலடித்து சபதமிட்டாள்.

கோவில் மதிற்சுவற்றில் போய் அமர்ந்து கொண்டாள்.

''ஐயா, ஒரு வண்டி நெல் கொண்டு வந்திருக்கிறோம். இரண்டு மூட்டை பூசணி, மூன்று மூட்டை கத்தரி, ஐந்து மூட்டை துவரை, ஆறு மூட்டை வெல்லம் இவையும் கொண்டு வந்திருக்கிறோம். இது எங்கள் குரு காணிக்கை. எங்கள் ஊரைத் தொடர்ந்து நீங்கள் காப்பாற்ற வேண்டும்.''

புவனபதியை வேளாளர்கள் வணங்கினார்கள்.

'புவனபதி அவர்களை ஆசீர்வதித்தான். அவன் புகழ் மேலும் பல இடங்களுக்குப் பரவியது.

பழையனூர் நீலி என்கிற நவக்கியானியின் நிலையைப் பார்த்த சிவகணங்கள் கோபமாயின. புவனபதி எப்போது தவறு செய்வான் என்று காத்திருந்து, அவனைத் தண்டிக்க அவன் மனைவியின் கர்ப்பத்திலிருக்கும் குழந்தையை ஊமையாக்கின.

குழந்தையைப் பார்க்கப் பிடிக்காமல், காஞ்சிபுரத்து தாஸிகள் வீட்டில் தங்கினான்.

அங்கே அவனுக்கு பல குழந்தைகள் பிறந்தார்கள். அவர்களுக்கு பல வித்தைகள் கற்றுக் கொடுத்தான். பல கோயில்களுக்கு திருப்பணிக் கொடை வழங்கினான். அன்னச் சத்திரங்கள் கட்டினான்.

காஞ்சிமாநகருக்கு வரும் வழியை தன் செலவிலேயே உயர்த்திக் காட்டினான். அந்த வழியில் இளைப்பாறும் சத்திரம் அமைத்தான். சொத்துக்களைக் குழந்தைகளுக்குப் பிரித்துக் கொடுத்தான்.



மனைவி இறந்துபோன பதினாறாம் நாள் துறவு பூண்டான். துறவியாய் இருந்து கச்சாலீஸ்வரர் கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்தான். பன்னிரெண்டு வருடம் கழித்து, மறுபடியும் கும்பாபிஷேகம் செய்தான். அடுத்த பன்னிரெண்டு வருடம் கழித்து இன்னொரு கும்பாபிஷேகமும் செய்தான்.

அரசர்கள் அவன் முன் கை கட்டி நின்றார்கள். பண்டிதர்கள் அவன் காலைக்கட்டிக் கொண்டு முத்தமிட்டார்கள். அவன் என்ன கேட்டாலும் தர, பிரபுக்கள் சித்தமாக இருந்தார்கள். அவன் வடக்கிருந்து உயிர்விட தீர்மானித்தான்.

''என் உடம்பு கெட்டிப்பட்டு விட்டது. அதற்கு எளிதில் மரணம் வராது. எனவே நானே முயற்சி செய்து உடம்பை உயிரிலிருந்து பிரிக்கப் போகிறேன். என்னை சமாதியாக்கும் முறையை இதில் எழுதியிருக்கிறேன்.'' என்று சீடர்களுக்கு உத்தரவிட்டு தன் வீட்டுத் திண்ணையில் உண்ணா நோன்பு துவங்கினான்.

நவக்கியானியையும் சிவக்கியானியையும் தேடி அவர்களிடம் மன்னிப்பு கேட்டான். அவர்கள் விலகினார்கள்.

புவனபதி அவர்களிடமிருந்து நகர்ந்து, மந்திர ஜபத்தில் ஆழ்ந்தான்.

சட்டென்று கண் திறந்தான்.

கண் வழியே அவன் பிராணன் போயிற்று. தலை தொங்கியது.

'சிரசு வழியே பிராணன் போகவில்லையே.' சீடர்கள் கலங்கினார்கள். தேங்காயால் அடித்து கபாலத்தைத் திறந்தார்கள்.

''புவனபதி கபால மோட்சம் அடைந்தார். உச்சி வழியே உயிர் பிரிந்தது'' என்று சொன்னார்கள்.

ஊர் புவனபதியை வணங்கிற்று.

புவனபதிக்கு மறுபடி பிறக்க கட்டளை வந்தது.

## 47

காலம் நகர புவனபதியைத் தொடர்ந்து காஞ்சிபுரத்திலுள்ள அவன் உறவுகள் இறந்தார்கள். பழையனூரில் வாழ்ந்த வேளாளர்கள் அவ்வப்போது இறந்தார்கள்.

தர்மதேவன் முன்பு நின்று விட்டு அவரவர் வினைக்கேற்ப மறுபடி பழையனூரிலேயே பிறந்தார்கள். வளர்ந்தார்கள்.

புவனபதி காஞ்சிபுரத்தில் ஒரு வணிகக் குலத்தில் செல்வந்தனாகப் பிறந்தான். பிராமண வாழ்க்கையில் எப்போதும் பணமே குறிக்கோளாக, லாபமே எண்ணமாக இருந்ததால் வணிகனாகப் பிறந்தான்.

காசி வரை போய் பல முறை கங்கையில் நீராடி பலருக்கு தானம் அளித்ததால் நல்ல செல்வந்தர் வீட்டில் பிறந்து செளகர்யமாக வளர்ந்தான். அரசனுக்கு ப்ரியமுள்ளவனாகவும் மக்களிடையே செல்வாக்கு உடையவனாகவும் வளர்ந்தான். கூர்ந்த மதி உடையவனாக இருந்தான்.

அவனைச் சுற்றி பண்டிதர்களும் ஜோசியர்களும் இருந்தார்கள். ஆடல் மகளிர் சுகத்தைக் குறைவர அனுபவித்தான்.

அந்தணனாக இருந்த போது எவளை முதன்முதலாகத் தொட்டானோ அவளே செட்டி மகளாகப் பிறந்து அவனுக்கு மனைவியானாள். மிக நன்றாக இல்லறம் நடத்தினாள். அவன் போக்குக்கு அனுசரித்து வாழ்ந்தாள். ஆணும் பெண்ணுமாகப் பல குழந்தைகள் பெற்றாள்.

வணிகனாகப் பிறந்த புவனபதிக்கு தரிசனம் செட்டி என்று பெயர். தெற்கே பல சிவ தலங்களைத் தரிசித்துக் கொண்டும் பொருள்களை விற்றும் வாங்கியும் சிற்றரசர்களையும் பேரரசர்



களையும் சந்தித்தும், சல்லாபித்தும் அவன் வாழ்க்கை கம்பீரமாக நடந்தது.

குடந்தைக்கு அருகே பெரிய சோழர் மாளிகையில் இரும்புப் பொருட்கள் விற்க முயற்சித்தபோது, அங்கே ஒரு அந்தணருக்கு விழா எடுப்பதைப் பார்த்து அதில் கலந்து கொண்டான். அந்த அந்தணர் காசிக்குப் போய் வந்தார் என்று அவனுக்குச் சொல்லப்பட்டது.

அந்த அந்தணர் காசியை விவரித்தார். அதன் மகிமையைச் சொன்னார். அது எல்லாம் அவனுக்கு ஏற்கனவே தெரிந்த விஷயம் போல் மனதிற்குத் தெரிந்தது. அகலமும் நீளமுமான கங்கையில் படகு ஓட்டிப் போவது போல கனவு வந்தது.

''காசிக்கு எவர் போக விருப்பப்பட்டாலும் அரசர்களும் பிரபுக்களும் ஊக்கப்படுத்த வேண்டும்.

காசிக்குப் போகிறேன் என்று சங்கல்பம் செய்து கொண்டால் ஆறு மாதத்திற்குள் பயணப்பட்டு விட வேண்டும். வலு உள்ளபோதே சங்கல்பம் செய்து கொள்ளுங்கள்.

இப்போதெல்லாம் காடுகளுக்கு நடுவே கூட பர்ண சாலை அமைத்து யாத்ரீகர்களுக்காக வசதி செய்திருக்கிறார்கள்.

கலிங்க தேசத்தில் ஒட்டகைகள் வாடகைக்குக் கிடைக்கின்றன. முதல் நாள் பயணம் கடினமாக இருக்கும். பழகிவிட்டால் ஒரு மாதத்திற்குள் காசியை அடைந்து விடலாம். வழியே கள்வர் பயமில்லை. காட்டு மிருகங்கள் தாக்கலாம். அங்கங்கே வீரர்கள் துணைக்கு வருகிறார்கள். ஒரு வருடம் காசியில் தங்கிவிட்டு வந்தால் இன்னொரு பிறவியே இல்லை'' என்றெல்லாம் விவரித்தார்.

காசிக்குப் போகும் சங்கல்பம் செய்து கொண்டு தரிசனம் செட்டி காஞ்சிபுரத்திற்கு வந்தான். தனது எண்ணத்தை மனைவியிடம் சொன்னான்.

''போய் வாருங்களேன்'' அவள் சம்மதம் தெரிவித்தாள். ''நிறைய பட்டுத்துணி வாங்கி வாருங்கள்'' என்று யோசனை சொன்னாள்.

''காசிக்குப் போவதற்கு முன் நாடி ஜோசியம் பார்.'' நண்பர்கள் அறிவுரை செய்தார்கள்.

''எதற்கு?'' என்று அவன் வியப்போடு கேட்டான்.

''என்னவிதமான பரிகாரங்கள் செய்ய வேண்டுமென்று நாடி ஜோசியம் தெளிவாகச் சொல்லிவிடும். பொற்காசுகள் கொடுப்பது பரிகாரமா. துணிமணிகள் கொடுப்பது பரிகாரமா, தீபங்கள் ஏற்றுவது பரிகாரமா என்றெல்லாம் நாடி ஜோசியர்கள் சொல்வார்கள்.''

''ஏன் இப்படி மாறுபடுகின்றன..?'' அவன் ஆச்சரியத்தோடு கேட்டான்.

''பிறர் சொத்துக்களை போன ஜென்மத்தில் கொள்ளை அடித்திருந்தால், திருடியிருந்தால் பொற்காசுகள் பரிகாரம். பெரியோர்களைப் பேச்சால் அவமானப்படுத்தியிருந்தால் துணிமணிகள் பரிகாரம். பெண்களை இழிவுபடுத்தியிருந்தால் தீபங்கள் பரிகாரம். வேதத்தை, வித்தையைப் பழித்திருந்தால் பசு தானம் பரிகாரம், உணவு போட மறுத்திருந்தால் அன்ன தானம் பரிகாரம். நாடி ஜோசியர்கள் நீ போன ஜென்மத்தில் என்ன பாவம் செய்தாய்? அதற்கு என்ன பரிகாரம் என்று சொல்லி விடுவார்கள். பரிகாரத்தை நீ இங்கு செய்வதைவிட காசியில் செய்வது நல்லதல்லவா'' என்று ஆசோசனை சொன்னார்கள்.

வணிகன் சகலமும் கேட்டு வியப்பானான். அவன் அடி மனதில் பரிகாரம் செய்வதற்காகவே காசிக்குப் போக வேண்டும் என்று தோன்றியது. ஏதோ ஒரு பரிகாரம் செய்தே ஆக வேண்டும் என்கிற எண்ணம் அடிக்கடி ஏற்பட்டது.



காசிக்குப் போனவர்களை காஞ்சிபுரத்தில் சந்தித்தான். பரம்பரை பரம்பரையாக காசிக்குப் போகிறவர்கள் வாழும் வீடு என்று ஒரு வீட்டைக் கேள்விப்பட்டு அங்கு போய்க் கை கூப்பினான்.

அது அவன் வாழ்ந்த வீடு. புவனபதியாய் வளர்ந்த வீடு.

''நீ காசிக்குப் போவது இருக்கட்டும் வணிகனே. வெள்ளிக்குடம் ஒன்று கிணற்றில் விழுந்துவிட்டது. எடுத்துத் தருவாயா. இதற்கு ஆட்கள் எவரேனும் வந்தால் அனுப்பேன்.''

அந்த வீட்டுப் பெண்மணி அவனைக் கேட்டாள். அவள் புவனபதியின் மனைவி. மறுபடியும் அதே வீட்டில் மகளாகப் பிறந்து அங்கே சீரும் சிறப்புமாக வளர்ந்து சொந்தத்திலேயே திருமணம் முடித்து அதிகாரம் செலுத்தி வந்தாள்.

இருபது வயதிலேயே புருஷனோடு காசிக்குப் போய் இருபத்தியிரண்டாவது வயதில் காஞ்சிபுரம் திரும்பி வந்திருந்தாள். காசிக்குப் போய் வந்த பெண்மணி என்பதால் ஊர் அவளை மிக கௌரவமாக நடத்தியது.

அந்த வணிகனைப் பார்த்த மாத்திரத்தில் அவனைப் பிடித்திருந்தது. அந்த வணிகனும் அவள் கட்டுடல் பார்த்து மெல்ல மயங்கினான். சுதாரித்துக் கொண்டான்.

''இதற்குப் போய் ஆட்கள் எதற்கு? நான் நன்கு நீச்சல் தெரிந்தவன்'' என்று கிணறு எட்டிப் பார்த்தான்.

கயிறு பிடித்து சரசரவென்று இறங்கினான்.

அந்த அந்தணப் பெண்மணி மேலிருந்து எட்டிப் பார்த்தாள். 'கவனம் கவனம்' என்றாள்.

அவன் கிணற்று நீரை அதிகம் கலக்காமல் ஒரு மூங்கில் போல அமைதியாக உள்ளிறங்கினான்.

சூரிய வெளிச்சத்தில் வெள்ளிக்குடம் தென்பட்டது. அதை நோக்கி நீந்தி எடுக்கையில், குளத்தின் அடியில் தங்க

நாணயங்கள் பளபளத்தன. அவன் தேடித்தேடி நாணயங்களைப் பொறுக்கினான். இடுப்பு மடிப்பில் மடமடவென்று பல நாணயங்களை சொருகிக் கொண்டன. கயிறு பிடித்து வெள்ளிக் குடத்தோடு மேலே வந்தான்.

உடம்பு காட்ட வெட்கப்பட்டவன் போல சட்டென்று மேல் துண்டை இடுப்பில் சுற்றிக் கொண்டான். அந்த வணிகனின் ஆகிருதி பார்த்து அந்தணப் பெண்மணி பரவசமானாள். தலை துவட்டிக்கொள்ள ஈரிழைத் துணி கொடுத்தாள்.

''கூடத்துக்கு வாருங்கள்'' என்று அழைத்துப் போய் சூடாக பசும்பால் கொடுத்தாள்.

கணவனுக்கு ஆள் அனுப்பி வரவழைத்து, காசி பற்றி விவரிக்கக் கட்டளையிட்டாள். அவளே மூன்று தலைமுறைக்கு முன்பு காசியிலிருந்து கொண்டு வந்த தவலைகளையும், பித்தளைத் தட்டுகளையும் அன்னபூரணி சிலைகளையும், ஆயுதங்களையும் காட்டினாள்.

அவைகளைத் தொடத் தொட அவனுக்கு காசிக்குப் போகும் எண்ணம் வெகு வேகமாய் அதிகரித்தது. போகும் வழிகளைக் கேட்டுக் கொண்டு அவன் வீடு திரும்பினான். அந்தப் பொற்காசுகளை எடுத்துத் தடவித் தடவிப் பார்த்தான்.

பொற்காசுகளுக்கு காது வளையம் வைத்து தன்னுடைய சங்கிலியில் தனித்தனியாகக் கோர்த்துக் கொண்டான். மேல் வயிற்றில் பொற்காசுகள் உரசும் போதெல்லாம் அவனுக்கு காசிக்குப் போகும் ஆசை கிளர்ந்து கிளர்ந்து எழுந்தது.

தினமும் கச்சாலீஸ்வரர் கோவில் போய் சிவனைப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தான். கோவிலுக்குள் நுழைந்ததும் அந்த பிராமணப் பெண் எதிர்பட்டாள்.

''என்ன... வணிகரே... காசிக்குக் கிளம்பவில்லையா.'' துள்ளி எழுந்திருந்தாள்.



இருபத்திரண்டு வயது. இரண்டு பிள்ளை பெற்ற உடம்பு. ஆயினும் கடைந்த பதுமையாக இருந்தாள்.

அந்தணப் பெண்கள் கச்சு அணிவதில்லை. மாறாய் நிறைய நகை அணிவார்கள். அவள் வசீகரம் வணிகனை நிலை குலைத்தது.

''பயணப்படும் வேளை வரவில்லை.'' அவளுக்கு அவன் பதில் கூறினான்.

அவன் வாக்கியம் அவனுக்கே அச்சானியமாய் இருந்தது.

ஆனால் அதை அவள் கவனிக்கவில்லை. ''இதற்கெல்லாம் மயங்கக் கூடாது. உதறிக் கிளம்பிவிட வேண்டும். போய்த் திரும்பி வந்தால் என்ன மரியாதை தெரியுமா? உங்களிடம் தனியே பேச வேண்டும் என்றிருந்தேன். இப்போதுதான் சந்தர்ப்பம் வாய்த்தது. நிறைய பொற்காசுகள் எடுத்துப் போங்கள். ஐந்தாயிரம், பத்தாயிரம் என்று அன்னபூரணி சிலை வாங்கி வாருங்கள். ஒரு பொற்காசுக்கு பத்து சிலைகள் வாங்கி ஒரு சிலையை ஒரு பொற்காசுக்கு விற்கலாம்.

காசி தேசத்திலிருந்து எருமைகளும், பசுக்களும், எருதுகளும் ஓட்டி வரலாம். இங்கு பெருத்த விலையில் விற்க முடியும். சோழர்கள் பலம் குறைந்து பல்லவர்கள் படையெடுப்பு துவங்கும் போல் இருக்கிறது. காஞ்சி மாநகரைக் கைப்பற்ற பல்லவர்கள் துடிக்கிறார்கள். கிழக்குக் கடற்கரையோரமாக யார் பயணம் பட்டாலும் பல்லவர்கள் அவர்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்கிறார்கள்.

கால்நடைகள் வாங்க நான் காசு தருகிறேன். பாதி கால்நடைகள் நீங்கள் எடுத்துக் கொண்டு மீதியை எனக்குக் கொடுங்கள். காசிக்குப் பயணப்பட தை மாதம் சிறந்த காலம். தயவு செய்து தயங்காதீர்கள்.

நான் காசு கொடுப்பதை யாருக்கும் சொல்லவும் வேண்டாம்.''

வணிகன் தலையாட்டினான். சிவன் கோவிலைச் சுற்றி வந்தான்.

எதிரே காஞ்சிபுரத்து நாடி ஜோஸ்யர் முருகவேள் எதிர்ப் பட்டார்.

''நாடி பார்க்க வேண்டும்'' என்றதும், ''இப்பொழுதே வாருங்கள். வீட்டிற்குப் போய் உட்கார்ந்து பேசுவோம்.'' என்று அழைத்தார்.

நாடியில் பொது காண்டம் படிக்க அவன் காஞ்சிபுரத்துக்கு வடக்கே போகக்கூடாது என்று எழுதப்பட்டிருந்தது. காரணம் தெரிய வேண்டுமென்றால் முன் வினைக் காண்டம் படித்துப் பார்த்தால் புரியும் என்று சொல்லப்பட்டிருந்தது.

''அதையும் பார்த்துருவம்.'' முருகவேள் அவனுடைய முந்தைய ஜென்ம காண்டத்தைப் பிரித்தார்.

காஞ்சிபுரம் வட எல்லை கடந்தால் மரணம் நிச்சயம் என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

## 48

'காரணத்தைச் சொல்லுகின்றேன் கணவதியே கேளுமய்யா... காலமெல்லாம் காப்பாற்ற

கடவுளிடம்
கையடித்துச் சொல்லிவிட்டு
கையாலே இரும்பெடுத்து
கன்னி உச்சி தாக்கிவிட்டான்
கபாலம் உடைத்துவிட்டு
கையலம்பி ஓடிவிட்டான்'



'பெண்ணாகிப் பிறந்த அவள்
பேயாகித் திரிகின்றாள்
பேயாகத் திரிந்த அவள்
பேசாமல் போவாளா
பேசாமல் இருப்பதற்கோ
பேயாகித் திரிகின்றாள்
பேய் வாழ்க்கை வேதனையை
பேதையவள் சொல்வாளா'

படிக்கப் படிக்க வயிறு கலங்கிற்று.

''நானா'' தரிசனச் செட்டி வியந்தான்.

''நானா கொலை செய்தேன்?''

''அடிச்சா பதிலுக்கு அடிக்கக் கூடாதுங்க. அடிக்கக் கூடாதுன்னு அப்பாரு சொல்லி இருக்காரு. என் பொண்டாட்டி எதுக்கோ என்னைத் தள்ளி விட்டுட்டா... வேற எவனா இருந்தாலும் அப்படிச் செய்ததற்கு அடிச்சு அலற விட்டுருப் பான். நான் தெரியாம செய்துட்டானு விட்டுட்டேன். என்னப் போய் கொலை செய்ததா சுவடி சொல்லுதே. தாங்க முடியல லியே''

''நாகத்தையின் மகனே தரிசனச் செட்டி, இது போன ஜென்மக்கதை. நீ சண்டை போடற பார்ப்பான்னுல சுவடி சொல்லுது.''

''அப்ப நான் காசிக்குப் போக முடியாதுங்களா?'' தரிசனச் செட்டி கேட்டான்.

''காஞ்சிபுரத்துக்கு வடக்கே போக முடியாது. நீ காசி பற்றி பேசறியே.''

''எனக்குப் போகணும்னு ஆசை இருக்குங்க.''

''எதுக்கு காசிக்குப் போகணும். தெற்கே மதுரைக்குப் போங்க. தஞ்சை, குடந்தை போங்க. சிதம்பரம், மயிலாடுதுறை போங்க. திருச்சீரபுரம் வழியா கன்யாகுமரி வரைக்கும் போங்க. எதுக்கு காசி போகணும்?

போனா ஆபத்துன்னு தெள்ளத் தெளிவா சொல்லிருக்கு. பேயடிக்கும்னு போட்டிருக்கு.'' ஜோசியர் முருகவேள் கூறினார்.

''ஏங்க அந்த அம்மாவுக்கு சாந்தி பண்ணலாமா.''

''செய்து பாருங்க.''

''என்ன சாந்தி செய்யணும்.''

''நிறைஞ்ச சுமங்கலிக்கு புடவை எடுத்துக் கொடுங்க. ஒரு பானை தித்திப்பு தயிர் கொடுங்க.'' - ஜோசியர் சொல்ல, பளிச்சென்று தரிசனச் செட்டியின் மனக்கண் முன்பு பார்ப்பனப் பெண்ணின் உருவம் வந்தது.

''ஐயோ புடவையா எனக்கா... எத்தனை அன்பு உங்களுக்கு. அது என்ன தயிரா. தயிரு புளிக்கலையே. புளிச்சா எனக்குப் பிடிக்காது. இரண்டையும் திண்ணைல வச்சுடுங்கோ. நான் எடுத்துக்கறேன்...'' கொஞ்சலும் கெஞ்சலுமாய் பேசும் குரல் கேட்டது.

தரிசனன் புடவையும், தயிர்ப் பானையுமாய் கச்சாலீஸ்வரர் கோவிலில் உட்கார்ந்திருந்தான். அவள் இரண்டு குழந்தைகளோடு ஆடி அசைந்தபடி கோவிலுக்கு வந்தாள்.

''அட என்ன இங்க உட்கார்ந்திருக்கேள்?''

''உங்களுக்குப் புடவையும், தயிரும் கொண்டு வந்திருக்கேங்க.''

''எதுக்கு?'' அவள் வியந்தாள்.

''ஒரு பரிகாரமா.''

''சரி; வாங்கிக்கறேன். காசிக்குப் போறது என்னாச்சு.''



30/8/7 465590

''போக முடியாது போல இருக்கே.''

''ஏன்?''

''நாடி பார்த்தேன். அதுல வடக்க [illegible]னு போட்டிருக்கு.''

''யாருக்கு?''

''எனக்குத்தான்.''

''உங்களுக்கு வேற வேலையில்லையா? தைரியம் புருஷ லட்சணம். பிரயாணம் வணிக லட்சணம். செட்டியார் குலத்துல பிறந்துட்டு வடக்க போனா சாவு. தெற்க போனா வியாதின்னு உட்கார்ந்திருக்க முடியுமா? உங்க ஜாதிலயே சிரிக்க மாட்டாளா? யார் உங்களைக் கொல்வாளாம். அதில போட்டுருக்கா?''

''என் பொண்டாட்டி.''

''என்னது.''

''நான் போன ஜன்மத்துல ஐயனா இருந்தேனாம். என் பொண்டாட்டிய அடிச்சுக் கொன்னேனாம். அவ ஆத்திரத்தோட வடக்க காத்திண்டிருக்காளாம்.''

''அடக் கூத்தே. அப்படின்னு யார் சொன்னா.'' அந்த அந்தணப் பெண்மணி அழகாக வியந்தாள்.

தரிசனத்திற்கு தலை சுற்றியது. இப்படி ஒரு அழகா. மறுபடி மறுபடி வியந்தது.

''நம்ம முருகவேள் சுவடி படிச்சுச் சொன்னாரு.''

''எத்தனை தட்சணை.''

''மூணு பொன். முதல்ல பொது காண்டம் படிக்கறதுக்கு இரண்டு பொன். பூர்வ காண்டம் படிக்கறதக்கு இன்னொரு பொன். விதி முடிவு காண்டம்னு ஒண்ணு இருக்கு... அதுவும் படிக்கலாம். அதுக்கும் ஒரு பொன். நான் வேண்டாம்னு வந்தட்டேன்.''

''நீங்க நம்பறேளா இதை? எனக்கென்னமோ இது காசு புடுங்கற விஷயமா படறது. உங்களை யார் அங்க அனுப்பிச்சா?''

''முருகவேள் எதிரே வந்தாரு. நான் படிக்கணும்னு கேட்டேன். வாங்கோ போலாம்னு உடனே கூட்டிக் கிட்டுப் போய்ட்டாரு.''

''அவருக்கு காசு தேவைப்பட்டிருக்கும். உட்கார வச்சு புடுங்கி அனுப்பிச்சுட்டாரு.''

''அப்படிப்பட்டவரு இல்லீங்க.''

''இந்தக் காலத்துல யாரையும் நம்ப முடியாது. ஜோசியக் காரனுக்கு காசு தான் குறி. எல்லாத்தையும் சுத்தமா மறந்துட்டு காசிக்குக் கிளம்பற வழியைப் பாருங்கோ. நான் ஒண்ணும் உங்கள தனியாய் போகச் சொல்லலை. குடந்தைலேர்ந்து எங்க சகோதராள் ஆறு பேர் ஒன்னா காசிக்குப் போறா. நீங்க திருவொற்றியூர் அவாளோட சேர்ந்துக்கலாம். தை அமாவாசை அன்னிக்கு திருவொற்றியூர்ல தான் தர்ப்பணம் பண்றா. நான் அறிமுக ஓலை தர்றேன். அழகா கூட்டிண்டு போய் கொண்டு வந்து விட்டுடுவா.''

''அந்தணர்கள் சேர்ப்பாங்களா.''

''பிரயாணத்துல ஜாதி என்ன. எங்க அண்ணால்லாம் வெறும் குடுமி இல்லை. நிறைய வேலை தெரிஞ்சவர். காடு, மலை சுத்தறவர். நாலாந்தலை முறையா சிலம்பம் கத்துக்கறா. நீங்க கிளம்பற வழியப் பாருங்க.''

''பயமாயிருக்குதுங்களே.''

''கச்சாலீஸ்வரர்கிட்ட பூ போட்டு பார்க்கலாமா. வெள்ளைப்பூ வந்தா போகலாம். சிவப்புப் பூ வந்தா போகக் கூடாது. குழந்தைய விட்டு எடுக்கச் சொல்வோம்.'' அவள் நந்தவனம் நோக்கி ஓடினாள்.



ஆறு பச்சை ஓலைச் சுருளோடு வந்தாள்.

''இதுல மூணு வெள்ளை. மூணு சிகப்பு. வெள்ளை வந்தா போறேள். சிகப்பு வந்தா வேண்டாம். சரியா.''

''சரி.''

''அப்புறம் பின் வாங்கப்படாது. நாடி நரம்புனு உளரப் படாது. கிளம்பிடணும்.'' அவள் அவனோடு கச்சாலீஸ்வரர் சன்னதிக்கு விரைந்தாள். வெறுமே தாளிட்டிருந்த கதவைத் திறந்தாள்.

''என் சிவனே நல்லது சொல்'' என்று கைகூப்பினாள். ஓலைகளை கீழே உருட்டினாள். குழந்தையை எடுக்கச் சொல்லி கட்டளையிட்டாள். குழந்தை எடுத்து அவளிடம் நீட்ட, தரிசனம் செட்டியிடம் கொடுக்கச் சொன்னாள்.

குழந்தையிடம் ஓலை வாங்கிக் கொண்டு அந்தக் குழந்தை யிடம் ஒரு பொற்காசு தட்சணையாகக் கொடுத்தான். குழந்தை காசை அம்மாவிடம் கொடுத்தது. அவள் அதை இடுப்பில் சொருகிக் கொண்டாள். மற்ற ஓலைகளை மளமளவென்று பொறுக்கி, 'சிவாய நமஹ' என்று கர்ப்பக் கிரகத்திலே எறிந்தாள்.

''கைல இருக்கறதைப் பிரிங்கோ...'' கட்டளையிட்டாள்.

தரிசனன் நடுங்கும் விரல்களால் பிரித்தான்.

வெள்ளை் பூ வந்தது.

''பகவானே, நீங்க தாராளமா காசிக்குப் போகலாம். ஒரு கஷ்டமும் இல்லை.'' அவள் குதூகலித்தாள்.

''புடவையும், தயிரும் வாங்கிக்கவே இல்லீங்களே...'' திரும்பவும் ஓடிப்போய் அவைகளைத் தூக்கி வந்தான். அவள் வாங்கிக் கொண்டாள்.

''நீங்க கிளம்பற வழியப் பாருங்கோ. நான் பிரதட்சணம் பண்ணிட்டு வீட்டுக்குப் போறேன்'' அவனை விரட்டினாள். அவன் கோவிலை விட்டு வெளியேறினான்.

அவன் போனதை உறுதிப்படுத்திக் கொண்டு, அவள் தயிர்க் குடத்தை கிணற்றில் கவிழ்த்தாள். மாலையை நந்தவனத்தில் தூக்கிப் போட்டாள். கையில் முறுக்கி கொடுக்கப்பட்ட புதுப் புடவையை மேல் தளத்தில் வீசி எறிந்தாள்.

''பேய்க்குப் பயந்து எனக்குப் பரிகாரமா. அப்புறம் பேய் என்னப்பிடிச்சு உலுக்கறதுக்கா...'' உரக்கப் பேசினாள்.

''பேய்ன்னா என்னம்மா'' அவள் குழந்தை கேட்டது.

''நாந்தான். வாயப் பொத்திண்டு வா.'' அவள் உடம்பதிர வேகமாக நடந்தாள்.

''எனக்காக மாடு வாங்கிண்டு வாடா... அப்படின்னு எங்கண்ணாவக் கேட்டேன். மாட்டேன்னுட்டான். வாங்கின மாடெல்லாம் அவனுக்குத் தான் வேணுமாம். காஞ்சிபுரம் பக்கம் ஒண்ணும் திரும்பாதாம். நான் விடுவேனா... வேறொருத்தன ஏற்பாடு பண்ணிட்டேன். அண்ணாவோடயே அவனை அனுப்பிச்சு, அண்ணாவோடயே வரவழைச்சி, அந்த செட்டி காசிலேர்ந்து கொண்டு வர்ற அத்தனை மாட்டையும் வாங்கிக்கறேனா இல்லையா பார்...'' நடந்து கொண்டே மறுபடி உரக்கப் பேசினாள்.

குழந்தைகள் அவள் பின்னே மூச்சிரைக்க ஓடி வந்தன.

''நீ மறுபடியும் காசிக்குப் போகப் போறியாம்மா...'' குழந்தை கேட்டாள்.

''நான் எதுக்கடி காசிக்குப் போகணும். நான் நினைச்சா காசி இங்க வரும். நான் சொடக்குப் போட்டா காசி இங்க வரும்'' அவள் சொடக்குப் போட்டாள். குழந்தைகள் வியந்து பார்த்தன. அதுகளும் சொடக்குப் போட கற்றன.

''போய்த்தான் தீரணும்னா ஒரு பரிகாரம் இருக்கு. அந்த காண்டம் படிப்போம். ஆனா பரிகார காண்டம் படிக்க இரண்டு பொற்காசு...'' முருகவேள் சொல்ல, தரிசனச் செட்டிக்கு 'நாடி ஜோசியம் ஏமாற்று வேலையோ' என்று முதன் முதலில் தோன்றியது.



''படிங்க...'' என்று இரண்டு காசு எடுத்து வைத்தான்.

முருகவேள் பரிகார காண்டம் படிக்கத் துவங்கினார்.

## 49

''**வ**டக்கே இந்த வாலிபர் போக விரும்பினால் வல்லப கணபதியே... அதற்கும் ஒரு பரிகாரம் உண்டு காண். வாசல் குறட்டை பேய் தாண்டாத படிக்கு பூசாரி ஒருத்தர், போன தலைமுறைக் கோடாலி, ஒருத்தன் வாட்டி வைத்திருக்கிறான்.

மந்திரித்த ஆயுதத்தின் மகிமை அறியாது அந்தரத்தில் ஓட்டுக் கூரை எந்திரமாய் வைத்து விட்டார். சாணகலக் கோடாரியை இரண்டு விரல் கத்தி பண்ணி, யாளிமுகப் புடைபோட்டு முயலறுத்து, பூஜை பண்ணி உடும்பறுத்துப் பூஜை பண்ணி, உறை போட்டு வைத்திருக்க ஒரு காத்தும் அண்டாது.

பூசாரி வீட்டருகே முட்டுத்தேர் நின்றிருக்கும். பூசாரி கொல்லையிலே கட்டுத்தறி சப்தமிடும். பூசாரி இடப்பக்கம் புளிய மரம் வளர்ந்திருக்கும். அகத்தின் வலப்பக்கம் அத்திமரம் பால் சொட்டும்.

மந்திரித்த கத்தி இன்னுமொரு குறி சொல்வேன். நாடி படிக்கின்ற ஆளோடு தெரு நடந்து, நாடி கேட்கின்ற ஆள் மட்டும் உள் போக, அந்தரத்துக் கோளாறே அறுந்து தரை விழும். மந்திரித்த கோடாரி, நீ எடுக்க கை உதறும். நெஞ்சுக்குள் காற்றடைக்கும். கண்ணுக்குள் நீரடைக்கும். ஏதோதோ எண்ணம் வரும். எட்டுப்பத்து மோகம் வரும். காணாத தேசம் வரும். கண்மூட அழுகை வரும்.

கை நிறைய பொன் கொடுத்து கத்தி மட்டும் வாங்கி விடு. கத்தி மட்டும் கையிருந்தால் கடல்தாண்டு கவலையில்லை. இடுகாடோ, பாழ்மனையோ, வயல் வெளியோ, மாளிகையோ, உனையெதுவும் அண்டாது. ஒரு பேயும் பாராது. காத்துக் கருப்பு வகை, நீலி நெருப்பு வகை, பூதம் கூளி வகை கிட்டத்தில் வராது. சில்மிஷங்கள் செய்யாது. மந்திரித்த கத்தி அது தினம் உன்னைக் காத்திருக்கும். உன்னோடு யார் வரினும் அவருக்கும் துணை நிற்கும்.'' முருகவேள் மொத்தமும் படித்து முடித்தார்.

''அந்தக் கத்தி வாங்கிக்குங்க. அடையாளம் ஓலை எழுதி வச்சுக்கறேன். வாங்க ரெண்டு பேருமே போய்ப் பார்ப்போம். எனக்கும் இது என்னன்னு தெரிஞ்சுக்க ஆவலாய்டுச்சு.''

அவர்கள் இருவரும் கிளம்பினார்கள். வீடு தேடினார்கள். இரண்டு, மூன்று பூசாரிகளில் எந்தப் பூசாரியிடம் கோடாரி இருக்கிறதென்று ஆராய்ந்தார்கள். எல்லார் வீட்டிலும் கோடாரி இருந்தது. ஆனால் எதுவும் மனதில் படவில்லை.

''அங்கு ஒரு பூசாரி வீடு இருக்கு. ஆனால் அவரு பூசாரி அல்ல. பூஜையெல்லாம் விட்டுட்டு வீட்டோட பயித்தியம் பிடிச்சா மாதிரி உட்கார்ந்திருக்காரு.

''ஏன், அப்படி.''

''அது சாமி குத்தம். நாங்களே அந்த வீட்டுக்குப் போற தில்ல. நீங்களும் போகாதீங்க.'' எச்சரித்தார்கள்.

ஆனால், முருகவேள் அந்த வீட்டுக் கதவு திறந்து உள்ளே போனார். வெட்டப்படாத வேலிக்காத்தான்கள். திருத்தப்படாத புல் தரைகள். மாற்றப்படாத ஓலைக் கூரை. வீடு பாழடைந்து காணப்பட்டது.

''ஐயா,'' குனிந்து முருகவேள் கதவு தட்டினார். குனிந்த படியே நிமிர்ந்து பார்ப்பது சிரமமாக இருந்தது. இன்னம் வேகமாக கதவை ஒலிக்கவிட்டு, முருகவேள் வெளியே வந்து முதுகு நிமிர்த்தினார்.



கூரை சந்திலிருந்து ஒரு கோடாரி தரை குத்தியது. பூமியில் ஒரு விரற்கடை பதிந்து நின்றது. சற்று தாமதித்து இருந்தாலும் கோடாரி முருகவேள் கழுத்தில் விழுந்திருக்கும்.

கோடாரி விழுந்த சில நொடிகளில் தடேலென்று கதவு திறந்தது. வெள்ளைச் சடா முடியும், நெற்றி நிறைய குங்குமமும், நரைத்து சடைத்த தாடியும் மீசையுமாய் ஒரு கிழவன் வெளியே வந்தான்.

வீழ்ந்த கோடாரியை வெறித்துப் பார்த்தான். பூமியிலிருந்து பிடுங்கிக் கொண்டு வெளியே வந்தான்.

''உங்களில் யார் இரத்தின மாயிலட்டி?'' உரக்கக் கேட்டான்.

மாயிலட்டி என்பது வணிகர்களுக்கு உண்டான பெயர். அட்டி என்பது மருவிதான் சில இடங்களில் செட்டி என்று அழைக்கப்படுகின்றது.

''நான்தான்.'' தரிசனச் செட்டி கைகூப்பினான்.

''உன் பெயர் தரிசனனா.''

''ஆமாம்.''

''என்ன வேண்டும்?''

''நாடி படித்தேன். கோடாரியிலிருந்து சூரிக் கத்தி செய்து கொள்ளச் சொன்னார்கள். உங்கள் வீட்டு அடையாளம் சொன்னார்கள். இரண்டங்குலம் சூரிக்கத்தி செய்ய இரும்பு தரவேண்டும். நான் வடக்கே பயணப்பட வேண்டும்.''

''வடக்கே போகாதிருப்பது நல்லதல்லவா?''

''காசி யாத்திரை செய்ய வேண்டுமென்று மனம் துடிக் கின்றது.''

''அது விதி. இந்தக் கோடாரியைக் கையிலெடுத்து என் வீட்டுப் புளிய மரத்தில் ஒரு வெட்டு வெட்டுங்கள்'' அந்தப் பூசாரி தரிசனச் செட்டியிடம் கோடாரியை நீட்டினான்.

பிடியைத் தொட்டவுடன் விலுக்கென்று தரிசனனின் நரம்புகள் இழுத்தன. உள்ளே ஒரு அலட்சியமிகுந்த வீரம் பொங்கிற்று. இதுவரை அனுபவித்திராத உணர்வாக அது இருந்தது.

அம்மாதிரி ஆள் கொல்லிக் கோடாரியை இதற்கு முன்பு தொட்டதில்லை. அதை வேகமாக சுழற்றிக் கொண்டு தரிசனன் துள்ளி நடந்தான். கோடாரியை உயர்த்தி மரத்தின் கிளைகளைப் பார்த்தான். பெரும் காற்றாடித்து, மரம் அசைந்தது.

ஓங்கி மரத்தில் கோடாரியைப் பதிக்க, வேலிக்காத்தான் புதர்கள் வெறி பிடித்தது போல் ஆடின. யாரோ உலுக்கியது போல் குலுங்கின. பூசாரி வாய்விட்டுச் சிரித்தார்.

''இது தெய்வ சித்தம். இந்தக் கோடாரியிலிருந்து கத்தி செய்ய இரும்பு தருகிறேன். எனக்கு வறுமை. ஏதேனும் கொடுத்துவிட்டுப் போங்கள்.''

''எவ்வளவு வேண்டும்?''

''இருநூறு பொற்காசுகள்'' பூசாரியை தரிசனன் உற்றுப் பார்த்தான்.

''தருகிறேன்'' என்றான்.

''இது என் தந்தைக்கு தந்தை கொண்டு வந்த கோடாரி. என் பாட்டன் இறந்த பிறகு நான் பிறந்தேன்.

பத்து வயதில் இந்தக் கோடாரியை கையில் எடுத்தபோது காஞ்சிபுரத்திலுள்ள அத்தனை பேய்களும் அலறின. இப்போதும் பேய்களும், பூதங்களும் அலறி ஓடுவதை என்னால் காண முடிகிறது. என் வறுமை நிற்க வாரிக் கொடுங்கள். உங்கள் எதிரிலேயே உலைக்களம் அமைத்து நீங்கள் சொல்லும் விதமாய் நானே கத்தி செய்து தருகிறேன். போய் காசு எடுத்து வாருங்கள். உலைக் களம் தயாராக இருக்கும்.''



தரிசனச் செட்டி வீடு நோக்கி விரைய, நாடி ஜோசியர் முருகவேள் அந்தப் பூசாரியுடன் புல்வெளியில் உலைக்களம் அமைக்க உட்கார்ந்தார்.

கண்ணெதிரே சூரிக் கத்தி தயாராயிற்று. நுனி கூர்மையாகி மெல்லிய வளைவோடு, உறுதியான யாளித்தலைப் பிடியோடு கூடிய உலோகத்தை கத்தியில் இணைத்தார்கள். வெள்ளியை உருக்கி கத்தி முழுவதும் பூசினார்கள்.

ஒரு பட்டாக்கத்தியின் மாட்டுத் தோல் உறையை துண்டு செய்து, அந்தப் பூசாரி சூரிக்கத்திக்கு சரியான உறை செய்தான். இரண்டு கைகளாலும் கத்தியை ஏந்தி வானம் பார்த்து ''தாயே'' என்றான்.

மறுபடியும் மரங்கள் ஆடின.

''அய்யா, இது உம்ம சொத்து. நீங்க யாரென்று உமக்குத் தெரியாது. ஆனால் எனக்குத் தெரியும். ஆனால், அதை நான் பேசக்கூடாது. நான் உம்மிடம் வாங்கும் காசு கூலியல்ல. தானம். இரு நூறு பொன் ஏழைப் பூசாரிக்குத் தானம்.

பெத்த தாய் கேட்டாலும் இந்த சூரிக் கத்தியைக் கொடுக்காதீர்கள். அரைஞான் கயிறு கட்டி அதில் மாட்டித் தொங்க வையும். மலங்கழிக்கப் போகும் போது தொடை மடிப்பில் வைத்துக் கொள்ளும். பெண்ணொடு கூடும்போது முதுகுப் பக்கம் நகர்த்திக் கொள்ளும். உடம்பதிலே உறுப்பாக இந்த சூரிக் கத்தி வைத்துக் கொள்ள காத்தோ, கறுப்போ, கடுவாய்ப் பெண் பேயோ, நீலி, கருங்கூளி, நெருப்பு கக்கும் கோமாரி எதுவும் அண்டாது. வேறு எவர் துணையும் ஆகாது. ஐயா உங்கள் கத்தி உங்களுக்கே.'' பூசாரி கத்தி கொடுக்க, தரிசனன் உறையோடு வாங்கி இடுப்பில் சொருகிக் கொண்டான்.

இருநூறு பொற்காசுகள் ஒரு மூட்டையாகவும், இருபத்தைந்து பொற்காசுகள் இன்னொரு மூட்டையாகவும் பூசாரிக்குக்

கொடுத்தான். பூசாரிக் கிழவன் தரிசனனைக் கும்பிட்டு வாங்கிக் கொண்டான். வாசல் வரை வந்து வழியனுப்பினான்.

''என் நாடில இருக்கறது அப்படியே நடக்குது...'' முருகவேள் பெருமை கொண்டு பேசினார்.

''முட்டாள். நீயா நாடி எழுதின. இருக்கறதப் படிச்ச அவ்வளவுதான். இதுக்குப் போய் அலட்டல் என்ன. அவரை வடக்க அனுப்பிச்சுட்டு வா. இருக்கறத அறுத்து நாலைந்து கத்தி பண்ணலாம். உனக்கும் ஒண்ணு தர்றேன். வீட்டுல சொருகி வை'' பூசாரி சொல்ல, முருகவேள் கைகூப்பி நகர்ந்தார். முருகவேளும், தரிசனச் செட்டியும் ஒன்றாக நடந்தார்கள்.

''விதி முடிவு காண்டம்னு ஒண்ணு இருக்குங்க. உங்க விதி எப்படி முடியும்னு அதுல எழுதி இருக்கும். அதப் படிக்கலாங்களா.''

''வேணாம். விருப்பமில்லை. ஆனாலும், கூட வந்து கத்தி செய்ததற்காக, உங்களுக்கு என் சன்மானம்.'' ஒரு இருபத்தைந்து பொற்காசுகள் அடங்கிய பையை அவரிடம் நீட்டினான். முருகவேள் வியந்தார்.

''சரி'' என்றார். வாங்கிக் கொண்டார்.

''ஒரு பொற்காசுக்கு ஆறு பேர் அடங்கிய குடும்பத்திற்கே சுவடி படிக்க வேண்டும். எதுவும் படிக்காமல் இருபத்தைந்து பொற்காசுகள் வழங்க பெரிய மனதிருக்க வேண்டும்.'' தரிசனச் செட்டி அவரை விட்டு விலகி தன் வீடு நோக்கி நடந்தான்.

முருகவேள் வீட்டிற்குப் போனார் மனைவியிடம் பொற்காசுகளைக் கொடுத்தார். தன் ஆசனத்தில் அமர்ந்து தரிசனச் செட்டியின் விதி முடிவு காண்டம் தேடினார்.

தரிசனச் செட்டி சூரிக் கத்தியைத் தொலைத்து நிற்பான் என்றும், பேயால் அடிபட்டுச் சாவான் என்றும், வடக்கே ஒரு பெண் பேய் அவனைக் கொல்ல காத்திருக்கிறது என்றும் எழுதப் பட்டிருந்தது.



''நமசிவாய, நமசிவாய'' முருகவேள் பதறினார். ஓலையை எடுத்துக் கொண்டு தரிசனனைத் தேடி ஓடினார். தரிசனன் கச்சாலீஸ்வரர் கோவில் போயிருப்பதாய் தகவல் தெரிவித்தனர்.

கோவிலில் பெருங்கதவு மூடியிருந்தது. தட்டிக் கதவு திறந்திருந்தது. உள்ளே போக, பகல் நேரத்திலும் மண்டபங்கள் இருட்டாக இருந்தன.

''அப்பா, நீங்க கிளம்பறேன்னு சொன்ன உடனேதான் எனக்கு நிம்மதியே வந்தது.

இதில் ஆயிரம் காசு இருக்கு. ஆள் உயர கொம்புல ஆயிரம் காசும் போட்டுக்கங்க. ஆயிரம் காசுக்கும் மாடு வாங்குங்க. நாலு எருது, கன்று பத்துன்னு பெரிய மந்தையா வாங்குங்க. வந்தவுடனே ரெண்டா பிரித்துக் கொள்வோம். நான் இதை யாருக்கும் தெரியாம, எந்த சாட்சியு மில்லாம உங்கள நம்பித் தரென். எங்கண்ணா உதவி செய்ய மாட்டேன்னுட்டான். 'உன்னைவிடப் பெரிய மந்தை நான் வாங்கிக் காட்டறேன் பாரு'ன்னு அவங்கிட்ட சவால் விட்டுருக்கேன். இந்த அபலைய ஏமாத்த மாட்டேளே.'' அவள் அருகே போய் தழுவிக் கொண்டாள்.

ஒரு கணம் தயங்கி, கச்சணியாத அவள் முதுகை அவன் ஆரத் தழுவிக் கொண்டான். அவள் கால் தூக்கிப் பின்னிக் கொண்டாள்.

''உங்கள ஏன் இவ்வளவு பிடிச்சிருக்குன்னு தெரியல.''

காரணமின்றி ஒருவரை ஒருவர் பிடித்துப் போவதற்கு முன் ஜென்மத் தொடர்பே காரணம் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் திமிறித் திமிறித் தழுவிக் கொண்டார்கள்.

கையில் ஓலையோடு நின்ற முருகவேள் மெல்ல கனைத்தார். தரிசனன் சட்டென்று அந்த அந்தணப் பெண்மணியிட

மிருந்து விலகினான். தொலைவில் முருகவேள் இருப்பதைப் பார்த்தான். அவனுக்கு அதீத கோபம் வந்தது.

''என்ன?'' என்று சீறலாய்க் கேட்டான். முருகவேள் வெளிறினார்.

## 50

''நீங்கள் கேட்டதற்கு மேல் தட்சணை கொடுத்து விட்டேனே. குருக்களுக்கும், ஜோசியர்களுக்கும் எத்தனை கொடுத்தாலும் தீராது. இன்னமும் கொடு, இன்னமும் கொடு என்று வெட்கமின்றி பின்னால் வருகின்றீர்களே. நாளும், கோளும் பார்க்கின்ற மனிதருக்கு நேரம், காலம் தெரிய வேண்டாம்'' தரிசனன் நாடி ஜோசியரைப் பார்த்துச் சீறினான்.

''மன்னிக்க வேண்டும். இது முக்கியமான விஷயம்.'' ஜோசியர் பார்க்கக் கூடாததைப் பார்த்த அருவருப்பில் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு சொன்னார்.

அவர் வேறு பக்கம் முகம் திருப்பிக் கொண்டு பேசியதால் பேச்சு விபரம் சரியாகப் புரிபடவில்லை. பூட்டிக் கிடந்த கோயிலில் சிறிய உச்சரிப்பும் பெரிய எதிரொலியாகக் கேட்டது.

''என்ன முக்கியமாக இருந்தாலும், பிறகு பார்த்துக் கொள்ளலாம். வேறு என்ன?'' தரிசனன் கோபமாய்க் கத்தினான். கோவிலை விட்டு வெளியே போ என்று சொல்ல அவனுக்கு அதிகாரமில்லை.

அதே நேரம் அந்தப் பெண்மணி தரிசனனின் தோளைத் தொட்டு மண்டபத்தின் வேறு கோடிக்குப் போவதாய் ஜாடையில் சொல்லி தூண்களுக்கு நடுவே பதுங்கிப் பதுங்கி நடந்தாள். காம வசப்பட்ட தரிசனனும் அவள் நடையையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.



கழுத்தைத் திருப்பி முருகவேளின் முதுகைப் பார்த்தான்.

முதுகு திருப்பி முகத்தை வேறு பக்கம் வைத்துக் கொண்டு முருகவேள் இருப்பதால் அவனும் பூனைபோல் நடந்து அந்தப் பெண்மணியைப் பின் தொடர்ந்தான். இரண்டு குழந்தைகள் பெற்ற பெண்ணாக இருப்பினும், அந்தப் பெண்மணியைப் பார்க்கும் போதும், தொடும்போதும் ஏற்படும் சந்தோஷம் அலாதியானதாய் இருக்கின்றது.

உலகத்தின் பல தொடர்புகளுக்கு பூர்வ ஜென்மப் பழக்கம் தான் காரணம். இந்தப் பூர்வ ஜென்ம வாசனை இருந்தால்தான் இனம் புரியாத ஈர்ப்பும், எது பற்றியும் கவலைப்படாது மறுபடி, மறுபடி பழகுவதில் உண்டான நாட்டமும் ஏற்படும்.

நாடி ஜோசியர் முருகவேளிடம் இருந்து அவர்கள் இருவரும் வெகு தூரம் நடந்து போய் ஒரு சிறிய சன்னதியின் கருவறையில் பதுங்கிக் கொண்டார்கள். உள்ளே போய் கதவை ஒருக்களித்துச் சாத்தினார்கள். உள்ளே எரிந்து கொண்டிருந்த அகல் விளக்கை அவள் ஊதி அணைத்தாள். வடக்கத்திக் காற்று மண்டபங்களையெல்லாம் கடந்து கருவறைக்குள் நுழைந்தது. தரிசனன் சட்டையைக் கழற்றிக் கதவில் மாட்டினான்.

அவளை வெறியோட தழுவிக் கொண்டான். அவர்கள் இயக்கத்திற்கு ஆயத்தமானார்கள். வெகுநாள் பிரிந்த கணவன் மனைவி போல வெறியோடு கூடினார்கள். கச்சாலீஸ்வரர் கோவிலில் உள்ள சூட்சும சக்திகள் இந்தக் கூடலைப் பார்த்து விட்டு அலறி, அலறிச் சபித்தன.

முருகவேள், அவன் இன்னமும் அங்கேயே இருக்கின்றான் என்ற நினைப்பில் ''உங்கள் விதிமுடிவு காண்டம் படித்தேன். நீங்கள் சூரிக் கத்தியைத் தொலைத்துவிடப் போகிறீர்கள். போன ஜென்மத்தில் நீங்கள் வஞ்சித்த பெண் இந்த ஜென்மத்தில் பேயாக வந்து உங்களை அடித்துக் கொல்வாள். உங்கள் சாவு சரித்திரமாகும். சந்திர, சூரியர் உள்ளவரை பேசப்படும். இதைச் சொல்லத்தான் இங்கு வந்தேன்.

இதுவரை என் நாடி ஜோசியம் சரியாக இருந்தது. இனியும் சரியாக இருக்கும். எனக்கு சன்மானம் எதுவும் வேண்டாம். வாங்கிய காசுக்கு நன்றிகாட்டவே இதையும் சொல்லத் துணிந்தேன்.'' உரக்கச் சொல்லிவிட்டு திரும்பிப் பாராமல் வாசல் நோக்கி நடந்தார்.

கோயில் மண்டபம் முழுக்க அவர் குரல் எதிரொலித்தது. அந்த எதிரொலியால் அவர் பேச்சு தெளிவில்லாமல் போயிற்று. கதவு இடுக்கு வழியே அவர் போவதைக் கவனித்த அந்தணன் மனைவி.

''அந்த நாடிப் பைத்தியம் என்ன சொல்லிவிட்டுப் போகிறது.'' தரிசனன் மீது கிடந்தபடி ஆவலோடு கேட்டாள்.

''கொடுத்த சன்மானம் போதவில்லை. கூட எதாவது கொடு என்று பின்னால் வந்து கொண்டிருக்கிறான்.''

''ஜோசியத்திற்கெல்லாம் அதிகம் செலவழிக்காதீர்கள். நம்மைப் போன்ற புத்திசாலிகளுக்கு ஜோசியம் தேவையே யில்லை'' அவள் அவனுக்கு ஆலோசனை சொன்னாள். அவன் தலையாட்டினான்.

சூரிக்கத்தியைத் தொலைத்து விடுவான் என்று தரினனுக்கு விடப்பட்ட எச்சரிக்கை மண்டபத்தில் தவழ்ந்த காற்றோடு கலந்தது. தரிசனனின் காதில் விழாமல் மேல்நோக்கி எகிறிற்று. வான்வெளியில் கலந்தது. மதில் சுவரில் ஒருபுறம் வளர்ந்த காட்டுச் செடிக்குக் கீழே அமர்ந்த நீலியின் உணர்வை உருக்கிற்று.

''அட, புருஷன் வடக்கு நோக்கி வரப் போகிறானா, இடுப்பில் சூரிக்கத்தியா, மந்திரித்து வைக்கப்பட்டதா, நல்லது. வா. உன்னைக் கதறக் கதறப் பழிவாங்க நான் காத்திருக்கிறேன். வா. தென்னாடுடைய சிவனே, என்றும் என்னொடு இரும். தில்லையின் கூத்தனே, என் ஆனந்தக் கூத்தை வாழ்த்தி



யருளும். சுடலைப் பொடி பூசிய என் சிவனே, என் வெஞ் சினத்திற்கு ஆசி சொல்லும்'' அவள் இருண்ட திருவாலங்காடு கோயிலுக்கு வெளியே தரையிறங்கினாள்.

கோயில் வாசலில் கை, கால் வீசி அருவமாய் நடனமாடி னாள். திருவாலங்காட்டுச் சுடுகாட்டில் மூன்று பாறைப் பலகைகளை நட்டு வைத்த ஒரு போர் நினைவுச் சின்னம் இருந்தது.

ஆயிரம் வருடங்களுக்கு முன்பு அன்னியர் படையெடுப் பின் போது திருவாலங்காட்டைக் காக்க தீரமாய்ப் போரிட்ட, பல நூறு வீரர்களை ஒரே குழியில் புதைத்து அதன் மீது எழுப்பப்பட்ட அவசர நடுகல் அது.

அந்தக் கல்மீது நின்றுதான் பழி தீர்க்கப்போகும் சந்தோ ஷத்தை எண்ணிக் குதூகலித்துக் குரவைக் கூத்தாடினாள். அவள் தம்பியும் ஆடினான். அவள் ஆட்டத்தைப் பார்த்துவிட்டு மற்ற பேய்களும் ஆடின.

தரிசனனின் மனம் முழுக்க, உடம்பு முழுக்க அந்த அந்த ணன் மனைவியை ஆக்ரமித்துக் கொண்டதாய், காசிக்குப் போனால் அவளைப் பார்க்க முடியாதே என்ற ஏக்கம் அப்போதே தரிசனனுக்கு வந்தது.

காசிக்குப் போய் திரண்ட செல்வத்தோடும், நிறைய நகைக ளோடும் பலதும் அவளுக்கு வழங்கி அவளைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டுமென்று ஆவல் ஏற்பட்டது. அவளை கடத்திக் கொண்டு கொங்கு தேசம் போய்விட வேண்டும். அங்கு போய் என்றுமே தன்னுடைய உடைமையாய் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

செட்டிக்காரர்கள் ஜோசியத்திற்குச் செலவழிக்க மாட் டார்கள். அதே போல் வைதிகத்திற்கும் செலவழிக்க மாட்டார் கள். கால்கள் நோக நாம் பயணப்படப் போகிறோம். இங்கே கண்டவனுக்கு ஏன் தானம். மனைவியிடம் சொல்லிவிட்டு,

இரவோடு இரவாக காசு நிறைந்த கைக்கோலும், துணி மூட்டையும் ஒரு நாள் உணவும் எடுத்துக் கொண்டு வடக்கு நோக்கி நகர்ந்தான்.

'சூரிக்கத்தி இருக்கிறதா' என்று அவ்வப்போது தொட்டுப் பார்த்துக் கொண்டான், இருட்டானாலும் தெரிந்த வழியில் தடம் பார்த்து வேகமாய் நடந்தான். அவனை யாரோ பின் தொடர்வது போன்ற ஒரு உணர்வு தீவிரமாய் ஏற்பட்டது.

திருவொற்றியூர் போய்விட்டால் அந்த அந்தணச்சியின் உறவினர்களைச் சந்தித்து விடலாம். இந்த வேகத்தில் நடந்தால் ஒரு நாள் முன்னதாகவே அவர்கள் இருப்பிடத்தை அடைந்து விடலாம். அவர்கள் பயணத் திட்டம் என்ன என்பதைப் பேசித் தெரிந்து கொள்ளலாம்.

தரிசனன் இருட்டில் எட்டி நடை போட்டான். வானத்தில் சுடர்கள் பார்த்து நேரம் தெரிந்து கொண்டான்.

வயிற்றில் ஏதோ ஒரு சங்கடம் உருவாகியது. ஒரு உணவுப் பொருள் குடலுக்கும், இரைப்பைக்கும் நடுவே உருண்டு நகர்ந்து காற்றை உற்பத்தி செய்தது. வாயு உடம்பை விட்டுப் பிரியாமல் நெஞ்சை அழுத்தித் திகைக்க வைத்தது. பையைத் துழாவி நுணுக்கி வைத்திருந்த சுக்குத் துண்டுகளை எடுத்தான். வாயில் போட்டு மென்றான்.

வயிற்றுக்குள் காரமான ரசம் சுகமாக இறங்கியது. ரசம் இறங்கிய சிறிது நேரத்தில் வாயு பின் பக்கமாக பெரிய சப்தத்துடன் பிரிந்தது. வாயு பிரிந்த சப்தம் யாரோ சிரிப்பது போல காதில் விழுந்தது. அவர் தொடர்ந்து நடந்தான்.

மறுபடி வயிறு தொந்தரவு செய்தது. விடியல் நேரத்தில் சோறு விற்கும் சத்திரத்தை அடைந்தான். ரகசியமான இடத்தில் மூங்கில் கம்பில் இருந்து காசு பிரித்து சத்திரக்காரனுக்கு இரண்டு பொற்காசுகள் கொடுத்து உணவுக்கும், குளியலுக்கும் உறங்கத் தனியறைக்கும் ஏற்பாடு செய்து கொண்டான்.



அயர்ந்து தூங்கினான். பகற் கனவில் ஓநாய்கள் அவனைச் சுற்றிக் கொண்டன. அவன் சடலம் மரத்தில் தொங்கிக் கொண்டிருப்பதை, அவனே பார்க்கின்ற கனவு வந்தது.

அதிர்ந்து எழுந்திருத்தான். மறுபடி காஞ்சிபுரத்திற்குப் போய்விடலாமா என்று யோசித்தான்.

வெயில் தாழ, இரவு உணவை மூட்டையாகக் கட்டிக் கொண்டு வடக்கு நோக்கி நகர்ந்தான். பழையனூர் எல்லையில் அவன் கால் வைத்ததும், போன ஜென்மத்து துக்கம் முழுவதும் நெஞ்சில் தேக்கி அவள் வாய்விட்டு அலறினாள். அவள் தம்பியும் கதறிக் கதறி அழுதான்.

சூட்சும ரூபத்தில் அவர்கள் கதறிக் கதறி அழுவதை பூதகணங்கள் பார்த்துத் திகைத்தன. அவைகளும் கோபமாகி முன்னும் பின்னும் அலைந்தன. அவள் தன்னை உருவகப் படுத்திக் கொண்டாள். உருவம் வேண்டும் என்று ஆசைப் பட்டாள்.

முழு வேகத்தோடு முயற்சி செய்ய, மனிதர்கள் கண்ணுக்குத் தெரியும் உருவமானாள். இருபத்து மூன்று வயதுப் பெண்ணாய், வாயில் வெற்றிலைக் காவி ஏறியவளாய், பெரிய கண்கள் உடையவளாய், முதுகு வரை நீண்ட தலைமுடியை இறுக்கிக் கொண்டை போட்டவளாய், காதுகளில் தங்க ஓலையும், மூக்கில் பேசரியும், முத்துப் புல்லாக்கும், கழுத்தில் அட்டிகையும், பொன் ஹாரமும், கைகளில் வங்கியும், வளையல்களும், நெஞ்சு போர்த்திய சாயச் சேலையும், கட்டுமஸ்தான உடம்பும், கால்களில் வெள்ளித் தண்டையுமாய் அவனுக்கு வெகு தொலைவே உருவெடுத்தாள்.

விரல் சொடுக்கி தம்பியைக் குழந்தையாக்கினாள். இடுப்பில் வைத்துக் கொண்டாள்.

''அதோ அவனை நினைவிருக்கிறதா'' தம்பிக்கு தரிசனனைச் சுட்டிக் காட்டினாள்.

''போன ஜென்மத்தில் அந்தணனாய்ப் பிறந்து என்னை அடித்துக் கொன்றவன். இப்போது நாம் இவனை அடித்துக் கொல்லப் போகிறோம். அதற்கு முன்பு பதற அடிக்கப் போகிறோம். எத்தனை நாள் தவம். எவ்வளவு வருட வேதனை. வா, அவனைப் போய்த் தீண்டுவோம்'' அவள் மிதந்து பின் தொடர்ந்தாள். அவனுக்கு அருகே போனதும் நடந்தாள். தண்டை ஒலி கேட்டு தரிசனன் திரும்பிப் பார்த்தான். திகைத்தான்.

''யாரம்மா நீ'' என்றான். அவள் சிரித்தாள்.

## 51

**ப**ல நாள் கோபத்தை உள்ளடக்கிய சிரிப்பு அது. துக்கப்பட்டு, துக்கப்பட்டு தன் துக்கமே தனக்கு வெறுப்பாய் மாறிய சிரிப்பு அது.

'எந்தப் பாவமும் அறியா என்னை, வாழ வேண்டிய ஆசையோடு பின் தொடர்ந்த என்னை, எந்தக் காரணமும் இன்றி தலையிலடித்துக் கொன்றாயே... இது நியாயம்தானா, இது தர்மம்தானா' என்கிற கேள்வியைக் காட்டும் சிரிப்பு அது.

'போனமுறை நீ ஜெயித்து விட்டாலும் இந்த முறை நான் ஜெயிப்பேன்' என்கிற ஏளனச் சிரிப்பு.

'புவனபதி நான் உன்னைக் கொல்லப் போகிறேன். தலையில் தாறுமாறாய் அடித்து அடித்து உன்னைத் துடிக்க வைத்துக் கொல்லப் போகிறேன்.

புவனபதி, வாழவேண்டிய ஆசை உனக்கு நிறைய இருக்கிறது. பெண்டாட்டியும், கூத்தியும் போதாமல் தந்திரம் மிக்க அந்தணச்சியின் கலவிக்கு மனம் ஏங்குகிறது. வென்று முடிப்பேன். செய்து வளைப்பேன் என்ற சபதங்கள் உன் மனதுக்குள் அலைகின்றன.



ஆயிரம் மாடுகள் வாங்கும் ஆசையும், அந்தணர்களை விட உயரமாய் நிற்க வேண்டுமென்ற போட்டி புத்தியும் உன்னுள் பொங்குகின்றன. உடம்பு வலுவும், மனசு வலுவும் கலந்து விட்டால், அது உயர்ந்த வலு என்று நினைத்துக் கொண்டு இருக்கிறாய். எங்கும் நிறைந்த இயற்கை, எல்லாம் தெரிந்த இறை இவைகளைப் பற்றி நீ யோசிக்கவில்லை.

இறைவன் சக்திக்கு முன்பு மனிதன் தூசு. அவன் கர்வங்கள் எல்லாம் கேவலங்கள். புவனபதி, செருக்குற்று அலைந்தவனெல்லாம் மரண நேரத்தில் வாய் கோணி கோழையைப் போல் அழுகிறார்கள். 'என்னைக் காப்பாற்று, காப்பாற்று' என்று சக மனிதர்களைக் கைப்பிடித்து கதறுகிறார்கள். யாரும், யாரையும் காப்பாற்ற முடியாது என்பது மரணங்கள் பல பார்த்த பிறகும் தெரியவில்லை. புவனபதி உனக்கு மரண நேரம் வந்துவிட்டது. நீ தயாரித்த கோடாரி இந்த ஜன்மத்தில் சூரிக் கத்தியாய் உன் இடுப்பில் இருப்பதை அறிவேன். அந்தக் கத்தியின் மந்திர சக்திக்கு கட்டுப்படுவேன்.

ஆனால், புவனபதி உன் மரணம் நிச்சயம். அந்த சூரிக் கத்தியை தந்திரமாய் அப்புறப்படுத்த எனக்குத் தெரியும். எந்தப் பழையனூரில் என்னைப் புதைத்தாயோ, அந்தப் பழையனூரில் உனக்கு மரணம் நிச்சயம். என் கோபம் மிகப்பெரியது. புவனபதி, என் கோபம் இந்தப் பூமி முழுவதும் விரவி இருக்கிறது. நீ எங்கு போனாலும் என் கோபம் உன்னை விடாது.

நீ தீட்டுப்பட்டவன். பிறன் மனை நுகர்ந்து யோக பலம் குறைந்தவன். ஊருக்குச் செல்லாமல், எவர் வாழ்த்தும் இல்லாமல், எந்த சாந்தியும் செய்யாமல், எந்த தேவதையும் பின் தொடராமல் வீசிப் போட்ட விளக்குமாறு போல் வருகிறாய். உன்னைக் கொல்வது மிக எளிது. உன்னைக் காப்பதற்கு அந்த சூரிக்கத்தியைத் தவிர வேறு எதுவும் இல்லை.

புவனபதி என்னை உனக்குக் காட்டட்டுமா? உன்னை உனக்கு உணர்த்தட்டுமா? நாம் வாழ்ந்ததும், வீழ்ந்ததும் பார்க்கிறாயா?'

அவள் கை உதறினாள். அந்தக் குழந்தையைக் கீழிறக்கினாள். அந்தக் குழந்தையின் கால்கள் தரை தொட, அவன் சிவக்கியானி ஆனான். இவள் நவக்கியானி ஆனாள்.

புவனபதிக்குப் பளீரென்று காசி ஞாபகம் வந்தது. அவளோடு கூடிய காடு ஞாபகம் வந்தது. அவள் வீடு ஞாபகம் வந்தது. வீட்டுச் சுவரில் புதைத்த காசு ஞாபகம் வந்தது. சொன்ன பொய் புத்தியில் தைத்தது. இவளை உதற முயன்றது திரும்பத் திரும்ப நினைவில் ஓடிற்று. ஓங்கியடித்துக் கொன்றதும், சேற்றில் புதைத்ததும், காற்றில் மிதக்கும் சித்திரங்கள் போல் கண்ணெதிரே தோன்றின. அலைந்தன.

அவள் முன்னேறினாள். அவன் இடுப்பில் இருந்து சூரிக்கத்தியை விரைவாக உருவினான். ஒரு அடி முன் பாய்ந்து வீசினான்.

''ஓடிப்போ பெண் பேயே...'' என்று கர்ஜித்தான்.

அவள் அலறிப் பின் வாங்கினாள். அவள் பயத்தைப் பார்த்து சிவக்கியானி வெகுதூரம் ஓடிவிட்டான். இருவரும் ஓடியதும் கத்தியை தரிசனன் இடுப்பில் சொருகிக் கொண்டான்.

அப்போது, 'நாடி ஜோசியர் சொன்னது சரி. போன ஜன்மத்து விவரங்கள் முற்றிலும் உண்மை. இப்போது என்ன செய்வது... வடக்கே போகாமல் திரும்பி விடலாமா. காசிக்குப் போகாமல் வீட்டுக்குப் போனால் மரியாதை இருக்குமா. மனைவி சிரிக்கமாட்டாளா. அந்த அந்தணச்சி அலம்பல் செய்து விடுவாளே.

பழையனூர் திருவாலங்காடு தாண்டிவிட்டால் இந்தப் பேய் பின் தொடருமா. திருவொற்றியூர் போய் அந்தணரோடு சேர்ந்து



விட்டால், காயத்ரி ஜபம் செய்யும் அந்தணர்கள், அருகே பேய் இருப்பதை உணர்ந்து விடுவார்கள். உடனே பேயை கட்டத் துவங்கி விடுவார்கள். இந்தப் பேய் ஓடிவிட்டது. நல்ல வேளை.. சூரிக்கத்தி காப்பாற்றி விட்டது'

தரிசனன் கிராமம் நோக்கி வேகமாய் நடந்தான். வேளாளர் தெருவுக்குள் நுழைந்தான். பகலெல்லாம் கடும் வெயிலில் வயல் வெளியில் - வேலை செய்த வேளாளர்கள் அந்தி சரிய, வயிறார சாப்பிட்டுவிட்டு வாசலில் கட்டில் போட்டு பேசிக்கொண்டிருந்தார்கள். உறக்கத்துக்குப் போகும் நிலையில் இருந்தார்கள்.

யாரோ ஊருக்குள் வேகமாய் நுழைவது பார்த்து வேகமாய் எழுந்தார்கள். நாய்கள் குலைத்தன.

''யாரது?'' இருட்டில் வரும் உருவத்தைப் பார்த்து அதட்டினார்கள்.

''நான்தான்...'' தரிசனன் தன் பெயர் சொன்னான்.

''அடடே, வணிகரா. என்ன அதிசயம். அறுவடைக்கு முன்னமே வந்துவிட்டீர்கள்'' ஆரவாரமாய் வரவேற்றார்கள்.

தரிசனன் திரும்பிப் பார்த்தான். அவனை யாரும் பின் தொடரவில்லை என்பதை அறிந்து நிம்மதியானான். தோளில் உள்ள மூட்டையைத் தூக்கி கட்டிலில் போட்டான். கைத்தடியை பக்கத்தில் வைத்துக் கொண்டு கட்டிலில் உட்கார்ந்தான்.

குடிக்க முதலில் தண்ணீர் கொடுத்தார்கள். பிறகு சொம்பு நிறைய சூடான பால் கொடுத்தார்கள். அவன் அமைதியாகும் வரை காத்திருந்தார்கள்.

''நான் வடக்கே போகிறேன். வியாபாரத்திற்காக.'' தரிசனன் விளக்கினான்.

''வடக்கே என்றால் எங்கே?''

''இன்னும் சரியாக முடிவாகவில்லை. இப்போதைக்கு திருவொற்றியூர் வரை செல்கிறேன். அங்கே நண்பர்களோடு சேர்ந்த பிறகு போகும் தொலைவு முடிவாகும்.''

''இலக்கில்லாத பயணமா?''

''காசி மாநகரம் என்பது இலக்கு.''

''காசிப் பயணமா, நமச்சிவாயம், நமச்சிவாயம்...'' எல்லோரும் எழுந்து நின்று கைகூப்பினார்கள்.

''அது முடிவாகவில்லை, ஐயா.''

''தெளிவாக முடிவு செய்துவிட்டு மேற்கொள்ள வேண்டிய பயணமல்லவா இது. இப்படி அலட்சியமாகப் பேசுகிறீர்களே. அந்தணர்களே ஆயிரம் விதமாய் யோசிக்க, தடக்கென்று கிளம்பியிருக்கின்றீர்களே. சாந்தி செய்ய வேண்டாமா, சடங்கு செய்ய வேண்டாமா...'' அவர்கள் வியப்போடு கேட்டார்கள்.

''முன்பெல்லாம் போகிற வழி பயங்கரமாக இருந்தது. சாந்தி, சடங்குகள் அவசியமாய் இருந்தன. இப்பொழுது காசிக்குப் போகும் வழி பெரிய வியாபாரப் பாதையாகி விட்டது. இடையறாது ஜனங்கள் நடந்து கொண்டு இருக்கிறார்கள். எந்த பயமும் இல்லை.''

அவன் சமாதானம் அவனுக்கே போலியாக இருந்தது. வேளாளர்கள் மௌனமாக இருந்தார்கள்.

ஒரு கிழவி கீச்சுக் குரலில் கத்த ஆரம்பித்தாள். ''காசிக்குப் போகிறவனோடு நூற்றியெட்டு கல் வரை மைத்துனன் துணை வர வேண்டும். மைத்துனன் இல்லையென்றால் மாமன் துணை வரவேண்டும். மாமனில்லையென்றால் நண்பன் துணை வர வேண்டும். நண்பனும் துணையில்லையென்றால் கிராமத் தலையாரியாவது துணைவர வேண்டும். இப்படி யாரும் இல்லாமல் ஒற்றை மூட்டையும், ஊன்று கம்புமாய் காசிக்குப் போகிறவரை இப்போதுதான் பார்க்கிறேன். நீங்கள் சொல்வது நம்பத் தகுந்ததாகவே இல்லை.''

கிழவியின் கூச்சலை ஊர் தலையாட்டி ஆமோதித்தது. தரிசனன் எட்டி தெருக்கோடியைப் பார்த்தான். ஊர் மக்கள் அவனை விநோதமாகப் பார்த்தார்கள்.



''சரி, சரி; தரிசனன் செட்டி படுப்பதற்கு ஒரு கட்டில் போடுங்கள். உண்பதற்குப் பழம் கொடுங்கள். விடிந்ததும் பேசிக் கொள்ளலாம். அரிசி வாங்க வந்தேன் என்று சொன்னால் அடித்து விரட்டவா போகிறோம். பழையனூர் நெல்லை தரம் பார்க்க இஷ்டப்பட்டு வந்திருக்கிறீர்கள். இதைச் சொல்ல வெட்கப்பட்டு ஏதேதோ பேசுகிறீர்கள்.''

வேளாளர்கள் பளிச்சென்று முகத்தில் அடித்ததுபோல் பேசினார்கள். தரிசனன் பழம் உண்டு விட்டு கட்டிலில் படுத்தான்.

எழுந்து மறுபடி தெற்குப் பக்கம் பார்த்துவிட்டு படுத்துக் கொண்டான். ஊர் மக்கள் அவன் படபடப்பை கவனித்துக் கொண்டார்கள். உறங்கப் போனார்கள்.

எல்லோரும் கண்ணயரும் வரை அவள் காத்திருந்தாள். தரிசனனால் தூங்க முடியாது என்பதைத் தெரிந்திருந்தாள். தெருமுனையில் செட்டிப் பெண் போல உருவெடுத்தாள். தம்பியை குழந்தையாக்கினாள். இடுப்பில் இடுக்கினாள்.

காது ஓலையும், பெரிய பேசரியும், புல்லாக்கும், கழுத்தில் மங்கல நாணும், கெட்டி அட்டிகையும், கைகளில் காப்பும், விரல்களில் மோதிரமும், நல்ல நூல் சேலையுமாய் அலங்கரித்துக் கொண்டாள்.

கட்டுக்குலையாத உடம்பும் முகத்தில் ஒரு அப்பாவித்தனமும் மிளிரும்படி செய்து கொண்டாள். தன்னைச் சுற்றி பால்வாசனை பரப்பினாள். குழந்தைக்கு ஐம்படைத் தாலியும் பட்டுச் சட்டையுமாய் அணிவித்தாள். தெருவுக்குள் நடக்கத் துவங்கினாள்.

தெரு நாய்கள் சிலிர்த்து நின்றன. அவள் சுயரூபத்தை இனம் கண்டு கொண்டன. ''ஒய்'' என்று உறுமின. அவளை நோக்கிப் பாய்ந்து வந்தன. அவைகளை உற்றுப் பார்த்து மனசு மயக்கி

னாள். வாயைக் கட்டினாள். நாய்கள் செயலிழந்தன. ஒருக் களித்துப் படுத்துக் கொண்டன.

அவள் ஆறுவீடு தொலைவில் நின்றாள். திண்ணையில் படுத்திருந்த கைக்குழந்தை பயந்து அலறியது. வீட்டுப் பெண்கள் விழித்துக் கொண்டு சமாதானம் செய்தார்கள். இருட்டில் அவள் நிற்பதைப் பார்த்துவிட்டு திடுக்கிட்டுக் கத்தினார்கள்.

ஊர் விழித்துக் கொண்டது.

தீப்பந்தங்களும், விளக்குகளும் அவளுக்கு அருகே போயின. இடுப்பில் இருந்த சிவக்கியானி நெருப்பு பார்த்து விட்டு பயந்தான். அழத் துவங்கினான்.

''யாரம்மா நீ? என்ன வேண்டும்?'' ஊர்ப் பெரிய மனிதர்கள் கேட்டார்கள்.

''தரிசனன் மனைவி'' அவள் மெல்லிய குரலில் பதில் சொன்னாள்.

''என்ன?''

''நான் தரிசனனின் மூன்றாவது மனைவி. காஞ்சி மாநகரத்திற்கு வெளியே இருக்கிற ஓரிருக்கை என் கிராமம். என் அழகு பார்த்து என் தகப்பனுக்கு ஆயிரம் பொன் கொடுத்து மணந்து கொண்டார். இரவு, பகலாய் என்னோடு இருந்தார். இவரால் எனக்கு இந்தக் குழந்தையும் பிறந்தான். கடந்த சில மாதங்களாக எனக்கும், அவருக்கும் பிணக்கு வந்து விட்டது.''

''எதனால் பிணக்கு?'' ஒரு பெண்மணி சரக்கென்று கேட்டாள். அவள் மலங்க, மலங்க விழித்தாள். கண்ணீர் சிந்தினாள்.

''சொல், எதனால் பிணக்கு?'' வேறொருவள் அதட்டினாள்.

''அம்மா நான் மூன்றாவது மனைவியாக இருந்தாலும், நல்ல குலத்தில் பிறந்தவள். நல்லபடி வளர்க்கப்பட்டவள்.



வெட்கப்படாத பெண். வேசி என்று தாயாரால் அதட்டப் பட்டவள். என்னைக் கொடுமைப்படுத்தினால் என்ன செய்வேன்'' விசும்பத் துவங்கினாள்.

''என்ன கொடுமை?'' இன்னொரு பெண் கேட்ட கேள்விக்கு அவள் பதில் சொல்லவில்லை. ஆனால், கூட்டம் அவள் பதிலுக்குக் காத்திருந்தது.

''துணியில்லாமல் குலுங்கக் குலுங்க நடனமாடச் சொன்னால் என்னால் ஆட முடியாது..'' அவள் முகம் பொத்திக் கதறினாள். தன் நடிப்பை தானே வியந்தாள். இடுப்பில் இருந்த சிவக்கியானி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். பழையனூர் வேளாளர்கள் தரிசனனைக் கோபமாகப் பார்த்தார்கள்.

வேளாளகர்களின் வெகுளித் தனத்தைப் புரிந்து கொண்ட நீலி தன்னுடைய நாடகத்தைத் தொடர்ந்து நடத்தத் தீர்மானித்தாள்.

## 52

''பைசாமாடா நீ... பேய் பிடித்து ஆட்டுகிறதா உன்னை. மூன்றாவது மனைவி என்பதற்காக ஒரு குலப் பெண்ணை துணியில்லாமல் ஆடச் சொல்கிறாயே. என்ன அயோக்கியத்தனம் இது. உங்களைப் போன்ற ஆண்கள் எல்லாம் கேட்பார் இல்லையென்றுதானே ஆடுகிறீர்கள். உன் தாயை, தமக்கையை நீ நினைத்துப் பார்ப்பதுண்டா. அவர்கள் இவ்விதக் கொடுமைக்கு ஆளானால் நீ எந்தப் பக்கம் பேசுவாய்.''

தரிசனனை எழுப்பி ஊர்ப் பெண்களில் வயதானவர்கள் உரக்கக் கத்தத் துவங்கினார்கள்.

புருஷனால் ஏற்பட்ட கொடுமையை காலம் காலமாய் பெண்கள் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். தங்களுக்கு ஏற்படும் கொடுமையைத் தட்டிக் கேட்க முடியாதவர்கள், மற்றவர்களுக்கு ஆண்களால் கொடுமை ஏற்படுகிறபோது உரக்கக் கத்தி நியாயம் கேட்பார்கள்.

பெண்களுக்குள் ஆயிரம் சண்டைகளும் போட்டிகளும், பொறாமைகளும் இருப்பினும், ஆறுதல் சொல்லவும் அதட்டிக் கேட்கவும் இந்த விஷயத்தில் வெகுவேகமாக செயல்படுகிறார்கள். தயக்கமின்றி உதவிக்கு வருகிறார்கள்.

ஆண்களின் கொடுமையை எதிர்க்கின்ற விஷயத்தில் மட்டும் அவர்கள் ஒன்று சேர்கிறார்கள். இருட்டை சிறிய அகல் விளக்குகள் எதிர்த்து சண்டை போட்டுக் கொண்டிருந்தன. நன்கு பழகினாலொழிய இங்கிருப்பது இன்னார் என்று சொல்ல முடியவில்லை. குரல் வைத்தே அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. மனிதர்கள் நகர்வதும் நிற்பதும் தெளிவற்றுத் தெரிந்தன.

ஒரு அகல் விளக்கை எடுத்துக் கொண்டு, சூரிக்கத்தியைக் கெட்டியாய் பற்றிக் கொண்டு தரிசனன் நீலிக்கு அருகில் போனான். நீலி சூரிக்கத்தியின் மந்திர வெப்பம் தாங்காமல் வேகமாக பின் வாங்கினான். இடுப்பில் குழந்தையாக இருந்த சிவக்கியானி பயந்து அழத் துவங்கினான்.

''அடேய்... அடேய்... பெண் பிள்ளையை அதட்டாதே.'' வயசாளிகள் பதட்டமாய் எழுந்தார்கள். வாலிபர்கள் ஓடிப் போய் தரிசனனைப் பிடித்துக் கொண்டார்கள். தரிசனன் அவர்களிடமிருந்து திமிறினான்.

''இவள் என் மனைவியே அல்ல. நீங்கள் தவறாகப் புரிந்த கொண்டிருக்கிறீர்கள்.''



''அப்படியா... பிறகு இவள் யார்?''

''இவள் ஒரு பேய்''

''பேயா''

''ஆமாம். முன் ஜென்மத்தில் இவளுக்கு ஏதோ கெடுதல் செய்தேனாம். அதற்காக என்னைப் பழிவாங்கப் பின் வருகிறாளாம்.''

தரிசனன் சொல்ல, வேளாளர்கள் திகைத்தார்கள்.

''சுளுந்து கொண்டு வா.'' ஒரு கிழவன் வீட்டு வேலைக்காரனுக்குக் குரல் கொடுத்தான். ஊர் விட்டு ஊர் போக வேண்டியிருந்ததால் நின்று எரியும் தீப்பந்தத்தைக் கொண்டு வந்தார்கள்.

''பேய் என்றால் கால் இருக்காது'' எல்லாம் தெரிந்தவன் போல் ஒரு புத்திசாலி குரல் கொடுத்தான்.

பேயால் கால் காட்ட முடியும். கால் காட்டும் நேரத்தில் தலை இருக்காது. தலையும், காலும் ஒரே நேரத்தில் பிசாசால் காட்ட முடியாது.

நீலி புடவைத் தலைப்பால் தலையைச் சுற்றி முக்காடு போட்டுக் கொண்டாள். குழந்தையாக இருந்த சிவக்கியானியின் கால்பகுதிகள் புடவைக்குள் மறைந்து கிடந்தன.

''அம்மா, உன் கால் காட்டு.'' ஒரு கிழவர் சொல்ல அவள் புடவையை சற்று உயர்த்தி வலக்காலைக் காட்டினாள்.

புடவையால் மூடப்பட்டிருந்த அவள் முகம் முற்றிலும் மறைந்து போயிருந்தது.

''அட... கால் இருக்கிறதய்யா. இன்னொரு கால் காட்டு.''

அவள் இடக்கால் காட்டினாள். வணிகப் பெண்கள் அணியும் கனமான சிலம்பு பளபளப்பாய் தெரிந்தது.

''அட... பேயுமில்லை, ஒன்றுமில்லை. தரிசனன் உளறுகிறான்.''

பெரியவர் கடுப்பான குரலில் பேசினார்.

மறுபடியும் அவன் கால்கள் மறைந்து முகம் தோன்றியது. வீசும் காற்றில் முக்காடு நழுவிவிழ, அவள் முக்காடு கலைந்து அவள் அப்பாவி முகம் சுளுந்து வெளிச்சத்தில் தெளிவாகத் தெரிந்தது.

''தரிசனா, என்னை பிரச்சினை சொல்'' பழையனூர் வேளாளர்கள் விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

இருட்டு நேரத்தில் நல்ல வழக்கு கிடைத்தது என்று அந்தத் தெருவில் உள்ள மற்ற வேளாளர்களும் அந்த வீட்டு வாசலில் வந்து குவிந்தார்கள்.

கட்டிலிலும், திண்ணையிலும் உயர்த்திக் கட்டப்பட்ட வாசல் நடையினும் உட்கார்ந்து கொண்டார்கள்.

''சொல் தரிசனா. அடிக்கடி பார்த்துப் பழகிய எங்களிடமே ஏன் பொய் சொல்கிறாய். காசிக்குக் கிளம்புகிறவனா நீ. இப்படி ஒற்றையாய் காசிக்கு யாரேனும் கிளம்புவார்களா.

வணிகர்கள் வியாபாரத்தில் பொய் உரைப்பது வழக்கம் தான். ஆனால் வாழ்க்கையிலுமா பொய் உரைக்க வேண்டும். பெண் பாவம் பொல்லாதது. நீ எங்கு போகிறாய்? சொல்.''

''ஐயா...,'' தரிசனன் தயங்கினான்.

நீலி குறுக்கிட்டாள். ''ஐயா, நான் சொல்கிறேன். நான் எதற்கும் லாயக்கில்லாதவள் என்று இழிவாகப் பேசி, என் தகப்பனால் எனக்குப் போட்ட நகைகளையெல்லாம் விற்று காசாக்கிக் கொண்டு இந்த மூங்கில் கழியில் அடைத்து, 'திருமயிலை தேவரடியார்களிடம் இன்பம் அனுபவிக்கப் போகிறேன் என்று புறப்பட்டுவிட்டார். இந்த மூங்கில் கழியில் ஆயிரத்து ஐநூற்று ஐம்பது பொற்காசுகள் இருக்கின்றன.''

கட்டிலிலிருந்த கழியை ஒருவன் சட்டென்று எடுத்துப் பார்த்தான். குலுக்கினான். உள்ளே காசுகள் குலுங்கின.



தரிசனன் பாய்ந்து அந்தக் கழியைப் பிடுங்கிக் கொண்டான்.

வேளாளர்கள் கோபமுற்றார்கள். வாலிபர்கள் சிலர் சீறியெழுந்திருக்க, வயோதிகர்கள் அவர்களை அடக்கினார்கள்.

''பொறுமை, பொறுமை. இது கணவன் மனைவி விவகாரம். விஷயத்தை எங்களிடம் விட்டுவிடுங்கள்'' என்ற சொன்னார்கள்.

பழையனூர் வேளாளர்களுக்கு தங்கள் நீதிநெறி பற்றி மிகுந்த கர்வம் உண்டு. வேளாளர்கள் இல்லையெனில் உலகம் இல்லை என்கிற இறுமாப்பு உண்டு.

எந்த ஜாதியாக இருந்தாலும் எந்தத் தொழில் செய்தாலும் வேளான் வாழ்ந்தால்தான் உலகம் வாழும் என்கிற மமதை உண்டு. ஏர் பின்னது உலகம் என்கிற அலட்டல் உண்டு.

வணிகர்கள் மீது அவர்களுக்குப் பொறாமை உண்டு. வணிகர்களின் தந்திரத்தின் மீது வெறுப்பு உண்டு. காசின் மீது இத்தனை ஆசையா என்கிற கேலி உண்டு.

அங்குள்ள எல்லோர் மனதிலும் தரிசனனை அடக்கி வைக்க வேண்டும் என்கிற கோபம் வந்தது.

''அடப்பாவி, சண்டாளா.'' இருட்டிலிருந்து ஒரு பெண் புலம்பினாள். அவள் புருஷனும் தாசி வீட்டிற்குப் போகிறவன் தான். அவள் தாசியால் பாதிக்கப்பட்டவள் தான் என்பதை ஊரார் அறிந்திருந்தார்கள்.

அவர்கள் கோபம் அதிகமாயிற்று.

''சொல், தரிசனா... உன் மனதில் இருப்பது என்ன?''

''நான் சொல்வதைக் கேளுங்கள். இவள் பேய். முன் ஜென்மத்தில் என் மனைவியாய் இருந்த இவளை அடித்துக் கொன்றேனாம். காசிக்குப் போய் வந்த புண்ணியத்தால் சுகமாக வாழ்ந்தேனாம். நான் மறுபடி வணிகனாக பிறந்து இங்கே வருவது தெரிந்து இவள் காத்திருக்கிறாள். இன்று இரவுக்குள்

எப்படியாவது என்னைக் கொலை செய்து விட வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறாள்.''

''இவள் பேயாக இருந்தால் வரும் வழியிலேயே உன்னை அடித்துப் போட்டிருக்கலாமே. பழையனூர் வரும்வரை உன்னை விட்டு வைத்திருக்க வேண்டாம்.''

''இவள் என்னை நெருங்க முடியாது. என்னிடம் மந்திரித்த சூரிக்கத்தி இருக்கிறது.''

''ஐயோ'' என்று நீலி உரக்க அலறினாள்.

கூட்டம் அதிர்ந்து திரும்பியது.

''என்ன... என்ன...'' என்று பதறியது.

''அந்த சூரிக்கத்தியால் என்னையும், குழந்தையும் பலமுறை பயமுறுத்தியிருக்கிறான். அந்தக் கத்திக்குப் பயந்து தான் நான் விலகியிருக்கிறேன். இல்லையெனில் காலைப் பிடித்து வீட்டைவிட்டுப் போகாமல் செய்திருப்பேன். நான் செத்தாலும் பரவாயில்லை. குழந்தையைக் கொன்று விடுவாரோ என்று பயப்படுகிறேன்.'' நீலி உடல் குலுங்க அழுதாள்.

வேளாளர் கூட்டம் பல்லி சொல்லடுக்காய் தன் பரிதாபத்தை வெளியிட்டது.

நீலி உள்ளுக்குள் பெருமிதமாய்ச் சிரித்தாள்.

''தரிசனா, நீ மனிதன்தானா, இல்லை மிருகமா? மனைவியின் நகைகளைக் காசாக்கி தேவரடியாரிடம் போகிறாயே.... வெட்கமாக இல்லை....?'' கிழவர் குமுறினார்.

''இப்படிப்பட்ட இழிவான பயணத்தை காசிக்குப் போவதாக வேறு சொல்கிறாய்'' என்று வாலிபன் அடித் தொண்டையில் உறுமினான்.

''வேளாளனை முட்டாள் என்று நினைத்துவிட்டான் போலும்.''



''எங்கோ போய் ஒழிய வேண்டியது தானே. பழைய ஊருக்கு வந்து விட்டானல்லவா. அவன் மனைவி நமக்கு முன்னால் நின்று குறை சொன்னாள் அல்லவா. அந்தக் குறைக்குத் தீர்வு காணாமல் இங்கிருந்து இவர்கள் போக முடியாது.''

ஒரு கிழவர் உரத்துப் பேச மற்றவர்கள் ''ஆமாம்... ஆமாம்'' என்றார்கள்.

விதி சிரித்தது. திருவாலங்காட்டு பூதகணங்கள், வேளாளர்கள் கர்வம் கண்டு தலையில் அடித்துக் கொண்டன. உதடு பிதுக்கின.

மரங்களுக்கிடையேயும், மனிதர்களுக்கு இடையேயும், கூரையிலும் அருவமாய் உட்கார்ந்து நடப்பதைக் கவனித்தன.

''என்ன சொல்கிறாய் தரிசனா? ஒரு பெண்ணின் வயிற்றெரிச்சலை ஏன் கொட்டிக் கொள்கிறாய்?

நீலி தரிசனனுக்கு மட்டும் பேய் முகம் காட்டினாள்.

தரிசனன் நடுங்கினான்.

பேய் தன் சுயரூபத்தை மனிதருக்குக் காட்டும்போது துர்வாசனை பரவும். அங்கே வாயு பிரிந்தது.

''பன்றியைப் போல் எங்கோ தின்றுவிட்டு இங்கு வந்து நாறடிக்கிறான்'' வாலிபர்கள் பேசிக் கொண்டார்கள்.

''வேளாளர்களே, நான் சொல்வதை தயவு செய்து கேளுங்கள். இவள் பேய்... இவள் இடுப்பில் இருக்கும் குழந்தையும் பேய். இவளால் எனக்கும் உங்களுக்கும் தீங்கு வரப்போகிறது. உங்களிடம் பேசுவதைவிட என் கத்தியால் இவளை வீசி விரட்டுவதே நல்லது.'' சட்டென்று கத்தி உருவி நீலி மீது பாய்ந்தான்.

நீலி அலறி அடித்துக் கொண்டு இருட்டில் ஓடினாள். பெண்கள் பயந்து நடுங்கி கத்தினார்கள். குழந்தைகள் வீறிட்டன. நாய்கள் இடைவிடாது கத்தின. கூரையிலிருந்து இரண்டு மூன்று ஓடுகள் உடைந்து தரையில் சரிந்தன.

வாலிபர்கள் எழுந்து இடுப்பு வேஷ்டியை இறுக்கிக் கொண்டார்கள். தரிசனனை மடக்கி கத்தியைப் பிடுங்க முயற்சித்தார்கள்.

தரிசனன் கடுமையாகப் போராடினான்.

ஒரு கிழவன் தரிசனன் முகத்தில் பலமாய்க் குத்த, தரிசனன் மயங்கி விழுந்தான். சூரிக்கத்தி அவனிடமிருந்து அப்புறப் படுத்தப்பட்டது.

## 53

அந்த வேளாளத் தெருவில் நடந்த களேபரத்தைப் பார்த்த திருவாலங்காட்டு பூதங்கள் ஓடி ஒளிந்து கொண்டன. அவைகள் ஓடுவதைப் பார்த்து மற்ற பூதங்களும் பேய்களும் விடைத்து நின்று கூச்சலிட்டன. ஓடிப்போன நீலி ஊர் ஓரத்தில் நின்றாள். தம்பியைத் தேடினாள். இருட்டிலிருந்த தம்பி அவளுக்கு அருகே வந்தான்.

''அக்கா, அந்த சூரிக்கத்தியின் சக்தி பிரபஞ்சத்தையே கிழிக்கிறதே. வெப்பத்தால் நம்மை விரட்டுகிறதே...'' ஆச்சிரி யப்பட்டான்.

''பிடுங்கி விட்டார்கள். பிடுங்கி விட்டார்கள்.'' ஓட்டுக் கூரையிலிருந்த பேய்கள் நீலியை நோக்கிக் கத்தின.

நீலி தைரியமானாள். மறுபடியும் செட்டிப் பெண்ணாக உருவெடுத்துக் கொண்டாள். தம்பியைக் குழந்தையாக்கி இடுப்பில் இடுக்கிக் கொண்டாள். நிதானமாக வேளாளர் கூட்டம் நோக்கி நடந்தாள்.

''போய் சமாதானப்படுத்தி கூட்டிட்டு வாப்பா. இந்த அயோக்கியன் கத்தி வீச அவ பயந்து ஓடிப்போய்ட்டா. பாவம் சிறு பொண்ணு...'' ஒரு வயசாளி கத்தினார்.



ஒரு வாலிபன் இருட்டில் நடந்து வந்தான். வேளாளர் தெருவோடே நடந்து அவளைத் தேடி வந்தான். ஆண்களுடைய பரிதாபம்தான், தனக்கு உறுதுணையாக இருக்குமென்று நீலி புரிந்து கொண்டாள். எதிரே வாலிபன் வருவதைத் தெரிந்து கொண்டாள். ஓடி வந்தபோது, கலைந்து போனது போல புடவைத் தலைப்பை விலக்கிக் கொண்டாள். தங்க ஹாரத்தை புடவைக்கு மேல் போட்டுக் கொண்டாள். தனங்களை இன்னும் பெரிதாகவும், உறுதியாகவும் மாற்றிக் கொண்டாள். குழந்தை யின் கையை மார்பில் பதிய வைத்துக் கொண்டாள். வாலிபன் அருகே வர, மெல்ல விசும்பத் துவங்கினாள். இருட்டிலிருந்த அழகு பார்த்து வாலிபன் திகைத்தான்.

இத்தனை கட்டுமஸ்தாக இருக்கிற பெண்ணை அவன் பார்த்ததே இல்லை. அவன் மனம் பேரவஸ்தைப்பட்டது. அவள் அவனைப் பார்த்ததும் திரும்பிக் கொண்டாள். அவளுடைய இடுப்பும், பின்புறமும் அந்த வாலிபனின் காமத்தை அதிகம் தூண்டின. அவள் இடுப்பிலிருந்த மெல்லிய மடிப்பில் மனம் சிக்கிக் கொண்டு விடுபட மறுத்தது.

''உங்களைக் கூப்பிடறாங்க...''

அவன் அருகே வந்து அவளை உற்றுப் பார்த்தபடி அழைத்தான்.

''வாணாம். எனக்கு பயமா இருக்கு.'' அவள் சிணுங்கினாள்.

''கையோட கூட்டிட்டு வரச்சொல்றாங்க.''

''அந்த ஆள் கத்தில குத்திடுவான்'' அவள் அவனுக்கருகே கை நீட்டிப் பேசினாள்.

நான்கு விரற்கடை இடப்பக்கம் நகர்ந்தால் அவன் பூப் போன்ற உள்ளங்கை அவன் மார் மீது படும். 'இப்பேர்ப்பட்ட அழகான பொண்ண ராப்பகலா அனுபவிக்கறத விட்டுவிட்டு காசிக்குப் போறானாமே.' அவன் மனதிற்குள் அலுத்துக் கொண்டான்.

''நாங்க இருக்கறபோது நீ ஏன் பயப்படற...'' அவன் இன்னும் ஒரு படி நெருங்கி நின்று பேசினான்.

அவள் மீது செண்பக வாசனை வீசியது. வெற்றிலையும், பாக்கும் சுண்ணாம்புக் கலவையோடு கடித்துத் தின்ற வாசனை வீசியது.

''வா, போகலாம்.''

அவன் சட்டென்று அவள் தோளைத் தொட்டான். அவள் அவன் தொடுமுன் பிரமையற்று, தொலைவில் இருந்த கூட்டத்தையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

''பயப்புடாத... நாங்க இருக்கோம் வா.''

அவன், ரவிக்கை அணியாத அவள் தோளை கூட்டம் நோக்கித் தள்ளினான். அவள் பயந்து பின்னால் போக, சட்டென்று அவள் கையைப் பிடித்தான். இருட்டில் யாருக்கும் தெரியாது என்று மறுகையால் அவள் இடுப்பை அணைத்துக் கொண்டான். கூட்டம் நோக்கி இழுத்தான். அவள் அவனை ஒட்டிக் கொண்டு நடந்தாள். அவன் கிளர்ச்சியுற்றான். வெளிச்சம் மேலே படுகின்ற தூரத்தில் அவர்கள் விலகிக் கொண்டார்கள்.

அவர்கள் நெருங்கி வருவதற்குள் தரிசனனின் கத்தி பல கைகள் மாறி ஒரு வெற்றிலைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டு விட்டது.

''இத்தனை பேர் இருக்கும்போது கத்தி காட்டறியே. எத்தனை திமிர் உனக்கு? தெரிஞ்ச ஆளுன்றதுனால விடறோம். இல்லன்னா அடிச்சு நாசம் பண்ணியிருப்போம். இப்ப இவனை என்ன பண்றது? சொல்லுங்க.''

''கொண்டு போய் அவங்க ஊர்லயே விட்டுடலாம்.''

''காஞ்சி மாநகர் வரைக்குமா. வேற வேலை இல்லியா.''

''அங்க பஞ்சாயத்து பண்ணிக்கட்டும்னு சொல்றேன்.''



''ஏன் நாம பஞ்சாயத்து பண்ணா அடங்கமாட்டானா?''

''புருஷன் பொண்டாட்டிய சமாதானமா போகச் சொல்லுங்கப்பா.''

''போக மாட்டேன்னா.''

''நெல்லு தரமாட்டோம்னு சொல்லிடு.''

''பழையனூர்க்குள்ள கால் வைக்கக்கூடாதுன்னு சொல்லிடு.''

''இவன் அதுக்கெல்லாம் அசரமாட்டான்.''

''புருஷன் பொண்டாட்டிய ஒரே அறைல போட்டு பூட்டி வைங்க. எல்லாம் சரியாப் போய்டும்.''

''இவன்தான் கண்டமேனிக்கு ஆடச் சொல்றானே.''

ஒரு பெண் பிள்ளை கத்தினாள்.

''புருஷன்தான்டி ஆடச் சொல்றான். ஆடினா என்ன'' - ஒரு ஆண் குரல் அதட்டியது.

''உள்ள போட்டுப் பூட்டி வைங்கோ.''

நாலைந்து பேர் கத்தினார்கள்.

நீலியைக் கூட்டி வந்த இளைஞனும் தொடைக்கு நடுவே கை வைத்துக்கொண்டு கத்தினான்.

''தரிசனா, உள்ள போப்பா.''

ஊர் அவனை நெட்டித் தள்ளியது.

''ஐயோ இவ பேய். இவளையும் என்னையும் ஒண்ணா அடைச்சா அவ என்னைக் கொன்னுடுவா.''

''அதெல்லாம் ஒண்ணும் ஆகாது தரிசனா.''

''சத்தியமாச் சொல்றேன்... இவ ஒரு பேய்.''

''அநியாயத்துக்கு சத்தியம் பண்றாம்பா. இவன என்ன செய்யறது. தரிசனா உள்ள போ.''

''ஐயா இவள் பேய். போன ஜென்மத்தில் எனக்கு பொண்டாட்டியாக இருந்தவள்.''

''எங்கள என்ன பைத்தியம்னாடா நினைச்சுக்கிட்டு இருக்க? வயசுப் பொண்ண பேய், பேய்னு கூப்பிடற... புள்ள பெறமுட்டும் தித்திப்பா இருந்தாளோ. பெத்த பிறகு பேயாயிட்டாளோ. என்ன அநியாயம்டா சாமி.''

''இறை மீது சத்தியம். திருவாலங்காடு ஈசன் மீது சத்தியம். பேயே நீ யாரென்று சொல்.'' அவன் அவளை நோக்கிப் பாய்ந்தான்.

வேளாளர்கள் தரிசனனை அமுக்கிக் கொண்டார்கள்.

தரிசனன் கதறினான்.

''கடவுளே... என்னைச் சாகடிப்பதில் உங்களுக்கு என்ன திருப்தி? என்னை பேயிடம் பிடித்துக் கொடுப்பதில் உங்களுக்கு இத்தனை என்ன ஆசை..?'' கண்ணீர் வழிய புலம்பினான்.

''சரி; பெண்டாட்டி என்பவள் பேய்தான். உன் குழந்தை என்ன பாவம் செய்தான். அந்தக் குழந்தைக்காகவாவது நீ குடித்தனம் செய்யக்கூடாதா? மனைவியோடு இணங்கியிருக்கக் கூடாதா?'' ஒரு கிழவி உரத்துக் கேட்டாள்.

''கடவுளே... அந்தக் குழந்தையும் பேய்தான். உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா? எத்தனை கோரமாகச் சிரிக்கிறது'' தரிசனன் அலறினான்.

''இந்தக் குழந்தை பேயா? தரிசனா உன் அயோக்கியத் தனத்திற்கு எல்லையே இல்லையா?'' வேளாளர்கள் வியந்தார்கள்.

''இவன் என் குழந்தையே இல்லை. எனக்குப் பிறந்தவன் இல்லை...'' தரிசனன் உரத்துக் கத்தினான்.

''கடவுளே...கடவுளே...'' நீலி பதறினாள்.

''அடப்பாவி மனிதா... உனக்கிது அடுக்குமா. நான் பத்தினி தெய்வமடா. உன்னைத் தவிர வேறு யாரையும் நான் மனதாலும்



நினைத்ததில்லை. என்னையும், என் பிள்ளையையும் இழித்துச் சொல்கிறாயே... நீ விளங்குவாயா..?'' அவள் நெஞ்சிலடித்துக் கதறினாள்.

''அய்யா... அய்யா'' ஊர் ஜனங்கள் எல்லோரையும் சுற்றி வந்தாள்.

''என்னைப் பெற்ற தாய்மாரே'' பெண்களை நோக்கி கை கூப்பினாள்.

''இந்தக் குழந்தையை தரையில் இறக்கி விடுகிறேன். அவன் என்ன செய்கிறான் என்று பாருங்கள். இந்தக் குழந்தைக்கு நான் எதுவும் சொல்லித் தரமாட்டேன். அவனாகப் போய் அவன் தந்தையை அடையாளம் காட்டுகிறானா, இல்லையா பாருங்கள். காட்டினால் இங்கு நிற்பேன். இல்லையெனில் எங்கேனும் போய் பிராணஹத்தி செய்து கொள்வேன். இது சத்தியம்'' அவள் குழந்தையை இறக்கி விட்டாள்.

சுவர் பக்கம் போய் விசித்து விசித்து அழத்துவங்கினாள். பல பெண்கள் அவள் நிலையைக் கண்டு உதடு பிதுக்கி அழுதார்கள். ஆண்கள் கண் கலங்கினார்கள். குழந்தை பயத்தோடு எல்லோரையும் பார்த்தான். தரிசனனை நோக்கி நடந்தான். தலை கவிழ்ந்து உட்கார்ந்திருந்த தரிசனனுக்கு குழந்தை வருவது தெரியவில்லை. குழந்தை ஆறு ஏழு ஆட்களைத் தாண்டி தரிசனன் முழங்காலை அசைத்து ''அப்பா'' என்று அழைத்தான்.

தரிசனன் பயந்து உதறி எழுந்து நிற்க, ஊர் அவனை மறுபடியும் அழுத்தி உட்கார வைத்தது. குழந்தை வேகமாய் ஓடி தாயின் முழங்காலைக் கட்டிக் கொண்டது.

''அக்கா எப்படி நடித்தேன்'' சிவக்கியாணி ரகசியமாய்க் கேட்டான்.

நவக்கியாணி அவனை அள்ளிக் கொண்டாள்.

''அற்புதம் அற்புதம்'' நவக்கியாணி பாராட்டினாள்.

அவர்கள் பேசும் பாஷை பேய்களுக்குப் புரிந்தது. மனிதருக்குத் தெரியவில்லை.

''இதற்குமேல் என்ன சாட்சி வேண்டும். குழந்தையும், தெய்வமும் ஒன்று என்று சொல்வார்கள். இந்த நீசன் தாசியிடம் காசு தொலைப்பதற்காகவே கங்கணம் கட்டிக் கொண்டு, கால் நடையாக காஞ்சிபுரத்திலிருந்து கிளம்பி இருக்கிறான். இவனைக் கட்டிப் போடுங்கள்'' - யாரோ கூவினார்கள்.

''இவனைக் கட்டிப்போட்டு நாம் என்ன செய்ய? அவளல்லவா இவனைக் கட்டிப் போட்டிருக்க வேண்டும்'' யாரோ அலுத்துக் கொண்டார்கள்.

''ஆமாம்பா. இவர்கள் இருவரையும் ஒரே அறையில் அடைத்து வையுங்கள். அவர்களே சமாதானம் செய்து கொள்ளட்டும்.''

''இல்லை; நான் போக மாட்டேன்'' தரிசனன் அலறினான்.

''ஏனடா போகமாட்டேன் என்கிறாய்?'' ஊர் சீறியது.

''இவள் என்னை அடித்துக் கொன்று விடுவாள். இவள் ஒரு பேய்.''

''அப்படியெல்லாம் நடக்காது''

''நிச்சயம் நடக்கும். விடியற் காலைக்குள் நான் இறந்து விடுவேன்.''

''அப்படி நீ இறந்தால், உன் பின்னே நானும் வருகிறேன். நானும் தற்கொலை செய்து கொள்கிறேன்'' - ஒரு வேளாளர் தரிசனன் கழுத்தைப் பிடித்து வீட்டுக்குள் தள்ளினார்.

''ஐயோ... நான் செத்துப் போவேன்'' மிக உரத்த குரலில் தரிசனன் கத்தினான்.

''அப்படி நீ செத்துப் போனால், இங்குள்ள எல்லா வேளாளர்களும் உன் பொருட்டு செத்துப் போவோம். உள்ளே போ...'' ஒரு வேளாளர் கை உயர்த்தி உரக்கக் கூறினார்.



தரிசனன் தலையிலடித்துக் கொண்டான்.

வேளாள வாலிபர்கள் அவனைத் தூக்கிக் கொண்டு போய் ஒரு அறையில் தள்ளினார்கள். அவன் வெளியே வர முயற்சிக்க, அவன் துண்டால் அவன் பின் கை கட்டி கட்டிலில் உட்கார வைத்தார்கள். வெளியே ஓடி வந்தார்கள். அவளைத் துரிதப் படுத்தி உள்ளே போகச் சொன்னார்கள். அவள் குழந்தையோடு உள்ளே ஓடினாள்.

''கதவைச் சார்த்திக் கொள்'' என்றார்கள்.

அவள் நாணத்தோடு கதவைப் பிடித்துக் கொண்டாள். வேளாளர்களை நோக்கி கை கூப்பினாள்.

''இந்த நேரத்திற்காக எவ்வளவு காலம் காத்திருந்தேன் தெரியுமா? இனி இவரை நான் பார்த்துக் கொள்வேன்'' வெட்கத்தோடு புன்னகை செய்தாள்.

வேளாளர்கள் கதவு இழுத்து மூடினார்கள். வெளிப்பக்கம் தாழிட்டார்கள்.

அவள் திரும்பினாள். பேயானாள். தரிசனன் அலற வாய்திறந்தான்.

அவள் 'சூ' என்று அதட்டி, அவன் குரலை நிறுத்தினாள். அவனைப் பார்த்து அழுதாள்.

''ஏனடா, ஏனடா என்னைக் கொன்றாய்'' என்று பல் கடித்தாள்.

தரிசனன் தடுமாறினான்.

## 54

நீலி புலம்பத் துவங்கியதும் தரிசனன் அவளை சமாதானம் செய்துவிடலாம் என்று நினைத்தான்.

''இதோ பார், பெண் பேயே, நான் தரிசனன். வணிகர் குலத்தைச் சேர்ந்தவன். இந்த வாழ்க்கையில் நான் யாரையும் கொலை செய்ததில்லை. யாருக்கும் எந்தத் தீங்கும் செய்ததில்லை. நான் அந்தணனாகப் பிறந்தபோது உனக்குச் செய்த தீங்கு பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. செய்யாத குற்றத்துக்காகத் தண்டிப்பார்களா? உன்னை எப்படித் திருப்பதிப்படுத்த வேண்டுமென்று சொல். ஆடு பலியிடவா, மாடு பலியிடவா... எத்தனை ஆடுகள், எத்தனை மாடுகள் வேண்டுமென்று சொல். நான் ஏற்பாடு செய்கிறேன். என்னை விட்டுவிடு. நான் காசிக்குப் போக வேண்டும்.''

''எதற்கு காசிக்குப் போகிறாய்..?'' நீலி கேட்டாள்.

''கர்மம் தொலைப்பதற்கு'' தரிசனன் பதில் சொன்னான்.

''தொலையாத கருமங்கள் எவையென்று உனக்குத் தெரியாதா? கொலை, களவு, காமம், மித்ர துரோகம், பசுவதை இவைகளிலிருந்து தப்பிக்க முடியாது என்று உனக்குத் தெரியாதா?

போன ஜென்மத்தில் அந்தணனாய்ப் பிறந்த நீ வேறொரு அந்தணரிடமிருந்து காசு திருடினாய். காமவசப்பட்டு பல பெண்களை விலைக்கு வாங்கினாய். என்னை ஏமாற்றினாய். பொய் சொல்லி திருமணம் செய்து கொண்டாய். என் தகப்பனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தாய். மூத்த மனைவி இறந்து விட்டாளென்று இருக்கும்போதே அவளுக்கு தர்ப்பணம் செய்தாய். புருஷனைப் பிரியமாட்டேன் என்று பிடிவாதமாக தொடர்ந்த என்னை, இந்த திருவாலங்காட்டில் அடித்துக் கொன்றாய். இது சரியா புவனபதி? கல்வியிற் சிறந்தோரும், நீதிநெறி தெரிந்தவரும் ஆன உன்னைப் போன்றவர்கள் பெண்களை இம்சித்தால், அடித்துக் கொலை செய்தால் மற்றவர் என்ன தான் செய்யமாட்டார்கள்?



வழிகாட்ட வேண்டிய உங்களைப் போன்ற அறிவாளிகளே வெட்கக்கேடான விஷயங்களைச் செய்தால் மற்றவர்கள் என்னதான் செய்ய மாட்டார்கள்? மனித நாகரீகம் க்ஷீணித்துப்போகாதா..? வாழ்க்கை அர்த்த மற்றுப்போகாதா?'' மிகுந்த வேதனையோடு நீலி பேசினாள்.

''உண்மை, உண்மை'' தரிசனன் பேசினான்.

எப்படித் தப்பிப்பது என்று வேகமாக யோசனை செய்தான்.

''என்னிடமிருந்து தப்பிக்கவே முடியாது புவனபதி. என் கையால் மரணம் என்பது நிச்சயம். நீ இன்னொரு பிறவி எடுத்து இந்த பூமியில் மனிதனாக அலையும்போது, நான் சொன்னவைகளை எல்லோருக்கும் சொல்வதற்காக இப்போது உனக்குச் சொல்கிறேன்.

பெண்களை இம்சிக்கின்ற எவனும் பதிலுக்கு மிக மோசமாக இம்சிக்கப்டுவான். அவன் தாக்கியது போல பல நூறு மடங்குகள் தாக்கப்படுவான். கைகால்கள் சிதைக்கப்பட்டும், கழுத்து அறுக்கப்பட்டும் சாவான். பல ஆயிரம் பேர்களுக்கு முன்னால் அவமானப்படுத்தப்படுவான். கசையால் அடிக்கப்படுவான். உண்ண முடியாமலும் உறங்க முடியாமலும் தவிப்பான். பயமும், திடுக்கிடுதலும் எந்நேரமும் அவனிடம் இருக்கும். வாய்விட்டுச் சிரிக்க முடியாத பாவியாய், கண் மூடி தியானம் செய்ய முடியாத கேவலனாய் வாழ்வான்...

பெண்களை இம்சிப்பதைப் போல் கேவலம் எதுவும் இல்லை. அவளை அடித்துத் துன்புறுத்தும் அகம்பாவம் மிகக் கீழ்த்தரமானது. வலிவு காட்ட முடியாத பெண்ணிடம் வலிவு காட்டுபவன் பேடி. அவனுடைய ஆண்மை வெகு நிச்சயமாய் அசிங்கப்படும். அவனால் வெற்றிபெற முடியாமல் போகும். வாழ்க்கையில் ஏதேனும் ஒரு விஷயத்தில், ஏதேனும் ஒரு சமயத்தில் வெற்றிபெற முடியாதவன் ஆணே அல்ல. அவன்

வாழ்க்கை சூன்யமானது. அவன் பொறாமை மிகுந்தவனாகவும், இடைவிடாது பிறருக்கு உபத்திரவம் கொடுப்பவனாகவும் இருப்பான். அமைதியான முகம், தெளிவான கண்கள், மலர்ச்சியான சிரிப்பு இவனுக்கு எப்போதும் இருக்காது.

இவனுடைய அவநம்பிக்கைகள் இவனுக்கு துர் சொப்பனங்களைக் கொண்டு வந்து தரும். கனவிலும் கேவலப்படுபவன் வாழ்ந்து என்ன லாபம்?

இதற்கெல்லாம் அடிப்படை, பெண்களைப் போற்றத் தெரியாத திமிர்தான். அந்தத் திமிருக்குக் காரணம் தனக்கு எல்லாம் தெரியும் என்ற அகம்பாவம். அந்த அகம்பாவத்தை ஆணிடம் நிரூபிக்க முடியாதவன் பெண்ணிடம் வீரத்தை காட்டுகிறான்...

''புவனபதி, உன்னை நம்பிவந்த என்னை எப்படியெல்லாம் அவமானப்படுத்தினாய்? எவ்வளவு பதற வைத்தாய். உன்னைப் பின்தொடராத வண்ணம் எத்தனை வேதனைகள் கொடுத்தாய்? மிருகங்களைப் போல் நடத்தினாய். ஒரு குதிரையிடம் காட்டும் பரிவைக்கூட என்னிடம் காட்டவில்லையே...

புவனபதி, நீ அந்தணனாகப் பிறந்து என்ன புண்ணியம்? உயர்ந்த ஜாதிக்கேற்ற தெளிவும் நிதானமும் இல்லையே. நீ படிப்பில் சிறந்து விளங்கி என்ன புண்ணியம்? உன் படிப்பு உனக்குத் தெளிவு தரவில்லையே. தெளிவு என்பது கோபமின்மை. அறிவு என்பது தெளிவு தந்த கருணை. கருணையில்லாத அறிவு மலக்குப்பை. உன் அறிவு - கர்வம் என்னும் மலக்குப்பையைத்தானே உற்பத்தி செய்தது.

புவனபதி, நீ பிறப்பால் மட்டுமே அந்தணன். ஊரிலுள்ளோர் உன்னை புறம் பேசுவார்கள் என்று சொல்லி என்னைக் கொலை செய்து விட்டாய்.



என்னிடம் இந்த உண்மையைச் சொல்லக் கூட உனக்கு ஏன் தோன்றவில்லை? 'நான் ஒரு தவறு செய்துவிட்டேன். நீ காசிக்குப் போ' என்று சொன்னால் போயிருப்பேன். செய்த தவறை, கட்டியவளிடம் சொல்லக் கூட முடியாதவன் புருஷனா? இவன் நீசன் அல்லவா...

பௌருஷம் மிக்கவன்தானே புருஷன். பௌருஷம் என்ற வார்த்தைக்கு கம்பீரம் என்றல்லவா அர்த்தம். உலகத்தில் கம்பீரமான விஷயம் உண்மை மட்டுமே. உண்மையில்லாதவன் என்ன படித்தாலும் கம்பீரமாக இருப்பதில்லை. எத்தனை காசு இருந்தாலும் அவனிடத்தில் தேஜஸ் ஜொலிப்பதில்லை.

புவனபதி, நீ பொய்யன். உன் படிப்பும் திறமையும் பொய் வளர்க்கவே பயன்பட்டிருக்கின்றன. உயர்குலப் பெருமையும், படிப்பறிவும் கொண்ட ஒருவன் பொய் சொல்லத் துவங்கினால், பித்தலாட்டம் நடத்தினால் சாதாரண மக்களுக்கு படிப்பு பற்றியும், உயர்குல ஒழுக்கம் பற்றியும் கேள்வி வந்துவிடும். அவநம்பிக்கை பிறந்துவிடும்.

உன் படிப்பை வைத்து நீ பொய் சொல்லி காசுக்கு நாயாய் அலைய, உன் குலத்தைச் சார்ந்த இளைஞர்கள் இது பின்பற்ற ஆரம்பித்துவிட்டார்கள். மிக எளிதாய் ஒரு அறிவுப் பரம்பரையை நீ சீரழித்து விட்டாய், ஒரு விஷ வித்தாக மாறி விட்டாய்.

புவனபதி, நீ என்னை மட்டும் கொலை செய்யவில்லை. ஒரு நாகரீகத்தையே கொலை செய்துவிட்டாய். இது கேள்வியற்றுப் போய்விடுமென்று உன்படிப்பா சொல்லிக் கொடுத்தது..?

புவனபதி, நீ கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டியவன். நான் துடிக்கத் துடிக்க இறந்ததுபோல, நான் இடைவிடாது கலவரப்பட்டது போல நீயும் கலவரப்பட வேண்டும். மரணம்

வேண்டாம், வேண்டாம் என்று ஓடும் போது, உன் மீது மரணம் மிகுந்த வலியோடு திணிக்கப்பட வேண்டும்.

நீ இறந்து வெளிச்சத்தில் புகுவதற்குப் பதிலாக உன்னை இருட்டில் தள்ள வேண்டும். எதுவும் மரணத்தோடு முடிந்து விடவில்லை. மரணத்துக்குப் பிறகு உண்டான வாழ்க்கை பற்றி மனிதர்களுக்குத் தெரியவில்லை. தனிமை, அழுகை, பயம், பசி உன்னைப் போன்ற கொலைகாரர்களுக்கு நிச்சயம் உண்டு. உன் நரகத்தை நீதான் உருவாக்கி வைத்திருக்கிறாய்.

மனம் உலகில் இருக்கும்போது எத்தனை விஷயங்களுக்கு பேராசைப்பட்டு இருக்கிறது. எத்தனை விருப்பு, வெறுப்பு களைக் கொண்டிருக்கிறது. இது வேண்டும், அது வேண்டும் என்று எவ்வளவு ஆவேசப்படுகிறது. உன் மனம் வேண்டாம் என்று தள்ளிய துர்கந்தங்கள் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. நீ அவைகளை அனுபவித்தே தீர வேண்டும்.

புவனபதி, திராவிட தேசத்தில் பிறக்காத நான், தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரிந்த நான், திராவிட தேசத்திற்கு வர, தமிழர்களோடு பழக எவ்வளவு ஆவலாக இருந்தேன். இரும்புத் தடியால் மண்டையில் அடித்து எல்லாவற்றையும் கலங்கடித்து விட்டாய். அந்த ஒரு நேரம், அந்த ஒரு நொடி எவ்வளவு பெரிய துக்கம். 'கங்கைக் கரையில் நல்ல புருஷனுக் காக எத்தனையோ விதமாய் நோன்பு இருந்தோமே... இந்த அடி வாங்கத்தானா' என்று நான் எப்படி வேதனைப்பட்டேன். அந்த நோன்புகளின் பலன் இதுதானா என்று எத்தனை துக்கப் பட்டேன். அந்த துக்கத்தை இப்போது அனுபவி.''



புவனபதி, சுவரோடு ஒண்டிக் கொண்டான். அவள் உருமாறினாள். பழைய நவக்கியானியாக சிறிது நேரம் அவன் முன்பு காட்சியளித்தாள். அந்தக் குழந்தையும் சிவக்கியானியாக உருமாறியது.

''என்னை மன்னித்துவிடு, என்னை மன்னித்துவிடு.''

புவனபதி, கை கூப்பினான். கண்ணீர் விட்டு அழுதான்.

வாழ்க்கையின் சந்தோஷங்களெல்லாம் அவனுக்கு ஞாபகம் வந்தன.

''அடடா, காஞ்சிபுரத்தில் இளம் மனைவி இருக்கிறாளே. அவள் அனுமதித்த கட்டுக்குலையாத கூத்தி இருக்கிறாளே. பாடலும், ஆடலும் தெரிந்த வேசிப் பெண்கள் பலர் இருக்கிறார் களே. எல்லோரையும் விட்டுவிட்டு போகப்போகிறேன்.

உடம்பு இன்னும் முறுக்கு அவிழாமல் இருக்கிறது. மூத்தோர் சம்பாதித்த செல்வம் ஏராளமாய் இருக்கிறது. காஞ்சிபுரத்தைச் சுற்றி இரண்டு கிராமங்களில் எத்தனை குதிரைகள், எத்தனை எருது வண்டிகள், எவ்வளவு பொற்காசுகள், எவ்வளவு நகைகள், எத்தனை உடைகள், என்ன சொன்னால் இவள் மன்னிப்பாள்? எப்படி இவளிடமிருந்து தப்பிப்பது? ஒரு பேய்க்கு என்ன கொடுத்து சமாதானம் செய்து கொள்வது? பேயிலிருந்து யார் காப்பாற்றுவார்கள்? அந்த சூரிக்கத்தி கிடைக்காதா..?

அந்த நாடி ஜோசியன் ஏதோ சொல்ல வந்தான். அந்த அந்தணச்சி மயக்கத்தில் அவனை விரட்டி விட்டேன். அடடா... அந்த அந்தணச்சி என்ன அழகு, என்ன பேச்சு, என்ன சாதுர்யம், என்ன குலுக்கல். வடக்கே போய் கம்பீரத்தோடு ஏகப்பட்ட மாடுகன்றுகளோடு, வியாபாரப் பொருள்களோடு காஞ்சிபுரம் திரும்பி அந்த அந்தணச்சியை என் உடைமையாக்கிக் கொள்ள

லாம் என்று நினைத்திருந்தேனே. எல்லா சுகமும் போயிற்றே. இவள் கொன்றுவிடுவாளா. அப்பா, இந்த அறைக்குள் என்ன துர்நாற்றம். எவ்வளவு அழுக்கம். இதற்குக் காரணம் இந்தப் பேயா? இவளிடமிருந்து எப்படித் தப்பிப்பது..? கடவுளே, என்னைக் காப்பாற்று.'

அவன் பேச முடியாமல் குமிறினான். அவன் நினைப்பைப் பார்த்து விட்டு அவள் வாய்விட்டுச் சிரித்தாள். கையை உயர்த்தினாள். அவனை அடித்துக்கொன்ற உலக்கை அவள் கையில் தோன்றியது. உலக்கை அவள் கையில் ஏறியவுடன் பேய் வடிவமானாள். புவனபதியை நெருங்கினாள். புவனபதி அலறினான். ஆனால், அவன் குரல் கட்டப்பட்டிருந்தது. அவன் அலறும் சப்தம் வெளியே கேட்கவேயில்லை.

''என்னங்க... புருஷன் பொண்டாட்டிய அடைச்சு வைச்சீங்க. ஒரு சப்தமும் காணோம். ''ஒரு வேளாளர் கேட்க அவர்களை அடைத்து வைத்த வேளாளர் தலைவர் புரிசைக் கிழவர் அறைக்கு அருகே போய் கதவருகே நின்று காது கொடுத்துக்கேட்டார்.

நீலி அந்த வணிகன் கழுத்தை இடக்கையால் பிடித்துக் கொண்டாள். வலக்கையிலுள்ள உலக்கைால் இடைவிடாது அவன் தலையில் அடித்தாள். அவன் உயிர் சக்தி மொத்தமும் எடுத்து ''ஹா...ஹா...ஹா...'' என்று அரற்றினான்.

புரிசைக்கிழாருக்கு அது மரண ஓலமாய் இல்லாது காம விகார சப்தமாக இருந்தது.

''உள்ள வேலை நடக்குது'' தன் கூட்டம் பார்த்து அவர் பல் தெரியப் பேசினார்.

கூட்டம் சிரித்தது. புவனபதி மரணமடைந்தான்.



# 55

இருதயத்திற்குக் கீழே தங்குமிடம் என்று ஏதும் இல்லாது, எலும்பிலோ, தசையிலோ, சுரப்பியிலோ, தொடர்பு இல்லாது, ஒரு வெட்டவெளியில் உயிர்ச்சக்தி தங்கியிருந்தது. அந்த சக்திதான் இருதயத்தின் துடிப்பை ஊக்குவித்து வந்தது. நரம்புக் குழாய்களெல்லாம் அடைபடாது இருக்க, அந்த உயிர்ச் சக்தி அமைதியாய் இருந்து வந்தது.

நீலி அடித்து மண்டை பிளக்க, இரத்த ஓட்டம் வெளியே வழிய, மற்ற குழாய்களில் தடைபட இருதயம் வரவு இல்லாமல் திணறிற்று. அமைதியாய் இருந்த உயிர்ச்சக்தி விழித்து எழுந்தது.

தான் இதுநாள் வரை தங்கியிருந்த இடம் சேதமடைந்ததைப் புரிந்து கொண்டது. அந்த இடத்திலிருந்து நகர முயற்சித்தது. உடம்பிலுள்ள ஒவ்வொரு அணுவும் உயிர் நகரத்துவங்கியதை அறிந்து அலறின. முறுக்கித் தவித்தன. மனம், உடலின் சார்பாய் 'போக வேண்டாம். போக வேண்டாம்' என்று கதறிற்று.

அதே நேரம் உயிரால் தங்க முடியாது என்பதும் அதற்குத் தெரிந்திருந்தது.

''அடிப்பாவி' என்று நீலி மீது மனம் பாய்ந்தது.

உயிர் வெளியேறி மனதோடு பிணைந்து கொண்டு நீலியோடு சண்டையிடத் துவங்கியது. நீலி சூட்சும உலகத்தினரோடு பழக்கமுள்ளவள். நெடுநாள் அங்கு இருந்தவள். மறையவும், தோன்றவும் தெரிந்தவள். அந்த உயிரை இழுத்து அலைக் கழித்தாள்.

சப்தத்தாலும், தோற்றத்தாலும், நாற்றத்தாலும் விரட்டினாள். அங்கே எதுவுமேயில்லை. ஆனால் இருப்பது போன்ற கற்பனையை அந்த உயிருக்கு ஊட்டினாள்.

''அய்ய... உன் உடம்பெல்லாம் மலம்.'' அந்த உயிரைப் பார்த்துக் கூவினாள்.

அந்த உயிர் குனிந்து பார்த்து தவித்தது. மற்ற பேய்களைக் கோரமாக்கி ஏவினாள். அந்த உயிரை இழுத்துக்கொண்டு அலையும்படி கட்டளை இட்டாள்.

அவன் அதிவேகமாய் இழுக்கப்பட்டான். சுற்றியுள்ள கோர உருவங்களைக் கண்டு அலறினான். நொடி நேரம்கூட இடைவிடாது விதம் விதமாய் இம்சிக்கப்பட்டான்.

உடம்பே இல்லை. ஆனால் உடம்பு இருப்பதாக அவனுக்குக் கற்பனை ஊட்டப்பட்டது. அவன் ஆண் குறி வெடுக்கென்று கடிக்கப்பட்டது. அவன் பொத்திக் கொண்டு அலறினான். அவனுக்குத் திடீரென்று மார்பகம் வளர்ந்தது. அவன் தலையிலடித்துக் கொண்டு அழுதான்.

அடித்துக்கொண்ட உள்ளங்கையில் யோனி தோன்றியது. அந்த யோனியிலிருந்து பல புழுக்கள் பிறந்தன. சகிக்க முடியாத வேதனையில் அவன் அழுதான். அவன் முகத்தில் யாரோ திராவகம் வீசினார்கள். உடைந்த தலையில் நெருப்பைக் கொட்டினார்கள்.

சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து நீலி சகலமும் பார்த்துக் கொண்டு இருந்தாள். அவள் தம்பி அவள் காலடியில் இருந்தான். அவள் வயிறு குளிர்ந்தது. அவள் தம்பி ஆனந்தக் கண்ணீர் வடித்தான்.

''இது போல் இன்னும் சித்ரவதை செய்தால், கைநீட்டி அடித்தால் இவ்விதம் தான் கடும் தண்டனை கிடைக்குமென்று பேய்கள் விளக்கிச் சொல்லின.

''என்ன தண்டனை?'' என்று நீலி கேட்டாள்.

''கடுமையான பசி, இடைவிடாத தலைவலி... இரண்டும் சேர்ந்து வாட்டும்'' என்று சொன்னார்கள்.



நீலி சந்தோஷமானாள்.

அவன் காசு திருடிய குற்றத்திற்கு பாரம் சுமக்கச் சொன்னார்கள்.

புவனபதி நடுங்கினான். உடம்பே இல்லாது போயினும், ஒரு உடம்பை மனம் கற்பனை செய்து கொண்டு அந்தச் சித்ரவதைகளை மனம் அனுபவித்தது. ஒவ்வொரு சித்ரவதையின் போதும் தான் செய்த குற்றத்தை எண்ணி மனம் புலம்பியது.

நீலி அந்த வீட்டுக் கூரையின் மீது உட்கார்ந்து கொண்டாள். விடியலுக்காகக் காத்திருந்தாள். பழையனூரில் பல பேருக்கு துர்சொப்பனங்கள் ஏற்பட்டன. பழையனூரின் வேளாளர் தலைவர் புரிசைக்கிழார் தூங்குவது போலவும், தூக்கத்தில் இருந்து உதறி எழுவது போலவும் கனவு கண்டார். வயல் வெளியில் இருந்து நெருப்பு நடந்து வந்து பழையனூரைச் சுற்றிக்கொள்வது போலவும் கனவு வந்தது.

எழுந்து உட்கார்ந்து கொண்டார். எதிர்பக்கக் கூரையில் யாரோ ஒரு பெண் உட்கார்ந்து கொண்டிருப்பது போல் தோன்றியது. கடுமையான துர்நாற்றம் வீசியது. எந்தக் காரணமுமின்றி மனம் கலங்கியது. எழுந்து ஊரை விட்டு ஓட வேண்டுமென்ற பதட்டம் தோன்றியது. அதே சமயம் மயக்கம் போலும் தூக்கம் வந்தது. சுருண்டு படுத்துக் கொண்டார்.

நீலி அவரைப் பார்த்து பல்கடித்தாள்.

விடிந்தது. பழையனூர் விழித்துக் கொண்டு தன் வேலையைக் கவனிக்கத் துவங்கியது. வெயில் ஏறியும் வணிகன் உள்ளே போன அறையின் கதவு திறக்காதது கண்டு வியந்தார்கள்.

''பெரிய குலப்பெண் போல பேசினாள். இன்னும் தூங்குகின்றாளே...'' வேளாளப் பெண்கள் உதடு பிதுக்கினார்கள்.

''விடிஞ்ச பிறகும் புருஷன் தொந்தரவு பண்ணியிருப்பான். கிடக்கட்டும் விடு' ஆண்கள் சமாதானப்படுத்தினார்கள்.

வெயில் சுள்ளென்று உறைக்க புரிசைக்கிழார் கதவு தட்டினார்.

''போதுமப்பா, வெளியே வா'' என்றார்.

மறு ஒலி கேட்காது போகவே, கதவு உலுக்கினார். அவர் உலுக்கும் சப்தம் கேட்டு ஊர் கூடியது. அதற்குப் பிறகும் உள்ளிருந்து ஓசை வராது போகவே புரிசைக்கிழார் கதவை அடித்து உடைத்தார். விரியத் திறந்தார்.

உள்ளே தரிசனச் செட்டி கால் பரப்பி, கை விரித்து, வாய் பிளந்து, மண்டை உடைந்து இறந்து கிடந்தான். ஊர் அலறியது.

''எங்கே அந்தப் பெண்? எங்கே அந்தக் குழந்தை? வந்தது பெண்ணா? பேயா? எங்கே அந்தப் பேய்?'' ஒரு பேயை எங்கே தேடுவதென்று தெரியாமல் ஊர் மக்கள் அலைந்தார்கள்.

ஓடுகள் சலசலவென்று தரையில் விழுந்தன. எல்லோரும் நிமிர்ந்து பார்த்தார்கள். ஒரு புகை கூடுவது போல மெல்ல மெல்ல நீலி உருவெடுத்தாள். அருகே அவள் தம்பியும் வந்து நின்றான். ஊர் வெறித்துப் பார்த்தது.

''நான்தான் கொன்றேன். நான் தான் கொன்றேன்'' கூரை மீது நின்று கால் உதறி நீலி கத்தினாள்.

''என் ஜென்மாந்தரத்து வெறி இன்று தணிந்தது. என்னைக் கொன்றவனை நான் கொன்று விட்டேன். என்னை அடித்தவனை நான் அழித்து விட்டேன். பெண்ணை அடித்தவனை பெண் கொன்று போட்டாள். ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தமே, அளவில்லா ஆனந்தம் இத்தினமே...'' நீலி கும்மியடித்துப் பாடினாள்.

எதிர்க் கூரைக்குத் தாவி ஆடினாள். நாலா பக்கமும் அலைந்து சந்தோஷப்பட்டாள். உரக்க வெறி கொண்டவள் போல் இடைவிடாது சிரித்தாள். நடுநடுவே அழுதாள்.



30187

திருவாலங்காட்டு கோவில் வாச[illegible] முட்டி நின்றாள்.

''என் ஈசனே, என்னை ஆசீர்வதிப்பீர். என் ஈசனே, என்னை முழுமையாக்கினீர். என் ஈசனே இந்தப் பேய் வாழ்க்கைக்கும் ஒரு அர்த்தம் கொடுத்தீர்.''

''சர்வேஸ்வரா, உன் காலடியிடில் சில நாள் இருந்துவிட்டு, மறுபடியும் மானுடமாய் பிறக்க வேண்டும். ஆணாகவோ, பெண்ணாகவோ வாழ வேண்டும். துணை தேட வேண்டிய அவசியமில்லாமல், இல்லறம் ஏற்க வேண்டிய நினைப்பு இல்லாமல், தக்க பருவத்தில் துறவு தந்து என்னை ஆட்கொள்ள வேண்டும். உமது சேவையை இடைவிடாது செய்து கொண்டிருக்க வேண்டும்.

''எங்கெல்லாம் பெண்கள் புருஷனால் கொடுமைப்படுத்தப் படுகிறார்களோ, ஆண்களால் இம்சிக்கப்படுகிறார்களோ, அங்கெல்லாம் என் பேய் வலிமை புறப்பட்டு கெட்டவர்களைத் தண்டிக்க வேண்டும். நல்லவர்களைக் காக்க வேண்டும்.''

''சர்வேஸ்வரா, மயான பூமியின் தலைவனே... அழித்தலின் அரசே உன்னை வணங்குகிறேன்... என்னை ஏற்றருள வேண்டும்.''

பூதங்களுக்குக் கட்டளை வந்தது.

''நீலியைக் கூட்டிப் போகலாம்'' என்று தகவல் போயிற்று.

பூதங்கள் நீலியை நோக்கி, வரவேண்டும் மென்று கை கூப்ப நீலி பதிலுக்குக் கைகூப்பினாள்.

''இன்னும் ஒரு கடமை இருக்கிறது. இதோ வந்து விடுகிறேன்'' என்று பழையனூர் நோக்கிப் பறந்தாள்.

அங்கே புரிசைக்கிழார் வேளாளர்களை ஒன்று திரட்டினார். விஷயம் தெரிந்து, வேளாளர் பெண்கள் நெஞ்சிலடித்துக் கொண்டு அழுதார்கள்.

''எவர் எப்படிப் போனாலென்ன? எவன் யாரோடு பிணக்கு வைத்துக்கொண்டாலென்ன..? நமக்கெதற்கு ஊர் வம்பு. நாம் ஏன் நியாயம் சொல்ல வேண்டும்? அந்த வணிகன் சொன்னதை நாம் கேட்கவேயில்லையே... நீ இறந்தால் நானும் இறப்பேன் என்று வாக்கு கொடுத்து விட்டோமே. சும்மாயிராது, பழையனூர் வேளாளர்கள் எல்லாரும் செத்துப் போவோம் என்று சபதம் செய்து விட்டீர்களே. வணிகனை பேய்க்குப் பலியிட்டு விட்டு நம் வாழ்க்கையையும் நாசமாக்கிக் கொண்டோமே. இதிலிருந்து தப்பிக்க முடியாதா? மாற்று வழி கிடையாதா? யோசனை செய்யுங்கள்.''

பெண்கள் எல்லா ஆண்களையும் உலுக்கி உலுக்கி பேசச் சொன்னார்கள்.

''வேளாளன் சத்தியம் தவறமாட்டான். நீ இறந்தால், நானும் இறப்பேனென்று தரிசனச் செட்டிக்கு வாக்குக் கொடுத்து விட்டோம்.

ஆனால், தரிசனச் செட்டி இறந்து விட்டான். எனவே, வாக்குக் கொடுத்த நான் சாவதுதான் முறை.'' புரிசைக் கிழாரின் நிதானம் பார்த்து ஊர் மக்கள் திகைத்தார்கள்.

மற்ற வேளாளர்களும் புரிசைக் கிழார் சொல்வது சரிதானென்று வாதாடினார்கள். புரிசைக்கிழார் கைகாட்ட, சில வேளாளர்கள் குளக்கரைக்கருகே பெரிய குழி தோண்டி அதில் காய்ந்த மரங்களை அடுக்கினார்கள்.

அன்று பிற்பகல் நேரத்திற்கு தீ மூட்டினார்கள். புரிசைக் கிழார் ஊர் மக்களை வணங்கி விட்டு ''பழையனூர் வேளாள



னுக்கு சத்தியம் தான் முக்கியம்'' என்று நெருப்பில் குதித்தார். தீ அவரை விழுங்கியது. புகைக்கு மேலே அவர் உயிர் எழுந்து நின்றது.

நீலி தங்கிய மரத்தை வெட்டியதால் தான் இந்த வேதனை என்பதை உணர்ந்தார். பச்சை மரம் வெட்டல் பாவம் என்று சொன்னார். தீயில் குதித்தெழுந்த வேளாளர்களை நீலி வரவேற்றாள்.

சிவகணங்கள் வேளாளர்களைத் தொழுதன.

## 56

ஒருவர் பின் ஒருவராக அறுபத்தொன்பது வேளாளர்கள் வணிகன் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. கொடுத்த வாக்கு பொய்த்து விட்டது, என்பதற்காய் தீயில் குதித்து உயிர் நீத்தார்கள்.

மொத்த பழையனூரும் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதது. ஒவ்வொரு வீட்டு வாசலிலும் பெண்கள் தலைவிரி கோலமாய் நெஞ்சில் அடித்துக் கொண்டு அலறினார்கள். குழந்தைகள் வீறிட்டு அழுதன. இளம் பிள்ளைகளும், பெண்களும் குலுங்கிக் குலுங்கி அழுதார்கள்.

நீலி வாய் விட்டுச் சிரித்தாள். குதூகலத்தோடு நாலா பக்கமும் பறந்தாள். தம்பியைக் கட்டிக் கொண்டு தட்டாமலை சுற்றினாள்.

''செத்துப் போன பிறகும் தொல்லை கொடுத்தீர்களடா பாவிகளா. பச்சை மரத்தை வெட்டித் துரத்தினீர்களே'' - போன ஜென்மத்துக் கதையை நினைவு படுத்தினாள்.

''கெஞ்சிக் கேட்டபோதும் தங்க இடம் கொடுக்க மறுத்தீர்களே. இது நியாயம்தானா?'' நீலி ஆத்திரத்தோடு அலறினாள்.

வேளாளர்களின் ஆவிகள் நீலியிடம் கைகூப்பி மன்னிப்புக் கேட்டன. அந்த ஆவிகளுக்கு சிவகணங்கள் சத்திய லோகத்திற்கு வழிகாட்டின.

சத்தியத்திற்காக உயிர் விட்டவர்களுக்குக் கிடைக்கக் கூடிய மிகப்பெரிய பதவி அந்த வேளாளர்களுக்குக் கிடைத்தது. வேளாளர்களின் ஆவிகள் நீலியின் முழுக் கதையையும் புரிந்து கொண்டு, அவளுடைய தவத்தை மெச்சி வணங்கின.

நீலி தனக்குள்ளே கொதித்துக் கொண்டிருந்த கோபம் குறைந்து வருவதைக் கவனித்தாள். இது வரையில் தனக்கு வழிகாட்டி வந்த சிவகணங்களைச் சுற்றி வந்து வணங்கினாள். தன்னை திருவாலங்காடு சிவனிடம் அழைத்துப் போகும்படி கேட்டாள்.

சிவகணங்கள் அவளைக் கோவிலுக்குள் அழைத்துப் போயின. மிகப்பெரிய ஒளி, கோவிலில் வட்டத்திகிரியாய்ச் சுழன்று கொண்டிருந்தது. சந்தோஷம்தானா, என்பது போல் சிரித்தது.

நீலி நெக்குருகி அழுதாள்.

''உலக வாழ்க்கையை அனுபவிக்காமல் வந்து விட்டோமே என்று வருத்தமா? மறுபடி பூமியில் பிற. பூமிக்கு வளம் கொடுக்கும் வேளாளர் குலத்துப் பெண்ணாய் பிற. ருதுவான நாள் முதல், திசையறிந்து குறி சொல். தாவரங்களின் குணமறிந்து அவைகளைத் தேர்ந்தெடுத்து, மனிதர்களுக்கும், பிராணிகளுக்கும் சிகிச்சை செய். காசியில் உன்னை நேசித்தவன் ஒருவன், வரும் பிறவியில் உனக்குக் கணவனாக இருப்பான். மாதவிலக்கு



நின்ற நேரம் உனக்கு என் தரிசனம் பூரணமாகக் கிடைக்கும். உன் தம்பி உனக்கு மகனாகப் பிறப்பான். உனக்காகவே உயிர் வாழ்ந்ததால், உனக்காகவே உயிர்த் தியாகம் செய்ததால், உன்னுடைய ஒவ்வொரு செயலாலும் பதில் பேசாது துணை நின்றதால், அவன் மிகப் பெரிய செல்வந்தனாய், அரசர்களுக்கு நெல் அளக்கும் வள்ளலாய் அடுத்த பிறவியில் வாழ்வான். உன்னை அவன் நேசித்தது போல அவனை நேசிக்கப் பல உறவுகள் போட்டி போடும்.

நம்மைப் பாடுகின்ற சிவனடியார்களுக்கு அவன் மிகுந்த உபகாரம் செய்து நமக்கு அருகே வந்து விடுவான்.

குலப் பெண்களுக்கு உதவி செய்கிற, இன்பத்திலும் துன்பத்திலும் அவளுக்குத் துணை நிற்கின்ற எந்த ஆணுக்கும் மறுபிறவி போக பாக்கியத்துடன் திகழும்.

போக பாக்கியத்தோடு திகழும் எல்லாருடைய முன் பிறவியும் பெண்களை ஆதரித்ததாகத்தான் இருக்கும். ஒரே ஒரு பெண்ணை வணங்கிக் கொண்டாடினாலும் போதும், ஊர் அவனை வணங்கிக் கொண்டாடும்.

நீலி, இந்தக் கதை முழுவதும் உனக்கு என் தரிசனத்திற்குப்பிறகு ஞாபகம் வந்து உனக்கு மகனாகப் பிறந்த உன் தம்பிக்கு விளக்கமாகச் சொல்வாய்.

''நீலி, இந்தக் கதை, நீ பட்ட அவஸ்தைப்பாட்டாகவும், கதையாகவும், கூத்தாகவும், ஓவியமாகவும், சிற்பமாகவும் இந்த தமிழ் நாட்டில் சந்திர சூரியர்கள் இருக்கும்வரை சொல்லப்படும். ஒவ்வொரு தலைமுறையிலும், ஒவ்வொரு கலா ரூபமாய் இது மக்களிடையே புழங்கும். நீதி சொல்லும்.

உலகத்தில் மிகப்பெரிய பாவம் பெண்களை இம்சிப்பது தான். ஒவ்வொரு இம்சையும் பல நூறு மடங்காகப் பெருகி

இம்சித்தவர்களைப் பழிவாங்கும். பெண்களை ஆதரித்தவர்களை, வேதனை நேரத்தில் இந்தப் பெண்மை உயர்த்தி நிற்கும். சகல சௌக்கியங்களும் கொடுக்கும். அவர்கள் எது தொட்டாலும் துலங்கும். இறையருள் அல்லது அதிர்ஷ்டம் அவர்களுக்கு அருகில் வாழும். ஒரு பெண்ணின் கோபம் எப்பேர்ப்பட்ட தபஸ்வியையும் பொசுக்க வல்லது. ஒரு மனிதன் எத்தனை தான தர்மம் செய்திருந்தாலும், வேறு என்ன வகையான அந்தஸ்து பெற்றிருந்தாலும், பெண்ணை இம்சித்தால் அதன் வேதனைகளை அடையாமல் போக மாட்டான். அவன் புண்ணியங்கள் அவனைக் கைவிடும்.

வேறு எந்த நல்ல செயலுமே செய்யாமல், பெண்ணுக்குத் துணையாக இருந்தவர்கள் வாழ்க்கை, நூற்றுக்கணக்கில் தானம் செய்தவர்களை விட சிறப்பாக அமையும். உன் தம்பியே இதற்கு உதாரணம். உன் கதையே இதற்கு எடுத்துக்காட்டு.

நீலி, பெண் என்பவள் ஞாபக சக்தி. அவளைப் பகைத்துக் கொண்டு வாழும் யாரும் வாழ்ந்துவிட முடியாது. உடம்பு வலிவால் ஞாபக சக்தியை அழித்துவிட முடியாது.

உடல் சக்தி அற்பமானது. ஞாபக சக்தி மிகப்பெரியது. பெண்ணின் கோபத்திற்கு முன்னால் ஆணின் கோபம் காணாது. நீலி, உன்னை வைத்து தர்மத்தின் பொருட்டு இங்கு ஒரு நாடகம் நடத்தினோம். இது நீண்ட நாடகம். மூன்று பிறவி நாடகம். இதைப் படித்தோர், பார்த்தோர் அனைவரும் பெண்களை நோகச் செய்வதிலிருந்து விலகி நிற்கட்டும்.

பெண் பேயாக இருப்பினும் அவளுக்கு இரங்கித்தான் ஆகவேண்டும். சூட்சும ரூபத்திலுள்ள பெண் சக்தியை மதித்துத்தான் ஆக வேண்டும்.



பேயாக இருந்த நீ, கெஞ்சிய பிறகும் வேளாளர்கள் பச்சை மரம் வெட்டினார்கள். நல்லவர்கள் அதைத் தடுக்காமல் விட்டார்கள். பச்சை மரம் என்பது பெண். பச்சை மரம் வெட்டல் பாவம். எனவே, இதையும் மக்கள் செய்யாது இருக்கட்டும். திருவாலங்காடு சிவன் வட்டச்சக்கரமாய்ச் சிரித்தான்.

நீலி விழுந்து வணங்கினாள். தன்னை ஏற்கும் படி வேண்டினாள். உடல் என்கிற அம்சம் அவளுக்கு மறந்தது. பிரபஞ்சம் முழுவதும் பரவிய இறை சக்தியை பரம ஆனந்தத்தோடு பார்த்தாள்.

நெருப்பில் குதித்த வேளாளர்கள் சிவனுக்கு அருகேயிருந்து சல்லாபிப்பதைக் கவனித்தாள். அந்த வேளாளர்கள் பிறவியற்ற சிவ தூதர்களாய் மாறினார்கள். திராவிட தேசத்தின் பல்வேறு சிவாலயங்களில் துவாரபாலகர்களாய், காவல் தெய்வங்களாய் நின்றார்கள்.

நீலி மறுபடியும் கருவிற்குப் போவதற்கு முன் சிவனை கண் குளிரப் பார்த்தாள். கனவிலும், நனவிலும் இவ்விதமே அவ்வப்போது காட்சி கொடுத்து, தன் பிறவிப் பிணியறுத்து, உம்மோடு இருத்திக் கொள்ள வேண்டுமென்று வேண்டினாள்.

அக்கா பழையனூர் குடும்பத்துப் பெண் வயிற்றில் கருவாய்ப் போய் அமர, தம்பி அவளையே பார்த்திருந்தான். தரையிறங்கக் காத்திருந்தான்.

பழையனூர் நீலி கதையும் இத்தோடு முடிகிறது. பெண்ணை வஞ்சித்தவன் வாழ்ந்ததே இல்லை. அவன் விதவிதமாய் வேதனைப்படுவான் என்று இந்தக் கதை தெளிவாகச் சொல்கிறது.

சென்னைக்கும் திருவள்ளூருக்கும் நடுவே இருக்கும் திருவாலங்காட்டில் பழையனூர் நீலி கதை சொல்லப்படுகிறது.

தீப்பாய்ந்த வேளாளர்கள் அனைவரும் படைப்புச் சிற்பமாச் செய்யப்பட்டுள்ள தீக்குண்டம் இன்னும் இருக்கிறது.

நீலி பேயாக மாறுவதற்கு முன் அதாவது, வணிகரைக் கொன்ற பிறகு தன் மனித உருவை அழிப்பதற்கு முன் தன் தம்பியின் உருவை கல்லில் வைத்துத் தேய்த்ததாகவும், அப்படி தேய்த்தபோது ஏற்பட்ட இரத்தம் இன்னும் இருப்பதாகவும் ஒரு கல் அங்கு மக்களால் காட்டப்படுகின்றது.

நீலி பெண்ணாகப் பிறந்து சுகபோகங்கள் அனுபவித்து இறந்து, மறுபடி சூட்சும சக்தியாக மாறி பழையனூரிலேயே திருவாலங்காட்டு சுற்றுப்புறத்திலேயே இன்னமும் உலவிக் கொண்டிருக்கிறாள் என்று ஜனங்கள் பேசிக் கொள்கிறார்கள்.

பழையனூர் நீலி என்று கூப்பிட்டால், 'ஓம்' என்று பதில் சொல்வதாய்ச் சொல்கிறார்கள். அந்தப் பக்தியின் காவல் தெய்வமாக வழிபடுகிறார்கள்.

அறுபத்தொன்பது வேளாளர்கள் தீயில் குதித்து விட்டார்கள். ஒரு வேளாளர் மட்டும் இரவு நடந்தது அறியாமல் விடியலில் எழுந்து உழப் போய்விட்டார்.

உழுதுகொண்டு இருந்தவரிடம் நீலி போய் விஷயம் சொன்னாள். ''சத்தியத்திற்காக உன்னூர் வேளாளர்கள் எல்லோரும் செத்து விட்டார்கள். நீ ஏன் சாகவில்லை?'' என்று கேட்க, ''நீ சொல்வது சத்தியமா?'' என்று அந்த வேளாளர் பதிலுக்குக் கேட்டார்.

''சிவன் மீது சத்தியம்'' என்று நீலி சொல்ல கழுத்தில் கலப்பையைக் குத்திக் கொண்டு அந்த வேளாளர் வயல் வெளியிலேயே இறந்து விட்டார் என்பதாகவும் கதை சொல்வார்கள்.

யார் சத்தியம் செய்தாலும் தொண்டை நாட்டு வேளாளர்கள் அதை மதிப்பார்கள் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.



நீலி கதையை எல்லோராலும் எழுதிவிட முடியாது. எல்லோராலும் நாடகமாய்ப் போட்டுவிட முடியாது. நீலியின் வாழ்க்கையில் சம்பந்தப்பட்டவர்கள்தான், நீலியின் கதையை வெளிப்படுத்த முடியும்.

சென்னைக்கருகே உள்ள திருவாலங்காடு போகும்போது அதற்கு மிக அருகே இருக்கின்ற பழையனூரைப் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள். 'பழையனூர் நீலி' என்று உரக்கக் கூப்பிட்டுப் பாருங்கள். ஒரு வேளை பதில் வந்தாலும் வரலாம்.

**முற்றும்**

30187
4656590